18363



நி. ஒஸ்திரோவ்ஸ்க்கிய்

வீரம் விளைந்தது

நிக்கொலாய்
ஒஸ்திரோவ்ஸ்க்கிய்

வீரம் விளைந்தது

இரு பாகங்களுடைய நவீனம்

இரண்டாம் பாகம்

18363

புரோகிரஸ் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: எஸ். ராமகிருஷ்ணன்
தயாரிப்பு: அ. ரெஸ்னிச்சேன்கோ

Н. ОСТРОВСКИЙ
КАК ЗАКАЛЯЛАСЬ СТАЛЬ
Книга вторая
На тамильском языке

அத்தியாயம் ஒன்று

நள்ளிரவு. வெகு நேரத்துக்கு முன்பே கடைசி டிராம் தன் உடைந்த உடலை இழுத்துக் கொண்டு டெப்போவை அடைந்து விட்டது. வெண்மதியின் தண்ணொளி ஜன்னல் கட்டையில் பாய்ந்து படுக்கையில் வியாபித்திருக்கிறது. மெத்தைக்கு நிலவால் உறைபோட்டதைப் போலத் தோன்றுகிறது. அறையின் இதர பாகங்களில் ஓரளவுக்கு இருட்டாயிருக்கிறது. மூலையிலுள்ள மேஜையின் மேல் விளக்கு மூடியின் அடியில் ஒரு ஒளி வட்டம். ரீத்தா தாழ்வாகக் குனிந்துகொண்டு பருமனான நோட் ஒன்றில் எழுதிக்கொண்டிருக்கிறாள். அது அவளது நாட்குறிப்பு.

''மே 24

''என் நினைவுகளைக் குறித்து வைப்பதற்கு மீண்டும் முயற்சி செய்கிறேன். எத்தனை நாட்கள் எழுதாமல் இருந்து விட்டேன்! கடைசியாக குறிப்பு எழுதியபின் ஆறு வாரங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால் இந்தக் குறையைத் தவிர்த்திருக்க முடியாது.

''நாட்குறிப்பு எழுதுவதற்கு நேரம் ஏது? இப்பொழுது, இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த நேரத்திலும் நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். நித்திரை என்னை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடுகிறது. தோழர் ஸெகால் எங்களைப் பிரிந்து செல்கிறார். அவர் மத்தியக் கமிட்டியில் வேலை செய்யப் போகிறார். இந்தச் சேதியைக் கேட்டு நாங்கள் நிலைகுலைந்து விட்டோம். நமது ஸெகால், அற்புதமான மனிதர். இதுவரை, அவரது நட்பின் மேன்மையை நான் உணரவில்லை. அவர் இங்கு விட்டுச்சென்றபின், மார்க்ஸீய இயக்க இயல் பொருள்முதல்வாதம் பற்றி வகுப்பு எடுப்பதற்கு எவரால் முடியும்? நேற்று இரவு, நீண்டநேரம் நாங்கள் அவருடைய இல்லத்தில் கூடி, 'மாணவர்களது' முன்னேற்றத்தைச் சோதித்துக் கொண்டிருந்தோம். கம்ஸமோல் மாகாணக் கமிட்டியின் செயலாளனை அக்கீம் வந்திருந்தான். அந்த வெறுக்கத்தக்க துப்தாவும் வந்திருந்தான். தனக்குச் சகலவும் தெரியுமென்ற இறுமாப்பு பிடித்த இந்த துப்தாவைக் காணச் சகிக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு பற்றிய வாக்குவாதத்தில், தனது மாணவன் கர்ச்சாகின் துப்தாவை அருமையாக வெட்டிபேசிய பொழுது, ஸெகால் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லிமுடியாது. ஆம், இந்த இரண்டு மாத காலம் வீண் போகவில்லை. முயற்சி திருவினையாகும்பொழுது, எப்படி மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்கமுடியும்? ராணுவ பிரதேசத்தின்

விசேஷ இலாகாவுக்கு ஷுஹ்ராயை மாற்றப் போவதாக வதந்தி உலாவுகிறது. இது ஏன் என்று விளங்கவில்லை.

''ஸெகால் தம்முடைய மாணவனை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். 'ரீத்தா, நான் தொடங்கியதை நீங்கள்தான் பூர்த்திசெய்யவேண்டும். பாதியில் நிறுத்திவிடாதீர்களே. நீங்களும் பாவெலும் ஒருவருக்கொருவர் நிறையக் கற்றுக்கொடுக்கலாம். அவன் இன்னமும் ஒரு கட்டுத்திட்டத்துக்கு உட்படாதவனாகவே இருக்கிறான்; தன்னிடையே தோன்றும் ஆவேச உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டவனாக வாழ்கிறான். அவ்வுணர்ச்சிகள் வரம்பு மீறும் பொழுது அவனை அடித்து வீழ்த்துகின்றன. ரீத்தா, நீங்கள் அவனுக்கு முற்றிலும் தகுதியான வழிகாட்டியாக விளங்குவீர்கள் என்பது என் கருத்து. உங்களுக்கு வெற்றி கிட்டட்டும்! மாஸ்கோ விலாசத்துக்கு எனக்குக் கடிதம் எழுத மறந்துவிட மாட்டீர்களே' என்று அவர் கூறினார்.

''இன்று, ஷார்க்கீய் வந்திருக்கிறான். ராணுவத்திலிருந்தபொழுதே அவனை எனக்குத் தெரியும். ஸாலோமென்கா வட்டாரக் கமிட்டிக்குப் புதிய காரியதரிசியாக அவனை மத்தியக் கமிட்டி அனுப்பியிருக்கிறது.

''நாளைக்கு துபாவா பாவெலை அழைத்து வருவான். துபாவாவை வர்ணிக்கிறேன். நடுத்தரமான உயரம், பலசாலி, தசைப்பற்று உள்ளவன். 1918ல் கம்ஸமோலில் சேர்ந்தான்; 1920லிருந்து கட்சி அங்கத்தினனாயிருக்கிறான்.

" 'தொழிலாளர் எதிர்த்தரப்பு'* என்ற கோஷ்டியில் சேர்ந்திருந்தார்களென்பதற்காக கம்ஸமோல் மாகாணக் கமிட்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட மூவரில் இவனும் ஒருவன். அவனுக்குப் பாடம் போதிப்பது எளிதான விஷயம் அல்ல. எண்ணற்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டேயிருக்கிறுன்; குறித்த பாடத்திலிருந்து எங்கெங்கோ வழுவிச் செல்லும் நிலையை உண்டாக்கி விடுகிறுன்; எனவே, தினந்தோறும் பாடத்திட்டப்படி பயிற்சி நடப்பதில்லை. ஓல்கா யூரேனெவா என்ற என்னுடைய மாணவிக்கும் துபாவாவுக்கும் இடையே எப்பொழுதும் ஒரே சச்சரவுதான். அவர்கள் முதன்முதலில் சந்தித்தபொழுதே, அவன் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'உன் அலங்காரம் எல்லாம் சுத்த மோசம். நீ குதிமுட்களை உடைய பூட்ஸை அணியவேண்டும்; உட்காரும் இடத்துக்குமட்டும் தோலைக் கொடுத்துத்

---

* தொழிலாளர் எதிர்த்தரப்பு — 1920ம் ஆண்டில் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்குகளின்) கட்சியில் தோன்றிய எதிர்க்குழு. அக்குழுவில் சேர்ந்தவர்கள், பொருளாதாரக் கட்டுமானத்தின்பொழுது தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரம் முக்கியமற்றது என்றும், இக்கட்டுமானத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வழிகாட்டும் பாத்திரம் வகிப்பது தேவையில்லை என்றும், ஒருபுறம் தொழிற்சங்கங்களும் மறுபுறம் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் எதிரெதிரானவை என்றும் கருதினுர்கள்.

தைத்த கால் சட்டையை அணிய வேண்டும். ராணுவத் தொப்பி, வாள் ஆகியவற்றுடன் காட்சி அளிக்க வேண்டும். அதுதான் உனக்கேற்ற ஆடை அலங்காரம். இப்பொழுது உன்னைப் பார்த்தால், ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை என்ற நிலையில் காட்சியளிக்கிருய்' என்ருன்.

''அந்தச் சுடுசொற்களைக் கேட்டு விட்டு, ஓல்கா சும்மா இருப்பாளா? இறுதியில் நான் தலையிட வேண்டியதாயிற்று. துபாவா, பாவெலின் நண்பன் என்று நினைக்கிறேன். சரி, இன்று இரவுக்கு இது போதும். படுத்துக் கொள்வதற்கு நேரமாகிவிட்டது.''

சூரிய வெப்பம் பூமியைக் கருக்கிக் கொண்டிருந்தது. ரயில்வே பிளாட்பாரங்களுக்கு மேலே இருந்த நடை பாலத்தின் இரும்புக் கிராதியைத் தொட்டால், தீயைத் தொடுவது மாதிரி இருந்தது. வெப்பத்தால் சோர்ந்து சக்தியற்றுப் போன ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே நடை பாலத்தின்மீது ஏறிஞர்கள். அவர்களில் அநேகர் பிரயாணிகள் அல்ல; ரயில்வே ஸ்டேஷனின் சுற்றுப்புறத்தில் வசித்தவர்கள் டவுனுக்குச் செல்வதற்கு இந்தப் பாலத்தைப் பயன்படுத்திஞர்கள்.

பாலத்தின் படிகளில் இறங்கிவந்தபொழுதே, பாவெல் ரீத்தாவைப் பார்த்துவிட்டான். அவள் அவனுக்கு முன்ஞல் ஸ்டேஷனை அடைந்துவிட்டாள். பாலம் வழியே வந்து கொண்டிருந்த ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ரீத்தா நின்ற இடத்துக்குப் பத்து அடி தூரத்தி லேயே, பாவெல் நின்றுகொண்டான். அவள் அவனை கவனிக்கவில்லை. அவன் ஒரு புதிய சிரத்தையுடன் அவளை ஆராய்ந்தான். ஒரு வரிபோட்ட பிள வுஸும் குட்டையான நீலப் பாவாடையும் உடுத் திக்கொண்டிருந்தாள். இரண்டுமே சாதாரணமான துணியில் தைத்தவை. அவளது தோளிலிருந்து ஒரு மென்மையான தோல் சொக்காய் தொங் கிக் கொண்டிருந்தது. வெயிலில் காய்ந்த முகம்; சீப்புக்கு அடங்காத கேசம். தலையைக் கொஞ் சம் பின்பக்கம் சாய்த்துக்கொண்டு, கதிரொளி யால் கூசிய கண்களுடன் நின்ற அந்த ரீத்தாவைப் பார்த்த பொழுது, பாவெலுக்கு ஒரு புதிய சிந் தனை உண்டாயிற்று. ரீத்தா அவனுக்குச் சினேகி தியாகவும் ஆசிரியையாகவும் இருப்பதுடன், மா காணக் கம்ஸமோல் கமிட்டியின் தலைமைக் குழு வில் அங்கம் வகிப்பவளாயிருப்பதுடன்.... இத் தகைய "பாப" சிந்தனைகளுக்கு இடம் கொடுத் ததற்காகத் தன்னை நொந்துகொண்டு, அவன் ரீத்தாவை விளித்தான்.

"ஒருமணி நேரமாக உன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீயோ கவனிக்க வில்லை" என்றான். "சரி, வா. நமது டிரெயின் ஏற் கனவே வந்துவிட்டது" என்று சொல்லிவிட்டு அவளுடன் பிளாட்பாரத்தை நோக்கிச் சென்றான்.

முதல்நாள் கூடிய கம்ஸமோல் மாகாணக் கமிட்டி ரீத்தாவைத் தன் பிரதிநிதியாகவும் பா வெலைத் துணைப் பிரதிநிதியாகவும் ஒரு ஜில்லா

மகாநாட்டுக்கு அனுப்ப முடிவு செய்தது. டிரெயினில் ஏறுவது எப்படி என்பதுதான் அவர்களை அச்சுறுத்திய பிரச்சினை. அது ஒரு எளிதான விஷயமல்ல. டிரெயின் போவதே அருமையிலும் அருமை. டிரெயின் போன சமயத்தில், சகல அதிகாரங்களும் உடைய ஒரு ஐவர் கமிட்டியிடம் ஸ்டேஷன் ஒப்படைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அனுமதிச் சீட்டைப் பெறுமல் எவரும் பிளாட்பாரத்துக்கு வரமுடியாது. ஸ்டேஷனைச் சுற்றிலும் பிளாட்பாரத்துக்குச் செல்லும் வழிகள் எல்லாவற்றையும்அந்தக் கமிட்டியின் ஆட்கள் காவல் காத்தனர். பிரயாணம் செய்ய விரும்பிய கூட்டத்தின் ஒரு சிறு பகுதியையே டிரெயினுல் எடுத்துச் செல்ல முடியும். ஆனுல் அந்த டிரெயினை விட்டால், அடுத்த டிரெயின் எப்பொழுது வருமென்று சொல்ல முடியாது; பல நாட்கள் காத்திருக்க வேண்டும். இந்த நிலையில் எல்லோருமே டிரெயினில் ஏறிக்கொள்வதற்கு ஆவலாயிருந்தனர். ஆயிரக் கணக்கானவர்கள் நுழைவாயில்களைத் தாக்கிப் பிடித்துக்கொண்டு, அடைவதற்கு எட்டாத பச்சைப் பெட்டிகளை நோக்கி முன்னேற முயன்றனர். இந்நாட்களில் ரயில் நிலையத்தில் முற்றுகை இட்டப்பட்டது போன்ற நிலைமை. சில சமயங்களிலும் நிலைமை கைகலப்புவரை முற்றுவதும் உண்டு.

பிளாட்பாரத்தின் கதவண்டை கூடியிருந்த கும்பல் வழியாக நெருக்கியடித்துக் கொண்டு செல்ல பாவெலும், ரீத்தாவும் முயற்சித்தனர்.

அது பலன் தரவில்லை. ஆனால் பாவெல் அந்த ஸ்டேஷனை நன்கு அறிந்தவன். எனவே, ரீத்தாவை அழைத்துக்கொண்டு, சாமான்களின் அறை வழியே சென்றான். மிகுந்த கஷ்டத்துடன் இருவரும் டிரெயினின் நான்காவது பெட்டியை அடைந்தனர். அந்தப் பெட்டியின் கதவு அருகில் ஒரு செக்கா ஊழியன் வெப்பத்தால் உண்டான வேர்வையில் நனைந்தவனாய் நின்றான். பெட்டிக்குள் ஏறுவதற்கு முயன்ற கூட்டத்தைப் பின்னுக்குத் தள்ளுவதற்கு அவன் முயன்று கொண்டிருந்தான்.

''பெட்டி நிறைந்துவிட்டது. கூரைமீது ஏறக்கூடாது என்பது விதி'' என்று அவன் திரும்பத் திரும்பக் கத்திக் கொண்டிருந்தான்.

வெஞ்சினம் கொண்ட ஜனங்கள் அவனை நெருக்கினார்கள், கமிட்டி வழங்கிய டிக்கட்டுகளை அவனுடைய கண்ணெதிரே நீட்டினார்கள். ஒவ்வொரு வண்டிக்கு முன்னாலும், ஜனங்கள் ஆத்திரப்பட்டுச் சபித்தார்கள், இரைந்து கூச்சல் போட்டார்கள், ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு முன்னேற முயன்றார்கள். முறைப்படி பெட்டிக்குள் ஏறமுடியாதென்பதைப் பாவெல் கண்டு கொண்டான். எனினும் அவர்கள் இருவரும் போயாகவேண்டும். இல்லாவிட்டால் மாநாட்டை ரத்துசெய்ய நேரிடும்.

பாவெல் ரீத்தாவைத் தனியே அழைத்துச் சென்று, அவளிடம் தன் செயல்திட்டத்தை விவரித்தான்: அவன் வழியிலிருப்பவரைத் தள்ளிவிட்டுப் பெட்டியை அடைவான்; பெட்டிக்குள்

சென்றவுடன் ஒரு ஜன்னலைத் திறந்து விடுவான்; அவள் அதன்வழியே உள்ளே நுழைவதற்கு உதவிசெய்வான். இதைத் தவிர, வேறு மார்க்கம் இல்லை.

''அந்தத் தோல் சொக்காயை என்னிடம் கொடு. சகல அத்தாட்சிப் பத்திரங்களையும்விட அது உயர்ந்தது.''

ரீத்தா கொடுத்த சொக்காயைப் பாவெல் தரித்துக் கொண்டான். தன்னுடைய கைத்துப் பாக்கியை, அதன் பிடியும் வடமும் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் வகையில், சொக்காய்ப் பையில் வைத்துக்கொண்டான். தின்பண்டங்களடங்கிய கைப்பையை ரீத்தாவின் கால் அடியில் வைத்தான். பெட்டியின் முன்னுல் ஆவேச வசப்பட்டிருந்த கும்பலை முழங்கையால் இருபுறமும் தள்ளிவிட்டுக் கதவை அடைந்து, பாவெல் பிடியைப் பற்றிக்கொண்டான்.

''தோழா, எங்குப் போகிருய்?'' என்று கட்டுக்குட்டான செக்கா ஊழியன் வினவினுன்.

பாவெல் தன் முகத்தைத் திருப்பி, அவனை நோக்கினுன்.

''நான் ராணுவப் பிரதேசத்தின் விசேஷ இலாகாவிலிருந்து வருகிறேன். இந்தப் பெட்டியில் உள்ள பிரயாணிகள் அனைவரிடமும் கமிட்டி கொடுத்த டிக்கட்டுகள் உள்ளனவா என்பதைப் பார்க்க விரும்புகிறேன்'' என்று ஐயத்துக்கு இடமில்லாத அதிகார தோரணையில் பாவெல் விடை தந்தான்.

செக்கா ஊழியன் பாவெலின் சொக்காய்ப் பையிலிருந்த ரிவால்வரைப் பார்த்தான். தன் சட்டையின் முன்கையால் நெற்றியில் துளிர்த்த வேர்வையைத் துடைத்துக்கொண்டே, ''உன்னுல் முடிந்தால் உள்ளே போ'' என்று உற்சாக மில்லாமல் விளம்பினுன்.

பாவெலின் கரமும் தோளும் தீவிரமாகச் செயல் பட்டன. இடையிடையே, அவனது முட்டிக்கும் வேலை ஏற்பட்டது. மற்றவர்களின் தோள்களின் மேல் தொத்தி ஏறிக்கொண்டும், கைகளால் எட்டிப் பிடித்துக் கொண்டும், மேல்தட்டுகளைப் பிடித்துக் கொண்டும், நாலா புறத்திலிருந்தும் வந்த வசைமாரியைப் பொருட்படுத்தாமல், அவன் ஒருவாருகப் பெட்டியின் மையத்துக்குச் சென்ருன்.

மேல் தட்டுகளைப் பிடித்துக் கொண்டு தொங்கிய பாவெல் கீழே இறங்கியபொழுது, தற்செயலாக அவனது பாதம் பருத்துப் படர்ந்த மாதின் முழங்கால் மீது பட்டுவிட்டது. ''கட்டையில் போகிறவனே, உனக்குக் கண் அவிந்து விட்டதா?'' என்று அவள் வீறிட்டுக் கத்திஞள். அவள் 250 பவுண்ட் எடையுள்ள தன் உடலை ஒரு இருக்கையின் ஓரத்தில் கஷ்டப்பட்டுத் திணித்திருந்தாள். அவளது முழங்கால்களுக்கிடையே ஒரு பெரிய எண்ணெய் டின்னையும் வைத்துக் கொண்டிருந்தாள். வண்டியிலிருந்த தட்டுகள் அனைத்திலும் அதே போன்ற டின்களும் சாக்கு மூட்டைகளும்

கூடைகளும் நெரிசலாக நிறைந்திருந்தன. வண்டியில் மூச்சுவிடக்கூட இடமில்லே.

அந்த அம்மையாரின் வசவை உதாசீனம் செய்துவிட்டு, ''உங்கள் டிக்கட் எங்கே?'' என்று பாவெல் உசாவினுன்.

''என்ன கேட்கிருய்?'' என்று அவள் அவனேப் பார்த்துப் பொறிந்தாள்.

உச்சாணித் தட்டிலிருந்து ஒரு முகம் தோன்றியது. அது விகாரமான குரலில் பெருமுழக்கம் செய்தது: ''வாஸ்கா, அங்கே எந்தக் கழுதை வந்திருக்கிறது? அந்தப் பயலுக்கு மேல் உலக டிக்கட் ஒன்று கொடு.''

அதைக் கேட்டவுடன், ரோமம் அடர்ந்த மார்பை உடைய வாட்டசாட்டமான உருவம் ஒன்று பாவெலின் தலேக்கு மேல் தோன்றியது. அது தான் வாஸ்காவாக இருக்க வேண்டும். அவன் இரத்தம் சுரந்து சிவந்த கண்களால் பாவெலே வெறித்துப் பார்த்தான்.

''அந்த அம்மா வம்புக்குப் போகாதே. தெரிகிறதா? உனக்கு டிக்கட் எதற்காக வேண்டும்?'' என்று வாஸ்கா எரிந்துவிழுந்தான்.

அங்கிருந்த தட்டுகளில் ஒன்றிலிருந்து நான்கு ஜதைக் கால்கள் கீழே தொங்கின. பாவெல் அந்தக் கால்களுக்கு உரிய மனிதர்களே விரைவாகப் பார்த்தான். அவர்கள் ஒருவரை யொருவர் அணேத்துக்கொண்டு அமர்ந்திருந்தனர்; சூர்ய காந்தி விதைகளே நொறுக்கிக்கொண்டிருந்தனர். ஒரே பார்வையில், அவர்கள் இன்னுர் என்பதைப்

பாவெல் அனுமானித்து விட்டான். அவர்கள் கள்ள வியாபாரிகள். இரக்கம் என்பதை அறியாத அரக்கர்கள். நாடெங்கும் சென்று உணவுப் பொருட்களை வாங்கித் திருட்டுத்தனமாகச் சேமித்து, யானை விலை குதிரை விலைக்கு விற்றுக் கொள்ளையடித்து வந்த காதகர்கள். அவர்களுடன் சண்டை போடுவதற்கு அந்தச் சமயம் பாவெலுக்கு நேரம் இல்லை. அவன் எப்படியாவது ரீத்தாவை வண்டிக்குள் சேர்த்துவிட வேண்டும்.

ஜன்னலுக்கு அருகில் ஒரு மரப்பெட்டி இருந்தது. ரயில்வே உடுப்பு அணிந்த ஒரு மூத்த மனிதனிடம் அந்தப் பெட்டியைச் சுட்டிக்காட்டி, "'இது யாருடைய பெட்டி?'' என்று பாவெல் விசாரித்தான்.

''அவளுடையது'' என்று சொல்லி, அவன் பழுப்புக் காலுறை அணிந்த பருத்த கால்களைக் காட்டினான்.

ஜன்னலைத் திறந்தாக வேண்டும், பெட்டி அதற்குத் தடையாக இருந்தது. அதை நகர்த்தி வைப்பதற்கும் இடம் இல்லை. எனவே, பாவெல் அந்தப் பெட்டியை எடுத்து, மேல் தட்டில் குந்திக் கொண்டிருந்த அம்மாளின் முழுங்கால்கள் மீது வைத்தான்.

''தயவு செய்து, ஒரு நிமிஷம் உங்கள் பெட்டியை வைத்துக்கொள்ளுங்கள். நான் ஜன்னலைத் திறக்கப் போகிறேன்'' என்று பாவெல் சொன்னான்.

''பிறர் சாமான்களைத் தொடாதே!'' என்று அந்தத் தட்டை மூக்குச் சிரிக்கி சீறினாள். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்து, ''மோத்கா! இவன் என்ன இங்கே கலவரம் செய்கிறான்?'' என்றாள். உடனே மோத்கா, ''ஓடு! இந்த இடத்தைவிட்டு ஓடு! இல்லாவிட்டால், உன் தோலை உரித்து விடுவேன்!'' என்று கூறிக் கொண்டே, செருப்பு அணிந்த பாதத்தால் பாவெலின் முதுகில் ஒரு உதை கொடுத்தான்.

பாவெல் அந்த உதையைச் சகித்துக் கொண்டு மௌனமாயிருந்தான். ஜன்னலைத் திறக்கும் வேலையில் அவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்ததே காரணம்.

''தயவு செய்து கொஞ்சம் நகர்ந்து கொள்ளுங்கள்'' என்று அவன் ரயில்வே சிப்பந்தியிடம் கூறினான்.

வழியில் இருந்த இன்னொரு டின்னையும் நகர்த்திவிட்டு, அவன் ஜன்னலுக்கு முன்னால் இடம் செய்து கொண்டான். திறந்த ஜன்னலுக்குக் கீழே, பிளாட்பாரத்தில் ரீத்தா நின்றுகொண்டிருந்தாள். அவள் உடனடியாகப் பையைப் பாவெலிடம் கொடுத்தாள். எண்ணெய் டின்னை வைத்துக் கொண்டிருந்த பருத்த மாதின் மடியில் பையை எறிந்துவிட்டு, பாவெல் ஜன்னல் வழியாக வளைந்து, ரீத்தாவின் கரங்களைப் பற்றிக் கொண்டான். அவளை உள்ளே இழுத்துவிட்டான். ரயில் பெட்டிக்குக் காவலாயிருந்த செக்கா ஊழியன் விதிக்கு விரோதமான இச்செயலைக் கவனிப்பதற்குள்,

ரீத்தா வண்டிக்குள் வந்து விட்டாள். அந்தச் சிப்பந்திக்கு வசைபாடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருந்தது. ரீத்தாவைக் கண்டவுடன், பெட்டியிலிருந்த வர்த்தகச் சூதாடிகள் ஏசிய ஏச்சையும் இரைந்த இரைச்சலையும் கண்டு, ரீத்தா மிலைத்துப் போய்விட்டாள். அவள் தரையில் நிற்பதற்குக்கூட இடமில்லை. எனவே, கீழ்த்தட்டின் ஓரத்தில் பாதங்களை வைத்துக்கொண்டு, மேல்தட்டை ஆதரவுக்குப் பிடித்துக்கொண்டாள். நாலாபுறத்திலிருந்தும் ஆபாசமான வசைமாரி அவளது செவிகளைச் சுட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு விகாரமான கனத்த சரீரம் மேலிருந்து கத்தியது.

''அந்தப் பன்றிப் பயலைப் பார்! முதலில் அவன் நுழைகிறுன். பிறகு தன் வைப்பாட்டியையும் இழுத்துக் கொள்கிறுன்.''

உச்சாணித் தட்டிலிருந்து ஒரு குரல் கிரீச் சென்று கதறியது: ''மோத்கா! அவனுடைய கண்களுக்கிடையே ஒரு குத்து விடு!''

தட்டை மூக்கு மாது தன் மரப்பெட்டியைப் பாவெல் தலையில் நிறுத்திவைப்பதற்கு முயன்றுகொண்டிருந்தாள். எந்தப் பக்கம் பார்த்தாலும், கேடு சூழும் மிருகங்களே, பாவெலையும் ரீத்தாவையும் நோக்கின. ரீத்தாவை இந்த அவமானத்துக்கு உட்படுத்தியதைக் குறித்து பாவெல் மிகவும் வருந்தினுன். ஆனுல் உள்ள நிலைமையைத் தகுந்த முறையில் சமாளிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

மோத்கா என்று விளிக்கப்பட்டவனை நோக்கி, ''உனது மூட்டைகளை வழியை விட்டு நகர்த்து. தோழர் நிற்பதற்கு இடம் கொடு'' என்று பாவெல் கூறினன். ஆனல் அதைக் கேட்ட மோத்கா ஆபாசமாக ஏசினன். பாவெலது இரத்தம் கொதித்தது. வலது புருவத்தில் நாடி வேகமாகத் துடித்து வேதனை உண்டாக்கியது. ''போக்கிரிப் பயலே! பொறு, பொறு. இதற்குத் தகுந்த தண்டனை கொடுக்கிறேன்'' என்று அந்தக் குண்டனிடம் பாவெல் கூறினன். அப்பொழுது, மேல் தட்டிலிருந்தவன் பாவெலது தலைமீது உதைத்தான்.

''நல்ல காரியம், வாஸ்கா? இன்னொரு உதை கொடு!'' என்று எல்லோரும் கூச்சலிட்டனர்.

இதுவரை சகித்துக் கொண்டிருந்த பாவெல் தன் பொறுமையை இழந்தான். அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில், துரிதமாகவும் உறுதியாகவும் செயல்படுவது அவன் சுபாவம். இன்றும் அப்படித்தான் நடந்துகொண்டான்.

''திருட்டு வியாபாரிகளா! வேசி மக்களா! இவ்வளவு தூரம் துணிந்துவிட்டீர்களா?'' என்று அவன் கத்தினன். லாவகமாக மேல்தட்டில் ஏறி, மோத்காவின் காம வெறி மிகுந்த மூஞ்சியில் ஒரு குத்து விட்டான். அந்தக் குத்தின் விசையால் மோத்கா உருண்டு, நடைபாதையில் இருந்த பிரயாணிகளின் தலைகள் மீது விழுந்தான்.

''பன்றிகளா! மேல் தட்டிலிருந்து இறங்குங்கள். இல்லாவிட்டால் உங்கள் அனைவரையும் நாய்

களைச் சுடுவதுபோல் சுட்டுக் கொல்வேன்!'' என்று ஆத்திரமிகுதியுடன் பாவெல் கூச்சல் போட்டான். அவனது துப்பாக்கி, நான்கு கள்ள வியாபாரிகளின் முகங்களுக்கு நேரே அசைந்தது.

ஒரு விஞடியில் நிலைமை மாறி விட்டது. ரீத்தா கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்; யாராவது பாவெலைத் தாக்கினுல், அவனைச் சுட்டு விடுவதென்ற தீர்மானத்துடன் அவள் நின்ருள். மேல்தட்டுக் காலியாயிற்று. அந்தத் திருட்டுக் கூட்டம் அவசரம் அவசரமாக, அந்தப் பெட்டியின் அடுத்த உட்பிரிவுக்குள் சென்றது.

காலியான தட்டில் ரீத்தா ஏறிக்கொள்வதற்கு பாவெல் உதவினுன்.

''நீ இங்கே இரு. நான் போய், அந்த நபர்களைக் கவனித்துவிட்டு வருகிறேன்'' என்று அவன் அவளிடம் இரகசியமாகக் கூறினுன்.

''அவர்களுடன் சண்டையிடப் போகிருயா? கூடாது'' என்று சொல்லி, அவள் பாவெலைத் தடுத்து நிறுத்த முயன்ருள்.

''சண்டை போடமாட்டேன். சீக்கிரத்தில் வருவேன்'' என்று அவன் உறுதி கூறினுன்.

அவன் மீண்டும் ஜன்னலைத் திறந்து, பிளாட்பாரத்தில் குதித்தான். சில நிமிஷங்கள் கழித்து, அவன் போக்குவரத்துச் செக்காவின் அதிகாரியான புர்மேய்ஸ்தர் என்பவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அவனது தலைமையில் பாவெல் முன்னுல் வேலை செய்திருக்கிருன். அந்த லாத்வியன் பாவெல் சொன்னதைக் கேட்டுக் கொண்டான்.

அந்தப் பெட்டி முழுவதையும் காலிசெய்து, சகல பிரயாணிகளுடைய தஸ்தாவேஜுகளையும் சோதிக்கும்படி உத்திரவிட்டான்.

''நான் சொன்ன மாதிரிதான் நடக்கிறது. ரயில் ஸ்டேஷனுக்கு வருவதற்குள்ளாகவே, அதில் கள்ளவியாபாரிகள் குவிந்து விடுகிறுர்கள்'' என்று அவன் உறுமினுன்.

பத்து செக்கா ஊழியர்கள் பெட்டியைக் காலி செய்து கொண்டிருந்தனர். பாவெல் தனது பழைய வழக்கத்திற்கு ஏற்ப பிரயாணிகளது தஸ்தாவேஜுகளைச் சோதிப்பதில் உதவி செய்தான். அவன் தன்னுடைய பழைய செக்காத் தோழர்களிடமிருந்த தொடர்புகளைப் பூர்த்தியாகக் கத்தரித்துவிடவில்லை. கம்ஸமோல் காரிய தரிசி என்ற முறையில், அவன் கம்ஸமோலின் சிறந்த உறுப்பினரில் சிலரைச் செக்காவுக்கு அனுப்பியுள்ளான். சோதனை முடிந்தபின், பாவெல் ரீத்தா இருந்த இடத்துக்குத் திரும்பினுன். இப்பொழுது, முற்றிலும் வேறுவகைப்பட்ட பிரயாணிகள் பெட்டியில் இடம் பெற்றனர். செஞ்சேனை வீரர்களும் அலுவல் பயணம் செய்பவர்களும் பெட்டியில் ஏறிக்கொண்டார்கள்.

மூன்ருவது தட்டின் மூலையில் ரீத்தாவுக்கு மட்டுமே இடமிருந்தது. மற்ற இடமெங்கும் செய்தித்தாள்களின் மூட்டைகளை வைத்திருந்தார்கள்.

''பரவாயில்லை. நாம் எப்படியாவது சமாளித்துக் கொள்வோம்'' என்று அவள் சொன்னுள்.

கடைசியாக, ரயில் நகரத் தொடங்கியது. அது ஸ்டேஷன் வழியாக மெதுவாக ஊர்ந்து சென்றபொழுது, அவர்கள் பிளாட்பாரத்தில் சாக்குமூட்டைகளின் குவியல் மீது உட்கார்ந்திருந்த பருத்த மாதைப் பார்த்தார்கள். ''ஏ, மான்கா! என்னுடைய எண்ணெய் டின் எங்கே?'' என்று அவள் ஊளையிட்டதும் அவர்களது காதில் விழுந்தது.

செய்தித்தாள் மூட்டைகளால் அமைந்த மறைப்புக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு, பாவெலும் ரீத்தாவும் ரொட்டியையும் ஆப்பிள் பழங்களையும் தின்றனர்; ஸ்டேஷனில் நிகழ்ந்த சம்பவத்தைப்பற்றி உரையாடினர்.

ரெயில் ஊர்ந்து சென்றது. வண்டிகள் சிதிலமடைந்தவை; கூட்டமோ தாங்க முடியவில்லை. இருப்புப் பாதையின் ஒவ்வொரு இணைப்பைக் கடந்த பொழுதும், அந்த வண்டிகள் நடுநடுங்கின; கிரீச்சென்று ஒலித்தன; வேதனையால் புலம்புவதுபோல் சப்தம் செய்தன. சந்தியா காலத்தின் நீலம் பாய்ந்த மங்கல் ஒளி ஜன்னல் வழியே வண்டிக்குள் பரவியது. அதன்பின் இரவு வந்தது; பெட்டியில் இருள் சூழ்ந்தது.

ரீத்தா களைத்திருந்தாள். அவள் பை மீது தலையை வைத்துக்கொண்டு, கண்களை மூடினாள். அரைத் தூக்கம். பாவெல் அந்தத் தட்டின் ஓரத்தில் உட்கார்ந்து புகை பிடித்தான். அவனும் களைத்திருந்தான். ஆனால் படுப்பதற்கு இடமில்லை. இரவு நேரத்தின் இளங்காற்று திறந்த ஜன்னல்

வழியே வண்டிக்குள் வீசியது. திடீரென்று வண்டி குலுங்கியது. ரீத்தா விழித்துக் கொண்டாள். இருளுக்கு இடையே பாவெலின் சிகரெட் ஒளியை நோக்கினாள். அவனது இயல்பு இது: இரவு முழுவதும் உட்கார்ந்து கொண்டே இருப்பானே யல்லாது, அவளுக்கு வசதிக் குறைவு உண்டாக்க மாட்டான்.

''தோழர் கர்ச்சாகின்! இந்த முதலாளித்துவ சம்பிரதாயங்களை விட்டுவிடு. படுத்துக் கொள்'' என்று அவள் வேடிக்கையான குரலில் கூறினாள்.

பாவெல் அவளுக்குக் கீழ்ப்படிந்தான். ரீத்தாவுக்குப் பக்கத்தில் அவன் படுத்துக் கொண்டான். அவன் தன்னுடைய விறைப்பான கால்களை நீட்டிக் கொண்ட பொழுது, அவனுக்குப் பெரிய சுகத்தை அனுபவிப்பதாகத் தோன்றியது.

''போக்கிரி! நாளைக்கு வேலை நிறைய இருக்கிறது. எனவே, கொஞ்சம் தூங்குவதற்கு முயற்சி செய்'' என்று ரீத்தா கூறினாள். அவள் நம்பிக்கையோடு தனது நண்பனைக் கட்டிக் கொண்டாள். அவளது கேசம் அவனுடைய கன்னத்தைத் தொடுவதை அவன் உணர்ந்தான்.

ரீத்தாவைப் புனிதமானவளாகப் பாவெல் கருதினான். அவள் அவனுக்குச் சிநேகிதி, தோழி, அரசியல் வழிகாட்டி. எனினும், அவள் ஒரு பெண். ஸ்டேஷனில் நடைபாலத்துக்கு அருகில் தான், அவன் முதன் முதலாக அவளது பெண்மைக் கவர்ச்சியை உணர்ந்தான். எனவே, இப்

பொழுது, அவளுடைய அணைப்பு அவனைக் கிளர்ந்தெழச் செய்தது. அவள் ஆழமாகச் சுவாசித்துக் கொண்டிருந்தாள். ஏற்றத் தாழ்வு இல்லாமல், ஒருசீராகச் சுவாசித்துக்கொண்டிருந்தாள். அதை அவன் உணர்ந்தான். எங்கோ, அவனுக்கு வெகு அருகில், அவளுடைய இதழ்கள் இருந்தன. அவை இருக்குமிடத்தைத் தேட வேண்டுமென்ற ஆர்வத்தை அந்த அண்மை நிலை அவனிடம் உண்டாக்கியது. ஆனால் மிகுந்த முயற்சியுடன் அவன் கொந்தளித்தெழுந்த அந்த ஆசையை அடக்கினான்.

அவனது உணர்ச்சிகளைக் கண்டு கொண்டவள் போல ரீத்தா இருட்டில் புன்னகை செய்தாள். அவள் முன்பே காதலின் இன்பத்தையும் காதலின் சாதல் தரும் துன்பத்தையும் அனுபவத்திருந்தாள். ஒருவர் பின் ஒருவராக, இரண்டு போல் ஷெவிக்குகளுக்கு அவள் தன் இதயத்தை ஒப்படைத்திருந்தாள். ஆனால் வெண் படையின் வெடிகுண்டுகள் இருவரையும் அவளிடமிருந்து களவாடின. அவர்களில்ஒருவன், ஆஜானுபாகுவாக விருந்த பிரிகேட் தலைவன். இன்னொருவன் நிர்மலமான நீலக் கண்களை உடைய வாலிபன்.

சீக்கிரத்தில், வண்டிச் சக்கரங்களின் முறையான ஒத்திசை பாவெலைத் தாலாட்டித் தூங்கச் செய்தது. மறு நாள் காலை, எஞ்சின் விசிலை ஊதியவரை, அவன் எழுந்திருக்கவேயில்லை.

இப்பொழுதெல்லாம் வெகு நேரத்துக்குப் பின் ரீத்தா தன்னறைக்குத் திரும்பி வரலானாள்.

அபூர்வமாகத் திறக்கப்படும் அந்த நாட்குறிப்பில் இன்னும் சில வரிகள் எழுதப்பட்டன.

''ஆகஸ்ட் 11

''மாகாண மகாநாடு முடிந்து விட்டது. அக்கீம், மிகாய்லோ ஆகியோரும் வேறு பலரும் அகில உக்ரேனிய மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்வதற்காகக் கார்க்கவுக்குப் போயிருக்கிறார்கள். எழுத்து வேலைக்கெல்லாம் என்னைப் பொறுப்பாக்கி விட்டுப் போயிருக்கிறார்கள். மாகாணக் கமிட்டியின் அங்கத்தினர்களாக துபாவாவும் பாவெலும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். துபாவா பெச்சோர்ஸ்க் வட்டாரக் கமிட்டிக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டதிலிருந்து அவன் வகுப்புகளுக்கு வராமல் இருக்கிறான். வேலை அதிகம். பாவெல் ஓரளவுக்குப் பயிற்சி பெறுவதற்கு முயற்சி எடுக்கிறான். ஆனால் நாங்கள் ரொம்ப தூரம் முன்னேறவில்லை. எனக்கு வேலை அதிகமாக இருப்பதாலோ, அவனுக்கு ஏதாவது வேலை வந்து விடுவதாலோ, படிப்புக்குக் குந்தகம் உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. ரயில்வேயில் கெடுபிடியான நிலைமை. எனவே, கம்ஸமோல் ஊழியர்கள் இடைவிடாமல் வேலைக்குத் திரட்டப்படுகிறார்கள். நேற்று, ஷார்க்கீய் வந்து என்னைச் சந்தித்தான். இளைஞர்களையெல்லாம் அவனிடமிருந்து அழைத்துக்கொண்டு போகிறார்களென்று புகார் செய்தான். அவன் முன்னுலுள்ள வேலைக்கு அவர்கள் அவசரமாகத் தேவைப்படுவதாகவும் கூறினான்.''

''நான் இன்று நடைக்கூடத்தின் வழியே சென்று கொண்டிருந்தபொழுது, மானேஜரின் அலுவலகத்துக்கு வெளியில், பாவெலும் பன்கிராத்தவும் இன்னொருவனும் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவர்களை நெருங்கிய பொழுது, பாவெல் பேசியது என் காதில் விழுந்தது.

'' 'அங்கு உட்கார்ந்திருப்பவர்களைச் சுட்டுத்தள்ள வேண்டும். அவர்களுடைய உத்திரவுகளை மாற்றுவதற்கு நாம் யாரென்று அங்கு உள்ளவன் கேட்கிறான். ரயில்வே விறகுக் கமிட்டிதான் இங்கு அதிகாரம் செலுத்துகிறதாம்! கம்ஸமோல்களாகிய நாம் தலையிடக் கூடாதாம்! இம்மாதிரி வீம்பு செய்கிறான்! அவனது வயிற்றைப் பார்க்க வேண்டும், பானை மாதிரி!... இந்த மாதிரியான அட்டைகள் இங்கு வந்து குவிந்திருக்கின்றன' என்று பாவெல் சொன்னான். இதற்கும் மேல் அவன், அதிர்ச்சி உண்டாக்கும் வகையில், கேவலமான சொற்களைப் பிரயோகித்தான். பன்கிராத்தவ் என்னைப் பார்த்துவிட்டுப் பாவெலை மெல்ல இடித்துச் சைகை செய்தான். அவன் சுழன்று திரும்பி, என்னைப் பார்த்தான்.

''அவனது முகம் வெளுத்து விட்டது. என்னை ஏறிட்டு நோக்காது உடனேயே வெளியேறி விட்டான். இனிப் பல நாட்களுக்கு என்னைச் சந்திக்க மாட்டான். நான் ஆபாசப் பேச்சுக்களை அனுமதிக்கமாட்டேன் என்பது அவனுக்குத் தெரியும்.''

"ஆகஸ்ட் 27

"நாங்கள் தலைமைக் குழுவின் பிரத்தியேகக் கூட்டத்தை நடத்தினோம். நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி விரிவாக எழுத, இப்பொழுதும் முடியாது. அக்கீம், ஜில்லா மா நாட்டிலிருந்து திரும்பி வந்திருக்கிறான். மிகுந்த கவலையுடன் இருக்கிறான். நேற்று இன்னொரு சப்ளை டிரெயின் கவிழ்ந்தது. இனி நாட்குறிப்பு எழுத முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இப்பொழுதே, இதை நான் முறையாக எழுதுவதில்லை. நான் பாவெலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அன்று அவனைக் கண்டு பேசினேன். அவனும் ஷார்க்கீயும் ஐவரைக் கொண்ட ஒரு கம்யூனை ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகச் சொன்னான்."

ஒரு நாள், பாவெல் ரயில்வே ஷாப்பில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது, டெலிபோனில் அவனை யாரோ கூப்பிடுவதாகத் தகவல் வந்தது. அவனைக் கூப்பிட்டவள் ரீத்தா. அன்று மாலை அவளுக்கு வேலையில்லை. எனவே, பாரிஸ் கம்யூன்* வீழ்ச்சிக்கான காரணங்களைப் பற்றிய

* பாரிஸ் கம்யூன் — 1871ல் பாரிஸ் நகரத்தில் தொழிலாளி வர்க்கம் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றியது. அப்பொழுது அமைந்த ஆட்சியே, பாரிஸ் கம்யூன் எனப்படும். அது மார்ச் 18லிருந்து மே 28வரை நிலைத்திருந்தது. பிரெஞ்சு பிற்போக்காளர்கள் அதை அழித்துவிட்டனர். தொழிலாளி வர்க்க ஆட்சிக்கு முன்னோடியாகப் பாரிஸ் கம்யூனைச் சரித்திரம் போற்றுகிறது.

அத்தியாயத்தை —முன்பே அவர்கள் படித்துக் கொண்டிருந்த அத்தியாயத்தை—முடித்துவிடலா மென்று அவள் கூறினாள்.

அன்று மாலை, பாவெல் சர்வகலாசாலைத் தெருவில் இருந்த ரீத்தாவின் வீட்டை அணுகிய பொழுது, அவன் மேலே நோக்கினான். அவளது அறையின் ஜன்னல் வழியே வெளிச்சம் தெரிந்தது. அவன் மாடிக்கு ஓடினான். கதவைத் தட்டிவிட்டு, அறைக்குள் பிரவேசித்தான்.

அங்கே, படுக்கையில் ஒருவன் படுத்திருந்தான். சாதாரணமாக இந்தப் படுக்கையில் ஒருவினாடி உட்கார்வதற்குக் கூட எந்த இளந்தோழனும் அனுமதிக்கப்பட்டதில்லை. ஆனால் இப்பொழுது, ராணுவ உடுப்பு அணிந்த ஒரு மனிதன் படுத்திருந்தான். ஒரு கைத்துப்பாக்கியும் சிப்பாயின் சாமான் பையும் செந்நட்சத்திரத்துடன் கூடிய குல்லாயும் மேஜை மீது கிடந்தன. அந்தப் புதியவனுக்குப் பக்கத்தில், ரீத்தா உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் தனது கைகளால் அவனை இறுகத் தழுவிக்கொண்டு, ஆவலுடன் பேசிக் கொண்டிருந்தாள். பாவெல் அறைக்குள் நுழைந்ததும், அவள் மலர்ந்த முகத்துடன் அவனை நோக்கினாள்.

படுத்திருந்த புதியவன் அவளது அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்தான்.

ரீத்தா, பாவெலின் கரத்தைக் குலுக்கிக் கொண்டே, ''பாவெல், இது....'' என்றாள். அவள் கூறி முடிப்பதற்குள் ''தாவீத் உஸ்தினோ

விச்'' என்று அந்தப் புதியவனே கூறினன். அவன் பாவெலின் கரத்தை அன்புடன் குலுக்கினன்.

''அவன் எதிர்பாராத விதமாக வந்தான்'' என்று ரீத்தா, இன்பச் சிரிப்புடன் விளக்கினள்.

பாவெல் உணர்ச்சியில்லாமல் புதியவனது கையைக் குலுக்கினன். கூற முடியா வருத்தங் கொண்டிருந்த அவனது கண்களிலிருந்து தீப் பொறி பறந்தது. அந்தப் புதியவனது உடுப்பின் முன்கையில் கம்பெனி தலைவனுக்கு உரிய நான்கு சதுரங்கள் இருந்ததையும் கவனித்தான்.

ரீத்தா ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தாள். அதற்குள் பாவெல் முந்திக்கொண்டு பேசினன்:

''துறையில், மரக்கட்டைகளை ஏற்றும் வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். உனக்கும் விருந்தாளி வந்திருக்கிறர். நல்லது, நான் போகவேண்டும். கீழே, பையன்கள் காத்திருக்கிறர்கள்.''

அவன் திடீரென்று தோன்றியதைப் போலவே திடீரென்று மறைந்தான். அவன் படிக்கட்டில் இறங்கிச் சென்ற சத்தம் அவர்களுடைய காதில் விழுந்தது. பிறகு, வெளிப்புறக் கதவைச் சாத்திய சத்தம் கேட்டது. அதன் பின் அமைதி நிலவியது.

''இது என்ன புதிரான நடத்தை?'' என்ற பாவனையில் தாவீத் ரீத்தாவை நோக்கினன்.

''அவனுக்கு ஏதோ கோளாறு'' என்று அவள் நா தழுதழுக்கக் கூறினள்.

அண்மையில், பாலத்துக்கு கீழ், ஒரு எஞ்சின் நீண்ட மூச்சு ஒன்றை விட்டது. அதன் வலிய

நுரையீரல்களிலிருந்து வெளியேறிய பொன்மய மான தீப்பொறிகள் விநோதமாக நடனம் செய்து கொண்டு, மேலே பறந்து, புகையில் மறைந்தன.

பாவெல் கிராதி மீது சாய்ந்து கொண்டு, ஸ்விச்சுப் பலகையில் கண் சிமிட்டிக் கொண் டிருந்த வர்ண விளக்குகளை வெறித்துப் பார்த் தான். அவன் தனது கண்களைச் சுருக்கிக் கொண் டான். அவன் மனதில் ஒரு பெரிய போராட் டம்.

''பாவெல்! ரீத்தாவுக்குக் கணவன் இருப்ப தைக் கண்டுபிடித்தவுடன், உங்கள் மனம் ஏன் புண்படவேண்டும்? அவள் தனக்குத் திருமணம் ஆகவில்லையென்று உங்களிடம் எப்பொழுதாவது சொன்னாளா? சொல்லியிருந்தாலும் அதனால் என்ன? நீங்கள் ஏன் அனலில் பட்ட மெழுகாக உருகவேண்டும்? தோழா, உங்கள் நட்பு நிஷ்கா மியமானது. பலனை எதிர்பாராதது, தன்னலமற் றது என்றெல்லாம் எண்ணினீர்கள்.... பின்னர், நீங்கள் இவ்வாறு நடந்து கொள்ளலாமா?'' என்று அவன் தன்னையே உசாவினான். ''ஆனால் தா வீத் அவளுடைய கணவனாக இல்லாவிட்டால்...? அவள் பெயர் ரீத்தா உஸ்திநோவிச்; அவன் பெயர் தாவீத் உஸ்திநோவிச். அதனால் என்ன? தாவீத் அவளுடைய கணவனாக இருக்கவேண்டுமென்று எப்படி உறுதிப்படுத்த முடியும்? அவன் அவளு டைய அண்ணனாக இருக்கலாம். சிற்றப்பனாகவும் இருக்கலாம்.... உண்மை அதுவானால், நீ அவ ளிடம் கொடூரமாக நடந்து கொண்டாய். மடை

யா! உனக்கும் பன்றிக்கும் வித்தியாசமில்லாத வகையில் பண்பாடற்ற முறையில் நடந்துகொண்டாய். அவன் அவளுடைய அண்ணனு இல்லையா என்பதை எளிதில் அறிந்திருக்கலாம். அவன் அண்ணனுகவோ, சிற்றப்பனுகவோ இருந்தால், உன் நடத்தை மோசமானது என்பதில் ஐயமில்லை; அப்புறம் ரீத்தாவை நீ எப்படிப் பார்ப்பாய்? முடியாது. அவளை இனிமேல் பார்க்கக் கூடாது.''

ஒரு எஞ்சின் விஸிலின் அலறல் அவனது சிந்தனை ஓட்டத்தைத் தடுத்தது. ''காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. வீட்டுக்குப் போக வேண்டும். போதும், போதும் இந்த மதியீனம்!'' என்று எண்ணிக்கொண்டு நடந்தான்.

ரயில்வே தொழிலாளர் வசித்த வட்டத்துக்குத்தான் ஸாலோமென்கா என்று பெயர். இங்கு, ஷார்க்கீய், பாவெல், கிளாவிச்சேக், நிக்கொலாய் ஓக்குனேவ், ஸ்தெப்பான் அர்த்தியூகின் என்ற ஐந்து இளைஞர்கள் ஒரு குட்டிக் கம்யூனை அமைத்தனர். கிளாவிச்சேக் செக் இளைஞன்; நல்ல கேசத்தை உடையவன்; உல்லாசமானவன். நிக்கொலாய், டெப்போ கம்ஸமோலின் காரியதரிசி. ஸ்தெப்பான் பாயிலர் ரிப்பேர் செய்து வந்த தொழிலாளி. இப்பொழுது, ரயில்வே செக்காவில் வேலை செய்கிருன்.

அவர்கள் ஒரு அறையைப் பிடித்துக்கொண்டவுடன், அதைச் சுத்தம் செய்வதிலும் வெள்ளை அடிப்பதிலும் வர்ணம் பூசுவதிலும் ஈடுபட்டார்

கள். மூன்று நாட்கள் தங்களுக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தையெல்லாம் இதற்காகப் பயன் படுத்தினுர்கள். அவர்கள் வாளியும் கையுமாகப் போய் வந்து கொண்டிருப்பதைக் கண்ட அண்டை வீட்டுக்காரர்கள் வியப்புற்ருர்கள், ''வீட்டில் தீப்பற்றி விட்டதா? எதற்காக இவ்வளவு தண்ணீர்?'' என்று எண்ணத் தொடங்கினுர்கள். அந்த இளைஞர்கள் பூங்காவில் விழுந்து கிடந்த மாப்பிள் மர இலைகளைத் திரட்டிக் கொண்டு வந்து, சாக்குப் பைகளில் அடைத்து மெத்தைகளைச் செய்துகொண்டார்கள். நான்காவது நாள், அந்த அறை தூய்மைக்கு எடுத்துக்காட்டாக ஒளி வீசியது. சுவரில் பெத்ரோவ்ஸ்க்கியின்* படமும் ஒரு பெரிய தேசப் படமும் மாட்டப்பட்டிருந்தன.

ஜன்னல்களுக்கு இடையே புத்தகங்கள் நிறைந்த அலமாரி ஒன்று இருந்தது. இரண்டு பெட்டிகளில் அட்டைகளை வைத்துச் சீரமைத்து, நாற்காலி மாதிரி பயன்படுத்தினுர்கள். இன்னெரு பெரிய பெட்டி 'பீரோ' வாகப் பயன்பட்டது. அறையின் நடுவில் ஒரு பெரிய பில்லியர்ட்ஸ் மேஜை இருந்தது. ஆனுல் அதற்குத் துணி கிடை

---

* பெத்ரோவ்ஸ்க்கிய், கிரிகோரிய் இவானவிச் (1878-1958) — 1897ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தவர்; சோவியத் அரசு, கம்யூனிஸ்ட் கட்சி இவற்றின் தலைவர்களில் ஒருவர்.

யாது. அதை அந்த இளைஞர்கள் பண்டகசாலையிலிருந்து தமது தோட்கள் மீது சுமந்துகொண்டு வந்தனர். அது பகலில் மேஜையாக உபயோகிக்கப்பட்டது. இரவில் ஸ்ளாவிச்சேக் அதில் படுத்துறங்கினான். ஐந்து இளைஞரும் தமது உடைமைகள் அனைத்தையும் கொண்டுவந்தனர். காரியவாதியான ஸ்ளாவிச்சேக் அவற்றைக் கணக்கு எடுத்தான். அந்தக் கணக்கு விவரத்தைச் சுவரில் தொங்கவிட வேண்டுமென்று விரும்பினான். ஆனால் மற்றவர்கள் அந்த யோசனையை ஆட்சேபித்தார்கள். அறையிலுள்ளவையெல்லாம், ஐவருக்கும் பொது சொத்து என்று பிரகடனம் செய்யப்பட்டது. வருமானம், ரேஷன்கள், வீட்டிலிருந்து இடையிடையே வந்த பார்ஸல்கள் அனைத்தும் சமமாகப் பங்கு போடப்பட்டன. அவரவர் ஆயுதங்கள் மட்டுமே அவரவருக்குச் சொந்தச் சொத்தாகக் கருதப்பட்டன. கம்யூனின் உறுப்பினராகவுள்ள எந்தத் தோழராவது, பொதுவுடைமை விதியை மீறினால், அல்லது தோழர்களது நம்பிக்கைக்கு விரோதமாக நடந்துகொண்டால், அவர் கம்யூனிலிருந்து வெளியேற்றப்படுவாரென்று ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. கம்யூனிலிருந்து வெளியேற்றப்பட்டவர், அந்த அறையிலிருந்தே வெளியேற வேண்டுமென்று நிக்கொலாயும் ஸ்ளாவிச்சேக்கும் வற்புறுத்தினர். அந்தப் பிரேரணையும் நிறைவேறியது.

வட்டாரக் கம்ஸமோலின் தீவிர உறுப்பினர் அனைவரும் கம்யூனின் புதுக்குடித் துவக்கவிழாவுக்கு

வந்திருந்தனர். அடுத்த வீட்டுக்காரரிடமிருந்து ஒரு பிரம்மாண்டமான சமோவார் கடன்வாங்கப்பட்டது. கம்யூனிடமிருந்த சாக்கரீன் முழுவதும் தேநீர் விருந்தில் செலவாகிவிட்டது. டீ குடித்தபின், அந்த இளைஞர்கள் சேர்ந்து உரக்கப் பாடினார்கள்.

ஞாலமெலாம் கண்ணீரால் நனையு மாலோ
ஆனபல நாளெல்லாம் அவல மாலோ
காலமெலாம் பாடுபட்ட நமது வாழ்வில்
காலையிளம் பொழுதிங்கே தோன்றுமாலோ.

பூகையிலை பாக்டரியில் வேலை செய்த தால்யா கூட்டு கானத்துக்குத் தலைமை தாங்கினாள். அவளது தலையில் கட்டியிருந்த கருஞ்சிவப்புக் கைக்குட்டை ஒரு பக்கமாகச் சாய்ந்தது; எவராலும் ஆழம் காணமுடியாத அவளுடைய கண்களில் குறும்பு நடனமாடியது. அவளது சிரிப்பில் ஒரு தனிக் காந்த சக்தி இருந்தது. நம்மையும் அறியாமல், நாமும் அவனது ஆனந்தத்தில் பங்கு கொள்ளச் செய்து விடுவாள். தன் வாழ்வின் பதினெட்டாவது படியில் நின்று கொண்டு இளமையின் மலர்ச்சியின் ஊடாக உலகத்தை நோக்கினாள் இவ்வழகி. இப்பொழுது அவள் கைவீசிக் கொண்டே, எக்காள முழக்கம் போல இன்னிசை பொழிந்தாள்:

நம்முடைய கீதத்தை வெள்ளம் போல்
நானிலத்தின் எத்திசையும் பரப்பிடுவீர்!
நம் பொருமை பேசுமிந்தச் செம்பதாகை
நற்காற்றில் சுழன்றுடிப் பறக்குதம்ம!
உதயத்தின் நெருப்பாக உலகெங்கும்
உயர்பெருமைச் செங்கொடிதான் ஒளி
வீசும்!
இதயத்திற் கொட்டுகின்ற செந்நீரில்
எழுகின்ற தீயினிலே பறக்குதம்ம!

இரவு நெடுநேரம் வரை, இந்தக் கச்சேரி நீடித்தது. இளைஞர்கள் கலைந்து சென்றபொழுது, உறங்கிய தெருக்கள் அவர்களது குரல்களைக் கேட்டு விழித்துக்கொண்டன.

டெலிபோன் மணி அடித்தது. ஷார்க்கீய் ரிஸீவரைக் கையில் எடுத்துக்கொண்டான்.

''சத்தம் போடாதீர்கள். ஒன்றுமே கேட்க வில்லை!'' என்று அவன், காரியதரிசியின் அலுவலகத்தில் கூடியிருந்த கம்ஸமோல் இளைஞர்களைக் கடிந்துகொண்டான்.

அவர்களுடைய சந்தடி ஓரளவுக்கு அடங்கியது.

''ஹலோ! ஆ! நீயா? ஆமாம்; ஆமாம் இதோ. சம்மனு? பழையபடி, துறையிலிருந்து விறகுகளை இழுத்துக்கொண்டு வரும் விஷயம் தானே? சரி. என்ன? அவனை எங்கும் அனுப்ப வில்லை. இங்குதான் இருக்கிறான். பேசவேண்டுமா? ஒரு நிமிஷம்.''

ஷார்க்கீய் பாவெலைச் சைகை செய்து அழைத்தான்.

''ரீத்தா உன்னுடன் பேச விரும்புகிறாள்'' என்று கூறி, ரிஸீவரை அவனிடம் ஒப்படைத்தான்.

ரீத்தாவின் குரலை பாவெல் கேட்டான்:

''நீ ஊரில் இல்லை என்று நினைத்தேன். இன்று மாலை எனக்கு ஓய்வுதான். நீ வரக் கூடாதா? என் அண்ணன் போய்விட்டான். அவன் இந்த டவுன் வழியே பிரயாணம் செய்ததால், இடையில் இறங்கி என்னைப் பார்த்து விட்டுப் போனான். நாங்கள் இருவரும் சந்தித்து இரண்டு வருஷங்களாகிவிட்டன.''

அவளுடைய அண்ணன்!

அதற்குமேல், பாவெலின் கேள்விப் புலனில் எதுவும் பதியவில்லை. அந்தத் துர்ப்பாக்கியமான மாலையையும் அன்று இரவு பாலத்தில் தான் கொண்ட தீர்மானத்தையும் அவன் நினைவூட்டிக் கொண்டான். ஆம். இன்று மாலை, அவன் அவளிடம் சென்று, இந்த விஷயத்துக்கு முடிவு கட்டிவிட வேண்டும். காதல் என்றால் அத்துடன் கவலையும் துன்பமும் வந்து குவிகின்றன! அம்மாதிரியான விஷயங்களுக்கு இதுவா நேரம்?

''நான் பேசுவது காதில் விழுகிறதா?'' என்று டெலிபோனில் ரீத்தா வினவினாள்.

''கேட்கிறது. நல்லது. குழுக்கூட்டம் முடிந்த பின், நான் வருகிறேன்'' என்று பதிலளித்துவிட்டு பாவெல் ரிஸீவரைக் கீழே வைத்தான்.

அவன் ஓக் மரத்தில் செய்த மேஜையின் விளிம்பைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்; அவளுடைய கண்களை நேராக நோக்கிக்கொண்டே கூறினன்:

''இனி, நான் உன்னை வந்து பார்க்க முடியா தென்று நினைக்கிறேன்.''

அந்தச் சொற்களைக் கேட்டு, அவளது கண்கள் அகல விரிந்தன; எழுதிக்கொண்டிருந்த பென் ஸில் வேலை நிறுத்தம் செய்தது; அவள் கையிலிருந்து நழுவி, தாள்மீது அசையாமல் கிடந்தது.

''ஏன் வரமுடியாது?'' என்று ரீத்தா கேட்டாள்.

''நேரம் கிடைப்பது கடினமாயிருக்கிறது. எங்களுடைய வேலை எப்படியிருக்கிறதென்பதை நீயே அறிவாய். எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனல் வேறு வழி இல்லை. படிப்புத் திட்டத்தை விட்டுவிடவேண்டும்....''

அவனது கடைசி பேச்சில் அழுத்தமில்லை; உறுதி இல்லை. அதை அவனே உணர்ந்தான்.

உள்ளூர ஒரே ஆத்திரம். ''ஏன் இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகிருய்? நேருக்கு நேர் எடுத்தெறிந்து பேச முடியாத கோழை'' என்று அவன் தனக்குள் தன்னைச் சபித்துக்கொண்டான்.

பிறகு, அவன் உரக்கப் பேசினன்:

''மேலும், கொஞ்ச காலமாகவே, உன்னிடம் சொல்லவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்; அது என்னவென்ருல், உன் விளக்கங்களைப் புரிந்து கொள்வது எனக்குக் கஷ்டமா

யிருக்கிறது. ஸெகாவிடம் படித்தபொழுது, கற்றுக்கொண்டதெல்லாம் பசுமரத்தாணி போலப் பதிந்தது. ஆனால் உன்னிடம் படித்தால், மூளையில் தைப்பதில்லை. நான் எப்பொழுதுமே, நமது பாடம் முடிந்தபின், தோக்கரெவிடம் சென்று மீண்டும் விளக்கச் சொல்கிறேன். குற்றம் என்னுடையது தான். நான் கற்றுக்கொடுக்கும் பாடத்தைப் புரிந்துகொள்ள முடியாத பேதை. நீ கொஞ்சம் மூளையுள்ள மாணவனுக்குப் போதிப்பதே நல்லது.''

அவள் அவனது உள் மனதின் ஓட்டத்தை அறிவதற்காகக் கூர்ந்து நோக்கினாள். பாவெல் அதைக் கவனிக்காதவன்போலக் குனிந்துகொண்டு பேசினான். அவளுடன் இனி எத்தகைய ஒட்டும் உறவும் இருக்கக் கூடாது என்று அவன் தீர்மானித்து விட்டான். எனவே, ''நாம் சேர்ந்து படிப்பது, நேரத்தை விரயம் செய்வதாகும்'' என்றே கூறிவிட்டான்.

பிறகு அவன் எழுந்து நின்றான்; தன் பாதத்தாலேயே நாற்காலியை நகர்த்தினான். அவளது குனிந்த தலையையும் வெளுத்த முகத்தையும் விளக்கின் வெளிச்சத்தில் பார்த்தான். தன் குல்லாயை எடுத்து அணிந்துகொண்டான்.

''தோழர் ரீத்தா, விடை பெறுகிறேன். உன் நேரத்தை வீண் செய்து விட்டேன். அதற்காக வருந்துகிறேன். ஆரம்பத்திலேயே என் கஷ்டத்தைச் சொல்லியிருக்க வேண்டும். தவறி விட்டேன். அதுதான் நான் செய்த குற்றம்.''

ரீத்தா, தன் கையை அவனிடம் நீட்டினுள் என்பது மெய். ஆனுல் அது ஒரு அனிச்சைச் செயலே. அவனது திடீர் மாறுதல், பரிவுக்கு இடமில்லாத போக்கு, அவளை அதிர்ச்சி அடையச் செய்துவிட்டது. எனவே, அவளால் சில வார்த்தைகளே பேச முடிந்தது.

''பாவெல், நான் உன்னைக் குற்றம் சொல்ல மாட்டேன். உன் உள்ளத்தைப் பிணிக்கும் வகையில் எடுத்துரைக்கும் ஆற்றல் எனக்கு இல்லையென்ருல், உன்னை எப்படிக் குறை சொல்லலாம்?''

பாவெல், தாங்க முடியாத பாரம் இதயத்தை அழுத்த, கதவை நோக்கி நடந்தான். அவன் அதைக் கடந்தபின், அந்தக் கதவை மெதுவாகச் சாத்தினன். கீழே அவன் ஒரு கணம் தயங்கினன். இப்பொழுதும் திரும்பிச் சென்று உண்மையை எடுத்துரைக்கலாம்; காலம் கடந்துவிடவில்லை.... ஆனுல் அதன் பயன் என்ன? எதற்காக விளக்க வேண்டும்? அவள் இளப்பமாகப் பேசுவதை வாங்கிக் கட்டிக் கொண்டு, மீண்டும் வெளியேறுவதற்காகவா? கூடாது.

உடைந்துபோன ரயில் வண்டிகளும் சோம்பிக் கடந்த எஞ்சின்களும் ஸ்டேஷன் முட்டுச்சந்துகளில் குவிந்தன. மர வேலை நடந்த இடத்தில், எவரும் வேலை செய்யவில்லை; காற்றுதான், மரம் அறுத்துக் குவிந்த வாள் தூளைச் சுழற்றிச் சுழற்றிச் சிதறச் செய்தது.

நகரைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகளிலும் மறைவான பள்ளங்களிலும் ஓர்லிக்கின் கொள்ளைக் கூட்டத்தினர் நடமாடினார்கள். பகல்பொழுதில், அவர்கள் சுற்றியுள்ள கிராமங்களிலோ, அல்லது காடுகளிலிருந்த பெரும் தேனீப் பண்ணைகளிலோ காலத்தைப் போக்கினார்கள். இரவு நேரத்தில் அவர்கள் இருப்புப் பாதையை நோக்கி ஊர்ந்து சென்றனர்; ஈவிரக்கமில்லாமல், அந்தப் பாதைகளைப் பெயர்த்தனர்; தமது தீய வேலையை முடித்த பின், மறைவிடங்களில் ஒளிந்து கொண்டனர்.

இருப்புப் பாதையிலிருந்து பல இரும்புப் புரவிகள் உருண்டு விழுந்து உடைந்தன. ரயில் பெட்டிகள் பல தூள்தூளாகச் சிதறுண்டன. ரயிலில் உறங்கிய மாந்தர் பலர் அந்த அழிவுகளால் மீளா உறக்கத்தில் ஆழ்ந்தனர். வண்டிகளில் வந்த ஜீவாதாரமான தானியமெல்லாம் இரத்தத் தோடும் மண்ணோடும் கலந்து கரியாயின.

இக்கொள்ளைக் கூட்டத்தினர் சந்தடியற்று அமைதி நிறைந்த பெரிய கிராமங்களின்மீது அடிக்கடி பாய்ந்தனர். இவர்களைக் கண்டு அஞ்சி நடுங்கிய கோழிகள் நாற்புறமும் சிதறி ஓடும். வெறித்தனமாக வெடிகுண்டுகள் திடீர் திடீரென வெடித்தன. கிராம சோவியத் கட்டிடத்துக்கு முன் சிறிது நேரம் துப்பாக்கிப் பிரயோக ஒலி கேட்கும். கொள்ளைக்காரர்கள் தமது கொழுப்பேறிய குதிரைகள் மீது தெருக்களில் பவனி செல்வார்கள். பாதையில் கண்டவர்களையெல்லாம் வெட்டிப்

போடுவார்கள். ஆம். அவர்கள் வாழைக் குலைகளைச் சீவுவதைப் போல, மனக்கலக்கமில்லாமல் மாந்தர்களைக் கொன்றனர். அவர்கள் அருமையாகவே துப்பாக்கியைப் பயன்படுத்தினார்கள்: குண்டுகளைச் சிக்கனப்படுத்தி வந்தனர்.

கொள்ளைக் கூட்டத்தார் மின்னல் வேகத்தில் படையெடுத்த மாதிரியே சடுதியில் மறைந்து விடுவார்கள். அவர்களுக்குக் கண்ணும் காதும் இல்லாத இடமே இல்லை. அவர்களது கண்கள், கிராம சோவியத் கட்டிடத்தின் சுவர்கள் வழியாகவும் ஊடுருவின! எப்படியென்றால், காட்டில் வாழ்ந்த கொள்ளைக்காரர்கள், கிராமத்துப் பாதிரியின் வீட்டுடனும் பணக்கார விவசாயிகளின் இல்லங்களுடனும், கண்ணுக்குத் தெரியாத தொடர்புகளைக் கொண்டிருந்தனர். வெடி மருந்துப் பெட்டிகளும் புத்தம் புதிய பன்றி இறைச்சியும் மது பானவகைகளும் காடுகளிலிருந்த மறைவிடங்களுக்குச் சென்று கொண்டிருந்தன. மேலும், ஒவ்வொரு ஊரிலிருந்தும் சேதிகளும் சென்றன; அந்தச் சேதிகள் குட்டித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. அவர்களிடமிருந்து அந்தச் சேதிகள் சுற்றி வளைந்த பாதைகள் வழியே, ஓர்லிக்குக்குத் தெரிவிக்கப் பட்டன.

அந்தக் கூட்டத்தில், இருநூறு அல்லது முந்நூறு கொலைகாரர்களே இருந்தனர். எனினும் இதுவரை அவர்களைப் பிடிக்க முடியாமல் இருந்தது. அவர்கள் சிறுசிறு கோஷ்டிகளாகப் பிரிந்து,

ஒரே சமயத்தில் இரண்டு மூன்று ஜில்லாக்களில் செயல்பட்டனர். அவர்கள் அனைவரையும் பிடிப்பது அசாத்தியமாயிருந்தது. நேற்று இரவு கொள்ளையடித்தவன், இன்று காலை சமாதானமாக வாழும் விவசாயியைப் போலத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருப்பான்; அல்லது குதிரைக்குத் தீனி போட்டுக் கொண்டிருப்பான்; அல்லது வீட்டு வாசலில் நின்று புகை பிடித்துக் கொண்டு, வீதியில் சென்ற குதிரைப் படைக் காவலர்களை வெறுமையான பார்வையுடன் நோக்கிக் கொண்டிருப்பான்.

அலெக்ஸாந்தர் புஷிரேவ்ஸ்க்கிய் தன்னுடைய ரெஜிமென்டுடன் இந்தக் கொள்ளைக் கூட்டத்தை வேட்டையாடினான்; மூன்று ஜில்லாக்களிலும் ஓட ஓட விரட்டினான்; பிடிவாதத்துடன் செயல்பட்டான். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், அவர்களை நெருங்கி விடுவான். ஆனால் அவர்களைக் கைப்பற்ற முடியவில்லை. ஒரு மாதத்துக்குப் பிறகு, ஓர் லிக் இரண்டு ஜில்லாக்களிலிருந்து தனது குண்டர் கூட்டத்தைக் காலி செய்ய வேண்டியதாயிற்று. இப்பொழுது, அவனும் அவனுடைய கூட்டமும் ஒரு குறுகலான பிரதேசத்துக்குள் சுற்றி வளைக்கப்பட்டிருந்தனர்.

நகரத்தின் வாழ்வு வாடிக்கையான முறையில் ஊர்ந்து கொண்டிருந்தது. ஐந்து சந்தைகளிலும் ஜனங்கள் திரள் திரளாகக் கூடிச் சந்தடி செய்தனர். இந்தக் கூட்டங்களில் இரண்டே இரண்டு எண்ணங்கள் பேராதிக்கம் வகித்தன:

அதிகப்பட்சமான அளவுக்கு அபகரித்துச் சுருட்டிக் கொள்வது என்பது ஒன்று; குறைந்தபட்சமான அளவுக்குக் கொடுப்பது என்பது இன்னொன்று. இந்தச் சூழ்நிலை, மோசடிக்காரர்களும் எத்தர் களும் தமது திறமைகளையும் வித்தைகளையும் பயன் படுத்திக்கொள்வதற்கு நல்ல வாய்ப்பாக இருந்தது. இந்தக் கூட்டங்களுக்கு இடையே, நாணயம் என்பதையே அறியாத நூற்றுக்கணக் கான நபர்கள் குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றித் திரிந்தனர். ஈக்களெல்லாம் எருக்குழியில் திரண்டு மொய்ப்பதைப்போல, நகரத்தின் கழிசடைக ளெல்லாம் இங்குக் கூடின; புதியவர்களை ஏமாற் றுவதென்ற ஒரே குறிக்கோளுடன் கூடின. இந்தப் பக்கம் அபூர்வமாக வந்த சில ரெயில்களிலிருந்து சாக்கு மூட்டைகளுடன் இறங்கிய நபர்கள் உடனடியாகச் சந்தைகளுக்குச் சென்றனர்.

இராக்காலத்தில், சந்தைகள் வெறிச்சென்று கிடந்தன; சந்தைகள் அமைந்திருந்த சந்துகளும், கருமை நிறத்துடன் விளங்கிய கடை வரிசைகளும், பாலைவனம் போன்று காட்சி அளித்தன.

இருட்டியபின், சந்தைக்குப் போவதற்குச் சாதாரணமாகத் துணிச்சல்காரர்கள்கூட முனைய மாட்டார்கள். ஏனெனில் ஒவ்வொரு கடையிலும் ஆபத்து பதுங்கியிருந்தது. அடிக்கடி, இரவு நேரத் தில், இந்தச் சந்தைகளில் கொலை நடப்பதும் உண்டு; காய்ச்சிய இரும்பைச் சம்மட்டியால் அடிக்கும் சப்தத்தைப்போல, துப்பாக்கிப் பிரயோ கச் சத்தம் கேட்டது உண்டு; அதைத் தொட்டு

சில விநாடிகளில் ஏதாவது ஒரு உடல் பிணமாகும். அடுத்த தெருவிலிருக்கும் மிலீஷியக்* குழு (மிலீஷியக்காரனும் அங்குத் தனியாகச் செல்ல மாட்டான்) அங்குப் போனால், பயங்கரமாகக் காட்சியளிக்கும் பிணத்தைத் தவிர, வேறொன்றையும் காணாது. வாடிக்கையாக, இரவில் சந்தையில் திரிந்த சிலரும், அங்கிருந்து சிட்டாகப் பறந்து விடுவார்கள்.

சந்தைக்கு எதிரில்''ஓரியன்'' சினிமா தியேட்டர் இருந்தது. அதன் மின்சார விளக்குகள் தெருவிலும் நடைபாதையிலும் பேரொளி வீசின. கொட்டகை வாசலில் ஜனங்கள் கூடியிருந்தனர். கொட்டகைக்குள், சலனப்படத்தின் 'புரொஜக்டர்' விருவிருப்பாக வேலை செய்தது. காதலில் வெற்றி காணாத காதலர்கள் ஒருவரை ஒருவர் கொன்றனர். படம் அறுந்து போகும் பொழுதெல்லாம் படம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் காட்டுமிராண்டித் தனமாக ஊளையிட்டனர்.

நகரத்தின் நடுப்பகுதியிலும் வெளிப் பேட்டைகளிலும் வாழ்க்கை வழக்கப்படி இயங்குவதாகத் தோன்றியது. புரட்சிகரமான ஆணைக் குழுவுக்குக் கேந்திரமாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மாகாணக் கமிட்டி அலுவலகத்தில்கூட, எல்லாம் அமைதியாகத்தான் இருந்தது. ஆனால் இது ஒரு புறத்தோற்றமே.

---

* மிலீஷியா—மக்கள் போலீஸ்.

உண்மையில், நகரத்தில் ஒரு புயல் உருவாகிக் கொண்டிருந்தது.

வெவ்வேறு திசைகளிலிருந்து விவசாயிக் கோட்டுடனும், அதனுள் அரைகுறையாக மறைந்திருந்த பட்டாளத் துப்பாக்கியுடனும் நகரத்துக்கு வந்திருந்த பலருக்கு அவ்விஷயம் தெரிந்திருந்தது. கள்ளவியாபாரிகள் போன்ற வெளித்தோற்றத்துடன் டிரெயின் கூரைகளில் பயணம் செய்து நகரத்தை வந்து அடைந்தவர்களும் இவற்றை பற்றி யெல்லாம் அறிந்திருந்தனர்; ஒரு பெரிய காரியம் நடக்கவிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டிருந்தனர். அந்தப் போலி வியாபாரிகள், தமது சாக்குமூட்டைகளுடன் நேராகச் சந்தைக்குப் போகவில்லை; கவனமாக மனப்பாடம் செய்திருந்த விலாசங்களுக்கு உரிய இடங்களுக்குச் சென்றனர்.

இவையெல்லாம் இவர்களுக்குத்தான் தெரிந்திருந்தது. ஆனால் தொழிலாளர் வட்டாரங்களோ போல்ஷெவிக்குகளோ வரவிருக்கும் புயலைப் பற்றி கனவுகூட காணவில்லை.

அங்குள்ள ஐந்தே போல்ஷெவிக்குகள்தான், நகரத்தில் உருவாகிக் கொண்டிருந்த ஆயத்தங்களை அறிந்திருந்தனர்.

செஞ்சேனையால் முறியடிக்கப்பட்ட பெத்லியூராவின் படைகள் போலந்தில் புகலிடம் தேடின அல்லவா? அவற்றில் மிஞ்சியிருந்தவையெல்லாம், வார்ஸாவில் இருந்த அன்னியத் தூதராலயங்களின் அன்னியோன்ய ஒத்துழைப்புடன்

செயல்பட்டன. சோவியத் எல்லைக்குள் கலகத்தை நடத்துவதற்குச் சதிவலை பின்னியிருந்தன. பெத்லியூராவின் ஆட்களைக் கொண்ட ஆக்கிரமிப்புக் கும்பல் ஒன்று உருப்பெற்றிருந்தது.

கலகக்காரர்களின் மத்தியக் கமிட்டிக்கு, ஷெப்பெத்தோவ்க்காவில் ஒரு ஸ்தாபனம் இருந்தது. அதில் நாற்பத்தேழு உறுப்பினர் இருந்தனர். அவர்களில் பலர் முன்பு புரட்சிக்கு விரோதமாக வேலை செய்தவர்கள். ஆனால் செக்கா அவர்களை நம்பிச் சுதந்திரமாக விட்டு வைத்திருந்தது.

வஸீலிய் பாதிரியாரும், ஜார் படையில் ஜூனியர் லெப்டினன்டாக இருந்த வீன்னிக் என்பவனும், பெத்லியூரா படையில் அதிகாரியாக விருந்த குஸ்மேன்கோ என்பவனும் அந்த ஸ்தாபனத்தின் தலைவர்களாயிருந்தனர். பாதிரியின் பெண்கள், வீன்னிக்கின் தந்தை, வீன்னிக்கின் சகோதரன், நிர்வாகக் கமிட்டி அலுவலகத்துக் குள்ளேயே புழுப்போல் நெளிந்து நுழைந்துவிட்ட சாமோத்தீன்யா ஆகியோர் உளவு வேலை செய்தனர்.

அவர்களது திட்டம் என்ன? இரவு நேரத்தில், எல்லைக் காவலரின் அலுவலகத்தை எறி குண்டுகளால் தாக்குவது; கைதிகளை விடுதலை செய்வது; முடிந்தால் ரயில்வே நிலையத்தைக் கைப்பற்றுவது ஆகியவையே.

ஒரு பெரிய நகரத்தில்—வருங்காலக் கிளர்ச்சிக்குக் கேந்திரமாக விளங்கவிருந்த அந்நகரத்தில்

—மிகமிக இரகசியமாக ராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வந்தது. கொள்ளைக் கூட்டத்தினர் சுற்றுப்புறக் காடுகளில் திரண்டனர். அங்கிருந்து, நம்பிக்கையான ஆட்கள் மூலம், அவர்கள் ருமேனியாவிலுள்ள பெத்லியூராவுடனும் தொடர்பு கொண்டிருந்தனர்.

ராணுவப் பிரதேசத்தின் விசேஷ இலாகாவில் வேலை செய்யும் பியோதர் ஷுஹ்ராய் ஆறு நாட்களாகத் தன் கண்களை மூடவில்லை. நடக்கப் போவது என்ன என்பதை முன்கூட்டியே அறிந்திருந்த ஐந்து போல்ஷெவிக்குகளில் அவனும் ஒருவன். தப்பி ஓடுவதற்கு வழியில்லாமல் சிக்கிய பிராணி மீது பாய்வதற்குக் காத்திருக்கும் வேடனைப் போல, பியோதர் இப்பொழுது உஷாராகவிருந்தான்.

அவன் அபாய அறிவிப்பு கொடுத்தால் காரியம் கெட்டுவிடும். இரத்த வெறிபிடித்த அரக்கனைக் கொன்றாக வேண்டும். அப்பொழுதுதான் நிம்மதியாக வேலை செய்ய முடியும்; எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ என்ற கவலை மனதை அரிக்காமல் வாழமுடியும். ஆனால் பிடிபட வேண்டிய மிருகத்துக்குப் பீதி உண்டுபண்ணக் கூடாது. இத்தகைய ஜீவ மரணப் போராட்டம் ஏற்படும்பொழுது, போர்வீரனின் சகிப்புத் தன்மையும் வைராக்கியமும்தான் இறுதி வெற்றிக்கு உத்திரவாதம்.

தீர்மான நேரம் நெருங்கிவிட்டது.

டவுனில், சதிகாரர்களின் குகைகளில் எங்கோ ஓரிடத்தில் காலத்தை நிச்சயத்துவிட்டார்கள்; நாளை இரவு என்று தீர்மானித்துவிட்டார்கள்.

ஆனால் இந்த உளவை அறிந்த ஐந்து போல்ஷெவிக்குகள், தாமே முதலில் தாக்குவதென்று முடிவுசெய்தார்கள். நாளை இரவு தற்காத்துக்கொள்வதல்ல; இன்று இரவே முன்னேறித் தாக்குவதென்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

அன்று மாலையில், கவசத்துடன் கூடிய ஒரு டிரெயின் இரயில்வே டெப்போவிலிருந்து சப்தமில்லாமல் வெளியேறியது; அது நீங்கியபின், டெப்போவின் பிரம்மாண்டமான வாசல்கள் சப்தமில்லாமல் மூடின.

சங்கேத மொழியில் தந்திகள் பறந்தன; அவற்றின் அவசர ஆணைக்கு இணங்க, குடியரசின் பந்தோபஸ்துக்குப் பொறுப்பாயிருந்து இமை கொட்டாமல் தொண்டாற்றிய வீரர்கள் குளவிக் கூடுகளை ஒழிப்பதற்காக உடனடி நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

அக்கீம், ஷார்க்கீய்க்குப் போன் செய்தான்:

''குழுக் கூட்டங்கள் நடப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் யாவும் செய்யப்பட்டுவிட்டனவா? நல்லது. உடனடியாக இங்கு வா. ஒரு அவசரமான மாநாடு. கட்சியின் ஜில்லாக் கமிட்டிச் செயலாளரையும் கூட அழைத்துவா. விறகுப் பிரச்சினை, நாம் எதிர்பார்த்ததைவிட மோசமா

யிருக்கிறது. நீ இங்கு வந்தவுடன் விவரங்களைப் பேசுவோம்.''

''இந்த விறகுப் பிரச்சினை அனைவருக்கும் பைத்தியம் பிடிக்கச் செய்யும் போலிருக்கிறது!'' என்று ஷார்க்கிய், ரிஸீவரை வைத்து விட்டு, உறுமினான்.

இரண்டு காரியதரிசிகளையும் ஏற்றிக்கொண்டு, வீத்கே தலைதெறிக்கும் வேகத்தில் காரை ஓட்டினான். அவர்கள் படிக்கட்டில் ஏறி இரண்டாவது மாடியை அடைந்தார்கள். அங்குச் சென்றவுடனேயே, விறகுப் பிரச்சினைக்காக அழைக்கப் படவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

அலுவலக மானேஜருடைய மேஜையின்மீது ஒரு யந்திரத் துப்பாக்கி இருந்தது. விசேஷப் படையைச் சேர்ந்த சில செஞ்சேனை வீரர்கள் அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். நடைக்கூடங்களிலெல்லாம், டவுன் கட்சி ஸ்தாபனத்தையும் கம்ஸமோல் ஸ்தாபனத்தையும் சேர்ந்த தோழர்கள் அமைதியாகக் காவல் காத்து நின்றனர். காரியதரிசி அறையில், விசாலமான கதவுக்குப் பின்னால், மாகாணக் கமிட்டியின் செயற்குழு தன் அவசரக் கூட்டத்தை முடித்துக்கொண்டிருந்தது.

தெருவிலிருந்து ஜன்னலின் வழியாக மின்சாரக் கம்பிகள் இரு ராணுவத் தொலைபேசிகளுடன் சேர்க்கப்பட்டிருந்தன.

அறையில், அக்கீம், ரீத்தா, மிகாய்லோ

ஆகியோர் இருந்தனர். அவர்கள் மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருந்தனர். ரீத்தா, செஞ்சேனை வீரனின் குல்லாயையும் காக்கிப் பாவாடையையும் தோல் சொக்காயையும் அணிந்திருந்தாள்; அவளது பெல்ட்டிலிருந்து ஒரு கனமான 'மௌஸர்' கைத்துப்பாக்கி தொங்கியது. அவள் இராணுவ கம்பெனியின் அரசியல் ஊழியாகப் பணி செய்த பொழுது, இதே உடுப்பைத்தான் அணிந்திருந்தாள்.

ஷார்க்கீய்க்கு ஒரே வியப்பு.

''இதெல்லாம் எதற்கு?'' என்று அவன் ரீத்தவைக் கேட்டான்.

''ஷார்க்கீய், இது உஷார் பயிற்சி. உடனே நாம் உங்களது வட்டாரத்துக்குச் செல்கிறோம். ஐந்தாவது காலாட்படைப் பள்ளிக்கூடத்தில், மாதிரி அணி வகுப்பு ஒன்று நடக்கப்போகிறது. கம்ஸமோல் உறுப்பினர்கள், தத்தம் குழுக்கூட்டத்திலிருந்து நேராக அங்கு வருவார்கள். எவருடைய கவனத்தையும் ஈர்க்காத வகையில் அங்குச் செல்வதுதான் முக்கியமான விஷயம்.''

பழைய ராணுவ ஸ்கூலின் புறவெளியில், பழம் பெரும் மரங்கள் ஓங்கிவளர்ந்திருந்தன; தேங்கிக்கிடந்த குட்டை நீரில் பூண்டு வகைகள் மண்டிக்கிடந்தன; விசாலமான நடைபாதைகள் துடைப்பத்துக்காகத் தவம் செய்தன; அங்கும் அமைதி பூர்ணமாக நிலவியது.

மரங்களுக்கிடையே, ஒரு உயர்ந்த வெண் சுவருக்குப் பின்னால் பள்ளிக் கூடக் கட்டிடம்

அமைந்திருந்தது. செஞ்சேனைத் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் காலாட்படைப் பள்ளியாக அது இப்பொழுது பயன்பட்டது. அந்தி நேரம். கட்டிடத்தின் மாடியில் ஒரே இருட்டாயிருந்தது. வெளிப் பார்வைக்கு, எங்கும் சாந்தி நிறைந்திருப்பதாகத் தோன்றியது. அந்தப் பள்ளியில் உள்ளவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்களென்றே அகஸ்மாத்தான வழிப்போக்கன் எண்ணியிருப்பான். ஆனால், அந்தப் பள்ளியின் இரும்புக் கதவுகள் ஏன் திறந்திருந்தன? ராட்சஸத் தேரைகள் மாதிரி இரண்டு இருண்ட வடிவங்கள் வாயிலில் ஏன் நின்று கொண்டிருந்தன? ரயில்வே வட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் இங்குக் கூடியவர்கள் உண்மையை அறிந்திருந்தார்கள்; இரவு நேர உஷார் அறிவிப்பு வந்தபின், பள்ளிக்கூட வாசிகள் தூங்க முடியாதென்ற உண்மையை அவர்கள் அறிந்திருந்தனர். கட்சிக் குழுக்களும் கம்ஸமோல் குழுக்களும் கூடியவுடன், அவர்கள் ஒரு ரத்தினச் சுருக்கமான அறிவிப்பைக் கேட்டார்கள். அதைக் கேட்டவுடன் அவர்கள் அமைதியாகப் பள்ளியை நோக்கி வந்தனர். அவர்கள் தனித்தனியாகவோ, ஜதை ஜதையாகவோ, அல்லது அதிகமாகப் போனால் மும்மூன்று பேர்களாகவோ, பள்ளிக்கு வந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் கம்யூனிஸ்ட் கட்சிக் கார்டு அல்லது கம்ஸமோல் கார்டைக் கொண்டு வந்தனர். அந்த அடையாளச் சீட்டு இல்லாமல், எவரும் பள்ளிக்கூடத்தின் இரும்புக் கேட்டுகளுக்குள் அன்று நுழைந்திருக்க முடியாது.

கூட்டம் நடக்க விருந்த ஹாலில் பலர் கூடிவிட்டனர். அங்கு விளக்குகளின் வெளிச்சம் அதிகமாயிருந்தது. ஜன்னல்கள், கூடாரம் கட்டு வதற்குப் பயன்படும் கித்தான்களால் நன்குதிரை யிடப்பட்டிருந்ததால், உள்ளேயிருந்த வெளிச்சம் வெளியே செல்லவில்லை. இங்குத் திரண்டிருந்த போல்ஷெவிக்குகள் அமைதியாகத் தாங்கள் கைப் படச் செய்த சிகரெட்டுகளைக் குடித்துக்கொண்டு, அபாய அறிவிப்புக்காக எடுக்கப்பட்டுள்ள முன் னெச்சரிக்கைகளைப் பற்றி விகடம் செய்து கொண் டிருந்தனர். இது ஒரு உண்மையான உஷார் அறிவிப்பு என்று எவரும் நினைக்கவில்லை. விசேஷப் படைப் பிரிவுகளின் கட்டுப்பாட்டைச் சோதித்து உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத்தான் பலர் நினைத்தனர். ஆனால், முதிர்ந்த அனுபவம் உடைய சிப்பாய்கள், பள்ளிக்கூடத்தின் வெளி முற்றத்துக்குள் பிரவே சித்தவுடன், இது உண்மையான உஷார் அறிவிப் புத்தான் என்பதை ஊகித்தனர். முன்னெச்சரிக் கையின் தீவிரத்திலிருந்தே அவர்கள் இவ்வாறு ஊகம் செய்தனர். மெல்லிய குரலில் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளுக்கு இணங்க, மாணவர்கள் வரிசை வரிசையாக அணிவகுத்தனர்; யந்திரத் துப்பாக்கி கள், சப்தமில்லாமல் முற்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன; கட்டிடத்தின் ஜன்னல்களில் ஒன்றில்கூட, ஒரு ஒளி ரேகையைக்கூடக் காண முடியவில்லை.

''துபாவா, ஏதாவது முக்கியமான விஷய மா?'' என்று பாவெல் துபாவாவை விசாரித்தான்.

துபாவா ஒரு இளம் பெண்ணுக்குப் பக்கத் தில், ஒரு ஜன்னலின் அடிக்கட்டையின் மேல் அமர்ந்திருந்தான். அந்த நங்கையை இரண்டு நாட் களுக்கு முன்னல் ஷார்க்கியுடன் பார்த்ததாகப் பாவெலுக்கு நினைவு.

துபாவா, நல்லியல்பு ததும்ப, பாவெலின் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டுக் கூறினன்:

''பாதம் சில்விட்டுப் போய்விட்டதா? கவலைப் படாதே. உன்னைப்போன்ற ஆட்களுக்கு நாங்கள் சண்டை போடக் கற்றுக் கொடுப்போம்.'' மேலும் ''நீங்கள் இருவரும் அறிமுகமாகவில்லையா?'' என்று வினவிக்கொண்டே அவன் அந்த மங்கை யைநோக்கித் தலை அசைத்தான். ''இவளது பெயர் ஆன்ன. குடிப் பெயர் எனக்குத் தெரியாது. ஆனல் இவளது பதவி என்னவென்று எனக்குத் தெரியும். கிளர்ச்சி-பிரச்சார மையத்துக்குப் பொறுப்பாயிருக்கிருள்'' என்று நகைச் சுவையுடன் அறிமுகம் செய்து வைத்தான்.

ஆன்ன, பாவெலைச் சிரத்தையுடன் நோக்கிக் கொண்டே, தனது ஊதாத் தலைக்குட்டையின் கட்டிலிருந்து தப்பி வந்த மயிர்ச்சுருளைப் பின்னுக் குத் தள்ளினள். பாவெலது கண்கள் அவளது கண் களைச் சந்தித்தன. ஓரிரண்டு விஞடிகள், இருவரது கண்களும் போட்டியிட்டுக் கொண்டு நோக்கின. கருமையான, ஒளி கொண்ட அவளது கண்கள் அவனது கண்களுக்குச் சவால் விட்டன. அதன்

பின், பாவெல் துபாவாவை நோக்கினுன். தனது முகம் சிவப்பதை அறிந்து, மனக்குறைவால் புருவத்தைச் சுருக்கினுன்.

''உங்களில் யார் யாருக்குப் பிரச்சாரம் செய்கிருர்?''—அவன் ஒரு புன்னகையை வர வழைத்துக் கொண்டு வினவினுன்.

அந்தச் சமயத்தில் ஹாலில் ஒரு கலகலப்பு உண்டாயிற்று. ஒரு கம்பெனித் தலைவன் நாற்காலி மீது ஏறி நின்றுகொண்டு, ''முதலாவது கம்பெனி உறுப்பினர்களே! அணிவகுத்து நில்லுங்கள்! அவசரம் தோழர்களே, அவசரம்!'' என்று இரைந்து கூவினுன்.

மாகாண நிர்வாகக் குழுவின் தலைவனேடும் அக்கீமுடனும் ஷுஹ்ராய் பிரவேசித்தான். அவர்கள் மூவரும் அப்பொழுதே அந்தக் கட்டிடத்துக்கு வந்தனர். ஹாலில் ஒரு கோடியிலிருந்து இன்னெரு கோடிவரை, ஆட்கள் முறையாக அணிவகுத்து நின்றனர்.

பயிற்சிக்குப் பயன்பட்ட யந்திரத் துப்பாக்கியின் அடி மேடைமீது மாகாண நிர்வாகக் குழுவின் தலைவன் ஏறி நின்று, தன் கரத்தை உயர்த்தினுன். அவன் பேசினுன்:

''தோழர்களே, மிக முக்கியமானதும் மிக அவசரமானதுமான ஒரு விஷயத்தை முன்னிட்டு, உங்களை இங்குக் கூட்டியிருக்கிருேம். நான் இப்பொழுதுகூறப் போவதை, நேற்றுக்கூட உங்களிடம் சொல்லியிருக்க முடியாது; சொல்லியிருந்தால், பந்தோபஸ்து ஏற்பாட்டுக்குப் பாதகம்

ஏற்பட்டிருக்கும். நாளை இரவு, நமது டவுனிலும், உக்ரேய்னுவில் உள்ள இதர நகரங்களிலும் எதிர்ப் புரட்சிக் கலகம் நடத்துவதற்கு நமது சத்துருக் கள் திட்டமிட்டிருக்கிறுர்கள். நம் நகரத்தில் ஏரா ளமான வெண்படை அதிகாரிகள் திரண்டிருக்கி ருர்கள். நம் நகரின் சுற்றுப்புறத்தில், ஆயுதந் தாங்கிய எதிர்ப்புரட்சிக் கூட்டங்கள் குவிந் திருக்கின்றன. சதிகாரர்களில் சிலர், கவச மோட் டார் படைக்குள் ஊடுருவி, கவச மோட்டார் டிரைவர்களாக வேலை செய்து கொண்டிருக்கிறுர் கள். ஆனுல் இந்தச் சதியைச் செக்கா காலத் திலே கண்டுபிடித்துவிட்டது. நாம், கட்சி அங்கத் தினர், கம்ஸமோல் உறுப்பினர் அனைவரையும் ஆயுதமேந்திய போருக்குச் சித்தம் செய்துள் ளோம். முதலாவது, இரண்டாவது கம்யூனிஸ்ட் பட்டாலியன்கள், ராணுவ மாணவர்களுடனும் செக்காப் படைகளுடனும் சேர்ந்து செயல்பட வேண்டும். ராணுவப் பள்ளிக் குழுக்கள் முன்பே செயலில் ஈடுபட்டுவிட்டன. தோழர்களே, இப் பொழுது, நீங்கள் தயாராகவேண்டும். உங்க ளது ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, வரிசையில் நிற்பதற்குப் பதினைந்து நிமிஷம் அவகாசம் கொ டுக்கிறேம். தோழர் ஷுஹ்ராய் நடவடிக்கைக்குத் தலைமை தாங்குவார். தலைவர்கள் அவரிடம் ஆணைபெற்று அதன்படி நடக்கவேண்டும். நிலை மையின் நெருக்கடியான தன்மையை நான் உங் களுக்கு விளக்கத் தேவையில்லை. நாளை இரவு

நடக்கவிருக்கும் கலகத்தை இன்று இரவே தவிர்க்க வேண்டும்.''

கால்மணி நேரம் கழிந்து, ஆயுதமேந்திய படை வரிசை, பள்ளிக்கூட முற்றத்தில் நின்றது.

அசையாது நின்ற அணிவகுப்பை ஷுஹ்ராய் நோக்கினான்.

அணிவகுப்புக்கு ஏழெட்டு அடி முன்னால், தோல் பெல்ட்டு அணிந்த இருவர் நின்றனர். ஒருவன், பட்டாலியத் தலைவன் மெனியாய்லோ; யூரால் மலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவன்; ஆஜானுபாகு; வார்ப்படத் தொழிற்சாலையில் வேலை செய்தவன். அவனுக்குப் பக்கத்தில் நின்றவன் கமிஸார் அக்கிம். இடது புறத்தில் முதலாவது கம்பெனியின் படைப் பிரிவுகள் நின்றன. அவற்றுக்கு ஐந்து அடி தூரம் முன்னால், கம்பெனியின் தலைவனும் அரசியல் தலைவனும் நின்றனர். அவர்களுக்குப் பின்னால், முந்நூறு கம்யூனிஸ்டுகள் வரிசை வரிசையாக நின்றனர்.

ஷுஹ்ராய் சைகை செய்தான்.

''உடனே கிளம்புக!''

வெறிச்சென்று கிடந்த வீதிகள் வழியே, முந்நூறு பேர் நடந்தனர்.

நகரம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

தீக்கயா தெருவுக்கு எதிரில் லிவோவ்ஸ்க்காயா தெருவில், பட்டாலியன் கலைந்து நின்றது. அங்குதான் அவர்கள் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

அவர்கள் சத்தம் செய்யாமல், கட்டிடங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு கடையின் படிக்கட்டில், தலைமை நிலையம் அமைக்கப்பட்டது.

ஒரு மோட்டார் கார் விவோவ்ஸ்க்காயா தெருவில், முக விளக்குகள் வெட்டிக் காட்டிய பாதையில் விரைவாக வந்துகொண்டிருந்தது. படைத் தலைமையின் நிலையத்துக்கு முன்னுல் அது நின்றது.

வீத்கே இந்தத் தடவை தன் தந்தையை அழைத்துக் கொண்டு வந்தான். நகரத்தின் ராணுவத் தலைவன் தன் மகனிடம் லாத்விய மொழியில் சில நறுக்கான வாக்கியங்களைப் பேசிக் கொண்டே, காரிலிருந்து பாய்ந்து இறங்கினுன். கார் முன்னேக்கி விரைந்தது; ஒரு விஞடிக்குள், சாலைத் திருப்பத்தில் மறைந்து விட்டது. வீத்கேயின் கரங்கள் சக்கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தன; அந்தச் சக்கரத்தின் பகுதியாகவே அவை தோன்றின. அவனது கண்களோ சாலையையே நோக்கிக் கொண்டிருந்தன. அவன் ஒரு ராட்சத சக்தியுடன் காரை ஓட்டினுன்.

ஆம், .இன்று இரவு வீத்கே அசுரத்தனமாகக் காரை ஓட்டித்தானுக வேண்டும். இன்று மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டியதற்காக, அவனை எவரும் காவற்படை வீட்டில் இரண்டு நாட்கள் அடைத்துப் போடமாட்டார்கள்!

அவன், மின்னல் வேகத்தில் பறந்தான்.

நகரின் ஒரு கோடியிலிருந்து இன்ளெரு கோடிக்குத் தன்னை இமைக்கும் நேரத்தில்

இட்டுச் சென்ற இளைஞனை ஷுஹ்ராய் பாராட்டினான்.

"இன்று இரவு, நீ ஒருவரையும் விபத்துக் குள்ளாக்கவில்லையென்றால், நாளைக்கு ஒரு தங்கக் கடிகாரம் பரிசாகத் தருவேன்" என்று ஷுஹ்ராய் கூறினான்.

லீத்கேக்கு ஆனந்தம் சொல்லி முடியாது.

"அந்த மூலையில் முரட்டுத்தனமாகத் திருப்பியதற்குப் பத்துநாள் சிறை வாசம் கிடைக்குமென்று எண்ணினேன்" என்றான் தமாஷாக....

முதன் முதலில், சதிகாரர்களது தலைமைக் குழு மீதே தாக்குதல் தொடுக்கப்பட்டது. சிறிது நேரத்தில், விசேஷ இலாகாவிடம் தஸ்தாவேஜுகளும் அநேகக் கைதிகளும் ஒப்படைக்கப்பட்டனர்.

தீக்கயா தெருவில், பதினொன்றும் நம்பர் வீட்டில், த்ஸுர்பர்ட் என்பவன் வசித்தான். வெண்படையின் சதியில் அவன் முக்கியமான பாகம் வகித்ததாகச் செக்காவுக்குத் தகவல் கிடைத்திருந்தது. பாதோல் என்ற வட்டாரத்தில் செயல்பட வேண்டிய வெண்படை அதிகாரிகள் குழுக்களின் ஜாப்தாக்களும் அவனிடம் இருப்பதாகச் செக்காவுக்கு உளவு கிடைத்திருந்தது.

த்ஸுர்பர்ட்டைக் கைது செய்வதற்குப் பெரிய லீத்கேயே தீக்கயா தெருவில் நுழைந்தான். த்ஸுர்பர்ட்டின் அறையில், தோட்டத்தை நோக்கி ஜன்னல்கள் அமைந்திருந்தன. அந்தத் தோட்டத்தின் முடிவில் ஒரு உயர்ந்த சுவர்; அதற்கு

அப்பால் இருந்த கட்டிடம்தான் பழைய கன்னிகா மடம். த்ஸைர்பர்ட் அறையில் இல்லை. அவன் அன்று முழுவதும் தென்படவில்லையென்று பக்கத்து அறைகளில் வசித்தவர்கள் கூறினர்கள். த்ஸைர் பர்ட்டின் அறை சோதனையிடப்பட்டது. பெயர்கள், விலாசங்கள் ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட தாள்களும், எறிகுண்டுகளடங்கிய பெட்டியும் சிக்கின. த்ஸைர்பர்ட்டைப் பதுங்கியிருந்து பிடிப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, பெரிய வீத்கே அறையில் தயங்கி நின்று, காகிதங்களை ஆராய்ந்தான்.

கீழே, தோட்டத்தின் மூலையில், ராணுவப் பள்ளியில் பயின்ற இளைஞன் காவல் காத்து நின்ருன். அவன் நின்ற இடத்திலிருந்து வெளிச்சமுள்ள ஜன்னலைப் பார்க்க முடிந்தது. அவன் அந்த இருட்டில் அங்குத் தன்னந்தனியாக நிற்பதை விரும்பவில்லை. கொஞ்சம் திகிலாக இருந்தது. சுவரை உஷாராகக் கண்காணிக்க வேண்டுமென்று அவனுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. ஆறுதல் தரக்கூடிய வெளிச்சம் அவனது இடத்திலிருந்து நெடுந்தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. சந்திரனும் மேகங்களுக்குள்ளேயே பாய்ந்தோடிக் கொண்டிருந்ததால், அவனது திகில் அதிகமாயிற்று. அந்த இருள் அடர்ந்த இரவில், புதர்களெல்லாம் தமக்கே உரிய கொடிய ஜீவனுடன் காட்சியளிப்பவையாக அவனுக்குத் தோன்றின. அந்த இளைஞன் தன்னைச் சுற்றியுள்ள இருளைப் பாய்னெட்டால் குத்தினன். வெறுமை!

''அவர்கள் ஏன் என்னை இங்கு நிறுத்தினார்கள்? அந்தச் சுவர்மீது எவரும் ஏறமுடியாதென்பது திண்ணம். அது மிகவும் உயரமாயிருக்கிறது. நான் ஜன்னலருகில் சென்று, உள்ளே பார்க்கிறேன்'' என்று எண்ணியவனாக, நாசியைத் துளைக்கும் காளான் நாற்றத்தை உடைய ஈரமான மூலையிலிருந்து கிளம்பினான்; சுவரைப் பார்த்துக்கொண்டே நடந்தான். அவன் ஜன்னலை அடைந்த பொழுது, வீத்கே மேஜையிலிருந்து காகிதங்களைக் கையில் எடுத்துக்கொண்டான். அதே விநாடியில், சுவரின் உச்சியில் ஒரு நிழல் தோன்றியது. அங்கிருந்து, ஜன்னலுக்கு அருகில் நின்ற காவற்காரனையும் அறையில் இருந்த மனிதனையும் பார்க்க முடிந்தது. அந்த நிழல் பூனையின் லாகவத்துடன் ஒரு தாவுத்தாவி ஒரு மரத்தை அடைந்தது; அங்கிருந்து கீழே விழுந்தது. அது சப்தம் செய்யாமல் ஜன்னலை நோக்கிச் சென்றது. ஒரே அடி; காவற்காரன் கீழே கைகால்களை நீட்டிக்கொண்டு கிடந்தான்; அவனது கழுத்தில் ஒரு கட்டாரி பிடி முனை வரை நுழைந்திருந்தது.

தோட்டத்தில் துப்பாக்கி வேட்டு ஒலி செய்ததைக் கேட்டு, அந்தக் கட்டிடத் தொகுதியைச் சூழ்ந்திருந்த ஆட்கள் உஷாராயினர். அவர்களில் அறுவர், இந்த வீட்டை நோக்கி, இரவின் அமைதியில் உரக்க ஒலிக்கும் வகையில் அடி வைத்து ஓடிவந்தனர்.

மேஜையின்மீது சாய்ந்த தலையுடன், வீத்கே உட்கார்ந்திருந்தான். அவனது தலைக் காயத்

திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. அவன் இறந்து விட்டான். ஜன்னல் கண்ணாடி தகர்ந்து விட்டது. ஆனால் தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றுவதற்குக் கொலைகாரனுக்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

கன்னிகா மாடத்தின் சுவர் இருந்த திசையிலிருந்து மேலும் பல வேட்டுகளின் ஒலி கேட்டது. கொலைகாரன் சுவரைத் தாண்டி, தெருவை அடைந்துவிட்டான். அவன் சுட்டுக்கொண்டே ஓடினான். வயல் வெளி வழியே தப்பி ஓட அவன் முயன்றான். ஆனால் ஒரு குண்டு அவனது ஓட்டத்துக்கு முடிவு கட்டியது.

இரவெல்லாம் சோதனைகள் நடந்தன. வீடுகளில் வசிப்பவர்களது ஜாப்தாவில் இடம் பெறாதவர்கள், நூற்றுக்கணக்கான ஆட்கள், ஐயத்துக்கு இடம் தந்த தஸ்தாவேஜுகளுடனும் ஆயுதங்களுடனும் பிடிபட்டனர். அவர்கள் செக்கா அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டனர்.

சில இடங்களில், சதிகாரர்கள் எதிர்த்து நின்றார்கள். ஷில்யான்ஸ்காயா தெருவில் ஒரு வீட்டைச் சோதனையிட்டபொழுது, அன்தோன் லேபெதேவ் நேருக்கு நேர் சுடப்பட்டுக் கொலையுண்டான்.

அன்று இரவு, ஸாலோமென்கா வட்டத்தின் படை ஐந்து வீரர்களை இழந்தது. உறுதியான போல்ஷெவிக்கும், குடியரசின் நம்பிக்கையான காவலனுமான யான் லீத்கேயைச் செக்கா பறிகொடுத்தது.

ஆனுல் வெண்படைக் கலகம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது.

அதே இரவில், ஷெப்பெத்தோவ்க்காவில் வஸீலியப் பாதிரியாரும், அவரது பெண்களும், அந்தத் திருக்கூட்டத்தைச் சேர்ந்த இதரரும் கைதானுர்கள்.

கெடுபிடி நிலைமை தளர்ந்தது. ஆனுல் சீக்கிரத்தில், ஒரு புதிய பகை நகரை அச்சுறுத்தியது. அதுவே, ரயில்வேக்களின் ஸ்தம்பிப்பு. அதன் விளைவாக, வரவிருக்கும் குளர்காலத்தில் பசியும் குளிரும் மக்களை வாட்டி வதைத்து விடும். தானியம், விறகு ஆகிய இரண்டையுமே சகலமும் சார்ந்து நின்றன.

அத்தியாயம் இரண்டு

சிந்தனை வாய்ப்பட்ட பியோதர் ஷுஹ்ராய் குறுந்தண்டுச் சுங்கானைத் தன் வாயிலிருந்து எடுத்து மெதுவாகச் சாம்பல் திட்டைத் தட்டி விட்டான். சுங்கான் அணைந்து போயிருந்தது.

ஒரு டஜன் சிகரெட்டுகளிலிருந்து கிளம்பிய சாம்பல் நிறப் புகையின் அடர்த்தியான படலம் மேகங்கள் போன்று மங்கலாகத் தெரிந்த விளக்கு மூடியின் கீழாக மாகாண நிர்வாகக் குழுவின் தலைவனது நாற்காலிக்கு மேலே வட்டமிட்டது. அறையின் மூலைகளிலிருந்து பார்த்தால், மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களின் முகங்கள் புகைப் படலத்தின் ஊடே மங்கலாகவே புலப்பட்டன.

தலைவனுக்குப் பக்கத்தில் தோக்கரெவ் உட்கார்ந்திருந்தான். அவன் முன் பக்கம் சாய்ந்து கொண்டு, தாடி மயிரை ஆத்திரத்தில் இழுத்துக் கொண்டிருந்தான். அவன் அடிக்கடி தன் ஓரக் கண்ணால் ஒரு குட்டையான வழுக்கைத் தலையானைப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த வழுக்கைத் தலையான் பொருளில்லாத வீண் வார்த்தைகளை உச்சஸ்தாயியில் அடுக்கிக்கொண்டே போனான்; முடிவு இல்லாமல் சரடு விட்டுக்கொண்டிருந்தான்.

அக்கீம் கொல்லனது கோபப் பார்வையைக் கவனித்தான். அவனுக்குக் குழந்தை பருவம் நினைவுக்கு வந்தது. அவர்களது வீட்டில் சேவலொன்று இருந்தது. சண்டையின் பொழுது தனது திடீர் தாக்குதலுக்குமுன் அது இக்கொல்லனைப் போலவே தன் எதிரியைப் பார்க்கும்.

கட்சியின் மாகாணக் கமிட்டி, கடந்த ஒரு மணி நேரத்துக்கு மேலாகத் தன் கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தது. வழுக்கைத்தலை மனிதன், ரயில்வே விறகுக் கமிட்டிக்குத் தலைவன்.

அவன் தனக்கு முன் இருந்த ஏடுகளைத் தன் சுறுசுறுப்பான விரல்களால் புரட்டிக்கொண்டே, கடகடவென்று பேசினான்:

''....இந்தச் சூழ்நிலையில், மாகாணக் கமிட்டியும் ரயில்வே நிர்வாகமும் எடுத்த முடிவை நிறைவேற்ற முடியாதென்பது தெட்டத் தெளிவான விஷயம். நான் மீண்டும் சொல்கிறேன்: இன்றிலிருந்து ஒருமாதம் சென்ற பிறகும், 'நானூறு

கனமீட்டர் விறகுக்குமேல் கொடுக்க எங்களால் முடியாது. நூற்று எண்பது ஆயிரம் கனமீட்டர் தேவை என்பதைப் பொறுத்தமட்டில், நான் சொல்வதெல்லாம் அது சுத்த....'' இதே இடத்தில் பேச்சாளன் வாய் குழறியது, தகுதியான சொல் கிடைக்காமல் கடைசியில் ''அது சுத்தக் கற்பனை லோக விவகாரம்'' என்று முடித்தான். அப் பொழுது, புண்பட்ட மனத்தைப் புலப்படுத்தும் வகையில், அவனது வாய் பிதுங்கியது.

அதன்பின், நீண்ட அமைதி நிலவியது.

பியோதர் தனது விரல் நகத்தால், சுங்கானைத் தட்டி, அதிலிருந்த சாம்பலை நீக்கினான். இறுதி யில், தோக்கரெவ்தான் அமைதியைக் கலைத் தான்.

அவன் தன் கனத்த குரலில் கர்ஜனை செய் தான்.

''நாம் நேரத்தைப் போக்குவதில் பயனில்லை. ரயில்வே விறகுக் கமிட்டியிடம் விறகு கிடை யாது; அதனிடம் எப்பொழுதுமே விறகு இருந்தது கிடையாது; எதிர்காலத்திலும் ஒருபொழுதும் அதனிடம் விறகு இருக்கப் போவதில்லை.... சரிதானே?''

வழுக்கைத் தலையான் தன் தோளைச் சுருக்கி னான்.

''பேச்சிடையே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும், தோழரே. நாங்கள் விறகைச் சேமித் தோம். ஆனால் குதிரைகள் போக்குவரத்து வள்ளி சாக இல்லை....'' மிச்சத்தை அவன் விழுங்கி விட்

டான். அவன் ஒரு கட்டம் போட்ட கைக்குட்டை யால், தனது மெருகிடப்பட்ட மண்டையைத் துடைத்துக் கொண்டான். அந்தக் கைக்குட்டை யைப் பன்முறை தன் சட்டைப் பையில் சொருக முயற்சி செய்தான். இறுதியில் அதைத் தன் கைப் பைக்கு அடியில் கூச்சத்துடன் திணித்தான்.

''விறகுகளை ஏற்றிக் கொண்டு வருவதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? சதியில் சம்பந்தப் பட்ட முக்கிய நிபுணர்கள் கைது ஆகிப் பல நாட்களாகின்றனவே?'' என்று தெனேக்கோ ஒரு மூலையிலிருந்து வினவினான்.

வழுக்கைத் தலையான் அவனை நோக்கிப் பேசினான்:

''நான் ரயில்வே நிர்வாகத்துக்கு மும்முறை எழுதினேன். முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாவிட்டால், முடியாது என்று....''

தோக்கரெவ் அவனை இடைமறித்தான்.

''அதெல்லாம் நீர் முன்பே பேசிய விஷயம் தான்'' என்று கூறினான். அவன் வழுக்கைத் தலையானைப் பகையோடு நோக்கிக் கொண்டே, ''எங்களை மடையர் என்று எண்ணுகிறீரா?'' என்று வினவினான்.

இதைக் கேட்டவுடன், வழுக்குத் தலையான் பயத்தால் சில்லிட்டுப் போனான்.

''எதிர்ப்புரட்சிக்காரர்களின் நடவடிக்கை களுக்கு நான் ஜவாப்தாரி அல்ல'' என்று அவன் மெல்லிய குரலில் விடை தந்தான்.

''இருப்புப் பாதையிலிருந்து நெடுந்தூரத்துக்கு அப்பால் மரம் வெட்டப்படுகிறதென்பதை நீர் அறிந்திருக்க வில்லையா?''

''அதைப்பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் என் பொறுப்பில் இல்லாத துறைகளில் நிகழும் ஒழுங்கீனங்களையும் முறைகேடுகளையும் பற்றி நான் என் மேலதிகாரிகளுக்கு எழுத முடியாது.''

''எத்தனை பேர் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்?'' என்று தொழிற் சங்கக் கவுன்ஸிலின் தலைவன் உசாவினான்.

''ஏறத்தாழ இருநூறு பேர்'' என்று வழுக்கைத் தலை மனிதன் பதிலளித்தான்.

''கணக்குப் போட்டால் ஒவ்வொரு தண்டச் சோறு தின்னிக்கும் ஆண்டுக்கு ஒரு கனமீட்டர் விறகு வருகிறது'' என்று தோக்கரெவ் சீறினான்.

''ரயில்வே விறகுக் கமிட்டிக்குப் பிரத்தியேக ரேஷன்கள் கொடுத்திருக்கிறோம்; தொழிலாளருக்குக் கிடைக்க வேண்டிய உணவைக் கொடுத்திருக்கிறோம். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? தொழிலாளருக்காக, இரண்டு வண்டி மாவு வாங்கிக் கொண்டீர்களே, அது என்னவாயிற்று?'' என்று தொழிற்சங்கக் கவுன்ஸில் தலைவன் மேலும் கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.

இதைப் போலவே, எல்லோரும் வழுக்கைத் தலையானிடம் காரசாரமான கேள்விகளைக் கேட்டார்கள். கடன்காரன், தனக்குக் கடன் கொடுத்

தவரின் தொல்லேயிலிருந்து விடுபடுவதற்காகக் கொடுமைக்குள்ளானவன் மாதிரிப் பேசுவான் அல்லவா? அதேபோல, வழுக்கைத் தலேயானும் பேசினன். நேரடியான விடைகளேத் தவிர்ப்பதற்காக, அவன் ஒரு விலாங்கு மீனேப்போல வளேந்தான்; நெளிந்தான்; நழுவ முயன்ருன். ஆனல் குற்றம் கண்டுவிடப்படலாம் என்ற அச்சத்தால் அவனது விழிகள் தாவிக்கொண்டேயிருந்தன. வரவிருந்த அபாயத்தை அவன் உணர்ந்துவிட்டான். அவனது கோழை ஆத்மா ஒரே ஒரு விஷயத்தையே நாடியது; எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் இந்த இடத்தைவிட்டு ஓடவேண்டும்; அவனது வசதியான கூட்டில் போய் அடைந்துவிட வேண்டும். அங்கு, அவனுக்கு விருந்து காத்திருந்தது; இன்னமும் இளமையாகவே உள்ள மனேவி காத்திருந்தாள். இந்த நேரத்தில் அவள் ஏதாவது அருமையான நாவலேப் படித்துக் கொண்டு, வசதியாகப் பொழுதைக் கழித்துக்கொண்டிருப்பாள்.

வழுக்கைத் தலேயானுடைய பதில்களே பியோதர் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் தன் நோட் புத்தகத்தில் கீழ்க்கண்ட குறிப்பை எழுதினன்: ''இந்த ஆளே முறையாகச் சோதனே செய்யவேண்டுமென்பது என் கருத்து. இதுவெறும் திறமையின்மை மட்டுமல்ல. இவனேப் பற்றி ஓரிரண்டு விஷயங்களே நான் அறிவேன்.... விவாதத்தை நிறுத்துங்கள். அவன் போகட்டும். நாம் வேலேயைக் கவனிக்கலாம்.''

தலைவன் அந்தக் குறிப்பைப் படித்துவிட்டுப் பியோதரை நோக்கித் தன் ஆமோதிப்பைத் தலை அசைவால் தெரிவித்தான்.

பியோதர் எழுந்திருந்து, டெலிபோனில் சேதி சொல்வதற்காக நடைக்கூடத்துக்குச் சென்ருன். அவன் திரும்பி வந்தபொழுது, தலைவன் தீர்மானத்தைப் படித்துக்கொண்டிருந்தான்:

''....நாசவேலை செய்ததால், ரயில்வே விறகுக் கமிட்டியின் நிர்வாகிகளை நீக்குவது; மர வெட்டு சம்பந்தமான விஷயங்களை விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைப்பது.''

வழுக்கைத் தலையான் இதைவிட மோசமான நிலைமையை எதிர்பார்த்திருந்தான். அவன் நாச வேலைக்காகப் பொறுப்பிலிருந்து அகற்றப்படுவதால் பொதுவாக அவனது நாணயத்தைப் பற்றியே சந்தேகம் எழும்பும். ஆனுல் அது ஒரு சில்லரைப் பிரச்சினை. போயர்க்கா விவகாரத்தைப் பொறுத்தமட்டில், அவனுக்குக் கவலையே இல்லை. அது அவனது பொறுப்புக்கு அப்பாற்பட்ட விவகாரம். ''நல்ல க்ஷவரம்தான். ஆனுல் அவர்கள் ஏதாவது கண்டுபிடித்திருப்பார்களோ என்று அஞ்சினேன்'' என்று அவன் தனக்குள் கூறிக் கொண்டான்.

இப்பொழுது, அவனுக்கு அநேகமாக நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. எனவே, தன் காகிதங்களைத் தன் கைப்பையில் வைத்துக்கொண்டே அவன் கூறினுன்:

''நான் கட்சிச்சார்பற்ற நிபுணன் என்பது மெய். எனவே, என் மீது அவநம்பிக்கை கொள் வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் என் மனச்சாட்சி அப்பழுக்கற்றதாயிருக்கிறது. என் னிடம் எதிர்பார்க்கப்பட்டதை நான் செய்யத் தவறியிருக்கிறேன்; காரணம், அது முடியாத காரியமாக இருந்ததுதான்.''

எவரும் எந்த அபிப்பிராயத்தையும் கூற வில்லை. வழுக்கைத் தலையான் வெளியேறினான்; படி இறங்கினான்; பிழைத்தோமென்ற உணர்ச்சி யுடன் வீதிக்கதவைத் திறந்தான்.

''உங்கள் பெயர்?'' என்று ராணுவக் கோட் அணிந்த ஒருவன் அவனைக் கேட்டான்.

வழுக்கைத் தலையானது இதயம் அமுங்கியது. அவன் தத்தித் தத்திக் கூறினான்:

''செர்... வீன்ஸ்கிய்....''

வழுக்கைத் தலையான் வெளியேறியவுடன், பதின்மூன்று தலைகள் அந்தப் பெரிய மேஜைமீது குனிந்தன. பிரதேசப்படம் மேஜையின்மீது விரித் திருந்தது. அதில் விரலால் இடங்களைக் காட்டிக் கொண்டே ஷுஹ்ராய் பேசினான்:

''இங்குப் பாருங்கள். இதுதான் போயர்க்கா ஸ்டேஷன். இங்கிருந்து ஏழு கிலோமீட்டர் தூரத் தில் அமைந்திருக்கிறது அந்த மரம்வெட்டுமிடம். அங்கு வெட்டிய மரங்கள் யாவும் அடுக்கி வைக் கப்பட்டு இருக்கின்றன. இரண்டு லட்சத்துப் பத் தாயிரம் கனமீட்டர் மரம் அந்த இடத்தில் அடுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு பெரிய பட்டாளம்

எட்டு மாத காலம் வேலை செய்து அவ்வளவு மரத்தையும் வெட்டிக் குவித்தது. விளைவு என்ன? துரோகம். ரயில்வேக்கும் டவுனுக்கும் விறகு இல்லை. அந்த மரக்குவியலை ஆறு கிலோமீட்டர் தூரம் கடத்தி ஸ்டேஷனுக்குக் கொண்டுவர வேண்டுமானால், ஒரு மாதத்துக்கு ஐந்தாயிரம் வண்டிகள் தினந்தோறும் வேலை செய்ய வேண்டும். அப்பொழுதும், தினம் இரு முறை வண்டி சென்று வந்து ஏற்றி இறக்கினால்தான் சாத்தியம். கிட்டத்திலுள்ள கிராமமே பத்தைந்து கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. தவிர, ஓர் லிக்கின் கூட்டமும் இந்தப் பிரதேசத்தில்தான் நடமாடிக் கொண்டிருக்கிறது.... இதன் பொருள் என்னவென்று புரிகிறதா?... இங்குப் பாருங்கள். இந்த இடத்தில் மரவெட்டைத் தொடங்கி, ஸ்டேஷன் வரை உள்ள மரங்களை வெட்டுவதுதான் திட்டம். ஆனால் அந்தக் கயவர்கள் காட்டுக்குள்ளே வெட்டிக்கொண்டே போயிருக்கிறார்கள். மரத்தை ரயில் பாதைக்குக் கொண்டுவர முடியாமல் செய்வதே அதன் நோக்கம். அவர்களது கணக்கில் பிழையில்லை. எப்படியென்றால், மரத்தை ஏற்றிக் கொண்டுவர நூறு வண்டிகள்கூட அங்குக் கிடைக்காது. ஆகக்கூடி, கேவலமான முறையில் நம்மைத் தாக்கிவிட்டார்கள். கலகத்திட்டம் இந்த நாச வேலையைவிட ஆபத்தானது அல்ல.''

பியோதரின் மடக்கிய மணிக்கட்டு, படத்தின்மேல் பதிந்தது. நிலைமையின் பாதக அம்சங்களை, பியோதர் சொல்லாமல் விட்ட முடிவு

களைப் பதின்மூன்று தோழர்களும் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தனர். குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆஸ்பத்திரிகளும் பள்ளிக்கூடங்களும் அலுவலகங்களும் லட்சக்கணக்கான மக்களும் கொடிய குளிரின் பிடியில் சிக்கித் தவிப்பதை அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள். ஜனக்கூட்டம் நிறைந்த ரயில்வே ஸ்டேஷனும், வாரத்துக்கு ஒரு டிரெயினே ஓடும் நிலைமையும் அவர்களது மனக்கண் முன் தோன்றின.

ஒவ்வொருவரும் நிலைமையைப் பற்றிச் சிந்தித்த பொழுது ஆழ்ந்த அமைதி நிலவியது.

இறுதியில், பியோதர் தன் மணிக்கட்டைத் தளர்த்தினான். அவன் கூறினான்:

''தோழர்களே, ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நாம் ஒரு ஏழு கிலோமீட்டர் நீளமுள்ள குறும்பாதையை, ஸ்டேஷனிலிருந்து மரவெட்டும் அவ்விடம் வரைச் செல்லும் இருப்புப் பாதையை, மூன்று மாதத்துக்குள் அமைக்க வேண்டும். விறகுவெட்டப்படும் இடத்தின் தொடக்கம் வரை முதல் பகுதி என்றால், இந்தப் பகுதியை ஆறு வாரத்தில் முடித்துவிடவேண்டும். நான் இதைப் பற்றி ஒரு வாரமாகச் சிந்தித்து விரிவாகத் திட்டமிட்டிருக்கிறேன்.'' அவனது உலர்ந்த தொண்டை விக்கியது. அவன் மேலும் பேசினான்: ''முந்நூற்று ஐம்பது தொழிலாளரும் இரண்டு எஞ்சினீயரும் நமக்குத் தேவை. புஷ்சா-வாதீத்ஸாவில் தேவைப்படும் அளவுக்குத் தண்டவாளம் இருக்கிறது; ஏழு எஞ்சின்களும் உள்ளன. அவற்றைக்

கம்ஸமோல் உறுப்பினர்கள் பண்டசாலைகளில் கண்டெடுத்துச் சேகரித்தார்கள். புஷ்சா-வாதீத் ஸாவிலிருந்து டவுனுக்கு இருப்புப்பாதை போடுவதென்று யுத்தத்துக்கு முந்தித் திட்டம் இருந்தது. அதற்காக வந்த சாமான்கள் அவை. போயர்க்காவில் தொழிலாளர்கள் வசிப்பதற்கு வசதி இல்லை; இதுதான் பெரிய தொல்லை. போயர்க்கா அழிந்து கிடக்கும். நாம் நமது ஆட்களை இரண்டு வாரத்துக்கு ஒரு கோஷ்டியாக அனுப்ப வேண்டும். அதற்குமேல் அவர்கள் அங்குத் தாக்குப் பிடிக்க முடியாது. அக்கீம், கம்ஸமோல் உறுப்பினரை அனுப்புவோமா?'' அக்கீமின் விடைக்குக் காத்திருக்காமல், பியோதர் மேலும் பேசினுன்: ''கம்ஸமோல், முடிந்த அளவுக்கு அதிகமான உறுப்பினர்களை போயர்க்காவுக்கு அனுப்பும். ஸாலோமென்கா ஸ்தாபனம் முன்மாதிரியாக வழிகாட்டும். டவுனிலிருந்தும் சில இளங் கம்யூனிஸ்ட்கள் செல்வார்கள். இந்த வேலை கடினமானது; மிகவும் கடினமானது. ஆனல் ஆபத்தின் தன்மையை இளைஞருக்கு எடுத்துக் கூறினுல், அவர்கள் இந்த வேலையை செய்வார்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.''

ரயில்வேயின் தலைவன் சந்தேகமாகத் தலையை அசைத்தான்.

''இது வீண் வேலையென்று அஞ்சுகிறேன். இத்தகைய நிலைமைகளில், இளையுதிர் கால மழை பெய்யவிருக்கும் சமயத்தில், குளிர்காலம் தொடங்கவிருக்கும் நேரத்தில், ஏழு கிலோமீட்டர் ரயில்

பாதை அமைப்பதென்பது...'' என்று அவன் சோர்வாகப் பேசத் தொடங்கினான்.

ஆனால் பியோதர் அவனை வெட்டிப் பேசினான்.

''அந்த்ரேய் வஸீல்யெவிச், விறகுப் பிரச்சினையில் நீ அதிகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அந்த ரயில் பாதையைக் கட்டித்தானாகவேண்டும்; நாம் கட்டப்போகிறோமென்பது உறுதி. கையைக் கட்டிக்கொண்டு, பனியில் உறைந்து சாகப்போகிறோமா? ஒருநாளும் இல்லை.''

கருவிகளைக் கொண்ட பின்னல் பெட்டிகள் அனைத்தையும் டிரெயினில் ஏற்றிவிட்டனர். டிரைவர், பயர்மென் முதலியோர் தத்தம் வேலைஸ்தலத்துக்கு விரைந்தனர். மழை மனோகரமாகத் தூறிக் கொண்டிருந்தது. படிகம் போன்ற மழைத் துளிகள் ரீத்தாவின் பிரகாசமான தோல் சொக்காய் மீது உருண்டோடின.

ரீத்தா தோக்கரெவுடன் அன்பாகக் கை குலுக்கினாள். ''உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகவேண்டும்'' என்று அவள் மிருதுவாக மொழிந்தாள்.

அடர்த்தியாக வளர்ந்து நரைத்திருந்த புருவங்களை உடைய கிழவன், அவளைப் பாசத்துடன் நோக்கினான்.

''ஆம். இந்தப் பீடைகளால் உண்டான தொல்லைகள் ஏராளம். அவர்கள் கெட்டுக்குட்டிச் சுவராக வேண்டும்!'' என்று கிழவன் தன் சுய

சிந்தனைக்குப் பதிலாகக் கூறினான். ''இங்கு எல்லா விஷயங்களையும் உஷாராகக் கவனியுங்கள். அப்பொழுதுதான், எங்களுக்கு ஏதாவது சிக்கல் ஏற்பட்டால், நீங்கள் உடனடியாகத் தலையிட்டு உருப்படியாக உதவ முடியும். இந்த உதவாக்கரைகள், சிவப்பு நாடா முறைப் படி காலம் கடத்தாமல் எதையும் செய்ய மாட்டார்கள்'' என்று அவர் ரீத்தாவிடம் கூறினான். ''சரி, நேரமாகிவிட்டது, மகளே! நான் வண்டியில் ஏறுகிறேன்'' என்று சொல்லிமுடித்தான்.

கிழவன் தன் சொக்காய்ப் பித்தான்களைப் போட்டுக் கொண்டிருந்தான். கடைசி வினாடியில், ''பாவெல் வரவில்லையா? இங்குக் காணோமே?'' என்று ரீத்தா தற்செயலாக கேட்பது போல் வினவினாள்.

''அவனும் மேற்பார்வை எஞ்சினீயரும் நேற்றே போய் விட்டார்கள், முன்னேற்பாடு செய்வதற்காக.''

அந்தச் சமயத்தில், ஷார்க்கீயும் துபாவாவும் ஆன்னா போர்கர்த்தும் பிளாட்பாரத்தில் விரைவாக வந்து கொண்டிருந்தனர். ஆன்னா தன் சொக்காயைத் தோள்மீது அசட்டையாகப் போட்டுக் கொண்டிருந்தாள். அவளது மெல்லிய விரல்கள் அணைந்துபோன சிகரெட் ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தன.

வருபவர்களை நோக்கிக் கொண்டே ரீத்தா தனது கடைசிக் கேள்வியைக் கேட்டாள்.

''பாவெலுக்குப் பாடம் நடத்தும் வேலை எப்படி நடக்கிறது?'' என்று அவள் வினவினாள்.

''என்ன பாடம்? அவன் உன்னிடம்தான் படிக்கிறான் இல்லையா? அவன் உன்னைப்பற்றி சக்கர வட்டமாகப் பேசுகிறான். நீயே உலகம், உனக்குத் தெரியாத விஷயம் இல்லை என்றெல்லாம் அவன் எண்ணுகிறான்'' என்று கிழவன் விடை தந்தான்.

ரீத்தாவுக்கு இந்தப் பதிலை நம்ப முடிய வில்லை.

''தோழர் தோக்கரெவ், நீங்கள் சொல்வது உறுதியா? அவன் என்னிடம் பாடம் கேட்ட பிறகு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களிடம் வந்து சரியான விளக்கம் பெறவில்லையா?'' என்று அவள் உசாவினாள்.

கிழவன் வயிறு குலுங்கச் சிரித்தான்.

''என்னிடமா? ஒருநாளும் இல்லை.''

எஞ்சின் விசில் ஊதியது. கிளாவிச்சேக் ஒரு பெட்டியிலிருந்து இரைந்து கூவினான்:

''தோழர் உஸ்திஞேவிச்! அப்பாவை எங்களிடம் வரவிடு. இருந்தாலும் இதுமாதிரி செய்யக் கூடாது. அவரில்லாமல் நாங்கள் என்ன செய்ய முடியும்?''

அந்தச் செக் இளைஞன் மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் நெருங்கி வந்த மூவரைப் பார்த்து அவன் வாயை மூடிக்கொண்டான். அந்தக் கணமே அவன் ஆன்னவை நோக்கினான்; அவளது கண்களில் நிலவிய கவலையை உணர்ந்தான். அவள் துபாவாவுக்கு விடை கொடுக்கும்

வகையில் புன்னகை பூத்ததைக் கண்டு மனவே தனை அடைந்து, ஜன்னலிலிருந்து துரிதமாகத் திரும்பினான்.

இலையுதிர் காலத்தின் மழை சவுக்கால் அடிப் பதைப் போல சராசரங்களைத் தாக்கியது. ஈரத் தால் கனத்த ஈய நிற மேகங்கள் தாழ்வாகச் சஞ்சரித்தன; அவை பூமி மீதே தவழ்வனவாகத் தோன்றின. இலையுதிர் காலத்தின் பிற்பகுதி; மரங்களின் மெல்லிய கிளைகள், இலைச் செல்வத் தை இழந்து, சோர்வாகத் தலை குனிந்து நின்றன. பாளம் பாளமாய் விரிந்த மேல் பட்டையை உடைய அடி மரங்களைப் பழுப்பான பாசி மூடியிருந் தது. இலையுதிர் காலம் ஈவிரக்கமில்லாதது; அது இந்த மரங்களின் செழிப்பான ஆடைகள் அனைத்தை யும் கவர்ந்து விட்டது. எனவே இவை அம்மண மாக நின்றன; பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

ஒரு கானகத்தின் இடையில் சின்னஞ்சிறு ரயில்வே நிலையம் தன்னந்தனியாகக் காட்சியளித் தது. கல்லால் அமைந்த பிளாட்பாரத்திலிருந்து புதிதாக வெட்டி எடுத்த மண்ணின் பட்டை யொன்று காட்டை நோக்கிச் சென்றது. இந்தப் பட்டையைச் சுற்றி, மனிதர்கள் கூட்டம் கூட்டமாக எறும்பு போல் திரண்டு செயல்பட் டார்கள்.

அந்தக் களிமண்ணை மிதிக்கும்பொழுது, ஒரு அருவருப்பான உணர்ச்சி உண்டாயிற்று. அந்த மனிதர்கள் அசுர வேகத்துடன் வேலை செய்தனர்;

கடப்பாறைகளும் மண்வெட்டிகளும் கல்மீது பட்டு ஒலி எழுப்பின.

ஊசி மழை பெய்தது; குளிர்ச்சியான நீர்த் துளிகள் அந்த இளைஞர்களின் ஆடைகளை ஊடுருவின. வெட்டிக் குவித்த களிமண் மழை நீரில் கலந்து சேறாகச் சரிந்து விழுந்துகொண்டேயிருந்தது; பட்ட பாடெல்லாம் பலனற்றுப் போய்விடும் போல் தோன்றியது.

துணி நனைந்து மெய் சில்லிட்டுப் போன நிலையிலும் அவர்கள் இருட்டி நெடுநேரமாகும் வரையில் உழைத்தனர்.

இப்படியாக, ஒவ்வொரு நாளும் வெட்டி எடுக்கப்பட்ட மண் பட்டை காட்டிற்குள் மேலும் மேலும் முன்னேறிச் சென்றது.

ஸ்டேஷனுக்குக் கிட்டத்தில் ஒரு செங்கல் கட்டிடத்தின் மீதமிச்சம் காட்சி யளித்தது. ரொம்ப நாட்களுக்கு முன்பே, கொள்ளைக்காரர்கள் அதைச் சூறையாடிவிட்டார்கள்; அகற்றக்கூடியவற்றை அகற்றிவிட்டனர்; உடைத்தெறியக்கூடியவற்றை உடைத்தெறிந்துவிட்டனர். ஜன்னலும் கதவும் இருந்த இடங்களெல்லாம் அகலத் திறந்த பொந்துகளாகக் காட்சியளித்தன; அடுப்புகளுக்குக் கதவுகளிருக்க வேண்டிய இடங்களில் பெரும் பெரும் வெடிப்புகள் காணப்பட்டன. இடிந்து போன கூரை வழியே, அதன் குறுக்குச் சட்டங்கள் எலும்புக் கூட்டின் விலா எலும்புகளைப் போலக் காட்சியளித்தன.

நான்கு பெரிய அறைகளின் கான்கிரீட் தளம் மட்டுமே சேதமடையாமலிருந்தது. இரவு நேரத்தில், சேறுகியிருந்த ஈரத் துணிகளை உடுத்திய நானூறு பேர் இந்தத் தளத்தில் உறங்கினுர்கள். அவர்கள் கதவருகே தம் ஆடைகளைப் பிழிந்த பொழுது, சேறும் நீரும் வழிந்தோடும்; சதுப்பு நிலத்தையும் மழையையும் மனங்கசந்து சபித்துக் கொண்டே அறையில் நுழைந்தனர். கொஞ்சம் வைக்கோலைப் பரப்பிவிட்டு, அதன் மீது அவர்கள் வரிசை வரிசையாகப் படுத்தனர். வெப்பத்துக்காக, ஒருவருக்கொருவர் நெருங்கிப் படுத்தனர். அவர்களது துணிகளிலிருந்து நீராவி கிளம்பி மேல்நோக்கிச் சென்றது, ஆனுல் அந்தத் துணிகள் உலரவில்லை. வெறுமையான ஜன்னல் கட்டைகளில் ஆணி அடித்துத் தொங்கவிட்டிருந்த சாக்குப் படுதாக்கள் வழியே மழைநீர் உள்ளே கசிந்து, தளத்தில் வடிந்தது. எஞ்சிமிஞ்சியிருந்த கூரைத் தகட்டின்மீது மழை பெய்த ஓசை முரசொலியை நினைவூட்டியது. கதவு இருந்த வாசல் வழியே அடித்த காற்றின் சத்தம் காதில் ரீங்காரம் செய்தது.

இடிந்துகிடந்த பாரக்கையொன்று சமையலறையாகப் பயன்பட்டது. அதில்தான் அவர்கள் காலையில் டீ குடித்தனர். டீ குடித்து விட்டு வேலைக்குச் சென்றனர். அவர்களுக்குத் தினந்தோறும் ஒரேமாதிரியான உணவுதான்: ஒன்றரை பவுண்ட் கன்னங்கரேலென்று இருந்த ரொட்டி, அத்துடன் சும்மா வேகவைத்த சிறுதுவரையும்

கிடைத்தது. தினம் இதே உணவைப் புசிப்பதென்றால் எவருக்குத்தான் வெறுப்பு உண்டாகாது?

ஆனால் நகரத்தால் இந்த உணவைத்தான் கொடுக்க முடிந்தது.

வேலையை மேற்பார்வையிட்ட எஞ்சினீயர் வலெரியான் நிக்கதீமவிச் பத்தோஷ்கின் நெட்டையான கிழவன்; ஒல்லியான தேகத்தை உடையவன்; அவனது வாயின் புறத்தில் இரண்டு வரிகள் பள்ளமாக விழுந்திருந்தன. டெக்னீஷியனை வக்குலேன்கோ கட்டை குட்டையானவன்; அவனது முகம் விகாரமாயிருந்தது; மூக்கு பருத்திருந்தது. பத்தோஷ்கினும் வக்குலேன்கோவும் ஸ்டேஷன் மாஸ்டரின் வீட்டில் வசித்தனர்.

சபலச் சித்தமுடைய குட்டை மனிதனை கோல்யாவா ஸ்டேஷனில் செக்காவின் ஊழியனாக இருந்தான். அவனுடைய சிறு அறையில்தான் தோக்கரெவ் வசித்தான்.

ஆகக்கூடி, அந்த நிர்மாணக் குழுவினர் வியக்கத்தக்க வைராக்கியத்துடன் தமக்கு நேரிட்ட இடுக்கண்களையும் இடையூறுகளையும் சகித்துக் கொண்டனர். இருப்புப் பாதையின் செய்கரை தினந்தோறும் காட்டுக்குள் நீண்டு கொண்டேயிருந்தது.

சிலர் ஓடிப் போனார்கள் என்பது மெய். முதலில் ஒன்பது பேர் ஓடிப் போனார்கள், சில நாட்களுக்குப் பிறகு, மேலும் ஐவர் நடையைக் கட்டினார்கள்.

வேலை தொடங்கி ஒரு வாரம் ஆனபின், முதன் முதலாக ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. இரவு டிரெயினில் வாடிக்கையாக வந்து கொண்டிருந்த ரொட்டி வரவில்லை.

தூங்கிக் கொண்டிருந்த தோக்கரெவைத் துபாவா தட்டி எழுப்பினுன்; கிழவனிடம் ரொட்டி வராத சேதியைக் கூறினுன். கட்சியின் குழுத் தலைவனுகிய தோக்கரெவ் தனது ரோமம் அடர்ந்த கால்களை தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்தான்; அக்குளை வேகமாகச் சொறிந்தான்.

''தமாஷ் ஆரம்பமாகி விட்டது!'' என்று உறுமிக் கொண்டே அவசரமாக ஆடையை உடுத்திக் கொண்டான்.

குட்டைக் கால்களை உடைய கோல்யாவா ஆடி அசைந்து கொண்டு நடந்தான்.

''உடனே டெலிபோனுக்கு ஓடு. விசேஷ இலாகாவுக்கு போன் செய்'' என்று தோக்கரெவ் கோல்யாவாவுக்குக் கட்டளை பிறப்பித்தான். ''ரொட்டியைப் பற்றி ஒருவனிடமும் ஒரு வார்த்தை பேசக்கூடாது, உஷார்'' என்று துபாவாவை அவன் எச்சரித்தான்.

விசேஷ இலாகாவுடன் தொடர்பு கிடைப்பது எளிதாயில்லை. அரை மணிநேரம் ரயில்வே டெலிபோன் ஆப்ரேட்டர்களைக் கண்டித்துப் பேசிய பின், விசேஷ இலாகாவின் துணைத்தலைவனை ஷுஹ்ராயுடன் தொடர்பு கொள்வதில் விடாக் கண்டனை கோல்யாவா வெற்றியடைந்தான். இந்த நேரமெல்லாம், தோக்கரெவ் அமைதி

இல்லாமல், பரபரப்பு நிறைந்தவனுய்ப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

''என்ன? ரொட்டி வரவில்லையா? இந்தத் தவறுக்கு யார் பொறுப்பு என்பதை நான் உடனடியாகக் கண்டுபிடிக்கிறேன்'' என்று பியோதர் கூறினுன். அவனது குரலில் ஒரு துர்க்குறியான தொனி இருந்தது.

''நாளைக்குச் சாப்பிடுவதற்கு எதைக் கொடுப்பது?'' என்று தோக்கரெவ் ஆத்திரத்துடன் இரைந்து வினவினுன்.

நீண்ட நேரம் அமைதி நிலவியது. பியோதர் செயல் திட்டத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

''இன்று இரவு உங்களுக்கு ரொட்டி அனுப்புகிறேன். இளைஞன் லீத்கேயைக் காரில் அனுப்புகிறேன். அவனுக்குப் பாதை தெரியும். காலையில் உங்களுக்கு ரொட்டி கிடைக்கும்'' என்று பியோதர் இறுதியில் கூறினுன்.

பொழுது புலர்ந்ததும் சேறு பூசிய கார் ஸ்டேஷனை அடைந்தது. அதில் பல சாக்குகளில் ரொட்டி இருந்தது. இரவெல்லாம் கண்ணை மூடாமல் காரை ஓட்டி வந்த சிரமத்துடன், லீத்கே காரிலிருந்து இறங்கினுன். அவனது முகம் வெளுத்திருந்தது.

இருப்புப்பாதை அமைப்பு வேலைக்கு இடர்கள் அதிகமாகிக் கொண்டேயிருந்தன. தண்ட

வாளந்தாங்கிகள் கிடைக்காதென்று ரயில்வே நிர்வாகம் அறிவித்துவிட்டது. நிர்மாண வேலை நடந்த இடத்துக்குத் தண்டவாளங்களையும் எஞ்சின்களையும் அனுப்புவதற்குச் சாதனம் கிடைக்க வில்லை என்று நகர அதிகாரிகள் கூறினர்கள். எஞ்சின்களும் சேதமுற்று இருந்தன; அவற்றைப் பழுது பார்க்க வேண்டியிருந்தது. முதற் குழுவி னர் தங்களது வேலையை முடித்து விட்டனர்; மாற்றுக் குழுவினர் இன்னும் வரவில்லை. தங்களது சக்தி அனைத்தையும் இழந்துவிட்ட அவர்களை மீண்டும் வேலையில் தொடர்ந்து வைத்துக் கொள் வது முறையல்ல.

பின் இரவு வரை தீவிர ஊழியர்கள் பாரக் கில் பழம் எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் கலந்து ஆலோசனை செய்தார்கள்.

மறுநாள் காலை, தோக்கரெவ், துபாவா, கிளாவிச்சேக் ஆகியோர், மேலும் ஆறு பேரை அழைத்துக்கொண்டு டவுனுக்குச் சென்றனர். எஞ்சின்களை ரிப்பேர் செய்து விட்டுத் தண்ட வாளங்களைத் துரிதமாக ஏற்றிக்கொண்டு வரு வதற்கு வசதி காண்பதே அவர்களது நோக்கம். ரொட்டிக்காரன் தொழில் செய்தவனை கிளாவிச் சேக் சப்ளை இலாகாவின் வேலையைப் பரிசீலனை செய்வதற்குச் சென்றான். மற்றவர்கள், தண்ட வாளமும் எஞ்சின்களும் இருந்த பூஷ்சா-வாதீத் ஸாவுக்குச் சென்றனர்.

மழை இடைவிடாமல் கொட்டிக் கொண் டிருந்தது.

பாவெல் தன்னுடைய பாதத்தை உலையிலிருந்து தூக்கினான். அவனது உள்ளங்கால் திடீரென்று சில்லிட்டுப் போயிற்று; பூட்ஸின் நைந்து போன அடித்தோல் அறுந்துவிழுந்து விட்டதென்பதை அவன் உணர்ந்தான். பாவெல் இந்த வேலைக்கு வந்ததிலிருந்தே அவனது பிய்ந்த பூட்ஸ் அவனை மிகவும் வருத்தியது. அந்த பூட்ஸுகள் ஒருபொழுதும் உலர்வதில்லை; பூட்ஸுக்குள் இறங்கிய சேறு, அவன் நடந்த பொழுது ''சப்சப்'' பென்று சப்தம் செய்தது. இப்பொழுது ஒரு அடித்தோல் பூர்ணமாக அறுந்துவிட்டது. சில்லென்று இருந்த சேறு அவனது உள்ளங்காலைத் துன்புறுத்தியது. பாவெல் அறுந்துவிழுந்த அடித்தோலை உலையிலிருந்து எடுத்தான்; அதை நோக்கியபொழுது, நிராசையும் ஏக்கமும் அடைந்தான். ஆபாசமாகப் பேசுவதில்லை என்ற சபதத்தையும் மீறி, நிந்தனையாகப் பேசிக்கொண்டான். ஒரு பாதத்துக்குப் பாதுகாப்பில்லாமல், அவனால் வேலைசெய்ய முடியவில்லை. எனவே, அவன் சமையல் பாரக்குக்குச் சென்றான். அங்கு அடுப்புக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டு, சேறாகியிருந்த பாதக்கட்டுத் துணியை நீக்கிவிட்டு, மரத்துப் போயிருந்த பாதத்தை நெருப்புக்கு அருகில் நீட்டினான்.

இருப்புப் பாதைக் காவலாளியின் மனைவி ஓதார்க்கா, சமையல் மேஜையில் பீட் கிழங்குகளை நறுக்கிக்கொண்டிருந்தாள். சமையற்காரனுக்கு உதவியாகத் தொண்டுபுரிந்த அவள் வஞ்சனையில்லாமல் வளர்ந்தவள். இன்னமும் யௌவனத்தின்

சோபை நீங்க வில்லை. அவளது தோள்கள் ஆடவனுடையதைப்போல விசாலமாக இருந்தன. உருண்டு திரண்ட மார்பையும் ஸ்தூலமான தொடைகளையும் உடைய அந்த மாது, பாங்காக வெட்டிக்கொண்டிருந்தாள். அவளது சுறுசுறுப்பான விரல்களின் வினையாற்றலால் நறுக்கப்பட்ட காய்கறிகள் துரிதமாகக் குவிந்தன.

அவள் பாவெல் மீது ஒரு அசட்டையான பார்வையைச் செலுத்தி விட்டுக் கடுமையாகக் கூறினாள்:

''சாப்பாட்டைத் தேடிவந்து விட்டாயா? அதற்கு நேரமாகவில்லை, தம்பீ! இம்மாதிரி வேலையை விட்டுவிட்டுக் கள்ளத்தனமாக ஓடிவருவதற்கு உனக்கு வெட்கமாயில்லையா? அடுப்புக் கிட்டத்தில் போகாதே! இது சமையலறை, குளிர்காயும் இடம் அல்ல.''

அந்தச் சமயத்தில் சமையற்காரன் அங்கு வந்தான்.

''என் பூட்ஸ் தோல் அறுந்துவிட்டது'' என்று கூறி, அந்த வேளையில் அங்கு வந்ததற்குப் பாவெல் விளக்கம் தந்தான்.

அந்த வயதான சமையற்காரன் தையல் விட்டுப்போன பூட்ஸைப் பார்த்தான். ஓதார்க்காவை நோக்கித் தலையை அசைத்துக்கொண்டு கூறினான்:

''அவளது கணவன் ஏதாவது உதவி செய்ய முடியும். அவனுக்குக் கொஞ்சம் செருப்பு வேலை தெரியும். அசட்டையாய் இராமல், பழுதுபார்த்து விடு; இல்லாவிட்டால், நீ ரொம்பக் கஷ்டப்படு

வாய். பூட்ஸ் இல்லாவிட்டால் இங்கு செத்துப் போக வேண்டியதுதான்.''

ஒதார்க்கா இதைக் கேட்டவுடன், பாவெலை இன்னொரு முறை நோக்கினாள். அவனைப்பற்றி அவசரப்பட்டு முடிவு செய்ததை அவள் உணர்ந்தாள்.

''உங்களைக் சோம்பேறி என்று எண்ணிவிட்டேன்'' என்று அவள் பச்சாதாபத்துடன் குறிப்பிட்டாள்.

பாவெல் தனக்கு வருத்தமில்லை யென்பதைக் காட்டுவதற்காகப் புன்னகை செய்தான். ஒதார்க்கா ஒரு நிபுணரைப்போலப் பூட்ஸைப் பரிசோதனை செய்தாள்.

''இதற்குத் தையல் போட்டுப் பயனில்லை'' என்று அவள் முடிவாகக் கூறினாள். ''ஆனால் நான் ஒன்று செய்கிறேன். எங்கள் வீட்டில் ஒரு பழைய பூட்ஸ் மேலுறை கிடக்கிறது. உனது பாதம் கெடாமல் இருக்கும். நீ இப்படியே நடந்தால், செத்துப் போவாய். உறைபனிக்காலம் வந்துவிட்டது.''

பாவெலிடம் அனுதாபம் நிறைந்தவளாய், ஒதார்க்கா சமையல் கத்தியை வைத்துவிட்டு வெளியே விரைந்து சென்றாள். சீக்கிரத்தில், ஒரு பூட்ஸ்மேலுறையையும் தடிமனான துணியையும் கொண்டுவந்தாள்.

பாவெல், உலர்ந்து கதகதப்பாகவிருந்த பாதத்தில் துணியைச் சுற்றிக்கொண்டு, அந்த பூட்ஸ்மேலுறையை அணிந்து கொண்டான். அவளை நன்றியுடன் நோக்கினான்.

தோக்கரெவ், ஆத்திரத்துடன் நகரிலிருந்து திரும்பினன். அவன் தீவிர ஊழியர்களைக் கோல் யாவாவின் அறையில் கூட்டித் துன்பம் தரும் சேதியைக் கூறினன்.

''எங்கு நோக்கினுலும், இடுக்கண்களும் இடையூறுகளுமே எதிர்நோக்குகின்றன. எங்கு போனலும், சக்கரங்கள் சுழல்வதாகத் தோன்று கின்றன. ஆனல் முன்னேற்றத்தைக் காணேம். வெண்படை ஆட்கள் நிறைய இருக்கிறர்கள். நாம் ஆயுட்காலம் முழுவதும், இவர்களுடன் மாரடிக்க வேண்டும் போலிருக்கிறது. தம்பிகளே, துன் பம் தரும் சேதியே நான் சொல்லப் போகிறேன். நமக்குப் பதிலாக இங்கு வந்து வேலே செய்வதற் குத் தொண்டர்கள் வரவில்லே. வந்தாலும் எவ் வளவு பேர் வருவார்களென்று எவரும் திட்ட மாகச் சொல்ல முடியாது. வெகு சீக்கிரத்தில் கடுங்குளிராக இருக்கும். அதற்கு முன் நாம் இறந் தாலும்சரி இந்தச் சதுப்புநிலத்தை தேவைப்படி வெட்டியாக வேண்டும். அதற்குப்பின் எதுவும் நடைபெருது. டவுனில் இருக்கும் தோழர்கள் விஷமிகளேக் கவனித்துக் கொள்ளட்டும். நாம் நமது வேகத்தை இரட்டிப்பாக்குவோம். செத் தாலும் சரி, ரயில் பாதையை அமைத்தே தீருவோமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, காரியத்தைச் செய்வோம். அப்பொழுதுதான், நாம் போல்ஷெவிக்குகளாவோம்.''

தோக்கரெவின் கரகரப்பான, கனத்த குர லில் ஒரு உறுதிப்பாடு தொனித்தது. அடர்ந்த

புருவங்களின் கீழ் இருந்த அவனது கண்களில் மனவுறுதியும் பிடிவாதமும் ஒளி வீசியது.

''இன்றைய தினம் ஒரு பிரத்தியேகக் கூட்டம் நடத்திக் கட்சி அங்கத்தினருக்குச் சேதியைத் தெரிவிப்போம். நாளைக்குக் காலையில் கட்சியைச் சேராதவர்கள் போகட்டும். மற்றவர்கள் இங்கேயே இருந்து வேலையை முடிப்போம். இதோ, மாகாணக் கம்ஸமோல் கமிட்டியின் முடிவு'' என்று கூறிக்கொண்டே கிழவன் நான்காக மடித்த காகிதம் ஒன்றைப் பன்கிராத்தவிடம் கொடுத்தான்.

பாவெல் பன்கிராத்தவின் கையிலிருந்த கடிதத்தைத் தனக்குள் படித்துக் கொண்டான்.

''நிலைமை நெருக்கடியாயிருக்கிறது; எனவே, கம்ஸமோல் அங்கத்தினர் அனைவரும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும். முதலாவது விறகு வண்டி டவுனுக்கு வரும் வரை, அவர்கள் வேலையைத் தொடர்ந்து செய்யவேண்டும். கையொப்பம்: ரீ. உஸ்திஞேவிச், மாகாணக் கமிட்டியின் செயலாளர் சார்பில்'' என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது.

பராக்கில் நிறையக் கூட்டம். அந்தக் குறுகிய இடத்தில், நூற்று இருபது பேர் குவிந்தனர். பலர் சுவர் மீது சாய்ந்து கொண்டு மேஜை மீது நின்றனர். சிலர் சமையலறையில் உட்கார்ந்திருந்தனர்.

பன்கிராத்தவ் கூட்டத்தைத் துவக்கி வைத்தான். பிறகு தோக்கரெவ் ஒரு சுருக்கமான

உரையை நிகழ்த்தினான். அதன் முடிவில் அவன் சொன்னான்:

''கம்யூனிஸ்டுகளும் கம்ஸமோல் உறுப்பினர் களும் நாளைக்கு வேலையை விட்டுச் செல்லக் கூடாது'' என்று அறிவித்தான். ஒரு வெடிகுண்டு விழுந்ததைப் போலக் கூட்டத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

அந்த அறிவிப்பு இறுதியான முடிவு என்பதை வற்புறுத்தும் தோரணையில் கிழவன் தன் உரையை முடித்தான். ''இந்த நரகத்திலிருந்து மீளலாம், டவுனுக்குப் போகலாம், வீட்டுக்குப் போகலாம்'' என்றெல்லாம் இளைஞர்கள் கட்டியிருந்த மனக் கோட்டைகளை அது தகர்த்து விட்டது. பலர் கோபமாகப் பேசியதால் உண்டான பேரொலி சில வினாடிகள் ஆதிக்கம் வகித்தது. அந்தச் சந்தடியில், திரிவிளக்கு மங்கி மங்கி எரிந்தது. அந்த அரைகுறை இருளில், குழப்பமும் சந்தடியும் அதிகமாயின. சிலர் தத்தம் வீடுகளிலுள்ள வசதிகளைப் பற்றி ஆசையுடன் கூறினார்கள். மற்றவர்கள் கோபங் கொண்டார்கள். முடிந்த அளவுக்கு தாக்குப் பிடித்து வேலை செய்து விட்டதாகக் கூறினார்கள். பலர் மௌனமாயிருந்தனர். ஒருவன் மட்டுமே, வேலையை விட்டு விடுவதாகக் கூறினான்.

''நீங்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?'' என்று அவன் ஒரு மூலையிலிருந்து கோபப் பொறி பறக்கக் கத்தினான். ''மேலும் ஒரு நாள்கூட நான் இங்கு தங்கமாட்டேன். குற்றம் செய்தால், கடுங்

காவல் தண்டனை பெற்றுக் கடினமாக உழைக்க வேண்டுமென்பதை நான் புரியமுடியும். ஆனால் நாம் என்ன குற்றம் செய்துவிட்டோம்? இந்தக் கட்டளைக்கு அடிபணியும் முட்டாள்கள் நாம் அல்ல. இந்த முடிவை எடுத்தவர்களே இங்கு வந்து வேலை செய்யட்டும். இந்தச் சகதியில் புரள்வதற்குச் சிலர் விரும்பலாம். ஆனால் சென்றால் மீளாத இந்த வாழ்வை விரயம் செய்யும் எண்ணம் எனக்கு இல்லை. நான் நாளைக்குப் போகிறேன்'' என்று அவன் கூறினான்.

ஓக்குனேவுக்குப் பின்னாலிருந்து அந்தக் குரல் வந்தது. பேசியது யாரென்று பார்ப்பதற்காக, ஓக்குனேவ் ஒரு தீக்குச்சியைப் பற்றவைத்தான். ஆத்திரத்தால் கோணிய முகத்தையும் திறந்த வாயையும் உடைய அவனைத் தீக்குச்சியின் வெளிச்சம் ஒரு விநாடிதான் புலப்படுத்தியது. ஆனால் அந்தக் கணநேரத்திலேயே, அவன் மாகாண உணவு இலாகா கணக்கரின் மகன் என்பதை ஓக்குனேவ் புரிந்து கொண்டுவிட்டான்.

''கையும் களவுமாய்ப் பிடிப்பதாக எண்ணமா? நல்லது. நான் கள்வன் அல்ல; எனக்குப் பயம் இல்லை'' என்று அவன் குரைத்தான்.

தீக்குச்சி அணைந்தது. பன்கிராத்தவ் எழுந்து நின்றான்; நிமிர்ந்து நின்றான்.

''இது என்ன பேச்சு? கட்சிக் கடமையைக் கடின உழைப்புத் தண்டனையுடன் ஒத்திட்டுப் பேசும் துணிச்சல் எவருக்கு ஏற்படலாம்?'' என்று அவன் மந்தமான குரலில் கூறினான். முன்

வரிசைகளில் இருந்தவர்களைச் செந்தழல் விழி களால் நோக்கிக்கொண்டே, அவன் மேலும் பேசி ஞன்: ''முடியாது, தோழர்களே, நாம் டவுனுக்குப் போக முடியாது. இதுதான் நமக்கு உரிய இடம். நாம் இப்பொழுது ஓடிவிட்டால், ஊர் ஜனங்கள் கடுங்குளிரில் விறைத்துச் சாவார்கள். எவ்வளவு துரிதமாக வேலையை முடிக்கிறேமோ, அவ்வளவு சீக்கிரம் வீட்டுக்குப் போவோம். பின்ஞல் உள்ள சிணுங்கியைப் போல ஓடுவதென்பது நம் லட்சி யத்துக்கும் கொள்கைக்கும் கட்டுப்பாட்டுக்கும் குழிபறிக்கும் செயலாகும்.''

துறைமுகத் தொழிலாளியான பன்கிராத் தவ் நீண்ட பிரசங்கம் செய்வதை வெறுப்பவன். ஆனுல் இந்தச் சுருக்கமான பேச்சைக்கூடப் பழைய கோபக்குரல் இடைமறித்தது.

''கட்சியில் இல்லாதவர்கள் ஊருக்குப் போ கிருர்கள் அல்லவா?'' என்று அந்தக் குரல் வின வியது.

''ஆம்'' என்ருன் பன்கிராத்தவ்.

ஒரு குட்டையான மேல்கோட்டை அணிந்த இளைஞன் கூட்டத்தைத் தள்ளி வழி செய்து கொண்டு முன்னுல் வந்தான். ஒரு கம்ஸமோல் கார்டு வௌவால் மாதிரிப் பறந்து வந்து பன்கி ராத்தவின் மார்பைத் தாக்கி மேஜைமீது விழுந்து செங்குத்தாக நின்றது.

''அதோ என் கார்டு; எடுத்துக்கொள். இந்த அட்டைத்துண்டுக்காக நான் என் உடல் நலத் தைக் கெடுத்துக்கொள்ள மாட்டேன்!''

அவனது கடைசி வார்த்தைகளைக் கேட்க முடியாதவாறு, பல கோபக் குரல்கள் எழுந்தன.

''நீ எதை எறிவதாக எண்ணுகிறாய்?''

''துரோகி! முறை தப்பிப்பிறந்த பயலே!''

''சுகவாழ்வு நடத்தலாமென்று கும்ஸமோ லுக்கு வந்த பயல்!''

''வெளியே தள்ளு!''

''அந்தப் பேனைப் பிடித்து நசுக்குகிறேன், பார்.''

அந்த ஓடுகாலி தலையைத் தாழ்த்திக்கொண்டு, வெளியேறினான். குஷ்டரோகியைக் கண்டால் ஒதுங்குவதைப் போல நகர்ந்துகொண்டு, அவன் வெளியேறுவதற்கு அவர்கள் வழி செய்தார்கள். அவன் அந்த பாரக்கை விட்டுச்சென்றதும், அதன் கதவு கிரீச் என்ற சத்தத்துடன் மீண்டும் மூடியது.

எறியப்பட்ட அங்கத்தினர் சீட்டை எடுத்து, எண்ணெய் விளக்கின் ஜுவாலையில் காட்டினான் பன்கிராத்தவ்.

அந்த அட்டையில் தீப்பிடித்துக்கொண்டது. அது எரியும்பொழுதே சுருண்டது.

காட்டில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. ஒரு குதிரைக்காரன் இடிந்துகிடந்த கட்டிடத்திலிருந்து திரும்பிக் காட்டின் இருளுக்குள் மறைந்தான். ஒரு விநாடிக்குப்பின், பலர் அக் கட்டிடத்திலிருந்தும் பள்ளிக்கூடக் கட்டிடத்தி லிருந்தும் ஓடிவந்தனர். யாரோ ஒருவன், கதவு நிலையில் புதிதாகப் பொருத்தப்பட்டிருந்த சிறிய

ஒட்டுப் பலகை ஒன்றில் மோதிக் கொண்டான். யாரோ ஒருவன் தீக்குச்சியைக் கொளுத்தினன். காற்றில் ஆடிக்கொண்டிருந்த அதன் ஸ்வாலையை நன்ருக ஆடை விளிம்புகளால் போற்றிக் கொண்டு, பலகையில் பொறித்திருந்த வாசகத் தைப் படித்தனர்.

''இங்கிருந்து ஒழியுங்கள். உங்கள் ஊருக்கு உடனே ஓடுங்கள். அப்படிச் செய்யாவிட்டால், ஒவ்வொருவனையும் சுட்டுக்கொல்வோம். வெளி யேறுவதற்கு, நாளை இரவு வரை அவகாசம் கொடுக்கிறேன். தலைவன் செஸ்னுேக்'' என்று அதில் எழுதியிருந்தது.

செஸ்னுேக், ஓர்லிக்கின் கூட்டத்தைச் சேர்ந் தவன்.

ரீத்தாவின் அறையில், மேஜையின் மீது ஒரு நாட்குறிப்பு திறந்து கிடக்கிறது.

''டிசம்பர் 2

''இந்த ஆண்டில் முதன்முதலாக, இன்று காலை வெண்பனி பெய்தது. குளிர் கடுமையாக உள்ளது. நான் ஓல்ஷின்ஸ்கியைப் படிக்கட்டில் சந் தித்தேன். இருவரும் வீதியில் சேர்ந்து நடந்தோம்.

''அவன் கூறினுன்: 'முதலில் பெய்யும் வெண் பனி என்ருல் எனக்கு ரொம்பப் பிடித்தம். ஒரே குளிராக இருக்கிறது. இது இன்பமாக இல்லையா?'

''ஆனல் நான் போயர்க்காவைப் பற்றிச்

சிந்தித்துக் கொண்டிருந்தேன். இந்த வெண்பனியும் கடுங்குளிரும் எனக்கு மகிழ்ச்சி தரவில்லை யென்றும், அவை என் உள்ளத்தைச் சோர்வடையச் செய்கின்றன என்றும் நான் அவனிடம் கூறினேன். காரணத்தையும் விளக்கினேன்.

''அவன் பதில் அளித்தான்: 'இது வெறும் தன்வயப்பட்ட வாதம். இந்த அடிப்படையில் வாதிப்பதென்முல், யுத்தகாலத்தில் எல்லாவகைப் பட்ட இன்பத்தையும் உல்லாசமான பொழுது போக்கையும் தடை செய்ய வேண்டும். ஆனால் வாழ்வு அம்மாதிரி அமையவில்லை. போர்முனையில்தான் துன்பமும் துயரமும் நிறைந்திருக்கின்றன. அங்கு, மரணத்தின் நுழை வாயிலில் வாழ்வு ஒடுங்கி விடுகிறது. அங்குகூட ஜனங்கள் சிரிக்கிறார்கள். போர்முனைக்கு அப்பால், வாழ்வு எப்பொழுதும் போல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது; ஜனங்கள் சிரிக்கிறார்கள்; அழுகிறார்கள்; துன்புறுகிறார்கள்; இன்புறுகிறார்கள்; காதல் புரிகிறார்கள்; உல்லாசமான பொழுதுபோக்கையும் இன்பக்கேளிக்கையையும், ஆனந்தக் கிளர்ச்சியையும் நாடுகிறார்கள்.'

''ஓல்ஷீன்ஸ்கியின் பேச்சில் கிண்டலோ குத்தலோ தொனிக்கவில்லை. அவன் அயல் நாட்டு விவகார கமிஸார் இலாகாவின் பிரதிநிதி. 1917 லிருந்து கட்சியில் இருக்கிறான். எப்பொழுதும், நன்றாக ஆடையுடுத்திக் கொள்கிறான். தூய்மையாக சவரம் செய்துகொண்ட முகத்துடன் காட்சியளிக்கிறான்; அவனிடம் ஒரு மென்மையான நறு

மணமும் வீசுகிறது. எங்கள் வீட்டில் ஸெகாலின் அறையில் வசிக்கிறான். சில சந்தர்ப்பங்களில், மாலைநேரத்தில், என்னைப் பார்ப்பதற்கு வருகிறான். அவனுடன் பேசுவது மிகவும் சுவையுள்ள தாக இருக்கிறது. அவனுக்கு ஐரோப்பாவைப் பற்றி நிறையத் தெரிந்திருக்கிறது; பல ஆண்டு கள் பாரிஸில் வசித்தவன். ஆனால் அவனும் நா னும் நல்ல நண்பர்களாக இருக்கமுடியுமா என் பதில் எனக்குச் சந்தேகம்தான். ஏனென்றால், அவன் என்னை முதன்மையாக ஒரு பெண்ணாகவே மதிக்கிறான். நான் அவனுடைய கட்சித் தோழர் என்பது அவனுக்கு இரண்டாம் பட்சமான விஷ யமாகும். அவன் தன்னுடைய உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் மூடிமறைக்க முயற்சிப்பதில்லை என்பது மெய். மனதில் பட்டதைத் தைரியமாக எடுத்துரைக்கிறான். அவனது நடத்தையில் விரஸ மான அம்சம் எதுவும் இல்லை. அதில் ஒரு வகை யான அழகைக்கூட அமைத்துவிடுகிறான். எனினும், எனக்கு அவனைப் பிடிக்கவில்லை.

''கடுமையாகத் தோற்றமளிக்கும் பியோ தரின் எளிமை, ஓல்ஷீன்ஸ்கியின் நயக்கத்தக்க ஐரோப்பிய நடையைவிட உயர்ந்ததாக எனக்குத் தோன்றுகிறது.

''போயர்க்காவிலிருந்து ரத்தினச் சுருக்க மான அறிக்கைகளில் சேதிகள் வந்துகொண்டிருக் கின்றன. தினந்தோறும் வேலை சுறுசுறுப்பாக நடை பெறுகிறது. உறைந்துபோன பூமியில் ஆழமில் லாத பாத்திகளை வெட்டிக் கிடைப்பலகைகளை

அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருநூற்று நாற்பது பேர்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். புதிதாகப் போகவேண்டிய நபர்களில் பாதிப் பேர் போக மறுத்துவிட்டனர். அங்கு உள்ள நிலைமைகள் பயங்கரமாக இருக்கின்றன. அவர்கள் இந்தக் கடுங்குளிரில் எப்படித்தான் வேலை செய்வார்கள் என்பதை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. துபாவா அங்கு போய் ஒரு வாரமாகிவிட்டது. அவர்கள் பூஷ்சா-வாதீத்ஸாவில் இருந்த எட்டு எஞ்சின்களில் ஐந்தைத்தான் பழுது பார்த்துச் சீரமைத்தார்கள். மீதி மூன்று எஞ்சின்களின் சீரமைப்புக்குத் தேவையான பாகங்கள் கிடைக்கவில்லை.

''டிராம் போக்குவரத்து அதிகாரிகள் துபாவாமீது குற்றம் சாட்டியிருக்கின்றனர். அவனும் அவனது குழுவும், நகரத்துக்குச் சென்ற டிராம் வண்டிகள் எல்லாவற்றையும் தடுத்து நிறுத்தினர். பூஷ்சா-வாதீத்ஸாவிலிருந்து டவுனுக்கு ஓடிக்கொண்டிருந்த அந்த வண்டிகளில் இருந்த பிரயாணிகளை இறக்கிவிட்டு, அவற்றில் தண்டவாளங்களை ஏற்றிக்கொண்டு போனார்கள். அவர்கள் தண்டவாளங்களை ஏற்றிய பத்தொன்பது வண்டிகளை டிராம் பாதை வழியாக டவுனில் உள்ள ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தனர். டிராம் ஓட்டிகள் மகிழ்ச்சியுடன் உதவினர்.

''டவுனில் மிஞ்சியிருக்கும் ஸாலோமென்காகம்ஸமோல் தோழர்கள் தண்டவாளங்களை ரயில் பெட்டிகளில் ஏற்றுவதில் இரவெல்லாம் ஈடுபட்

டார்கள். அதன்பின் துபாவாவின் குழு போயர்க் காவுக்குச் சென்றது.

''துபாவாவின் நடத்தையைக் கம்ஸமோல் தலைமைக் குழுவில் விவாதிக்க வேண்டுமென்ற யோசனையை அக்கீம் நிராகரித்தான். டிராம்கார் நிர்வாகத்தில் உள்ள அலுவலகச் சடங்குகளைப் பற்றியும் சிவப்பு நாடா முறைகளைப் பற்றியும் துபாவா எங்களிடம் கூறியிருக்கிறான். அந்த நிர்வாகிகள் தண்டவாளங்களை ஏற்றிச் செல்வதற்கு இரண்டு வண்டிகள்தான் தருவோமென்று கூறினார்கள்.

''எனினும், தனியாகப் பேசும்பொழுது, துப்தா துபாவாவைக் கடிந்து கொண்டான். 'இந்தப் பார்ட்டிஸான் வித்தைகளைக் கைவிட்டுவிடு. இல்லாவிட்டால், சிறைவாசத் துன்பத்தை ஏற்க நேரிடும். உண்மையில், நீ துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தாமல், ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும்; அது நிச்சயம் சாத்தியப்பட்டிருக்கும்' என்று அவன் துபாவாவிடம் கூறினான்.

''இதைக் கேட்டுத் துபாவா கொதித்து எழுந்தான். அவன் இம்மாதிரி ஆத்திரப்பட்டு நான் கண்டதில்லை.

''அவன் இடிமுழக்கம் செய்தான். 'உருப்படாத பேனாப் புலி! நீயே அவர்களுடன் பேசிப் பார்ப்பது தானே? உனக்கு என்ன தெரியும்? நாற்காலிக்குச் சூடேற்றிக் கொண்டு உட்கார்ந்திருக்கத் தெரியும்; நாக்கை நீட்டி முழக்கிப் பேசத் தெரியும். அந்தத் தண்டவாளங்கள் இல்லாமல்

நான் எப்படி போயர்க்காவுக்குப் போவதென்று நினைக்கிறாய்? இங்கு ஊர்சுற்றிக்கொண்டு ஒவ்வொருவர் விஷயத்திலும் தலையிட்டுக் கொண்டிருப்பதைக் காட்டிலும், அங்குப் போய் பயனுள்ள வேலை செய்தாயானால் நலமாயிருக்கும். தோக்கரெவ் உனக்குக் கொஞ்சம் அறிவு புகட்டுவார்!' துபாவா உரக்கப் பேசியதால், கட்டிடம் முழுவதும் அவனது பேச்சுக் கேட்டது.

''துப்தா துபாவாவுக்கு எதிராக ஒரு புகார் எழுதினான். ஆனால் அக்கீம் என்னை அறையைவிட்டுப் போகச் சொல்லி விட்டு, துப்தாவுடன் பத்து நிமிஷம் தனியாகப் பேசினான். அதன்பின் துப்தா எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் வெளியே வந்தான்.''

''டிசம்பர் 3

''மாகாணக் கமிட்டியிடம் இன்னொரு புகார் வந்திருக்கிறது. இது போக்குவரத்துச் செக்காவிடமிருந்து வந்திருக்கிறது. பன்கிராத்தவ், ஒக்குனேவ் முதலிய சில தோழர்கள் மோத்தவிலோவ்க்கா ஸ்டேஷனுக்குச் சென்று அங்குக் காலியாகக் கிடந்த கட்டிடங்களிலிருந்து சகல கதவுகளையும் ஜன்னல் சட்டங்களையும் அகற்றிக் கொண்டு போய் விட்டார்களாம். அவர்கள் அவற்றையெல்லாம் ஒரு சாமான் ரயிலில் ஏற்றிய பொழுது, ஸ்டேஷன் செக்கா ஊழியன் அவர்களைக் கைது செய்ய முயன்றான். அவனை நிராயுதபாணியாக்கிவிட்டார்கள். டிரெயின் கிளம்பிய பிறகே

அவனது கைத் துப்பாக்கியில் இருந்த தோட்டாக்களை பறித்துக்கொண்டு, அந்த வெறும் துப்பாக்கியையும் கொடுத்தார்கள். ஆகக்கூடி, கதவுகளையும் ஜன்னல் சட்டங்களையும் கொண்டு போய் விட்டார்கள்.

''போயர்க்கா ரயில்வே சேமிப்புக் கிடங்கிலிருந்து முந்நூற்று கிலோகிராம் ஆணியை எடுத்துக் கொண்டு போய்விட்டதாக, ரயில்வே சப்ளை இலாகா தோக்கரெவ் மீது குற்றம் சாட்டியிருக்கிறது. தண்டவாளங்களுக்கு அடியில் அமைப்பதற்கான கிடைப்பலகைகளாக உபயோகிப்பதற்கு விவசாயிகள் மரங்களை இழுத்துக் கொண்டுவந்தார்கள். அதற்குக் கூலியாக அவர்களுக்கு தோக்கரெவ் அந்த ஆணிகளைக் கொடுத்து விட்டார்.

''இந்தப் புகார்களைப் பற்றியெல்லாம் நான் ஹுஹ்ராயுடன் பேசினேன். ஆனால் அவர் சிரித்தார். 'இதைப்பற்றி யெல்லாம் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!' என்று சொன்னார்.

''இருப்புப் பாதை நிர்மாணிக்கும் இடத்தில் நெருக்கடிதான். நேரம் நமக்குத் தங்கம். ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் நாங்கள் இங்கு நிர்ப்பந்தம் செய்து முட்டுக்கட்டைகளை அகற்ற வேண்டியிருக்கிறது. முட்டுக்கட்டை போடுவோரை நாங்கள் அடிக்கடி மாகாணக் கமிட்டிக்கு முன் கூட்டிவைத்துப் பேசவேண்டியிருக்கிறது. அங்கே, வேலை நடக்கும் இடத்தில், இளைஞர்கள் மென்மேலும் அதிகமாக நடைமுறை விதிகளை மீறிக்கொண்டு வருகிறார்கள்.

''ஓல்ஷீன்ஸ்கிய் எனக்கு ஒரு சிறிய மின்சார அடுப்புக் கொடுத்திருக்கிறான். நானும் ஓல்காவும் அதில் எங்கள் கைகளுக்குச் சூடு காட்டுகிறோம். ஆனால் அந்த அடுப்பு எரிவதால் அறை கதகதப்பாகவில்லை. இந்தக் கடுமையான குளிர் இரவை, காட்டில் உள்ள தோழர்கள் எப்படித்தான் சகித்துக் கொள்கிறார்களோ எனக்கு வியப்பாயிருக்கிறது. ஆஸ்பத்திரியில் குளிர் அதிகமாக இருப்பதால், நோயாளிகள் போர்த்திக் கொண்டிருக்கும் கம்பளியை அகற்றிவிட்டு வெளிவர மறுக்கின்றனர் என்று ஓல்கா கூறுகிறாள். இரண்டு நாளைக்கு ஒரு முறைதான் ஆஸ்பத்திரியில் அடுப்புத் தீ மூலம் வெப்பம் உண்டாக்குகிறார்கள்.

''இல்லை, தோழர் ஓல்ஷீன்ஸ்கிய், போர்முனையின் முன்னணியிலுள்ள சோகம் பின்னணியிலும் உண்டு' என்று சொல்ல விரும்புகிறேன்!''

''டிசம்பர் 4

''இரவெல்லாம் வெண்பனி பெய்தது. எங்கும் பனி குவிந்து கிடப்பதால், பாதையின் பனியை அகற்றுவதற்காக, இதர வேலைகளை நிறுத்தி வைத்திருப்பதாகப் போயர்க்காவிலிருந்து எழுதுகிறார்கள். மரவெட்டும் இடத்தின் துவக்கம் வரையுள்ள பகுதியில் 1922 ஜனவரி முதல் தேதிக்கு முன் இருப்புப் பாதை அமைத்துவிட வேண்டுமென்று மாகாணக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவு போயர்க்காவில் தெரிவிக்கப்

பட்டவுடன், 'நாங்கள் பனியில் உறைந்து சாகா விட்டால், இதைச் செய்து முடிப்போம்' என்று தோக்கரெவ் கூறினாராம்.

''பாவெலேப்பற்றி ஒரு தகவலும் இல்லை. பன்கிராத்தவ் 'வழக்கு' மாதிரி எந்தப் புகாரிலும் அவன் சிக்கவில்லை! இது வியப்பதற்குரிய விஷயம் தான். அவன் ஏன் என்னிடமிருந்து ஒதுங்குகிறான் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை.''

''டிசம்பர் 5

''நேற்று, இருப்புப் பாதை வேலை நடக்குமிடத்தில் கொள்ளைக் கூட்டத்தாரின் தாக்குதல் நடைபெற்றது.''

குதிரைகள் மென்மையான, எளிதில் விட்டுக் கொடுக்கக் கூடிய பனியில் வெகு கவனமாகக் கால்களை எடுத்துவைத்தன. இடையிடையே, வெண்பனியில் விழுந்து மறைந்துகிடந்த மரக் கிளை, ஏதாவது ஒரு குதிரையின் குளம்பைக் குத்தவே, அது துள்ளிச் சீறிப் பின்தங்கியதுண்டு. ஆனால் குதிரைப்பாகன் கொடுத்த அடி, அதை இதரக் குதிரைகளுக்குப்பின் ஓடச்செய்தது.

சுமார் ஒரு டஜன் குதிரையேற்றக்காரர்கள் குன்று ஒன்றின் முகட்டைத் தாண்டினார்கள். அதற்கும் அப்பால், வெண்பனி மூடாத கரிய செய்கரையை அடைந்தார்கள். அங்கு அவர்கள் தம் குதிரைகளை நிறுத்தினார்கள். சேணங்களின் மிதி

யடிகள் ஒன்ருேடொன்று உராய்ந்துகொண்டு கிணுகிணுத்தன. முன்னே நின்று கொண்டிருந் தவனின் குதிரை, நீண்ட தூர ஓட்டத்தின் காரணத்தால் வியர்த்துப் போயிருந்த அக்குதிரை, தன் முழு உடலையும் சப்தத்துடன் ஆட்டியது.

''முதல்வன்'' உக்ரேனிய மொழியில் பேசினுன்:

''இங்கு அவர்கள் அநேகர் இருக்கிருர்கள். அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். நாளைக்குள் இவர்களை இந்த இடத்தைவிட்டு விரட்ட வேண்டுமென்று தலைவர் கூறிஞர். அவர்கள் நெருங்கி விட்டார்கள்....''

அக்கொள்ளைக்காரர்கள் ஸ்டேஷனை நோக்கி, ஒருவர்பின் ஒருவராகக் குதிரை மீது சென்றனர்; குறும்பாதையாக அமைந்துள்ள இருப்புப்பாதையை ஒட்டிஞற்போலச் சென்றனர். பழைய பள்ளிக் கட்டிடத்துக்கு முன்ஞல் உள்ள வெளிக்கு அருகில் வந்தவுடன் அவர்கள் மெதுவாகவே குதிரைகளை நடத்திஞர்கள். திறந்த வெளிக்குள் போகாமல் அவர்கள் மரங்களுக்குப் பின்ஞல் தங்கிவிட்டார்கள்.

இரவின் அமைதியை வெடி முழக்கம் குலைத்தது. வெண்மதியின் ஒளியில் வெள்ளியைப் போலப் பிரகாசித்த பிர்ச் மரத்தின் கிளையிலிருந்து, அணில் விழுவதைப் போல வெண்பனிக் கட்டி விழுந்தது. துப்பாக்கிகள் கக்கிய தீ மரங்களிடையே மின்னியது. குண்டுகள் காரையைச் சிதறடித்துக்கொண்டு, சுவர்களை ஊடுருவின.

பன்கிராத்தவால் கொண்டுவரப்பட்ட ஜன்னல் கண்ணுடிகள் சிதறுண்ட பொழுது, கண்ணுடி தூளாகிய ஒலி கேட்டது.

குண்டு வெடிக்கும் ஒலி கான்கிரீட் தளத்தில் படுத்திருந்தவர்களை எழுப்பியது; அவர்களை எழுந்து நிற்கச் செய்தது. ஆனுல் அறையில் ஆட்கொல்லிப் பூச்சிகளான குண்டுகள் பறந்த பொழுது, அச்சம் அவர்களை மறுபடியும் தரையில் படுக்க வைத்தது.

ஓடிக்கொண்டிருந்த பாவெலின் கோட்டைத் துபாவா பிடித்துக்கொண்டான்.

''எங்கே போகிறுய்?'' என்று கேட்டான்.

''வெளியே!'' என்றுன் பாவெல்.

''முட்டாள்! கீழே விழு! வெளியே தலையை நீட்டினுல் சீவி விடுவார்கள்'' என்று துபாவா சீறினுன்.

பாவெலும் துபாவாவும் கதவுக்கு அருகில் அடுத்தடுத்துக் கிடந்தனர். துபாவா உடலை நீட்டிக் கொண்டான்; கைத்துப்பாக்கியைக் கதவுக்கு நேராகக் குறிவைத்துப் பிடித்துக் கொண்டிருந்தான். பாவெல் குத்திட்டு உட்கார்ந்துகொண்டே, தன் கைத் துப்பாக்கியை விரல்களால் வருடிக் கொண்டு அதில் உள்ள குண்டுகளை எண்ணத் தொடங்கினுன்.

திடீரென்று துப்பாக்கிப் பிரயோகம் நின்றது. அமைதி நிலவியது. ஆனுல் அடுத்து என்ன நடக்குமோ என்று எல்லோரும் திகிலடைந்திருந்தனர்.

''ஆயுதம் உள்ளவர் என்னுடன் வருக!'' என்று துபாவா கரகரத்த குரலில் தாழ்ந்த சுருதியில் கட்டளை பிறப்பித்தான்.

பாவெல் முன்னெச்சரிக்கையுடன் கதவைத் திறந்தான். முன்னுலிருந்த மைதானம் வெறிச்சென்று இருந்தது. வெண்பனி சிதள்கள் சப்தமில்லாமல் காற்றில் சுழன்ற வண்ணம் தரையில் மெதுவாக விழுந்துகொண்டிருந்தன.

காட்டில் பத்துக் கொள்ளைக்காரர்கள் தமது குதிரைகளைச் சவுக்காலடித்து விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள், ஒரு டிராலி வண்டி நகரிலிருந்து வந்தது. அதிலிருந்து இறங்கிய பியோதரையும் அக்கீமையும் தோக்கரெவும் கோல்யாவாவும் சந்தித்தனர். ஒரு 'மாக்ஸிம்' இயந்திரத் துப்பாக்கியும் அதற்குரிய தோட்டா பெல்ட்டுகள் அடங்கிய சில பெட்டிகளும் இரண்டு டஜன் துப்பாக்கிகளும் பிளாட்பாரத்தில் இறக்கப்பட்டன.

அவர்கள் நிர்மாண வேலை நடந்த இடத்துக்கு விரைந்தனர். பியோதர் தரித்திருந்த நீண்ட ராணுவ மேல்கோட்டின் கரைவிளிம்பு வெண்பனியில் கோணல் மாணலான கோட்டை வரைந்துகொண்டே சென்றது. அவன் இப்பொழுதும் ஆடிக் குலுங்கிக் கொண்டுதான் நடந்தான். நாசகாரிக் கப்பலின் மேல்தட்டில் நடைபோடும் மாலுமியைப் போலவே நடந்தான். நீண்ட கால்களை

உடைய அக்கீம், பியோதருடன் நடந்தான். ஆனால் தோக்கரெவின் நடை வேகம் குறைவாயிருந்ததால், அவன் அடிக்கடி அவர்களை ஓடிப் பிடிக்க வேண்டியிருந்தது.

தோக்கரெவ் பேசினன்:

''கொள்ளைக் கூட்டத்தாரின் படையெடுப்பையும் விடப் பெரிய தொல்லை ஒன்று காத்திருக்கிறது. இருப்புப் பாதை போடும் வழியில் ஒரு இடத்தில் நிலம் மேடாக உயர்ந்திருக்கிறது. இந்த மேட்டைச் சமனப்படுத்துவதென்றால், அதிகப்படியாக வெட்டு வேலை செய்ய வேண்டும்.''

கிழவன் தன் பேச்சை நிறுத்தினன்; காற்றடித்த திசையிலிருந்து திரும்பினன்; தீக்குச்சியைக் கொளுத்தினன். கையைக் கிண்ணமாக்கித் தீயைக் காப்பாற்றி சிகரெட்டைப் பற்றவைத்தான். கொஞ்சம் புகைபிடித்த பின், அவன் பிறருடன் சேர்வதற்காக விரைந்து நடந்தான். அக்கீம் அவனுக்காகக் காத்திருந்தான். ஆனல் பியோதர் முந்திச் சென்றுவிட்டான்.

''இந்த இருப்புப்பாதை அமைக்கும் வேலையைக் காலத்தில் முடிக்க முடியுமா?'' என்று அக்கீம் தோக்கரெவைக் கேட்டான்.

கிழவன் பதில் உரைப்பதற்கு முன் சற்று நிதானித்தான். இறுதியாக, அவன் சொன்னன்:

''மகனே! நிலைமை இதுதான்: பொதுவாகச் சொல்லப் போனல், இந்த வேலையை முடிக்க முடியாது. ஆனல் முடிக்காமலும் இருக்க முடியாது. அதனல் இவ்வளவு கஷ்டம்.''

அவர்கள் இருவரும் பியோதரை அடைந்து விட்டார்கள். மூவரும் சேர்ந்தாற்போல நடந்தார்கள்.

தோக்கரெவ் ஊக்கத்துடன் பேசினன்:

''இதுதான் நிலைமை: இந்தச் சுற்றுச் சார்பில், நமது குறைந்த தளவாடபலத்துடனும் ஆள் பலத்துடனும் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியாது. ஆனல் இந்த உண்மை பத்தோவ்ஷினுக்கும் எனக்கும்தான் தெரியும். என்ன ஆனாலும் சரி, இருப்புப்பாதையை அமைத்துத்தானக வேண்டுமென்பதையே மற்றவர்கள் அறிவார்கள். அதனுல்தான், 'நாங்கள் பனியில் உறைந்து சாகாவிட்டால், இதைச் செய்து முடிப்போம்' என்று கூறினேன். நீங்களே நிலைமையைக் கணித்துப் பாருங்கள். ஒரு மாதத்துக்கு மேலாக, இங்கு உயிரை விட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்குள், நான்காவது தொகுதியினர் வேலைசெய்து முடித்து விட்டு ஓய்வு எடுக்கவேண்டும். ஆனல் எங்களில் பெரும்பாலோர் தொடக்கத்திலிருந்தே வேலை செய்து வருகிறார்கள். அவர்களது இளமையே அவர்களுக்கு இந்த ஊக்கத்தையும் உறுதியையும் அளித்திருக்கிறது. ஆனல் அவர்களில் பாதிப் பேருக்கு ஜலதோஷம் பிடித்துவிட்டது. அவர்களைப் பார்த்தால், மனம் வேதனை அடைகிறது. அருமையான இளைஞர்கள்; இவர்களைவிட உயர்ந்தவர் எவருமில்லை. ஆனல் இந்தச் சாபக்கேடு அடைந்த இடம், அவர்களில் சிலருக்காவது சவக்குழியாகிவிடும் போல் இருக்கிறது.''

ஸ்டேஷனிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்துக்குத் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு அப்பால், ஒன்றரை கிலோமீட்டர் தூரத்துக்குச் சமதளமாக்கப்பட்ட செய்கரையில் தண்டவாளந்தாங்கிகள் மட்டுமே பொருத்தப்பட்டிருந்தன. அதற்கு அப்பால், மேடாக உள்ள இடம் வரை, சமன்படுத்தப்பட்ட பாதை மட்டிலும் புலப்பட்டது.

இந்தப் பகுதியில்தான், பன்கிராத்தவின் கோஷ்டி வேலை செய்து கொண்டிருந்தது. நாற்பது பேர் ஸ்லீப்பர் தண்டவாளந்தாங்கிகளைப் பொருத்திக் கொண்டிருந்தனர். மரப்பட்டைகளால் பின்னப்பட்ட புதிதான செருப்பை அணிந்த செந்தாடி விவசாயி ஒருவன், மரக் கட்டைகளைப் பாதையில் இறக்கிக் கொண்டிருந்தான். இதே போல, மேலும் பல ஸ்லெட்ஜ் வண்டிகளிலிருந்து சிலர் மரக்கட்டைகளை இறக்கிக்கொண்டிருந்தனர். இரண்டு நீளமான இரும்புத் தடிகள் தரை மீது கிடந்தன. அவை ஸ்லீப்பர்களின் மட்டத்தைச் சமனப்படுத்துவதற்குப் பயன்பட்டன. கடப்பாறைகளும் மண்வெட்டிகளும் அடிப்பாரத்தை இடித்துச் சீர் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டன.

ரயில்வே ஸ்லீப்பர்களை அமைக்கும் வேலை கடினமானது. நிதானமாகச் செய்ய வேண்டிய வேலை. தண்டவாளங்கள் ஒரு சீராகப் பதியும் வகையில், ஸ்லீப்பர் கட்டைகள் பூமியில் உறுதியாகப் பொருத்தப்படல் வேண்டும்.

ஸ்லீப்பர்களை அமைக்கும் வேலையை அந்தக் கோஷ்டியில் ஒருவனே அறிந்திருந்தான். அவன் தான் லேன் போர்மென் லாகூத்தின். தால்யா வின் தந்தையாகிய அவனுக்கு வயது 54. நடுவில் பிரிந்து நின்ற தாடியை உடையவன். அவனது தாடி கன்னங்கரியதாயிருந்தது; தலைச் சிகையில் கூட ஒரு வெள்ளி மயிரைக் காண முடியாது. இந்த வேலை துவக்கப்பட்டதிலிருந்தே அவன் போயர்க் காவில் வேலை செய்து வந்தான். இளைஞர்களுக்குச் சமமாகச் சகல கஷ்டங்களையும் பகிர்ந்துகொண்டு பாடுபட்டான். சகலருடைய நன்மதிப்புக்கும் பாத் திரமாகியிருந்தான். அவன் கம்யூனிஸ்ட் கட்சி யின் உறுப்பினன் அல்ல; ஆனால் அவனுக்கு உயர்வு அளிக்க எந்தக் கட்சி மாநாடும் தவறியதில்லை. அவன் தனக்கு அளிக்கப்பட்ட உயர்வை எண்ணி உவகை கொண்டான். வேலை முடியும் வரை போயர்க்காவிலிருந்து கிளம்ப மாட்டேன் என்று வாக்குறுதியும் கொடுத்திருந்தான்.

''நான் எப்படி உங்களிடம் வேலையை ஒப் படைத்து விட்டுப் போகமுடியும்? அனுபவமுள்ள ஒருவன் உஷாராக மேற்பார்வை செய்யாவிட் டால், காரியம் கெட்டுவிடும். பார்க்கப்போனால், என் வாழ்நாளில் எத்தனையோ ஸ்லீப்பர் கட் டைகளை அடித்திருக்கிறேன்! எத்தனை என்று நினைவுபடுத்திக்கொள்ளக்கூட முடியாது!'' என்று அவன் முகமலர்ச்சியோடு கூறினான். இவ்வாறு கூறித் தான் நகருக்குப் போகும் பிரச்சினை வந்தால், அதைத் தட்டிக்கழித்து வந்தான். ஆகக்

கூடி, அவன் தொடர்ந்து வேலை செய்து வந்தான்.

லாகூத்தின் தனது வேலையை நன்கறிந்தவனென்பதைப் பத்தோஷ்கின் உணர்ந்திருந்தான். எனவே அவன் இருந்த பகுதியைக் கண்காணிப்பதற்கு அவன் வருவதே அபூர்வமாயிருந்தது. அக்கீம், தோக்கரெவ், பியோதர் ஆகியோர் அங்கு வந்தபொழுது, பன்கிராத்தவ் ஒரு ஸ்லீப்பர் அமைப்பதற்குப் பள்ளம் வெட்டிக்கொண்டிருந்தான். பாடுபட்டு வேலை செய்ததால், அவனது முகம் சிவந்திருந்தது; உடலெல்லாம் வேர்த்துக்கொட்டியது.

அவனை அக்கீமால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பன்கிராத்தவின் எடை ரொம்பக் குறைந்திருந்தது; அவனது அகலமான தாடையும், நன்றாகக் கழுவப்படாத முகமும் கறுத்து மெலிந்து போயிருந்தன.

வெப்பமாகவும் வேர்வையாகவும் இருந்த கரத்தால் அக்கீம் கரத்தைக் குலுக்கிக்கொண்டே, ''நன்று, நன்று, பெருந்தலைவர்கள் வந்திருக்கிறார்கள்'' என்று அவன் கூறினான்.

மண்வெட்டிகளின் சப்தம் நின்றது. தன்னைச் சுற்றியுள்ள தோழர்களது வெளுத்துக் களைத்த முகங்களை அக்கீம் ஆராய்ந்தான். அவர்களுடைய கோட்டுகளும் சட்டைகளும் பனிமீது தாறுமாறாகக் கிடந்தன.

லாகூத்தினுடன் தோக்கரெவ் சிறிது நேரம் உரையாடினான். அதன் பின் அவன் அக்கீம்,

பியோதர் ஆகியோருடன், மேட்டை வெட்டும் இடத்துக்குச் சென்றான். பன்கிராத்தவையும் உடன் வரச் சொன்னான். துறைமுகத் தொழிலாளியான அவன் பியோதருடன் நடந்தான்.

''பன்கிராத்தவ், மோத்தவீலோவ்க்காவில் நடந்ததென்ன? செக்கா ஊழியனின் ஆயுதத்தைப் பறித்துக் கொண்டீர்களே, அது அத்துமீறிய செயல் அல்லவா?'' என்று பியோதர் அதிகம் பேசாத துறைமுகத் தொழிலாளியைக் கண்டிப்பாகவினவினான்.

பன்கிராத்தவ் பேதையைப் போல இளித்தான். அதன் பின் அவன் கூறினான்:

''பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் தான் அதெல்லாம் நடந்தது. அவனது ஆயுதத்தைப் பறிமுதல் செய்யும்படி அவனே கூறினான். அவன் நல்லவன். நாங்கள் எங்களுடைய நிலைமையை விளக்கினோம். அவன் கூறினான்: 'உங்களது கஷ்டங்கள் எனக்குப் புரிகிறது. ஆனால் அந்த ஜன்னல்களையும் கதவுகளையும் நீங்கள் எடுத்துச் செல்வதை நான் அனுமதிக்க முடியாது. ரயில்வே சொத்துக்கள் திருடு போவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று எங்களுக்கு த்ஸெர்ஷீன்ஸ்கியின்* உத்திரவு. ஸ்டேஷன் மாஸ்டர் வேறு

* த்ஸெர்ஷீன்ஸ்கிய், பேலிக்ஸ் எத்மூந்தவிச் (1877-1926) — கம்யூனிஸ்ட் கட்சியில் தலைசிறந்த பிரமுகர்; சோவியத் அரசாங்கத்தின் முக்கியமான தலைவர். 1927, டிசம்பர் மாதம், 'செக்கா' (புரட்சி எதிர்ப்பு, மறைமுக நாசவேலை, கள்ள

என் மீது குறிவைத்திருக்கிறுன். அந்த வேசி மகனின் கையாடலுக்கு நான் குறுக்கே நிற்பதால் அவனுக்குக் கோபம். நான் உங்களுடன் ஒத்துழைத்தால், அவன் நிச்சயம் எனக்கு எதிராகத் தகவல் அனுப்புவான். என்னைப் புரட்சிகரமான ராணுவ நீதிமன்றத்தில் விசாரிப்பார்கள். ஆனுல் நீங்கள் என் துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டு போய்விடலாம். அதுவே சிறந்த வழி. ஸ்டேஷன் மாஸ்டர் மேலிடத்துக்குத் தகவல் அனுப்பவில்லையானுல், விவகாரமே இல்லை!' அவன் கூறிய படியே நாங்கள் செய்தோம். பார்க்கப்போனுல், அந்தக் கதவுகளையும் ஜன்னல்களையும் நாங்கள் எங்களுடைய சொந்த உபயோகத்துக்காகக் கொண்டு வரவில்லையே?''

பியோதர் கண்களில் சிரிப்புக்கான அறிகுறிகள் தோன்றுவதைக் கண்ட பன்கிராத்தவ், ''எங்களைத் தண்டிக்க விரும்பினுல் தண்டியுங்கள். ஆனுல் அந்தச் செக்கா ஊழியனிடம் கடுமை காட்டாதீர்கள்'' என்று வேண்டிக்கொண்டான்.

''அந்த விவகாரம் முடிந்துவிட்டது. எதிர்காலத்தில் இத்தகைய காரியங்கள் நடக்காமல்

வியாபாரம் ஆகியவற்றை ஒடுக்குவதற்கான அகில ருஷ்யாவின் கமிஷன்) அமைக்கப்பட்ட போது, அதன் தலைவராகவும், 1922ம் ஆண்டில் அக்கமிஷன் 'கே. பே. ஊ.' ஆக (அரசாங்க அரசியல் கமிஷன்) புனரமைக்கப் பட்ட போது, அதன் தலைவராகவும் பணிபுரிந்தார்.

பார்த்துக்கொள். இவையெல்லாம் கட்டுப்பாட்டை அழித்துவிடும். அலுவலகச் சடங்குகளை ஸ்தாபன ரீதியாக முறியடிக்க வேண்டும். இப்பொழுது, அதற்குத் தேவையான பலம் நம்மிடம் உள்ளது. சரி, வேறு முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேசுவோம்'' என்று கூறிவிட்டு, பியோதர் கொள்ளைக் கூட்டத்தின் திடீர் படையெடுப்பைப் பற்றி விவரமாகக் கேட்டறிந்தான்.

போயர்க்கா ஸ்டேஷனிலிருந்து நாலரை கிலோமீட்டர்கள் தூரத்தில், ஒரு கோஷ்டி இருப்புப் பாதை போடும் வழியில் இருந்த மேட்டை வெகு தீவிரமாக வெட்டிக் கொண்டிருந்தது. சற்று தள்ளி அக்கோஷ்டியினரைச் சுற்றி எழுவர் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் கோல்யாவாவின் குதிரை வீரன் துப்பாக்கியை கையில் பிடித்துக் கொண்டிருந்தான். மற்ற அறுவரும் பாவெல், பன்கிராத்தவ், காமுத்தோவ், துபாவா இவர்களது கைத் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டிருந்தனர். இதுதான் இக்குழுவின் படைபலம்.

மேட்டின் சரிவில் உட்கார்ந்திருந்த பத்தோஷ்கின், தனது நோட் புத்தகத்தில் ஏதோ புள்ளி விவரங்களைக் குறித்துக் கொண்டிருந்தான். இங்கு இருந்த ஒரே ஒரு எஞ்சினீயர் பத்தோஷ்கின்தான். வக்குலேன்கோ என்ற டெக்னீஷியன், கொள்ளைக்காரன் கையால் கொல்லப்படுவதைவிட, ஓடிப்போன குற்றத்துக்குத் தண்டனை பெறுவதே

மேல் என்று எண்ணி, அன்று காலையில் ஓடிவிட்டான்.

''பூமி மிகவும் இறுகியிருக்கிறது. இந்த மேட்டை வெட்டி எடுப்பதற்கு இரண்டு வாரங்களாகும்'' என்று பத்தோஷ்கின், தன் அருகில் சோர்ந்திருந்த காமுத்தோவிடம் மெல்லிய குரலில் கூறினான்.

''இந்தப் பாதையை அமைப்பதற்கு மொத்தமாக இருபத்தைந்து நாட்களே அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்த மேட்டை வெட்டவே இரண்டு வாரம் என்று கணக்குப் போடுகிறீர்களே?'' என்று காமுத்தோவ் தன் மீசையின் நுனியை மென்றுகொண்டே உறுமினான்.

''இந்த காலத்தவணை நடை முறைக்கு ஒவ்வாது என எண்ணுகிறேன். இத்தகைய சூழ்நிலைகளில் நான் எந்தப் பாதையையும் போட்டதில்லை என்பது மெய். இத்தகைய ஊழியருடன் நான் வேலைசெய்ததில்லை என்பது உண்மை. இப்பொழுதும் என் கணக்குத் தவருகப் போகலாம். உண்மையில், முன்பே, இரு தடவைகள் என் கணிப்புத் தவருகிவிட்டது.''

அந்தச் சமயத்தில், பியோதரும் அக்கீமும் பன்கிராத்தவும் மேட்டின் சரிவை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

''கீழே வருவது யார் என்று பார்த்தாயா?'' என்று ரயில்வே வார்க்ஷாப்பில் வேலைசெய்த இளம் மெக்கானிக்கான திராபீமொவ் கத்தினான். கிழிந்துபோன பழைய கம்பளிச் சட்டையை

அணிந்திருந்த அவன் பாவெலை மெல்லக் கையால் இடித்துப் புதிய ஆட்களைக் காட்டினான். அடுத்த விநாடியில், பாவெல் மண்வெட்டியும் கையுமாகக் குன்றின் சரிவில் ஓடிக்கொண்டிருந்தான். அவனது கண்கள் நல்வரவு கூறும்வகையில் ஒளிவீசின. பியோதர் பாவெலது கரத்தை மற்றவர்களதை விட வெகு நேரம் கூடுதலாகக் குலுக்கினான்.

''பாவெல்! உன்னை இந்தக் கோலத்தில் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையே?'' என்றான் ஷுஹ்ராய்.

பன்கிராத்தவ் வறட்சியாகச் சிரித்தான்.

''என்ன கோலம்! காற்று உள்ளே செல்வதற்கு வேண்டிய ஓட்டைகள் உடையில் இருக்கின்றன. தவிரவும், ஓடிப்போனவர்கள் அவனது மேல்கோட்டைக் களவாடிக்கொண்டு போய்விட்டார்கள். ஒக்குனேவ் அந்தச் சட்டையை அவனுக்குக் கொடுத்தான். அவர்கள் ஒரு கம்யூன் வைத்திருக்கிறார்களென்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? ஆனால் பாவெலுக்கு ஒரு குறைவும் இல்லை; அவனது உடலில் சூடான ரத்தம் ஓடுகிறது. மேலும் ஓரிரண்டு வாரத்துக்கு அவன் கான்கிரீட் தளத்தில் படுத்துத்தான் கதகதப்பாக்கிக்கொள்ள வேண்டும்! தளத்தின்மீது பரப்பியுள்ள வைக்கோல் இருந்தும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான். இந்த ஓரிரண்டு வாரத்துக்குப்பின், ஊசி இலை மரத்தால் செய்த சவப்பெட்டியில் படுக்க அவன் தயாராகி யிருப்பான்!'' என்று

பன்கிராத்தவ் பாவெலின் துன்பத்தை நகைச் சுவை ததும்ப விவரித்தான்.

கரிய புருவத்தையும் நிமிர்ந்த மூக்கையும் உடைய ஒக்குனேவ், விஷமம் விளையாடும் தன் கண்களை ஒடுக்கிக் கொண்டே, பன்கிராத்தவ் கூற்றுக்கு ஆட்சேபணை தெரிவித்தான்:

''கவலைப்படாதீர்கள். நாங்கள் பாவெலைப் பார்த்துக் கொள்கிறோம். சமையலறையில் ஓதார்க்காவுக்கு உதவும் வேலையை அவன் செய்ய வேண்டுமென்று நாங்கள் வோட் எடுத்து முடிவு செய்கிறோம்! அவன் மடையனாயில்லாவிட்டால், உபரியாகச் சாப்பிட்டு உடலை வளர்க்கலாம்; கதகதப்புக்கு, அடுப்பின் அருகில் அமர்ந்து கொள்ளலாம்; அல்லது ஓதார்க்காவையே அணைத்துக் கொள்ளலாம்.''

இதைக் கேட்டு, அனைவரும் கொல்லென்று சிரித்தனர். அன்று அப்பொழுதுதான் அவர்கள் முதன்முதலாகச் சிரித்தனர்.

மேட்டைப் பார்வையிட்டபின், பியோதர், தோக்கரெவ், பத்தோஷ்கின் ஆகிய மூவரும் ஒரு ஸ்லெட்ஜ் வண்டியில் ஏறி, மரம் வெட்டும் இடத்துக்குச் சென்றனர். அவர்கள் திரும்பி வந்தபொழுது விடாப்பிடியுடனும் வைராக்கியத்துடனும் வெட்டிக் கொண்டிருந்த ஊழியர்களைப் பார்த்தனர். பியோதர் மண்வெட்டிகளின் வேகமான சுழற்சியைக் கவனித்தான்; வேலையின் சிரமத்தால் வளைந்திருந்த உழைப்பாளிகளின் முதுகுகளை உற்று நோக்கினான். அக்கீம் பக்கம் திரும்பி,

''இங்குக் கூட்டங்கள் தேவையில்லை! கிளர்ச்சிக்கும் பிரசாரத்துக்கும் அவசியம் இல்லை!'' என்று மெல்லிய குரலில் கூறினன். தோக்கரெவை நோக்கி, ''தோக்கரெவ், இந்த இளைஞர்கள் பத்தரை மாற்றுத் தங்கமென்று நீங்கள் கூறியது முற்றிலும் உண்மைதான். இங்குதான் எஃகு பதம் பெறுகிறது!'' என்று அதே தாழ்ந்த சுருதியில் கூறினன்.

பியோதர் அந்தத் தொண்டர்களை வியப்புடன் நோக்கினன். அவனுக்கு ஒரு பெருமித உணர்ச்சியே ஏற்பட்டது. அவர்களில் சிலர், சில நாட்களுக்குமுன் தான், எதிர்ப்புரட்சிக் கலகம் நடக்கவிருந்த நாளுக்கு முதல் நாள் இரவு, உருக்குப் பாய்னெட்டுகளுடன் நின்றனர். இப்பொழுது, ஒரே லட்சியத்தால் உந்தப்பட்டு அவர்கள் இங்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். குளிரைப் போக்க விறகும், பசியைப் போக்க உணவும், மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக, இருப்புப் பாதையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த மேட்டை வெட்டி எடுப்பதற்குக் குறைந்தபட்சமாக இரண்டு வாரம் தேவைப்படு மென்பதை, பத்தோஷ்கின் பியோதரிடம் இங்கிதமாகவும் உறுதியாகவும் எடுத்துரைத்தான். ஆனல் அவனுடைய வாதங்களில் பியோதர் சிந்தனை செலுத்தியதாகத் தோன்றவில்லை. பியோதர் வேறு ஒரு விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தானென்பது தெளிவாகத் தெரிந்தது.

''மேட்டை வெட்டும் வேலையை நிறுத்தி விடுங்கள். மேட்டுக்கு அப்பால் பாதை அமைக்கும் பணியில் ஈடுபடுங்கள். அந்தக் குன்றை நீக்குவ தற்கு வேறு முறையைக் கடைப்பிடிப்போம்'' என்று பியோதர் கூறினான்.

ஸ்டேஷனுக்குச் சென்றபின், பியோதர் நீண்ட நேரம் டெலிபோனில் பேசிக்கொண்டிருந் தான். வெளியே, கதவருகில் காவல் காத்து நின்ற கோல்யாவா, பியோதர் கரகரப்பான கனத்த குரலில் பின்வருமாறு பேசுவதைக் கேட்டான்.

''ராணுவப் பிரதேசக் காரியாலயத்தின் தலைமை அதிகாரிக்குப் போன் செய். புஸிரேவ்ஸ்க் கியின் பட்டாளத்தை உடனடியாக நிர்மாண வேலை நடக்கும் இடத்துக்கு மாற்றவேண்டு மென்று நான் கூறியதாகச் சொல். கொள்ளைக் கூட்டத்தினரை இந்தப் பிரதேசத்திலிருந்து விரட்டியடிப்பதில் தாமதம் ஏற்படக் கூடாது. குன்றுகளை அழிக்கும் வேலையைச் செய்யக் கூடிய ஆட்களை ஒரு கவச ரயிலில் அனுப்பு. மிச்ச வேலை களை நான் பார்த்துக்கொள்கிறேன். நான் திரும்பு வதற்குத் தாமதமாகும். நள்ளிரவு நேரத்தில் ஸ்டேஷனில் காருடன் காத்திருக்க வேண்டுமென்று லீத்கேயிடம் கூறு.''

பாரக்கில் அக்கீம் சுருக்கமாகப் பேசியபின், பியோதர் பேசினான். ஒருமணி நேரம் தோழமை நெறியில் விவாதம் நடந்தது. ஜனவரி மாதம் முதல் தேதிக்குள் வேலை முடிந்துவிட வேண்டு

மென்றும், எக்காரணத்தைக் கொண்டும் அந்தத் தேதியைத் தள்ளிப் போட முடியாதென்றும் பியோதர் அவர்களிடம் கூறினன்.

அவன் கூறினன்:

''இனி, ராணுவ அடிப்படையில் வேலே முறையை வகுத்துக்கொள்வோம். கட்சி அங்கத்தினர்களைக் கொண்ட விசேஷப் படைக்குத் தோழர் துபாவா தலைவராக இருப்பார். ஆறு கோஷ்டிகளாகப் பிரிந்து வேலையைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு கோஷ்டிக்கும் திட்டமான வேலே பிரித்துக் கொடுக்கப்படும். இப்பொழுது மிஞ்சியிருக்கும் வேலேயை ஆறு சமபங்குகளாகப் பிரித்து, ஒவ்வொரு கோஷ்டிக்கும் ஒரு பங்கு ஒதுக்கப்படும். ஜனவரி முதல் தேதிக்குள் வேலே யெல்லாம் பூர்த்தியாக வேண்டும். வேலேயை முன்னல் முடிக்கும் கோஷ்டிகள் நகருக்குத் திரும்பிவிடலாம். முதலில் வேலேயை முடிக்கும் கோஷ்டியில் சிறந்த தொண்டனுக்குச் செங்கொடி விருது கொடுக்க வேண்டுமென்று மாகாண நிர் வாகக் குழு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண் டிருக்கிறது.''

ஆறு கோஷ்டிகளுக்கும் தலேவர்கள் நியமிக் கப்பட்டனர். முதல் கோஷ்டிக்குத் தோழர் பன்கிராத்தவ், இரண்டாவது கோஷ்டிக்குத் தோழர் துபாவா; மூன்ருவது கோஷ்டிக்குத் தோழர் காமுத்தோவ்; நான்காவது கோஷ்டிக்குத் தோழர் லாகூத்தின்; ஐந்தாவதுக்குத் தோழர் கர்ச்சாகின்; ஆருவதுக்குத் தோழர் ஒக்குனேவ்.

''நிர்மாண வேலைக்கு முதல்வராகவும் அரசியல் பொறுப்பாளராகவும் நிர்வாகத் தலைவராகவும், முன்போல, தோக்கரெவ் பணியாற்றுவார்'' என்று பியோதர் தன் பேச்சை முடித்தான்.

ஏராளமான பறவைகள் ஏககாலத்தில் திடீரென்று சிறகடித்துப் பறப்பதைப் போல, எல்லோரும் கைகொட்டி ஒலி செய்தனர்; கண்டிப்பான முகங்களில் புன்சிரிப்புத் தாண்டவமாடியது. நட்புடன் கூடிய நகைப்பு நிறைந்த அந்த கண்டிப்பான மனிதனின் கடைசி வாக்கியம் வெகு நேரமாகக் கவனத்துடன் கேட்டு வந்த அக்கூட்டத்தினரை இடியோசைச் சிரிப்பில் ஆழ்த்தியது.

பியோதரையும் அக்கீமையும் வழியனுப்புவதற்காகச் சுமார் இருபது பேர் டிராலிக்குச் சென்றனர்.

பியோதர் பாவெலுடன் கைகுலுக்கும்பொழுது, அவனது வெண்பனி படர்ந்திருந்த பூட்ஸ் மேலுறையை நோக்கினுன்.

''உனக்கு ஒரு ஜதை பூட்ஸ் அனுப்புகிறேன். உன் பாதங்கள் உறையாமல் இருக்கின்றனவா?'' என்முன் பியோதர்.

''அவை ஓரளவுக்கு வீங்கத் தொடங்கியிருக்கின்றன'' என்று விடை தந்த பாவெல், நீண்டகாலத்துக்கு முன்பு பியோதரிடம் கேட்ட ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொண்டான். பியோதரின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, ''என் துப்பாக்கிக்குச் சில தோட்டாக்கள் தர

மாட்டாயா? என்னிடம் உருப்படியாக மூன்று தோட்டாக்கள்தான் உள்ளன'' என்றான்.

அந்தக் கோரிக்கைக்கு இணங்க முடியாமைக்கு வருந்துவதைப் புலப்படுத்தும் வகையில் தலையை ஆட்டிய பியோதர், பாவெலின் ஏமாற்றத்தை உணர்ந்துகொண்டான்; உடனே தன்னுடைய 'மௌஸர்' துப்பாக்கியைத் தோல் வாருடன் எடுத்தான்.

''இந்தா, உனக்கு ஒரு பரிசு'' என்று கூறி அதைக் கொடுத்தான்.

நீண்ட காலமாகத் தன் மனம் நாடிய பொருள் தனக்குக் கிடைப்பதைக் கண்ட பாவெலுக்குத் தனது கண்களையே நம்ப முடியவில்லை. ஆனால் பியோதர் தோல்வாரை அவன் தோள்மீது போட்டுவிட்டுக் கூறினான்:

''எடுத்துக்கொள். நீண்ட காலமாக நீ அதன்மீது குறிவைத்திருப்பதை நான் அறிவேன். ஆனால் இந்தத் துப்பாக்கியால் நம் ஆட்களில் எவரையும் சுட்டுவிடாதே, ஜாக்கிரதை. இந்தா, அதற்கு வேண்டிய குண்டுகள்.''

மற்றவர்கள் தன்னைப் பொறுமை உணர்ச்சியுடன் பார்ப்பதைப் பாவெல் உணர்ந்தான்.

''ஹே! பாவெல்! நீ அந்தத் துப்பாக்கியைக் கொடுத்தால், உனக்கு ஒரு ஜதை பூட்ஸும் ஒரு ஆட்டுத்தோல் மேற்கோட்டும் தருவேன்'' என்று ஒருவன் கத்தினான்.

பன்கிராத்தவ் பாவெலின் முதுகில் மெல்லக் குத்தினான்.

''வா, வா. இந்தத் துப்பாக்கிக்கு ஒரு ஜதை நல்ல பூட்ஸ் தருகிறேன். எப்படியிருந்தாலும், நீ அந்தப் பூட்ஸ் மேலுறையே அணிந்திருந்தால், கிறிஸ்துமஸுக்கு முன்னால் செத்துவிடுவாய்'' என்று அவன் கூறினான்.

பியோதர், டிராலியின் படியில் ஒரு பாதத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு, தொடைமீது காகிதத்தை வைத்துத் துப்பாக்கியை வைத்திருப்பதற்கான அனுமதிச் சீட்டு ஒன்று எழுதினான்.

மறுநாள் அதிகாலை; சுத்தமான குளிர் காற்று அடித்துக்கொண்டிருந்தது; அச்சமயம் ஸ்டேஷனில் ஒரு கவச ரயில் வந்து நின்றது. அன்னப் பட்சியின் பூஞ்சிறகைப்போல் வெள்ளை வெளேரென்று இருந்த நீராவி, எஞ்சினிலிருந்து கிளம்பிக் காற்றில் கலந்தது. அந்த டிரெயினின் உருக்குப் பெட்டிகளிலிருந்து தோல் ஆடை உடுத்தியவர்கள் வெளி வந்தனர். சிலமணி நேரத்துக்குப் பிறகு, டிரெயினில் வந்த ஆட்களில் மூவர், குன்றின் அடிவாரத்தில் இரண்டு பெரிய கரும் பொருட்களை வைத்தனர். அவை பூசனிக்காய் மாதிரியிருந்தன. அவற்றில் நீண்ட திரிகள் இணைக்கப்பட்டிருந்தன. அந்த ஆட்கள் எச்சரிக்கை செய்யும் முறையில் ஆகாயத்தை நோக்கிச் சில தடவைகள் சுட்டார்கள். அதைக் கேட்ட தொண்டர்கள் அனைவரும் நாலுபுறமும் சிதறிவிட்டார்கள். திரிகளின் நுனியைப் பற்றவைத்தனர். அது

ஒரு சிறிய சுவாலையாகப் பாஸ்வரக் காந்தியுடன் எரிந்தது.

சிறிது நேரம் அனைவரும் மூச்சுவிடாமல் நின்றனர். ஓரிரு விநாடி பேச்சு மூச்சு இல்லை. அதன் பின், பூமி நடுநடுங்கியது; ஒரு பயங்கரமான சக்தி குன்றைப் பிளந்து எறிந்தது; பாளம் பாளமாக மண்கட்டிகள் மேல்நோக்கிப் பறந்தன. இரண்டாவது வெடி முதலாவதைவிடச் சக்திமிக்கதாக விருந்தது. அதன் இடியோசை சுற்றியுள்ள காடு முழுவதிலும் எதிரொலித்தது; அந்தக் காட்டில் ஒலிக்குழப்பம் உண்டாயிற்று.

புகையும் தூசியும் மறைந்தபின், குன்று இருந்த இடத்தைப் பார்த்தால், ஒரு ஆழமான பள்ளமே தென்பட்டது. சுற்றிப் பல மீட்டர் தூரத்துக்கு, வெண்மையான பனியின் மீது மண்ணும் கல்லும் இரைந்து கிடப்பதைப் பார்க்க முடிந்தது.

வெடிப்பின் மூலம் செயற்கையாக உண்டாக்கப்பட்ட பள்ளத்தில் வேலைசெய்வதற்கு, ஆட்கள் மண்வெட்டிகளுடனும் கடப்பாறைகளுடனும் பிரவேசித்தனர்.

பியோதர் திரும்பிச் சென்றபின், வேலையை முதலில் முடிக்கும் கௌரவத்துக்காக ஆறு கோஷ்டிகளும் உறுதியுடன் போட்டியிட்டன.

பொழுது புலர்வதற்கு ரொம்ப நேரம் முன்னலேயே பாவெல் சப்தம் செய்யாமல் எழுந்தான். பிறரை எழுப்பி விடாத வகையில், குளிரால்

மரத்துப்போன கால்களால் சிரமப்பட்டுக் கொண்டு, சமையலறைக்கு நடந்து சென்ருன். அங்கு அவன் தேநீருக்காக நீரைக் கொதிக்க வைத்துவிட்டு, தன் கோஷ்டியினரை எழுப்பு வதற்காக அறைக்குத் திரும்பிஞன்.

சூரியன் உதித்து, வெயில் பரவிப் படர்ந்த பிறகே, மற்றவர்கள் விழித்தெழுந்தார்கள்.

அன்று காலே, பன்கிராத்தவ் பாரக்கில் கூட்டத்திடையே வழி செய்துகொண்டு, துபாவா கோஷ்டி சிற்றுண்டி அருந்திய இடத்துக்குச் சென் ருன். அவன் துபாவாவிடம் உஷ்ணத்துடன் பேசி ஞன்:

"துபாவா, கேட்டாயா சேதியை? பாவெல், பொழுது புலர்வதற்கு முன் தன் கோஷ்டியினரை இட்டுச் சென்று விட்டான். இதற்குள் அவர்கள் எவ்வளவு வேலே செய்திருப்பார்கள்! இருபத் தைந்தாம் தேதிக்கு முன்ஞல் காரியத்தை முடிக்க வேண்டுமென்று அவன் தன் கோஷ்டியினரான ரயில்வே வார்க்ஷாப் இளேஞர்களேத் தயார் செய் திருப்பதாக அறிகிறேன். நம்மனைவரையும் தோற் கடிக்க விரும்புகிருன். அதெல்லாம் நடக்காது என்று நான் அறைகூவுகிறேன்!"

துபாவா கசப்பாக முறுவலித்தான். ஆற் றுத்துறைமுகக் கம்ஸமோல் காரியதரிசியான பன்கிராத்தவ் ரயில்வே ஷாப் தொண்டர்களின் வேலேயைக் கண்டு உணர்ச்சி வசப்படுவதைத் துபாவா புரிந்து கொள்ள முடிந்தது. உண் மையில், பாவெல் துபாவாவின் நண்பன்தான்.

எனினும் அவன் துபாவாவையும் முந்திக்கொண்டு விட்டான். பாவெல் எவரிடமும் ஒரு வார்த்தை பேசவில்லை என்பது உண்மை; ஆனால் தன் செயல் மூலம், படை முழுமைக்குமே ஒரு சவால் விட்டு விட்டான்.

''சிநேகிதரோ, அல்லாதவரோ, சிறந்தவன் தான் ஜயிக்கிறான்'' என்றான் பன்கிராத்தவ்.

நண்பகல் நேரம், பாவெலின் கோஷ்டி கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தது. அந்தச் சமயம், ஒரு எதிர்பாராத தடை ஏற்பட்டது. துப்பாக்கிகளைக் காவல் காத்து நின்ற பாராக் காரன், மரங்களிடையே குதிரை வீரர் கோஷ்டி ஒன்று வருவதைக் கண்டான். ஒரு எச்சரிக்கை வேட்டை வெடித்தான்.

''கொள்ளைக்காரர்கள் வருகிறார்கள்! இளை. ஞர்களே! ஆயுதமேந்துங்கள்'' என்று பாவெல் கத்தினான். அவன் தனது மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டுத் தன் 'மௌஸர்' துப்பாக்கி தொங்கிக் கொண்டிருந்த மரத்தை நோக்கி ஓடினான்.

மற்றவர்களும் தத்தம் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டனர். எல்லோரும் பாதை ஓரத்தில் வெண்பனிமீது குப்புற விழுந்தனர். குதிரை வீரர் களின் முன் வரிசையினர் தமது குல்லாய்களை ஆட்டினார்கள்.

''உஷார், தோழர்களே! சுடாதீர்கள்!'' என்று அவர்களில் ஒருவன் கத்தினான்.

ஐம்பது குதிரை வீரர்கள் சாலை மீது வந்தனர். அவர்கள் பிரகாசமான சிவப்பு நட்சத்திரங்களுடன் கூடிய குல்லாய்களை அணிந்திருந்தார்கள்.

அந்த வீரர்கள் புஸிரேவ்ஸ்க்கியின் படையைச் சேர்ந்தவர்கள். தலைவனின் குதிரையைப் பாவெல் கவனித்தான். அந்தப் பெண் குதிரை அழகாயிருந்தது; சாம்பல் நிற மேனி; நெற்றியின் நடுவில் ஒரு பாகம் வெள்ளை. அதன் ஒரு காதின் நுனி அறுந்திருந்தது. அந்தக் குதிரை, நிம்மதியில்லாமல் துள்ளிக்கொண்டிருந்தது. பாவெல் முன்னேறிப் பாய்ந்து அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டவுடன், அது உணர்ச்சி வசப்பட்டுப் பாய்ந்தது.

''லிஸ்காவா? என் செல்லக் கட்டியே! உன்னை மீண்டும் சந்திப்பேன் என்று நான் எண்ணவே இல்லை. ஒற்றைக் காது அழகியே! இது வரை குண்டுக்குத் தப்பி வாழ்கிறுயா?'' என்று கூறிக்கொண்டே, பாவெல் அதன் மெல்லிய கழுத்தை அன்பாகக் கட்டித் தழுவினுன். துடித்துக் கொண்டிருந்த அதன் நாசித் துவாரங்களைத் தட்டிக் கொடுத்தான்.

அந்தத் தலைவன் ஒரு விஞடி பாவெலை வெறித்துப் பார்த்தான்; பிறகு, ''கர்ச்சாகின் அல்லவா? நீ உன் குதிரையை அடையாளம் கண்டு கொண்டாய்; உன் பழைய நண்பன் ஸெரெதாவைப் பார்க்கவில்லையா?'' என்று வியப்புற்றவனுக இரைந்து பேசினுன்.

இதே காலத்தில், நகரத்திலும் இருப்புப் பாதை அமைப்பு வேலைக்கு உதவியாகச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அவற்றின் பலனை வேலை நடந்த இடத்திலேயே பார்க்க முடிந்தது. கம்ஸமோல் வட்டாரக் கமிட்டியிலிருந்த ஆண் பிள்ளைகள் அனைவரையும் ஷார்க்கீய் போயர்க்காவுக்கு அனுப்பி விட்டான். பெண்கள் மட்டுமே ஸாலோமென்கா கம்ஸமோல் ஸ்தாபனத்தில் வேலை செய்தனர். ரயில்வே தொழிற்பள்ளியிலிருந்து இன்னொரு கோஷ்டி மாணவர்களை அனுப்புவதற்கும் ஷார்க்கிய் ஏற்பாடு செய்தான்.

அவன் தனது வேலைகளைப்பற்றி அக்கீமிடம் தெரிவித்தபொழுது, ''என்னிடம் பெண் ஊழியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். எனக்குப் பதிலாக தால்யா லாகூத்தினவை நியமித்து விட்டுக் கதவுக்கு வெளியில் 'மாதர் இலாகா' என்று எழுதிய அட்டையைத் தொங்க விட்டுவிட்டு, நானும் போயர்க்காவுக்குப் போகலாமென்று எண்ணுகிறேன்'' என்று அவன் தமாஷாகக் குறிப்பிட்டான். ''நான் இங்கு இருப்பது விபரீதமாகத் தோன்றுகிறது. இந்தப் பெண்கள் மத்தியில் நான் ஒருவன்தான் ஆடவன். அவர்கள் என்னைக் கேவலமாக நோக்குவதை நீ பார்க்க வேண்டும். 'ஷார்க்கீய் தந்திரசாலிதான்! எல்லோரையும் அனுப்பிவிட்டு, அவன்மட்டும் இங்கு உட்கார்ந்திருக்கிறான்!' என்று அவர்கள் பேசிக்கொள்கிறார்களென்பது நிச்சயம். இதையும் விட மோசமாகப் பேசினலும் பேசலாம். நான் போவதற்கு

அனுமதி கொடு'' என்று அவன் அக்கீமிடம் வாதித்தான்.

ஆனால் அக்கிம் சிரித்து விட்டு அவனது வேண்டுகோளை மறுத்தான்.

போயர்க்காவுக்குப் புதிய தொண்டர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களில், ரயில்வே பள்ளி மாணவர்கள் மட்டும் அறுபது பேர்.

புதிதாக வந்தவர்கள் தங்குவதற்காக நான்கு பிரயாணிப் பெட்டிகளை அனுப்பும்படி, பியோதர் ரயில்வே நிர்வாகத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டான். அவர்களும் அப்படியே செய்தனர்.

துபாவாவின் கோஷ்டி வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, பூஷ்சா-வாதீத்ஸாவுக்கு அனுப்பப்பட்டது. எஞ்சின்களையும் குறும்பாதை வாகன் வண்டிகளையும் கொண்டுவரவே அனுப்பப்பட்டது. அந்த வேலை, அந்த கோஷ்டியினர் தமது பங்குக்குப் பாதை அமைக்கும் வேலையின் பகுதியாகக் கணிக்கப்படுமென்று தெளிவுபடுத்தப்பட்டது.

கிளாவிச்சேக்கை நகரத்திலிருந்து வரவழைத்துப் புதிதாக அமைத்துள்ள கோஷ்டிக்குப் பொறுப்பாக்கும்படி, துபாவா தோக்கரெவிடம் யோசனை கூறினான். அவனும் அம்மாதிரியே செய்தான். ஸாலோமென்காவிலிருந்து வந்த புதியவர்கள் மூலம் ஆன்னு அனுப்பிய கடிதமே, துபாவாவின் வேண்டுகோளுக்குக் காரணம் என்பதை

தோக்கரெவ் அறிந்திருக்கவில்லை. அந்தக் கடிதத்தில் ஆன்ரு எழுதியதாவது:

''த்மீத்ரிய்! கிளாவிச்சேக்கும் நானும் உங்களுக்காகப் பல புத்தகங்களைச் சேர்த்து வைத்திருக்கிருேம். உனக்கும் போயர்க்காவிலுள்ள இதர முன்னணித் தொண்டர்களுக்கும் நாங்கள் எங்களுடைய அன்பு நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிருேம். நீங்கள் அற்புதப் பிறவிகள். நீங்கள் தொடர்ந்து வேலை செய்வதற்கு வேண்டிய ஆற்றலும் திறனும் பெறுவீர்களாக! நேற்றுடன் கைவசமிருந்த விறகு முழுவதும் வினியோகமாகிவிட்டது. கிளாவிச்சேக் உனக்குத்தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிருன். அவன் மிக மிக நல்லவன். போயர்க்காவுக்குத் தேவையான ரொட்டி முழுவதையும் அவனே சுடுகிருன். அவனே மாவைச் சலிக்கிருன்; பிசைகிருன். ரொட்டி சுடும் இடத்தில் யாரையும் அவன் நம்புவதில்லை. நல்ல மாவு கிடைப்பதற்கு அவன் ஏற்பாடு செய்துவிட்டான். அவனுடைய ரொட்டி நேர்த்தியாக இருக்கிறது; எனக்குக் கிடைக்கும் ரொட்டியைவிட மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது. மாலைநேரத்தில் நண்பர்கள் அனைவரும் என் இடத்தில் கூடுகிருேம். தால்யா, அர்த்தியூகின், கிளாவிச்சேக் ஆகியோர் வருகிருர்கள்; சில சமயங்களில் ஷார்க்கியும் வருவான். தினம் கொஞ்சம் படிக்கிருேம்; ஆனுல் அதிக நேரம் பேசிக்கொண்டிருக்கிருேம். சகலத்தைப் பற்றியும் நாங்கள் சம்பாஷிக்கிருேம். முக்கியமாக, போயர்க்காவிலுள்ள

உங்களைப் பற்றி உரையாடுகிறோம். பெண்களை வேலைக்கு வரக்கூடாதென்று தடை விதித்த தற்காக, பெண்கள் தோக்கரெவிடம் ரொம்பக் கோபமாயிருக்கிறார்கள். ஆடவர்களைப் போலத் தம்மாலும் கஷ்டங்களைச் சகித்துக்கொள்ள முடியு மென்று அவர்கள் கூறுகிறார்கள். தன் தந்தையின் ஆடைகளை உடுத்திக்கொண்டு தானே போயர்க் காவுக்குப் போவதாக தால்யா கூறுகிறாள். அவர்களால் முடிந்தால் என்னை உதைத்து அனுப் பட்டும் என்று கூறுகிறாள்.

''அவள் அதே மாதிரி நடந்தால் நான் ஆச் சரியப்பட மாட்டேன். உனது கருமைக் கண் நண்பனுக்கு என் நன்மதிப்பைத் தெரிவி.

ஆன்ஞு.''

அந்த வெண்பனிப் புயல் திடீரென்று அடித் தது. சாம்பல் நிற மேகங்கள் தாழ்வாகப் பரவி, வானத்தை மூடிக்கொண்டன. ஏராளமாகப் பனி பெய்தது. இரவு வந்தபொழுது, காற்று புகைப் போக்கிகளில் ஊளையிட்டது; மரங்கள் அலறின. சுற்றிச் சுழன்ற வெண்பனி சிதள்களைக் காற்று வேட்டையாடியது. அந்தப் புயல்காற்றின் கேடு சூழும் ஒலி காட்டில் பரவி, எதிரொலிகளை உண் டாக்கியது.

இரவெல்லாம் சூறுவளி அசுர வேகத்தில் அடித்தது. அடுப்புகள் இரவெல்லாம் எரிந்த பொ ழுதிலும், தொண்டர்கள் குளிரில் நடுங்கினார்கள்.

அந்த இடிந்துபோன ஸ்டேஷன் கட்டிடத்தால் உஷ்ணத்தை வெளிவிடாமலிருக்க முடியவில்லை.

காலையில், தொண்டர்கள் பனியில் காலை இழுத்து நடந்தே, வேலை நடந்த இடத்துக்குப் போனார்கள். மரங்களின் முடிகளுக்கும் மேலே, நிர்மலமான நீல வானத்தில் கதிரவன் பிரகாசித்தான். அந்த விரிந்த வானத்தின் தெளிவுக்கு இழுக்குத் தேடும் வகையில் ஒரு சிறு மேகம் கூடத் தென்படவில்லை.

பாவெலும் அவனது கோஷ்டியினரும் தமது பகுதியில் வெண்பனியை அகற்றிக் கொண்டிருந்தனர். ஒரு மனிதன் குளிரினால் எவ்வளவு துன்பம் அடைய முடியும் என்பதை இப்பொழுதுதான் பாவெல் உணர்ந்தான். ஓக்குனேவ் கொடுத்த சட்டை நைந்துபோயிருந்தது. அது அவனுக்கு எத்தகைய பாதுகாப்பையும் அளிக்கவில்லை. அவனது பூட்ஸ் மேலுறையிலோ எப்பொழுதும் பனி நிறைந்து இருந்தது. அது அடிக்கடி காலிலிருந்து நழுவிக்கொண்டும் இருந்தது. மறு காலிலிருந்த பூட்ஸ் இரண்டாக அறுந்துவிடும் நிலையில் இருந்தது. அவனது கழுத்தில் இரண்டு பெரிய கொப்பளங்கள் வெடித்திருந்தன; குளிர்ந்த தளத்தில் படுத்து உறங்கியதன் விளை அது. மப்ளருக்குப் பதிலாக அணிவதற்காக, தோக்கரெவ் பாவெலிடம் தன் துண்டைக் கொடுத்திருந்தான்.

மெலிந்த மேனியும் வீங்கிய கண்களுமாகப் பாவெல் மரத்தாலான அகன்ற மண்வெட்டியால் வெண்பனியை தீவிரமாகக் கூட்டிக் கொண்

டிருந்தான். அப்பொழுது, ஒரு பிரயாணி ரயில் மெதுவாக வந்து ஸ்டேஷனில் நின்றது. அதன் எஞ்சின், 'செத்தேன் பிழைத்தேன்' என்ற ரீதியில், பிரம்மப் பிரயத்தனம் செய்து, ஸ்டேஷனை அடைந்து விட்டது. அதன் கரிப்பெட்டியில் ஒரு விறகுக் குச்சிகூடக் கிடையாது; அதன் தீப் பெட்டியில் எஞ்சிமிஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச வெந்தணல் எரிந்து கொண்டிருந்தது.

''விறகு கொடுத்தால் போகலாம். இல்லாவிட்டால், ரயிலைப் பக்கத்துப் பாதைக்கு மாற்றி விடுங்கள். அதற்குத் தேவையான எரிபொருள் எஞ்சினில் இருக்கிறது'' என்று டிரைவர் ஸ்டேஷன் மாஸ்டர் நோக்கி உரத்த குரலில் கூறினான்.

ரயில் பக்கத்துப் பாதைக்கு மாற்றப்பட்டது. ரயில் நின்று விட்டதின் காரணத்தை அதிருப்தி அடைந்திருந்த பிரயாணிகளிடம் கூறியபொழுது, ஒவ்வொரு பெட்டியிலும் திரள்திரளாக இருந்த பிரயாணிகள் புகார் சொல்லவும் சபிக்கவும் தொடங்கினார்கள்.

''அந்தக் கிழவரைச் சந்தித்துப் பேசுங்கள்'' என்று டிரெயின் சிப்பந்திகளிடம் ஸ்டேஷன் மாஸ்டர் கூறினான். அப்பொழுது பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்த தோக்கரெவைக் காட்டித் தான் அவன் கூறினான். மேலும், ''அவர்தான் இங்கு நடக்கும் நிர்மாண வேலைக்குத் தலைவர். அவர் ஸ்லெட்ஜ் வண்டிகளில் விறகைக் கொண்டு வந்து எஞ்சினுக்குத் தரலாம். அவர்கள் மரக்கட்டைகளை அம்மாதிரிக் கொண்டு வந்து ஸ்லீப்பர்களாகப்

பயன்படுத்துகிருர்கள்'' என்றும் அவன் சொன்ஞன்.

அந்தச் சிப்பந்திகள் கிழவனிடம் சென்று தமது தேவையைத் தெரிவித்தனர். அவன் கூறிஞன்:

''நான் விறகு தருகிறேன். ஆனல் இலவசமாகத் தரமாட்டேன். அது எங்களுக்குத் தேவையான பொருள். தற்சமயம், வெண்பனி எங்களது வேலைக்குத் தடையாக உள்ளது. உங்கள் ரயிலில் அறு நூறு அல்லது எழு நூறு பிரயாணிகள் இருக்கவேண்டும். பெண்களும் குழந்தைகளும் ரயிலில் இருக்கட்டும். மற்றவர்கள் வந்து, மாலை வரையில், வெண்பனியை நீக்குவதில் எங்களுக்கு உதவி செய்யட்டும். இந்த உதவி செய்தால், நான் மரக்கட்டைகளைத் தருவேன். இதைச் செய்ய அவர்கள் மறுத்தால், அவர்கள் புதுவருடப் பிறப்பு வரை இங்கேயே இருக்கவேண்டியதுதான்.''

''ஒரு கூட்டம் வருவதைப் பார்! பெண்களும் வருகிருர்கள்!'' என்று பின்னல் யாரோ வியந்து கூறுவதைக் கேட்ட பாவெல் திரும்பிஞன்.

தோக்கரெவ் வந்தான்.

''உனக்கு உதவி செய்ய நூறு பேர் வந்திருக்கின்றனர். அவர்களுக்கு வேலை கொடு. எவரும் சோம்பேறித்தனமாயிராமல் பார்த்துக்கொள்'' என்று அவன் கூறிஞன்.

பாவெல் புதிய ஆட்களுக்கு வேலை கொடுத்தான். அவர்களில் ஒருவன், நெட்டையாக

வளர்ந்தவன்; எடுப்பான ரயில்வே உடுப்பை அணிந்திருந்தான்; மிருதுவான ரோமத்தில் செய்த காலரையும் கதகதப்பான ஆட்டுரோமக் குல்லாயையும் தரித்திருந்தான். அவன் ஆத்திரத்துடன் மண்வெட்டியைக் கையில் சுழற்றிக்கொண்டே, தன்னுடன் வந்த இளம் பெண் பக்கம் திரும்பினான். மிருதுவான கொண்டையுடன் கூடிய ஸீல் தோல் தொப்பியை அணிந்திருந்த அந்த மங்கையிடம் அவன் கூறினான்:

''நான் இந்தப் பனியைக் கெல்லி எறியமாட்டேன். அம்மாதிரி செய்யும்படி கட்டாயப்படுத்த எவருக்கும் உரிமை இல்லை. அவர்கள் விரும்பினால், நான் ஒரு ரயில்வே எஞ்சினீயர் என்ற முறையில், இந்த வேலை முழுமைக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள முடியும். ஆனால் நீயோ நானோ பனியைக் கிண்டி எடுத்து எறியத் தேவையில்லை. அவ்வாறு செய்யச் சொல்வது விதிகளுக்கு விரோதம். அந்தக் கிழவன் சட்டத்தை மீறிச் செயல்புரிகிறான். அவனைக் குற்றம் சாட்டி, அவனுக்குத் தண்டனை பெற்றுத்தர என்னால் முடியும்.'' பிறகு, தன் அருகில் உள்ள தொழிலாளியைப் பார்த்து, ''உங்கள் போர்மென் எங்கே?'' என்று அவன் வினவினான்.

பாவெல் அவர்கள் அருகில் வந்தான்.

''ஏன் வேலை செய்யவில்லை?'' என்று அவன் வினவினான்.

அந்த எஞ்சினீயர் பாவெலை உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை, வெறுப்போடும் ஏளனத்தோடும் நோக்கினான்.

''நீங்கள் யார்?''

''நான் ஒரு தொழிலாளி'' என்றான் பாவெல்.

''உங்களிடம் எனக்கு வேலையில்லை. உங்களது போர்மென் எங்கே? போர்மெனோ, தலைவனோ, பொறுப்பானவனை என்னிடம் அனுப்புங்கள்''.

பாவெல் அவனை முறைத்து நோக்கினான்.

''உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் நீங்கள் வேலை செய்யத் தேவையில்லை. ஆனால் டிக்கட்டில் நாங்கள் கையெழுத்திடா விட்டால், நீங்கள் ரயிலில் ஏறமுடியாது. இது நிர்மாண வேலைத் தலைவனது உத்திரவு'' என்று அவன் கூறினான்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே, பக்கத்தில் இருந்த பெண் பக்கம் திரும்பிய பாவெல் வியப்பால் ஊமையானான். அவனுக்கு முன்னால் தோன்யா துமானவா நின்று கொண்டிருந்தாள்.

கிழிசலான ஆடை, மோசமான பாதரட்சை, கழுத்தைச்சுற்றி அழுக்குத்துண்டு, பல நாட்களாகக் கழுவாத முகம், இந்தக் கோலத்தில் தன் முன்னால் நின்ற 'நாதியற்றவனே', ஒருகாலத்தில் தன் தோழனாகவிருந்த பாவெல் என்பதை தோன்யாவால் நம்பமுடியவில்லை. அவனது கண்கள் மட்டும் எப்பொழுதும்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. பாவெலின் நேத்திரங்களை அவள் மறந்துவிடவில்லை. கொஞ்ச காலத்துக்குமுன், அவள் இந்தத் தரித்திரப் பிறவியைக் காதலித்தாள்

என்பதை எண்ணிப்பார்த்தால்! எல்லாம் தலை கீழாக மாறிவிட்டன!

அவளுக்குச் சமீபத்தில் திருமணம் ஆகியிருந்தது. கணவன் நகரத்தின் ரயில்வே நிர்வாகத்தில் ஒரு முக்கியமான பதவியை வகித்தான். அவனும் அவளும் நகரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அவள் தன் இளமையின் பாசத்துக்கு உரியவனை இந்த வகையில் சந்திப்பாளென்று எவர் தான் எண்ணியிருக்க முடியும்? அவள் அவனுடன் கைகுலுக்குவதற்குக்கூடத் தயங்கினாள். கணவன் வஸீலிய் என்ன நினைப்பான்? பாவெல் இவ்வளவு இழிந்த நிலைக்குப் போகவேண்டுமா? இது பயங்கரமான விஷயம் அல்லவா? அந்த இளம் ஸ்டோக்கர் இளப்பமான வேலைகளையே எப்பொழுதும் செய்து கொண்டிருப்பான் போலும்!

அவள் தயங்கி நின்றாள்; அவளது கன்னங்கள் வெப்பமுற்று இருந்தன. அதே சமயம், இந்த நாதியற்ற பயல் துடுக்குத்தனமாகத் தன் மனைவியை வெறித்துப் பார்க்கிறானென்று எண்ணிச் சினம் கொண்ட ரயில்வே எஞ்சினீயர் மண்வெட்டியைச் கீழே போட்டுவிட்டு, அவள் அருகில் சென்றான்.

''தோன்யா, நாம் போகலாம். இந்த 'வாலரோனியைப்'* பார்க்கச் சகிக்கவில்லை.''

---

* வாலரோனி — இத்தாலியச் சொல். நாடோடி என்று பொருள்படும்.

பாவெல் காரிபால்டியின் வாழ்க்கை வரலாற்றைப் படித்திருந்தான். எனவே, அவன் அந்தச் சொல்லின் பொருளை அறிந்திருந்தான்.

''நான் லாஸரோனியாகவிருக்கலாம். ஆனல் நீ ஒரு அழுகிப்போன பூர்ஷுவா!'' என்று பாவெல் கம்மிய குரலில் கூறினன். அதன்பின் அவன் தோன்யா பக்கம் திரும்பி, வெடுக்கென்று மொழிந்தான்:

''தோழர் துமானவா, ஒரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வேலை செய்யுங்கள். இந்தப் பொலிக்காளையை முன்மாதிரியாகக் கொள்ளாதீர்கள். இவன் உங்களுக்குச் சொந்தக்காரனுயிருந்தால், அவமதிப்பாகப் பேசியதற்கு என்னை மன்னித்துவிடுங்கள்.''

பாவெல் தோன்யாவின் ஆட்டுத் தோலான பூட்ஸை நோக்கினன்; ஒரு விதமாகச் சிரித்துக் கொண்டே தற்செயலாகக் கூறுவது போல சொன்னன்.

''நீங்கள் இங்கு இருக்கக்கூடாது. அன்றொரு நாள் இரவு, கொள்ளைக்கூட்டத்தார் எங்களைத் தாக்கினர்கள்.''

அத்துடன் பாவெல் திரும்பிச் சென்று விட்டான்.

அவனது கடைசி வார்த்தைகள் எஞ்சினீயருக்குப் பிடித்தமாயிருந்தன. அவன் தங்கி வேலை செய்யவேண்டுமென்று தோன்யா வற்புறுத்திப் பேசினள்; அவனும் இணங்கினன்.

பகல் வேலை முடிந்தபின், அன்று மாலை, கூட்டம் ஸ்டேஷனுக்குச் சென்றது. ரயில் வண்டியில் ஒரு இடத்தை உத்திரவாதம் செய்துகொள்வதற்காக, தோன்யாவின் கணவன் விரைந்து சென்றான். ஒரு தொழிலாளர் கோஷ்டி நடந்து செல்வதற்கு வழிதந்து விலகி நின்ற தோன்யா, மற்றவர்களுக்குப் பின்னால், மண்வெட்டியை ஊன்றுகோலாகக் கொண்டு சிரமப்பட்டு நடந்து வந்த பாவெலைக் கண்டாள்.

''வணக்கம், பாவெல்'' என்று அவள் விளித்தாள்; அவனுடன் நடந்துகொண்டே அவள் பேசினாள்; ''இவ்வளவு மோசமான நிலையில் நீ இருப்பாயென்று நான் ஒருபொழுதும் நினைக்கவில்லை. இந்த இழிவான வேலையை உனக்குக் கொடுக்கலாமா? நீ இதைவிட உயர்ந்த வேலைக்குத் தகுதியானவன் என்பதை ஆட்சியிலுள்ளவர்கள் நிச்சயமாகத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். கமிஸார் பதவி அல்லது அதுபோன்ற பொறுப்பான பதவி வகிப்பாய் என்று நான் எண்ணினேன். வாழ்வு உன்னை எவ்வளவு கொடுமை செய்கிறதென்பதைக் கண்டு நான் வருந்துகிறேன்....''

பாவெல் நின்றுகொண்டான்; தோன்யாவை வியப்புடன் நோக்கினான்.

''நீ இம்மாதிரிப் பூசனம் பிடித்துப் போயிருப்பாயென்றும் நான் எண்ணவில்லை'' என்றான். அவன் தன் உணர்ச்சிகளைக் கண்ணியமான முறையில் எடுத்துரைக்க விரும்பினான். எனவே,

''பூசனம் பிடித்தவள்'' என்ற வாசகத்தை உபயோகித்தான்!

தோன்யாவின் செவிகள் சிவந்தன.

''நீ முன்போலவே முரடனுக இருக்கிருய்!'' என்ருள்.

பாவெல் மண்வெட்டியைத் தன் தோள்மீது வைத்துக்கொண்டு விரைந்தான். கொஞ்ச தூரம் சென்ற பின், அவன் நின்ருன்; அவளிடம் திரும்பிஞன்.

''தோழர் துமானவா, நீங்கள் வினயமாக நடந்து கொள்வதாகக் கூறுகிறீர்கள். அந்த வினயம் என் மூர்த்தத் தன்மையைவிட வெறுப்பானதாயிருக்கிறது. என் வாழ்வை பொறுத்த மட்டில், நீங்கள் கவலைப்பட வேண்டாம். என் வாழ்வில் ஒரு கோளாறும் இல்லை. உங்களது வாழ்க்கைதான் கோளாறுமயமாயிருக்கிறது; நான் எதிர் பார்த்ததை விடவும் மோசமாயிருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்ஞல், உன் தன்மை இன்றிருப்பதைவிட மேன்மையானதாக இருந்தது. அப்பொழுது, நீ ஒரு தொழிலாளியுடன் கை குலுக்குவதற்கு வெட்கப்படவில்லை. இப்பொழுது, உன்னிடமிருந்து பூச்சி மருந்து நாற்ற மடிக்கிறது. உண்மை பேசுவதென்ருல், நீயும் நானும் உரையாடுவதற்கு இனி ஒன்றுமில்லை.''

ஆர்த்தியோம் பாவெலுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அவனுக்குத் திருமணம் நிகழவிருக்கிறதென்று அறிவித்து, பாவெல் அந்த

வைபவத்துக்குத் தவருமல் வரவேண்டுமென்று வற்புறுத்தியிருந்தான்.

காற்றடித்த வேகத்தில், அந்தக் காகிதம் பாவெலின் கைப்பியிடிலிருந்து நழுவிப் பறந்து போய்விட்டது. அவன் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதைப்பற்றிச் சிந்திக்க முடியாது. இந்த நெருக்கடியான நிலையில் அவன் எப்படிப் போகமுடியும்? நேற்றுத்தான் அந்தக் கரடி பன் கிராத்தவ் அவனது கோஷ்டியை முந்திக்கொண்டு விட்டான். அக்கோஷ்டியின் வேகம் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. அந்தத் துறைமுகத் தொழிலாளி போட்டியில் முதலிடம் பெறுவதற்காகப் பகீரத முயற்சி செய்து கொண்டிருந்தான். அவனது வாடிக்கையான உதாசீனப் போக்கு மாயமாய் மறைந்து விட்டது; அவன் தனது துறைமுகத் தொழிலாளர் தோழர்களுக்கு உத்வேகத்தை ஊட்டிக்கொண்டிருந்தான்.

மௌனமாகவும் கடுமையாகவும் வேலை செய்து கொண்டிருந்த இந்த இளைஞர்களைப் பார்த்து, பத்தோஷ்கின் மலைத்து நின்று தலையைச் சொறிந்தான். ''இவர்கள் மானிடர்களா அல்லது அசுரர்களா?'' என்று அவன் அதிசயித்தான். ''இவர்கள் இந்த அளவிட முடியாத ஆற்றலை எங்கிருந்து பெறுகிருர்கள்? இன்னும் எட்டு நாட்களுக்குப் பருவ நிலை ஒத்துழைத்தால், மரம்வெட்டிக் குவிக்கப்பட்டுள்ள இடத்தை அடைந்துவிடலாம் போலிருக்கிறது! நன்று நன்று! அனுபவத்தில் பல புதிய விஷயங்களைப் படிக்கிறோம்! இந்த

மனிதர்கள் சகல சாதனைகளையும் கணிப்புகளையும் மீறிவிட்டார்கள்'' என்று அவன் எண்ணினான்.

கிளாவிச்சேக் தான் கடைசியாகச் சுட்ட ரொட்டியுடன் டவுனிலிருந்து வந்தான். அவன் தோக்கரெவுடன் பேசிவிட்டு, பாவெலைக் கண்டு பிடிப்பதற்குச் சென்றான். இருவரும் அன்புடன் கைகுலுக்கிக் கொண்டனர். கிளாவிச்சேக் பைக்குள் கையை நுழைத்து, ஒரு அழகான சொக்காயை எடுத்தபொழுது, பாவெலின் முகம் மலர்ந்தது. அது ஸ்வீடன் தேசத்தில் தைத்த உயர்ந்த தோல் சொக்காய். அடியில் மிருதுவான ரோமத்துடன் கூடியது.

''இது உனக்குத்தான்'' என்று கூறிக்கொண்டே, கிளாவிச்சேக் அந்த மிருதுவான சொக்காயைத் தட்டிக் கொடுத்தான். ''யார் கொடுத்தது, சொல் பார்க்கலாம். என்ன! தெரியாதா? நீ நிச்சயமாக மட்டிப் பையன்தான்! சந்தேகமே இல்லை. தோழர் உஸ்திநோவிச் கொடுத்த சட்டை இது. நீ குளிரில் தவிக்கக் கூடாதென்று அவள் கொடுத்தாள். ஓல்ஷின்ஸ்கிய் இதை அவளுக்குக் கொடுத்தான். அவள் இதை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டு, நேரே என்னிடம் கொடுத்தாள். உன்னிடம் கொடுக்கும்படி உத்திரவிட்டாள். நீ ஒரு மெல்லிய சட்டையுடன் கடுங்குளிரில் வேலை செய்வதாக அக்கீம் அவளிடம் கூறினான். ஓல்ஷின்ஸ்கிய்க்கு மனம் புண்பட்டது. 'நான் அந்தத் தோழனுக்கு ஒரு ராணுவக் கோட் அனுப்புகிறேன்' என்று அவன் கூறினான். ஆனால் அதைக் கேட்டு

ரீத்தா நகைத்தாள். 'பரவாயில்லே. இந்தச் சொக்காய் அவன் வேலே செய்வதற்கு வசதியாயிருக்கும்' என்று அவள் கூறினள்.''

வியப்பிலாழ்ந்த பாவெல் ஆடம்பரப் பொருளாகத் தோன்றிய அந்தச் சொக்காயை வாங்கிக் கொண்டான். கொஞ்சம் தயங்கி நின்றபின், அதைத் தன் குளிர்ந்த உடலில் அணிந்து கொண்டான். உடனேயே, மென்மையான ரோமத்திலிருந்து அவனது தோள்களுக்கும் மார்புக்கும் சூடு பரவுவதை அவன் உணர்ந்தான்.

ரீத்தா தன் நாட்குறிப்பில் எழுதினள்:

''டிசம்பர் 20

''வெண்பனிப் புயல் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருக்கிறது. ஒரே காற்று. இந்தக் கடுங்குளிரும் புயலும் தடுத்து நிறுத்துவதற்கு முன், அவர்கள் போயர்க்காவில் அநேகமாக வேலையை முடித்து விட்டார்கள். கழுத்துவரை வெண்பனி. இறுகிப்போன மண்ணை வெட்டுவது எளிதான காரியமல்ல. மேலும் முக்கால் கிலோமீட்டர்தான் பாதை போட வேண்டும். ஆனல் இந்தப் பகுதி வேலேயே மிகவும் கடினமானது.

''டைபஸ் ஜுரம் வந்திருப்பதாகத் தோக்கரெவ் எழுதுகிருர். மூவர் ஜுரத்தில் படுத்து விட்டனர்.''

''டிசம்பர் 22

''மாகாணக் கம்஗மோல் முழு கூட்டம் நடந்தது. ஆனால் போயர்க்காவிலிருந்து ஒருவரும் வரவில்லை. போயர்க்காவிலிருந்து பதினேழு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு தானிய ரயிலைக் கொள்ளைக்காரர்கள் கவிழ்த்துவிட்டார்கள். போயர்க்காவில் பாதை போடும் தொண்டர்கள் அனைவரும் ரயில் கவிழ்ந்த இடத்துக்குப் போக வேண்டுமென்று உணவு இலாகா பிரதிநிதி உத்திரவிட்டிருக்கிறார்.''

''டிசம்பர் 23

''மேலும் ஏழுபேர் டைபஸ் ஜுரத்துடன், போயர்க்காவிலிருந்து டவுனுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஓக்குனேவ் ஒருவன். நான் ஸ்டேஷனுக்குச் சென்றேன். அங்கு, கார்க்கவ் ரயிலில் பிரயாணம் செய்து, விறைத்துப் போய் இறந்தவர்களின் சவங்களைக் கண்டேன். ஆஸ்பத்திரிகளில் விறகு இல்லை. இந்தப் பனிப் புயல் ஒரு சாபக்கேடாக வாய்த்திருக்கிறது. இது எப்பொழுது ஒழியும்?''

''டிசம்பர் 24

''இப்பொழுதுதான் ஷுஹ்ராயைப் பார்த்துப் பேசினேன். ஓர்லிக்கும் அவனது கூட்டமும் நேற்று இரவு போயர்க்காவைத் தாக்கினர் என்ற வதந்தி

யை அவர் ஊர்ஜிதம் செய்தார். அந்தப் போ ராட்டம் இரண்டு மணிநேரம் நடந்தது. போக்கு வரத்து துண்டிக்கப்பட்டிருந்ததால், இன்று காலை வரை ஷுஹ்ராயுக்குச் சரியான தகவல் கிடைக்க வில்லை. கொள்ளைக் கூட்டத்தினர் முறியடிக்கப் பட்டனர். ஆனல் தோக்கரெவுக்குக் காயம். அவரது மார்பில் ஒரு குண்டு பாய்ந்துவிட்டது. அவரை இன்று டவுனுக்குக் கொண்டுவருவார்கள். அந்த இரவில் காவல் செய்தவர்களின் தலைவனு கத் தொண்டாற்றிய கிளாவிச்சேக் கொல்லப் பட்டான். அவன்தான் கூட்டத்தினரின் வருகை யைக் கண்டுபிடித்து அபாய அறிவிப்பை எழுப்பி ஞன். அவன் கொள்ளைக்காரர்களைச் சுடுவதற்குத் தொடங்கினுன். ஆனல் அவன் பள்ளிக் கூடக் கட்டிடத்துக்குப் பின்வாங்குவதற்குள் அவர்கள் அவனைப் பிடித்துவிட்டார்கள்; அவன் வாளால் கொலை செய்யப்பட்டான். நமது தொழிலாளரில் பதினெரு பேருக்குக் காயம். இரண்டு குதிரைப் படைப் பிரிவுகளும் ஒரு கவச ரயிலும் இப் பொழுது அங்குப் போய்ச் சேர்ந்துவிட்டன.

''நிர்மாண வேலைக்குப் பன்கிராத்தவ் முழுப் பொறுப்பாயிருக்கிருன். இன்று புஸிரேவ்ஸ்க்கி யின் குதிரைப்படை, 'கொள்ளைக்கூட்டத்தின் ஒரு பகுதியை க்லூபோக்கிய் கிராமத்தில் பிடித்து அழித்துவிட்டது. கட்சியில் இல்லாத சில தொழி லாளர்கள் நகரை நோக்கிக் கிளம்பிவிட்டார்கள். அவர்கள் ரயிலுக்குக் காத்திராமல், இருப்புப் பாதை வழியே நடந்துவருகிருர்கள்.''

''தோக்கரெவும் காயமடைந்த இதரரும் டவுனுக்கு வந்து விட்டனர்; ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். கிழவரைக் காப்பாற்றிவிடுவோ மென்று டாக்டர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். அவர் நினைவற்று கிடக்கிறார். மற்றவர்களுக்கு ஆபத்து இல்லை.

''போயர்க்காவிலிருந்து எங்களுக்கும் மாகாணக் கட்சிக் கமிட்டிக்கும் ஒரு தந்தி வந்தது. அது கூறுவதாவது: 'இருப்புப் பாதை அமைத்துக் கொண்டிருக்கும் நாங்கள், 'சோவியத் அதிகாரத்துக்காக' என்ற பெயரிட்ட கவசரயில் செஞ்சேனை வீரர்களுடனும் குதிரைப் படைவீரர்களுடனும் சேர்ந்து கூட்டம் நடத்தினோம். கொள்ளைக்காரர் தாக்குதலுக்குத் தக்க பதிலளிக்கும் முறையில் நாங்கள் பிரதிக்ஞை எடுத்திருக்கிறோம். எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும், அவற்றைச் சமாளித்து, ஜனவரி முதல் தேதியன்று டவுனுக்கு விறகு கிடைக்கச் செய்வோமென்பதே எங்கள் சபதம். எங்களது முழு பலத்தையும் திரட்டி, வேலையில் ஈடுபடுகிறோம். எங்களை இங்கு அனுப்பிய கம்யூனிஸ்ட் கட்சி நீடுழி வாழ்க! கூட்டத் தலைவர்: கர்ச்சாகின். காரியதரிசி: பெர்ஸின்.'

''ஸாலோமென்காவில், கிளாவிச்சேக்கின் சவ அடக்கம் ராணுவ மரியாதைகளுடன் நடந்தேறியது.''

அவர்கள் உயிரினும் இனியதாக நேசித்த குறிக்கோளை எட்டிப் பிடிக்கும் தருவாயில் இருந்தனர் என்றாலும், முன்னேற்றத்தின் வேகம் மிகவும் தடைப்பட்டது. தினந்தோறும் டைபஸ் ஜுரம் பலரைப் படுக்கையில் வீழ்த்திக்கொண்டிருந்ததே இதற்குக் காரணம்.

ஒருநாள், பாவெல் வேலை செய்துவிட்டு ஸ்டேஷனுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அவன் ஒரு குடிகாரனைப் போலத் தள்ளாடிக் கொண்டே நடந்தான். அவனது கால்கள் எந்த நேரத்திலும் அவனைக் கீழே தள்ளிவிடும் போலிருந்தது. அவனுக்குக் கொஞ்ச காலமாகவே காய்ச்சலாகவிருந்தது. ஆனால் இன்று காய்ச்சலின் வேகமும் உக்கிரமும் அதிகமாயிருந்தது.

இருப்புப்பாதை அமைப்பாளர் படையைக் குறைத்துக் கொண்டு வந்த டைபஸ் ஜுரம் ஒரு புதிய ஆளைப் பிடித்துக் கொண்டுவிட்டது. ஆனால் பாவெலின் உறுதியான உடற்கட்டு நோயை எதிர்த்துப் போராடியது. ஐந்து நாட்களுக்குத் தொடர்ச்சியாக அவன் கான்கிரீட் தளத்தின் மீது பரப்பியிருந்த வைக்கோலில் படுத்து எழுந்து இதரருடன் சென்று வேலை செய்தான். எனினும் ஜுரம் அவனை ஆட்கொண்டுவிட்டது. குளிரால் மரத்துப் போன கால்களில் பியோதர் பரிசாக அனுப்பிய கதகதப்பான கம்பளி பூட்ஸை அவன் அணிந்திருந்தது உண்மை. ஆனால் அதுவோ, ரீத்தா அனுப்பிய கதகதப்பான சொக்காயோ அவனுக்குச் சகாயம் செய்யவில்லை.

அவன் ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும் பொழுதும், அவனது மார்பில் கூர்மையான வேதனை உண்டாகி எரிச்சல் ஏற்பட்டது; அவனது பற்கள் கிடுகிடு என்று தந்தி அடித்தன. அவனது பார்வை மங்கியது; மரங்களெல்லாம் ஒரு விசித்திரமான ரங்கராட்டினத்தில் சுழல்வதாக அவனுக்குத் தோன்றியது.

அவன் கஷ்டப்பட்டு நடந்து ஸ்டேஷனை அடைந்தான். அங்கு என்றைக்குமில்லாத சந்தடி ஏற்பட்டிருந்ததைக் கண்டு அவன் சற்று நின்றான். அவன் கூர்ந்து கவனித்தான். பிளாட்பார நீளத்தின் அளவுக்கு ஒரு நீண்ட வண்டித் தொடர் நின்றதைக் கண்டான். கூரை இல்லாத பெட்டிகளைக் கொண்ட ரயில் அது. அதில் வந்தவர்கள், குறும் பாதை எஞ்சின்களையும் தண்டவாளங்களையும் ஸ்லீப்பர் கட்டைகளையும் இறக்குவதில் சுறுசுறுப்பாக இருந்தார்கள். பாவெல் தள்ளாடிக் கொண்டே முன்சென்றான்; சமநிலை தவறி விழுந்தான். அவனது தலை, தரை மீது மோதியபொழுது ஒரு மந்தமான வலி ஏற்பட்டதையும் அவன் உணர்ந்தான். அவனது வெப்பமான கன்னத்தின் மீது வெண்பனி பட்டதால் ஏற்பட்ட இன்பமான குளிர்ச்சியையும் உணர்ந்தான்.

சில மணி நேரத்துக்குப் பிறகு, அவன் விழுந்து கிடந்ததைக் கண்டுபிடித்து பாரக்குக்குத் தூக்கிக் கொண்டு போனார்கள். அவன் உணர் விழந்து கிடந்தான்; சிரமப்பட்டு மூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். கவச ரயிலிலிருந்த வைத்தியர்

வரவழைக்கப்பட்டார். அவர் அவளைப் பரி சோதனை செய்து பார்த்து விட்டு, நிம்மோனி யாவும் டைபஸ் ஜுரமும் பீடித்திருப்பதாகக் கூறினர். அவனுக்கு 106 டிகிரி இருந்தது. வைத் தியர், மூட்டுகளின் அழற்சியைக் கவனித்தார்; கழுத்தில் இருந்த கட்டிகளையும் பரிசோதித்தார். ஆனால் அவற்றைப் பொருட்படுத்த வேண்டா மென்று அவர் கூறினர். அவற்றை விடப் பன் மடங்கு அபாயகரமானவையாக நிம்மோனியாவும் டைபஸும் இருப்பதாகவும், இவையே ஆளைக் கொல்வதற்குப் போதுமென்றும் அவர் கூறினர்.

பன்கிராத்தவும் நகரிலிருந்து திரும்பிவிட்ட துபாவாவும் பாவெலைக் காப்பாற்றுவதற்குத் தம் மால் இயன்றதனைத்தும் செய்தனர்.

அல்யோஷா கஹான்ஸ்கிய் பாவெலின் ஊரைச் சேர்ந்தவன். பாவெலை அவனுடைய வீட்டுக்கு இட்டுச் செல்லும் பொறுப்பு அல்யோ ஷாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாவெலது கோஷ்டியினர் அனைவரது உதவி யுடன், குறிப்பாக கோல்யாவாவின் பேருதவி யுடன், அல்யோஷாவையும் உணர்வில்லாமல் கிடந்த பாவெலையும், ஜனங்கள் நெருக்கியடித்துக் கொண்டிருந்த ரயில் வண்டியில் ஏற்றுவதில், பன் கிராத்தவும் துபாவாவும் வெற்றியடைந்தனர். டைபஸ் நோயாளி என்று சந்தேகித்த பிரயாணி கள், பாவெலை ஏற்றுவதைப் பலாத்காரமாக எதிர்த்தார்கள்; வழியில் ரயில் ஓடிக்கொண்டிருக்

கும்பொழுது, நோயாளியைத் தூக்கி எறிவோமென்றும் பயமுறுத்தினர்கள்.

கோல்யாவா தன் கைத்துப்பாக்கியை அவர்களுக்கு நேராகக் காட்டி மிரட்டினன்.

''அவனது நோய் ஒட்டிக் கொள்ளாது! உங்கள் அனைவரையும் வண்டியிலிருந்து இறக்கி விட்டாகிலும், அவனை அனுப்புவோம்! நான் பாதையிலுள்ள ஸ்டேஷன்களுக்கெல்லாம் சேதி அனுப்பப் போகிறேன். யாராவது அவன்மீது கைவைத்தால், உங்கள் அனைவரையும் பிடித்துச் சிறைப்படுத்தி விடுவார்கள். உஷார்! அல்யோஷா! இதோ பாவெலின் துப்பாக்கியை எடுத்துக்கொள். அவனை எவன் தூக்கி எறிய முயன்ருலும் சுட்டுக் கொல்'' என்று கர்ஜித்தான்.

டிரெயின் ஸ்டேஷனிலிருந்து கிளம்பியது. வெறிச் சென்று இருந்த பிளாட்பாரத்தில் தன்னந் தனியாக நின்று கொண்டிருந்த துபாவாவிடம் பன்கிராத்தவ் சென்ருன்.

''பாவெல் பிழைத்துக்கொள்வாஞ?'' என்று அவன் வினவினன்.

துபாவா விடை தரவில்லை.

''துபாவா! வா, வா. நாம் இனி ஒன்றும் உதவ முடியாது. நாம்தான் இனிச் சகலத்துக்கும் பொறுப்பு. இன்று இரவு அந்த எஞ்சின்களை இறக்கிவிடவேண்டும். நாளைக் காலை அவற்றில் தீ உண்டாக்க முயற்சிப்போம்'' என்று பன்கிராத்தவ் கூறினன்.

இருப்புப் பாதையில் இருந்த சகல செக்கா நண்பர்களுக்கும் கோல்யாவா போன் செய்தான். நோயாளியான பாவெலை எவரும் டிரெயினி லிருந்து இறக்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அவன் அவர்களிடம் வற்புறுத் தினன். அவர்கள் அம்மாதிரி உறுதிமொழி கொடுத்த பின்பே, அவன் படுக்கச் சென்றான்.

அந்தப் பாதையில் கொஞ்ச தூரத்துக்கு அப்பால், ஒரு ரயில்வே ஜங்ஷன். அங்கு, அவ் வழியே சென்று கொண்டிருந்த ஒரு பிரயாணி வண்டியிலிருந்து ஒரு இளைஞனது உடல் இறக்கிப் பிளாட்பாரத்தின்மீது வைக்கப்பட்டது. அந்த இளைஞன் யார், அவன் எப்படி இறந்தான் முதலிய விஷயங்கள் ஒருவருக்கும் தெரியவில்லை. அந்த ஸ்டேஷனில் இருந்த செக்கா ஊழியர்கள் கோல் யாவாவின் வேண்டுகோளை மறக்கவில்லை. எனவே அவர்கள் அந்தப் பிளாட்பாரத்துக்கு ஓடினார்கள். அந்த இளைஞன் இறந்துவிட்டான் என்பதை அவர் கள் கண்டனர். அந்தப் பிணத்தைச் சவச்சாலைக் குக் கொண்டு செல்லும்படி அவர்கள் கட்டளை யிட்டனர். உடனே போயர்க்காவில் இருந்த கோல் யாவாவுக்குப் போன் செய்தனர். எந்த நண்பன் உயிரைக் காப்பாற்றுவதில் அவன் கண்ணும் கருத்துமாயிருந்தானே, அதே நண்பன் இறந்து விட்டானென்று அவர்கள் அவனிடம் கூறினர்.

ஒரு சுருக்கமான தந்தி, போயர்க்கா விலிருந்து கம்ஸமோலின் மாகாணக் கமிட்டிக்குச்

சென்றது. அது பாவெலின் அகால மரணச் சேதியை அறிவித்தது.

எனினும், அதே சமயத்தில், அல்யோஷா பாவெலை அவனுடைய குடும்பத்தினரிடம் ஒப்படைத்துவிட்டு, அதே ஜுரத்தால் பீடிக்கப் பட்டான்.

''ஜனவரி 9

''என்னுடைய இதயம் ஏன் இம்மாதிரி வேதனையடைகிறது? நான் எழுத உட்காருவதற்கு முன்னால் தேம்பித் தேம்பி அழுதேன். ரீத்தா அழுவாள், இந்த மாதிரிப் புலம்புவாள் என்று சொன்னால், யாராவது நம்பியிருப்பார்களா? ஆனால் கண்ணீர் என்பது எப்பொழுதுமே பலவீனத்தின் அறிகுறி என்று சொல்லமுடியுமா? இன்று துக்கம் என் உடலை எரிக்கிறது; அதனால் நான் கண்ணீர் உகுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த வெற்றி நாளில் எனக்கு ஏன் இந்தத் துக்கம்? குளிரின் பயங்கரங்கள் மீது வெற்றியடைந்துவிட்டோம்; ரயில்வே ஸ்டேஷன்களில் அம்பாரம் அம்பாரமாக உயிர்த்தேவையான விறகு குவிந்திருக்கிறது. நகர சோவியத்தின் விரிவாக்கப்பட்ட கூட்டத்தில், இருப்புப்பாதை நிர்மாண வீரர்களுக்குச் சகல கௌரவங்களும் அளித்து, வெற்றி விழா நடத்தியதில் கலந்துகொண்டுவிட்டு, இப்பொழுது தான் திரும்பி வந்துள்ளேன். இப்படிப்பட்ட நாளில் எனக்கு ஏன் இந்தத் துயரம்? இது

வெற்றிதான்; ஆனால் இருவர்—கிளாவிச்சேக்கும் பாவெலும்—உயிர்த் தியாகம் செய்து இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

''பாவெலின் மரணம் உண்மையை உணரச் செய்துவிட்டது. ஆம்! நான் எண்ணியதைவிட அதிகமாக அவனிடம் எனக்குப் பாசம் ஏற்பட்டிருந்தது.

''இப்பொழுது இந்த நாட்குறிப்பை நான் முடிக்கிறேன். நான் மீண்டும் அதைத் தொடருவேனா என்பது சந்தேகம்தான். நாளைக்கு நான் கார்க்கவுக்குக் கடிதம் எழுதப் போகிறேன். உக்ரேனிய கம்ஸமோலின் மத்தியக் கமிட்டியில் எனக்கு அளிக்கப்பட்ட வேலையை ஒப்புக்கொண்டு எழுதப் போகிறேன்.''

அத்தியாயம் மூன்று

இளமை வெற்றிகண்டது. பாவெல் டைபஸ் ஜுரத்துக்குப் பலியாகவில்லை. அவன் நான்காவது தடவையாகச் சாவின் நுழைவாயிலில் பிரவேசித்துவிட்டுப் புத்துயிர் பெற்றுவிட்டான். ஆனால் ஒருமாத காலத்துக்குப் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியவில்லை. எழுந்து நடக்கத் தொடங்கியபொழுதும் அவன் மெலிந்திருந்தான்; சோகையாகவிருந்தான்; தள்ளாடித்தள்ளாடி அறையில் நடந்தான்; கால்களில் உறுதியில்லாததால் சுவரைப் பிடித்துக்கொண்டு நகர்ந்தான். அவன் தன்

அன்னையின் உதவியுடன் ஜன்னலை அடைந்து, அங்கு நீண்டநேரம் நின்று, சாலையை நோக்கினான். வசந்தகாலம் நெருங்கிவிட்டது. பனி உருகியதால் ஏற்பட்ட நீர்க் குட்டங்கள் சூரிய ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அந்த ஆண்டில் அப்பொழுதுதான் பனி உருகத் தொடங்கியிருந்தது.

ஜன்னலுக்கு முன்னால் ஒரு செர்ரி மரம். அதன் கிளை ஒன்றில் ஒரு ஊர்க்குருவி உட்கார்ந்திருந்தது. அது தன் இறகுகளைக் கோதிவிட்டுக் கொண்டே, பாவெலைத் திருட்டுத்தனமாக மின்வெட்டுப் பார்வை பார்த்தது. அந்தப் பார்வையில் ஒரு சஞ்சலம் இருந்தது.

''நீயும் நானும் குளிர்காலத்தைக் கடந்து விட்டோம்'' என்று கூறிக்கொண்டே பாவெல் ஜன்னல் கண்ணாடியை விரலால் தட்டினான்.

அவனது தாய் அதிர்ச்சி அடைந்தவளாகத் தன் மகனைப் பார்த்தாள்.

''நீ யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய்?'' என்று அவள் வினவினாள்.

''அதோ அந்த ஊர்க்குருவியோடு.... அடடா! அதற்குள் அந்தச் சின்னப் போக்கிரி பறந்து விட்டானே!'' என்று கூறிய பாவெல் லேசாகப் புன்னகை செய்தான்.

வசந்தம் அதன் உச்சநிலையை அடைந்தபொழுது, பாவெல் நகரத்துக்குத் திரும்புவதைப்பற்றி எண்ணத் தொடங்கினான். அவனுக்குப் பலம் ஊறிவிட்டது; அவனால் நடக்கமுடிந்தது. ஆனால் ஏதோ ஒரு வியாதி அவனது பலத்தைச் சிதைத்துக்

கொண்டிருந்தது. அது என்ன நோய் என்பதே விளங்கவில்லை. ஒருநாள் அவன் தோட்டத்தில் நடந்துகொண்டிருந்தபொழுது, அவனது முது கெலும்பில் திடீரென்று ஒரு தீவிரமான வேதனை உண்டாகி, விழுந்து விட்டான். அவன் மிகுந்த கஷ்டத்துடன் நடந்து தன் அறையை அடைந் தான். மறுநாள், ஒரு பூர்த்தியான வைத்தியப் பரிசோதனைக்கு அவன் உட்பட்டான். பாவெலின் முதுகைப் பரிசோதித்த டாக்டர், அவனது முது கெலும்பில் ஒரு ஆழமான பள்ளத்தைக் கண்டு பிடித்தார்.

''இது எப்படி ஏற்பட்டது?'' என்று வியப் புற்றவராக உறுமினர்.

''ரோவ்னோ நகரத்துக்கருகே நிகழ்ந்த போ ராட்டத்தில் ஏற்பட்டது. மூன்று அங்குல விட் டத்தைக் கொண்ட குழலை உடைய ஒரு பீரங்கி எங்களுக்குப் பின்னல் குண்டுகளைக் கக்கிச் சாலை யைப் பெயர்த்தது. அப்பொழுது ஒரு கல் என் முதுகைத் தாக்கியது'' என்று பாவெல் விளக்கம் தந்தான்.

''ஆனல் நீ எப்படி நடந்துகொணடிருந்தாய்? இதனல் உனக்கு உபத்திரவம் எதுவுமில்லையா?''

''இல்லை. கல்லடி பட்டவுடன் ஓரிரண்டு மணிநேரம் என்னல் எழுந்திருக்க முடியவில்லை. அதன்பின், அந்த வலி மறைந்தது. நான் சேணத் தில் ஏறித் தொடர்ந்து போராடினேன். அதன் பிறகு, இப்பொழுதுதான், இந்தக் குழி எனக்குத் தொல்லை கொடுக்கிறது.''

டாக்டர் அந்தப் பள்ளத்தைக் கவனமாக ஆராய்ந்தார்; அப்பொழுது அவரது முகத்தில் கவலைக் குறிகள் படர்ந்தன.

"ஆமாம், நண்பா! இது ஒரு மோசமான விஷயம்தான். முதுகெலும்பில் இத்தகைய கேடு ஏற்படக்கூடாது. இது சிக்கிரத்தில் மறையுமென்று நம்புவோமாக" என்று டாக்டர் கூறினார்.

நோயாளி கழற்றிய சட்டையைப் போட்டுக் கொள்வதை டாக்டர் அனுதாபத்துடன் நோக்கினார். அவனால் தன் துன்பத்தை மறைக்க முடியவில்லை என்பதை அவர் உணர்ந்தார்.

ஆர்த்தியோம் அவனுடைய மனைவியின் குடும்பத்தினருடன் வசித்தான். அவனது மனைவி ஸ்தியேஷா அழகில்லாத விதவை. ஏழ்மையில் தவித்த விவசாயிக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த மங்கை. ஒருநாள் பாவெல் தன் அண்ணனைப் பார்க்கச் சென்றான். முன்னாலிருந்த ஆபாசமான சிறு முற்றத்தில் மாறு கண் உடைய ஒரு அழுக்கடர்ந்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் பாவெலை வெறித்துப் பார்த்தான்; தன் மூக்குக்குள் விரலை விட்டுக் கொண்டு கேட்டான்:

"உனக்கு என்ன வேண்டும்? நீ திருடனா? உடனே ஓடிவிடு; இல்லாவிட்டால் அம்மாவிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொள்வாய்."

அந்த விகாரமான பழங் குடிசையில் ஒரு சிறு ஜன்னல் திறக்கப்பட்டது. அதன் வழியே ஆர்த்தியோம் வெளியில் நோக்கினான்.

''பாவெல்! உள்ளேவா'' என்று அவன் விளம்பினான்.

மஞ்சள் முகத்தை உடைய ஒரு கிழவி அடுப் பண்டை வேலையாகவிருந்தாள். பாவெல் அவளைக் கடந்து சென்றபொழுது, அவனைக் குரோதத் துடன் பார்த்தாள். அதன்பின், வார்ப்பு இரும்பா லான சட்டிகளை மேலும் கீழும் தூக்கிவைத்துக் கடகடவென்று சப்தம் செய்து வேலை செய்யத் தொடங்கினாள்.

எலிவால் போன்ற ஜடையுடன் கூடிய இரண்டு சிறுமிகள் அடுப்பின்மீது ஏறிக்கொண்டு காட்டு ஜாதிக் குழந்தைகளைப்போல வாயைப் பிளந்து புதிதாக வந்தவனை வெறித்து நோக்கி னர்.

மேஜைக்கு முன்னால் உட்கார்ந்திருந்த ஆர்த் தியோமுக்கு மன நிம்மதி இல்லை. அவனுடைய தாயாரும் தம்பியும் தன் திருமணத்தை அங்கீ கரிக்கவில்லையென்பதை அவன் அறிந்திருந்தான். ஆலைத்தொழிலாளிகளின் குடும்பத்தில் பிறந்த அவன், கல்தச்சனது அழகு மகளும் தையல்காரி யாகஉழைத்துப் பிழைத்தவளுமான கால்யாவுடன் தனது மூன்றுண்டு நட்பினை உதறிவிட்டு, ஐவரைக் கொண்ட, உழைப்பாளி ஒருவனுமற்ற, குடும் பத்திலிருந்து ஒரு பேதைப் பெண்ணை மணந்து கொண்ட மர்மத்தை அவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ரயில்வே வார்க்ஷாப்பில் பகல் முழுவதும் கடினமாக உழைத்த பிறகு, அவன் சீரழிந்து கிடந்த பண்ணையைப் பயனுள்ள தாக்குவதற்காக ஏர்க்கட்டி உழுதான்.

பாவெல் தன் அண்ணனது தற்சமய வாழ்வு முறையை அங்கீகரிக்கவில்லை. அண்ணன் 'குட்டி பூர்ஷ்வாச் சூழ்நிலையில் மூழ்கடிக்கப் பட்டவன்' என்று அடிக்கடி அவன் கூறிவந்தான். அண்ணனது அவ்வாழ்க்கைப் பாவெலுக்குப் பிடிக்கவில்லை. இதை நன்கறிந்த ஆர்த்தியோம் தன்னைச் சூழ்ந் திருப்பவற்றைத் தம்பி எக்கண் கொண்டு நோக்கு கிருன் என்று கவனித்தான்.

இருவரும் அமர்ந்தனர்; ஒருவருக்கொருவர் உயிரற்ற வார்த்தைகளைப் பரிமாற்றம் செய்து கொண்டார்கள். கொஞ்ச நேரம் க்ஷேமலாபம் விசாரித்துக் கொண்டனர். பிறகு பாவெல் வெளி யேறுவதற்காக எழுந்தான். ஆனல் ஆர்த்தியோம் அவனை நிறுத்தினன்.

''கொஞ்ச நேரம் இரு. எங்களுடன் ஏதாவது சாப்பிடவேண்டும். சீக்கிரத்தில் ஸ்தியேஷா பால் கொண்டுவருவாள். நாளைக்கு நகருக்குத் திரும்பிப் போகிருயா? பாவெல், உனக்குப் போது மான பலம் ஊறிவிட்டதா?'' என்று ஆர்த்தியோம் வினவினன்.

ஸ்தியேஷா அங்கு வந்து பாவெலை வரவேற் ருள். களஞ்சியத்துக்கு வந்து சாமானைத் தூக்கி விடும்படி அவள் ஆர்த்தியோமைக் கேட்டுக் கொண்டாள். அவர்கள் சென்றபின், வீட்டில் பா வெலும், மூர்க்கமாகத் தோற்றமளித்த கிழவியு மே இருந்தனர். ஜன்னல் வழியாக மாதாகோவி லிலிருந்து மணியோசை கேட்டது. கிழவி இடுக்கி யைக் கீழே வைத்துவிட்டு, மெல்லிய குரலில்

கடுகடுப்பான தொனியுடன் உச்சரிக்கத் தொடங்கினாள்:

''விண்ணில் வாழும் பிரபுவே! இந்தச் சாபக்கேடான வீட்டு வேலைக்கு இடையே உன்னை வழிபடுவதற்குக்கூட நேரம் கிடைக்கவில்லையே!'' அவள் தனது தலைக்குட்டையை நீக்கினாள்; புதிதாக வந்த பாவெலைக் கடைக்கண்ணால் நோக்கிக் கொண்டே, அவள் ஒரு மூலைக்குச் சென்றாள். அங்கு, சோகம் பொருந்திய முகங்கள் கொண்ட புனித உருவங்கள் சில இருந்தன; அவை பழசாக இருந்தமையால் காலப்போக்கின் கறையுடன் காட்சியளித்தன. எலும்பும் தோலுமாக இருந்த மூன்று விரல்களைச் சேர்த்து, சிலுவைக் குறி செய்தாள்.

''விண்ணிலுள்ள எங்கள் பிதாவே! உனது நாமம் பவித்திரமானது!'' என்று அவள் உலர்ந்த உதடுகள் வாயிலாக உச்சரித்தாள்.

முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன், தொங்கும் செவிகளுடன் கூடிய கரிய பன்றியின்மீது ஏறிக் கொண்டான். அவன் அதன் மயிரைப் பிடித்துக் கொண்டு, தனது சிறிய வெறும் பாதங்களால் அதை உதைத்து, ''நட! நட!'' என்று கத்தினான். அது சீறிக்கொண்டு ஓடிய பொழுது, ''நில்! நில்!'' என்று கத்தினான்.

முதுகின்மீது அமர்ந்திருந்த பையனுடன் பன்றி முற்றத்தில் வெறித்தனமாக ஓடியது; எப்படியாவது அவனைக் கீழே தள்ளுவதற்கு அது முயன்றது. ஆனால் மாறுகண் பார்வையை

உடைய அந்த துஷ்டப் பையன் தன் இருக்கையை உறுதியாகப் பிடித்துக்கொண்டான்.

கிழவி பிரார்த்தனையை நிறுத்தி விட்டு, ஜன்னல் வழியே தலையை வெளியில் நீட்டினாள்.

''வேட்டை நாயே! அந்தப் பன்றிமீதிருந்து உடனே இறங்கு! இல்லாவிட்டால் உன் தோலை உரித்துவிடுவேன்! உன்னைப் பீடைபிடிக்க!'' என்று அவள் இரைந்தாள்.

கடைசியில், பன்றி தன்னைச் சித்திரவதை செய்த பையனை இறங்கும்படி செய்வதில் வெற்றி கண்டது. கிழவியும் ஆத்திரம் தணிந்தவளாய், தனது பிரதிமைகள் உள்ள இடத்துக்குச் சென்றாள். மீண்டும் முகத்தில் பக்தி உணர்ச்சி ததும்ப, அவள் பிரார்த்தனையைத் தொடர்ந்தாள்.

''உன் சாம்ராஜ்யம் மலர....''

அதே சமயத்தில் அந்தப் பையன் கதவண்டை வந்து நின்றான். அவனது முகத்தின் அழுக்கு, கண்ணீரில் நனைந்திருந்தது. வலித்துக் கொண்டிருந்த நாசியைச் சட்டையின் முன்கையால் துடைத்துக்கொண்டே, வலிதாங்க முடியாமல் புலம்பினான். புலம்பிக்கொண்டே, ''பாட்டி, ஒரு ஆப்பம் கொடு!'' என்று சிணுங்கினான்.

கிழவி அவன்மீது தன் ஆத்திரத்தைக் கொட்டினாள்.

''நான் தொழுதுகொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா? வக்கிரதிருஷ்டிப் பிசாசே! உனக்கு ஆப்பம் தருகிறேன், ஆப்பம்! சாத்தான் மகனே!...'' அவள் பெஞ்சியிலிருந்து ஒரு

சாட்டையை எடுத்தாள். சிறுவன் மின்னல் மறைவதைப்போல, ஓடிவிட்டான். அடுப்பில் உட்கார்ந்திருந்த இரண்டு சிறுமிகளும் கிளுகிளுத்தனர்.

கிழவி மூன்றுவது தடவையாகத் தன் தொழுகையைத் தொடங்கினுள்.

பாவெல் தன் அண்ணனுக்காகக் காத்திராமல், எழுந்திருந்து வெளியேறினுன். அவன் வெளிமுற்றத்தைத் தாண்டி, திட்டிவாசலை மூடினுன். அப்பொழுது, வீட்டின் கோடி ஜன்னல் வழியாகக் கிழவி அவனைச் சந்தேகத்துடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதை அவன் கவனித்தான்.

''எந்தப் பேய் ஆர்த்தியோமை இந்தக் குழியில் தள்ளியது? இனி அவன் ஆயுட்கால அடிமைதான். ஸ்தியேஷா ஆண்டுக்கு ஒரு குழந்தையைப் பெறுவாள். 'அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்' என்பதுதான் ஆர்த்தியோமின் கதி. அவன் ரயில்வே வேலையைக்கூட உதறி எறிந்து விடுவான்'' என்று மனம் வருந்திச் சிந்தனை செய்துகொண்டே பாவெல், அந்தச் சிறு நகரத்தில் வெறிச்சென்று கிடந்த வீதிகள் வழியே நடந்தான். ''இவனுக்கு அரசியல் வேலையில் அக்கறை உண்டாக்கலாமென்று நான் எண்ணியதெல்லாம் வீணுயிற்றே!'' என்று அவன் வருந்தினுன்.

நாளைக்கு இந்த ஊரைவிட்டுக் கிளம்பித் தன் நேசத்துக்கும் பாசத்துக்கும் உரிய நண்பரும் தோழரும் வாழ்ந்த பெரிய நகரத்துக்குச் செல்ல விருந்ததை எண்ணி, அவன் ஆனந்தம் அடைந்தான். அந்தப் பெரிய நகரம் ஒரு காந்தக் கல்லைப்

போல் அவனை வசீகரித்தது; ஏனெனில் அங்கு வாழ்க்கையில் விறுவிறுப்பு இருந்தது, ஏராளமான ஜனங்கள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வாழ்ந்தனர், கடகடவென்று ஓடிய டிராம்வண்டிகளும், 'ஹார்ன்' ஊதிய மோட்டார் கார்களும் அவனை வசீகரித்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, அங்கு இருந்த பிரம்மாண்டமான பாக்டரி கட்டிடங்களும் புகைக்கரி படர்ந்த தொழிற்சாலைகளும் யந்திரங்களும், 'டிரான்ஸ்மிஷன்' பெல்ட்டுகளின் மெல்லிய நாதமும் அவனது இதயத்தைக் கவர்ந்தன. வெறிகொண்டதைப் போலச் சுழன்ற பிரம்மாண்டமான சம இயக்கச் சக்கரங்களையும், யந்திர எண்ணெயின் மணத்தையும் அவன் மனம் நாடியது. இவையெல்லாம் அவனது வாழ்வின் முக்கியமான அம்சங்களாகிவிட்டன. இந்த அமைதியான சிறு நகரத்தின் வீதிகளில் திரிந்துகொண்டிருந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. இந்தச் சிற்றூர் அவனுக்குச் சோர்வை உண்டாக்கியது. தனக்கு ஒட்டோ உறவோ இல்லாத அந்நிய ஊரில் இருந்ததாகவே அவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் இந்த உணர்ச்சியைக் கண்டு அவன் ஆச்சரியப்படவில்லை. இந்த ஊரில் பகலில் உலாவுவதுகூட அவனுக்கு வேதனையாக இருந்தது. தெருவில் நடந்து சென்ற பொழுது, அவனைப் பற்றி வம்பு அளக்கும் பெண்கள் வீண் பேச்சுப் பேசியதை அவன் கேட்காமலிருக்க முடியவில்லை.

''யார் அந்தப் பூச்சாண்டி?'' என்றாள் ஒருத்தி.

''அவன் க்ஷயரோகத்துக்கு இரையானவன் போலிருக்கிறது'' என்றாள் இன்னொருத்தி.

''நேர்த்தியான சொக்காயை அணிந்திருக்கிறான். சத்தியமாகச் சொல்கிறேன், அது திருடியதாகத்தான் இருக்க வேண்டும்'' என்றாள் மற்றொருத்தி.

இதேபோலப் பல பேச்சுக்கள். இவற்றைக் கேட்டுப் பாவெலுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

இந்தச் சுற்றுச் சார்பிலிருந்து அவன் தன்னை வேரோடு கத்தரித்துக் கொண்டு ரொம்பக் காலமாகிவிட்டது. பெரிய நகரத்துடன் அவனுக்கு உரமான உறவு ஏற்பட்டுவிட்டது. உழைப்பும் தோழமையும் உண்டாக்கிய உறவு அது; பலம் வாய்ந்தது; ஜீவசக்தியுடன் கூடியது.

பாவெல் யோசனையில் ஆழ்ந்தவனாய் நடைபோட்டான். திடீரென்று சிந்தனை கலைந்தபொழுது பைன் மரக் காட்டில் அருகில் தான் இருப்பதைக் கண்டான். பாதை இரண்டாகப் பிரியும் இடத்துக்கு முன்னால் அவன் சற்று நின்றான். அவனுக்கு வலதுபுறத்தில், பழைய சிறை இருந்தது; அதற்கும் காட்டுக்கும் இடையே ஒரு உயரமான முள் வேலி காட்சி தந்தது. சிறைக்கு அப்பால் வெண்மையான ஆஸ்பத்திரிக் கட்டிடம் புலப்பட்டது.

இங்கே, இந்தப் பரந்த மைதானத்தில்தான், தூக்குக் கயிறு வால்யாவின் உயிரையும் அவனது தோழர்களின் உயிர்களையும் குடித்தது. தூக்கு மேடை அமைந்திருந்த இடத்தில் பாவெல் மௌனமாக நின்றான். அங்கிருந்து மேட்டுக் கரைக்கு

நடந்து சென்ருன்; அங்கிருந்து இறங்கி, வெண் படைகளின் பயங்கர நர்த்தனத்துக்குப் பலியான தியாகிகள் அடக்கம் செய்யப்பட்டிருந்த சிறிய இடுகாட்டை அடைந்தான்.

அன்பு நெஞ்சினர் அந்தச் சவக்குழிகள் மீது பசுஞ் செடிகளைப் பரப்பியிருந்தனர். இடுகாட்டைச் சுற்றிலும் திருத்தமான பசுமை வேலி அமைந்திருந்தது. மேட்டுக் கரையின் உச்சியில் பைன் மரங்கள் மெல்லிய வடிவில் செங்குத்தாக வளர்ந்திருந்தன. அதன் சரிவுகளில் வளர்ந்திருந்த இளம்புல் மழமழப்பான பசுமைக் கம்பளமாகக் காட்சி தந்தது.

நகரத்தின் வெளிப்புறத்தில் உள்ள இந்த இடத்தில் ஒரு துயரமான அமைதி நிலவியது. மரங்கள் மட்டும் மென்மையாக ரகசியம் பேசின. புத்துயிர்ப் பெற்ற மண்ணிலிருந்து வசந்தத்தின் புது மணம் எழுந்து பரவியது.... இந்த இடத்தில்தான் பாவெலின் தோழர்கள் முகமலர்ச்சியோடும் அஞ்சா நெஞ்சத்தோடும் உயிர்த் தியாகம் செய்தார்கள். வறுமையில் பிறந்து வாடி வதங்கிய மக்கள், பிறப்பே அடிமை வாழ்வின் ஆரம்பம் என்ற அவல நிலைக்கு உள்ளாகியிருந்த மக்கள், எழில் நிறைந்த இன்ப வாழ்வைப் பெற்று அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தியாகிகள் சாவைத் தழுவினுர்கள்.

பாவெல் மெள்ள மெள்ளத் தன் கரத்தை உயர்த்தித் தன் குல்லாயை நீக்கினுன். அவனது இருதயத்தைத் துயரம் ஆட்கொண்டது.

மனிதனது மதிக்க முடியாத இனிய உடைமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவைதான் வாழ முடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கிவிட்டேனென்ற வருத்தம் வதைப்பதற்கு வாய்ப்பு அளிக்காத வகையில் அவன் சீராக வாழவேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழவேண்டும். உலகத்தின் தலைசிறந்த லட்சியத்துக்காக, மனிதகுலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பொன்னான மார்க்கத்துக்காக, நான் என் வாழ்வு முழுவதையும் சக்தி அனைத்தையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும்பொழுது கூறும் உரிமைபெறும் வகையில் அவன் வாழவேண்டும். திடீர் நோயோ, சோக விபத்தோ வாழ்வுக்கு வெடிவைக்கக் கூடுமாதலால், மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்தச் சிந்தனைகளுடன் பாவெல் இடுகாட்டிலிருந்து திரும்பினான்.

வீட்டில் அவனது தாயார் தன் மகனது பயணத்துக்காக வருத்தத்துடன் தயாரிப்பு செய்து கொண்டிருந்தாள். பாவெல் அவளைக் கவனித்தான். அவள் தன் கண்ணீரை தன்னிடமிருந்து மறைப்பதைப் பாவெல் கண்டுகொண்டான்.

அவனைத் தங்கச் செய்வதற்கு, அவள் கடைசியாக ஒரு முயற்சி செய்தாள்.

''என் பாவெல் கண்ணே! நீ இங்கேயே தங்கிவிடக் கூடாதா? இந்த முதுமைப் பருவத்தில் தன்னந் தனியாகவிருப்பதென்றால், எனக்கு எவ்வளவு துன்பம், தெரியுமா? எனக்கு எத்தனை மக்கள் இருந்தால் என்ன? அவர்கள் வளர்ந்தவுடன், தாயை விட்டுப் பிரிந்துபோகிறார்கள். நீ எதற்காக அந்த நகரத்துக்கு ஓட வேண்டும்? இங்கேயே இருந்தால் என்ன? ஒருவேளை, அங்கு யாராவது ஒரு நகரத்துச் சிங்காரி உன் மனதைக் கவர்ந்துவிட்டாளா? நீங்களெல்லாம் உங்களுடைய கிழத் தாயாரிடம் எதையும் சொல்வதில்லை. என்னிடம் ஒரு வார்த்தை கேட்காமல், ஆர்த்தியோம் திருமணம் புரிந்து கொண்டான். இந்த மாதிரி விஷயத்தில், நீ ஆர்த்தியோமை விட மோசமானவன். உங்கள் உடம்புக்கு ஏதாவது வந்தால்தான், என்னால் உங்களைப் பார்க்க முடிகிறது'' என்று முணுமுணுத்துக்கொண்டே, அவள் அவனுடைய சாமான்களைச் சேர்த்துத் திருத்தமாகக் கட்டினாள்.

பாவெல் அன்னையின் தோட்களைப் பிடித்துக் கொண்டு கூறினான்:

''அம்மா! எனக்கு எந்தச் சிங்காரியும் வேண்டாம். இனம் இனத்தோடுதான் சேரும் என்பதை நீ அறியாயா? நான் உல்லாச மைனர் என்று நீ சொல்கிறாயா?''

பிரிவாற்றாமையால் துன்புற்றத் தாயார் தன்னையும் அறியாமல் புன்னகை செய்தாள்.

''இல்லே, அம்மா. உலகத்திலுள்ள சகல முதலாளிகளுக்கும் முடிவுகட்டும் வரையில், எந்தப் பெண்ணேயும் நாடமாட்டேன் என்று நான் உறுதிமொழி கொடுத்திருக்கிறேன். அப்படியானுல், ரொம்பக்காலம் காத்திருக்க வேண்டுமென்று சொல்கிருயா? இல்லே அம்மா, இனிமேல் முதலாளிகள் நீண்டகாலத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாது.... சீக்கிரத்தில், ஒரு பெரிய குடியரசு மலரும்; அதில் உலக மாந்தர் அனேவரும் ஒன்றுபட்டு வாழ்வார்கள். அப்பொழுது வாழ்நாளெல்லாம் உழைத்துழைத்து ஓடாகியிருக்கும் உன்னேப்போன்ற கிழவர் கிழவிகள் இத்தாலிக்குப் போய் வசிப்பார்கள். இத்தாலி என்பது கடற்கரையிலுள்ள கதகதப்பான தேசம். எழில்கொஞ்சும் நாடு. அம்மா, அங்குக் கடுங்குளிர் கிடையாது. உன்னேப் போன்றவர்களேப் பணக்காரர்களின் மாளிகைகளில் வாழச்செய்வோம். நீங்களெல்லாம் கதிரொளியில் குளித்துக் காலம் தள்ளும் பொழுது, நாங்கள் அமெரிக்காவுக்குச் சென்று, அங்குள்ள முதலாளிகளுக்கு முடிவு கட்டுவோம்.''

இதைக் கேட்ட அன்னே கூறினுள்:

''மகனே! இது ஒரு இனிமையான கற்பனே. ஆனுல் இந்தக் கனவு நனவாகும் வரையில் நான் உயிர்வாழ மாட்டேன்.... நீ உன் தாத்தா மாதிரியே இருக்கிருய். அவர் ஒரு மாலுமியாக வேலே பார்த்தார்; அவர் மனதிலும் நவநவமான கருத்துக்கள் ஊறிக்கொண்டேயிருந்தன. வழிப்

பறிக்காரன் போல் வாழ்ந்தார். ஆண்டவன் அவரை மன்னிப்பாராக! ஸெவஸ்தோபல் போரில்* ஊனமானார்; ஒரு காலையும் ஒரு கையையும் பறிகொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். அவரது மார்பில் ஜார் மன்னர் இரண்டு சிலுவைகளைத் தொங்கவிட்டார், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை நாடாவில் கட்டிச் சூட்டினார். ஆனால் அவர் பயங்கரமான வறுமையில் இறந்தார். அவர் முன்கோபி. ஒருதடவை, அவர் தம் ஊன்றுகோலால் ஒரு அதிகாரியின் மண்டையில் அடித்துவிட்டார். அதற்காக அவர் ஒரு வருஷம் சிறைத் தண்டனைக்கு உள்ளானார். அப்பொழுது, அவருடைய ராணுவப் பதக்கங்கள் அவருக்கு உதவவில்லை. ஆம்! நீ உன் தாத்தாவைத்தான் கொண்டிருக்கிறாய்; சந்தேகமே இல்லை.''

''சரி, அம்மா. இவ்வாறு துக்கத்துடன் விடைபெறக் கூடாது. எனது அக்கார்டியனை எடு, வாசிக்கிறேன். அதைத்தொட்டு, ஒரு யுகமாகி விட்டது.''

அவன் விசை வர்க்கத்தின்மீது முகத்தைக் கவிழ்த்து வாசிக்கத் தொடங்கினான். அவனது

---

* ஸெவஸ்தோபல் போர்—1853-56ம் ஆண்டுகளில், ருஷ்யாவுக்கும் இங்கிலாந்து, பிரான்ஸ், துருக்கி, சர்தீனி ஆகிய நாடுகளின் கூட்டிற்கும் இடையே நடந்த போர். பொருளாதார, அரசியல் நலன்கள் மோதிக்கொண்டதின் விளைவாகத் தோன்றிய இந்தப் போர், பெரும்பாலும் கிரீமியாவிலும் கருங்கடலிலும் நடைபெற்றது.

இசையைக் கேட்ட தாயார், அதில் உண்டாகி யுள்ள புதிய தன்மையைக் கண்டு அதிசயித்தாள். அவன் இதற்குமுன் இம்மாதிரி வாசித்ததில்லை. ஓட்டம், துள்ளலுடன்கூடிய களியாட்ட இசைக்கு, கேட்போரை மயக்கிக் கிறுகிறுக்கச் செய்யும் சந்தத்துக்கு, பாவெல் நகரெங்கும் புகழ்பெற்று இருந்தான். ஆனால் இப்பொழுது அவனது வாசிப் பில் அந்தக் களிவெறி உண்டாகவில்லை. ஆனால் அவனது விரல்கள் அவற்றின் வித்தையையோ திறனையோ இழந்துவிடவில்லை. அந்த விரல்கள் எழுப்பிய இன்னிசையில் ஒரு புதிய நட்பமும் திட் பமும், வளமையும் ஆழமும் அமைந்திருந்ததை அன்னை உணர்ந்தாள்.

பாவெல் ஸ்டேஷனுக்குத் தனியாகச் சென் றான்.

ரயிலில் விடைபெறும் பொழுது, தாயாருக் குத் தாக்குப்பிடிக்க முடியாத துக்கம் ஏற்படு மென்று அஞ்சி, அவன் அவளை வீட்டிலேயே இருக் கும்படி வற்புறுத்தி இணங்கச் செய்தான்.

ரயிலில் ஜனங்கள் நெருக்கியடித்துக் கொண்டு ஏறிக் குவிந்தார்கள். பாவெல் உச்சாணித் தட்டு கள் ஒன்றில் ஏறிக் கொண்டான். அங்கிருந்து ஆவேசமடைந்தவர்களையும், கூச்சல் போட்டுக் கொண்டு வழிநடையில் சென்று கொண்டிருந்த வர்களையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

பிரயாணிகள் பெட்டிக்குள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்; தமது மூட்டைகளை

இருக்கைகளின் அடியில் இழுத்து வைத்துக் கொண்டிருந்தனர்.

ரயில் நகரத் தொடங்கியதும் சந்தடி அடங்கியது. வழக்கம் போல பிரயாணிகள் வயிற்றை நிரப்பும் பணியில் ஈடுபட்டார்கள்.

சீக்கிரமாகவே, பாவெல் தூங்கிவிட்டான்.

கீவ் நகரத்தை அடைந்தவுடன், பாவெல் நகரத்தின் மையத்தில் இருந்த கிரெஸ்ஷாத்திக் தெருவுக்குச் சென்றான். அவன் மெதுவாக படிகளின் மீது ஏறினான். எல்லாம் முன்போலவே இருந்தன. எதுவும் மாறுதல் அடையவில்லை. பளபளப்பான கிராதியைக் கையால் தடவிக்கொண்டே, அவன் பாலத்தைக் கடந்தான். அவன் இறக்கத்தில் அடி எடுத்துவைப்பதற்குமுன் சற்று நின்று, சுற்று முற்றும் நோக்கினான். பாலத்தில் ஒரு நபர்கூட இல்லை. இராக்காலத்தின் எல்லையில்லா காட்சிகளின் மாட்சியும் மகோன்னதமும் அவனது கண்களைக் கவர்ந்தன. அடிவானம், அந்தகாரத்தின் வெல்வெட் மடிப்புகளால் போர்த்தப்பட்டிருந்தது. விண்மீன்கள் பாஸ்பரக் காந்தியுடன் பிரகாசித்தன. கீழே நம் கண்ணுக்குப் புலப்படாதவாறு, வானமும் வையமும் சந்திக்கும் இடத்தில், நகரம் லட்சக் கணக்கான விளக்குகளின் ஒளிகொண்டு, இருளைச் சிதற வடித்தது....

வாதப் பிரதிவாதம் செய்த குரல்கள் இரவின் அமைதியைக் குலைத்தன; பாவெலின் சிந்தனையைக் கலைத்தன. அந்த வழியே யாரோ

சிலர் வந்து கொண்டிருந்தனர். வைத்தகண் வாங்காமல் நகர விளக்குகளை நோக்கிக் கொண்டிருந்த பாவெல் தன் பார்வையை அவற்றிலிருந்து விலக்கிவிட்டுப் படிக்கட்டில் இறங்கினுன்.

பாவெல் விசேஷ இலாகா காரியாலயத்துக்குச் சென்ருன். அங்கு இருந்த சிப்பந்தி ஷுஹ்ராய் நகரை விட்டுச் சென்று பல நாட்களாகி விட்டதாகத் தெரிவித்தான்.

பாவெல் உண்மையிலேயே பியோதரின் உற்ற நண்பனு என்பதை அறிந்து கொள்வதற்காக, அந்தச் சிப்பந்தி அவனைத் துருவித் துருவிக் கேள்வி கேட்டான். இறுதியாக, பியோதர் துருக்கிஸ்தான் போர்முனையில் வேலை செய்வதற்காக டாஷ்கண்டுக்கு இருமாதங்களுக்கு முன்பே அனுப்பப்பட்டிருப்பதாக அவன் பாவெலிடம் கூறினுன். இந்தச் சேதியைக் கேட்டுப் பாவெல் அதிர்ச்சி அடைந்தான். எனவே, மேற்கொண்டு விவரங்களைக் கேட்டறியும் எண்ணமில்லாமல், அலுவலகத்திலிருந்து வெளியேறினுன். திடீரென்று களைப்பு மேலிட்டவனுய், ஓய்வு எடுப்பதற்காகக் கதவு நிலைப்படியில் உட்கார்ந்தான்.

ஒரு டிராம் வண்டி கடகடவென்று உருண்டோடி, வீதியெல்லாம் பேரொலி நிரம்பச் செய்தது. வீதியில் ஒரே ஜன பெருக்கு. பெண்கள் உல்லாசமாகச் சிரித்துக் கொண்டு செல்வதைப் பாவெல் பார்த்தான். ஒருவன் கடகடவென்று கனத்த குரலில் பேசிக்கொண்டு சென்ருன்; ஒரு இளைஞன் மெல்லிய குரலில் உரையாடினுன்; ஒரு கிழ

வன் கஷ்டப்பட்டு மூச்சுவிட்டுக் கொண்டே கர கரத்த குரலில் பேசினன். அவசரக்கோலம் அள் ளித் தெளித்தாற்போல விரைந்து செல்லும் கூட் டத்தின் சந்தடி ஓயவேயில்லை. எப்பொழுதும் துரிதமான நடை. ஒளி நிறைந்த டிராம் வண்டி கள், மோட்டார்களின் முகவிளக்குகளின் திடீர் ஒளி, அருகிலுள்ள சினிமாத் தியேட்டரில் விளம் பரக் கூண்டிலுள்ள மின் விளக்கின் வெளிச்சம். எங்கும் மக்கள். அவர்களது இடைவிடாப் பேச்சுக் குரலினல் நிரம்பிய தெருக்கள். இதுதான் ஒரு பெரிய நகரத்தின் மாலை நேரம்.

பாவெல், பியோதர் நகரில் இல்லை என்ற சேதி யால் ஏற்பட்ட துன்பத்தை, வீதியின் சந்தடியில் சற்று மறந்தான். அவன் இப்பொழுது எங்கு போவது? அவனது நண்பர்கள் ஸாலோமென்காவில் வசித்தார்கள். ஆனல் அந்தப் பேட்டை ரொம்பத் தூரத்தில் இருந்தது. சர்வகலாசாலைத் தெரு அருகில் இருந்தது; அதில் உள்ள ஒரு வீடு பாவெலின் நினைவில் பதிந்திருந்தது. அவன் அங்குதான் போவான். பார்க்கப் போனல், பியோதருக்கு அடுத்தபடி, அவன் அதிக ஆர்வத்துடன் காண விரும்பியது ரீத்தா வைத்தானே? ஒருவேளை, அக்கீமின் வீட்டில் இரவைக் கழிப்பதற்கு அவன் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

ஓரத்து ஜன்னலில் வெளிச்சம் இருப்பதைப் பாவெல் தூரத்திலேயே கண்டு கொண்டான். அவன் சிரமப்பட்டுத் தன் உள்ளக் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு, பளுவான வெளிக் கத

வைத் திறந்தான். சில விஞடிகள் படிக்கட்டின் அருகில் நின்முன். கதவுக்கு மறு புறத்திலிருந்து பேச்சுக் குரல்கள் கேட்டன. யாரோ ஒருவன் கித்தார் வாசித்துக் கொண்டிருந்தான்.

"அப்படியா? இப்பொழுதெல்லாம் இசைக் கருவி வாசிப்பதைக் கூட அனுமதிக்கிருளா? அப்படியாளுல், கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருக்கிருள் போலும்!" என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். மன எழுச்சியை அடக்குவதற்காக உதட்டைக் கடித்துக்கொண்டே, அவன் கதவை இலேசாகத் தட்டிஞன்.

சுருண்ட கேசத்தை உடைய ஒரு மங்கை கதவைத் திறந்தாள். அவள் அவனை உசாவுகிற பாணியில் நோக்கி, "உங்களுக்கு யாரைப் பார்க்க வேண்டும்" என்று விளவிஞள்.

அவள் கதவைத் திறந்து வைத்திருந்தாள். விரைவாக அறைக்குள் நோக்கிய பாவெல் அங்கிருந்த நிலைமையைக் கண்டவுடன் ரீத்தா அங்கு இல்லை என்பதை உணர்ந்தான்.

"நான் தோழர் உஸ்திஞேவிச்சைப் பார்க்கலாமா?"

"அவள் இங்கு இல்லை. போன ஜனவரியில் அவள் கார்க்கவ் சென்றுள். இப்பொழுது மாஸ்கோவில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்."

"தோழர் அக்கிம் இங்கு இருக்கிருஞ? அல்லது அவனும் ஊரை விட்டுப் போய் விட்டாஞ?"

''அவனும் இங்கு இல்லை. அவன் இப்பொழுது ஒதேஸ்ஸா மாகாணக் கம்ஸமோல் செயலாளனாக இருக்கிறான்.''

பாவெலுக்குத் திரும்பிப் போவதைத் தவிர வேறு வழியில்லை. நகருக்கு வந்தபொழுது ஏற்பட்ட ஆனந்தமும் எழுச்சியும் இப்பொழுது மங்கிவிட்டன.

இப்பொழுது, அவன் இரவுப்பொழுதைக் கழிப்பதற்கு இடம் கண்டுபிடித்தாக வேண்டும்.

''ஊரைவிட்டுப் போய்விட்ட பழைய நண்பர்களைக் காண முயற்சித்தால், கால்கடுக்க நடந்து கொண்டிருக்கலாம்'' என்று அவன் தனக்குள்ளே முணு முணுத்துக் கொண்டான். ஏமாற்றம் அதிகம் என்றாலும், இன்னொரு முயற்சி செய்து பார்க்கத் தீர்மானித்தான். பன்கிராத்தவ் ஊரில் இருக்கிறானா என்று பார்த்துவிட முடிவு செய்தான். அந்தத் துறைமுகத் தொழிலாளி ஆற்றுத் துறைமுகத்துக்கு அருகில் வசித்தான். அந்த இடம் ஸாலோமென்கா பேட்டையை விட அருகில் இருந்தது.

பாவெல், பன்கிராத்தவ் வீட்டை அடைந்த பொழுது, களைத்துச் சோர்ந்துவிட்டான். ஒரு காலத்தில் மஞ்சள் வர்ணப் பூச்சைக்காட்டிப் பெருமைப்பட்ட அந்தக் கதவைத் தட்டியபொழுதே, ''பன்கிராத்தவ் இங்கு இல்லையென்றால், இனி எவரையும் தேடமாட்டேன். ஒரு படகில் இரவைக் கழிப்பேன்'' என்று அவன் முடிவு செய்து கொண்டான்.

கழுத்தில் தலைக்குட்டையைக் கட்டிக்கொண்டிருந்த ஒரு கிழவி கதவைத் திறந்தாள். அவள் பன்கிராத்தவின் தாயார்.

''பன்கிராத்தவ் வீட்டில் இருக்கிருனு, அம்மா?''

''இப்பொழுதுதான் வந்தான்.''

அவளுக்குப் பாவெலை அடையாளம் தெரியவில்லை. அவள் உட்பக்கம் திரும்பி, ''கேனு, உன்னைத் தேடி யாரோ வந்திருக்கிருன்'' என்ருள்.

பாவெல் அவளைப் பின்தொடர்ந்து அறைக்குள் சென்ருன்; தரையில் தன் சாமான் பையை வைத்தான். பன்கிராத்தவ் மேஜைக்கு முன் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவன் முகத்தைத் திருப்பி, புதிதாக வந்தவனை விரைவாக நோக்கினுன்.

''என்னுடன் பேச வேண்டுமானுல், உட்கார்ந்துகொண்டு, சொல்லவேண்டியதைச் சொல். நான் சாப்பிட்டுக்கொண்டே, கேட்டுக்கொள்கிறேன். காலையிலிருந்து ஒரு துண்டு ரொட்டிகூடச் சாப்பிடவில்லை'' என்று பன்கிராத்தவ் கூறினுன். உடனே அவன் ஒரு பெரிய மரக் கரண்டியைக் கையில் எடுத்துக்கொண்டான்.

பக்கத்தில் இருந்த ஒரு உடைந்த நாற்காலியில் பாவெல் அமர்ந்தான். அவன் தன் குல்லாயைக் கையில் எடுத்தான்; பழைய வழக்கப்படி, அந்தக் குல்லாயால் நெற்றியைத் துடைத்துக்கொண்டான்.

''பன்கிராத்தவ் கூட அடையாளம் கண்டு

கொள்ள முடியாத அளவுக்கு நான் உருமாறிவிட்டேனா?'' என்று அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

பன்கிராத்தவ் ஓரிரண்டு கரண்டி உணவை உள்ளே தள்ளினான். அவனைப் பார்க்க வந்தவன் ஒன்றும் பேசாமல் இருந்ததால், அவனை நோக்கத் திரும்பினான்.

''ஏனிந்தத் தயக்கம்? பேசு. உன் மனதில் என்ன இருக்கிறது?'' என்று வினவிக்கொண்டே பாவெலைப் பார்த்தான்.

கையில் எடுத்த ரொட்டித்துண்டு வாய்க்கு எட்டாமல், கை இடையில் வேலை நிறுத்தம் செய்து விட்டது. அவன் வியப்புற்றுக் கூசிய கண்களால் விருந்தாளியைப் பார்த்தான்.

''ஆ!... இது என்ன?... அப்படியா?...''

பன்கிராத்தவின் சிவந்த முகத்தில் காட்சி தந்த குழப்பத்தையும் திகைப்பையும் பாவெலால் தாள முடியவில்லை. அவன் 'கொல்' லென்று சிரித்தான்.

''பாவெல்! நீ செத்து விட்டாய் என்று அல்லவா நாங்கள் எண்ணினோம்! சற்றுப்பொறு! உன் பெயர் என்ன?'' என்றான் பன்கிராத்தவ்.

இந்த இரைச்சலைக் கேட்டு, பன்கிராத்தவின் தாயாரும் சகோதரியும் அடுத்த அறையிலிருந்து ஓடிவந்தார்கள். மூவரும் பாவெலைக் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். இறுதியாக, தங்கள் முன் இருப்பது சாட்சாத் பாவெல்தான் என்று நம்பினார்கள்.

வீட்டில் எல்லோரும் உறங்கி நெடு நேரமான பிறகும், கடந்த நான்கு மாத நிகழ்ச்சிகளைப் பற்றிப் பன்கிராத்தவ் பாவெலிடம் விவரித்துக் கொண்டிருந்தான்.

''சென்ற குளிர்காலத்தில், ஷார்க்கியும் துபாவாவும் கார்க்கவுக்குப் போனார்கள். அந்தப் போக்கிரிகள் எங்கு போனார்களென்று எண்ணுகிறாய்! கம்யூனிஸ்ட் சர்வகலாசாலைக்கு! ஆம்! கம்யூனிஸ்ட் சர்வகலாசாலைக்குத்தான். பிரவேசப் பரீட்சைப் படிப்பில் முதலில் சேர்ந்தோம். நாங்கள் பதினைந்து பேர் அதில் சேர்ந்தோம். எனக்கும் அதில் அக்கறை உண்டாயிற்று. அதனால் நான் மனப்பூர்வமான ஆவலுடன் சேர்ந்தேன். பேதைமையைப் போக்குவது நல்லது தானே என்று எண்ணினேன். ஆனால் அந்தப் பரீட்சை அதிகாரிகள் நான் தேர்ச்சி அடையவில்லை யென்று சொல்லிவிட்டார்கள். ஆம், நிஜமாகத் தான்!''

அந்த நிகழ்ச்சியின் நினைவு வந்தபொழுது, அவன் ஆத்திரத்துடன் மூச்சை இழுத்தான்; மேலும் கூறினான்:

''முதலில், எல்லாம் சாதகமாகத்தான் இருந்தன. எனக்குச் சகல தகுதிகளும் இருந்தன. நான் கட்சி அங்கத்தினன், நீண்ட காலமாகக் கம்ஸமோலில் இருந்து வருகிறேன். என் பூர்வீகத்தில் கோளாறு ஒன்றுமில்லை. ஆனால் அரசியல் அறிவுப் பரீட்சை வந்தபொழுது, எனக்கு ஆபத்து ஏற்பட்டது.

''பரீட்சைக் குழுவில் இருந்த ஒரு மனிதருக்கும் எனக்கும் வாதம் தடித்தது. அவர் என்னிடம் ஒரு அபத்தமான சின்னக் கேள்வியைக் கேட்டு வைத்தார்: 'தத்துவ ஞானத்தைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்' என்று அவர் கேட்டார். உண்மையில், எனக்கு இந்த இழவைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால் துறைமுகத்தில் என்னோடு ஒருவன் வேலை செய்துகொண்டிருந்தான்; முன்னால் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்தவன்; பிறகு நாதியில்லாத நாடோடியாகி, விளையாட்டுக்காகத் துறைமுகத் தொழிலாளியானவன். அவன் எங்களுக்குச் சொல்லியிருக்கிறான். எப்பொழுதோ ஒரு காலத்தில் கிரேக்க நாட்டில் படித்த மேதாவிகள் இருந்தனரென்றும், அவர்கள் தங்களைப் பற்றி நன்கு அறிந்தார்களென்றும், அவர்கள் தத்துவ ஞானிகள் என்று அழைக்கப்பட்டனரென்றும் அவன் சொல்லியிருந்தான். அவர்களில் ஒருவன்—பெயர் மறந்துவிட்டது, டையோஜினிஸோ, அதைப் போன்ற வேறு ஒரு பெயரோ தெரியவில்லை—வாழ்நாளெல்லாம் ஒரு பீப்பாயில் வசித்தானும்.... அவர்களிடையே எவன் ஒருவன் ''கருப்பை, வெளுப்பு'' என்றும் ''வெளுப்பை, கருப்பு'' என்றும் நாற்பது தடவைகள் நிரூபிக்கிறானோ அவனே அதிக அறிவாளியாகக் கருதப்பட்டான். மோசடிக்காரர் கூட்டம்! அந்த மாணவன் இவர்களைப்பற்றிச் சொன்னதெல்லாம் என் நினைவில் இருந்ததால், 'இந்தப் பரீட்சைக் குழு அதிகாரி என்னைக் காலை

வாரிவிடப் பார்க்கிறார்' என்று எண்ணினேன். அந்த ஆசிரியர் என்னைக் கள்ளப் பார்வையுடன் பார்ப்பதாக எனக்குத் தோன்றியது. 'தத்துவ ஞானம் என்பது ஒரு செப்பிடு வித்தை; வெறும் பிதற்றல். அதை நான் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டேன். நமது கட்சியின் வரலாற்றைப்பற்றிக் கேளுங்கள்; அது வேறு விஷயம்; அதைப்பற்றி வாதிக்கத் தயார்' என்று நான் கூறினேன். அதைக் கேட்டவுடன் அவர்கள் என்னைப்பற்றிச் சக்கை போடு போட்டார்கள். தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி இத்தகைய விஞ்ஞதமான கருத்துக்களை எனக்கு யார் போதித்தாரென்று கேட்டார்கள். உடன் நான் அந்த மாணவன் சொன்னவைகளி லிருந்து ஏதோ இன்னும் சில விஷயங்களைச் சொன் னேன். அதைக் கேட்டு, பரீட்சைக் குழு அங்கத்தி னர் அனைவரும் வயிறு நோகச் சிரித்தார்கள். அவர்கள் என்னைக் கேலி செய்வதை நான் புரிந்து கொண்டேன். என் மனம் புண்பட்டது. 'என்னை மடையன் என்று எண்ணுகிறீர்களா?' என்று கேட்டுவிட்டு வெளியேறி விட்டேன்.

''பிறகு ஒருநாள், அந்தப் பரீட்சை அதிகாரி, கட்சி மாகாணக் கமிட்டியில் என்னைப் பிடித்துக் கொண்டார், மூன்று மணி நேரத்துக்கு என்னிடம் ஒரு பிரசங்கம் செய்தார். துறைமுகத்தில் வேலை செய்த மாணவன் விஷயங்களைக் குழப்பிவிட்டா னென்று அறிந்தேன். உண்மையில், தத்துவ ஞானம் மிக முக்கியமானது என்பதையும் புரிந்து கொண்டேன்.

''துபாவாவும் ஷார்க்கீயும் பரீட்சையில் தேறினார்கள். துபாவா எப்பொழுதுமே படிப்பில் கெட்டிக்காரனாயிருந்தான். ஆனால் ஷார்க்கீய் என்னை விடச் சிறந்தவன் அல்ல. அவனுடைய விருது உதவிசெய்திருக்கவேண்டும். எப்படியானால் என்ன? நான் இங்கே இருக்கிறேன். அவர்கள் போனபின், துறைமுகத்தில் சாமான்களை ஏற்றி இறக்கும் வேலைகளை நிர்வகிக்கும் உதவி மானேஜ ராக இருக்கிறேன். நான் எப்பொழுதுமே இளைஞர் விஷயமாக மானேஜர்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தேன். இப்பொழுது நானே மானே ஜராகி விட்டேன். இப்பொழுதெல்லாம், என் இலாகாவில் யாராவது சோம்பேறி அல்லது மூடன் தென்பட்டால், அவனுக்கு மானேஜர் என்ற முறையிலும் கம்ஸமோல் காரியதரிசி என்ற முறை யிலும் சரியானபடி கொடுக்கிறேன். யாரும் என் கண்ணில் மண்ணைத் தூவமுடியாது. சரி, சுய சரிதத்தை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். வேறு உனக்கு என்ன சொல்ல வேண்டும்? அக்கி மைப் பற்றி உனக்கு முன்பே தெரியும். பழைய ஆட்களில், துப்தா மட்டுமே மாகாணக் கமிட்டி யில் மிஞ்சியிருக்கிறான். இன்னும் பழைய வேலை யைத்தான் செய்துகொண்டிருக்கிறான். தோக்க ரெவ், கட்சியின் ஸாலோமென்கா வட்டாரக் கமிட் டிக்குக் காரியதரிசியாக இருக்கிறான். உனது கம்யூன் தோழனை ஓக்குனேவ், கம்ஸமோலின் வட்டாரக் கமிட்டியில் இருக்கிறான். தால்யா, அரசியல் போதனை இலாகாவில் வேலை செய்கிறாள்.

த்ஸெவெத்தாயெவ் ரயில்வே வார்க்ஷாப்பு களில் உன் வேலையைச் செய்து கொண்டிருக்கி ருன். எனக்கு அவனிடம் நல்ல பழக்கமில்லை. மாகாணக் கமிட்டியில் இடையிடையே சந்திக்கி ருேம்; அவ்வளவுதான். பையன் அசடல்ல; ஆனல் தன் மானமுள்ளவன். ஆன்னவை ஞாபகம் இருக் கிறதா? அவளும் ஸாலோமென்காவில்தான் இருக் கிருள்; கட்சியின் வட்டாரக் கமிட்டியில் மாதர் இலாகாவுக்குப் பொறுப்பாக வேலை செய்கிருள். மற்றவர்களைப் பற்றி நான் உன்னிடம் சொல்லி விட்டேன். ஆம், பாவெல்! கட்சி பலரைப் படிப் பதற்காக அனுப்பியிருக்கிறது. நமது பழம் தீவிரத் தொண்டர்கள் யாவரும் புத்தகமும் கையு மாக இப்பொழுது கட்சி-நிர்வாக ஊழியர்களுக் கான மாகாணப் பள்ளியில் உட்கார்ந்து கொண் டிருக்கிருர்கள். என்னையும் அடுத்த வருஷம் அனுப்புவதாகக் கூறியிருக்கிருர்கள்.''

நடு நிசிக்குப் பின் நெடுநேரம் ஆனபிறகே, அவர்கள் இருவரும் படுத்து உறங்கினர். மறு நாள் காலை, பன்கிராத்தவ் வேலைக்குப் போன பின்பே, பாவெல் விழித்துக் கொண்டான். பன் கிராத்தவைப் பெரிதும் ஒத்திருந்த அவனது சகோதரி தூஸ்யா—ஒரு வலிவுள்ள நங்கை, பன் கிராத்தவைப் போன்ற முகசாடை படைத்தவள் —பாவெலுக்குக் காலை ஆகாரம் பரிமாறினுள்; அவன் அதை அருந்தியபொழுது, அவள் சுவை யுடன் பேசிக்கொண்டேயிருந்தாள். கப்பல் மெக் கானிக் ஆன மூத்த பன்கிராத்தவ் வீட்டில் இல்லை.

பாவெல் வெளியே கிளம்பிய பொழுது, ''நண்பகல் சாப்பாட்டுக்கு வரவேண்டும், மறந்து விடாதே. நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்'' என்று துரஸ்யா ஞாபகப்படுத்தினாள்.

எப்பொழுதும்போல், மாகாணக் கமிட்டியின் அறை சுறுசுறுப்பான செயல் நிலையமாக விளங்கியது. வெளிக்கதவு திறந்து மூடிய வண்ணமாக இருந்தது. நடைக்கூடங்களிலும் அலுவலக அறைகளிலும் ஒரே கூட்டம். நிர்வாக இலாகா அறையில், டைப் அடிக்கும் யந்திரங்கள் வேலை செய்துகொண்டிருந்தன.

பழகிய தோழர் எவராவது தென்படுவாரா என்று நோக்கிக் கொண்டே, பாவெல் நடைக்கூடத்தில் சிறிது நேரம் நின்றான். தெரிந்த நபர் ஒருவரையும் காணவில்லை. அவன் காரியதரிசியைக் காணச் சென்றான். நீலநிறமான ருஷ்யச் சட்டையை அணிந்திருந்த காரியதரிசி ஒரு பெரிய மேஜைக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தான்; பாவெல் அறையில் பிரவேசித்தவுடன், அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் காரியதரிசி தொடர்ந்து எழுதினான்.

பாவெல் அவனுக்கு எதிரில் அமர்ந்தான்; அக்கீழுக்கு வார்ஸாக வந்திருந்த அந்தப் புதியவனை ஆராய்ந்தான்.

கழுத்தையும் மறைத்திருந்த சட்டையுடன் கூடிய காரியதரிசி, தான் எழுதியதை முடித்து

விட்டுப் பாவெலைப் பார்த்து, ''என்ன காரியமாக இங்கு வந்தீர்கள்?'' என்று வினவினான்.

பாவெல் தன் கதை முழுவதையும் விவரித்தான்.

''தோழரே, என் பெயரை அங்கத்தினர் ஜாப்தாவில் சேர்த்துவிட்டு, என்னை ரயில்வே வார்க்ஷாப்புக்கு அனுப்ப வேண்டும். அதற்குத் தேவையான கட்டளையைப் பிறப்பிக்கக் கோருகிறேன்'' என்று கூறிப் பாவெல் தன் கதையை முடித்தான்.

காரியதரிசி நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

''உன் பெயர் ஜாப்தாவில் தனக்குரித்தான இடத்தைப் பெற்றுவிடும். அதைச் சொல்லத் தேவையில்லை'' என்று கூறிவிட்டு, அவன் தயக்கத்துடன் தொடர்ந்து பேசினான்: ''உன்னை வார்க்ஷாப்புக்கு அனுப்புவது நன்றாயிருக்காது. அங்கு த்ஸெவெத்தாயெவ் இருக்கிறான்; அவன் மாகாணக் கமிட்டியில் அங்கத்தினன், உனக்கு வேறு வேலை ஏதாவது கொடுக்க வேண்டும்.''

பாவெலின் கண்கள் ஒடுங்கின.

''த்ஸெவெத்தாயெவின் வேலையில் தலையிடும் எண்ணம் எனக்கு இல்லை. நான் கம்ஸமோல் காரியதரிசியாகப் பொறுப்பேற்கப் போவதில்லை; என் தொழிலைச் செய்யப் போகிறேன். நான் இன்னும் சுகவீனமாயிருப்பதால், எனக்கு வேறு வேலை நிச்சயிக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.''

காரியதரிசி பாவெலின் கோரிக்கைக்கு இணங்கினுன்; ஒரு துண்டுக் காகிதத்தில் சில சொற்களைக் கிறுக்கினுன்.

''இந்தக் காகிதத்தைத் துப்தாவிடம் கொடு. அவன் சகல ஏற்பாடுகளையும் செய்வான்.''

ஊழியர் நிர்வாக இலாகாவில், துப்தா தனது துணைநிர்வாகியைக் காரசாரமாகக் கண்டித்துக் கொண்டிருந்ததைப் பாவெல் கண்டான். அவன் அரை நிமிஷம் அந்தச் சூடான வாக்குவாதத்தைக் கேட்டுக்கொண்டே காத்திருந்தான். ஆனுல் வாதம் தடித்து நீண்ட நேரத்துக்கு நீடிக்குமென்பதைக் கண்டவுடன், அவன் துப்தாவின் வாசாலகப் பேச்சைத் தடுத்து நிறுத்தினுன்.

''துப்தா, இன்னெரு சமயம் இந்த வாதத்தை முடித்துக்கொள். என் சம்பந்தப்பட்ட ஏடுகளைச் சீர்செய்வது குறித்து, நான் உனக்கு ஒரு குறிப்புக் கொண்டுவந்திருக்கிறேன்.''

துப்தா காகிதத்தையும் பாவெலையும் மாறி மாறிப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கடைசியில், நிலைமை புரிந்தது.

''நில்! சற்றுப்பொறு! அப்படியாஞல் நீ இறந்துபோகவில்லையா? அடாடா! இப்பொழுது நாம் என்ன செய்வது? உன் பெயரை ஜாப்தாவிலிருந்து நீக்கிவிட்டோம். நானே உன் கார்டை மத்தியக் கமிட்டியிடம் சேர்ப்பித்தேன். மேலும், அங்கத்தினர் கணக்கு எடுத்தபொழுதும், உன் பெயர் விட்டுப்போய்விட்டது. கம்ஸமோலின் மத்தியக் கமிட்டி அனுப்பியிருக்கும் சுற்றறிக்கைப்

படி, மறு கணக்கு எடுத்தபொழுது பதிவு செய்து கொள்ளாதவர்கள் கம்ஸமோலிலிருந்து அகற்ற பட்டவர்களாவார்கள். எனவே, உனக்கு ஒரே வழிதான் இருக்கிறது. முறைப்படி, மறுபடியும் அங்கத்தினனுகச் சேர வேண்டும்'' என்று வாதத் துக்கு இடமில்லாத வகையில் துப்தா பேசினுன்.

பாவெலுக்கு ஆத்திரம் வந்தது.

''நீ இன்னும் பழையமாதிரிதானிருக்கிருயா? வாலிபன், ஆனுல் அலுவலகங்களில் வேலை செய் யும் பழம் பெருச்சாளிக்களை விட மோசமாக இருக்கிருய். நீ என்றுதான் மனிதத் தன்மையுடன் நடக்கக் கற்றுக் கொள்ளுவாய்?''

ஒரு தெள்ளுப்பூச்சி கடித்தமாதிரி, துப்தா துள்ளி எழுந்தான்.

''நீ எனக்குப் பிரசங்கம் செய்யவேண்டாம். இங்குப் பொறுப்பில் இருப்பவன் நான். மீறு வதற்காக அல்ல, கீழ்ப்படிந்து நடப்பதற்காகத் தான், சுற்றறிக்கைகள் அனுப்பப்படுகின்றன. நீ என்னை அவமதித்துப் பேசியதற்கு, 'பெருச்சாளி' என்று இழிவுபடுத்தியதற்கு, உனக்குச் சரியான பாடம் போதிக்கிறேன்; இரு, இரு.''

துப்தா அந்தக் கடைசி வார்த்தைகளை அச்சுறுத்தும் தொனியில் பேசினுன். சவால் விடுக்கும் முறையில், பிரிக்கப்படாத தபால்கட்டு குவியல் ஒன்றை தன் பக்கமாக இழுத்துக் கொண் டான். தன் பாவனைகள் யாவற்ருலும் பேச்சு முடிந்து விட்டது என்பதற்கான அறிகுறிகளைக் காட்டினுன்.

பாவெல் மெதுவாகக் கதவை நோக்கி நடந்தான். பிறகு எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டு, அவன் மேஜைக்குத் திரும்பச் சென்றான்; துப்தாவுக்கு முன்னால் கிடந்த காரியதரிசியின் குறிப்பைக் கையில் எடுத்துக்கொண்டான். துப்தா அவனை உன்னிப்பாகக் கவனித்தான். எப்பொழுதும் ஜாக்கிரதையாய் இருக்கும் பெரிய செவிகளைக் கொண்ட இந்த இளங்கிழவன் எளிதில் கோபங்கொள்பவனாகவும், வீண்குற்றம் கண்டு பிடிப்பவனாகவுமிருந்தான். அவனைக் காண்பதற்கு அருவருப்பாகவும், ஆனால் அதே நேரத்தில் வேடிக்கையாகவுமிருந்தது.

பாவெல் அமைதியாகவும் கிண்டலாகவும் பேசினான்:

''சரி, சரி. நீ விரும்பினால்; புள்ளி விவரங்களை மாறுபடுத்த முயற்சிப்பதாக என்மீது குற்றம் சாட்டலாம். ஆனால் முன்னறிவிப்பு இல்லாமல் இறப்பவர்கள் மேல் நீ எப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பாய்? பார்க்கப்போனால், விருப்பமிருந்தால், எவரும் நோயை வரவழைத்துக் கொள்ளலாம்; எவரும் உயிரை நீக்கிக்கொள்ளலாம். இவற்றைப்பற்றி எல்லாம் சுற்றறிக்கை என்ன சொல்கிறது? அது மௌனம் சாதிக்கிறதல்லவா?''

இதைக் கேட்டபின், துப்தாவின் துணைவனுக்கு நடு நிலையிலிருந்து நழுவாமல் இருக்க முடியவில்லை.

''ஹா-ஹா-ஹா!'' என்று உரக்கச் சிரித்தான்.

துப்தாவின் பென்ஸில்கூர் ஒடிந்தது. அதை அவன் தரையில் எறிந்தான். ஆனால் அவன் பாவெலுக்குச் சுடச் சுடப் பதிலளிப்பதற்குள்ளாக, பலர் சிரித்துப் பேசிக்கொண்டு அறையில் நுழைந்துவிட்டனர். அவர்களிடையே ஒக்குனேவும் இருந்தான். பாவெலை அடையாளம் கண்டுகொண்டு பலர் அவனைக் கேள்விகள் கேட்டபொழுது, அறையில் ஒரே ஆவேசம், ஒரே கிளர்ச்சி. சில நிமிஷங்களுக்கெல்லாம், வேறு ஒரு இளைஞர் கோஷ்டி வந்தது; அவர்களிடையே ஒல்காவும் இருந்தாள். பாவெலை மீண்டும் பார்த்தவுடன் அவள் வியப்புற்றாள்; ஆனந்தமடைந்தாள்; நீண்ட நேரத்துக்கு அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

பாவெல் தன் கதையை மீண்டும் சொல்ல வேண்டியதாயிற்று. அவனது தோழர்கள் உண்மையான இன்பம் அடைந்தார்கள்; தமது நிறை நட்பையும் ஆதரவையும் அவனுக்குத் தெரிவித்தார்கள்; அவனது கரத்தைக் குலுக்கியும், முதுகைத் தட்டியும் தமது உணர்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். இந்த அன்பு வெள்ளத்தில் குளித்த பாவெல் துப்தாவின் நடத்தையைத் தற்காலிகமாக மறந்துவிட்டான்.

ஆனால் அவன் தன் கதையைச் சொல்லி முடித்துவிட்டு, துப்தாவுடன் நடந்த சம்பாஷணையைப்பற்றித் தன் தோழர்களிடம் கூறியபொழுது, ஆத்திரமும் வியப்பும் கலந்த குரல்கள் பல

கேட்டன. துப்தாவை எரித்து விடுவள் போல நோக்கிவிட்டு, ஓல்கா காரியதரிசியின் அறைக்குச் சென்ருள்.

''வாருங்கள். நாம் எல்லோரும் நெஷ்தா னேவ் அறைக்குச் செல்வோம். காரியதரிசி மூல மே துப்தாவுக்குப் பாடம் கற்றுக்கொடுப்போம்'' என்று ஒக்குனேவ் இரைந்து கூறினுன். அவன் பாவெலது தோளைப் பிடித்துக்கொண்டு கிளம்பி ஞன். இதர இளைஞரும் அவர்களைப் பின்பற்றி ஞர்கள்.

''அந்தத் துப்தாவை இந்த வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும். அவனைத் துறைமுகத்துக்கு அனுப்பி, அங்குப் பன்கிராத்தவ் தலைமையில் ஓராண்டு சுமைதூக்கி வேலையைச் செய்யச் சொல்ல வேண்டும். விதிகளைத் தவிர அவனுக்கு வேறு எதுவும் தெரியாது'' என்று ஓல்கா தாக் குதல் தொடுத்தாள்.

துப்தாவை ஊழியர் நிர்வாகப் பொறுப்பி லிருந்து நீக்க வேண்டுமென்று, ஓல்காவும் ஒக்குனே வும் இதரரும் வற்புறுத்திக் கூறியதையெல்லாம், காரியதரிசி நெஷ்தானேவ் புன்னகை செய்து கொண்டே கேட்டான்.

''கர்ச்சாகின் பழையபடி அங்கத்தினராவ தைப் பற்றி ஆட்சேபனை இல்லை. அவனுக்கு உடனடியாக ஒரு புதிய அங்கத்தினர் கார்டு கொடுத்துவிடுவோம்'' என்று காரியதரிசி உறுதி கூறினுன். மேலும், அவன் பேசியதாவது:

''துப்தா கண்மூடித்தனமாகச் சட்டம் பேசுகிறான் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதுதான் அவனது பிரதான குறைபாடு. ஆனால் அவன் தன் வேலையை மோசமாகச் செய்து வருகிறான் என்று சொல்ல முடியாது. நான் வேலை செய்த இடங்களில் எல்லாம், கம்ஸமோல் உறுப்பினர் சம்பந்தமான பதிவுகளும் புள்ளிவிவரங்களும் ஒரே குளறுபடியாக இருந்தன; எந்தப் புள்ளிவிவரத்தையும் நம்ப முடியாமல் இருந்தது. நமது ஊழியர் நிர்வாக இலாகாவில் புள்ளிவிவரங்கள் சரிவரச் சேகரமாகித் தொகுக்கப்பட்டிருக்கின்றன. துப்தா அடிக்கடி இரவு நேரமெல்லாம் கூட வேலை செய்வதை நீங்கள் அறிவீர்கள். என் கருத்து இதுதான்: அவனை எந்தச் சமயத்திலும் நீக்க முடியும். ஆனால் அவனது இடத்தில் புள்ளி விவர விவகாரங்களைப் பற்றி யாதொன்றும் அறியாத ஒரு பழகுவதற்கு எளிமையான நபர் வந்து விட்டால், அலுவலகச் சடங்குகள் இருக்காதென்பது உண்மை. ஆனால் எந்த விதமான புள்ளி விவரங்களும் இருக்காது. அவன் தொடர்ந்து அந்த வேலையில் இருக்கட்டும். நான் அவனைக் கண்டிக்கிறேன். அது கொஞ்ச காலத்துக்குப் பயன் படலாம். பிறகு பார்ப்போம்.''

''சரி, அப்படியே செய்யுங்கள்!'' என்று ஒக்குனேவ் சம்மதம் தெரிவித்தான். ''பாவெல் என்னுடன் வா; ஸாலோமென்காவுக்குப் போவோம். அங்கு இன்று இரவு, ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது. நீ திரும்பி வந்திருக்கும் தகவல் எவருக்

கும் தெரியாது. 'இப்பொழுது பாவெல் கர்ச்சாகின் பேசுவார்' என்று அறிவிக்கும்பொழுது, அவர்களுக்கு எத்தகைய வியப்பு உண்டாகுமென்பதை எண்ணிப்பார். பாவெல்! நீ சமர்த்தன். ஏனென்றால் சாகாமல் திரும்பி வந்தாயல்லவா? நீ இறந்திருந்தால் தொழிலாளர் வர்க்கத்திற்கு என்ன பயன் கிட்டியிருக்கும்?'' என்று ஒக்குனேவ் விளையாட்டாகப் பாவெலிடம் கூறினான்; பாவெலை அணைத்துக் கொண்டே நடைக்கூடம் வழியே சென்றான்.

''ஓல்கா, நீயும் வருகிறாயா?''

''நிச்சயமாக வருகிறேன்.''

பாவெல் மதியம் உணவுக்குப் பன்கிராத்தவ் இல்லத்துக்குப் போகவில்லை. உண்மையில், அன்று முழுவதுமே அவன் அங்குப் போகவில்லை. ஒக்குனேவ், அவனை சோவியத் சபைக் கட்டிடத்திலுள்ள தன் அறைக்கு அழைத்துச் சென்றான். தன் கை வசமிருந்த பதார்த்தங்களைக் கொண்டு அவனுக்கு உணவு தயாரித்தான். அவனுக்குமுன்னால் செய்தித்தாள்களின் கட்டையும், கம்ஸமோல் வட்டாரக் கமிட்டியின் தலைமைக் குழுவின் கூட்டங்களுடைய நிகழ்ச்சி விபரங்களைக் கொண்ட இரண்டு கனமான புத்தகங்களையும் வைத்தான்.

''இவற்றைப் படித்துப் பார். நீ டைபஸ் ஜுரத்துடன் காலத்தை விரயம் செய்து கொண்டிருந்தபொழுது, பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. நான் மாலையில் திரும்பி வருகிறேன். பிறகு,

இருவரும் கூட்டத்துக்குச் செல்வோம். உனக்குக் களைப்பாயிருந்தால் படுத்து உறங்கு'' என்று ஓக்குனேவ் பாவெலுக்கு யோசனை கூறினான்.

வட்டாரக் கமிட்டிக் காரியதரிசி தன் சட்டைப் பைகளில் பலவிதமான காகிதங்களையும் தஸ்தாவேஜுகளையும் அடைத்துக்கொண்டான். ஓக்குனேவுக்குக் கைப்பையை உபயோகிக்கும் கொள்கையே பிடிக்காது. அது அவன் படுக்கையின் கீழ்க் கேட்பாரில்லாமல் கிடந்தது. பாவெலிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் வெளியேறினான்.

அன்று மாலை அவன் திரும்பி வந்தபொழுது, அவனது அறையின் தரையில் செய்தித்தாள்கள் சிதறியிருந்தன. அவனது படுக்கையின் கீழிருந்த புத்தகங்கள் வெளியே எடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில மேஜையின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பாவெல் தன் நண்பனது தலையணையின் கீழ் இருந்து எடுத்த கடிதங்களைப் படுக்கையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவை மத்தியக் கமிட்டியிடமிருந்து கடைசியாக வந்த கடிதங்களாகும்.

''போக்கிரி! ஒரேயடியாகக் குழப்பம் செய்துவிட்டாயே!'' என்று ஓக்குனேவ் பொய்க் கோபத்துடன் இரைந்து கூறினான். ''தோழா! சற்றுப் பொறு. நீ ரகசியத் தஸ்தாவேஜுகளைப் படித்துக்கொண்டிருக்கிறாய். உன்னைப் போன்ற நபரை என் குகையில் அனுமதித்ததின் விளை இது!'' என்று அவன் மேலும் கூறினான்.

பாவெல் இளித்துக்கொண்டே, அக்கடிதத்தை கீழே வைத்தான்.

''இவை ரகசியத் தஸ்தாவேஜுகள் இல்லை. ஆனால் நீ விளக்குக்கு மறைப்பாக உபயோகித்திருக்கும் கடிதம்தான் 'ரகசியமானது' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்! அதன் ஓரமெல்லாம் பொசுங்கி விட்டது'' என்று பாவெல் விடை தந்தான்.

ஒக்குனேவ் தீய்ந்துபோன கடிதத்தை விளக்கிலிருந்து எடுத்து, அதன் தலைப்பை நோக்கினான்; திகிலடைந்து நெற்றியில் அடித்துக்கொண்டான்.

''இந்தப்பாழாய்ப்போன கடுதாசியைத்தான் மூன்று நாட்களாகத் தேடிக்கொண்டிருக்கிறேன். இது எங்குத் தொலைந்தது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் விஷயம் நினைவுக்கு வருகிறது. அன்று, வாலீன்த்ஸேவ் இந்தக் கடிதத்தால் விளக்குக்கு மறைப்பு செய்துவிட்டு, தானே இதைக் குறுக்கும் நெடுக்கும் தேடியிருக்கிறான்'' என்று கூறிவிட்டு, ஒக்குனேவ் அந்தக் கடிதத்தைக் கவனமாக மடித்து, மெத்தையின்கீழ் வைத்தான். ''நாம் இவற்றையெல்லாம் பிறகு முறைப்படுத்தி வைப்போம்'' என்று அவன் உத்திரவாதமாகக் கூறினான். ''உடனடியாகச் சிற்றுண்டி அருந்திவிட்டுக் கூட்டத்துக்குப் போகலாம். மேஜைக்கு வா, பாவெல்'' என்று அவசரப்படுத்தினான்.

காற்சட்டைப் பையிலிருந்து அவன் செய்தித் தாளால் சுற்றிக் கட்டிய ஒரு பொட்டலத்தை எடுத்தான். அதில் ரோச் மீன் ஒன்று இருந்தது. இன்னொரு காற்சட்டைப் பையிலிருந்து இரண்டு துண்டு ரொட்டி எடுத்தான். அவன் செய்தித்தாளை மேஜையின் மீது விரித்தான். ரோச் மீனின் தலையைக் கையில் எடுத்துக் கொண்டு, அதை மேஜை விளிம்பின் மீது சவுக்கினால் அடிப்பது போல அடித்தான்.

மேஜையின்மீது உட்கார்ந்து கொண்டு, பற்களால் சுறுசுறுப்பாக வேலைசெய்த வண்ணம், தமாஷ் பேர்வழியான ஒக்குனேவ், காரியரீதியான பேச்சுடன் கேலித் துணுக்குகளையும் இடை இடையே கலந்து கொண்டே பாவெலிடம் சகல சேதிகளையும் கூறினான்.

கூட்டம் நடந்த ஹாலில் ஒக்குனேவ் பாவெலை மேடைக்குப் பின்புறமிருந்த வழியாக அழைத்துச் சென்றான். அந்த விசாலமான ஹாலின் ஒரு மூலையில், மேடைக்கு வலது புறத்தில், பியானோ வாத்தியத்துக்கு அருகில், தால்யா லாகூத்தினா வும் ஆன்னா போர்கர்த்தும் அமர்ந்திருந்தனர். அவர்களுடன் ரயில்வே வட்டத்தைச் சேர்ந்த கம்ஸமோல் உறுப்பினர்கள் இருந்தனர். டெப் போ கம்ஸமோல் காரியதரிசியான வாலீன்த்ஸேவ் ஆன்னாவுக்கு எதிரில் நாற்காலியில் ஆடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனது முகம், ஆகஸ்ட் மாதத்து ஆப்பிள் பழம்போல் செக்கச் செவே

லென்று இருந்தது. அவனது கேசமும் புருவங்களும், முதிர்ந்து பழுத்த தானியத்தின் நிறத்தை நினைவூட்டின. என்றோ கருப்பாக இருந்த, ஆனால் தற்சமயம் வெகுவாக நைந்துபோயிருந்த தோல் சொக்காய் ஒன்றை அவன் அணிந்திருந்தான்.

வாலீன்த்ஸேவுக்குப் பக்கத்தில், த்ஸெவெத்தாயெவ் உட்கார்ந்திருந்தான். பழுப்பு நிறக் கேசத்தையும் சிற்பி செதுக்கியது போன்ற நேர்த்தியான உதடுகளையும் உடைய அந்தச் சுந்தர இளைஞன், தன் முழங்கையை அசட்டையாகப் பியானோவின் மூடிமீது வைத்திருந்தான். அவனது சட்டை, கழுத்துக்கருகில் பித்தான் போடாமல் திறந்திருந்தது.

ஒக்குனேவ், அந்தக் கோஷ்டியை நெருங்கிய பொழுது, ஆன்னாவின் பேச்சு அவன் காதில் விழுந்தது.

''புதிய அங்கத்தினர்களைக் கம்ஸமோலில் சேர்ப்பதைச் சிக்கலாக்குவதற்காகச் சிலர் தம்மால் இயன்றதனைத்தும் செய்துவருகிறார்கள். அவர்களில் த்ஸெவெத்தாயெவ் ஒருவன்'' என்று அவள் கூறினாள்.

''கம்ஸமோல் ஒரு பொழுதுபோக்கு மன்றமல்ல'' என்று த்ஸெவெத்தாயெவ் பிடிவாதத்துடனும் ஏளனத்துடனும் பதில் கூறினான்.

அப்பொழுது, ஒக்குனேவைக் கண்ட தால்யா, ''ஒக்குனேவைப் பார்! நன்றாகக் கழுவி மெருகு இடப்பட்ட சமோவார் மாதிரி பளபளக்கிறான்'' என்று அவள் கத்தினாள்.

ஒக்குனேவை அந்தக் கோஷ்டியினர் இழுத்துத் தம்மிடையே நிறுத்திக்கொண்டு, பல கேள்விக் கணைகளை வீசினுர்கள்.

''இவ்வளவு நேரம் எங்கு போயிருந்தாய்?''

''கூட்டத்தை ஆரம்பிக்கலாமல்லவா?''

ஒக்குனேவ் தன் கரத்தை உயர்த்தி, அமைதி வேண்டினுன்.

''பொறுத்திருங்கள். தோக்கரெவ் வந்தவுடன், தொடங்கலாம்'' என்று அவன் கூறினுன்.

''அதோ அவரும் வந்துவிட்டார்'' என்ருள் ஆன்ஞ.

வட்டாரக் கட்சிக் கமிட்டியின் காரியதரிசி உண்மையாகவே வந்துகொண்டிருந்தான். அவனைச் சந்திக்க, ஒக்குனேவ் அவனை நோக்கி ஓடினுன்.

''அப்பா, வாருங்கள். நீங்கள் என் நண்பன் ஒருவனைச் சந்திக்கவேண்டும். அதற்காக மேடையின் பின்புறத்துக்கு அழைத்துச் செல்கிறேன். அதிர்ச்சி அடையப் போகிறீர்கள், எச்சரிக்கை!''

''இது என்ன சூழ்ச்சி?'' என்று சிகரெட் புகையை இழுத்துக்கொண்டே, கிழவன் உறுமினுன். ஆஞல் ஒக்குனேவ் அவனது முன்கையைப் பிடித்து இழுத்து அழைத்துச் சென்ருன்.

ஒக்குனேவ், தலைவரது மணியை அடித்த வேகத்தில், கூட்டத்திலிருந்த வாயாடிகள்கூட வாய் மூடி மௌனிகளாஞர்கள்.

தோக்கரெவுக்குப் பின்னுல், ''கம்யூனிஸ்ட் அறிக்கையை'' அருளிய மேதையின் சிம்ம முகம், பச்சையான ஊசி மரக் கொம்புகளால் நால் புற

மும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஓக்குனேவ் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிய பொழுது, தோக்கரெவ் பாவெலையே நோக்கிக்கொண்டிருந்தான். பாவெல் மேடையின் ஒரு பக்கத்தில், மறைவான இடத்தில், காத்துக்கொண்டிருந்தான்.

''தோழர்களே, நிகழ்ச்சி நிரலில் உள்ள விஷயங்களை விவாதிப்பதற்கு முன்னால், ஒரு தோழர் பேச வேண்டும் என்று விரும்புகிறார். அவர் பேசுவதற்கு அனுமதி தர வேண்டுமென்று தோக்கரெவும் நானும் பிரரேபிக்கிறோம்'' என்று ஓக்குனேவ் கூறினான்.

ஹாலில் அங்கீகார ஒலி எழுந்தது. அதன் பின், ஓக்குனேவ் திடீரென்று அறிவித்தான்:

''இந்தக் கூட்டத்தில் பேசுமாறு நான் பாவெல் கர்ச்சாகினை அழைக்கிறேன்!''

அந்தக் கூட்டத்தில் இருந்த நூறு இளைஞரில் குறைந்தபட்சம் எண்பது பேருக்காவது பாவெலைத் தெரியும். வளர்த்தியான அந்தப் பழகிய உருவம் மேடையின் வெளிச்சத்தில் தோன்றிப் பேசத் தொடங்கியது. இளைத்துப்போயிருந்த அந்த இளைஞனைக் கண்டதும், கூட்டத்தினர் இன்ப வெறியுடன் கோஷமிட்டார்கள்; இடிமுழக்கம் போல் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள்.

''அன்பார்ந்த தோழர்களே!''

பாவெலின் குரலில் உறுதி இருந்தபோதிலும், அவனால் தன் உள்ளக் கிளர்ச்சியை மறைக்க முடியவில்லை.

''எனவே, தோழர்களே, நான் உங்கள் மத்தியிலிருந்து ஊழியம் செய்வதற்குத் திரும்பிவிட்டேன். திரும்பி வந்திருப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இங்கு என் நண்பர் பலரைப் பார்க்கிறேன். ஸாலோமென்கா வட்டாரத்தில் கம்ஸமோல் உறுப்பினர் தொகை முப்பது சதவீதம் அதிகரித்து விட்டதென்றும், ரயில்வே வார்க்ஷாப்பிலும் டெப்போவிலும் சிகரெட்கொளுத்திகள் தயார் செய்வதை நிறுத்திவிட்டீர்களென்றும் அறிகிறேன். உயிரற்று கிடக்கும் ரயில் எஞ்சின்களைப் புனருத்தாரணம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகவும் கேள்விப்பட்டேன். நமது தேசம் ஒரு புதிய வாழ்வைப் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதும் அது தன் பலத்தைச் சேமித்துக்கொண்டிருக்கிறது என்பதும் இவற்றிலிருந்து நிதர்சனமாகின்றன. தற்பொழுது உயிர் வாழ்வதில் பயனிருக்கிறது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் என்னுல் இறக்க முடியுமா?''

இவ்வாறு பேசியபொழுது, பாவெலின் கண்களில் ஒரு புத்தொளி வீசியது.

பாவெல் ஆனந்த ஆரவாரத்துக்கிடையே மேடையிலிருந்து இறங்கி, ஆன்னுவும் தால்யாவும் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்ருன். வழியில் பலருடன் கை குலுக்கினுன். தால்யாவும் ஆன்னுவும் நகர்ந்து, தங்களுக்கு இடையே அவனுக்கு இடம் தந்தனர். தால்யா பாவெலின் கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டாள். ஆன்னுவுக்கு இன்னும் வியப்பு நீங்கவில்லை; அவளது கண்கள்

ஆச்சரியத்தால் அகல விரிந்திருந்தன; அவளது கண்ணிமைகள் இலேசாகத் துடித்தன; அன்பான நல்வரவு கூறும் வகையில் அவள் பாவெலை நோக்கினாள்.

நாட்கள் வேகமாக உருண்டோடின. ஆனால் அவை சாதாரண நாட்கள் அல்ல. ஒவ்வொரு நாளும் ஏதாவது புதுமை நிகழ்ந்துகொண்டிருந்தது. எனவே, ஒவ்வொரு நாள் காலையிலும் வேலையைத் திட்டமிட்ட பாவெல், ஒவ்வொரு நாளும் நேரம் போதாமலிருந்ததையும் தன் திட்டத்தின் பெரும் பகுதி கைகூடாமல் இருந்ததையும் உணர்ந்து வருத்தமடைந்தான்.

பாவெல் ஒக்குனேவுடன் வசித்தான். அவன் துணை பிட்டராக ரயில்வே வார்க்ஷாப்பில் வேலை செய்தான்.

கம்ஸமோல் தலைமையில் கொஞ்சகாலத்துக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலாதென்று பாவெல் கூறியதை, நீண்ட வாக்குவாதத்துக்குப் பிறகே ஒக்குனேவ் ஒப்புக்கொண்டான்.

''வேலை செய்வதற்கு ஊழியர் இல்லாத பொழுது, நீ வார்க்ஷாப்பில் காலம் கடத்துவதை நான் அனுமதிக்க மாட்டேன். உடல்நலமில்லை என்று காரணம் கூறுதே. நான் டைபஸ் ஜுரத்தில் கிடந்தபின், கம்பும் கையுமாக ஒரு மாதம் வேலை செய்தேன். பாவெல், என்னை நீ ஏமாற்ற முடியாது. நான் உன்னை நன்கறிவேன். இதில் வேறு விஷயம் ஏதோ இருக்கிறது'' என்றான் ஒக்குனேவ்.

''நீ சொல்லுவது மெய். நான் படிக்க விரும்புகிறேன்.''

''அப்படிச் சொல்!'' என்று ஒக்குனேவ் வெற்றிக் களிப்புடன் கத்தினன். ''ஏதோ மர்மம் இருக்கிறதென்று நான் ஊகித்தேன். எனக்கு மட்டும் படிப்பில் நாட்டம் இல்லையா? இது வடிகட்டிய தன்னகங்காரப் போக்கு! நாங்கள் தோள் கொடுத்துத் தூக்கவேண்டும்; நீ பாடம் படித்துக் கொண்டிருப்பாய்! அப்படித்தானே? பாவெல், அதெல்லாம் நடக்காது. நாளைக்கே நீ அமைப்பாளனுகப் பதவி ஏற்க வேண்டும்'' என்று ஒக்குனேவ் வலியுறுத்தினன்.

ஆனல் நீண்டதொரு விவாதத்துக்குப்பின், ஒக்குனேவ் பாவெலின் கோரிக்கைக்கு இணங்கினன்.

''சரி சரி. இரண்டு மாத காலம் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன். நீ என் தாராள மனப்பாங்கைப் புரிந்துகொள்வாயென்று நம்புகிறேன். அது நிற்க, உனக்கு த்ஸெவெத்தாயெவுடன் சேர்ந்து வேலை செய்வது கஷ்டம். அவன் மிக அகம்பாவம் பிடித்தவன்.''

பாவெல் ரயில்வே வார்க்ஷாப்புக்குத் திரும்பியதும், த்ஸெவெத்தாயெவ் உஷாராகிவிட்டான். பாவெலின் வருகையால், தலைமைக்கான போராட்டம் தொடங்குமென்று அவன் நிச்சயமாக நம்பினன். அவனது தற்பெருமை உணர்ச்சி புண்பட்டது. பாவெலை உறுதியாக எதிர்ப்பதற்குத் தயாராஞன். எனினும், சீக்கிரமே அவன் தன் கணிப்

பின் தவறை உணர்ந்தான். கம்ஸமோல் தலைமைக் குழுவில் தன்னை ஒரு உறுப்பினராக எடுத்துக் கொள்வதற்குத் திட்டம் உருவாகியிருந்ததை அறிந்த பாவெல், காரியதரிசியின் அலுவலகத்துக்குச் சென்று, தன் ஆட்சேபணையைத் தெரிவித்தான். ஒக்குனேவுடன் ஏற்பட்டிருந்த உடன்பாட்டைக் காரணம் காட்டி அந்த அயிட்டத்தை அஜண்டாவிலிருந்து நீக்கச் சொன்னான். அவன் வார்க் ஷாப் குழுவில் அரசியல் வகுப்பு எடுத்தான்; ஆனால் தலைமைக் குழுவின் வேலையில் பங்குகொள்ள மறுத்தான். அவனுக்குத் தலைமையில் பங்கு இல்லை என்றாலும், கம்ஸமோல் காரியங்கள் முழுவதிலும் அவனது பாத்திரத்தை உணர முடிந்தது. அவனுக்கே உரிய தோழமை முறையில், எத்தகைய விளம்பரமும் இல்லாமல், அவன் த்ஸெவெத்தாயெவுக்குப் பல சிக்கலான சந்தர்ப்பங்களில் பேருதவி செய்தான்.

ஒருநாள், த்ஸெவெத்தாயெவ் ஷாப்புக்கு வந்தபொழுது, அதில் வேலை செய்த கம்ஸமோல் உறுப்பினர்களும் சுமார் மூன்று டஜன் இதர இளைஞரும் செய்து கொண்டிருந்த வேலையைக் கண்டு வியந்தான். அவர்களில் சிலர் ஜன்னல்களைக் கழுவிக்கொண்டிருந்தனர். மேலும் சிலர், பல் லாண்டுகளாக யந்திரங்களில் சேகரமாகியிருந்த அழுக்கையெல்லாம் சுரண்டி எடுத்துக்கொண்டிருந்தனர். வேறு சிலர், ஓட்டை உடைசல்களையெல்லாம் முற்றத்தில் குவித்துக் கொண்டிருந்தனர். பாவெல் பெரிய துடைப்பம் ஒன்றால்

எண்ணையும் பசையும் ஏறியிருந்த சிமிட்டித் தளத்தைத் துடைத்துக்கொண்டிருந்தான்.

''வசந்தகாலத் துப்புரவு வேலையா? எதை முன்னிட்டு?'' என்று த்ஸெவெத்தாயெவ் பாவெலை வினவினன்.

''எங்களுக்கு இந்த அழுக்கில் வேலை செய்ய விருப்பமில்லை. இந்த இடத்தைச் சுத்தம் செய்து இருபது ஆண்டுகள் ஆகியிருக்கும். ஒரு வாரத்தில் புதுமை பரிமளிக்கச் செய்வோம்'' என்று பாவெல் சுருக்கமாகப் பதில் உரைத்தான்.

த்ஸெவெத்தாயெவ் தன் தோட்களைக் குலுக்கிவிட்டுப் போய்விட்டான்.

மின்சாரத் தொழிலாளர்கள் தமது வார்க்ஷாப்பைத் துப்புரவு செய்ததுடன் திருப்தி அடையாமல், வெளி முற்றத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினர்கள். பல ஆண்டுகளாக, அந்தப் பெரிய முற்றம் உபயோகத்தில் இல்லாத பல் வகைச் சாமான்களின் கிடங்காகப் பயன்பட்டது. அங்கு நூற்றுக்கணக்கான வண்டிச் சக்கரங்களும் இருசுகளும் கிடந்தன. துருப்பிடித்த இரும்புத் தண்டவாளங்களும் இருசுப் பெட்டிகளும் இன்னும் பல சாமான்களும் முற்றத்தில் சிதறிப் பரந்து கிடந்தன. ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள உலோகம், கூரையில்லாத இடத்தில் கிடந்து, மழை வெயில் காற்றில் அடிபட்டுத் துருப்பிடித்திருந்தது. ஆனல் அந்த முற்றத்தில் இளைஞர்கள் செய்யத் தொடங்கிய வேலையை நிர்வாகம் தடுத்து விட்டது.

''முதலில் கவனிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த முற்றத்தை அப்புறம் சுத்தம் செய்யலாம்'' என்று வார்க்ஷாப் நிர்வாகம் கூறியது.

எனவே, மின்சாரத் தொழிலாளர் தமது ஷாப்பின் நுழைவாயிலுக்கு முன்னால் ஒரு சிறிய பகுதியைச் சீர்திருத்தம் செய்து கல் பரப்பி விட்டுக் கதவுக்கு முன்னால் செருப்பு அழுக்கைப் போக்கும் ஒரு கம்பி வலையைப் போட்டுவிட்டு, அத்துடன் நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய ஷாப்புக்குள் துப்புரவு வேலை தொடர்ந்து நடந்தது. வேலை நேரத்துக்குப் பிறகே, இந்த வேலையைச் செய்தார்கள். ஒரு வாரத்துக்குப்பின், தலைமை எஞ்சினீயர் அங்கு வந்த பொழுது, ஷாப்பில் நல்ல வெளிச்சம் இருந்ததைக் கண்டான். இரும்புச் சட்டங்களால் அமைந்த ஜன்னல்களில் கெட்டியான படலமாக இருந்த அழுக்கும் எண்ணெயும் அகற்றப்பட்டுவிட்டதால், கதிரொளி தங்கு தடையில்லாமல் உள்ளே பாய்ந்தது; டீஸல் எஞ்சின்களின் தாமிரத்தால் செய்த பாகங்கள் சுத்தமாக்கப்பட்டு மெருகிடப்பட்டிருந்ததால், அந்தத் தாமிரம், கதிரொளியைப் பிரகாசமாகப் பிரதிபலித்தது. மெஷீன்களின் சில பாகங்கள், புதிய பச்சை வர்ணப்பூச்சுடன் திகழ்ந்தன. யாரோ ஒருவன் மிக அக்கறை எடுத்துக்கொண்டு உருளைகளின் கால்களில் மஞ்சள் வர்ணத்தில் அம்புக் குறிகளைக்கூட அமைத்துவிட்டான்.

இவற்றையெல்லாம் கண்ட எஞ்சினீயர் மூக்கின் மேல் கையை வைத்தான்.

அந்த ஷாப்பின் மூலையில் ஒரு சிலர் தமது வேலையை முடித்துக்கொண்டிருந்தார்கள். எஞ்சினீயர் அவர்களை நோக்கிச் சென்றான். வழியில், ஒரு குவளை வர்ணத்துடன் வந்த பாவெலைச் சந்தித்தான்.

''ஒரு நிமிஷம், நண்பா!'' என்று கூறி, அவன் பாவெலை நிறுத்தினான். ''நீங்கள் இங்குச் செய்திருப்பதையெல்லாம் நான் அங்கீகரிக்கிறேன். ஆனால் உங்களுக்கு இந்த வர்ணம் எங்கிருந்து கிடைத்தது? எந்த வர்ணத்தையும் என் அனுமதியில்லாமல் உபயோகிக்கக் கூடாதென்று நான் கண்டிப்பான உத்திரவைப் பிறப்பித்திருக்கவில்லையா? இந்த மாதிரிக் காரியங்களுக்காகச் சாயத்தை வீண் செய்யும் நிலையில் நாம் இல்லை. உள்ள சாயமெல்லாம் எஞ்சின் பாகங்களுக்குத் தேவை'' என்று தலைமை எஞ்சினீயர் கூறினான்.

''இந்தச் சாயம் கழிக்கப்பட்ட டப்பிகளின் அடியைச் சுரண்டிச் சேர்த்ததாகும். இரண்டு நாட்கள் சுரண்டினோம்; இருபத்தைந்து பவுண்டு கிடைத்தது. தோழர் எஞ்சினீயர் அவர்களே, நாங்கள் எந்த விதியையும் மீறவில்லை'' என்று பாவெல் விளக்கினான்.

எஞ்சினீயர் மீண்டும் 'உம்' போட்டான். ஆனால் அவன் கலக்கமடைந்து நின்றான்.

''சரி, அப்படியானால் நடத்துங்கள். உண்மையில் இது ஒரு ருசிகரமான விஷயம்தான். இதை.... எப்படிப் புரிந்துகொள்வது? இது என்ன

வென்பது? வார்க்ஷாப்பைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று நீங்களாக எடுக்கும் முயற்சி என்று சொல்லலாமா? இந்த முயற்சியின் அடிப்படை என்ன? மாமூல் வேலைக்குரிய நேரம் முடிந்த பிறகுதானே, இதைச் செய்கிறீர்கள்?'' என்று கேட்டான் எஞ்சினீயர்.

எஞ்சினீயரின் குரலில் உண்மையாகவே திகைப்பு தொனிப்பதைப் பாவெல் உணர்ந்தான்.

''ஆம். வேலை நேரம் முடிந்தபிறகுதான் செய்தோம். வேறு என்னவென்று எண்ணினீர்கள்?''

''அது சரி. ஆனால்...''

''தோழர் எஞ்சினீயரே, இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. போல்ஷெவிக்குகள் அழுக்கை அப்படியே விட்டு வைத்திருப்பார்களென்று உங்களிடம் யார் சொன்னார்கள்? இம்முறையை இன்னும் பரவலாகச் செய்யத் தொடங்குவோம். இன்னும் பல சம்பவங்கள் உங்களை ஆச்சரியத்திலாழ்த்தப் போகின்றன.''

எஞ்சினீயர்மீது சாயத்தைச் சிந்திவிடாமல் இருப்பதற்காக அவனை ஜாக்கிரதையாகச் சுற்றிக் கொண்டு பாவெல் கதவை நோக்கிச் சென்றான்.

ஒவ்வொரு நாள் மாலையும், பாவெல் பொது நூல்நிலையத்துக்குச் சென்றான்; நீண்டநேரம் அங்கு இருந்தான். நூல்நிலைய நிர்வாகிகள் மூவருக்கும் அவன் நண்பனாகிவிட்டான். அவர்களிடம் தன் வாதத் திறனெல்லாம் பயன்படுத்திப் பேசி,

இஷ்டப்பட்ட புத்தகங்களைப் பொறுக்கி எடுத்துப் படிக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டான். உயரமான புத்தக அலமாரிகளின் அருகில் ஏணியைச் சாய்த்து நிறுத்தி, அதில் ஏறிக்கொண்டு, பல மணிநேரம் நூல் நூலாக எடுத்து ஏடுகளைப் புரட்டினான்; இவ்வாறாக, தனக்குப் பிடித்தமான புத்தகங்களைப் பொறுக்கினான். அங்கு இருந்த நூல்களில் அநேகம் பழையவை. நவீன இலக்கியம், ஒரு சிறிய அலமாரியில் அடங்கிவிட்டது. உள்நாட்டு யுத்தத்தின் போது வெளியிட்ட மார்க்ஸ் எழுதிய ''மூலதனம்'', ஜாக் லண்டன் எழுதிய ''இரும்புப் பாதம்'' ஆகியவையும் வேறு சில நூல்களும் அங்கு இருந்தன. பழைய புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது, பாவெல் அவற்றிடையே ''ஸ்பார்ட்டகஸ்'' என்ற நூலைக் கண்டான். அவன் அதை இரண்டே இரவுகளில் படித்து முடித்துவிட்டான். அதைப் படித்தபின், அதை மக்ஸீம் கோர்க்கியின் நூல்களுக்குப் பக்கத்தில் வைத்தான். சுவை நிறைந்த, தனது அபிமான நூல்களை அவன் ஒன்றன்பின் ஒன்றாகப் பொறுக்கி தனக்குரிய விதத்தில் அடுத்தடுத்து அடுக்கினான்.

நூல்நிலைய நிர்வாகிகள் இதை ஆட்சேபிக்கவில்லை; அதில் அவர்களுக்கு அக்கறையில்லை.

ரயில்வே ஷாப்புகளின் கம்ஸமோல் வாழ்வின் அமைதியான ஓட்டம் திடீரென்று நிலைகுலைந்தது. அவ்வாறு கலக்கம் உண்டாக்கிய நிகழ்ச்சி ஆரம்

பத்தில் சர்வசாமானியமானதாகவும் புறக்கணிக்கத் தக்கதாகவும் தோன்றியது. அந்தச் சம்பவம் என்ன? ரிப்பேர் ஷாப்பின் கம்ஸமோல் நிர்வாகக் குழுவில் அங்கத்தினனாக இருந்த பீதின் என்பவன், ஒரு துரப்பணத்தை உடைத்துவிட்டான். நிமிர்ந்த மூக்கும் அம்மைவடு முகமும் உடைய அவன் சுறுசுறுப்பற்றவன். அவன் உடைத்த துரப்பணம், அமெரிக்காவிலிருந்து இறக்குமதியான பொருள்; விலை உயர்ந்தது. அந்தச் சம்பவம், மன்னிக்க முடியாத அஜாக்கிரதையால் நேர்ந்த வினையாகும்; பீதின் திட்டமிட்டுச் செய்த விஷமத்தின் வினையாகவே அது தோன்றியது.

அந்தச் சம்பவம் காலையில் நிகழ்ந்தது. ஸீனியர் ரிப்பேர் போர்மெனாயிருந்த கோதரோவ், ஒரு இரும்புத் துண்டில் சில துளைகளைப் போடும்படி பீதினிடம் கூறியிருந்தான். முதலில், பீதின் அதைச் செய்ய மறுத்தான். ஆனால் போர்மென் பிடிவாதமாக வற்புறுத்தவே, அவன் இரும்புத் துண்டை எடுத்துத் துரப்பணத்தால் துளையிடத் தொடங்கினான். அந்தப் போர்மென், வேலை வாங்குவதில் கண்டிப்பானவன். தொழிலாளரிடையே அவனுக்கு நற்பெயர் கிடையாது. அவன் மாஜி மென்ஷெவிக்; தொழிற்சாலையின் பொது வாழ்வில் பங்கு கொள்வதில்லை; இளங்கம்யூனிஸ்டுகளைக் கண்டால் ஒரு மாதிரியாகப் பார்ப்பான். ஆனால் அவன் தன் வேலையில் நிபுணனாயிருந்தான்; தன் கடமைகளை அந்தரங்க சுத்தியுடன் நிறைவேற்றினான். பீதின் தன் துரப்பணத்தில் எண்ணெய்

போடாமல் துளையிடுகிருன் என்பதைக் கோத ரோவ் கண்டான். எனவே, பீதின் வேலை செய்த இடத்துக்கு விரைந்து சென்று, அவன் செய்த வேலையை நிறுத்திஞன்.

"உனக்குக் கண்ணில்லையா? துரப்பணத்தை உபயோகிக்கும் முறை உனக்குத் தெரியாதா?" என்று அவன் பீதினைப் பார்த்து இரைந்தான். எண்ணெய் போடாமல் துரப்பணத்தை உபயோ கித்தால், அது நிச்சயமாக உடைந்துவிடுமென் பதைப் போர்மென் அறிவான்.

பீதின் அவனைத் திட்டிபேசிவிட்டு, கடைசல் யந்திரத்தை மீண்டும் இயக்கிஞன். கோதரோவ், பீதினைப் பற்றிப் புகார் செய்வதற்காக ஷாப்பின் நிர்வாகியிடம் சென்ருன். அந்தச் சமயத்தில், கடைசல் யந்திரத்தை நிறுத்தாமல், பீதின் எண் ணெய் கொண்டுவருவதற்கு ஓடிஞன். நிர்வாகி வருவதற்குள் எல்லாம் முறையாக இருக்க வேண்டு மென்பது அவனது திட்டம். அவன் எண்ணெயுடன் திரும்பி வந்தபொழுது, துரப்பணம் உடைந்து கிடந்ததைக் கண்டான். பீதினை வேலையிலிருந்து நீக்கவேண்டுமென்று ஷாப்பின் நிர்வாகி சிபார்சு செய்தான். ஆனுல் கோதரோவுக்குக் கம்ஸ மோல் உறுப்பினரிடம் விரோதம் இருந்ததாகக் கூறி, கம்ஸமோலின் ஷாப்புத் தலைமை பீதின் சார்பில் வாதாடியது. ஆனுல், பீதினை நீக்க வேண்டுமென்று நிர்வாகம் வற்புறுத்தியது. வழக்கு, ரயில்வே வார்க்ஷாப்புகளின் கம்ஸமோல்

தலைமைக் குழுவுக்கு முன்வந்தது. இதுதான் கலகத்தின் தொடக்கம்.

இந்தக் குழுவில் ஐவர் இருந்தனர். அவர்களில் மூவர், பீதினை அதிகார பூர்வமாகக் கண்டித்துவிட்டு வேறு வேலைக்கு மாற்ற வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தனர். இந்த மூவரில் த்ஸெவெத்தாயெவும் ஒருவன். மற்ற இருவரும், பீதினுக்கு எந்தத் தண்டனையும் கொடுக்கக் கூடாதென்று கருதினர்.

இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்காக, நிர்வாகக் குழு த்ஸெவெத்தாயெவின் அலுவலகத்தில் கூடியது. சிவப்புத் துணியால் போர்த்தப் பெற்ற ஒரு பெரிய மேஜையைச் சுற்றிப் பல் பெஞ்சிகளும் ஸ்டூல்களும் போடப்பட்டிருந்தன. தச்சு வேலை ஷாப்பில் இருந்த இளங் கம்யூனிஸ்டுகளே, இவற்றைச் செய்தவர்கள். சுவர்களில், தலைவர்களின் உருவப் படங்கள் தொங்கின. ரயில்வே வார்க்ஷாப்புகளின் பதாகை மேஜைக்குப் பின்னுலுள்ள சுவர் முழுவதையும் மறைத்திருந்தது.

இப்பொழுது, த்ஸெவெத்தாயெவ் 'முழுநேர' ஊழியனுகத் தொண்டுபுரிந்தான். அவன் ஒரு கொல்லன். ஆனுல் அவனது ஸ்தாபனத்திறமை, அவனைக் கம்ஸமோலில் ஒரு முக்கிய ஸ்தானத்துக்கு உயர்த்திவிட்டது. அவன் இப்பொழுது கம்ஸமோல் வட்டாரக் கமிட்டியின் செயற் குழுவிலும் மாகாணக் கமிட்டியிலும் அங்கம் வகித்தான். அவன் முன்னுல் யந்திரங்களை உற்பத்தி செய்த

தொழிற்சாலையின் கொல்லன் பட்டறையில் வேலை செய்திருந்தான்; ரயில்வே வார்க்ஷாப்பில் சமீபத்தில்தான் அவன் சேர்ந்திருந்தான். ஆரம்பத்திலிருந்தே, அவன் கம்ஸமோலின் நிர்வாகத்தை உறுதியாகத் தன் கையில் எடுத்துக்கொண்டான். அவனுக்குச் சுயபுத்தியில் நம்பிக்கை மிகவும் அதிகம்; அத்துடன் நிதானித்துப் பார்க்காமல் அவசரப்பட்டு முடிவுகளெடுப்பான். ஆகக்கூடி, அவன் ஆரம்பத்திலிருந்தே இதர இளங் கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சிக்கு உலைவைத்தான்; எந்தக் காரியத்தையும் தானே செய்யவேண்டுமென்று பிடிவாதம் செய்தான்; எல்லா வேலைகளையும் செய்ய முடியாத பொழுது, தன் துணைவர்கள் செயலற்றிருப்பதாகக் கூறி அவர்களைத் தூற்றினான்.

அலுவலகம்கூட அவனது நேரடியான மேற்பார்வையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கிளப்பிலிருந்து கொண்டுவரப்பட்ட மிருதுவான சாய்வு நாற்காலியில் கைகால்களை நீட்டிக்கொண்டு, த்ஸெவெத்தாயெவ் கூட்டத்தை நடத்தினான். அது ஒரு பிரத்தியேகக் கூட்டம். கட்சியின் ஸ்தாபன அமைப்பாளனை காமுத்தோவ் பேசுவதற்கு எழுந்த பொழுது, யாரோ தாளிட்டிருந்த கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அதைக் கேட்டு, த்ஸெவெத்தாயெவ் அதிருப்தியால் முகத்தைச் சுளித்தான். மீண்டும் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. காத்யா எழுந்து சென்று கதவைத் திறந்தாள். வாசலில் பாவெல்

நின்றுகொண்டிருந்தான். காத்யா அவனை உள்ளே அனுமதித்தான்.

பாவெல் காலியாகவிருந்த ஒரு இருக்கையை நோக்கி நடந்து சென்ற பொழுது, அவனைப் பார்த்து த்ஸெவெத்தாயெவ், "இது நிர்வாகக் குழுவின் பிரத்தியேகக் கூட்டம்" என்று கூறினான்.

இதைக் கேட்டுப் பாவெலின் முகம் சிவந்தது. அவன் மெதுவாக மேஜையை நோக்கித் திரும்பினான்.

"அது எனக்குத் தெரியும். பீதின் விவகாரம் பற்றி உங்கள் கருத்தை அறிய நான் ஆவலாயிருக்கிறேன். அது பற்றி நான் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். நான் இங்கு இருப்பதை நீ ஆட்சேபிக்கிறாயா?" என்று பாவெல் வினவினான்.

"நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நிர்வாகக் குழுவின் பிரத்தியேகக் கூட்டத்தில் குழு உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொள்வார்கள் என்பதை நீ அறிந்திருக்க வேண்டும். அதிகமான பேர் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டால், கூடுதலான சிக்கல் ஏற்படுகிறது. ஆனால் நீ வந்துவிட்டதால், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்."

பாவெல் ஒருபொழுதும் இத்தகைய அவமானத்துக்கு உள்ளானதில்லை. அவனது நெற்றி சுருங்கியது.

"இது என்ன சட்ட நுணுக்கப் பேச்சு?" என்று காமுத்தோவ் வெறுப்பாகக் கூறினான்.

ஆனால் பாவெல் தன் கை அசைவால் அந்தப் பேச்சை நிறுத்தச் செய்துவிட்டு உட்கார்ந்தான். காமுத்தோவ் தொடர்ந்து பேசினான்:

''நான் சொல்ல விரும்புவது இதுதான்: கோதரோவ் பழைய காலத்து ஆள் என்பது உண்மை. ஆனால் கட்டுப்பாடு சம்பந்தமாக ஏதாவது செய்ய வேண்டும். இளங் கம்யூனிஸ்டுகளெல்லாம் துரப் பணங்களை உடைத்துக் கொண்டிருந்தால், எதை வைத்துக்கொண்டு வேலை செய்வது? தவிர, கட்சியில் சேராத தொழிலாளருக்கு, நாம் தப்பான வழி காட்டுகிறோம். பீதினுக்குத் தகுந்த எச்சரிக்கை கொடுக்க வேண்டுமென்பது என் கருத்து.''

காமுத்தோவ் தன் பேச்சை முடிக்கும் வரை கூட த்ஸெவெத்தாயெவ் காத்திருக்க விரும்ப வில்லை. அவன் தன் ஆட்சேபணைகளைச் சொல்லத் தொடங்கினான். பத்து நிமிஷங்கள் கடந்தன. அதற்குள், காற்று எந்தத் திசையில் அடிக்கிறது என்பதைப் பாவெல் உணர்ந்துகொண்டான். விவகாரம் இறுதியாக வோட்டுக்கு விடப்படும் தருவாயில், தான் பேச விரும்புவதாகப் பாவெல் கூறினான். த்ஸெவெத்தாயெவ் வேண்டாவெறுப் பாக அவனை அனுமதித்தான்.

''தோழர்களே, பீதினது விவகாரம் பற்றி என் கருத்தைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்'' என்று பாவெல் தொடங்கினான். அவனையும் மீறி, அவனது குரலில் ஒரு கடுமை தொனித்தது. ''பீதினது விவகாரம் ஒரு அறிகுறி. உண்மையில் முக்கியமான விஷயம் பீதினுடைய நடத்தை

மட்டுமல்ல. நான் சில புள்ளிவிவரங்களை நேற்றுச் சேகரித்தேன்'' என்று கூறி,' தன் சட்டைப் பையிலிருந்து ஒரு நோட்புத்தகத்தை எடுத்தான். ''நான் இந்தப் புள்ளிவிவரங்களை-டைம் கீப்பரிடமிருந்து அறிந்தேன். கவனமாகக் கேளுங்கள்: நமது இளங் கம்யூனிஸ்டுகளில். நூற்றுக்கு இருபத்து மூன்று பேர், தினந்தோறும் ஐந்து முதல் பதினைந்து நிமிஷம் வரை தாமதித்து வேலைக்கு வருகிறார்கள். இந்தப் பழக்கம் ஒரு விதியாக ஆகிவிட்டது. ஒவ்வொரு மாதமும் ஒன்று அல்லது இரண்டு நாள், நூற்றுக்குப் பதினேழு இளங்கம்யூனிஸ்டுகள் வேலைக்கு வருவதில்லை. கட்சியில் சேராத இளைஞர்களில் நூற்றுக்குப் பதினான்கு பேர்தான் இம்மாதிரி வேலைக்கு வராமல் இருக்கிறார்கள். தோழர்களே, இந்த விவரங்களைக் கேட்டு எவரும் வேதனை அடையாமல் இருக்கமுடியாது. நான் மேலும் சில விவரங்களைக் குறித்துக்கொண்டேன். கட்சி உறுப்பினரில் நூற்றுக்கு நான்கு பேர் மாதத்துக்கு ஒரு நாள் வேலைக்கு வருவதில்லை; நூற்றுக்கு நான்கு பேர் வேலைக்குத் தாமதமாக வருகிறார்கள். கட்சிச்சார்பற்ற தொழிலாளர்களில், நூற்றுக்குப் பதினொன்று பேர் மாதம் ஒரு நாள் வேலைக்கு வருவதில்லை; நூற்றுக்குப் பதின்மூன்று பேர் வேலைக்குத் தாமதமாக வருவதை முறையாகக் கொண்டிருக்கின்றனர். கருவிகளை உடைப்பதில், இளைஞர்களின் பங்கு நூற்றுக்குத் தொண்ணூறு. இந்த இளைஞரில் ஏழு சதவிகிதத்தினர் புதியவர்களாவர். இந்த விவரங்களிலிருந்து

நாம் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும்: கட்சி அங்கத்தினரையும் வயதுவந்த தொழிலாளர்களையும்விட, இளங் கம்யூனிஸ்டுகளாகிய நாம் மோசமாக நடந்துகொள்கிறோமென்பதே அந்த முடிவு. ஆனால் எல்லா ஷாப்புகளிலும் நிலைமை ஒரே மாதிரியாக இல்லை. கொல்லுப் பட்டறையில் இளைஞர் சிறப்பாகப் பணிபுரிகின்றனர்; மின்சாரத் தொழிலாளரது பணியும் பரவாயில்லை. இதர ஷாப்புகளில் நிலைமை ஏறத்தாழஒன்றுபோல் தான் உள்ளது. கட்டுப்பாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியதில் ஒரு சிறு பகுதியைத்தான் தோழர் காமுத்தோவ் சொன்னார் என்பது என் கருத்து. இந்த வளைவு நெளிவுகளை எப்படி நேராக்குவது என்பதே உடனடியான பிரச்சினை. நான் இங்கு உணர்ச்சியூட்டும் பிரசங்கம் செய்ய விரும்பவில்லை. ஆனால் இந்த அஜாக்கிரதைக்கும் உதாசீனத்துக்கும் ஒரு முடிவு கட்டவேண்டும். இப்பொழுது வேலை செய்வதைவிடக் கவனமாகவும் கூடுதலாகவும் முதலாளிக்கு வேலை செய்ததாகப் பழைய தொழிலாளர்கள் ஒளிவுமறைவு இல்லாமல் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் இப்பொழுது, நாமே எஜமானர்களாயிருக்கிறோம். எனவே மோசமாக வேலை செய்வதற்கு நியாயமே இல்லை. பீதின் அல்லது வேறு ஒரு தொழிலாளியை மட்டும் குற்றம் கூறுவதில் பயனில்லை. நாம் அனைவருமே குற்றவாளிகள்தான்; ஏனென்றால், இந்தக் கேட்டை முறையாக எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாகச் சில சந்தர்ப்பங்களில் நாமே ஏதாவ

தொரு நொண்டிக் காரணம் கூறி, பீதின் போன்றவர்களை ஆதரித்து வாதாடுகிறோம்.

''இப்பொழுது இங்குப் பேசிய இரண்டு தோழர்கள், பீதின் நல்லவன், சிறந்த தோழரில் ஒருவன், கம்ஸமோலில் தீவிரமாகச் செயல்படும் ஊழியன் என்றெல்லாம் புகழ்ந்து பேசினார்கள். 'அவன் ஒரு துரப்பணத்தை உடைத்தால் என்ன? எவரும் அந்தப் பிழையைச் செய்திருக்கலாம். தவிர, அவன் நம்மில் ஒருவன்; போர்மென் அப்படியல்ல.' இவ்வாறாக அவர்கள் வாதித்தார்கள்.... உங்களில் எவராவது கோதரோவுடன் பேசுவதற்கு முயற்சித்தீர்களா? அந்த முணுமுணுப்புக்காரனுக்கு முப்பது ஆண்டுகள் வேலை செய்த அனுபவம் இருப்பதை மறந்துவிடாதீர்கள். அவனுடைய அரசியலைப்பற்றி நாம் பேசத் தேவையில்லை. இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் அவன் சொல்வது நியாயம். எப்படியென்றால், அயலானாகிய அவன் அரசாங்கச் சொத்தைக் கவனமாகப் பாதுகாக்கிறான். நாமோ மதிப்புயர்ந்த கருவிகளை உடைத்தெறிகிறோம். இத்தகைய நிலைமையை எப்படி வர்ணிப்பீர்கள்? நாம் இப்பொழுதாவது முதல் பாணத்தைத் தொடுக்கவேண்டும்; இந்தப் பகுதியில் தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்பது என் கருத்து.

''சோம்பேறியாக இருந்ததாலும், உற்பத்தி ஏற்பாட்டை உருக்குலைத்ததாலும், பீதினைக் கம்ஸமோலிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். பீதின் விவகாரத்தைச் சுவரொட்டி

செய்தித்தாளில் அச்சிட வேண்டும். நான் மேலே குறிப்பிட்ட விவரங்களைப் பகிரங்கமாக, எந்த வித குற்றச்சாட்டுக்களுக்கும் அஞ்சாமல் தலையங்கக் கட்டுரையில் குறிப்பிடவேண்டும். நமக்குப் பலம் இருக்கிறது; சார்ந்து நிற்பதற்கு போதுமான சக்திகள் உள்ளன. இளங்கம்யூனிஸ்டுகளில் பெரும்பாலோர் நல்ல உழைப்பாளிகள். அவர்களில் அறுபது பேர் போயர்க்கா சென்று வந்தவர்கள்; அது ஒரு கடுமையான சோதனை. அதில் வெற்றி பெற்ற அவர்களது உதவியுடன், நாம் கஷ்டங்களைப் போக்க முடியும். நம்மிடம் தற்பொழுதுள்ள மனப்பான்மையை மட்டும் நாம் என்றென்றுக்கும் விட்டுவிட வேண்டும். அப்பொழுது வெற்றி உறுதி.''

எப்பொழுதுமே, அமைதியாகவும் அதிகம் பேசாமலும் இருந்துவந்த பாவெல் இப்பொழுது வேகத்துடன் பேசியதைக் கண்டு, த்ஸெவெத்தாயெவ் ஆச்சரியம் அடைந்தான். அவன் முதன் முதலாக, நிஜமான பாவெலைப் பார்த்தான், பாவெலின் கருத்து பிழையற்றது என்பதை அவன் உணர்ந்தான்; ஆனால் பகிரங்கமாகப் பாவெலின் கருத்தை ஏற்றுக்கொள்வது அபாயம் என்று கருதினான். பாவெலின் பேச்சு, ஸ்தாபனத்தின் பொது நிலையைப்பற்றிக் கடுமையான விமர்சனமாக உள்ளதென்றும், அது தனது அதிகாரத்துக்குக் குழிபறிப்பதாக உள்ளதென்றும் த்ஸெவெத்தாயெவ் எண்ணினான். எனவே, எதிரியை முறியடிப்பதென்று அவன் தீர்மானித்தான். மென்ஷெ

விக் கோதரோவைப் பாவெல் ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டி, அவன் தன் பேச்சைத் தொடங்கினன்.

சூடும் வேகமும் நிறைந்த அவ்வாக்குவாதம் மூன்று மணிநேரம் நீடித்தது. இரவு நெடுநேர மான பிறகே, வாதம் முடிந்தது. பாவெலின் வாதம் உண்மையான விஷயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எனவே, அந்தக் கருத்தை முறியடிக்க த்ஸெவெத்தாயெவால் முடியவில்லை. நிர்வாகக் குழுவினரில் பெரும்பாலோர் பாவெலை ஆதரித்துப் பேசிவிட்டனர். அந்த நிலையில், த்ஸெவெத்தாயெவ் ஒரு பிழை செய்தான். இறுதியான வோட்டு எடுப்பதற்கு முன்னால், அவன் பாவெலைப் பார்த்து அறையை விட்டுச் செல்லும் படி கூறினன்; ஜனநாயகத்தின் விதிகளை மீறிய செய்கை அது.

''நன்று. உன் நடத்தை உனக்குக் கௌரவமளிக்கக் கூடியதாயில்லை. எனினும் நான் போகிறேன். நீ உன் கருத்தோட்டத்தை உடும்புப்பிடியாக வற்புறுத்தினயானல், நான் நாளைக்குப் பொதுக் கூட்டத்தில் இந்த விவகாரத்தைக் கொண்டு வருவேன். அங்கு உனக்குப் பெரும்பாலோரின் ஆதரவு கிடைக்காது. உன் நிலை தவருனது. தோழர் காமுத்தோவ், இந்தப் பிரச்சினையை நீ பொதுக் கூட்டத்துக்கு முன்னல் கட்சிக் குழுவில் விவாதிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்'' என்ருன் பாவெல்.

''என்னைப் பயமுறுத்த முயற்சிக்காதே'' என்று த்ஸெவெத்தாயெவ் சவால்விடும் தோரணையில் இரைந்தான். ''நானே கட்சிக் குழுவுக்குப் போய் விவாதிக்கமுடியும். அதுமட்டுமல்ல, கட்சிக் குழுவில் உன்னைப்பற்றிச் சொல்வதற்கும் என்னிடம் விஷயம் இருக்கிறது. உனக்கு வேலைசெய்ய விருப்பமில்லாவிட்டால், பிறர் வேலையில் தலையிடாதே'' என்றான்.

பாவெல் வெளியேறி அறைக் கதவைச் சாத்தினான். அவன் கொதித்துக்கொண்டிருந்த தன் நெற்றியைத் தடவிக் கொடுத்தான்; காலியாக இருந்த அலுவலகம்வழியாக வெளியே சென்றான். அவன் வீதியில் தீர்க்கமாகச் சுவாசித்தான்; ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு, தோக்கரெவ் வசித்த சிறு வீட்டை நோக்கி நடந்தான்.

அந்த வயது முதிர்ந்த மெக்கானிக் இரவுச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''வா, வா. என்ன சேதி? விவரமாகச் சொல். தார்யா, இந்த இளைஞனுக்கு ஒரு தட்டில் கூழ் கொண்டுவா'' என்று கூறிய தோக்கரெவ் பாவெலை மேஜைக்கு வரும்படி சைகை காட்டினான்.

தோக்கரெவ் எவ்வளவுக்கு எவ்வளவு குட்டையாகவும் ஒல்லியாகவும் இருந்தானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனது மனைவி தார்யா நெட்டையாகவும் அதற்கேற்றபடி பருமனாகவும் இருந்தாள். அவள் ஒரு தட்டுத் தினைக் கூழைப் பாவெல் முன் வைத்தாள். வெண்மையான முன் தாங்கியால் தனது ஈர இதழ்களைத் துடைத்துக்

கொண்டே ''சாப்பிடு'' என்று பாவெலை நோக்கி அன்புடன் கூறினாள்.

கிழவன் ரயில்வே வார்க்ஷாப்புகளில் வேலை செய்த காலத்தில், பாவெல் அவனுடைய வீட்டுக்கு அடிக்கடி போயிருந்தான். ஆனால் நகரத்துக்குத் திரும்பி வந்தபின் இப்பொழுதுதான் முதன் முதலாக அவனது வீட்டுக்கு வந்தான்.

பாவெல் கூறியதையெல்லாம் கிழவன் கவனமாகக் கேட்டான். அவன் தானாக எதுவும் சொல்லவில்லை; தனது கரண்டியால் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தான். இடையிடையே உறுமியதைத் தவிர, அவன் எத்தகைய விமர்சனமும் செய்யவில்லை. அவன் உண்டி அருந்தி முடிந்த பிறகு, மீசையைத் தனது கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு, தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு பேசினான்:

''நீ சொல்வதெல்லாம் முற்றிலும் சரியே. இந்தப் பிரச்சினையை முறையாகப் பைசல் செய்வது அவசர அவசியமாகும். இந்த வார்க்ஷாப்புகளிலே, வட்டாரத்தில் உள்ள கம்யூனிஸ்டுகளில் பெரும்பாலோர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். முதலில் இங்குதான் தொடங்கவேண்டும். அப்படியானால், உனக்கும் த்ஸெவெத்தாயெவுக்கும் சண்டை மூண்டுவிட்டதா? அது நல்லதல்ல. அவன் தன்னைப் பற்றி பெரிதாக எண்ணிக் கொள்ளும் அற்பன் என்பது ஓரளவுக்கு உண்மையே. ஆனால் நீ இளைஞருடன் சுமுகமாகப்

பழகுவாயே? அது இருக்கட்டும். வார்க்ஷாப் புகளில் உனக்கு என்ன பொறுப்பு?''

''நான் என் ஷாப்பில் வேலை செய்கிறேன். பொதுவாக, எல்லாப் பொது நலக் காரியங்களி லும் நான் பங்கு கொள்கிறேன். என் குழுவில் நான் அரசியல் வகுப்பு நடத்துகிறேன்.''

''தலைமைக் குழுவில் உன் பொறுப்பு என்ன?''

பாவெல் தயங்கினான்.

''என் உடலில் உறுதி இல்லாத நிலைமை இருந்ததாலும் நான் படிக்க விரும்பியதாலும் கொஞ்ச காலத்துக்கு அதிகாரபூர்வமாகத் தலை மையில் பங்கு கொள்வதில்லையென்று முடிவு செய்தேன்'' என்று அவன் விளக்கினான்.

''அப்படியா?'' தோக்கரெவ் கண்டனம் தொனிக்கும் குரலில் கூவினான். ''தம்பி! உன் உடல்நலம் சரியாயிருந்ததென்றால், கடுமை யாகப் பேசியிருப்பேன். சரி, இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது? பலம் ஊறியிருக்கிறதா?'' என்று அவன் வினவினான்.

''ஆம். பலம் உண்டாகியிருக்கிறது.''

''நல்லது. இனி ஊக்கத்துடன் வேலையில் இறங்கு. சுற்றி வளைத்துக் காரியம் செய்வதை நிறுத்திவிடு. ஓரத்தில் உட்கார்ந்திருப்பதால் நன் மையில்லை. எவர் வேண்டுமானாலும், நீ பொறுப் பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறாய் என்று உன் னிடம் சொல்லலாம். உன்னாலும் அதை மறுக்க முடியாது. நாளைக்கு நிலைமையைச் சரிசெய்து விட வேண்டும். நான் இதைப் பற்றி ஒக்குனேவிடம்

பேசுகிறேன்.''—தோக்கரெவின் குரல், அவனது வருத்தத்தைக் காட்டிக்கொடுத்து விட்டது.

''இல்லே, அப்பா, அவனைக் கடிந்துகொள்ள வேண்டாம். நான்தான் எனக்கு வேலே கொடுக்கக் கூடாதென்று கேட்டுக்கொண்டேன்'' என்று பாவெல் விரைந்து விளக்கம் தந்தான்.

தோக்கரெவ் இகழ்ச்சியாகச் சீட்டி அடித்தான்.

''நீ கேட்டுக்கொண்டாய்; அவன் ஒப்புக் கொண்டான்! அப்படியா? நல்லது. இளங் கம்யூனிஸ்டுகளாகிய உங்களுடன் நாங்கள் என்ன செய்யமுடியும்?... மகனே, முன்போல, எனக்குச் செய்தித்தாள் படிப்பாயா? என் கண் பார்வை மங்கியிருக்கிறது.''

·

வார்க்ஷாப்புகளின் கட்சித் தலைமை, கம்ஸமோல் தலைமைக் குழுவின் மெஜாரிட்டி முடிவை ஆதரித்தது. உழைப்பு முறையிலும் கட்டுப்பாட்டிலும் முன்மாதிரிகளாகத் திகழ வேண்டுமென்ற முக்கியமான, மிகக் கடினமான ஒரு பொறுப்பு கட்சியினரிடமும், கம்ஸமோல் குழுவினரிடமும் ஒப்படைக்கப்பட்டது. கட்சித் தலைமைக் கூட்டத்தில், த்ஸெவெத்தாயெவ் தகுதியான விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டான். அவன் முதலில் வீம்பு பேசிப் பார்த்தான். ஆனால் சற்று வயதடைந்த, தன்னை அரித்துக் கொண்டிருக்கும் க்ஷயத்தால் மஞ்சள் நிறத்துடன் வெளிறிப்போன முகம் கொண்ட கட்சிக் காரியதரிசி

யான லோப்பாகின் அவனது வாதங்களை அக்கு வேறு அணி வேறாகப் பிய்த்துவிட்டான். இறுதியில் த்ஸெவெத்தாயெவ் பின்வாங்கினன்; தன் தவறை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டான்.

அடுத்த நாள், சுவரொட்டிச் செய்தித்தாள்களில் வந்த பல கட்டுரைகள் ரயில்வே ஷாப்புகளில் ஒரு அதிர்ச்சியை உண்டாக்கின. அந்தக் கட்டுரைகளைத் தொழிலாளர் உரக்கப் படித்தனர்; சூட்டோடு விவாதித்தனர். அன்று மாலை நடந்த வாலிபர் கூட்டங்களில் என்றுமில்லாத அளவுக்கு இளைஞர்கள் கூடி, அந்தக் கட்டுரைகள் எழுப்பியிருந்த பிரச்சினைகளை மட்டும் விவாதித்தனர்.

பீதின் கம்ஸமோலிலிருந்து வெளியேற்றப்பட்டான். கம்ஸமோலின் நிர்வாகக் குழுவில் ஒரு புதிய அங்கத்தினன் சேர்க்கப்பட்டான்; அவனே பாவெல். அவன் அரசியல் பயிற்சிக்குப் பொறுப்பாக்கப்பட்டான்.

புதிய கட்டத்தில், ரயில்வே வார்க்ஷாப்புகள் முன்நின்ற புதிய கடமைகளை நெஷ்தானேவ் கூட்டத்தில் விவரித்த பொழுது, ஹாலில் பரிபூர்ண அமைதி நிலவியது.

கூட்டம் முடிந்தபின், த்ஸெவெத்தாயெவ் வெளியே வந்தான். அங்கு பாவெல் அவனுக்காகக் காத்திருந்தான்.

''நாம் இருவரும் சேர்ந்து போகலாம்; உன்னிடம் பேசவேண்டும்'' என்று பாவெல் கூறினன்.

''எதைப்பற்றி?'' என்று கம்ஸமோல் செயலாளன் மனம் கசந்து கேட்டான்.

பாவெல் அவனுடைய தோளில் தனது கையைப் போட்டான். இருவரும் சில கஜதூரம் சென்றபின், பாவெல் ஒரு பெஞ்சிக்கு அருகில் நின்முன்.

''இங்கே சிறிது நேரம் உட்காரலாமா?'' என்று கூறிக்கொண்டே பாவெல் உட்கார்ந்தான்.

த்ஸெவெத்தாயெவ் குடித்துக்கொண்டிருந்த சிகரெட்டின் முனை மாறி மாறி சிவந்து மங்கியது.

''உனக்கு ஏன் என்மீது இந்தக் காட்டம்'' என்று பாவெல் வினவினுன்.

சில நிமிஷங்கள் அமைதி நிலவியது.

''ஓ! இதற்காகத்தான் கூப்பிட்டாயா? நான் ஏதோ வேலையைப்பற்றி பேசுவதற்குக் கூப்பிட்டாய் என்று எண்ணினேன்'' என்று த்ஸெவெத்தாயெவ் வியப்புற்ற பாவனையில் பேசினுன். ஆனுல் அவனது குரல் நடுங்கியது.

பாவெல் தன் உள்ளங்கையை அவனது முழங்காலின் மீது வைத்தான்.

''திம்கா, ஜம்பப் பேச்சு வேண்டாம். இதெல்லாம் ராஜதந்திரிகளுக்கு உரிய பேச்சு. நீ ஏன் என்னை வெறுக்கிருய் என்பதை விளக்கு.''

த்ஸெவெத்தாயெவ் தன் இருக்கையில் நிம்மதியில்லாமல் மாறிமாறி உட்கார்ந்தான்.

''நீ எதைப் பற்றிப் பேசுகிருய்? நான் ஏன் உன்னை வெறுக்க வேண்டும்? நானே உனக்கு வேலை

கொடுத்தேன். நீதான் பொறுப்பேற்றுக்கொள்ள மறுத்தாய். இப்பொழுது நான் உன்னை ஒதுக்கி விட்டதாகக் குற்றம் சாட்டுகிறாய்'' என்று விடை தந்தான்.

ஆனால் அவனது பேச்சு உண்மை விளக்கமாகத் தோன்றவில்லை. பாவெல், தன் கையை த்ஸெவெத்தாயெவின் முழங்கால் மீது வைத்துக்கொண்டே, உணர்ச்சியுடன் கூறினான்:

''நீ சொல்ல மாட்டாயென்றால், நானே சொல்கிறேன். நான் உன் வழியில் குறுக்கிடுவதாக நீ நினைக்கிறாய். உன் பதவியை நான் விரும்புவதாக நீ கருதுகிறாய். அவ்வாறு நீ எண்ணவில்லையென்றால், பீதின் விவகாரத்தில் நீ அம்மாதிரி சண்டை பிடித்திருக்கமாட்டாய். இத்தகைய உறவுகள் நமது வேலையைக் கெடுத்து விடும். இது நம்மிருவர் சம்பந்தப்பட்டதாக மட்டும் இருந்தால், அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்பதைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன். ஆனால் நாளை முதல் நாம் இருவரும் சேர்ந்து வேலை செய்யப் போகிறோம். இப்படியிருந்தால் அதிலிருந்து என்ன பயன் கிடைக்கும்? நான் சொல்வதைக் கேள். நாம் ஒன்றும் பங்காளிகளல்ல. நாம் இருவரும் தொழிலாளிகள். இதர விஷயங்களை விட நம் லட்சியத்தை நீ அதிகமாக நேசித்தாயானால், நீ உன் கையைக் கொடு; நாம் இருவரும் நாளை முதல் நண்பராக இருப்போம். ஆனால் நீ இந்த அபத்தக் களஞ்சியத்தையெல்லாம் உன் மண்டையிலிருந்து

நீக்காவிட்டால், நீ சூழ்ச்சிக்கு இடம் கொடாத வகையில் நடந்து கொள்ளாவிட்டால், நமது வேலையில் தோல்வி ஏற்படும்பொழுதெல்லாம் சண்டைப் பிடித்துக்கொண்டு நிற்போம். இதோ என் கரம். நட்புணர்ச்சியுடன் நீட்டுகிறேன். எடுத்துக்கொள்.''

த்ஸெவெத்தாயெவின் கரடுமுரடான விரல்கள் தனது உள்ளங்கையை மூடியபொழுது, பாவெலுக்கு ஆழ்ந்த திருப்தி ஏற்பட்டது.

ஒரு வாரம் கழிந்தது. கட்சியின் வட்டாரக் கமிட்டியில் வேலை நேரம் முடிந்துகொண்டிருந்தது. அலுவலகங்களில் அமைதி நிலவியது. ஆனால் தோக்கரெவ் இன்னமும் மேஜைமுன் அமர்ந்து வேலை செய்துகொண்டிருந்தான். அவன் தனது கைவைத்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, கடைசி ரிப்போர்ட்டுகளைப் படித்துக்கொண்டிருந்தான். அச்சமயம், கதவைத் தட்டிய சப்தம் கேட்டது.

''உள்ளே வா''

பாவெல் பிரவேசித்தான்; இரண்டு கேள்வித் தாள்களைக் காரியதரிசியின் மேஜையில் வைத்தான்.

''இது என்ன?''

''அப்பா, பொறுப்பில்லாத வாழ்வுக்கு முடிவுகட்டுகிறேன். என்னைக் கேட்டால், அதற்கான காலம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

உன் கருத்தும் அதுவானால், என்னை ஆதரிக்க வேண்டுகிறேன்.''

தோக்கரெவ் தலைப்பை நோக்கினான்; பிறகு சிறிது நேரம் இளைஞனையும் பார்த்தான்; ஒன்றும் கூறாது தம் பேனாவை எடுத்தான். ''ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்குகளின்) கட்சியில் பரீட்சார்த்த அங்கத்தினராகப் பாவெல் அந்திரேயெவிச் கர்ச்சாகினைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்யும் தோழர்களின் கட்சி வாழ்வுக்காலம்'' என்ற தலைப்பின்கீழ் ''1903'' என்று உறுதியான கரத்தால் எழுதி விட்டுக் கையெழுத்திட்டான்.

''மகனே, நீ ஒருநாளும் இந்தக் கிழவன் பெயரை மாசுபடுத்தமாட்டாய் என்பதை நான் அறிவேன்'' என்றான் அவன்.

அறையில் புழுக்கம் தாங்க முடியவில்லை. எல்லோர் மனதிலும் எண்ணம் ஒன்றுதான்: எவ்வளவு சீக்கிரத்தில் சாத்தியமோ, அவ்வளவு சீக்கிரத்தில் ஸாலோமென்காவின் 'செஸ்ட்நட்' மரங்களின் குளிர்ந்த நிழலுக்கு ஓடிப்போக வேண்டுமென்பதே அது.

''பாவெல், முடித்து விடு. இன்னும் ஒரு நிமிஷம்கூட இங்கு இருக்க முடியாது'' என்று த்ஸெவெத்தாயெவ் வேண்டிக் கொண்டான். அவனது உடலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. காத்யாவும் பிறரும் அவனை ஆதரித்தனர்.

பாவெல் புத்தகத்தை மூடினான்; அரசியல் வகுப்பு கலைந்தது.

அவர்கள் அனைவரும் எழுந்தபொழுது, சுவ ரில் இருந்த பழங்காலத்து எரிக்ஸன் டெலிபோன் அபசுரம் எழுப்பியது. த்ஸெவெத்தாயெவ் போனை எடுத்தான். அறையில் அவனது தோழர்கள் இரைந்து உரையாடிக் கொண்டிருந்ததால், அவன் போனில் உரக்கப் பேச வேண்டியதாயிற்று.

அவன் ரிஸீவரைத் தொங்கவிட்டுவிட்டுப் பாவெலை நோக்கினான்.

''ஸ்டேஷனில் இரண்டு ரயில் பெட்டிகள் நிற்கின்றன. போலிஷ் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்தவை. அவற்றில் விளக்கு எரியவில்லை. இணைப்புக் கம்பியில் ஏதோ கோளாறு. ரயில் இன்னும் ஒரு மணி நேரத்தில் கிளம்புகிறது. பாவெல், சில கருவிகளை எடுத்துக்கொண்டு, விரைந்து செல். அவசரமான வேலை'' என்றான் த்ஸெவெத் தாயெவ்.

பளபளக்கும் இரண்டு முதல் வகுப்பு பெட்டிகள் முதல் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந் தன. விசாலமான ஜன்னல்களை உடைய 'ஸலூன்' பெட்டியில் நல்ல வெளிச்சம் இருந்தது. ஆனால் இன்னொரு பெட்டியில் ஒரே இருட்டா யிருந்தது.

பாவெல் அந்த ஆடம்பரமான பெட்டியின் படிக்கட்டை அடைந்தான். அதனுள் பிரவேசிப் பதற்காக அதன் கைப்பிடியைப் பிடித்தான்.

ஸ்டேஷன் சுவரை ஒட்டினாற்போல நின்று கொண்டிருந்த ஒரு உருவம் வேகமாக வந்து, அவனது தோளைப் பிடித்துக்கொண்டது.

''நீங்கள் எங்கு செல்லுகிறீர்கள்?''

பன்முறை கேட்டுப் பழகிய குரல் அது. பாவெல் திரும்பினன். அந்த உருவத்தின் தோல் சட்டை, விசாலமான நுனியுடன் கூடிய குல்லாய், மெலிந்த கிளி மூக்கு, உஷாரான சந்தேகப் பார்வையுடன் கூடிய கண்கள் ஆகியவற்றை நோக்கினன்.

அது அர்த்தியூகின். அவன் முதலில் பாவெலை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது, அவன் தன் கரத்தைப் பாவெலின் தோளிலிருந்து எடுத்தான். அவன் விளக்கம் கோரும் முறையில் கருவிப் பெட்டியை நோக்கினன். எனினும் அவனது முகத்தில் இருந்த கடுமை தளர்ந்தது.

''எங்கே போகிருய்?'' என்று அவன் மீண்டும் கேட்டான்.

பாவெல் சுருக்கமாக விளக்கம் தந்தான். இன்னெரு உருவம், பெட்டியின் பின்புறத்திலிருந்து முன்னல் வந்தது.

''ஒரு வினடி பொறுங்கள். கண்டக்டரைக் கூப்பிடுகிறேன்.''

பாவெல், கண்டக்டரைப் பின்தொடர்ந்து 'ஸலூன்' வண்டிக்குள் சென்றபொழுது, அதில் நாகரீகமான பயண உடை அணிந்திருந்த சிலர் அமர்ந்திருந்தார்கள். ஒரு மாது, கதவுப்பக்கம் முதுகைக் காட்டிக்கொண்டு, சித்திரப்பட்டாடை போர்த்திய மேஜைக்கு முன் உட்கார்ந்திருந்தாள். பாவெல் உள்ளே சென்றபொழுது, அவள் தன்

னெதிரில் நின்றுகொண்டிருந்த ஒரு நெட்டையான ராணுவ அதிகாரியுடன் உரையாடிக்கொண்டிருந்தாள். எலெக்டிரிஷியன் வந்தவுடன், அவர்கள் தமது பேச்சை நிறுத்திக்கொண்டார்கள்.

கடைசி விளக்கிலிருந்து இடைவழிக்குச் சென்ற கம்பியைப் பாவெல் துரிதமாகப் பரிசோதித்தான். அதில் ஒரு கோளாறுமில்லை என்பதைக் கண்டான். சேதமுற்ற இடத்தை அடுத்த பெட்டியில் தேடுவதற்காக, அவன் அந்தப் பெட்டியிலிருந்து மறு பெட்டிக்குச் சென்றான். காலைக் கழுத்துடன்கூடிய பருமனான கண்டக்டர் பாவெலைப் பின்தொடர்ந்தான். அவனது உடுப்பு போலிஷ் ராஜ்யத்தின் கழுகுச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்த பல பெரிய பித்தளைப் பித்தான்களுடன் பிரகாசித்தது.

''இந்த வண்டியில் எல்லாம் சரியாக உள்ளன. அடுத்த பெட்டியைப் பார்ப்போம். அதில் தான் ஏதோ கோளாறு இருக்க வேண்டும்'' என்று பாவெல் கண்டக்டரிடம் கூறினான்.

கண்டக்டர் அந்தப் பெட்டியின் கதவைச் சாவிபோட்டுத் திறந்தான். இருவரும் இருள் சூழ்ந்த குடைவழிக்குள் பிரவேசித்தனர். பாவெல் தனது கையில் இருந்த பாட்டரி விளக்கால் மின்சாரக் கம்பியைக் கவனித்துக்கொண்டே சென்றான். மின் ஓட்டம் எந்த இடத்தில் முறிவு ஏற்பட்டுள்ளது என்பதை அவன் கண்டுபிடித்தான். சில நிமிஷங்களில் அவன் கோளாறை நீக்கிவிட்டான்; இடைவழியில் விளக்கு எரிந்தது.

''உள்ளறையிலுள்ள பல்புகள் எரிந்து போய்விட்டன. அவற்றை மாற்றவேண்டும்'' என்று பாவெல் கண்டக்டரிடம் கூறினன்.

''அப்படியானல் நான் சீமாட்டியைக் கூப்பிட வேண்டும். திறவுகோல் அவரிடம்தான் இருக்கிறது'' என்முன் கண்டக்டர். எலெக்டிரிஷியனைத் தனியாக விட்டுச் செல்ல கண்டக்டர் விரும்பவில்லை, எனவே அவனைத் தன்னுடன் வரும்படி பணித்தான்.

அந்த மாது உள்ளறையில் முதலில் பிரவேசித்தாள்; பாவெல் அவளைப் பின்தொடர்ந்தான். கண்டக்டர் கதவு நிலையை அடைத்துக்கொண்டு நின்முன். அந்த அறையில் பிரயாணத்துக்கேற்ற இரண்டு நேர்த்தியான தோற்பைகள் கிடந்தன. ஒரு ஸில்க் கோட்டு இருக்கையில் உதாசீனமாக எறியப்பட்டுக் கிடந்தது. ஜன்னலுக்குக் கீழ், மேஜையின்மேல், ஒரு குப்பி பரிமளப்பொருளும், ஒரு பசுமையான ஆடம்பரப் பையும் கிடந்தன. இவற்றையெல்லாம் பாவெல் கவனித்தான். அந்தப் பெண், படுக்கையின் ஒரு மூலையில் அமர்ந்து தன் கேசத்தைத் தட்டிக்கொடுத்துக் கொண்டே, எலெக்டிரிஷியனது வேலையைக் கவனித்தாள்.

''ஒரு நிமிஷம் வெளியே சென்று வருவதற்கு, சீமாட்டி அனுமதிப்பார்களா? மேஜர் அவர்கள் கொஞ்சம் குளிர்ந்த 'பீர்' கேட்டார்'' என்று கண்டக்டர் கஷ்டப்பட்டுக் காலைக் கழுத்தை வளைத்துக்கொண்டு மிகப் பணிவாகக் கூறினன்.

''நீ போகலாம்'' என்று அந்தப் பெண் வீணை ஐம்பம் தொனித்த குரலில் பதிலளித்தாள்.

அவர்கள் இருவரும் போலிஷ் மொழியில் பேசிக்கொண்டனர்.

இடைவழியிலிருந்து வந்த ஒரு ஒளிக் கற்றை அந்தப் பெண்ணின் தோள்மீது விழுந்தது. அவள் நேர்த்தியான 'கௌன்' அணிந்திருந்தாள். அது சிறப்பான லியான்ஸ் ஸில்க்கில், பாரிஸ் நகரத்தின் தலைசிறந்த உடுப்புக் கலைஞர்களால் தைக்கப்பட்டது. தோள்களையும் கைகளையும் மூடாத வகையில் தைக்கப்பட்ட 'கௌன்' அது. அவளது காதுகளில் வயிர அணி பிரகாசித்தது. பாவெலால் ஒரு வெண்மையான தோளையும் கையையும் தான் பார்க்க முடிந்தது. முகம் நிழலில் இருந்தது. பாவெல் தான் திருப்புளியால் விரைவாக வேலை செய்தான். ஒரு நிமிஷத்தில், அந்த அறையில் விளக்குகள் எரிந்தன. இப்பொழுது, அந்தப் பெண் உட்கார்ந்திருந்த ஸோபாவுக்கு மேல் இருந்த பல்பைப் பரிசோதிப்பது ஒன்றுதான் பாக்கியிருந்தது.

அவளுக்கு முன் வந்து நின்ற பாவெல், ''நான் அந்த பல்பைச் சோதிக்க வேண்டும்'' என்றான்.

''ஆம், நான் தடையாக உட்கார்ந்திருக்கிறேன்'' என்று அவள் தூய ருஷ்ய மொழில் விடை தந்தாள். அவள் இலேசாக எழுந்தாள்; அவனுக்கு அருகில் நின்றாள். இப்பொழுது அவன் அவளை முழு

மையாக நோக்கினான். அந்த விற்புருவங்களும், அகந்தை நிறைந்த இதழ்களும் அவன் பன்முறை பார்த்தவைதான். அவள் லெஷ்சின்ஸ்கிய் என்ற வக்கீலின் மகள் நேல்லி என்பதில் சந்தேகமே இல்லை. அவனது வியப்புப் பார்வையை அவளால் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால், பாவெல் அடையாளம் கண்டு கொண்ட போதிலும், இந்த நான்காண்டு காலத்தில் பாவெல் உருமாறிந்ததால், இந்த எலெக்டிரிஷியனே, அண்டைவீட்டிலிருந்து தொல்லை கொடுத்த பையன் என்பதை நேல்லியால் உணர முடியவில்லை.

பாவெலின் வியப்புக்குப் பதில் அளிக்கும் வகையில் தனது புருவங்களை அசட்டையாக அசைத்துக்கொண்டு அவள் அறைக் கதவருகில் சென்றாள்; பொறுமை இழந்தவளாய்த் தான் உயர்ந்த தோல் பூட்ஸின் நுனியால் தட்டிக் கொண்டே நின்றாள். பாவெல் இரண்டாவது பல்பு மீது தன் கவனத்தைச் செலுத்தினான். அதைக் கழற்றி எடுத்து, வெளிச்சத்தில் நோக்கினான். அப்பொழுதுதான், தானும் அதைவிட நேல்லியும் சிறிதும் எதிர்பாரவண்ணம் அவன் ''வீக்தரும் இங்கு இருக்கிறானா?'' என்று போலிஷ் பாஷையில் கேட்டான்.

அவ்வாறு வினவிய பொழுது, பாவெல் திரும்பவில்லை. அவன் நேல்லியின் முகத்தைப் பார்க்கவில்லை. ஆனால் அந்த வினவுக்குப்பின் அவள் நீண்ட நேரம் மௌனம் சாதித்ததிலிருந்தே, அவளுடைய குழப்பத்தை அவன் ஊகித்தான்.

''ஏன், உங்களுக்கு அவனைத் தெரியுமா?''

''ஆம். நன்றாகத் தெரியும். நாம் அண்டை வீட்டுக்காரர்களல்லவா?'' என்று கேட்டுக் கொண்டு, பாவெல் திரும்பி அவளை நோக்கினான்.

''நீங்கள்... பாவெல். உங்களது தாயார்...'' என்று நேல்லி திகிலடைந்து தடுமாறிப் பேசினாள்.

''ஆம். உங்களது சமையற்காரியின் மகன்'' என்று கூறிப் பாவெல் அவளுக்கு உதவிசெய்தான்.

''நீங்கள் எப்படி வளர்ந்துவிட்டீர்கள்! நான் உங்களைப் பார்த்த காலத்தில், முன்பு நீங்கள் ஒரு முரட்டுப் பையனாக இருந்தீர்கள்.''

நேல்லி அவனைத் தலைமுதல் பாதம்வரை நிதானமாக ஆராய்ந்தாள்.

''நீங்கள் ஏன் வீக்தரைப்பற்றி விசாரிக்கிறீர்கள்? நீங்களும் அவனும் நண்பராக இருந்ததில்லையென்பது என் நினைவு'' என்று அவள் காதுக்கினிய குரலில் கூறினாள். இந்த எதிர்பாராத சந்திப்பு, அவளது அலுப்பை மாற்றும் இன்பமான நிகழ்ச்சியாக அமையும்போல் தோன்றியது.

திருக்கி, சுவரில் துரிதமாகப் புதைந்தது.

''வீக்தர் எனக்குச் செலுத்தவேண்டிய ஒரு குறிப்பிட்ட கடனை இதுவரை தரவில்லை. அந்தக் கணக்கை பைசல் செய்ய முடியுமென்ற நம்பிக்கையை நான் இழக்கவில்லை என்பதை, அவனைச் சந்திக்கும்பொழுது அவனிடம் கூறுங்கள்'' என்றான் பாவெல்.

''அவன் உங்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். அவன் சார்பில் நான் கொடுத்துவிடுகிறேன்.''

பாவெல் எந்தக் கணக்கைக் கருத்தில் கொண்டு பேசினன் என்பதை நேல்லி அறிந்திருந்தாள். பாவெலைப் பெத்லியூராவின் ஆட்களிடம் வீக்தர் காட்டிக் கொடுத்தான் என்பதை அவள் தெரிந்திருந்தாள். எனினும், ''இந்தத் தரித்திரப் பயலைப்'' பரிகசிக்க வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டாள்; எனவே, அவமானப்படுத்தும் தொனியில் பேசினுள்.

பாவெல் ஒன்றும் பேசவில்லை.

''எங்கள் வீட்டைக் கொள்ளையடித்து விட்டார்களென்பது உண்மையா? வீடு க்ஷீணமடைந்து வருகிறது என்பது நிஜமா? கொடிவீடும் அங்கிருந்த பாத்திகளும் அழிந்துவிட்டனவென்று நான் நினைக்கிறேன். அப்படித் தானே?'' என்று நேல்லி சிரத்தையுடனும் வருத்தத்துடனும் விசாரித்தாள்.

''அந்த வீடு இனிமேல் உங்களுடையதல்ல. அது எங்களுடையது. நாங்கள் எங்கள் சொத்தை அழிக்க மாட்டோம்'' என்று பாவெல் பதில் உரைத்தான்.

நேல்லி ஏளனமாக இளநகை புரிந்தாள்.

''ஓ! உங்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்திருக்கிறார்களா? போகிற போக்கில் சொல்கிறேன், கேளுங்கள். இந்தப் பெட்டி போலிஷ் தூதராலயத்துக்குச் சொந்தமானது. இங்கு நான் எஜமானி.

நீங்கள் எப்பொழுதும் போல், வேலைக்காரனுக விருக்கிறீர்கள். நான் ஸோபாவில் சௌகரிய மாகப் படுத்துப் படிப்பதற்கு, வெளிச்சம் வேண்டு மென்பதற்காக, இந்த வேலையைச் செய்கிறீர் கள். உங்களது தாயார் எங்களுடைய துணிகளைத் துவைத்துப் போட்டாள். நீங்களும் எங்களுக் குத் தண்ணீர் சுமந்தீர்கள். நாம் மீண்டும் அதே நிலைமைகளில் சந்திக்கிறோம்.''

ஆங்காரத்துடன் கூடிய எக்களிப்புடன் அவ ளது குரல் தொனித்தது. பாவெல், தன் பேனுக் கத்தியால் கம்பியின் முனையில் இருந்த காப்பைச் சுரண்டிக்கொண்டே, அந்தப் போலிஷ் பெண்ணை ஒளிவு மறைவு இல்லாத ஏளனத்துடன் நோக்கி ஞன்.

''ஒரு துருப்பிடித்த ஆணியைக்கூட உங்களுக் காக அடிக்க மாட்டேன். ஆனுல் முதலாளிகள் ராஜதந்திரிகளை உண்டாக்கியிருக்கிருர்கள். அதே ஆட்டத்தை எங்களாலும் விளையாட முடியும். நாங்கள் ராஜதந்திரிகளின் தலைகளைச் சீவுவதில்லை. உண்மையில், அவர்களிடம் இங்கிதமாகவும் நடந்துகொள்கிறோம். உங்களைப்பற்றி அந்த அள வுக்குச் சொல்ல முடியாது'' என்றுன் பாவெல்.

நேல்லியின் கன்னங்கள் செக்கச் செவே லென்று ஆயின.

''வார்ஸாவைப் பிடிப்பதில் நீங்கள் வெற்றி யடைந்து விட்டால், என்னை என்ன செய்வீர்கள்? என்னைக் கண்ட துண்டமாக வெட்டிப் போடு வீர்களென்று நினைக்கிறேன். அல்லது ஒருவேளை

உங்களது வைப்பாட்டியாகப் பயன்படுத்துவீர்களோ?''

அவள் கதவுநிலேயில், வசீகரிக்கும் பாணியில் நின்ருள். லாகிரிப் பொருளுக்குப் பழகிவிட்ட அவளது சிற்றின்பம் மிகுந்த நாசித் துவாரங்கள் துடித்தன. ஸோபாவுக்குமேல் விளக்கு எரிந்தது. பாவெல் நிமிர்ந்து நின்ருன். அவன் கூறினுன்:

''உங்களையா? உங்களைப் போன்றவர்களைக் கொல்வதைப் பற்றி யார் கவலைப்படுவார்கள்? நாங்கள் இல்லாமலேயே, நீங்கள் மிதமிஞ்சிய லாகிரிப் பொருளுக்கு இரையாகிச் சாவீர்கள். வைப்பாட்டி விஷயத்தைப் பொறுத்தமட்டில், உங்களுக்குப் பதில் வீதி மேடையில் திரியும் விபசாரியை ஏற்றுக்கொள்வேன்!''

பாவெல் கருவிப் பெட்டியை எடுத்துக் கொண்டு, கதவை நோக்கி விரைந்தான். நேல்லி ஒரு பக்கமாக ஒதுங்கி அவனுக்கு வழிவிட்டாள். அவன் இடைவழியில் பாதித் தூரம் போனபின், ''பாழாய்ப்போன போல்ஷெவிக்'' என்று அவள் உமிழ்ந்த சாபம் அவன் காதில் விழுந்தது.

மறுநாள் மாலே, பாவெல் நூல்நிலேயத்துக்குச் சென்று கொண்டிருந்தபொழுது, காத்யாவை வழியில் சந்தித்தான். அவள் அவனது சட்டையின் முன்கையைத் தன் சிறு கரத்தால் பிடித்துக்கொண்டாள்; சிரித்துக் கொண்டே குறுக்கே நின்ருள்.

''அரசியல் - அறிவியல் பெரியோரே! விரைந்து போகிறீர்களே, எந்த இடத்துக்கு?''

''நூல்நிலையத்துக்கு, அத்தை. வழிவிடுங்கள், தயவுசெய்து'' என்று பாவெல் கேலி செய்யும் குரலில் பதில் அளித்தான். அவன் மென்மையாக அப்பெண்ணின் தோள்களைக் கைகளால் பிடித்து பக்கமாக நிறுத்திக்கொண்டான். காத்யா அவனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, அவனுக்குப் பக்கத்தில் நடந்தாள்.

''பாவெல், நான் சொல்வதைக் கேள். ஒருவன் எல்லா நேரத்திலும் படித்துக்கொண்டிருக்க முடியாது. நாம் இன்று இரவு ஒரு கூட்டத்துக்குப் போவோம். இன்று ஸீனுவின் வீட்டில் நண்பர்கள் சிலர் கூடுவார்கள். உன்னை அழைத்துவர வேண்டுமென்று பெண்கள் நாள்தோறும் என்னிடம் வற்புறுத்துகிறுர்கள். ஆனுல் நீ இப்பொழுதெல்லாம் அரசியல் பயிற்சியைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திப்பதில்லை. உனக்கு வேடிக்கை விந்தையென்றுல் கொஞ்சம்கூடப் பிடிக்காதா? ஒரு நாள் படிக்காமலிருந்தால், தீமை விளையாது; நன்மையே உண்டாகும்'' என்று காத்யா நயந்து பேசினுள்.

''அது என்ன கூட்டம்! அங்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''என்ன செய்யப் போகிறேுமா?'' என்று காத்யா நகைத்துக்கொண்டே அவனைக் கேலி செய்யத் தொடங்கினுள். ''நாம் பிரார்த்தனை செய்யப் போவதில்லை. உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கப் போகிறேும், அவ்வளவுதான். நீ அக்கார்டியனை நன்றுய் வாசிப்பாய் அல்லவா? நீ வாசித்து நான்

ஒருதடவைகூட கேட்டதில்லே. இன்று மாலே வந்து, வாசி. எனக்காக வாசிக்க மாட்டாயா? ஸீனுவின் மாமனிடம் ஒரு அக்கார்டியன் இருக்கிறது. ஆனல் அவருக்கு வாசிக்கத் தெரியாது. புத்தகப் புழுவே, பெண்கள் உன்னிடம் ரொம்பவும் சிரத்தை கொண்டிருக்கிருர்கள். இளங்கம்யூனிஸ்டுகள் இன்பமாகப் பொழுது போக்கக் கூடாது என்று எவர் சொன்ஞர்? வா. உன்னேக் கெஞ்சுவதில் அலுப்புத் தட்டும்வரை, பிடிவாதம் பிடிக்காதே. நீ என்னுடன் வராவிட்டால், உன்ஞேடு நான் சண்டை போட்டு விடுவேன். அதற்குப்பின், ஒரு மாத காலத்துக்கு உன்ஞேடு பேச்சு வைத்துக் கொள்ளமாட்டேன்.''

வீடுகளுக்கு வர்ணம் பூசும் வேலே செய்து வந்த காத்யா, நல்லதொரு தோழி. கம்ஸமோல் அங்கத்தினரிலே முதன்மையானவள். அவளுடைய உணர்ச்சிகளேப் புண்படுத்துவதற்குப் பாவெல் விரும்பவில்லே. எனவே, இத்தகைய கூட்டங்களில் கலகலவென்று பழகத் தெரியாதென்ருலும், அவளுடன் செல்வதற்கு அவன் இணங்கிஞன்.

எஞ்சின் டிரைவர் கிளாதிஷ் வீட்டில் இளேஞர் கூடி உரக்கப் பேசிக்கொண்டிருந்தனர். வீட்டிலிருந்த பெரிய அறை, வராந்தா ஆகிய இரண்டையும் இளேஞர்களுக்கென விட்டுவிட்டு அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்க மனமின்றி பெரியோர் வேறு அறைக்குச் சென்று விட்டனர். அறையிலும் சிறிய தோட்டத்தை நோக்கிய அந்த வராந்தாவிலும் ஆணும் பெண்ணுமாகப் பதினேந்து இளேஞர் கூடியிருந்தனர். காத்யா, பாவெலேத்

தோட்டத்தின் வழியாக வராந்தாவுக்குஅழைத்துச் சென்றபொழுது, ''புருக்களுக்குத் தீனிபோடுதல்'' என்ற விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. வராந்தாவின் நடுவில் இரண்டு நாற்காலிகள், எதிர் எதிரான திசைகளை நோக்கி உட்காரும் வகையில் போடப்பட்டிருந்தன. விளையாட்டுக்குத் தலைமை தாங்கிய வீட்டு மங்கையான ஸீனு அறிவித்தவுடன், ஒரு இளைஞனும் ஒரு மங்கையும் அந்த நாற்காலிகளில் ஒருவர்பின் ஒருவராக அமர்ந்தனர். ''புருக்களுக்குத் தீனிபோடுங்கள்'' என்று ஸீனு கூறியவுடன், அவர்கள் பின் பக்கம் சாய்ந்தனர். அவர்கள் இருவரது இதழ்கள் கூடும் வரையில், அவர்கள் சாய்ந்தனர். அந்த இதழ்கள் கூடியவுடன், அங்கு இருந்தவர்கள் ஆனந்த ஆரவாரம் செய்தனர். அதன் பிறகு, அவர்கள் ''விளையம்'' என்ற ஆட்டத்தையும் ''தபால்காரன் கதவைத் தட்டுதல்'' என்ற ஆட்டத்தையும் விளையாடினார்கள். அவையும் முத்தமிடும் விளையாட்டுகள் தான். ஆனால் ''தபால்காரன் கதவைத்தட்டும்'' விளையாட்டில், ஆட்டக்காரர்கள் வெளிச்சம் நிறைந்த வராந்தாவில் பகிரங்கமாக முத்தமிடாமல், விளக்குகளை அணைத்து இருட்டாக்கியிருந்த அறைக்குள் முத்தமிட்டுக் கொண்டனர். இந்த விளையாட்டுகள் பிடிக்காதவர்களுக்கு, மூலையிலிருந்த சிறிய வட்ட மேஜை மீது பூச்சீட்டுகளின் கட்டு இருந்தது. பாவெலுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பதினாறு வயதுப் பெண்—வெளிறிய நீலக்கண்களை உடையவள்—தன்னை

மூரா என்று பாவெலிடம் அறிமுகம் செய்து கொண்டாள். அவனை நாணத்துடன் நோக்கிக் கொண்டே, அவள் ஒரு சீட்டை அவனிடம் கொடுத்துவிட்டு, ''வயலெட்'' என்று மென்மையாகக் கூறினாள்.

சில வருஷங்களுக்கு முன்னால் பாவெல் இத்தகைய கேளிக்கைகளுக்குப் போனது உண்டு. அவற்றில் நேரடியாகக் கலந்துகொண்டது இல்லையென்றாலும், அவற்றை வெறுத்ததில்லை. ஆனால் இப்பொழுது, அவன் சிறு நகரத்தின் குட்டிபூர்ஷ்வா வாழ்விலிருந்து பரிபூர்ணமாகக் கத்தரித்துக் கொண்டு விட்டதால், இந்த கேளிக்கையைக் கண்டு அவனுக்கு குமட்டல் எடுத்தது; அதைப் பரிகசிக்கத்தக்கதாகவே அவன் கருதினான்.

எனினும், இப்பொழுது அவன் பூச்சீட்டும் கையுமாக இங்கே உட்கார்ந்திருந்தான்.

''வயலெட்'' மலருக்கு எதிரில் இருந்த வாசகத்தைப் படித்தான்; ''நான் உன்னை மிகவும் விரும்புகிறேன்'' என்று எழுதியிருந்தது.

பாவெல் அந்த மங்கையை நோக்கினான். அவள் எத்தகைய குழப்பமும் இல்லாமல் அவனை நோக்கினாள்.

''ஏன்?'' என்று வினவினான் பாவெல்.

அவனது வினா 'சப்' பென்று இருந்தது. ஆனால் மூரா தன் விடையுடன் தயாராயிருந்தாள்.

''ரோஜா'' என்று மெலிந்த குரலில் கூறிக்

கொண்டே அவள் இன்னெரு சீட்டை அவனிடம் கொடுத்தாள்.

ரோஜா மலருடன் கூடிய சீட்டில், ''நீ என் லட்சிய புருஷன்'' என்று எழுதியிருந்தது. பாவெல் அந்தப் பெண்பக்கம் திரும்பினுன்; தன் தொனியை மென்மையானதாக்க முயற்சித்துக் கொண்டே, அவன் வினவினுன்:

''நீ ஏன் இந்த அபத்தத்தில் ஈடுபடுகிருய்?''

அதைக் கேட்ட மூரா அதிர்ச்சி அடைந்தாள். என்ன சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

''என்னுடைய வார்த்தைகள் உங்களுக்கு உண்மையிலேயே பிடிக்கவில்லையா?'' என்று அவள் மனம்போன போக்கில் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு கேட்டாள்.

பாவெல் அந்தக் கேள்வியைப் புறக்கணித்தான். எனினும் அவன் அவளைப்பற்றி அறிய ஆவலாயிருந்தான். அவளிடம் பல கேள்விகள் கேட்டான்; அவளும் விருப்பத்துடன் விடை தந்தாள். அவள் மத்தியதரப் பள்ளியில் படிப்பதையும், அவளது தந்தை ஒரு ரயில்வே தொழிலாளன் என்பதையும், அவன் அறிந்துகொண்டான். தனக்குப் பாவெலை ரொம்பக் காலமாகத் தெரியுமென்றும் அவனுடன் அறிமுகமாவதற்கு ஆவலாயிருந்ததாகவும் அவள் அவனிடம் கூறினுள்.

''உன் குடும்பப் பெயர் என்ன?'' என்று பாவெல் வினவினுன்.

''வலீன்த்ஸெவா.''

''உன் சகோதரன் டெப்போ கம்ஸமோல் யூனிட் ஒன்றுக்குக் காரியதரிசியாக இருக்கிறன், அல்லவா?''

''ஆம்.''

இப்பொழுது பாவெலுக்கு விஷயம் விளங்கியது. கம்ஸமோலின் தீவிர ஊழியர்களில் ஒருவனை வலீன்த்ஸேவ் தன் சகோதரி பண்பு இல்லாத பேதையாக வளர்வதை அனுமதித்துக் கொண்டிருந்தான். சென்ற வருஷத்தில், அவளும் அவளது தோழிகளும், இது போன்ற பல முத்தமிடும் கேளிக்கைகளில் கலந்துகொண்டிருக்கின்றனர். அவள் பாவெலைத் தன் அண்ணன் வீட்டில் பன்முறை பார்த்திருக்கிருள்.

பாவெல் தன் நடத்தையை அங்கீகரிக்கவில்லை என்பதை மூரா உணர்ந்தாள். அவனது முகத்தில் நடமாடிய கேலிச் சிரிப்பைப் பார்த்த அவள், ''புரு விளையாட்டுக்கு'' வர முடியாதென்று வெட்டொன்று துண்டு இரண்டாகக் கூறி விட்டாள். அவர்கள் இருவரும் மேலும் சில நிமிஷங்கள் உரையாடினர்; மூரா அவனிடம் தன்னைப் பற்றி மேலும் பல விஷயங்களை எடுத்துரைத்தாள். அப்பொழுது, அங்கு வந்த காத்யா, ''அக்கார்டியனைக் கொண்டு வரட்டுமா?'' என்று பாவெலைக் கேட்டாள். மூராவை விஷமமாக நோக்கிக்கொண்டே, ''இருவரும் சினேகிதர்களாகி விட்டீர்களா?'' என்ருள்.

பாவெல், காத்யாவைத் தன் அருகில் அமரச் செய்தான். அவர்களைச் சுற்றிலும் பேச்சும் சிரிப்பு

மாக ஒரே சத்தமாயிருந்த நிலைமையைப் பயன் படுத்திக்கொண்டு, ''நான் வாசிக்கப் போவ தில்லை. மூராவும் நானும் போகிறேம்'' என்று பாவெல் கூறினுன்.

''ஓஹோ! உனக்குக் கன்னி வைத்து விட்டா ளா?'' என்று காத்யா நையாண்டி செய்தாள்.

''ஆமாம் காத்யா. நம்மைத் தவிர வேறு இளங் கம்யூனிஸ்ட் சங்கத்தினர் யாராவது இருக் கிருர்களா? அல்லது நாம் மட்டும்தான் மாடப் புறுப் பித்தர்களா?''

''அந்த வேடிக்கையை நிறுத்திவிட்டோம். இனி நடனமாடப் போகிறேம்'' என்று சமா தானப்படுத்தும் தோரணையில் அவள் பேசினுள்.

பாவெல் எழுந்து நின்ருன்.

''சரி, சரி. கிழப்பெண்ணே, நீ நடனமாடு. மூராவும் நானும் போகிறேம்.''

ஒருநாள், ஓக்குனேவின் அறையில் பாவெல் மட்டும் இருந்தபொழுது, ஆன்ஞ அங்கு வந்தாள்.

''பாவெல், உனக்கு வேலை அதிகமாயிருக் கிறதா? நான் நகர சோவியத் கூட்டத்துக்குப் போகிறேன். எனக்குத் துணையாக வருகிருயா? திரும்பிவருவதற்கு ரொம்ப நேரமாகும். தனி யாகப் போவதற்குப் பிடிக்கவில்லை.''

உடனே கிளம்புவதற்குப் பாவெல் சித்தமா யிருந்தான். அவனது படுக்கைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த 'மௌஸர்' கைத்துப்பாக்கியை எடுப்பதற்கு எழுந்தான். ஆனுல் மிகவும் கனமாக

விருந்ததால், அது வேண்டாமென்று முடிவு செய்தான். அதற்குப் பதிலாக அவன் மேஜையின் டிராயரிலிருந்து ஓக்குனேவின் 'பிரௌனிங்' கைத் துப்பாக்கியை எடுத்துத் தன் காற்சட்டைப்பையில் வைத்துக்கொண்டான். ஓக்குனேவுக்கு ஒரு குறிப்பு எழுதி வைத்தான். அவனது அறை தோழனுக்குத் தெரிந்த இடத்தில் திறவுகோலை வைத்தான்.

சோவியத்தின் பேரவைக் கூட்டம் தியேட்டரில் நடைபெற்றது. அங்கு ஆன்னுவும் பாவெலும், பன்கிராத்தவையும் ஒல்காவையும் சந்தித்தனர். நால்வரும் ஹாலில் அடுத்தடுத்து அமர்ந்தனர்; இடைவேளைகளில் அவர்கள் சேர்ந்தாற் போலச் சதுக்கத்தில் உலவினர். ஆன்னு எதிர் பார்த்த மாதிரி, கூட்டம் நெடுநேரம் கழித்தே முடிவுற்றது.

''ஆன்னு, இன்று இரவு என் வீட்டில் தங்கிவிடு. ரொம்ப நேரமாகிவிட்டது. நீ நீண்ட தூரம் போகவேண்டும்'' என்று ஒல்கா யோசனை கூறினுள்.

ஆனல், ஆன்னு அதற்கு இணங்கவில்லை. ''என் வீடு வரை என்னுடன் வருவதாகப் பாவெல் ஒத்துக்கொண்டிருக்கிருன்'' என்று அவள் சொன்னுள்.

பன்கிராத்தவும் ஒல்காவும் பிரதான வீதி வழியே சென்றனர். மற்ற இருவரும் ஸாலோமென் காவுக்குக் குன்று மேல் செல்லும் சாலை வழியே நடந்தனர்.

இருளடர்ந்த இரவு; காற்றோட்டமே இல்லை. நகரம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. சோவியத் கூட்டத்தில் பங்கெடுத்தவர்கள் பல்வேறு வழி களில் தத்தம் இல்லம் தேடிச் சென்றனர். கொஞ் சம் கொஞ்சமாக, அவர்களது நடை ஒலியும் பேச்சு ஒலியும் அடங்கின. நகரத்தின் மையத்தி லிருந்து வெளிப்பேட்டையைநோக்கிப் பாவெலும் ஆன்னுவும் வேகமாக நடந்தனர். வெறிச் சென்று இருந்த சந்தையில், காவற்காரர்கள் அவர்களது அடையாளச் சீட்டுகளைப் பரிசோதித்துவிட்டு, அவர்கள் தொடர்ந்து செல்வதற்கு அனுமதி கொடுத்தனர். அவர்கள் உலாச் சாலையைக் குறுக்கே கடந்து, ஒரு வெட்டவெளியை வெட் டிச்செல்லும் அமைதியான இருண்ட தெருவை அடைந்தனர். அங்கிருந்து இடதுபுறம் திரும்பி, ரயில்வே பண்டசாலைகளின் வரிசைக்குச் சமாந் தரமாகச் சென்ற சாலையில் நடந்தனர். அந்த இருளில் பண்டசாலைகளின் கான்கிரீட் கட்டிடங் கள் பயத்தையும் திகிலையும் உண்டாக்கக் கூடியனவாகத் தோன்றின. ஆன்னுவுக்கு ஒரு இனந் தெரியாத அச்சம் உண்டாயிற்று. அவள் கவலை யுடன் இருளை ஊடுருவிப் பார்த்தாள்; அவளுடைய தோழனின் கேள்விகளுக்குத் தடுமாற்றத்துடன் பதில் அளித்தாள். ஒரு டெலிபோன் கம்பமே பயங்கரமான நிழலாகக் காட்சியளித்தது என்ப தைக் கண்டபொழுது, அவள் உரக்கச் சிரித்தாள்; தனக்கு ஏற்பட்ட திகிலைப் பாவெலிடம் எடுத் துரைத்தாள். அவள் அவனது கையைப் பிடித்துக்

கொண்டு நடந்தாள். அவனது தோள் அவளுடைய தோளை உராய்ந்தபொழுது, அவளுக்குப் புது நம்பிக்கை உண்டாயிற்று.

''எனக்கு இருபத்துமூன்று வயதுதான் ஆகிறது. ஆனால் கிழவியைப்போல நரம்புத்தளர்ச்சியும் பயமும் ஏற்படுகின்றன. நான் கோழை என்று நீ நினைத்தால், அது தவறாகும். ஏதோ ஒரு காரணத்தால், என்னை ஒரு கவலை கவ்விக்கொண்டிருக்கிறது. ஆனால் நீ என்னுடன்இருப்பதால் பயம் மறைகிறது; பந்தோபஸ்து உணர்ச்சி உண்டாகிறது. உண்மையில், நானே என் அச்சத்தைக் கண்டு வெட்கப்படுகிறேன்'' என்று ஆன்னா கூறினாள்.

பாவெல் நிம்மதியாக நடந்தான்; அவனது சிகரெட்டின் பிரகாசம் ஒருகணம் அவனது முகத்தின் ஒரு மூலையைப் பார்வைக்குப் புலப்படுத்தி, அவனது புருவங்களின் வீரத்தை எடுத்துக்காட்டியது. இவையெல்லாம் அவளது பயத்தைப் போக்கியதென்பது மெய். அந்த இரவின் கும்மிருட்டும் அந்த இடத்தின் தனிமையும் முந்தைய இரவில் நகரின் வெளிப்பேட்டையில் நிகழ்ந்த பயங்கரக் கொலைபாதகத்தைப்பற்றி அவள் கூட்டத்தில் கேட்ட கதையும் உண்டாக்கிய அச்சம் பாவெலின் துணையால் மறைந்தது.

பண்டசாலைகள் பின்னுக்குப் போய்விட்டன. அவர்கள் ஒரு சிற்றாறுமீது இருந்த பாலத்தைக் கடந்து பிரதான சாலைவழியே, தரைக்கீழ்ப் பாதையை நோக்கி நடந்தனர். அந்தப் பாதை ரயில்

வே பாதைக்குக் கீழ்க் குடையப்பட்டிருந்தது. அது டவுனின் இந்தப் பாகத்தை ரயில்வே வட்டாரத்துடன் இணைத்தது.

இப்பொழுது, ஸ்டேஷன் கட்டிடம் அவர்களுக்கு வலதுபுறத்தில் ரொம்ப தூரம் பின்னல் இருந்தது. ஒரு ரயில், டெப்போவுக்கு அப்பால் இருந்த முட்டுச்சந்தை நோக்கிச் சென்றது. அது அவர்களது இடம். மேலே, ரயில்வே பாதையில் ஸ்விச்சுப் பலகைகளிலும் கைகாட்டி மரங்களிலும் வர்ண விளக்குகள் மினுமினுத்துக் கொண்டிருந்தன. டெப்போவுக்கு அருகில் ஒரு எஞ்சின் சிரமப்பட்டுப் புகை கக்கிக் கொண்டு வந்தது. அது தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றது.

குடைவழியின் நுழைவாயிலின் உயரே ஒரு வீதி விளக்கு ஒரு துருப்பிடித்த கொக்கியில் தொங்கிக்கொண்டிருந்தது. அதைக் காற்று மென்மையாக அசைத்தது. எனவே, அதன் மங்கலான மஞ்சள் வெளிச்சம் குடைவழியின் இரண்டுபுறச் சுவர்களிலும் மாறி மாறி வீசியது.

துரப்பின் நுழைவாயிலுக்குப் பத்து காலடிகள் தூரத்தில், சாலையின் பக்கத்தில் ஒரு குடிசை தன்னந்தனியாக நின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் அது ஒரு கனம் மிகுந்த குண்டுக்கு இலக்காயிற்று. அதனல், அந்தக் குடிசையின் உட்புறம் அழிந்தது; அத்துடன் அதன் முகப்பும் பாழடைந்தது. எனவே, அது இப்பொழுது வாயைப் பிளந்து கொண்டு நின்ற பொந்தாகக் காட்சி அளித்தது. அது தன் வறுமையை விளம்பரப்படுத்திக்கொண்டு

நிற்கும் பிச்சைக்காரனைப் போலத் தோற்றம் அளித்தது. மேலே, இருப்புப் பாதையில் ஒரு ரயில் கர்ஜனை செய்துகொண்டு சென்றது.

''வீட்டை நெருங்கிவிட்டோம்'' என்று ஆன்னு ஆறுதல் அடைந்தவளாய் நெடுமூச்சு விட்டுக் கூறினுள்.

பாவெல் தன் கையை விடுவிப்பதற்குத் திருட்டுத்தனமாக முயன்முன். ஆனுல், அவள் தன் பிடியை உறுதிப்படுத்திக் கொண்டாள். இருவரும் அழிந்துகிடந்த குடிசையைத் தாண்டிச் சென்றனர்.

திடீரென்று, அவர்களுக்குப் பின்னுல், சட சடவென்று முறிந்த பேரொலி கேட்டது.

யாரோ ஓடிவந்த ஒலியும் இரைக்க இரைக்க மூச்சுவிட்ட ஒலியும் கேட்டன. பாவெலும் ஆன்னுவும் சூழப்பட்டுவிட்டனர்.

பாவெல் தன் கையை விடுவித்துக்கொள்ள முயன்முன். ஆனுல் பயத்தால் கல்லாகச் சமைந்து விட்ட ஆன்னு அந்தக் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவன் தன் கையைத் திமிறி எடுப்பதற்குள், கால தாமதமாகி விட்டது. அவனுடைய கழுத்து ஒரு இரும்புப்பிடியில் சிக்கி விட்டது. அடுத்த விஞடி, பாவெல்மீது பாய்ந்த ஒரு உருவம் அவனைச் சுழற்றித் திருப்பியது. பாவெல் அந்த உருவத்தை நேருக்கு நேர் நோக்கிக் கொண்டு நின்முன். கழுத்தைப் பிடித்திருந்த கைவிரல்கள் மெதுவாகத் தொண்டையை நோக்கி ஊர்ந்தன. காலரைத் திருகி, மூச்சடைத்துப்

போகும் நிலையைப் பாவெலுக்கு உண்டாக்கினன். அதேசமயம், அவ்வுருவத்தின் கைத்துப்பாக்கியின் வாய், பாவெலின் கண்களுக்கு முன்னுல் ஒரு வில் வடிவத்தில் மெதுவாகச் சுழன்றது.

பாவெலின் கண்கள், அமானுஷ்யமான சிரமத்துடன் வடிவம் வரைந்த அத்துப்பாக்கியை நோக்கின. அந்த ரிவால்வரின் வாயிலிருந்து சாவு பாவெலை எதிர்நோக்கியது. ஆனுல் ஒரு நொடி நேரத்துக்குக்கூட, தன் கண்களை அந்த வாயிலிருந்து திருப்புவதற்கான துணிவு பாவெலிடம் பிறக்கவில்லை. அவனுக்குப் பலமும் இல்லை. அவன் தன் முடிவுக்குக் காத்திருந்தான். ஆனுல் எதிரி அவனைச் சுடவில்லை. பாவெலின் அகன்ற கண்கள், அந்த விரோதியின் முகத்தையும் பெரிய கபாலத்தையும் கனமான தாடையையும் வளர்ந்திருந்த மீசை தாடியின் கருநிழலையும் நோக்கின. ஆனுல் குல்லாய் அவனது கண்களை மறைத்திருந்தது.

பாவெல் தனது ஓரக்கண்ணுல், ஆன்னுவின் வெளிறிய முகத்தை நோக்கினன். மூன்று கொள்ளைக்காரரில் ஒருவன் அவளை அப்பொழுது அந்த இடிந்த குடிசைக்கு இழுத்துக்கொண்டு போனன். அவளது கைகளை நன்ருக வளைத்து கீழே தள்ளினன். இன்னொரு நிழல் பாவெலை நோக்கிப் பாய்ந்து வந்தது. அவன் அதன் பிம்பத்தை மட்டும் குடைவழியின் சுவரில் பார்த்தான். அவன் தனக்குப் பின்னுல் இருந்த இடிந்த குடிசையில் நடந்த சண்டையின் சத்தத்தைக் கேட்டான். ஆன்னு எதற்கும் துணிந்தவளாய்ப் போராடிக்

கொண்டிருந்தாள். அவள் உரக்கக் கூவி எழுப்பிய சத்தம் திடீரென்று முறிந்தது; அவளது வாயில் அந்தப் பாவி குல்லாயை வைத்து அடைத்துவிட்டான். பாவெலைப் பிடித்துக்கொண்டிருந்த இரட்டை மண்டைப் போக்கிரி, மிருகம் தன் இரையால் கவர்ச்சிக்கப்படுவது மாதிரி கற்பழிப்புக் களத்தை நோக்கி கவர்ச்சிக்கப்பட்டான்; அவன்தான் அந்தக் கோஷ்டிக்குத் தலைவன். அந்தச் சூழ்நிலையில், சும்மா பார்த்துக் கொண்டிருக்கும் பாத்திரம் அவனுக்குப் பிடிக்கவில்லை. இப்பொழுது பிடிபட்டுள்ள பையன் அனுபவமில்லாத சிறுவன்; டெப்போவிலுள்ள வெறுக்கத்தக்க இளைஞர்களில் ஒருவன். இத்தகைய சளிமூக்குக்காரனைப்பற்றி அவன் அஞ்சவேண்டியதில்லை. இவ்வாறு, அந்தப் பெருமண்டைத் தலைவன் சிந்தித்தான்.

''அவன் தலையில் இரண்டு அடி பலமாகக் கொடுத்து வயல் வழியே ஓடச் சொல்லுவோம். திரும்பிப் பார்க்காமல் டவுனுக்கு ஓடட்டும்'' என்று எண்ணிக்கொண்டே அவன் தன் பிடியைத் தளர்த்தினான்.

''ஓடு; வந்தவழியே ஓடு, வாய் திறக்காமல் ஓடு. இல்லாவிட்டால், உன் தொண்டையில் குண்டு பாயும்'' என்று கூறிக்கொண்டே, அவன் துப்பாக்கியின் குழலால் பாவெலின் நெற்றியை அழுத்தினான். ''ஓடு'' என்று கம்மிய குரலில் மீண்டும் கூறிவிட்டு, பாவெல் தன் முதுகில் குண்டு பாயுமென்று அஞ்சக் கூடாதென்பதற்காக

அந்தத் தலைவன் தன் துப்பாக்கியைத் தாழ்த்தினான்.

பாவெல் தள்ளாடிப் பின்வாங்கினான்; அந்த இரட்டைத் தலையன் மீது கண் வைத்துக்கொண்டே சாலையோரத்தில் ஓடிக்கொண்டிருந்தான். இளைஞன் இன்னமும் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆளாகலாமென்று அஞ்சுவதைக் கண்ட போக்கிரிக் கூட்டத் தலைவன் திரும்பி, இடிந்த குடிசையை நோக்கி நடந்தான்.

பாவெலின் கை அவனது காற்சட்டைப் பைக்குள் பறந்து சென்றது. அவன் மட்டும் துரிதமாகச் செயல்பட முடிந்தால்! சுழன்றான்; இடது கரத்தை முன்னுக்கு நீட்டினான்; விரைவாகக் குறி பார்த்தான்; சுட்டான்.

கொள்ளைக்காரன் தன் தவறை உணர்ந்த பொழுது கால தாமதமாகிவிட்டது. அவன் தன் கையை உயர்த்திச் சுடுவதற்கு முன்னால், பாவெல் அனுப்பிய குண்டு அவனது விலாப்புறத்தைக் கிழித்துவிட்டது.

அந்தக் காலாடி, தாழ்ந்த சுருதியில் ஊளையிட்டுக்கொண்டே தள்ளாடித் தள்ளாடித் துரப்பின் சுவரை அடைந்தான். நகங்களால் சுவரைக் கீறிக்கொண்டே கீழே விழுந்தான். ஒரு நிழல் குடிசையிலிருந்து வெளியேறி, இருளில் மறைந்தது. அதைத் தொடர்ந்து செல்வதற்குப் பாவெல் இன்னொரு குண்டை ஏவினான். இன்னொரு நிழல், குடைபாதையின் இருண்ட வழியை நோக்கிக் குனிந்து ஓடியது. இன்னொரு குண்டு பறந்தது.

குண்டு அடியால் சிதறிய கான்கிரீட் புழுதியால் மூடப்பெற்ற அந்தக் கரிய வடிவம், ஒரு பக்கத்தில் பாய்ந்து இருளில் மறைந்தது. மீண்டும் பாவெலிடமிருந்த 'பிரெளனிங்' துப்பாக்கி, இரவின் அமைதியைக் கலைத்தது. சுவருக்கு அருகில், பெருமண்டைக் காலாடி, மரணவேதனையில் துடித்துக் கொண்டிருந்தான்.

ஆன்னு எழுந்து நிற்பதற்குப் பாவெல் உதவினான். அவள் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தினால் பயந்து பிரமித்துப் போயிருந்தாள்; கொள்ளைக் காரனின் வலிப்பை வெறித்துப் பார்த்தாள்; இனி ஆபத்து இல்லை என்று அவளால் நம்ப முடியவில்லை.

பாவெல் அவளை மீண்டும் வெளிச்சத்தின் வட்டத்திலிருந்து, இருளுக்கு, இழுத்துக்கொண்டு சென்றான். அவன் அவளுடன் வந்த வழியே டவுனுக்கு ஓடினான். அவர்கள் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓடியபொழுது, துரப்புக்கு அருகில் இருப்புப் பாதைமீது விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன; இருப்புப் பாதையில் பயங்கரமான துப்பாக்கி வேட்டு ஒன்று கேட்டது.

அவர்கள் ஆன்னுவின் இருப்பிடத்தை அடைந்தபொழுது, கோழிகள் கூவிக்கொண்டிருந்தன. ஆன்னு படுத்துக்கொண்டாள். பாவெல் மேஜைக்குப் பக்கத்தில் அமர்ந்து, ஒரு சிகரெட்டைக் குடித்தான்; அந்தச் சிகரெட்டின் சாம்பல் நிறப் புகை சுருள் சுருளாக மேல்நோக்கி மிதந்து செல்

வதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.... அவன் தன் வாழ்வில் நான்காவது தடவையாகக் கொலை செய்துள்ளான்.

தைரியம் என்று ஒன்று இருக்கிறதா என்று அவன் வியந்தான். எந்தச் சமயத்திலும், மாசு மறுவில்லாமல் வெளிப்படும் தைரியம் என்பது உள்ளதா? சற்று முன் நடந்ததையெல்லாம் அவன் நினைவூட்டிக்கொண்டான். முதலில் சில விஞடிகள், துப்பாக்கியின் கரிய கண், பயங்கரமான கண், அவனை அச்சுறுத்தியதென்பது உண்மை. அவனது இதயம் சில விஞடிகள் சில்லிட்டுப் போயிருந்தது என்பதை மறுக்க முடியாது. மூவரில் இருவர் எப்படித் தப்பி ஓடிஞர்கள்? அவனது பார்வையின் ஊனமும், அவன் இடது கையாலேயே சுட வேண்டியதாயிருக்கும் பிரதிகூலமும்தான் அதற்குக் காரணங்களா? இல்லை. சில கஜ தூரத்தில், அவனது குண்டு குறிதவற முடியாது. ஆஞல் நெருக்கடியில் ஏற்பட்ட சிரமமும் அவசரமும் தளர்ச்சியும்தான் அவனைத் தயங்கும்படி செய்தன.

மேஜை விளக்கின் வெளிச்சத்தில், அவனது முகம் தெளிவாகத் தெளிந்தது. ஆன்ஞ அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்; அவனது முகபாவ மாறுதல்களை அவள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவனது கண்களில் எவ்வித மான கலக்கமும் இல்லை. சுருக்கம் விழுந்த புருவமே, அவன் மிகக் கடுமையாகச் சிந்தனை செய்து கொண்டிருக்கிருன் என்று உணர்த்தியது.

''பாவெல், எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாய்?''

திடீரென்று கேட்கப்பட்ட இந்தக் கேள்வியால் அதிர்ச்சி அடைந்து, அவனது சிந்தனைகள் ஒளி வட்டத்துக்கு அப்பால் மிதந்து சென்ற புகையைப் போலச் சிதறின. அவன் தன் மனதில் முதலில் தோன்றிய பதிலைக் கூறினான்:

''நான் ராணுவத் தலைவன் அலுவலகத்துக்குச் செல்லவேண்டும். இந்த விவகாரத்தைப் பற்றி உடனடியாகத் தகவல் கொடுக்க வேண்டும்.''

அவன் மிகவும் களைத்திருந்தான்; எனவே வேண்டா வெறுப்புடன் எழுந்தான்.

அவள் அவனது கரத்தை உடன் விடவில்லை. தன்னந்தனியே இருப்பதற்கு அவள் விரும்பவில்லை. பிறகு அவள் கதவு வரை சென்று அவனை வழியனுப்பினாள். தன்னைக் காப்பாற்றிய அந்த இளைஞன், அதிகாலை இருளில் மறையும் வரை, அவள் வாசலில் நின்றுகொண்டிருந்தாள்.

ரயில்வே காவற் படையினருக்குப் புதிராக விருந்த கொலையின் மர்மம், பாவெலின் ரிப்போர்ட் மூலம் விளக்கமாயிற்று. இறந்தவன் உடல் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. பிம்கா என்ற நாடறிந்த குற்றவாளியின் உடல் அது. அவன் கொலை, கொள்ளை முதலிய தீச் செயல்களைப் புரிந்தவன்; சிறைவாசம் அனுபவித்தவன்.

மறுநாள், துரப்புக்கு அருகில் நடந்த சம்பவத்தைப் பற்றி அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர். பாவெலுக்கும் த்ஸெவெத்தாயெவுக்கும்

இடையே எதிர்பாராத மோதல் ஏற்படுவதற்கும் அது காரணமாக அமைந்தது.

வேலை நேரத்தின் இடையில் த்ஸெவெத்தாயெவ் வார்க்ஷாப்புக்கு வந்து பாவெலைத் தனியாக வரும்படி அழைத்தான். பாவெலை இடைவழியின் ஒரு மூலைக்கு மௌனமாக இட்டுச் சென்ருன். அவன் உணர்ச்சி வசப்பட்டிருந்தான்; எங்குத் தொடங்குவதென்று தெரியாமல் தவித்தான். கடைசியில், ''நேற்று என்ன நடந்ததென்று சொல்'' என்று வெடுக்கென்று வினவினுன்.

''உனக்குத் தெரியுமென்று எண்ணினேன்'' என்ருன் பாவெல்.

த்ஸெவெத்தாயெவ் நிம்மதியில்லாமல் தன் தோட்களைக் குலுக்கினுன். குகைப்பாதைச் சம்பவம் மற்றவர்களைவிட அவனை அதிகமாகப் பாதித்திருந்ததைப் பாவெல் அறிந்திருக்கவில்லை. இந்தக் கொல்லன் வெளிப்பார்வைக்குஅக்கறையில்லாதவனுகத் தோற்றமளித்தாலும், ஆன்னுவிடம் ஆழ்ந்த பாசத்தை கொண்டிருக்கிருன் என்பதைப் பாவெல் அறியவில்லை. ஆன்னுவால் கவர்ச்சிக்கப்பட்டவன் தீம்கா மட்டுமல்ல. ஆனுல் த்ஸெவெத்தாயெவ் அவளிடம் அதிகமாக ஈடுபட்டுவிட்டான். முந்தைய இரவில் துரப்பு அருகில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி, லாகூத்தினு த்ஸெவெத்தாயெவிடம் இப்பொழுதுதான் விவரமாகக் கூறினுள். ஆனுல் ஒரு கேள்விக்கு விடை தெரிய வேண்டியிருந்தது. அந்தக் கேள்வி அவனைச் சித்திரவதை செய்தது. அவன் அந்தக் கேள்வியைப் பாவெ

னிடம் நேராகக் கேட்க முடியாது. எனினும் அதற்கு விடை பெற்றுத்தாளுக வேண்டும். அவனது பயமும் கவலையும் சுயநலத்திலிருந்து உண்டாகின்றனவென்றும், அவை இழிவானவையென்றும், அவனது சீரிய மனச்சான்று அவனுக்கு எடுத்துரைத்தது. ஆனால் அவனுக்குள் குமுறிக் கொந்தளித்த உணர்ச்சிகளின் மோதலுக்கிடையே, சொட்டுத்தனமான, கீழ்த்தனமான உணர்ச்சிகளே கவற்றியடைந்தன.

அவன் கம்மிய குரலில் பேசத் தொடங்கினன்.

"பாவெல், நான் சொல்வதைக் கேள். நாம் இருவரும் ரகசியமாகப் பேசுவோம். மூன்ரும் மனிதனுக்குத் தெரிய வேண்டாம். ஆன்னுவின் நலனை முன்னிட்டு நீ பேசாமல் இருப்பதை நான் அறிவேன். ஆனல், நீ என்னை நம்பலாம். அந்தக் கொள்ளைக்காரன் பிடியில் நீ சிக்கியிருந்த பொழுது, இதர கொள்ளைக்காரர்கள் ஆன்னுவைக் கற்பழித்தார்களா?"

மனக்கலக்கமுற்ற த்ஸெவெத்தாயெவ் தன் பேச்சை முடிப்பதற்கு முன்பே, முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டான்.

த்ஸெவெத்தாயெவின் மனதில் இருந்ததைப் பாவெல் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டான். "ஆன்னுவிடம் அவனுக்கு அக்கறை இல்லாவிட்டால், இம்மாதிரி நிலைகுலைந்து நிற்கமாட்டான். ஆனல் ஆன்னுவை அவன் உள்ளன்புடன் நேசித்தால்...." பாவெல் ஆத்திரமடைந்தான்.

"நீ ஏன் இம்மாதிரி கேட்கிருய்?"

த்ஸெவெத்தாயெவ் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற ஏதோ சில வார்த்தைகளைக் கூறினான். தன்னைப் பாவெல் புரிந்துகொண்டுவிட்டான் என்பதை உணர்ந்துகொண்டு கோபமடைந்தான்.

''என்னைக் கேள்வி கேட்டு நெளிந்து நழுவலாமென்று முயற்சிக்காதே. நேராகப் பதில் கொடு.''

''நீ ஆன்னுவைக் காதலிக்கிறுயா?''

நீண்டநேர அமைதிக்குப் பின்,''ஆம்'' என்று த்ஸெவெத்தாயெவ் ரொம்பக் கஷ்டப்பட்டுப் பதிலளித்தான்.

பாவெல் தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு திரும்பினான். மீண்டும் த்ஸெவெத்தாயெவை நோக்காமல், நடந்தான்.

ஒரு இரவு, ஒக்குனேவ் தன் நண்பனது படுக்கையண்டை கொஞ்ச நேரத்துக்குக் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். பிறகு அவன் படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து, பாவெல் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தின் மீது தன் கரத்தை வைத்தான்.

''பாவெல், நான் சொல்வதைக் கேள். என் இதயத்தை அழுத்திக்கொண்டிருக்கும் ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்லவேண்டும். அது புறக்கணிக்கத் தக்கதாகப் புலப்படும். ஆனல் வேறு வகையில் பார்த்தால், அது முக்கியமானதாக இருக்கிறது. எனக்கும் தால்யாவுக்குமிடையே ஒரு விஷயம். முதலில் நான் அவளை நேசித்தேன்''

என்று தொடங்கிய ஒக்குனேவ், பேதையைப் போலத் தன் தலையைச் சொறிந்துகொண்டான். பிறகு, பாவெல் தன்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை யென்பதைக் கண்ட அவன் மனதைத் திடப்படுத் திக் கொண்டு மேலும் பேசினன். ''அதன் பிறகு தால்யா.... உனக்குத் தெரியும். சரிசரி. நான் அந்த விவரங்கள் எல்லாவற்றையும் விவரிக்கப் போவதில்லை. அவற்றைச் சொல்லாமலேயே நிலை மை விளங்கும். நேற்றைய தினம், அவளும் நா னும் விவாதித்துச் சேர்ந்து வாழ்வதென்று முடிவு செய்தோம். எப்படி உருவாகிறதென்று பார்க்கப் போகிறோம். எனக்கு வயது இருபத்து இரண்டு. இருவருக்கும் வோட்டுரிமை உண்டு. நாங்கள் சரி நிகர் சமான அடிப்படையில் கூட்டு வாழ்வு நடத்த விரும்புகிறோம். உன் யோசனை என்ன?''

பாவெல் அந்தக் கேள்வியைப் பற்றிச் சிந் தித்தான்.

''நான் என்ன சொல்ல முடியும்? நீங்கள் இருவரும் என் நண்பர்கள். நாம் அனைவரும் ஒரே குலம். மற்ற விஷயங்களெல்லாம் நம்மனைவருக் கும் பொதுவாயிருக்கிறது. தால்யா அருமையான பெண்.... எல்லாம் புரிந்து கொள்ளக் கூடிய விஷயம்'' என்று பாவெல் கூறினன்.

அடுத்த நாள், பாவெல் டெப்போ தொழி லாளரின் விடுதிக்குத் தன் இருப்பிடத்தை மாற் றிக்கொண்டான். சில நாட்களுக்குப் பிறகு, ஆன் னுவின் வீட்டில் தால்யா, ஒக்குனேவின் நட்பை கௌரவிக்கும் வண்ணம் நட்புக் கூட்டமொன்று

நடைபெற்றது. அந்தக் கம்யூனிஸ்ட் நிகழ்ச்சியில் உணவோ பானமோ கிடையாது. இளைஞர்கள் கூடிப் பழைய நினைவுகளைப் பற்றி உரையாடினார்கள்; பிடித்தமான நூல்களிலிருந்து சில பகுதிகளைப் படித்தார்கள். அவர்கள் பல பாட்டுகளை நன்றாகப் பாடினார்கள். உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இன்னிசை ரொம்ப தூரத்தில் எதிரொலி செய்தது. பிறகு, காத்யாவும் ஸீனாவும் ஓர் அக்கார்டியன் வாத்தியத்தைக் கொண்டுவந்தனர். அதிலிருந்து எழுந்த நாத வெள்ளம் அறையில் நிரம்பியது. அன்று மாலை, பாவெல் மிகவும் சிறப்பாக வாத்தியம் வாசித்தான். விகாரமான பன்கிராத்தவ் நாட்டியமாடியதைக் கண்டு எல்லோரும் ஆரவாரம் செய்தனர். பாவெல் தனது புதிய சோகபாணியை மறந்துவிட்டான்; தன்னையே மறந்து வாசித்தான்:

எதிர்த்துவந்த தானையிலே
வயதான கோல்சாக்கு
தோற்றோடிப் போனபின்னர்
தோன்றுவனே வேறொருவன்!
விதிர்ப்புற்ற சித்தமது
பயித்தியமாய் வேறுபட
மிகக் கருதி நடப்பானே
அவனல்லோ தெனீக்கின்னே!*

---

*இப்பாட்டில் குறிப்பிடப்பட்ட கோல்சாகும் தெனீக்கினும் வெள்ளைப்படை ஜெனரல்கள்; இளம் சோவியத் குடியரசுக்கு எதிரான ஆயுத மேந்திய போராட்டத்தில் அந்நியநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் கையாட்கள்.

கடந்த காலத்தைப்பற்றி, புயலும் இடியும் நிறைந்த அந்த ஆண்டுகளைப்பற்றி, இன்றைய நட்பையும் போராட்டங்களையும் பற்றி, பாவெல் வாசித்து வந்தான். ஆனால் வாலீன்த்ஸேவ் என்ற கருமான் அக்கார்டியனை வாங்கிக்கொண்டு, 'யாப்லோச்கோ' என்ற கூத்தின் சுழற்றியடிக்கும் சந்தத்தை வாசித்தபொழுது, நாட்டியமாடியது யார் என்று எண்ணுகிறீர்கள்? பாவெலே ஆடினான். அவனது வாழ்வில், அவன் ஆடிய மூன்றாவது நடனம் அது; கடைசி நடனமும் அதுவே.

அத்தியாயம் நான்கு

இதுதான் எல்லை — இரண்டு கம்பங்கள் மௌனமாகப் பகைமை பாராட்டிக்கொண்டு ஒன்றையொன்று எதிர்நோக்கி நிற்கின்றன. அவை இரண்டு வெவ்வேறு உலகங்களின் அடையாளங்களாக இருக்கின்றன. ஒரு கம்பம் வழவழப்பாக இழைக்கப்பெற்று, மெருகிடப்பட்டு, போலீஸ் சாவடியைப் போலக் கருப்பும் வெள்ளையும் பூசப்பட்டுக் காட்சி அளிக்கிறது. அந்தக் கம்பத்தின் உச்சியில் ஒரு ஒற்றைதலைக் கழுகு உருவம் வலிமையுள்ள ஆணிகளால் உறுதியாகப் பொருத்தப்பட்டிருக்கிறது. விரித்துப் பரப்பிய சிறகுகள்; கருப்பும் வெள்ளையுமாக வரிபோட்ட கம்பத்தின் உச்சியை உறுதியாகப் பற்றியுள்ள வளைவு நகங்கள்; இழுத்து நீட்டிய அலகு; இவற்றுடன் கூடிய அந்தக் கழுகு, எதிரில் இருக்கும் கம்பத்தின்

மீது, இரும்புக் கேடயத்தில் அமைந்திருந்த அரிவாள் சம்மட்டிச் சின்னத்தைக் கேடுசூழும் கண்களுடன் வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அரிவாள் சம்மட்டிச் சின்னத்தைத் தாங்கும் கம்பம் பருமனுனது; உருண்டையானது; சுமாராகச் செதுக்கப்பட்டது. அந்த 'ஓக்' மரக் கம்பம் பூமியில் உறுதியாகப் புதைந்திருக்கிறது. இரண்டு கம்பங்களுமே சமநிலத்தில்தான் நிற்கின்றன. ஆனல் அவற்றுக்கிடையே ஒரு ஆழமான அகழி இருக்கிறது; அவை பிரதிநிதித்துவப்படுத்திய இரு உலகங்களும் ஒன்றேடொன்று முற்றிலும் மாறுபட்டு உள்ளன. இந்தக் கம்பங்களுக்கிடையே ஆறு காலடி தூரம்தான்; ஆனல் அந்தத் தூரத்தைக் கடப்பதென்றுல் உயிரைப் பலிகொடுக்கச் சித்தமாயிருக்க வேண்டும்.

இதுதான் எல்லை.

கருங்கடலில் இருந்து வடகோடியிலுள்ள ஆர்க்டிக் மகாசமுத்திரம் வரையில், ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரத்தில், இந்த இடம் பெயராத ஊமைக் காவலர்கள், தமது இரும்புக் கேடையங்களில் உழைப்பின் மகத்தான சின்னத்தைத் தாங்கிக்கொண்டு தொடர்ச்சியாக நிற்கின்றனர். சோவியத் உக்ரேய்னுவுக்கும் பிரபுத்துவப் போலந்துக்கும் இடையே உள்ள எல்லையைப் பேராசைக் கழுகைத் தாங்கி நிற்கும் கம்பம் குறிக்கிறது. நடுக் காட்டினிடையே குடிகொண்டிருந்தது பெரிஸ்தோவ் என்ற சிறிய ஊர். அவ்வூரிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில்—கொரேத்ஸ் என்ற

போலிஷ் குட்டி ஊருக்கு எதிரே—அமைந்திருந்தது எல்லை. ஸ்லாவூத்தா என்ற ஊரிலிருந்து ஆனுப்போல் என்ற ஊர் வரை உள்ள பிரதேசம் "N" என்ற எல்லைக்காவலரின் பட்டாலியனின் கீழ் இருந்தது.

இக்காவற் கம்பங்கள் பனிமூடிய வயல்களின் இடையே ஓடுகின்றன. வெட்டித் திருத்திய பாதைகளின் வழியாக காட்டைக் கடந்து, பள்ளத் தாக்குகளில் இறங்குகின்றன. அதன் பின் குன்றுகளின் மேல் ஏறுகின்றன. சிறிது தூரத்துக்குக் குன்றுகளின் சிகரங்கள் அவற்றை அறைகுறையாக மறைக்கின்றன. மீண்டும் ஆற்றங்கரையில் அவை தோற்றமளிக்கின்றன. அந்த உயர்ந்த கரையில் நின்று கொண்டு, வெண்பனியால் மூடப்பட்ட அன்னிய நாட்டுச் சமவெளிகளை வெறித்து நோக்கிக் கொண்டிருக்கின்றன.

கடுமையான குளிர்; செருப்புகளின் அடியில் அகப்பட்ட வெண்பனி நெறுநெறுக்கின்றது. பண்டைக் காலத்து அசுரர்கள் அணிவதற்கு ஏற்ற தொப்பியை அணிந்த ஒரு ஆஜானுபாகுவான செம்படை வீரன், அரிவாளையும் சம்மட்டியையும் கொண்ட கேடயமொன்றைத் தாங்கிய ஒரு கம்பத்தருகிலிருந்து கிளம்பி நடைபோடுகிறான். அவன் குளிருக்கு அடக்கமான பூட்ஸும், பச்சைப் பட்டைகள் கொண்ட காலருடன் கூடிய சாம்பல் நிற ராணுவ மேற்கோட்டும் அணிந்திருக்கிறான். அந்தக் கோட்டுக்குமேல், பாதத்தைத் தொடும் அளவுக்குத் தொங்கும் ஆட்டுத்தோல்

கோட் ஒன்று. நீளத்துக்கு ஏற்ற பெரிய காலரை உடைய இந்தக் கோட், மிகக் கொடிய பனிப் புயலிலும் கதகதப்பைக் காப்பாற்ற வல்லது. அவனது தலையில் ஒரு கம்பளத் துணித் தொப்பி. கரங்களில் ஆட்டுத் தோலால் செய்த கையுறைகள். தோளில் தொங்கும் துப்பாக்கியுடன் அவன் நடக்கும்பொழுது, அவனது மேலாடையின் விளிம்பு, பனியில் பள்ளம் உழுகிறது. அவன் சுதேசிப் புகையிலையில் செய்த சிகரெட்டைச் சுவைத்துக் கொண்டே நடக்கிறான். வெட்டவெளியாகவுள்ள பகுதிகளில், ஒரு கிலோ மீட்டருக்குக் கிட்டத்தட்ட ஒருவன் வீதம் சோவியத் காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, ஒரு காவலன் தனக்கு இருபக்கத்திலுமுள்ள சகோதரக் காவலர்களைப் பார்க்க முடியும். போலிஷ் காவலர்கள் ஒன்றிரண்டு கிலோ மீட்டருக்கு இருவர் வீதம் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

ஒரு போலிஷ் காலாட்படை வீரன், தனது காவற்பாதை வழியே செஞ்சேனை வீரனை நோக்கி நடக்கிறான். சிரமப்பட்டுத் தான் நடக்கிறான் அவன். சாதாரணப் பட்டாளத்தினருக்கு வினியோகமாகியுள்ள பூட்ஸை அணிந்திருக்கிறான். அவனது பசுமை பாய்ந்த சாம்பல் நிற உடுப்புக்கு மேல் உள்ள கருப்பு மேற்கோட்டில் இரண்டு வரிசைப் பித்தான்கள் பிரகாசிக்கின்றன. அவனது தலையில் வெள்ளைக் கழுகுச் சின்னமும் சதுரக் கொண்டையும் உள்ள ராணுவக் குல்லாய் அணிந்திருக்கிறான். அவனது தோள்பட்டைகளி

லும் காலர் பட்டைகளிலும் பல கழுகுச் சின்னங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் கொண்டு குளிரை ஓட்ட முடியவில்லை. அந்தக் கடுமையான குளிரில் அவனது எலும்பு மஜ்ஜைகூடச் சில்லிட்டுப் போய்விட்டது! அவன் நடக்கும் பொழுதே, மரத்துப் போன செவிகளைத் தேய்த்துவிடுகிறான்; பாதங்களை ஒன்றையொன்றால் தாக்குகிறான். மெல்லிய உறைகளால் மூடிய அவனது முன்கைகள் குளிரில் விறைத்துவிட்டன. அந்தக் கடுங் குளிரில் அவனது மூட்டுகள் விறைத்து விடுமாதலால், அவன் ஒரு கணம் கூட நிற்பது இல்லை. எப்பொழுதும் நடந்து கொண்டேயிருக்கிறான். சில சமயங்களில் ஓட்டம் பிடிக்கிறான். இரு காவலர்களும் நெருங்கியவுடன் போலிஷ் காவலன் திரும்பி செஞ்சேனை வீரனுக்கு இணையாக நடக்கத் தொடங்குகிறான்.

எல்லைப் புறத்தில், இரு தேசக் காவலர்களும் ஒருவரோடொருவர் பேசக் கூடாதென்பது சட்டம். ஆனால் ஒரு கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள உருவங்களைத் தவிரச் சுற்றுமுற்றும் ஒருவரும் இல்லாதபொழுது, இரு தேசக் காவலரும் மௌனமாக நடைபோடுகிறார்களா அல்லது சர்வதேசச் சட்டத்தை மீறிக்கொண்டிருக்கிறார்களா என்பதை யார் சொல்ல முடியும்?

போலிஷ் காவலனுக்கு அவசர அவசியமாகப் புகைபிடிக்க வேண்டும். ஆனால் அவன் தன் தீப்பெட்டியைப் படைவீரர் விடுதியில் மறதியாக வைத்துவிட்டு வந்திருக்கிறான். இந்த நிலையில்,

சோவியத் பக்கத்திலிருந்து புகையிலை மணம் இளங்காற்றில் மிதந்து வந்து அவனுக்கு ஆசை ஊட்டியது. காற்று அவனைப் பழிவாங்க எண்ணி யது போலும்! போலிஷ் சிப்பாய், செவியைத் தேய்ப்பதை நிறுத்திவிட்டுப் பின்பக்கம் நோக்குகி றான். ஸார்ஜென்ட் மேஜர் அல்லது லெப்டினன்ட் தலைமையில் ஒரு எல்லைக்காவலர்களின் குதிரைக் குழு குன்றுக்குப் பின்னுலிருந்து திடீரென்று தோன்றலாமல்லவா? அவர்கள் அம்மாதிரி திடீர் விஜயம் செய்து பரிசோதனை நடத்துவது வழக்கம். ஆனுல், சூரிய வெளிச்சத்தில் கண்ணைப் பறிக்கும் வகையில் பிரகாசிக்கும் வெண் பனியைத் தவிர வேறொன்றையும் அவன் காணவில்லை. வானத்தில், மேகத்தின் புள்ளியைக்கூடக் காணவில்லை.

''தோழா, தீ இருக்கிறதா?'' என்று அவன் கேட்டான். சட்டத்தின் புனிதத் தன்மையை முத லில் மீறியது அவன்தான். அவன் பாய்னெட் கத் தியுடன் கூடிய பிரெஞ்சுத் துப்பாக்கியைத் தன் தோளின் பின்பக்கம் நகர்த்திவிட்டு, விறைத்துப் போன விரல்களைக் கோட் பையில் விட்டு, மலி வான சிகரெட்டுகள் அடங்கிய ஒரு பாக்கெட் டை எடுத்தான்.

செஞ்சேனை வீரனுக்கு அவனது கேள்வி காதில் விழுந்தது. ஆனுல் எல்லைக்கு அப்பாலுள்ள ஒருவனுடன் உரையாடுவதை எல்லைப்புற வேலைக் குரிய விதிகள் தடை செய்கின்றன. மேலும், அந்தச் சிப்பாய் என்ன சொன்னுன் என்பதும் செம் படை வீரனுக்குத் தெளிவாக விளங்கவில்லை. என

வே, அவன் தனது கதகதப்பான, மென்மையான பூட்ஸ்களால் வெண்பனியை மிதித்துப் பொடி செய்துகொண்டு தன் வழியே நடந்தான்.

''போல்ஷெவிக் தோழரே! தீ இருக்கிறதா? ஒரு தீப் பெட்டியைத் தூக்கி எறிவாயா?''

இந்தத் தடவை போலிஷ் சிப்பாய் ருஷ்ய மொழியில் பேசினான்.

செம்படை வீரன் அவனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்தான், ''இந்தக் கடுங்குளிர் போலிஷ்காரனை அடியோடு கொன்றுவிட்டது'' என்று அவன் தனக்குள் சிந்தித்தான். ''அந்த அப்பாவி, முதலாளித்துவ சிப்பாயாக இருக்கலாம். ஆனால் அவனது வாழ்க்கை நாய் வாழ்க்கை. இந்தக் கடுங்குளிரில் இத்தகைய பாதுகாப்பற்ற உடையில் இவனை விட்டு விட்டார்கள். அதனால்தான் குழிமுயலைப் போலப் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கிறான். அதிலும் சிகரெட்கூட குடிக்கவில்லை என்றால் அதோகதிதான்'' என்று எண்ணிய செம்படை வீரன், திரும்பிப் பார்க்காமலேயே, ஒரு தீப்பெட்டியை எறிந்தான். போலிஷ் சிப்பாய் பறந்துவந்த பெட்டியைப் பிடித்துக்கொண்டான். பலதடவை குச்சி எரிந்து அணைந்த பிறகே, அவனால் சிகரெட்டைப் பற்றவைக்க முடிந்தது. பற்றவைத்தவுடன் அவன் அந்த நெருப்புப் பெட்டியை வந்த வழியே அனுப்பி விட்டான். அப்பொழுதுதான், விரும்பியோ விரும்பாமலோ, செம்படை வீரன் விதிகளை மீறிப் பேச்சுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

''தீப்பெட்டியை நீயே வைத்துக்கொள். என்னிடம் இன்னுமொரு பெட்டி இருக்கிறது.''

எல்லேக்கு அப்பாவிருந்து பதில் வந்தது.

''நன்றி, நான் அதை வைத்திருப்பது நல்லதல்ல. அந்தப் பெட்டி என்னிடம் இருப்பதை கண்டுபிடித்தார்களானல், இரண்டு வருஷ சிறைவாசம் கிடைக்கும்.''

செம்படை வீரன், அந்தத் தீப்பெட்டியைச் சோதித்தான். அதன் மீது விமானம் வரைந்திருந்தது; அதில் முன் தள்ளிக்குப் பதிலாக ஒரு புஷ்டியான மணிக்கட்டு வரைந்திருந்தது. அத்துடன் 'இறுதி எச்சரிக்கை' என்ற சொல்லும் அச்சடிக்கப்பட்டிருந்தது.

''சரி சரி. இது அவர்களுக்கு ஒத்துக்கொள்ளாது'' என்று செம்படை வீரன் தனக்குள் கூறிக்கொண்டான்.

போலிஷ் சிப்பாய், செஞ்சேனை வீரனுடன் தொடர்ந்து நடந்தான். வெறிச்சென்று கிடந்த இந்தச் சமவெளியில், தனியாக இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

•

குதிரைகள் ஒரு சீரான இனிய வேகத்தில் சென்றன; அவற்றின் சேணங்கள் தாள லயம் தவருமல் நாதம் செய்தன. கருங்குதிரையின் முகத்தில் நாசித் துவாரங்களைச் சுற்றி, மயிர்களின் இடையே உறைந்த பனிக்கட்டிகள். அதன் வெளி சுவாசம் வெண் புகையாக மாறி காற்றில் நொடிப் பொழுதில் மறைந்தது. நேர்த்தியான கழுத்தை

வளைத்துக் கொண்டு சொகுசாகச் சென்ற பட்டாலியன் தலைவனின் செம்பழுப்பு நிறப் பெண்குதிரை, தன் கடிவாளத்துடன் விளையாடிக் கொண்டிருந்தது. இரண்டு குதிரை வீரர்களும் பெரிய ராணுவக் கோட் அணிந்திருந்தார்கள். இடுப்பில் கோட் மீது பெல்ட் போட்டிருந்தனர். முன் கையில் மூன்று செஞ்சதுரங்கள் காட்சி அளித்தன. இருவரது உடுப்புகளுக்கிடையே ஒரே ஒரு வேற்றுமை: பட்டாலியன் தலைவனான கவ்ரீலோவின் காலர் பட்டைகள் பச்சையாக இருந்தன; அவனது தோழனின் பட்டைகள் சிவப்பாயிருந்தன. கவ்ரீலோவ் எல்லைக் காவலன். அவனது பட்டாளம்தான் இந்தப் பகுதியில் எழுபது கிலோமீட்டர் தூரத்தில் எல்லைக்காவல் பொறுப்பை நிர்வகித்தது. இந்தப் பகுதிக்கு அவன்தான் அதிகாரி. அவனுடைய தோழன், பெரிஸ்தோவிலிருந்து வந்திருந்தான். சர்வஜன ராணுவப் பயிற்சி பட்டாலியன் ஒன்றில் ராணுவக் கமிஸாராக இருந்த பாவெல் கர்ச்சாகினே அவன்.

இரவெல்லாம் வெண்பனி பெய்திருந்தது. நிலமெல்லாம் சால்வையால் போர்த்தியதைப் போல, மிருதுவான புதிய வெண்பனி படர்ந்திருந்தது. மனிதனோ மிருகமோ தொட்டுக்கெடுக்காத நிறைவுடன் அது துலங்கியது. இருவரும் காட்டைக் கடந்து வெட்ட வெளியில் பிரவேசித்தனர். எல்லைக்கோட்டைக் குறித்த ஜதைக் கம்பங்களிலிருந்து நூறு அடி தூரத்தில், அவர்கள் வெட்ட வெளியைக் கடக்கத் தொடங்கியபொழுது, கவ்ரீ

லோவ் திடீரென்று தன் குதிரையின் கடிவாளத்து வாரைப் பிடித்து இழுத்தான். பாவெல் சுழன்று திரும்பினான்; கவ்ரீலோவ் சேணத்திலிருந்தபடியே குனிந்து, பனியில் அமைந்திருந்த விநோதமான அடிச்சுவட்டுப் பாதையை ஆராய்ந்து கொண்டிருந்தான். ஒரு சிறிய பல் சக்கரத்தை ஓடவிட்டதால் ஏற்பட்ட பாதையாக அது தோன்றியது. ஏதோ ஒரு சாமர்த்தியமான சிறு மிருகம் இவ்வழியே சென்றிருக்கிறது; அது இத்தகைய சிக்கலான வடிவத்தைத் தன் அடிச்சுவடுகளால் வரைந்திருக்கிறது. அந்த ஜந்து எந்த வழியில் சென்றது என்பதைக் கண்டுபிடிப்பது கடினமாயிருந்தது. ஆனால் பட்டாலியன் தலைவனை நிறுத்தச் செய்தது இந்தச் சுவட்டுப் பாதையல்ல. நான்கு ஐந்து அடிக்கு அப்பால், பொடியாகி இறைந்து கிடந்த பனிக்குக்கீழ், மனிதனின் அடிச்சுவடுகளால் அமைந்த இன்னொரு பாதை புலப்பட்டது. இந்த அடிச் சுவடுகளைப் பற்றி உதாசீனமாயிருப்பதற்கு இடமில்லை; காட்டின் துவக்கம் வரை அவை காணப்பட்டன. போலிஷ் பகுதியிலிருந்துதான் யாரோ அத்துமீறி நுழைந்திருக்கிறான் என்பதில் கொஞ்சம்கூட ஐயம் இல்லை. பட்டாலியன் தலைவன் தனது குதிரையைத் தூண்டினான்; அந்த அடிச் சுவட்டுப் பாதையைப் பின்பற்றிக் காவலர் நடைபோட்ட பாதையை அடைந்தான். போலிஷ் பகுதியிலும் சுமார் முப்பது அடி தூரத்துக்கு அடிச்சுவடுகள் தெளிவாகப் புலப்பட்டன.

''நேற்று இரவு, யாரோ எல்லையைக் கடந்திருக்கிறார். மூன்றுவது பிளாட்டூன் மீண்டும் கடமையை மறந்து தூங்கிவிட்டது. காலையில் இதைப் பற்றித் தகவல் கொடுக்கவும் இல்லை. பாழாய்ப் போன பசங்கள்!'' என்று அவன் முணுமுணுத்தான். வெளிச் சுவாசம் உறைந்ததால் வெள்ளி போல் பிரகாசித்த அவனது நரை கலந்த மீசை துடித்தது.

தூரத்தில், இரண்டு உருவங்கள் இந்தக் குதிரை வீரர்களை நோக்கி வந்துகொண்டிருந்தன. ஒன்று கதிரொளியில் பளபளவென்று பிரகாசிக்கும் பிரெஞ்சுப் பாய்னெட் கத்தியுடன் கூடிய கரிய சிறு உருவம். இன்னொன்று மஞ்சள் நிறமான ஆட்டுத்தோல் கோட் அணிந்த ஆஜானுபாகுவின் உருவம். செம்பழுப்பு நிறக் குதிரையின் விலாவில் தலைவன் குத்தவே, அது விரைந்து ஓடியது. இரண்டு குதிரை வீரர்களும் தம்மை நோக்கி வந்த காவலரைச் சீக்கிரத்தில் நெருங்கினர்கள். அவர்களைக் கண்டவுடன், செம்படை வீரன் தோளில் தொங்கிய துப்பாக்கியைச் சுண்டித் தூக்கினன்; சிகரெட் துண்டைப் பனியில் எறிந்தான்.

''காலை வணக்கம், தோமா. உன் வட்டத்தில் நிலைமை எப்படியிருக்கிறது?'' என்று கேட்டுக்கொண்டே தலைவன் செம்படை வீரனிடம் கை நீட்டினன். காவலன் ஒரு கையிலிருந்து உறையை நீக்கிவிட்டு, அவனது கரத்தைக் குலுக்கினன். அந்த எல்லைக்காவலன் மிகவும் நெட்டை

யாக வளர்ந்திருந்ததால், சேணத்தின் மீதிருந்த தலைவன் குனியாமலேயே கைகுலுக்கினான்.

போலிஷ் சிப்பாய் தூரத்திலிருந்து நோக்கினான். இரண்டு செம்படை அதிகாரிகள், நெருங்கிய நண்பனுடன் பழகுவதைப் போல, ஒரு சாமான்யச் சிப்பாயிடம் பழகியதைப் பார்த்தான். தானும் தன் மேஜருடன் இம்மாதிரி கைகுலுக்குவதாகக் கற்பனை செய்து பார்த்தான். ஆனால் அவனுக்கு அந்த எண்ணமே பரிகசிக்கத் தக்கதாக இருந்தது; எனவே, அதிர்ச்சியடைந்தவனாகச் சுற்றுமுற்றும் நோக்கினான்.

''இப்பொழுதுதான் என் காவல் நேரம் தொடங்கியது'' என்று செம்படை வீரன் கூறினான்.

''அங்கே உள்ள அடிச்சுவட்டுப் பாதையைப் பார்த்தீர்களா?''

''இல்லை. இன்னும் பார்க்கவில்லை.''

''இரவில், இரண்டு மணிமுதல் ஆறு மணி வரை காவல் காத்தது யார்?''

''ஸுரோத்தேன்கோ, தோழர் தலைவரே.''

''சரி. விழிப்பாக இருங்கள்.''

தலைவன் தன் சவாரியைத் தொடங்கும் தருவாயில், ஒரு கடுமையான எச்சரிக்கையும் செய்தான்:

''அந்தப் பக்கத்து ஆட்களுடன் சேர்ந்து உலாவுவதைக் குறைத்துக்கொள்.''

இரண்டு குதிரைகளும் எல்லைக் கோட்டிலிருந்து விசாலமான சாலைவழியே பெரிஸ்தோவுக்

குப் பயணமாயின. அப்பொழுது, தலைவன் தன் தோழனிடம் கூறினான்:

''எல்லைப் பிரதேசத்தில் இமைகொட்டா விழிப்புடன் செயல்பட வேண்டும். மயிரிழை தவறினாலும், ஆபத்து உண்டாகலாம். பின்னால் மனம் வருந்தி வேதனைப்படுவோம். இந்த மாதிரி வேலை செய்யும்பொழுது, கண்ணை மூடமுடியாது. பகலில் எல்லையைக் கள்ளத்தனமாகக் கடப்பது எளிதல்ல. ஆனால் இரவில் உஷாராயிருக்க வேண்டும். தோழர் கர்ச்சாகின், நீங்களே யோசித்துப் பாருங்கள். என் பகுதியில் எல்லைக்கோடு நான்கு கிராமங்களை வெட்டிக்கொண்டு செல்கிறது. இதனால் நிலைமை சிக்கலாகிறது. எத்தனை காவலர்களை வைத்தாலும், கண்காணிப்பது கஷ்டமாகிறது. ஏனெனில், ஒருபக்கத்து உறவினர்கள் இன்னொரு பக்கத்தில் நடக்கும் விருந்து அல்லது திருமணத்துக்குப் போகாமல் இருப்பதில்லை. அதில் ஆச்சரியமில்லை. இந்தப்பக்கத்துக் குடிசைகளுக்கும் அந்தப் பக்கத்துக் குடிசைகளுக்கும் இடையே சுமார் இருபது காலடி தூரம்தான். நடுவிலுள்ள சிற்றுறிலோ தண்ணீர் கொஞ்சம்; கோழிக்குஞ்சு கூட அதைக் கடந்துவிடும். கொஞ்சம் கள்ளக் கடத்தலும் நடைபெறுகிறது. அதில் பெரும்பகுதி சிறு அளவில் நடைபெறுகிறதென்பது உண்மையே. ஒரு கிழவி ஓரிரண்டு பாட்டில் போலிஷ் சாராயத்தைக் கொண்டுவருவாள்; அம்மாதிரி சில்லரை வியாபாரம் நடக்கிறது. ஆனால் பெரிய கடத்தல் வியாபாரமும் ஓரளவுக்கு நடக்கிறது.

பெரும் பணக்காரர்கள் இதை நடத்துகின்றனர். போலிஷ் பகுதியிலுள்ள எல்லாேயாரக் கிராமங்களில் பல கடைகள் திறந்திருக்கிறார்கள். அவற்றில் கிடைக்காத சாமான் இல்லை. தரித்திரர்களான போலிஷ் விவசாயிகளுக்காகவா இந்தக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள்?''

பட்டாலியன் தலைவனின் பேச்சைக் கேட்டபொழுது, எல்லைக் காவற்பணி, இடைவிடாமல் வேவுபார்க்கும் வேலையை ஒத்திருக்குமென்று பாவெல் எண்ணினான்.

''கள்ளக்கடத்தலைவிட அபாயகரமான காரியங்களும் நடைபெறலாமல்லவா?''

''அதுதான் தொல்லையாக விருக்கிறது'' என்று கவ்ரீலோவ் பதில் கூறினான்.

பெரிஸ்தோவ், அத்துவானத்தில் இருந்த ஒரு சிறு ஊர். புரட்சிக்குமுன்பு யூதர்கள் வரைமுறையின்றி சுதந்திரமாக வாழ்ந்த பிரதேசத்தில் அது அமைந்திருந்தது. சுமார் இருநூறு, முந்நூறு வீடுகள் இங்கும் அங்குமாக அமைந்திருந்தன. இடையில் இருந்த விசாலமான சந்தைச் சதுக்கத்தில் சுமார் இரண்டு டஜன் கடைகள் இருந்தன. சதுக்கமெல்லாம் சாணம் சிதறிக் கசுமாலமாயிருந்தது. அந்த ஊரின் சுற்றுப்புறத்துக் குடிசைகளில் விவசாயிகள் வசித்தனர். யூதர்கள் வாழ்ந்த நகர் நடுப்பகுதியில், கசாப்புக் கிடங்குக்குச் செல்லும் சாலையில், ஒரு பழைய யூதர் கோயில் இருந்தது. அந்தக் கட்டிடத்தைக் கண்டாலேயே சோர்வு

தான் உண்டாயிற்று: அது இடிந்து விழுவதற்கு நாள் பார்த்துக்கொண்டிருந்தது. இப்பொழுதும் சனிவாரத்தில், யூதர் ஆலயத்தில் கூட்டம் கூடியது மெய்; ஆனால் அதன் பொற்காலம் சென்று ஒழிந்து விட்டது. யூத குருவுக்கு அவனது வாழ்வு கசந்தது. இந்த ஊர் பேர் தெரியாத மூலையில்கூட, இளைஞர்கள் அவனுக்கு உரித்தான கௌரவத்தையும் நன்மதிப்பையும் வழங்குவதில்லையென்றால், 1917ல் நிகழ்ந்த புரட்சியைச் சாபக்கேடாகத் தான் கருதவேண்டும்! இப்பொழுதும் கிழவர்கள் யூத சமயச் சாத்திரம் அனுமதித்த உணவு வகைகளையே புசித்தனர் என்பது உண்மை. ஆனால் பல இளைஞர்கள் ஆண்டவனால் சபிக்கப்பெற்ற பன்றி இறைச்சியை மசாலையிட்டுச் சமைத்துப் புசித்தனர். அதை நினைத்தாலேயே, அவனுக்குக் குமட்டியது! யூத குரு போருஹ் ஆத்திரமடைந்தான்; உணவைத் தேடி, எருச்சேமிப்பை விடா முயற்சியுடன் கிண்டிக்கொண்டிருந்த பன்றியை அவன் வெறுப்புடன் உதைத்தான். பெரிஸ்தோவ், ஒரு வட்டாரத்துக்குத் தலைநகராயிருந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. கம்யூனிஸ்டுகள் எங்கிருந்தோ வந்து, இந்த ஊரில் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிக் கொண்டிருந்ததையும் அவன் விரும்பவில்லை. ஒவ்வொரு நாளும் அவனுக்குப் பிடிக்காத புதிய காரியம், ஏதாவது ஒன்று, நடந்து கொண்டிருந்தது. உதாரணமாக, நேற்று, அவன் பாதிரி வீட்டுக் கேட்டில் ஒரு புதிய அறிவிப்பைப் பார்த்தான். ''உக்ரேனிய இளங் கம்யூனிஸ்ட்

சங்கம், பெரிஸ்தோவ் வட்டாரக் கமிட்டி'' என்று அதில் எழுதியிருந்தது.

இது வரவிருக்கும் கேட்டின் முன்னறிவிப்பே என்று யூதகுரு எண்ணினான். இந்த அறிவிப்பைப் பற்றிய சிந்தனையிலேயே அவன் லயித்திருந்ததால், யூதக் கோயில் முன் கதவில் ஒட்டியிருந்த அறிக்கையைக் கிட்ட நெருங்கும் வரை அவன் கவனிக்கவில்லை. அந்த அறிக்கை கூறியதாவது:

''இன்று கிளப்பில், உழைக்கும் இளைஞரின் பொதுக்கூட்டம் நடைபெறும். நிர்வாகக் கமிட்டித் தலைவர் விஸீத்ஸின், கம்ஸமோல் வட்டாரக் கமிட்டியின் இடைக்காலக் காரியதரிசி கர்ச்சாகின் ஆகியோர் பேசுவார்கள். கூட்டத்துக்குப்பின், பள்ளி மாணவர்களின் இசைக் கச்சேரியும் உண்டு.''

அதைப் படித்துக் கோபம் கொண்ட யூதகுரு அந்தக் காகிதத்தைக் கிழித்தெறிந்தான்.

''இதற்குள் ஆரம்பித்து விட்டார்களா?'' என்று முணுமுணுத்தான்.

ஒரு பெரிய தோட்டம். அதன் நடுவில், மாதாகோவிலுக்குப் பக்கத்தில், ஒரு பழைய பெரிய வீடு. புரட்சிக்குமுன் இவ்வீடு பாதிரிக்குச் சொந்தமாயிருந்தது. தற்பொழுது பாதிரியும் அவனது மனைவியும் வசித்த பல அறைகள் காலியாகக் கிடந்தன. பூசனம் பிடித்திருந்த வீட்டின் வெறுமை, சலிப்பையே உண்டாகியது. பாதிரியும் அவனது மனைவியும், அந்த வீட்டைப்போலவே

வயதான கிழவர்கள்; மந்தமானவர்கள்; ஒருவருக்கொருவர் பிடிக்காத அளவுக்குச் சலிப்பு அடைந்தவர்கள். களையோ ஒளியோ இல்லாதிருந்த இந்த வீட்டில் புதிய எஜமானர்கள் வந்தபின், நிலைமை மாறியது. முன்னால், மாதாகோயில் தொழுகை நாட்களில் மட்டும் விருந்தாளிகளுக்கு இடம் அளித்த பெரிய ஹாலில், இப்பொழுது எந்த நாளிலும் திரள்திரளாக ஜனங்கள் நடமாடினர். வீடே கலகலவென்று இருந்தது. காரணம் என்னவென்றால், இந்த வீடு இப்பொழுது பெரிஸ்தோவ் கம்யூனிஸ்ட் கட்சிக் கமிட்டியின் காரியாலயமாக இருந்தது. முன் ஹாலைத் தாண்டியவுடன், வலது புறத்தில் இருந்த சிறிய அறையின் கதவில் ''கம்ஸமோல் வட்டாரக் கமிட்டி'' என்று சாக்கட்டியால் எழுதியிருந்தது. இரண்டாவது சர்வஜன ராணுவப் பயிற்சி பட்டாலியனின் ராணுவக் கமிஸாராக இருந்ததுடன், புதிதாக அமைந்த கம்ஸமோல் வட்டாரக் கமிட்டியின் இடைக்காலக் காரியதரிசியாகவும் வேலை பார்த்த பாவெல், இந்த அறையில் தன் வேலை நேரத்தின் ஒரு பகுதியைக் கழித்தான்.

ஆன்னாவின் வீட்டில் கூடிய அந்தக் கூட்டத்தில் அவன் கலந்துகொண்டபின், எட்டு மாதங்கள் உருண்டோடிவிட்டன. எனினும் அந்தக் கொண்டாட்டம் நேற்று நடந்தது போலப் பாவெலுக்குத் தோன்றியது. பாவெல் காகிதக் கட்டைத் தள்ளி வைத்து விட்டுத் தன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு, சிந்தனையில் மெய்மறந்தான்....

வீட்டில் அமைதி நிலவியது. இரவு நெடுநேர மாகிவிட்டது. கட்சிக் கமிட்டிக் காரியாலயத்தில் ஒருவரும் இல்லை. அந்தக் கமிட்டியின் காரியதரி சியான திராபீமொவ் கொஞ்ச நேரத்துக்கு முன் தான் தன் வீட்டுக்குப் போனுன். இப்பொழுது, இந்தக் கட்டிடத்தில் பாவெல் மட்டும் இருந்தான். ஜன்னலில் விந்தையான வடிவத்தில் பனி உறைந் திருந்தது. ஆனுல் அறையில் கதகதப்பாயிருந்தது. மேஜைமீது ஒரு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பாவெல், சமீபகாலத்தில் நடை பெற்ற நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக்கொண்டிருந் தான். ஆகஸ்ட் மாதத்தில், ரயில்வே கம்ஸமோல் ஸ்தாபனம் அவனை ஒரு ரிப்பேர் டிரெயினுடன் எக்கத்தெரீனஸ்லாவுக்கு அனுப்பியது. இலையுதிர் காலத்தின் பிற்பகுதி வரை, அவன் நூற்றைம்பது ரிப்பேர் ரயில் சிப்பந்திகளுடன் ஸ்டேஷன் ஸ்டே ஷனுகச் சென்று கொண்டிருந்தான். போரின் விளை வாக நிலைகுலைந்துபோயிருந்த அந்த புகைவண்டி நிலையங்களை அவர்கள் ஒழுங்குபடுத்தினர்; சேத மானவற்றைப் பழுதுபார்த்துச் சீரமைத்தார்கள்; உடைந்த வண்டிகள், எரிந்த வண்டிகள் ஆகிய வற்றின் மீதமிச்சங்களை அகற்றினுர்கள். அவர் களது பயணப் பாதை அவர்களை ஸினேல்னிக்க வோவிலிருந்து போலோக் வரை இட்டுச்சென்றது. இங்கே—மாஹ்னேவின் கொள்ளைக் கும்பலின் முன்னுள் இராச்சியத்தில்—காலெடுத்துவைத்த இடமெங்கும் நாச வேலைகளும் சீர்குலைந்த நிலை மையும் மிகுந்து காணப்பட்டது. குலியாய்-போல்

யே என்ற ஸ்டேஷனில் கற்களாலான நீர் பம்பு நிலையம் இருந்தது, பாவெலும் அவனுடன் சென்ற வர்களும், ஒரு வாரம் வேலை செய்து அந்த நிலை யத்தைச் சீரமைத்தார்கள்; வெடி வைத்து இடிக் கப்பட்டிருந்த நீர்த் தேக்கத்தின் பக்கங்களில் இரும்புத் தகடுகளைக் கொடுத்து உடைப்புகளை அடைத்தார்கள். பாவெல் ஒரு எலெக்டிரிஷியன், பிட்டர் வேலையில் அவன் திறமைசாலியல்ல; அம் மாதிரி சிரமமான வேலையைத் தொடர்ந்து செய் யும் பழக்கமும் அவனுக்கு இல்லை. எனினும் அவன் மற்றவரைப் போலவே குறடைப் பிடித்து வேலை செய்தான்; பல்லாயிரக்கணக்கான துருப்பிடித்த சுரைகளைத் திருகிவிட்டான்.

இலையுதிர் காலத்தின் பிற்பகுதியில், அவர் கள் கீவுக்குத் திரும்பினுர்கள். ரயில்வே வார்க் ஷாப்புகளுக்கு நூற்றைம்பது ஜோடிக் கைகள் கூடுதலாகக் கிடைத்தன....

இப்பொழுதெல்லாம், பாவெல் ஆன்னுவின் வீட்டுக்கு அடிக்கடி சென்ருன். அவனது நெற்றி யில் இருந்த சுருக்கம் மறைந்தது. அவனது வசீகர மான சிரிப்பின் ஒலியை மீண்டும் கேட்க முடிந் தது.

முன்போல, எண்ணெய்க் கறை பிடித்த, இளம் ரயில்வே தொழிலாளர்கள் ஒன்று கூடி, அவனிடம் கதை கேட்டனர். அவன் கடந்தகாலப் போராட்டங்களைப்பற்றி எடுத்துரைப்பான்; அடி மைப்பட்டிருந்த ருஷ்ய விவசாயி, புரட்சிகரமான

உணர்ச்சியைப் பெற்றுத் தன் முதுகின்மீது குந்தியிருந்த முடிதரித்த அரக்கனை ஒழிப்பதற்காக எடுத்த முயற்சிகளைப்பற்றி அவன் கூறுவான். ராஸின், பூகாச்சோவ்* ஆகியோர் தலைமையில் நடந்த ஆயுதமேந்திய எழுச்சிகளை அவன் சித்தரிப்பான்.

ஒரு நாள் மாலை, ஆன்ருவின் இல்லத்தில் நிறைய இளைஞர்கள் கூடியிருந்தனர். அப்பொழுது, பாவெல் புகை பிடிக்கும் வழக்கத்தை நிறுத்தப் போவதாக அறிவித்தான். அந்தத் தீயவழக்கத்தை அவன் சிறுவனாயிருக்கும் பொழுதே கைக்கொண்டுவிட்டான்.

''இனிமேல், நான் புகைபிடிக்க மாட்டேன்'' என்று அவன் வளைந்து கொடுக்காத உறுதியுடன் கூறினான்.

இந்த அறிவிப்பு அவன் எதிர்பாராத வகையில் நிகழ்ந்தது. கூடியிருந்த இளைஞர்களில் ஒருவன், மனோசக்தியைவிடப் பழக்கம் வலுவானது என்று கூறிப் புகை பிடித்தலை ஒரு உதாரண

---

* ராஸினும் பூகாச்சோவும்—ராஸின், ஸ்தேபான் டிமபேயேவிச் (மரணம் 1671) — 1670-71ம் ஆண்டுகளில் நடந்த விவசாயப் போரில் தலைமை தாங்கியவர்; பூகாச்சோவ், யெமெல்யான் இவானவிச் (சுமார் 1742-75)—1773-75ம் ஆண்டுகளில் நடந்த விவசாயப் போரில் தலைமை தாங்கியவர். பிரபுக்கு எதிராக நடந்த அப்போர்கள் தோல்வி அடைந்தன; இவற்றின் தலைவர்களுக்கு மரணத் தண்டனை விதிக்கப்பட்டது.

மாகக் காட்டினன். அதைப்பற்றிய வாதத்தில் இருவித அபிப்பிராயங்களும் வற்புறுத்தப்பட்டன. முதலில் பாவெல் மௌனமாயிருந்தான். ஆனால் தால்யா அவனை வாதத்துக்கு இழுத்துவிட்டாள். எனவே, இறுதியாக அவனும் அந்த விவாதத்தில் பங்குகொண்டான்.

''மனிதன் தன் பழக்கங்கள் மீது ஆட்சி செலுத்துகிறானே அல்லாது, பழக்கங்கள் மனிதனை ஆட்டிப் படைப்பதில்லை. அப்படி இல்லையானால், நிலைமை விபரீதமாக இருக்கும்'' என்றான் பாவெல்.

''நல்ல பேச்சுத்தான்! இல்லையா?'' என்று ஒரு மூலையிலிருந்த த்ஸெவெத்தாயெவ் பேச்சின் இடையே கூறினான். ''ஆடம்பரப் பேச்சு என்றால் பாவெலுக்குப் பிரீதி. ஆனால் அவன் தன் ஞானத்தைத் தானே கடைப்பிடிப்பதில்லை; காரணம் என்ன? அவன் புகைப் பிடிக்கிறான்; இல்லையா? அது ஒரு மோசமான பழக்கமென்பதும் அவனுக்குத் தெரியும். ஆம், நிச்சயமாகத் தெரியும். எனினும் அதைக் கைவிடும் ஆண்மை அவனிடம் இல்லை'' என்று கூறிவிட்டு, அவன் தன் தொனியை மாற்றிக்கொண்டு, உதாசீனமான இகழ்ச்சியுடன் தொடர்ந்து பேசினான்: ''அவன் சமீபத்தில்கூட வகுப்புகளில் 'பண்பாட்டைப் பரப்புவதில்' தீவிரமாக ஈடுபட்டிருந்தான். சரி, அவனே சொல்லட்டும். அவன் கெட்ட சொற்களை உபயோகிப்பது இல்லையா? பாவெலை தெரிந்தவர்கள் அனைவரும் ஒரு உண்மையை ஒத்துக்கொள்

வார்கள்: அவன் அடிக்கடி சபிப்பதில்லையென்றுலும், சபிக்கத் தொடங்கிவிட்டால், நாவில் நரம்பில்லாமல் பேசுகிருன் என்பதை ஒப்புக்கொள்வார்கள். தானே ஒழுக்கமாக இருப்பதைவிடப் பிறருக்குப் புத்தி சொல்வது எளிதான காரியம்.''

ஒரு கெடுபிடியான அமைதி நிலவியது. த்ஸெவெத்தாயெவ் தொனியின் கூர்மை கூட்டத்தினரது உற்சாகத்தைக் கபளீகரித்துவிட்டது. பாவெல் உடனடியாகப் பதில் கூறவில்லை. அவன் தன் உதடுகளுக்கு இடையே இருந்த சிகரெட்டை மெதுவாக நீக்கினுன்; அதன் பின் சாந்தமாகக் கூறினுன்:

''நான் இனிமேல் புகைபிடிக்க மாட்டேன்.''

பிறகு சிறிது நேரம் கழித்து, அவன் மேலும் கூறினுன்:

''நான் புகை பிடிப்பதை நிறுத்துவது, முக்கியமாக எனக்காக; சிறிதளவு த்ஸெவெத்தாயெவுக்காக. ஒரு தீய பழக்கத்திலிருந்து தன்னைக் கத்தரித்துக் கொள்ள முடியாத மனிதன் ஒன்றுக்கும் உதவு மாட்டான். கண்டபடி பேசிச் சபிப்பதைப் பற்றி நான் சொல்ல வேண்டியது இது தான்: இந்த அவமானம் தரும் பழக்கத்தை நான் இன்னும் பூர்த்தியாக விட்டொழிக்கவில்லை என்பது உண்மை. ஆனுல் நான் இப்பொழுதெல்லாம் அடிக்கடி கெட்ட வார்த்தை பேசுவதில்லை என்பதை திம்காவே ஒப்புக்கொள்கிருன். புகை பிடிப்பதை நிறுத்துவதைக் காட்டிலும், கெட்ட வார்த்தை வாய் தவறி வருவதை நிறுத்துவது கடினம். எனவே, இனிக் கெட்ட வார்த்தையே

வராது என்று நான் இந்தப் பொழுதில் வாக் குறுதி தர மாட்டேன். ஆனால் அந்த நிலையைச் சீக்கிரம் அடைவேன்.''

குளிர்காலம் ஆரம்பிப்பதற்குச் சற்று முன் னால், விறகுக் கட்டுகள் ஆற்றை அடைத்துக் கொண்டு வந்தன. இலையுதிர்கால வெள்ளம் வந் தது; விறகுக் கட்டுகள் அவிழ்ந்தன; கட்டைகள் சிதறியோடத் தொடங்கின. அவசர அவசியமா கத் தேவைப்பட்ட விறகை இழந்துவிடும் நிலைமை ஏற்பட்டது. மீண்டும், ஸாலோமென்கா தன் புத் திரர்களை மீட்சி வேலைக்கு அனுப்பியது. இந்தத் தடவை, மதிப்பிடற் கரிய விறகைப் பாதுகாப் பதற்காக அனுப்பியது.

பாவெல் தனது தோழர்களை விட்டு, வேலை நேரத்தில் பிரிய விரும்ப வில்லை. எனவே தனக்கு வெகுவாகப் பிடித்திருந்த தடிமலை அவர் களிடமிருந்து மறைத்தான். ஒரு வாரம் சென்ற பிறகே, விறகெல்லாம் மீட்டுக் கரையில் அடுக்கிய பின்பே, குளிர் நீரும் இலையுதிர் காலத்தின் ஈரக் காற்றும் அவனது இரத்தத்தில் அடங்கிக் கிடந்த பகைவனைத் தட்டி எழுப்பி விட்டன. அந்த விரோதி கடுமையான ஜுரத்துடன் பாவெலைத் தாக்கினான். இரண்டு வாரத்துக்குத் தீவிரமான கீல்வாதம் அவனைச் சித்திரவதை செய்தது. ஆஸ்பத்திரி யிலிருந்து திரும்பிவந்தபொழுது, விசிப்பலகை யின் இருபுறங்களிலும் கால்களைத் தொங்கவிட் டுக்கொண்டு உட்கார்ந்தே அவனால் வேலை செய்ய முடிந்தது. போர்மென் அவனைப் பார்த்துத்

துயரத்துடன் தலையை அசைத்தான். சில நாட்களுக்குப் பின், அவன் வேலை செய்வதற்குத் தகுதியற்றவன் என்று டாக்டர் குழு தீர்ப்புக் கூறியது. வேலை நீக்கச் சம்பளமும், பென்ஷன் பெறுவதற்கான அத்தாட்சிப் பத்திரங்களும் அவனுக்கு அளிக்கப்பட்டன. ஆனால் அவன் அவற்றை ஆத்திரத்துடன் நிராகரித்தான்.

அவன் நெஞ்சை அழுத்திய பாரத்துடன், வார்க்ஷாப்பிலிருந்து வெளியேறினான். கம்பை ஊன்றிக் கொண்டு மெள்ளமெள்ள நடந்தான். ஆனால் அடி எடுத்து வைத்தபொழுதெல்லாம் அவனுக்கு மிகுந்த வேதனை உண்டாயிற்று. வீட்டுக்கு வந்து போகும்படி கேட்டுக்கொண்டு, அவனது தாயார் பல கடிதங்களை எழுதியிருந்தாள். அவளைப் பற்றி எண்ணியபொழுதெல்லாம், ''நீயும் உனது அண்ணனும் உடம்பு ஊனமடைந்தால்தான் இங்கு வருகிறீர்கள்'' என்று அவள் கூறிய கடைசி வார்த்தைகள் அவனது நினைவுக்கு வந்தன.

மாகாணக் கமிட்டியில், அவனுடைய கம்ஸமோல், கட்சிப் பத்திரங்களைக் குழாய் போன்று சுருட்டி அவனிடம் கொடுத்தினர். பிரிவாற்றுமையின் துன்பத்தைத் தவிர்ப்பதற்காக, அவன் மிகச் சிலரிடமே விடை பெற்றுக்கொண்டு, தாய்வீடு சென்றான். இரண்டு வார காலம், அந்தக் கிழவி அவனது வீங்கிய கால்களை சுடு நீரால் குளிப்பாட்டினாள்; அவற்றைத் தடவிக் கொடுத்தாள். ஒரு மாதம் கழிந்தது; அவனால் கோல் இல்லாமல் நடக்க முடிந்தது. சந்திக்கால இருள் மறைந்து,

புதிய கதிரொளி தோன்றியமாதிரி இருந்தது; அவன் ஆனந்தம் அடைந்தான். மீண்டும், ரயில் வண்டி அவனை மாகாணத் தலைநகரில் கொண்டு சேர்த்தது. அங்கு மூன்று நாட்கள் தங்கினான். சர்வஜன ராணுவப் பயிற்சி அமைப்பில் அரசியல் ஊழியனாகப் பயன்படுத்திக்கொள்ளும்படி, கட்சியின் மாகாணக் கமிட்டி ராணுவத் தலைமைக்குக் கடிதம் கொடுத்தது.

இன்னொரு வாரம் கழிந்தது. பாவெல் பணி மூடிய ஊர் ஒன்றை அடைந்தான். இரண்டாவது பாட்டாலியனின் ராணுவக் கமிஸாராக அவன் நியமிக்கப்பட்டிருந்தான். கம்ஸமோலின் பிரதேசக் கமிட்டியும் அவனுக்கு ஒரு வேலை கொடுத்தது; அந்தப் பகுதியில் சிதறிக்கிடந்த இளங் கம்யூனிஸ்டுகளை ஒன்றுதிரட்டி, வட்டார ஸ்தாபனத்தை அமைக்கும் வேலையே அது. இவ்வாறாக, வாழ்வு புதியநடை பயின்றது.

வெளியே, வெப்பமும் புழுக்கமும் அதிகம். நிர்வாகக் கமிட்டித் தலைவனது ஆபீஸின் திறந்த ஜன்னல் வழியாக, ஒரு 'செர்ரி' மரத்தின் கிளை உள்ளே நீட்டி இருந்தது. கொஞ்சதூரத்தில், போலிஷ் மாதாகோவிலில், 'கோதிக்' சிற்பமுறையில் கட்டப்பட்டிருந்த மணிக்கோபுரத்தின் உச்சியில் பொன்முலாம் பூசிய சிலுவை சூரிய வெளிச்சத்தில் தகதகவென்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஜன்னலுக்கு முன்னாலிருந்த முற்றத்தில், மிருதுவான வாத்துக் குஞ்சுகள் — சுற்றிலு

முள்ள புல்லைப்போலவே பச்சையாக இருந்த குஞ்சுகள்—இரை தேடிக்கொண்டிருந்தன. அந்தக் குஞ்சுகள், அந்தக் கட்டிடத்தின் காவல்காரிக்குச் சொந்தமானவை.

நிர்வாகக் கமிட்டித் தலைவன் அப்பொழுதே கிடைத்த கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தான். அவனது முகத்தில் ஒரு நிழல் தோன்றி மறைந்தது. அவன் தனது பெரிய நெருடான கரத்தால் தன் அடர்த்தியான கேசத்தைக் கோதிவிட்டுக்கொண்டான். அந்தக் கை கேசத்திலேயே தங்கிவிட்டது.

பெரிஸ்தோவ் நிர்வாகக் கமிட்டியின் தலைவனை விஸீத்ஸினுக்கு இருபத்துநான்கு வயதுதான் ஆகியிருந்தது. ஆனால் அதைச் சொன்னால், அவனது சிப்பந்திகளோ உள்ளூர்க் கட்சித் தோழர்களோ நம்ப மாட்டார்கள். வாட்டசாட்டமாக வளர்ந்தவன்; பலசாலி; கண்டிப்பான தோற்றத்தை உடையவன்; பல சமயங்களில் அவனைப் பார்த்தாலேயே அச்சம் உண்டாயிற்று; குறைந்த பட்சம் முப்பத்தைந்து வயது ஆகி இருந்ததாகவே எவரும் மதிப்பிட்டிருப்பார். திறமான உடற்கட்டு; கனமான கழுத்தில் உறுதியாகப் பதிந்த பெரிய தலை; வலுவும் செய்திறனும் மிகுதியாகப் பெற்ற தாடை; கூர்மையான கண்கள். அந்தப் பழுப்பு நிறக் கண்களில் எஃகுக்கு உரிய ஒளி தவழ்ந்தது. அவன் நீலக் கால்சட்டையும் ஓரளவுக்குப் பழசாகிவிட்ட சாம்பல்நிற ராணுவச் சட்டையும் அணிந்திருந்தான். அவனது மார்பின்

இடது புறத்துச் சட்டைப்பைமீது ஒரு செங்கொடி விருது குத்தப்பட்டிருந்தது.

எங்கு அவனது தாத்தாவும், தந்தையும், அவனும் பால்யப்பருவத்திலிருந்து உலோகத் தொழிலாளர்களாக வேலை பார்த்தனரோ—அதே தூலா துப்பாக்கி உற்பத்திச் சாலையில்—அவன் அக்டோபர் புரட்சிக்கு முன்னால் ஒரு கடைசல் யந்திரத்தையே ஆண்டு வந்தான்.

அந்த இளையுதிர் காலத்தில் ஒருநாள் இரவில், விஸீத்ஸின் துப்பாக்கியை ஏந்தித் தொழிலாளர் ஆட்சிக்காகப் போராடக் கிளம்பினான். அன்று முதல், அவன் நிகழ்ச்சிகளின் சூறுவளியில் சிக்கினான். புரட்சிக்குத் தலைமைதாங்கிய கட்சி அவனை நன்கு பயன்படுத்தியது. எக்கச்சக்கமான நிலைமை ஏற்பட்ட இடங்களுக்கு அவனை அனுப்பிக் கொண்டே இருந்தது. அவனது சீரிய சேவை, அவனை உயர்த்திக்கொண்டே வந்தது. சாமானியச் செஞ்சேனை வீரனாகச் சேர்ந்தவன்; ரெஜிமென்டுத் தலைவனாகவும் கமிஸாராகவும் உயர்ந்தான்.

போராட்டத்தீயும் துப்பாக்கிகளின் இடியோசையும் கடந்தகால நிகழ்ச்சிகளாகிவிட்டன. இப்பொழுது அவன் ஒரு எல்லைப்புற வட்டத்தில் வேலை செய்தான். வாழ்வு ஒரு சீராகவும் அமைதியாகவும் இயங்கிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு இரவிலும், நிர்வாகக் கமிட்டித் தலைவன் நீண்ட நேரம் உட்கார்ந்து அறுவடைச் செய்திகளை ஆராய்ந்தான். எனினும், இப்பொழுது அவன் கையிலிருந்த கடிதம், கடந்துவிட்ட போராட்ட

காலத்தைத் தற்காலிகமாக நினைவூட்டுவதாக இருந்தது. அது சுருக்கமான தந்தி பாஷையில் வந்த எச்சரிக்கைச் செய்தி:

''பரம ரகசியம். பெரிஸ்தோவ் நிர்வாகக் கமிட்டித் தலைவர், விஸீத்ஸினுக்கு:

''சமீபகாலத்தில், எல்லையோரத்தில் குறிப்பிடத்தக்க காரியங்கள் நடைபெற்று வருகின்றன. நமது எல்லையோர வட்டங்களைப் பயமுறுத்துவதற்கு ஒரு பெரிய கோஷ்டியை அனுப்பப் போலிஷ்காரர்கள் முயற்சித்து வருகிறார்கள். முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்கவும். வசூலான வரித்தொகை உட்பட, நிதி இலாகாவிடம் உள்ள சகல மதிப்பான பொருட்களையும் பிரதேசத் தலைமைக்கு அனுப்பும்படி யோசனை கூறுகிறோம்.''

தனது அறையின் ஜன்னல் வழியாக நோக்கினால் கட்டிடத்துக்குள் வருபவர் அனைவரையும் விஸீத்ஸினால் காணமுடியும். இப்பொழுது, வாசற்படியில் கர்ச்சாகின். ஒரு வினாடியில் கதவைத் தட்டும் சப்தம். பாவெல் நீட்டிய கரத்தைக் குலுக்கிக் கொண்டு, ''உட்கார். உன்னிடம் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும்'' என்று விஸீத்ஸின் கூறினான்.

ஒரு மணி நேரம் அவர்கள் அந்த அறையில் மந்திராலோசனை நடத்தினார்கள்.

பாவெல் அந்த அறையிலிருந்து வெளியேறிய பொழுது, சூரியன் தலைக்கு நேராக வந்துவிட்

டான். அந்தச் சமயம், லிஸீத்ஸினின் இளந் தங்கை அன்யூத்கா தோட்டத்திலிருந்து ஓடி வந்தாள். கூச்சமும் வயதுக்குப் பொருத்தமில்லாத பொறுப்புணர்ச்சியும் உடைய அந்தச் சிறுமிக்குப் பாவெலேக் கண்டால் ஒரு அலாதி ஆனந்தம். இப்பொழுதும், அன்யூத்கா அவனை நாணத்துடன் வணங்கினாள். கத்தரித்துவிடப்பட்ட கேசத்தின் ஒரு சுருள் நெற்றிமீது கிடந்ததைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டே, அந்தச் சிறுமி கூறினாள்:

''அண்ணா இருக்கிறாரா? மரீயா மிகாய்லவ்னா சமையல் வேலையை முடித்து ரொம்ப நேரமாகி விட்டது; காத்திருக்கிறாள்.''

''அன்யூத்கா, அறைக்குள் போ. அவன் தனியாகத்தான் இருக்கிறான்.''

மறுநாள் அதிகாலையிலேயே, நிர்வாகக் கமிட்டியின் கட்டிடத்திற்கு முன்னால் மூன்று வண்டிகள் நின்றன. வயிறார உண்டு வளமாகவிருந்த குதிரைகளைக் கட்டிய அந்த வண்டிகளுடன் வந்தவர்கள், ஏதோ 'குசுமுசு' வென்று பேசிக்கொண்டனர். கஜானாவிலிருந்து முத்திரையிடப்பட்ட பல மூட்டைகளை அகற்றி வண்டியில் ஏற்றினார்கள். சில நிமிஷங்களில், வண்டிச் சக்கரங்கள் சாலையில் உருண்டோடிக் கொண்டிருந்தன. கர்ச்சாகின் தலைமையில் ஒரு கோஷ்டி வண்டிகளுக்குக் காவலாகச் சென்றது. நாற்பது கிலோமீட்டர் காட்டு வழியும் கடந்து, வண்டிகள் பிரதேசத் தலைமை நிலையத்தை அடைந்தன. அந்த மதிப்புள்ள பொருட்களின் மூட்டைகள், பிரதேசத்

தலைமைக் கஜானாவில் பத்திரமாக ஒப்படைக்கப் பட்டன.

சில நாட்கள் கழிந்தபின், எல்லைக் கோட்டி விருந்து ஒரு வீரன் நுரை கக்கும் குதிரை மீது பெரிஸ்தோவுக்கு விரைந்து வந்தான். அவன் தெருக்கள் வழியே சென்ற பொழுது, வியப்புற்ற உள்ளூர்ச் சோம்பேறிகள் அவனை வெறித்துப் பார்த்தார்கள்.

நிர்வாகக் கமிட்டி ஆபீஸின் கேட் டில், அவன் குதிரையிலிருந்து கீழே குதித்தான். தன் வாளை ஒரு கரத்தால் பிடித்துக்கொண்டே, அந்தச் சிப்பாய் தனது கனமான பூட்ஸுகளால் படிகளை மிதித்து ஒலி எழுப்பிக்கொண்டு உள்ளே சென்றான். அவன் கொடுத்த கடிதத்தை விஸீத் ஸின் கவலையுடன் பெற்றுக் கொண்டான்; பெற் றுக்கொண்டதற்கு அத்தாட்சியாகக் கவரில் கை யெழுத்திட்டுக் கொடுத்தான். எல்லைக் காவல னும் தன் குதிரைக்கு ஓய்வு கொடுக்காமலேயே, அதன்மீது ஏறி, வந்த வழியே விரைந்து சென் றான்.

கடிதத்திலிருந்த விஷயம், விஸீத்ஸினைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. அவனே அதை அப்பொழுதுதான் படித்திருந்தான். ஆனால் முக்கியமான நிகழ்ச்சிகளைப் பற்றி மோப்பம் பிடித்து அறிவதில், உள்ளூர் ஜனங்கள் சாமர்த் தியசாலிகள். சில்லரை வியாபாரிகளில் மூன்றில் இருவர், அடக்கமான அளவில் கள்ள வாணிபம் செய்து வந்தனர். இதை நடத்திப் பெற்ற அனுப

வத்தினுல், வரவிருக்கும் ஆபத்தை ஊகித்தறியும் உள்ளுணர்வை அவர்கள் பெற்றிருந்தனர்.

ராணுவப் பயிற்சி பட்டாலியன் தலைமை அலுவலகத்தை நோக்கிச் செல்லும் சாலையோர நடைபாதையில் இருவர் நடந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் கர்ச்சாகின். அவன் ஆயுதம் தரித்திருந்தான். ஆனுல் அதைக் கண்டு எவரும் ஆச்சரியப்படவில்லை. ஆயுத பாணியாக இருப்பது பாவெலின் வழக்கம். ஆனுல் பாவெலுடன் சென்ற கட்சிக் கமிட்டிக் காரியதரிசி திராபீமொவும் ஒரு கைத்துப்பாக்கியை வாரில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு சென்றதுதான், துர்க்குறியாகத் தோன்றியது.

சில நிமிஷங்கள் கழிந்தன. அப்பொழுது, ஒரு டஜன் ஆட்கள், பாய்னெட்டுப் பொருந்திய துப்பாக்கிகளுடன் தலைமை அலுவலகத்திலிருந்து கிளம்பி, நாற்சந்தியிலிருந்த மில்லுக்கு விரைந்து சென்றனர். கம்யூனிஸ்ட் கட்சியிலும் கம்ஸமோலிலும் அங்கம் வகித்த இதர தோழர்களுக்குக் கட்சிக் கமிட்டி அலுவலகத்தில் ஆயுதங்கள் வழங்கப்பட்டன. வாடிக்கையாக பெல்ட்டில் தொங்கிய ''மௌஸர்'' கைத்துப்பாக்கியுடன், கஸாக்கியக் குல்லாய் அணிந்த லிஸீத்ஸின், குதிரைமீது வேகமாகச் சென்ருன். ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் நிகழவிருந்ததென்பது வெளிப்படையாகப் புலப்பட்டது. பிரதான சதுக்கத்திலும் கிளைத் தெருக்களிலும் ஜனநடமாட்டம் ஓய்ந்தது. ஒருவரைக்கூடக் காணவில்லை. சிறு கடைகளில்

திடீரென்று ஜன்னல்கள் மூடின; கதவுகள் மூடப்பட்டுப் பெரிய பத்தாம்பசலி ஆமைப்பூட்டுகளால் பூட்டப்பட்டன. நிர்ப்பயமான கோழிகளும் பன்றிகளும்தான், வெப்பம் தாங்காமல், குப்பை மேட்டைக் கிண்டிக் கொண்டிருந்தன.

ஆயுதபாணிகளான வீரர்கள் நகர விளிம்பில் இருந்த தோட்டங்களில் பதுங்கிக் கொண்டார்கள். அவர்கள் வயல் வெளிகளையும் நேராகச் சென்ற சாலையையும் உன்னிப்பாகக் கவனிப்பதற்கு அந்த மறைவிடம் வசதியாக இருந்தது.

லிஸ்ட்னிட்ஸ்கிக்குக் கிடைத்த கடிதம் சுருக்கமானது:

''நேற்று இரவு, பொதுாபித்ஸி என்ற இடத்தில் நடந்துகொண்டிருந்த சண்டையின் பொழுது நூறு குதிரைப் படையினர்கள், இரண்டு இலேசான யந்திரத் துப்பாக்கிகளுடன் சோவியத் பிரதேசத்துக்குள் ஊடுருவிவிட்டனர். முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்கவும். அந்தச் சிப்பாய்கள் ஸ்லாவூத்தா காட்டுக்குள் மறைந்துவிட்டனர். அவர்களைப் பின்தொடர்ந்து வேட்டையாடுவதற்கு ஒரு சிவப்புக் கஸாக்குகளின் கம்பெனி அனுப்பப்பட்டுள்ளது. பகலில் அப்படை பெரிஸ்தோவ் வழியே செல்லும். அதை எதிரிப் படையென்று தப்பாகக் கருதிவிடாதீர்கள்.

''விசேஷ எல்லைக்காவலரின் பட்டாலியத் தலைவர்.

''க வ் ரீ லோ வ்.''

ஒரு மணி நேரம் கழித்தபின், ஊரை அடையும் சாலை வழியில், ஒருவன் குதிரைமீது வந்தான். அவனுக்குப் பின்னுல், ஒரு கிலோமீட்டர் தூரத்தில், ஒரு குதிரை வீரர் கோஷ்டி வந்துகொண்டிருந்தது. முன்னுல் தன்னந்தனியாக வந்த குதிரை வீரன், ஏழாவது சிவப்புக் கஸாக்கிய ரெஜிமென்ட்டைச் சேர்ந்த இளைஞன்; வேவு பார்ப்பதில் அனுபவமில்லாதவன். எனவே அவன் எச்சரிக்கையாக வந்தபொழுதும், சாலையோரத் தோட்டங்களில் ஒளிந்திருந்தவர்களைக் கண்டுபிடிக்க அவனுல் முடியவில்லை. திடீரென்று, அவன் தோட்டத்திலிருந்து தோன்றிய ஆயுதபாணிகளால் சூழப்பட்டான். அவர்களுடைய சட்டையில் கம்ஸமோல் சின்னத்தைக் கண்டவுடன், அவன் பேதைச் சிரிப்புச் சிரித்தான். சுருக்கமான விளக்கங்களுக்குப்பின், அந்த இளைஞன் பின்னுல் வந்த குதிரைப் படைப் பிரிவைச் சந்திப்பதற்காகத் திரும்பிச் சென்முன். காவல் வீரர்கள், கஸாக்குப் படையினரை அனுமதித்துவிட்டுத் தோட்ட மறைவில் மீண்டும் பதுங்கிக் கொண்டனர்.

ஆக்கிரமித்த கொள்ளைக்கூட்டம் தோல்வியடைந்து விட்டதென்ற சேதி லிஸீத்ஸினுக்குக் கிடைப்பதற்குமுன், பல நாட்கள் கவலையில் கழிந்தன. சிவப்புக் குதிரைப் படையினரால் வேட்டையாடப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் அவசர அவசரமாகப் பின்வாங்கித் தப்பி ஓடினுர்கள்.

பெரிஸ்தோவ் வட்டாரத்தில் சோவியத் வாழ்வைப் படைக்கும் பணியில், பத்தொன்பது

போல்ஷெவிக்குகள் விருவிருப்புடன் ஈடுபட்டனர். இந்த வட்டாரத்தில் நிர்வாகத்தைப் புதிதாக அமைக்க வேண்டியிருந்தது; எல்லையோர வட்ட மாகவிருந்ததால், ஒவ்வொருவரும் கண்காணிப் பாகவும் இருக்க வேண்டியிருந்தது.

விஸீத்ஸின், திராபீமொவ், கர்ச்சாகின் ஆகி யோரும் அவர்களுடன் ஒத்துழைத்த இதர ஊழி யர்களும், பகலெல்லாம் பாடுபட்டனர்; சோவியத் துக்களுக்குப் புதுத் தேர்தல் நடத்தினர்; கொள் ளைக்காரர்களைக் கருவறுக்கப் போராடினர்; கலைப்பணிகளைக் கவனித்தனர்; கள்ளவாணிபத் தை ஒழிக்கப் பாடுபட்டனர்; அதே பொழுதில், தற்காப்பைப் பலப்படுத்துவதற்காகக் கட்சியை யும் கம்ஸமோலையும் செயல்படுத்தினர்.

சேணத்திலிருந்து மேஜைக்கு; மேஜையிலி ருந்து இளைஞர் குழுக்கள் சிரத்தையுடன் ராணுவப் பயிற்சி பெற்ற மைதானத்துக்கு; அங்கிருந்து பண் பாட்டு மன்றத்துக்கும் பள்ளிக்கூடத்திற்கும்; அதன்பின் இரண்டு மூன்று கமிட்டிக் கூட்டங்கள் —இவ்வாறாக சர்வஜன ராணுவப் பயிற்சிக்கான இரண்டாவது பட்டாலியன் தலைவனை கர்ச்சா கின் தினந்தோறும் அயராது உழைத்தான். பல இரவுகளை, அவன் தன் 'மௌஸர்' கைத்துப்பாக் கியுடன் குதிரைமீதே கழித்தான். அவன் அவ்வாறு அகாலரோந்து சென்றபொழுது, ''நில். யார் அது?'' என்ற கேள்வி இரவின் அமைதியைக் குலைப்பது உண்டு. அதன்பின் போலிஷ் பகுதியிலி ருந்து திருட்டுத்தனமாகச் சாமான்களைக் கடத்தி

வந்த வண்டிகள் விரைந்து செல்லும் ஒலி இருளின் சாந்தியைக் கலைப்பதும் உண்டு.

கம்ஸமோலின் பெரிஸ்தோவ் . வட்டாரக் கமிட்டியில், கர்ச்சாகின், லீதா பொலெவீஹ, ஷேன்யா ரஸ்வலீகின் ஆகியோர் இருந்தனர். லீதா, வோல்கா நதிப் பிரதேசத்தைச் சேர்ந்த வள்; கருமையான கண்களை உடைய மங்கை. மாதர் இலாகாவுக்குத் தலைவியாகச் செயலாற் றினுள். ஷேன்யா ஒரு சுந்தர இளைஞன்; நல்ல வளர்த்தி; கொஞ்ச காலத்துக்கு முன்னுல்கூட, அவன் பள்ளிமாணவனுயிருந்தான். மயிர்க்கூச் செறியும் சாகசங்கள் என்ருல் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். ஷெர்லாக் ஹோல்ம்ஸ், லூயீ பூஸ்ஸனுர் ஆகியோரின் கதைகளைக் கரைத்துக் குடித்துப் பாண்டித்தியம் பெற்றிருந்தான். அவன் இதற்கு முன்னுல், கட்சியின் வட்டாரக் கமிட்டிக் காரி யாலத்தில் மானேஜராக வேலைசெய்தான். அவன் கம்ஸமோலில் சேர்ந்து நான்கு மாதங்களே ஆகின் றன. ஆனுல் ''பழங்காலத்துப் போல்ஷெவிக்'' மாதிரி இளைஞர்முன் வெளிச்சம் போட்டான். பிர தேசக் கமிட்டி, அவனைக் கொஞ்சம் தயக்கத்து டன்தான், அரசியல் பயிற்சி வேலைக்குப் பொறுப் பாகப் பெரிஸ்தோவுக்கு அனுப்பியது; வேறு நபர் கிடைக்காத காரணத்தால் இவனை அனுப்பியது.

சூரியன் உச்சிக்கு வந்து விட்டான். வெப்பம் புகாத இடம் இல்லை. சகல ஜீவராசிகளும் நிழலில் புகலிடம் தேடின. நாய்கள்கூடக் கொட்டகைக

ளுக்குள் ஒதுங்கின; அங்குத் தூக்கமயக்கத்துடன் பெருமூச்சு விட்டுக்கொண்டு கிடந்தன. கிணற்றுக்குப் பக்கத்தில், சகதியில் புரண்டு களித்த பன்றி மட்டுமே, கிராமத்தின் உயிர்த் துடிப்புக்குச் சான்ருகப் புலப்பட்டது.

கர்ச்சாகின் கட்டிக் கிடந்த தன் குதிரையை அவிழ்த்தான். முழங்கால் முட்டு வலித்ததால், உதட்டைக் கடித்துக் கொண்டு சேணத்தின் மீது ஏறி அமர்ந்தான். ஆசிரியை பள்ளிக்கூடத்தின் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தாள். உள்ளங் கையால் கண்களை மறைத்துக் கொண்டு நின்ற அவள் புன்னகை செய்து கொண்டே, ''தோழர் கமிஸார், உங்களை மீண்டும் சீக்கிரத்தில் சந்திக் கலாமென்று நம்புகிறேன்'' என்ருள்.

குதிரை அவசரப்பட்டது; தரையை டக்டக் கென்று மிதித்தது; கழுத்தை நீட்டி, கடிவாளத்தை இழுத்தது.

''தோழர் ரக்கீத்திஞ, சென்று வருகிறேன். நாளைக்கு, முதலாவது பாடத்தைத் தொடங்கி விடுங்கள்.''

கடிவாளத்தின் அழுத்தம் தளர்ந்தது; குதிரை விரைந்தது. திடீரென்று, யாரோ அலறுவது போன்ற கூச்சல் பாவெல் காதில் விழுந்தது. கிராமத்தில் தீப்பிடித்து விட்டால், பெண்கள் அலறுவார்களே, அது மாதிரி இருந்தது. பாவெல் தன் குதிரையைத் திருப்பினுன். ஒரு விவசாயிப் பெண் கிராமத்துக்குள், மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடுவதைக் கண்டான். ரக்கீத்திஞ முன்வந்து அவளை

நிறுத்தினாள். அருகிலிருந்த குடிசைகளிலிருந்து பலர் வெளியில் நோக்கினர். அவர்கள் அநேகமாகக் கிழவர்களாக இருந்தனர்; உடலை வளைத்து வேலை செய்யக்கூடிய விவசாயிகள் வயல்வெளிகளுக்குச் சென்றிருந்தனர்.

''ஓ! ஓ! நல்லவர்களே! விரைவில் வாருங்கள்! ஓடி வாருங்கள்! அங்கே கொலை நடக்கிறது!''

பாவெல் அந்த இடத்தை அடைந்தபொழுது, பலர் அந்தப் பெண்ணைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்; அவர்கள் அவளது வெள்ளைச் சட்டையைப் பிடித்து இழுத்துக் கவலையுடன் கேள்விமேல் கேள்வி கேட்டனர். ஆனால் அவளது கூச்சல்களிலிருந்து ஒன்றும் விளங்கவில்லை. ''கொலை நடக்கிறது! வெட்டுப்பழி! குத்துப்பழி!'' என்றுதான் அவளால் சொல்ல முடிந்தது. அடர்ந்த தாடியை உடைய ஒரு கிழவன், தன் கைத்தறிக் கால்சட்டையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு ஓடிவந்தான்.

''கிரீச்சென்று கத்தாதே! யார் யாரைக் கொலை செய்கிறார்கள்? எங்கே? என்ன விஷயம்? புரியும்படி பேசு! கிரீச்சென்று அலறாதே!'' என்று அவன், வலிப்புக் கண்டவளைப் போல் நடந்து கொண்ட பெண்ணைப் பார்த்துக் கடிந்து கொண்டான்.

''நம் ஆட்களும் பொதுரபித்ஸி ஆட்களும் தான்.... வரப்புச் சண்டைதான். அவர்கள் நம் ஆட்களைக் கொன்று கொண்டிருக்கிறார்கள்!'' என்று அவள் கூறினாள்.

அதிலிருந்து விஷயம் விளங்கியது. பெண்கள் புலம்பினுர்கள்; ஆனல் கிழவர்கள் ஆத்திரத்தில் உறுமினுர்கள். ''பொதுாபித்ஸி ஆட்கள் நம் மவரை அரிவாளால் வெட்டுகிருர்கள்.... மீண்டும் அந்த வரப்புத் தகராறுதான்!'' என்ற சேதி, கிராமம் முழுவதும், வீடுவீடாகப் பரவியது. நடக்கச் சக்திகொண்டவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் குடிசைகளிலிருந்து வெளியே பாய்ந்து ஓடி வந்தனர். கவர்த்தடிகளையும் கோடரிகளையும் வேலியிலிருந்து பிடுங்கிய கம்புகளையும் எடுத்துக்கொண்டு கிராமத்துத் தெருவில் திரண்டனர்; வயல்களது எல்லை விஷயமாக, இரு கிராமங்களுக்கும் இடையே வாடிக்கையான வருடாந்திரப் போராட்டம் நடைபெற்ற வயல்களை நோக்கி ஓடினுர்கள்.

பாவெல் தன் குதிரையை அடித்தான்; கூச்சலிட்டு விரட்டினுன். அது சிட்டாய்ப் பறந்தது. ஓடிய கிராமத்தாரைக் கடந்துசென்றது. அது தன் வேகத்தைக் கூட்டிக் கொண்டே போயிற்று. முன்னல் ஒரு குன்றின்மீதிருந்த காற்ருலை, வழியைத் தடுக்கும் வகையில் தன் இறக்கைகளை விரித்துக்கொண்டு நின்றது. வலதுபுறத்தில், நதிக்கரை ஓரத்தில், பள்ளமான நிலத்தில் புல்வெளி ஒன்று இருந்தது. இடது புறத்தில், கண்ணுக்கு எட்டிய துாரம்வரை, ரைப்பயிர் காட்சி தந்தது. பழுத்த தானியக் கதிர்கள் காற்றில் அசைந்தாடின. சாலையோரத்தில், கசகசாச் செடிகளில் மலர்கள் செக்கச்செவேலென்று இருந்தன. இங்கு

அமைதி நிலவியது; பொறுக்கமுடியாத வெப்பம் ஆளைத் தகித்தது. ஆனால் தூரத்தில், ஆற்றுத் தண்ணீர் கதிரொளியில் வெள்ளிமயமாகி இன் புற்றிருந்த இடத்திலிருந்து, போர்க்கூச்சல் மிதந்து வந்தது.

குதிரை, புல்வெளியை நோக்கிப் பறந்து சென்றது. ''இது தடுக்கிவிழுந்தால், இருவருக் குமே முடிவு உண்டாகி விடும்'' என்ற எண்ணம் பாவெல் மனதில் பளிச்சென்று தோன்றி மறைந் தது. ஆனால் இனி அதை நிறுத்த முடியாது. சேணத்தில் குனிந்து, குதிரையின் காதில் காற்று விசில் அடிப்பதைக் கேட்டுக்கொண்டு செல்வ தைத் தவிரப் பாவெலுக்கு வேறு வழி இல்லை.

ஆத்திரத்தில் கண்ணிழந்தவர்கள், வெறி பிடித்துச் சண்டையிட்டுக் கொண்டிருந்த வயலுக் குள், அவன் புயல் வேகத்தில் நுழைந்தான். முன் பே சிலர் இரத்தக் காயங்களுடன் வயலில் கிடந்த னர். இரத்தம் வழிந்தோடும் முகத்துடன் ஓடிய இளைஞனைத் துரத்திச்சென்றான் ஒரு கிழவன்; அரி வாளின் பிடிக்கட்டையுடன் துரத்திய அந்தத் தாடிக்காரனைப் பாவெலின் குதிரை கீழே தள்ளி யது. அண்மையில், வெயிலில் கன்றிய ஆஜானு பாகு ஒருவன், விழுந்து கிடந்த விரோதியின் உயிர்க் கருவில் குறிவைத்து உதைப்பதற்காகத் தன் கனமான பெரிய பூட்ஸைத் தூக்கினான்.

பாவெல், சண்டையிட்டவர்கள் மத்தியில் தன் குதிரையை முழுவேகத்தில் முடுக்கிவிட் டான். அவர்கள் நாலு புறங்களிலும் சிதறி ஓடி

ஞர்கள். இந்தத் திடீர்த் தாக்குதல் அவர்களைப் பிரமிப்பு அடையச் செய்தது; மிருக வெறியுடன் சண்டையிட்ட அக்கூட்டத்தை அச்சுறுத்தித்தான் கலைக்க முடியுமென்பதைப் பாவெல் உணர்ந்தான். எனவே, அவர்களது மலைப்பு நீங்குவதற்குள் அவன் வேகமாகச் சுழன்று, ஒருவர்பின் ஒருவராகத் தாக்கினான்.

''நச்சுப் பூச்சிகளா! கொள்ளைக்காரர்களா! ஓடுங்கள்! இல்லாவிட்டால் உங்கள் ஒவ்வொருவரையும் சுட்டுக் கொல்வேன்'' என்று வெஞ்சினத்துடன் கத்தினான்.

அவன் தனது பிஸ்டலை இழுத்து எடுத்துக் கொண்டான். மூர்க்கமான வெறியால் கோணியிருந்த முகத்துடன் அண்ணாந்து பார்த்த ஒருவனுக்கு மேலாக ஒரு குண்டு பறந்தது. மீண்டும் குதிரை சுழன்றது; பிஸ்டல் பேசியது. சிலர் அரிவாளைக் கீழே போட்டுவிட்டுத் திரும்பினர். வயலின் குறுக்கும் நெடுக்கும் பாய்ந்து இடைவிடாமல் சுட்டுப் பாவெல் நிலைமையைச் சமாளித்தான். இந்தச் சண்டைக்கான பொறுப்பிலிருந்து தப்புவதற்காகவும், பயங்கரமாக விசுவரூபமெடுத்துத் தொடர்ந்தாற்போல் சுட்டுக் கொண்டிருந்த குதிரை வீரனிடமிருந்து தப்புவதற்காகவும், விவசாயிகள் நாலுபுறங்களிலும் சிதறி ஓடினார்கள்.

அதிர்ஷ்டவசமாக, ஒருவரும் சாகவில்லை; காயமடைந்தவர்கள் பிழைத்துக் கொண்டனர். எனினும், இந்த வழக்கை விசாரிப்பதற்காக வட்டாரக்கோர்ட் பொதுபித்ஸியில் சீக்கிரத்தில்

கூடியது. ஆனால் கலவரத்துக்குப் பொறுப்பான வர்களைக் கண்டுபிடிப்பதற்காக, நீதிபதி எடுத்த முயற்சிகள் வியர்த்தமாயின. விவசாயிகள் தமது செயல்களின் மூர்க்கத் தன்மையை உணர வேண்டுமென்பதற்காகவும், இத்தகைய பலாத்காரத்தை இனி அனுமதிக்க முடியாதென்பதை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்வதற்காகவும், நீதிபதி ஒரு போல்ஷெவிக்கின் பொறுமையுடனும் விடா முயற்சியுடனும் அரும்பாடுபட்டான்.

''தோழர் நீதிபதி அவர்களே! எல்லாம் இந்த வயல் வரப்புகளால் வந்த வினை. அவை அடிக்கடி மாறிவிடுகின்றன. ஆண்டுக்கொரு தடவை, வரப்புச் சண்டை நடத்தவேண்டியதிருக்கிறது'' என்று விவசாயிகள் கூறினார்கள்.

இறுதியில், சில விவசாயிகள் கலவரத்தின் பொறுப்புக்கு ஜவாப் சொல்ல வேண்டியதாயிற்று.

ஒரு வாரத்துக்குப் பின், தகராறுக்கு இடம் தந்த துண்டு நிலங்களில் முளையடிப்பதற்காக ஒரு குழு புல்வெளிக்கு வந்தது.

''நான் நிலம் அளப்பவனாக வேலை செய்யத் தொடங்கி, முப்பது ஆண்டுகள் ஆகின்றன. எப்பொழுதும் இந்த வரப்புத் தகராறுதான்!'' என்று அந்த நிலம் அளந்த கிழவன் தனது அளவை நாடாவைச் சுருட்டிக்கொண்டே குழுவுடன் வந்த பாவெலிடம் கூறினான். ரொம்ப தூரம் நடந்ததால் களைத்தும் வெப்பத்தால் சோர்ந்தும் நின்ற கிழவன் உடலெல்லாம் வியர்வை கொட்டியது. ''இந்தப் புல்வெளிகளில் வகுத்திருக்கும் எல்லைகளைப்

பார்க்கும்பொழுது, கண்களையே நம்ப முடிய வில்லை. ஒரு குடிவெறியன்கூட இவற்றைவிட நே ராக நடந்து செல்லுவன். தான்ய வயல்களிலோ நிலைமை இன்னும் மோசம். ஏழு அல்லது எட்டு அடி அகலமுள்ள துண்டு நிலங்கள்! அவையும் ஒன்றை இன்னொன்று வெட்டிச் செல்வதாக உள் ளன! இவற்றைப் பாகுபடுத்துவதற்குள் பைத்தி யம் பிடித்துவிடும்! பிள்ளை தகப்பனிடமிருந்து பிரியும் பொழுது ஏற்படும் பாகப் பிரிவினையால் இந்தத்துண்டு நிலங்கள் மேலும் பிளவுபடுகின்றன. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, சாகுபடிக்கு நிலம் இருக்காது! நிலமெல்லாம் வரப்பாயிருக்கும்! ஆம், நிஜம்தான். இப்பொழுதே நிலத்தில் பத்து சதவிகிதம் வரப்பாக வீண் போகிறது'' என்று கிழவன் கூறினான்.

பாவெல் புன்னகை செய்தான். ''தோழரே, இருபது ஆண்டுகளுக்குப் பின், நிலத்தில் ஒரு வரப்புக்கூட இருக்காது.''

கிழவன் அவனை மன விரிவுடன் நோக்கினான்.

''கம்யூனிஸ்டு சமூகத்தைப் பற்றிக் கூறு கிறீர்களா?'' அது அவ்வளவு சீக்கிரத்தில் வரப் போகிறதா? ரொம்பக் காலம் பிடிக்குமே!''

''நீங்கள் புதானவ்க்காவில் உள்ள கூட்டுப் பண்ணையைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?''

''கேள்விப்பட்டேன். உன் கருத்துப் புரி கிறது.''

''என்ன, சரிதானே?''

''நான் புதானவ்க்காவுக்குப் போயிருந்தேன்,

தோழர் கர்ச்சாகின். ஆனால் அது ஒரு விதிவிலக்கான நிகழ்ச்சி.''

கமிஷன் நிலத் துண்டுகளை அளந்துகொண்டே இருந்தது. இரண்டு இளைஞர் முளையடித்துக்கொண்டே வந்தனர். இரு பக்கத்திலும் விவசாயிகள் நின்றுகொண்டு, முன்னால் முளையடித்திருந்த இடங்களிலேயே புதிய முளைகளை அடிக்கிறார்களா வென்று உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

குதிரையைச் சாட்டையால் அடித்துக்கொண்டே, வாயாடியான வண்டிக்காரன் பிரயாணிகளை நோக்கித் திரும்பிக் கூறினான்:

''இந்தக் கம்ஸமோல் இளைஞர்களெல்லோரும் எங்கிருந்து வந்தார்களென்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இந்த மாதிரி ஆட்களை நான் முன்னால் பார்த்தது இல்லை. அந்தப் பள்ளிக்கூட ஆசிரியைதான் இவர்களையெல்லாம் கிளப்பி விட்டிருக்கிறாள்; எனக்குத் தெரியும். அவளது பெயர் ரக்கீத்தினா. உங்களுக்குத் தெரியுமா? இளம் வயது தான்; ஆனால் மிகவும் தீயவள். கிராமத்திலுள்ள பெண்களையெல்லாம் தூண்டி விடுகிறாள்; அவர்களுக்கு ஏதேதோ அபத்தமான விஷயங்களையெல்லாம் சொல்லிக்கொடுக்கிறாள். இதனால் கலகமே உண்டாகிறது. முன்போல் ஒருவன் தனது சொந்த மனைவியை அடிக்க முடியாத அளவுக்கு நிலைமை கெட்டுவிட்டது! அந்தக் காலத்தில், ஒருவனுக்கு மனநிலை சரியில்லாவிட்டால், மனைவியை அடிப்பான். அவளும் பதில் பேசாமல் மூலையில் உட்

கார்ந்து கொண்டிருப்பாள். இப்பொ ழுதோ, அடித்தால், ஆர்ப்பாட்டம் செய்கிருள்! ஏண்டா வழியிலே போகிற தொல்லையை வாங் கிக் கட்டிக் கொண்டோமென்று வருந்த வேண் டியிருக்கிறது. பொதுஜன நீதிமன்றத்தில் வழக் குப் போடுவேன் என்று வீரம் பேசுகிருள், அவள்! வயதுப் பெண்களோ, தத்தம் கணவன்மாரிடம் சட்டம் பேசுகின்றனர்! அடித்தால், விவாகரத் துச் செய்து விடுவேனென்று அச்சுறுத்துகின்றனர். என் மனைவி கன்கா, மகா சாது! வாயில்லாப் பூச்சி! இப்பொழுது அவள் மாதர் சங்கத்தில் சேர்ந்து பிரதிநிதியாக வேறு ஆகிவிட்டாள்! பிரதிநிதி என்றுல் தலைவி மாதிரியாம். கிராமத்துப் பெண் களெல்லாம் அவளிடம் வந்து ஆலோசனை கேட் கின்றனர். இதை அறிந்தவுடன் எனக்கு ஆத்தி ரம் வந்தது. அந்தக் கோபத்தில் அவளைச் சவுக் கால் அடிப்பதற்கு ஆயத்தமானேன். கடைசியில், எப்படியாவது தொலையட்டுமென்று விட்டுவிட் டேன்! அவர்கள் எக்கேடு கெட்டால், நமக்கு என்ன! ஆனுல் வீட்டு வேலை போன்ற விஷயங் களில், கன்காவிடம் குற்றம் காண முடியாது.''

வண்டிக்காரன், தனது ஓட்டைச் சட்டை வழியே தரிசனம் தந்த ரோம மிகுந்த மார்பைச் சொறிந்தான்; குதிரையின் வயிற்றில் சவுக்கால் அடித்தான். லீதாவும் ஷேன்யாவும் வண்டிக்குள் இருந்தனர். அவர்கள் இருவருக்கும் பொதுஜனபித் ஸியில் வேலை இருந்தது. அந்த ஊரில் மாதர் பிரதி நிதிகளின் மகாநாடு ஒன்றை நடத்துவதற்கு

லீதா திட்டமிட்டிருந்தாள். அங்கு இருந்த கம்ஸ மோல் குழுவின் வேலையில் உதவி செய்வதற்காக, ஷேன்யா அனுப்பப்பட்டிருந்தான்.

''அப்படியானுல், உங்களுக்குக் கம்ஸமோல் களைப் பிடிக்கவில்லையா?'' என்று லீதா வண்டிக்கா ரனை விகடமாகக் கேட்டாள்.

அவன், பதில் கூறுவதற்குமுன் சிறிது நேரம் தன் தாடியை உருவிக் கொண்டிருந்தான்.

''அவர்களிடம் எனக்கு விரோதமில்லை.... இளைஞர்கள இன்பமாயிருக்க வேண்டியதுதான். நாடகம் போடுவது போன்ற காரியங்களில் அவர் கள் ஈடுபட்டு மகிழவேண்டியதுதான். நல்லதொரு இன்ப நாடகமாயிருந்தால், எனக்குக்கூட ரொம்ப ஆசைதான். இந்த இளைஞரெல்லாம் அடங் காப் பிடாரிகளாகி விடுவார்களென்றுதான் நாங்கள் ஆரம்பத்தில் நினைத்தோம். ஆனுல் எதிர் பார்த்ததற்கு நேர்மாருன வகையில் நடந்து கொள்கிருர்கள். குடிப்பது, ரௌடித்தனமாக நடப்பது முதலிய விஷயங்களில், இளைஞர் சங்கம் மிகவும் கண்டிப்பாயிருப்பதாக அறிகிறேன். அவர்கள் புத்தகப் படிப்பில் அதிகக் கவனம் செலுத்துகிருர்கள். ஆனுல் கடவுள் விவகாரத்தில் தலையிடாமலிருப்பதில்லை. மாதா கோயிலைக் கைப் பற்றி பண்பாட்டு மன்றமாக மாற்ற முயற்சித் தார்கள். இது தப்பு. இதனுல் கிழவர்கள் இவர் களுக்கு விரோதமாகிவிட்டார்கள். மொத்தமா கப் பார்த்தால், இளங் கம்யூனிஸ்டுகள் மோச மானவர்களல்ல. ஆனுல், என்னைக் கேட்டால்

ஒன்று சொல்வேன். அவர்களிடம் முறைக்கேடு ஒன்று உண்டு. பண்ணையாட்களையும், குடித் தனம் நடத்த முடியாதவர்களையும், இதர ஏழை களையும் தங்களுடன் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் பணக்கார குடியானவர்களின் மக்களை விரட்டிவிடுகிறார்கள்.

வண்டி கடகடவென்று ஒலித்துக்கொண்டு, குன்றுச் சரிவில் இறங்கிப் பள்ளிக்கூடக் கட்டிடத் துக்கு முன்னால் நின்றது.

காவற்காரி, புதிதாக வந்தவர்களுக்கு வசதி செய்து கொடுத்துவிட்டு, கொட்டகையில் படுத்து உறங்குவதற்குப் போய்விட்டாள். லீதாவும் ஷேன் யாவும் நெடுநேரம்வரை ஒரு கூட்டத்தை நடத்திவிட்டுத் திரும்பினார்கள். வீட்டுக்குள் கும் மிருட்டாயிருந்தது. லீதா துரிதமாகத் தன் ஜோடு களை நீக்கிவிட்டுக் கட்டிலில் ஏறிப்படுத்தாள். உடனேயே உறங்கிவிட்டாள். ஷேன்யாவின் கை கள் அவளை வருடியதால் திடீரென்று விழித்துக் கொண்டாள். அவன் தடவிக் கொடுத்த முறை யே, அவனது துர்நோக்கத்தை வெட்ட வெளிச் சமாக்கியது.

''உனக்கு என்ன வேண்டும்?''

''நிறுத்து. எனக்குத் தனியாகப் படுத்திருக் கப் பிடிக்கவில்லை; அலுப்பாயிருக்கிறது. நேரத் தை உறங்கிக் கழிப்பதைவிட உற்சாகம் தரும் வழி இல்லையா?''

''கையை எடு. உடனே என் படுக்கையை

விட்டு ஒழிந்துபோ'' என்று கூறிக்கொண்டே, லீதா அவனைத் தள்ளினாள். அவனது வஞ்சகப் புன்னகையைக் கண்டாலேயே, அவளுக்குப் பிடிப் பதில்லை. அவனை இழிவுபடுத்தித் துச்சமாகப் பேச வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் உறக்கம் அவள்மீது வெற்றி கண்டது; கண்களை மூடினாள்.

''ஆ! வா, வா! இந்த சொகுசு நடத்தையெல்லாம் எதற்கு? நீ ஏதாவது கன்னிகாமடத்தில் வளர்ந்தாயா? நான் உன்னை அவ்வளவு எளிதாக நம்பிவிடுவேன் என எண்ணுகிறாயா? நீ உண்மையில் இருதயம் படைத்த பெண்ணாயிருந்தால், என் ஆவலைப் பூர்த்தி செய்துவிட்டு, எவ்வளவு வேண்டுமானாலும் தூங்கு'' என்று ஷேன்யா கூறினான்.

இத்துடன் விவகாரம் தீர்ந்துவிட்டதென்று எண்ணியவனாக, அவன் மீண்டும் கட்டிலண்டை சென்று, படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்தான் லீதாவின் தோளை இறுகப் பிடித்தான்.

இப்பொழுது லீதா நன்கு விழித்துக்கொண்டு விட்டாள். ''ஒழிந்து போ! உடனே தொலை! நாளைக்கு இதைப் பற்றிக் கர்ச்சாகினிடம் சொல்லப் போகிறேன்'' என்றாள் அவள்.

ஷேன்யா அவளுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு, வெடுவெடுப்புடன் தாழ்ந்த சுருதியில் பேசினான்:

''உன் கர்ச்சாகினிடம் எனக்கு ஒரு பயமும் இல்லை. என் இஷ்டத்துக்கு இணங்கு; இல்லாவிட்டால் பலாத்காரம் செய்வேன்.''

கொஞ்ச நேரம் சண்டை நடந்தது. 'பளார்' என்று இரண்டு அறைகள் இரவின் அமைதியைக் குலைக்கும் வகையில் ஒலித்தன. ஷேன்யா ஒரு பக்கமாகப் பாய்ந்தான். லீதா இருட்டில் தடு மாறி நடந்தாள்; கதவை அடைந்ததும், அதைத் தள்ளித் திறந்தாள்; வெளி முற்றத்துக்கு ஓடி ஞள். அங்குக் கோபாவேசத்துடன், வெண்ணில வில் நின்ருள்.

''முட்டாள், உள்ளே வா!'' என்று ஷேன்யா அவளை ஆங்காரத்துடன் விளித்தான்.

அவன் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு வெளியே வந்து, கொட்டிலில் படுத்துக் கொண் டான்; இரவெல்லாம் அந்த இடத்திலேயே கழித் தான். லீதா கதவைத் தாழ்ப்பாளிட்டுக் கொண்டு படுத்துத் தூங்கிஞள்.

மறுநாள் காலையில், அவர்கள் ஊருக்குத் திரும்பிஞர்கள். ஷேன்யா வயதான வண்டிக் காரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, ஒன்றன் பின் ஒன்ருகச் சிகரெட்டுகளைக் குடித்துக் கொண்டேயிருந்தான்.

''இந்தத் தொட்டாச் சிணுங்கி, கர்ச்சாகி னிடம் காட்டிக் கொடுத்துவிடலாம். பாழாய்ப் போன பெண்! இவள் இப்படிப்பட்ட கர்வியாக இருப்பாளென்று யார்தான் கற்பனை செய்திருக்க முடியும்? இவளது நடிப்பைப் பார்த்தால், மகா அழகியென்றுதான் தோன்றும். ஆனல் கொஞ்சம் கூட எழில் இல்லாத பெண். எப்படியிருந்தாலும், அவளுடன் சமாதானம் செய்து கொள்வதே

நலம். இல்லாவிட்டால் தொல்லை உண்டாகும். முன்பே, கர்ச்சாகின் என்மீது ஒரு கண்வைத்திருக்கிறுன்.''

இவ்வாறு சிந்தித்து முடிவு செய்த ஷேன்யா லீதாவை நெருங்கி உட்கார்ந்தான். அவன் தன் நடத்தையை எண்ணி, வெட்கப்படுவதாகப் பாசாங்கு செய்தான்; அவமானத்தால் குன்றிப்போனவனைப் போல நடித்தான்; வருத்தம் தெரிவித்தும் மன்னிப்புக் கோரியும் சில வார்த்தைகளை மெல்லிய குரலில் உச்சரித்தான்.

அந்த நடிப்பால், எதிர்பார்த்த பயன் உண்டாயிற்று. அவர்கள் கிராமத்தின் எல்லையை அடைவதற்குமுன், லீதா அவனுக்கு வாக்குக் கொடுத்தாள்; அன்று இரவு நடந்ததைப் பற்றி ஒருவரிடமும் பேசுவதில்லையென்று உறுதிமொழி கூறிஞள்.

எல்லையோரக் கிராமங்களில் ஒன்றன்பின் ஒன்ருக, இளங்கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றின. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இளஞ்செடிகளான இவற்றை வட்டாரக் கம்ஸமோல் கமிட்டியின் உறுப்பினர்கள் கவனமாகக் காப்பாற்றி வளர்த்தார்கள். பல்வேறு கிராமங்களில், அந்தந்த ஊர்த் தோழர்களுடன் வேலை செய்வதிலேயே, பாவெலுக்கும் லீதாவுக்கும் அதிக நேரம் கழிந்தது.

கிராமங்களுக்குப் போய்வருவதென்ருல் ஷேன்யாவுக்குப் பிடிக்காது. விவசாய இளைஞர்களது நம்பிக்கையைப் பெறும் வழிவகை எதுவும்

அவனுக்குத் தெரியவில்லை. அவன் செய்வதெல்லாம் கோளாறாகவே இருந்தது. விவசாய இளைஞர்களது நட்பைப் பெறுவதில், பாவெலுக்கும் லீதாவுக்கும் கஷ்டம் ஏற்படவில்லை. லீதாவுடன் பழகியவுடனேயே, பெண்கள் அவளைத் தம்மில் ஒருத்தியாக ஏற்றுக்கொண்டனர். அவர்கள் கம்ஸமோல் இயக்கத்திடம் கொஞ்சம் கொஞ்சமாக அக்கறை கொள்ளும்படி அவள் செய்தாள். பாவெலைப் பொறுத்தமட்டில், வட்டாரத்து இளைஞர் அனைவரும் அவனை அறிந்திருந்தனர். ராணுவ சேவைக்குத் திரட்டப்படவிருந்த இளைஞரில் ஆயிரத்து அறுநூறு பேர், அவனது படையில் பூர்வாங்கப் பயிற்சி பெற்றிருந்தனர். அவனது அக்கார்டியன் இந்தக் கிராமத்துப் பிரசாரத்தில் வகித்த பாத்திரத்தை வேறு எங்கும் வகிக்கவில்லை. அக்கார்டியனே அவனுக்கு இளைஞரிடையே செல்வாக்குப் பெற்றுக்கொடுத்தது. இளைஞர்கள் மாலை நேரத்தில், கிராமச் சந்தில் கூடிப் பாவெலது வாத்திய இசையைக் கேட்டு இன்புற்றார்கள். அந்த இசை, இப்பொழுது உணர்ச்சி மிகுந்ததாகவும் உள்ளக் கிளர்ச்சி உண்டாக்குவதாகவும் இருந்தது; சிறிது நேரத்தில், அது வீரச்சுவை மிகுந்ததாகவும், கடுமையும் கண்டிப்பும் தொனிப்பதாகவும் இருந்தது; இன்னொரு சந்தர்ப்பத்தில் அது மென்மையாகவும் இனிமையாகவும் இருந்தது. உக்ரேனியச் சோகப் பாட்டுக்களைத் தான் அப்படியெல்லாம் வாசிக்கமுடியும். பல இளைஞர்கள், இசைத்தேனை அருந்துவதற்காகக்

கூடி, முடிவில் இளங் கம்யூனிஸ்டுகளானுர்கள். அவர்கள் அக்கார்டியனிலிருந்து எழுந்த சங்கீதத்தைக் கேட்டார்கள்; அந்த இசையை எழுப்பிய இளைஞனது வாசிப்பில் நெஞ்சைப் பறிகொடுத்தார்கள். ராணுவக் கமிஸாராகவும் கம்ஸமோல் காரியதரிசியாகவும் செயல்பட்ட அந்த ரயில்வே தொழிலாளி பேசியதெல்லாம் அவனது வாத்திய இசையுடன் இரண்டறக்கலந்து இசைந்ததாக அவர்களுக்குத் தோன்றியது. விரைவில், புதிய பாட்டுக்கள் கிராமங்களில் ஒலித்தன. குடிசைகளில், பைபிள் புத்தகங்களுக்கும் பிரார்த்தனைக் கீதங்களது தொகுப்புகளுக்கும் பக்கத்தில் புதிய நூல்கள் தோன்றின.

இப்பொழுது, கள்ள வியாபாரிகள், ஒரு புதிய சக்தியையும் கணக்கிலெடுக்க வேண்டியதாயிற்று. அதுவே கம்ஸமோல்; இளங் கம்யூனிஸ்ட் சங்கத்தினர் சோவியத் சர்க்காரின் உறுதிவாய்ந்த துணைவர்களாகவும், உற்சாகமிக்க நண்பர்களாகவும் விளங்கினர். சில சமயங்களில், எல்லையோரத்து ஊர்களிலிருந்த இளங் கம்யூனிஸ்டுகள் விரோதிகளை வேட்டையாடுவதில் அளவுக்கு மீறிய உற்சாகம் காட்டினுர்கள். அப்பொழுதெல்லாம், பாவெலுக்குத் தனது இளந்தோழர்களை ஆபத்திலிருந்து காக்க நேரிட்டது. ஒரு தடவை பொதுபித்ஸி குழுவின் காரியதரிசியும், சமய எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டவனும், வாதப் பிரதிவாதத்தில் வாஞ்சையுள்ள அவசரவாதியுமான நீலக்கண்ணன் கிரீஷா கொரொவோதிக்

கோவுக்குத் தனிப்பட்ட வழிதுறைமூலம் ஒரு துப்புக் கிடைத்தது: அன்று இரவு, கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட பொருட்கள் கிராமத்து மில்லுக்குக் கொண்டு வரப்படுமென்பதே அந்தத் தகவல். அதை அறிந்தவுடன், அவன் சகல கம்ஸமோல் உறுப்பினரையும் திரட்டினான். அவர்கள் பயிற்சிக்குப் பயன்பட்ட துப்பாக்கியையும் இரண்டு பாய்னெட்டுகளையும் எடுத்துக்கொண்டு, நள்ளிரவில் கிளம்பிச்சென்று, மில்லுக்கருகில் பதுங்கினார்கள். கடத்தப்பட்ட சாமான்களின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். எல்லைக்காவலர் பிரிவுக்கும் தகவல் கிடைத்திருந்ததால், அது தனது ஆட்களை அனுப்பியிருந்தது. இருட்டில், எல்லைக் காவலர்களும் இளங் கம்யூனிஸ்டுகளும் தங்களுக்குள் மோதிக்கொண்டனர். எல்லைப் படைவீரர்கள் அடக்கமாக நடந்திருக்காவிட்டால், இளைஞர்களில் பலர் உயிரைப் பலிகொடுத்திருப்பார்கள். எல்லைப் படையினர் இளைஞரைப் பிடித்து நிராயுதபாணிகளாக்கி நான்கு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த கிராமத்துக்கு இட்டுச்சென்று, அங்கு அடைத்துவைத்தனர்.

அந்தச் சமயத்தில், பாவெல் கவ்ரீலோவுடன் இருந்தான். காலையில் பட்டாலியனின் தலைவன், இளைஞர்கள் பிடிபட்ட செய்தி தனக்குக் கிடைத்தவுடன் அதை பாவெலிடம் கூறினான். உடனே பாவெல் பையன்களை மீட்பதற்காகக் குதிரை மீதேறி விரைந்தான்.

அங்கு இருந்த எல்லைக்காவலன் சிரித்துக் கொண்டே, பாவெலிடம் இரவு நிகழ்ந்ததை விவரித்தான்.

''தோழர் கர்ச்சாகின், அவர்கள் நல்லபையன் கள். அவர்களைக் கஷ்டப்படுத்தும் எண்ணம் எங்களுக்கில்லை: ஆனால் நீ அவர்களிடம் கண்டிப் பாகப் பேசவேண்டும். அப்பொழுதே, அவர்கள் எதிர்காலத்தில் எங்கள் வேலையில் தலையிடாமல் இருப்பார்கள்'' என்று அவன் கூறினான்.

காவற்காரன் கொட்டகையின் கதவைத் திறந்தான். பதினொன்று இளைஞர்களும் எழுந்த னர். உடலின் பாரத்தை வலது காலிலும் இடது காலிலும் மாற்றி மாற்றிச் சுமத்திக்கொண்டே அசடு வழிய நின்றார்கள்.

''அவர்களைப் பார். அங்குப் போய், குழப்படி குளறுபடி செய்துவிட்டனர். நான் அவர்களைப் பிரதேசத் தலைமை நிலையத்துக்கு அனுப்பித் தானாக வேண்டும்'' என்று எல்லைக்காவலன் பொய்யான கண்டிப்புடன் பேசினான்.

கிரீஷா ஆவேசத்துடன் பேசினான்:

''தோழர் ஸாகரோவ், நாங்கள் என்ன குற் றம் செய்தோம்? நீண்ட காலமாக அந்தப் போக் கிரிகள் மீது கண்வைத்திருந்தோம். சோவியத் அதிகாரிகளுக்குச் சகாயம் செய்வதே எங்கள் விருப் பமாயிருந்தது. ஆனால் கொள்ளைக்காரர்கள் மாதிரி எங்களைப் பூட்டிவைக்கிறீர்கள்.''

அவன் மனம் புண்பட்டவனாகக் காட்டிக் கொண்டு வேறு பக்கம் திரும்பினான்.

பாவெலும் ஸாகரோவும் கண்டிப்பாக நடந்து கொள்வது மாதிரி நடித்தார்கள். கொஞ்ச நேரத்துக்குப் பின், பையன்களை மேலும் அச்சுறுத்தக்கூடாதென்று முடிவு செய்தார்கள்.

''நீ அவர்களுக்கு உத்திரவாதம் அளிப்பதாயிருந்தால், அவர்கள் இனி எல்லை ஓரத்தில் தலை காட்ட மாட்டார்களென்று உறுதி அளித்தால், நான் அவர்களை விடுதலை செய்கிறேன். அவர்கள் வேறு வழிகளில் எங்களுக்கு உதவி செய்யலாம்'' என்று ஸாகரோவ் பாவெலிடம் கூறினுன்.

''நல்லது. நான் அம்மாதிரி வாக்களிக்கிறேன். அவர்கள் இனி என்னைக் காட்டிக்கொடுக்க மாட்டார்களென்று நம்புகிறேன்.''

இளைஞர்கள், பாட்டுப் பாடிக்கொண்டே, பொதுூபித்ஸிக்குத் திரும்பிச் சென்றனர். அதன் பின், அந்தச் சம்பவத்தைப் பற்றி எவரும் பேச்சு மூச்சுக் காட்டவில்லை. விரைவில், மில்காரன் சட்டரீதியான வழியில் பிடிபட்டான்.

மைதான்-வில்லா காட்டுப் பிரதேசத்திலுள்ள பண்ணைகளில் ஜெர்மனியிலிருந்து வெளியேறிய விவசாயிகள் வசித்துவந்தார்கள். அவர்கள் செல்வந்தார்கள். அரை கிலோமீட்டர் தூரத்துக்கு ஒன்ருக, பல துணைக் கட்டிடங்களுடன் அமைந்திருந்த அப்பண்ணைகள் குட்டிக் கோட்டைகளைப் போலத் தோற்றமளித்துக் கொண்டிருந்தன. அந்தக் காட்டுப் பிரதேசத்தில்தான் அன்தொன்யூக்கும் அவனது கூட்டத்தினரும் அடைக்கலம் புகுந்தனர். அன்தொன்யூக், முன்

ஞன் ஜாரிஸ்டு ராணுவத்தில், ஸார்ஜென்ட்-மேஜராக வேலை பார்த்தான். அவன் தன் உறவின ரிலிருந்து ஏழு பேரை—எந்த அக்கிரமத்துக்கும் துணிந்தவர்களை—பொறுக்கித் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அவர்கள் பிஸ்டலும் கையுமாகத் தோன்றிக் கிராமப்புறச் சாலைகளில் வழிப்பறி நடத்தினர்கள். அவர்கள் ரத்தம் சிந்துவதற்குத் தயங்கவில்லை. அவர்கள் பணம் படைத்த வர்த்தகச் சூதாடிகளைப் பகற் கொள்ளையாடவும் கூசவில்லை; அது போல் சோவியத் ஊழியர்களைத் துன்புறுத்துவதற்கும் தயங்கவில்லை. எதையும் சட்டுப்புட்டென்று செய்வது அன்தொன்யூக்கின் வழக்கம். ஒரு நாள் அவன், இரண்டு கூட்டுறவுக் கடைக்காரர்களை வழிப்பறி செய்வான்; அடுத்த நாள், அவ்வழிப்பறி நிகழ்ந்த இடத்திலிருந்து இருபது கிலோமீட்டர்களுக்கு அப்பால் உள்ள இடத்தில் ஒரு தபால்காரனை நிராயுதபாணியாக்கி, அவன் வசமிருக்கும் அத்தனைப் பணத்தையும், ஒரு செப்புக் காசைக்கூட விட்டுவைக்காமல், கொள்ளையடிப்பான். அன்தொன்யூக்குக்கும் கோர்தீய் என்ற இன்னெரு கொள்ளைக்காரனுக்கும் பலத்த போட்டி. ஒருவனுக்கு இன்னெருவன் எவ்வகையிலும் சளைத்தவன் அல்ல. அந்தப் பிரதேசத்து மிலீஷியாவுக்கும் எல்லைக்காவலர் தலைமைக்கும், இந்த இருவரால் ஓயாத வேலை. அன்தொன்யூக் பெரிஸ்தோவுக்கு அருகாமையிலிருந்து கொண்டு, தன் தீவினைகளைச் செய்து வந்தான். எனவே, பெரிஸ்தோவ் நோக்கிச் செல்லும்

சாலைகளில் நடப்பதே அபாயமாயிருந்தது. அவனைப் பிடிக்க முடியவில்லை. ஆபத்துச் சூழ்ந்து விட்டால், அவன் எல்லைக்கு அப்பால் ஓடி ஒளிந்து விடுவான்; கொஞ்சகாலத்துக்குத் தலைகாட்டமாட்டான். ஆனால் மீண்டும், எதிர்பாராத சமயத்தில் தோன்றுவான். தனது மாயமான நடமாட்டத்தாலேயே, அவன் பேராபத்தாக இருந்தான். இந்தக் கொள்ளைக்காரனது அட்டூழியத்தைப்பற்றிப் புதிதாகத் தகவல் வந்தபொழுதெல்லாம், விஸீத்ஸின் ஆத்திரத்தில் தன் உதடுகளைக் கடித்தான்.

''இந்த நச்சுப்பாம்பு நம்மைக் கடிப்பதை எப்பொழுது நிறுத்தும்? போக்கிரிப் பயல், ஜாக்கிரதையாக நடமாடட்டும்! இல்லாவிட்டால், நானே அவனைத் தீர்த்துக் கட்டி விடுவேன்!'' என்று அவன் நறநறவென்று பற்களைக் கடித்துக்கொண்டே முணுமுணுத்தான். இரண்டு சந்தர்ப்பங்களில், பாவெலையும் இதர கம்யூனிஸ்டுகளில் மூவரையும் உடன் அழைத்துக்கொண்டு, விஸீத்ஸின் கொள்ளைக்காரனை வேட்டையாடினன்; ஆனால் அந்த இரண்டு சமயங்களிலும், அன்தொன்யூக் தப்பி ஓடிவிட்டான்.

கொள்ளைக்காரர்களை ஒழிப்பதற்காக ஒரு விசேஷப் படைப்பகுதி பிரதேசத் தலைமையால் பெரிஸ்தோவுக்கு அனுப்பப்பட்டது. பிலாத்தோவ் என்ற ஒய்யாரமான வாலிபனே அதற்குத் தலைவன். எல்லைப்புற விதிகளின் பிரகாரம், அவன் நேரடியாக நிர்வாகக் கமிட்டிக்கு வந்து, தன்

வருகையைப் பற்றி அறிவிக்க வேண்டும். ஆனால் அந்த மண்டைக்கனம் கொண்ட டம்பாச்சாரி, ஸெமாக்கி என்ற பக்கத்துக் கிராமத்துக்கு நேரில் சென்றான். அப்பொழுது நள்ளிரவாக இருந்த தால், அவன் தன் ஆட்களுடன் ஊரின் வெளிப் புறத்தில் ஒரு வீட்டில் தங்கினான். அடுத்த வீட்டில் வசித்த ஒரு இளங் கம்யூனிஸ்ட், இந்த ஆயுத பாணிகளின் மர்மமான வருகையைக் கவனித் தான். உடனே , கிராம சோவியத் தலைவனிடம் தகவல் கொடுப்பதற்காக அவன் ஓடினான். இந்தப் படைப்பிரிவைப்பற்றி தலைவனுக்கு ஒன்றும் தெரி யாது; எனவே, இவர்கள் கொள்ளைக்காரராகத் தான் இருக்கவேண்டுமென்று அவன் எண்ணினான். உடனே, உதவிபெறுவதற்காக அந்த இளங் கம் யூனிஸ்டை வட்டார மையத்துக்கு அனுப்பினான். பிலாத்தோவின் முட்டாள்தனத்தால் பலர் சாகும் நிலைமை ஏற்படவிருந்தது. லிஸீத்ஸின் அந்த நள்ளிரவில் மிலீஷியாக் குழு ஒன்றை திரட்டி னான்; ஒரு டஜன் பேருடன், ஸெமாக்கிக்கு விரைந் தான், 'கொள்ளைக்காரரைக்' கருவறுப்பதற்கு. அவர்கள் குதிரையிலேறி அந்த வீட்டுக்கு வந்து இறங்கி, வேலியைத் தாண்டி, வீட்டைச் சூழ்ந்த னர். லிஸீத்ஸின், கதவருகில் நின்ற காவற்காரன் தலையில் கைத்துப்பாக்கிக் கட்டையால் ஓங்கி அடிக்கவே, அவன் விழுந்தான். தோளால் முட்டிக் கதவைத் திறந்து கொண்டு, லிஸீத்ஸினும் அவ னுடைய ஆட்களும் அறைக்குள் நுழைந்தனர். கூரையிலிருந்து தொங்கிய எண்ணெய் விளக்கு

மங்கலான வெளிச்சம் கொண்ட அவ்வறையில், ஒரு கையில் எறிகுண்டும் இன்னொன்றில் கைத் துப்பாக்கியுமாக நின்றுகொண்டிருந்த விஸீத்ஸின் ஜன்னல் கதவுகள் கடகடவென்று ஓசை செய்யும் வகையில் கர்ஜித்தான்:

''சரண் அடை, அல்லது உங்களை ஒழித்து விடுவேன்.''

ஒரு விஞடியில், கண் விழித்துத் துள்ளி எழுந்த சிப்பாய்கள் குண்டுமாரிக்குப் பலியாகியிருப்பார்கள். ஆனல் எறிகுண்டை வீசுவதற்குத் தயாராய் நின்ற மனிதனது தோற்றப் பொலிவைக் கண்டு பயந்த சிப்பாய்கள், தமது கரங்களை உயர்த்தினர். சில நிமிஷங்கள் கழிந்தன; உள்ளாடை மட்டுமே அணிந்திருந்த ''கொள்ளைக்காரர்கள்'' வெளியே நிறுத்தப் பட்டனர். அப்பொழுது பிலாத்தோவ் விஸீத்ஸின் சட்டையிலிருந்த செங்கொடி விருதைக் கண்டான். உடனே, நிலைமையை விளக்கினன்.

விஸீத்ஸினுக்கு ஒரே ஆத்திரம்.

''நீ ஒரு மடையன்'' என்று ஏளனத்துடன் கூறிக் காறித் துப்பினன்.

ஜெர்மனி நாட்டில் நடைபெற்ற புரட்சி சம்பந்தமான தகவல் எல்லைப் பிரதேசத்தை எட்டியது. ஹாம்பர்க் நகரத்தில், தெரு அடைப்புகளையொட்டி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் ஒலி, இங்கும் ஓரளவுக்கு எதிரொலித்தது. எல்லையோரப் பிரதேசத்தில் அமைதி குலைந்தது.

சூழ்நிலையில் ஒரு வேகம் உண்டாயிற்று. எல்லோ ரும் மிகுந்த ஆவலுடன் செய்தித்தாள்களைப் படித் தார்கள். மேல் திசையிலிருந்து புரட்சிக் காற்று வீசியடித்தது. செஞ்சேனையில் சேர்ந்து தொண் டாற்றுவதற்குச் சித்தமாயிருப்பதாகக் கூறிப் பல இளங் கம்யூனிஸ்டுகள் வட்டாரக் கம்ஸமோல் கமிட்டியிடம் விண்ணப்பம் செய்து கொண்டனர். சோவியத் நாடு சமாதானப் பாதுகாப்பைக் கொள்கையாகக் கொண்டு செயல்படுகிறதென் றும், அது அந்நிய நாடுகளுடன் சண்டை பிடிக்கா தென்றும், கர்ச்சாகின் இளங் கம்யூனிஸ்டுகளுக்கு விளக்கினான். ஆனால் அவர்கள் அடங்கவில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும், வட்டாரம் முழுவதிலுமிருந்து இளங் கம்யூனிஸ்டுகள் வந்து, பாதிரி வீட்டுத் தோட்டத்தில் கூடினார்கள். ஒரு நாள் உச்சிப்பொழுதில், பொதூபித்ஸி குழுவைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் இளைஞர்கள் ராணுவ நடை போட்டுக் கொண்டு வந்து, வட்டாரக் கமிட்டி முற்றத்தை அடைந்தார்கள். அவர்களது வருகை யை ஜன்னல் வழியாகக் கண்டு கொண்ட பாவெல், முகமண்டபத்துக்குச் சென்றான். பதினொரு இளைஞர், கிரீஷா தலைமையில் வந்தனர். அவர்கள் பட்டாளத்துப் பூட்ஸ் அணிந்திருந்தனர்; அவர் களது தோளிலிருந்து பெரிய கித்தான் பைகள் தொங்கின.

''கிரீஷா, இது என்ன?'' என்று பாவெல் வியப்புற்று வினவினான்.

கிரீஷா பதில் உரைக்காமல், கண்களால்

சைகை காட்டிவிட்டுப் பாவெலுடன் உள்ளே சென்முன். வீதா, ஷேன்யா, மேலும் இரண்டு இளங் கம்யூனிஸ்டுகள் ஆகியோர் கிரீஷாவைச் சூழ்ந்துகொண்டு, விளக்கம் கோரினர்கள். அவன் கதவைச் சாத்திவிட்டு, வெண்மையான புருவங் களை நெறித்துக்கொண்டு விளம்பலுற்முன்:

''தோழர்களே, இது ஒரு பரீட்சை. எனது சொந்த யுக்தி. நாம் ஜெர்மன் முதலாளிகளுடன் சண்டை போடப் போகிறோமென்றும், போலிஷ் பிற்போக்காளருடனும் சீக்கிரத்தில் போர் புரிவோமென்றும், வட்டாரக் கமிட்டியிடமிருந்து ரகசியமான தந்தி வந்திருப்பதாக இன்று காலை நம் பையன்களிடம் சொன்னேன். சகல இளங் கம்யூனிஸ்டுகளும் படைதிரள வேண்டுமென்று மாஸ்கோவிலிருந்து உத்திரவு வந்திருப்பதாகவும் சொன்னேன். யாருக்காவது பீதியாயிருந்தால், அவன் விதிவிலக்குக் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளலாமென்றேன். ஊரில் தங்குவதற்கு அவன் அனுமதிக்கப்படுவானென்று உறுதி கூறினேன். இந்தப் போரைப்பற்றி ஒருவரிடமும் பேசக் கூடாதென்று நான் அவர்களுக்கு உத்திரவிட் டேன். ஒரு ரொட்டியையும் பெரிய இறைச்சித் துண்டையும் எடுத்துக்கொண்டு வரும்படி கூறி னேன். இறைச்சி இல்லாவிட்டால், வெள்ளைப் பூண்டு அல்லது வெங்காயம் கொண்டுவரச் சொன் னேன். கிராமத்துக்கு வெளியில் ரகசியமாகக் கூடி, வட்டார மையத்துக்குச் செல்வோமென்றும், அங்கிருந்து பிரதேச மையத்துக்குப் போன

வுடன் ஆயுதங்களைப் பெறுவோமென்றும் விளக்கினேன். நான் பேசியவுடன் அவர்களிடையே ஏற்பட்ட பரபரப்பை நேரில் பார்க்க வேண்டும்! என்னைக் குறுக்குக் கேள்வி கேட்டு, விவரம் அறிய முயன்றார்கள். கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு வேலையில் இறங்குமாறு சொன்னேன். 'ஊரிலேயே தங்க விரும்பும் தோழர்கள் மனம்விட்டுப் பேசலாம். நமக்குத் தொண்டர்கள்தான் தேவை. இது கட்டாய சேவை இல்லை' என்று மீண்டும் வற்புறுத்திக் கூறினேன். அவர்கள் கலைந்தனர். எனக்குக் கலக்கம் உண்டாயிற்று. ஒருவனும் வராவிட்டால் என்ன செய்வது? ஒருவனும் வராவிட்டால், இந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, வேறு ஊருக்குப் போக வேண்டியதுதான்! இவ்வாறு எண்ணியவனாக, நான் கிராமத்துக்கு வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். இதயம் வெகு வேகமாகத் துடித்தது. கொஞ்ச நேரத்துக்குப் பின், அவர்கள் ஒருவனுக்குப்பின் ஒருவனாக வரத் தொடங்கினார்கள். சிலர் தேம்பித் தேம்பி அழுததால், அவர்களது முகமெல்லாம் வீங்கியிருந்தது. ஆனால் அவர்கள் தம் துக்கத்தை மறைக்க முயன்றனர். பத்துப் பேரும் வந்து விட்டனர். ஒருவன் கூடப் பின்தங்கவில்லை. நமது பொதுாபித்னியிலுள்ள கம்ஸமோல் குழுவின் மகாத்மியம் எப்படி!'' என்று அவன் வெற்றிக் களிப்புடன் முடித்தான்.

அதிர்ச்சியடைந்த லீதா அவனைக் கடிந்து பேசினாள். அவன் அவளை வியப்புடன் வெறித்துப் பார்த்தான்.

''நீ என்ன சொல்கிருய்? நான் சொல்கிறேன், அவர்களைச் சோதிப்பதற்கு இதுதான் சிறந்த வழி. இதில் ஒரு மோசடியும் இல்லை. இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காகப் பிரதேசத் தலைமையிடம் அவர்களை இட்டுச் செல்ல எண்ணினேன். ஆனுல் மிகவும் களைத்துப் போயிருக்கிருர்கள். பார்த்தால் பாவமாயிருக்கிறது. கர்ச்சாகின், நீ அவர்களுக்கு ஒரு குட்டிப் பிரசங்கம் செய்ய வேண்டும். செய்வாயல்லவா? பேச்சு இல்லாவிட்டால் நன்ருயிருக்காது. படை திரட்டும் யோசனை கைவிடப்பட்டதென்ற மாதிரி ஏதாவது சொல். அதே சமயத்தில், அவர்களது உணர்வைக் கண்டு நாம் பெருமைப்படுகிறேம் என்றும் சொல்லு'' என்ருன் கிரீஷா.

பாவெல், பிரதேசத் தலைநகருக்கு அபூர்வமாகப் போய்வந்தான். அங்குப் போய் வருவதென்ருல், பிரயாணத்திலேயே பல நாட்கள் கழிந்தன; வட்டாரத்தைவிட்டு ஒருநாள்கூட வெளியே போகமுடியாதபடி, அவனுக்கு வேலை இருந்தது. ஷேன்யாவோ, காரணம் இல்லாமலேயே, குதிரை வண்டிச் சவாரி செய்து டவுனுக்குப் போவதற்குத் தயாராயிருந்தான். அவன் தன்னை ஒரு மாவீரனுகப் பாவித்துக் கொண்டு, உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு புறப்படுவான். காட்டு வழியே செல்லும் பொழுது, காகங்களையும் பாய்ந்தோடும் அணில்களையும் நோக்கி மனம்போன போக்

கில் சுடுவான். தனியாகச் செல்லும் வழிப் போக்கர்களை நிறுத்தி, ''நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?'' என்றெல்லாம் கண்டிப்புடன் வினவுவான். நகரத்தை நெருங்கிய அவன் தன் ஆயுதங்களை நீக்கிவிடுவான். துப்பாக்கியை வண்டியின் வைக்கோலுக்குள் மறைத்துவிட்டு, கைத்துப்பாக்கியைக் காற்சட்டைப் பையில் ஒளித்துக் கொண்டு, எப்பொழுதும் போல் தோற்றமளிப்பவனாகக் கம்ஸமோலின் பிரதேசக் கமிட்டி அலுவலகத்தில் பிரவேசிப்பான்.

ஒருநாள் அவன் அலுவலகத்துக்குள் வந்தவுடன், ''பெரிஸ்தோவில் என்ன சேதி?'' என்று பிரதேசக் கமிட்டிக் காரியதரிசி பிதோத்தவ் வினவினான்.

காரியதரிசியின் அறையில், எப்பொழுதும் கூட்டம் அதிகம்; பலர் ஏககாலத்தில் பேசுவார்கள். நான்கு பேர் பேசுவதைக் கேட்டுக் கொண்டு, ஐந்தாவது நபருக்குப் பதில் சொல்லிக்கொண்டு, அதேசமயத்தில் ஏதாவது எழுதிக்கொண்டும் இருப்பதென்பது எளிதான காரியம் அல்ல. பிதோத்தவ் இளைஞன்தான். ஆனால் 1919லிருந்தே கட்சி அங்கத்தினனாக இருந்துவருகிறான். அந்தப் போராட்ட நாட்களில்தான் பதினைந்து வயதுப் பையன் கட்சியில் அங்கத்தினராய் இருந்திருக்க முடியும்.

''சேதிக்கு என்ன குறைவு?'' என்று ஷேன்யா நிச்சிந்தையாகத் தொடங்கினான். ''நிறைய இருப்பதால் உடனே சொல்ல முடியாது. காலையிலிருந்து

இரவுவரை, ஒரே இம்சைதான். வேலை ஏராளமாகக் குவிந்துகிடக்கிறது. அடியிலிருந்து தொடங்க வேண்டியிருக்கிறதல்லவா? நான் இரண்டு குழுக்களை அமைத்தேன். சரி, எதற்காக என்னைக் கூப்பிட்டு அனுப்பினீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே, அவன் காரியவாதி மாதிரி நடித்துக் கொண்டு, கையுள்ள நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்.

பொருளாதார இலாகாவின் தலைவனான கிரீம்ஸ்கிய் தன் மேஜையில் குவிந்திருந்த காகிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் ஒரு கணம் தலையை உயர்த்தி, ஷேன்யாவைப் பார்த்தான்.

''நாங்கள் கர்ச்சாகினைத்தான் அழைத்தோம்; உன்னையல்ல'' என்று அவன் கூறினான்.

ஷேன்யா சிகரெட் புகையை ஊதிக்கொண்டே பேசினான்:

''இங்கு வருவதென்றால் கர்ச்சாகினுக்குப் பிடிக்கவில்லை. எனவே, இதர வேலைகளுடன் இதையும் நானே செய்ய வேண்டியிருக்கிறது.... பொதுவாகப் பார்த்தால், சில காரியதரிசிகள் இன்பமாகப் பொழுதுபோக்குகிறார்கள். அவர்கள் தாமாக ஒன்றும் செய்வதில்லை. என்னைப் போன்ற கழுதைகள்தான் பொதி சுமக்க வேண்டும். கர்ச்சாகின் எல்லைக்குப் போனான் என்றால், இரண்டு மூன்று வாரத்துக்குத் திரும்பி வரமாட்டான். எல்லா வேலையையும் நானே செய்ய வேண்டும்.''

வட்டாரக் காரியதரிசி வேலைக்குப் பாவெலை விடத் தனக்குத்தான் தகுதி அதிகம் என்று ஷேன்யா குறிப்பாக உணர்த்தியதைப் பேச்சைக் கேட்டவர்கள் புரிந்துகொண்டனர்.

''நல்ல மனதுள்ளவனாகத் தோன்றவில்லை'' என்று பிதோத்தவ், ஷேன்யா போனபின் இதரத் தோழர்களிடம் கூறினான்.

தற்செயலாக, ஷேன்யாவின் சூழ்ச்சி அம்பலமாயிற்று. ஒருநாள், லிஸீத்ஸின் தபால் எடுத்துச் செல்வதற்காகக் கம்ஸமோல் ஆபீசுக்கு வந்தான். வட்டாரத்திலிருந்து யார் வந்தாலும், தபாலை எடுத்துச்செல்வது வழக்கம். லிஸீத்ஸினும் பிதோத்தவும் உரையாடியபொழுது, ஷேன்யாவின் குட்டு வெளிப்பட்டது.

''எப்படியாயினும் சரி, கர்ச்சாகினை அனுப்பு. எங்களில் பலர் அவனைப் பார்த்ததில்லை'' என்று பிதோத்தவ் கூறினான்.

''சரி சரி. ஆனால் அவனை எங்கள் வட்டாரத்திலிருந்து எடுத்துவிடாதீர்கள். அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்'' என்று பதில் அளித்தான் லிஸீத்ஸின்.

இந்த வருஷம், அக்டோபர் புரட்சியின் ஆண்டு விழா, முன்னைக் காட்டிலும் அதிக உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. எல்லைப்புறக் கிராமங்களில் கொண்டாட்டத்தை நடத்தும் கமிட்டிக்குப் பாவெல் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். பொதுரபித்ஸியில் கூட்டம் முடிந்த

பின், அண்மையில் இருந்த மூன்று கிராமங்களைச் களைச் சேர்ந்த ஐயாயிரம் விவசாயிகள், எல்லைக் கோட்டை நோக்கி ஊர்வலமாகச் சென்றார்கள். அந்த ஊர்வலம் அரைக் கிலோமீட்டர் நீளம் இருந்தது. முன்னால் சிலர் ராணுவ பாண்டு வாசித்திக்கொண்டு போனார்கள். அதன்பின் சர்வ ஜன ராணுவப் பயிற்சி பட்டாலியன் இருந்தது. ஏராளமான செம்பதாகைகள் பறந்தன. அந்த ஊர்வலத்தினர் சோவியத் பகுதியில், எல்லைக் கம்பங்களுக்குச் சமாந்தரமான வழியில், ஒழுங்காக நடைபோட்டனர். எல்லைக் கோட்டால் இரண்டாகப் பிரிந்திருந்த கிராமங்களை நோக்கி ஊர்வலம் போயிற்று. இதற்கு முன்னால், எல்லைப் பிரதேசத்தில், போவிஷ்க்காரர்கள் இத்தகைய ஊர்வலத்தைக் கண்டதில்லை. பட்டாலியன் தலைவனை கவ்ரீலோவும் கர்ச்சாகினும் ஊர்வலத்துக்கு முன்னால் குதிரைமீது சென்றனர். அவர்களுக்குப் பின்னால், பாண்டு வாத்திய கோஷ்டி இசை எழுப்பியது. பதாகைகள் காற்றில் அசைந்தாடி ஒலி செய்தன. ஜனங்களின் பாட்டு நெடுந்தூரத்துக்கு ஒலித்தது. சிறப்பாக ஆடை உடுத்தியிருந்த விவசாய இளைஞர்கள் உற்சாகத்துடன் சென்றனர். கிராம மங்கையர் கிளுகிளுத்தனர்; உல்லாசமாகப் புன்னகை செய்தனர். வயது வந்தவர்கள் பொறுப்புணர்வுடன் நடந்தனர். கிழவர்கள் புனிதமான வெற்றியைப் பெற்ற உணர்வுடன் சென்றனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை, ஊர்வலத்தில் ஜனங்கள் நிறைந்திருந்தனர். ஊர்

வலம், எல்லை விளிம்பை ஒட்டினுர்போலச் சென்றது; ஆனால் ஒருவரும் அந்தக் கோட்டைக் கடக்கவில்லை. இந்த ஜன சமுத்திரம் வரிசை வரிசையாகச் செல்வதைப் பாவெல் பார்த்தான்.

அடவிபல முதலாக ஆங்கிலேயர் நாட்டை
அடுத்துள்ள ஆழ்கடலின் எல்லைவரை எங்கும்
படைவலியில் மிக்கதாகும் செம்படைதான்
ஒன்றே!
பார் முழுதும் வலியுடைத்துச் செம்படை
தான் ஒன்றே!

என்ற பாட்டை இளங் கம்யூனிஸ்டுகள் பாடினுர்கள். அதைத் தொடர்ந்து,

தொலைதூரக் குன்றத்தில்
தோன்றுகிறுர் எவரோ?
சிலைபோல அழகுடையார்
இளம்பெண்கள் சிரிப்பார்.

என்ற பாட்டை இளம் பெண்கள் கூட்டாகப் பாடினர்.

சோவியத் எல்லைக் காவற்படை வீரர்கள், இன்பப் புன்னகையுடன் ஊர்வலத்தை வணங்கினுர்கள். போலிஷ் காவலாளிகள் திகைப்புற்றவராக நோக்கினுர்கள். இந்த ஊர்வலத்தைப் பற்றிப் போலிஷ் தலைமைக்கு முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்தது; என்றுலும், இது பெரும் பீதியை உண்டாக்கியது. ரகசியப் போலீஸார் இங்கும் அங்கும் நிம்மதியில்லாமல் குதிரைமீது

போய்க்கொண்டிருந்தனர். எல்லைக் காவற் படைகளின் எண்ணிக்கை ஐந்து மடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தது; பக்கத்துக் குன்றுகளுக்குப் பின்னால் உதவிப் படைகள் பதுக்கப்பட்டிருந்தன; அவை அவசரத்துக்கு உதவும் வகையில் ஆயத்தமாக இருந்தன. ஆனால் உல்லாசமாக நடந்து கொண்டு சென்ற ஊர்வலம், எல்லைக் கோட்டைத் தாண்டவேயில்லை.

ஒரு போலிஷ் காவலாளி, குன்றின் மீது நின்றான். வெகு சீராக நடைபோட்ட ஊர்வலம் அவனை நெருங்கியது. நடை கீதத்தின் சுரங்கள் அவன் காதில் விழுந்தன. உடனே அவன் துப்பாக்கியை தோளிலிருந்து இறக்கினான். காலுடன் அதைச் சேர்த்துக்கொண்டு, மரியாதையாக நின்றான். ''கம்யூன் நீடு வாழ்க!'' என்ற சொற்கள் பாவெல் காதில் தெளிவாக விழுந்தன.

அந்த வார்த்தைகளைச் சொன்னது சிப்பாய் தான் என்பதை அவனது கண்களே பாவெலுக்கு உணர்த்தின. கவர்ச்சியடைந்த பாவெல், அவனை வெறித்துப் பார்த்தான். ஒரு நண்பன்! சிப்பாயின் உடுப்புக்கு அடியில், ஒரு இருதயம், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாகத் துடித்தது! பாவெல், ''வாழ்த்துக்கள், தோழரே!'' என்று போலிஷ் பாஷையில் மென்மையாகக் கூறினான்.

ஆர்ப்பாட்டம் முழுமையும் அவனைக் கடக்கும் வரை, போலிஷ் சிப்பாய் அதே நிலையில் இருந்தான். அந்தச் சிறிய, கரிய உருவத்தைப் பார்ப்பதற்காகப் பாவெல் பன்முறை திரும்பினான்.

இங்கு இன்னொரு போலிஷ்காரன் இருந்தான். அவனது மீசை நரைக்கத் தொடங்கியிருந்தது. பளபளவென்று மின்னிய நுனியுடன் கூடிய குல்லாயின் அடியிலிருந்த சலனமற்ற மங்கிப்போன அவனது கண்களைப் பாவெல் நோக்கினான். முயல் சோல்ஜர் சொன்னதைக் கேட்டிருந்த நினைவோடு வந்த பாவெல் இவனைப் பார்த்து, ''வாழ்த்துக்கள், தோழரே'' என்று தனக்குள் சொல்லும் ரீதியில் முணகினான்.

ஆனால் அதற்கு ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

கவ்ரீலோவ் சிரித்தான். அவன் அனைத்தையும் ஒட்டுக்கேட்டிருந்தான்.

''நீ அளவுக்கு மீறி எதிர்பார்க்கிறாய். அவர்கள் எல்லோரும் சாதாரணமான காலாட்படை வீரர்களல்ல. சிலர் ரகசியப் போலீஸார். அவனது மேற்கோட்டுக் கையிலுள்ள அடையாளத் துணியைப் பார்த்தாயா? அவன் ஒரு ரகசியப் போலீஸ்காரன் என்பது உறுதி.''

ஊர்வலத்தின் முன்பாகம் குன்றுச் சரிவில் இறங்கிக் கொண்டிருந்தது. அது எல்லைக்கோட்டால் இரண்டாகியுள்ள கிராமத்தை நோக்கிச் சென்றது. அந்தக் கிராமத்தின் சோவியத் பகுதியில் வசித்த மக்கள் விருந்தாளிகளை உன்னதமான முறையில் வரவேற்பதற்குத் தயாரிப்புச் செய்திருந்தனர். கிராமத்தார் அனைவரும், சிற்றாற்றின் கரையில் எல்லைப்பாலத்தின் அருகில் காத்திருந்தனர். இளைஞர்கள், சாலையின் இருபுறங்களில் வரிசையாக நின்றனர். போலிஷ் பகுதிக் கிராமத்தின்

குடிசைக் கூரைகளிலும் கொட்டகைக் கூரைகளிலும் ஒரே கூட்டம். அவர்கள் எதிர்க் கரையில் நடப்பதைச் சிரத்தையுடன் கவனித்துக் கொண்டிருந்தனர். குடிசை முகப்புகளிலும் தோட்ட வேலிகளருகிலும் ஏராளமான விவசாயிகள் கூடியிருந்தனர். ஊர்வலம் மக்கள் நிரம்பிய இடத்தை அடைந்தவுடன், பாண்டு கோஷ்டி "இன்டர்னேஷனல் கீதம்" வாசித்தது. அதன்பின், பசுமையான கொடிகளாலும் கிளைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையிலிருந்து கூட்டத்தினரைக் கிளர்ந்தெழச் செய்யும் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. இளைஞரும் மயிர்நரைத்துப்போன கிழவரும் பேசினார்கள். பாவெலும் தன் உக்ரேனிய மொழியில் பேசினான். அவனது பேச்சு ஆற்றைக் கடந்து அக்கரையிலிருந்த மக்களின் செவியில் விழுந்தது. அந்தத் தீப்பொறி கக்கிய சொற்கள், கேட்போரைக் குமுறியெழச் செய்யுமென்று அஞ்சினர், அக்கரையிலிருந்த இரகசியப் போலீஸார். அவர்கள் அங்கு இருந்த கிராமத்தாரைச் சவுக்குகளால் அடித்து விரட்டி ஓட்டினர்; ஆகாயத்தை நோக்கிச் சுடத் தொடங்கினர்.

தெருக்கள் வெறிச்சென்று ஆயின. போலீஸ் குண்டுகள் விழத் தொடங்கியதும் இளைஞர்கள் கூரைகளிலிருந்து குதித்து ஓடினார்கள். சோவியத் பகுதியிலிருந்த மக்கள் இவற்றையெல்லாம் பார்த்தனர். அவர்களின் முகங்களில் துயரக் குறிகள் படர்ந்தன. போலிஷ் பகுதியில் நடந்ததைக் கண்டு வெகுண்டெழுந்த ஒரு கிழ இடையன்,

சில இளைஞரின் உதவியுடன் மேடைமீது ஏறி, உணர்ச்சி வசப்பட்டுப் பேசினன்:

''என் அருமைக் குழந்தைகளே, இந்தக் காட்சியை நீங்களே பார்த்தீர்கள்! ஒரு காலத்தில், நாங்களும் இம்மாதிரி இம்சிக்கப்பட்டோம். ஆனல் இப்பொழுது, உழவன் கிராமத்துக்கு எஜமானனாகிவிட்டான். பிரபுக்களின் ஆட்சி முறிவடைந்துவிட்டது. நமது முதுகு, சவுக்கடியால் துன்புறும் காலம் ஒழிந்துவிட்டது. பிரபுக்கள் ஒரு பொழுதும் திரும்பாவிருப்பதற்கு நீங்கள் தான் உறுதி தேட வேண்டும். நான் கிழவன், எனக்குப் பேசத் தெரியாது. ஆனல் பல விஷயங்களை எடுத்துரைக்க நான் விரும்புகிறேன். ஜாராட்சியில் எங்கள் வாழ்நாளெல்லாம் துன்பமடைந்தோம்; பட்டினி கிடந்தோம்; உழவு மாடுகளைப் போல உழைத்து ஓடாளுேம்.... ஆம், அதோ அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் மாதிரி!'' இவ்வாறு கூறிய கிழவன், தன் தசைப் பற்று இல்லாத கரத்தால், ஆற்றின் அக்கரையைக் காட்டினன். அதற்குமேல் அவனல் பேசமுடியவில்லை. உணர்ச்சி வசப்பட்டு அழுதுவிட்டான். சிறுவர்களாலும், முதுமை மிகுந்தவர்களாலும்தான் அப்படி அழமுடியும்.

அதன்பின் கொரொவோதிக்கோ பேசினன். அவனது உரையில் வெஞ்சினம் பொறி கக்கியது. அதைக் கண்ட கவ்ரீலோவ் தன் குதிரையைத் திருப்பி, எதிர்க்கரையில் யாராவது குறிப்பு எடுக்கிறார்களா என்று உன்னிப்பாகக் கவனித்தான்.

ஆனல் அந்தக் கரையில் ஒருவரும் இல்லே. பாலத் துக்குக் காவலாயிருந்த சிப்பாய்கூட அகற்றப் பட்டு விட்டான்.

''நல்லது. அந்நியநாட்டுக் கமிஸார் இலாகா வுக்குக் கண்டனக் குறிப்பு எதுவும் வராது போ லிருக்கிறது!'' என்று தனக்குள் விளேயாட்டாகக் கூறிக்கொண்டே அவன் சிரித்தான்.

இலேயுதிர் காலத்தின் பிற்பகுதியில், நல்ல மழை பெய்த ஒரு இரவில், அன்தொன்யூக்கும் அவனது ஏழு கூட்டாளிகளும் சிக்கினர்கள். மைதான-வில்லாவிலிருந்த பண்ணே ஒன்றில், பணக்கார ஜெர்மானிய விவசாயியின் வீட்டுத் திருமணத்தில், அன்தொன்யூக் பிடிபட்டான். க்ரோவின்ஸ்காயா கம்யூனேச் சேர்ந்த விவசாயி கள்தான் அவனேப் பிடித்தார்கள்.

அந்தத் திருமணத்துக்கு இத்தகைய விருந் தாளிகள் வந்திருந்த சேதி உள்ளூர்ப் பெண்களது பேச்சால் பரவிவிட்டது. உடனே, பன்னிரண்டு இளங் கம்யூனிஸ்டுகளும் ஒன்றுகூடி, கிடைத்த ஆயுதங்களே எடுத்துக் கொண்டு, வண்டியில் ஏறினர். ஒரு தூதனேப் பெரிஸ்தோவுக்கு விரை யும்படி அனுப்பிய பின்பே, அவர்கள் மைதான்-வில்லாவுக்குப் போனர்கள். ஸெமாக்கியில் அந்தத் தூதன், பிலாத்தோவின் படைப்பகுதியைத் தற்செயலாகச் சந்தித்தான். உடனே, பிலாத் தோவும் அவனது செஞ்சேனே வீரர்களும் கொள் ளேக்காரனேப் பிடிக்க விரைந்தனர்.

இளங் கம்யூன்காரர்கள் பண்ணையைச்சூழ்ந்து கொண்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அன்தொன்யூக் கோஷ்டியினரும் துப்பாக்கிகளைச் செயல்படுத்தினர். பண்ணையின் பக்கவீட்டில் தம்மைப் பதுக்கிக்கொண்டு, தமது துப்பாக்கிகளின் வீச்சுக்குள் வந்தோரையெல்லாம் சுட்டார்கள். அவர்கள் பாய்ந்து முன்னேற முயன்றனர். ஆனால் முடியவில்லை; ஒருவனை இழந்துவிட்டு, வீட்டுக்குள் பின்வாங்க வேண்டியதாயிற்று. இதைப் போன்ற பல நெருக்கடிகளில் அன்தொன்யூக் முன்னால் சிக்கியிருக்கிறான். ஆனால் அப்பொழுதெல்லாம் இருளின் சகாயத்துடன், எறிகுண்டுகளின் உதவியுடன் அவன் போராடித் தப்பியிருக்கிறான். இப்பொழுதும், அவன் அம்மாதிரி தப்பியிருப்பான்; ஏனெனில் இளங் கம்யூனிஸ்டுகள் தம்மில் இருவரை இழந்துவிட்டனர். ஆனால் தீர்மானகரமான தருணத்தில், பிலாத்தோவ் வந்து சேர்ந்தான். தன் வித்தை யொன்றும் பலிக்காதென்பதை அன்தொன்யூக் உணர்ந்தான். ஆனால் அவன், அக்கட்டிடத்திலிருந்த ஜன்னல்கள் எல்லாவற்றின் வழியாகவும் மறுநாள் உதயம்வரை சுட்டுக் கொண்டேயிருந்தான். கடைசியில், பொழுது புலர்ந்ததும், அவன் பிடிபட்டான். அந்த எழுவரில் ஒருவன்கூடச் சரண் அடையவில்லை. இந்த நச்சுப் பிறவிகளை ஒழிக்கும் பணியில், நால்வர் உயிரிழக்க நேர்ந்தது. அவர்களில் மூவர், புதிதாக அமைந்த க்ரோலின்ஸ்காயா இளங் கம்யூனிஸ்ட் குழுவைச் சேர்ந்தவர்கள்.

பிரதேசத் துருப்புக்களின் இலேயுதிர் காலப் படை நடமாட்டத்துக்கு வரும்படி, கர்ச்சாகினது பட்டாலியனுக்கு அழைப்பு வந்தது. டிவிஷனின் முகாமுக்குப் போகவேண்டும்; நாற்பது கிலோ மீட்டர் தூரம்; கொட்டும் மழை; எனினும் பட்டாலியன் ஒரேநாளில் இந்தத் தூரத்தைக் கடந்தது. அதிகாலேயில் கிளம்பிய அவர்கள் இரவு நெடுநேரமானபின், முகாமை அடைந்தனர். பட்டாலியன் தலேவனுகிய கூஸேவ், கமிஸார் கர்ச்சாகின் ஆகிய இருவரும் குதிரைமீது சென்றனர். எண்ணூறு பயிற்சியாளரும் ராணுவ விடுதியை அடைந்த பொழுது மிகவும் களேத்திருந்தனர். அவர்கள் உடனே உறங்கிவிட்டனர். மறுநாள் காலேயிலேயே, படை நடமாட்டம் தொடங்கவேண்டும்; டிவிஷனின் தலேமை, பட்டாலியனுக்குத் தகவல் அனுப்புவதில் தாமதித்துவிட்டது. பட்டாளத்து உடுப்பு அணிந்து, துப்பாக்கிகளே ஏற்றிக்கொண்டு, கூஸேவின் படை சோதனேக்காக அணிவகுத்து நின்றபொழுது, அது முற்றிலும் வேறு தினுசாகக் காட்சி தந்தது. இந்த இளேஞருக்குப் பயிற்சி அளிப்பதில், கூஸேவும் கர்ச்சாகினும் மிகுந்த நேரத்தைச் செலவிட்டு ரொம்பக் கஷ்டப்பட்டிருந்தனர். அவர்கள், தமது யூனிட் சிறப்பாகத் தேர்ச்சி அடையுமென்ற நம்பிக்கையுடன் இருந்தனர். மேலதிகாரிகளின் சோதனேயெல்லாம்முடிந்தபின், பட்டாலியன் தன் திறமையெல்லாம் காட்டிய பின், ஒருவன் பாவெல் பக்கம் திரும்பினுன்.

அவனது முகம் உப்பி இருந்தாலும், அழகாயிருந்தது.

''நீங்கள் ஏன் குதிரைமீது அமர்ந்திருக்கிறீர்கள்? நமது ராணுவப் பயிற்சி பட்டாலியன்களின் தலைவர்களும் கமிஸார்களும் குதிரை மீது அமர்வதற்கு உரிமை பெறவில்லை. உன் குதிரையை லாயத்துக்கு அனுப்பிவிட்டுப் படை நடமாட்டத்தில் பங்குகொள்'' என்று அவன் வெடுக்கென்று பேசினான்.

தான் குதிரையிலிருந்து இறங்கினால், படை நடமாட்டத்தில் பங்குகொள்ள முடியாதென்பதைப் பாவெல் அறிவான்; ஏனெனில், ஒரு கிலோ மீட்டர் தூரம்கூட அவனால் நடக்க முடியாது. ஆனால், தோல் வார்களால் அலங்காரம் செய்து கொண்டு நின்ற இந்த உரக்கப் பேசும் பிலுக்கனிடம் அவன் எப்படி நிலைமையை விளக்குவான்?

''நான் படை நடமாட்டத்தில் நடந்து பங்கெடுக்க முடியாது.''

''ஏன் முடியாது?''

ஏதாவது ஒரு விளக்கத்தைக் கொடுத்தாக வேண்டுமென்பதை உணர்ந்த பாவெல், மெலிந்த குரலில் கூறினான்:

''என் கால்கள் வீங்கியிருக்கின்றன. ஒரு வாரம் முழுமையும் நடக்கவும் ஓடவும் என்னால் முடியாது. ஆனால் நீங்கள் யார் என்பதை அறியலாமா, தோழரே?''

''முதலாவதாக நான் உங்களது ரெஜிமெண்டு காரியாலயத்தின் தலைமை அதிகாரி. இரண்

டாவதாக, அந்தக் குதிரையிலிருந்து இறங்கும் படி நான் உங்களுக்கு மீண்டும் உத்திரவிடுகிறேன். நீங்கள் நோயாளியென்றல் ராணுவத்தில் இருக்கக் கூடாது.''

இந்தப் பேச்சைக் கேட்டபொழுது, பாவெலுக்குத் தன் முகத்தில் சவுக்காலடிப்பது போலவிருந்தது. அவன் நடுநடுங்கிய கரங்களால் கடிவாளத்தைச் சுண்டி இழுத்தான். ஆனல் கூஸேவின் வலிய கரம் பாவெலைக் கட்டுப்படுத்தியது. ஒரு சில விநாடிகள், பாவெல் மனதில் புண்பட்ட பெருமையுணர்ச்சியும் தன்னடக்க உணர்ச்சியும் ஒன்றோடொன்று போராடின. ஆனல் அவன் ஒரு யூனிட்டிலிருந்து இன்னொரு யூனிட்டுக்கு நிச்சிந்தையாகத் தாவிக் கொண்டிருந்த செஞ்சேனை வீரன் அல்ல. அவன் இப்பொழுது ஒரு படைக்குக் கமிஸாராக இருந்தான். அவனது படை வீரர்கள் அவனுக்குப் பின்னல் நின்று கொண்டிருந்தனர். அவன் உத்திரவை மீறினல், தன் சிப்பாய்களுக்குக் கட்டுப்பாட்டைப் பாதுகாக்கும் உதாரணமாக விளங்க முடியுமா? இந்த மண்டைக் கனம் பிடித்த கழுதைக்காகவா, அவன் தன் படையை உருவாக்கினன்? இல்லை. இவ்வாறு சிந்தித்த பாவெல் தன்கால்களை மிதியடியிலிருந்து எடுத்து, இறங்கினன்; தன் உடல் மூட்டுகளின் வேதனை மிகுந்த வலியை அடக்கிக்கொண்டே, அணிவகுப்பின் வலது புறத்தை நோக்கி நடந்தான்.

எந்த வருஷத்திலும் இல்லாத வகையில், பருவநிலை பல நாட்களுக்கு நேர்த்தியாகவிருந்

தது. படை நடமாட்டமும் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. ஐந்தாவது நாளில், துருப்புக்கள் ஷெப்பெத்தோவ்க்காவின் அருகில் போயச் சேர்ந்தன. இந்த நகரத்தில்தான், படை நடமாட்டப் பயிற்சி முடிவடையவிருந்தது. கிளிமின்தோவிச்சி கிராமத்திலிருந்து ரயில்வே நிலையத்தைக் கைப்பற்றும் பொறுப்பு பெரிஸ்தோவ் பட்டாலியனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

பாவெலுக்கு இது சொந்த ஊராயிருந்தபடியால், அவன் கூஸேவுக்கு வழிகளையெல்லாம் காட்டி உதவினுன். பெரிஸ்தோவ் பட்டாலியன் இரு பகுதிகளாகப் பிரிந்து சுற்றி வளைத்துச் சென்று ''பகைவர்'' அணிக்குப் பின்னுல் சேர்ந்து, ரயில் நிலையக் கட்டிடத்தை உரத்த கோஷங்களுடன் கைப்பற்றியது. இந்த நடவடிக்கை வெகுவாகப் பாராட்டப்பட்டது. பெரிஸ்தோவ் சிப்பாய்கள் ஸ்டேஷனை வசப்படுத்திக்கொள்ள, அதைப் பாதுகாத்து நின்ற படை, காட்டுக்குள் பின்வாங்கியது; இதனுல் அது தன் படையில் சரி பாதியைப் ''போரில் இழந்து விட்டாதாகக்'' கருதப்பட்டது.

பாவெல், பெரிஸ்தோவ் பட்டாலியனின் ஒரு பாதிக்குத் தலைமை தாங்கினுன். அவன் தன் வீரர்களைப் பரவலாக அணிவகுக்கும்படி உத்திர விட்டு விட்டு, மூன்ருவது கம்பெனியின் தலைவனேடும் அரசியல் தலைவனேடும் வீதியின் நடுவில் நின்றுகொண்டிருந்தபொழுது, ஒரு செஞ்சேனை வீரன் அவனிடம் ஓடிவந்தான்.

''தோழர் கமிஸார், எந்திரத் துப்பாக்கிச்

சிப்பாய்கள், ரயில்—ரஸ்தா சந்திப்புகளை வசப் படுத்திக் கொண்டிருக்கிறார்களாவென்று பட்டா லியன் தலைவர் அறிய விரும்புகிறார். கமிஷன் இந்தப் பக்கம் வருகிறது'' என்று அவன் கூறினான்.

பாவெலும் அவனுடன் இருந்த அதிகாரி களும் ரஸ்தா—ரயில் சந்திப்புகளில் ஒன்றை நோக்கிச் சென்றனர். அங்கு ரெஜிமெண்டு தலை வனும் அவனுடைய உதவியாளரும் இருந்தனர். நடவடிக்கையின் வெற்றியை முன்னிட்டு கூஸேவ் பாராட்டப்பட்டான். ''தோல்வியுற்ற'' படை யின் பிரதிநிதிகளது முகத்தில் அசடு வழிந்தது. அவர்கள் தம்மை நியாயப்படுத்திக் கொள் வதற்குக்கூட முயற்சிக்கவில்லை.

''இதன் பெருமை என்னைச் சேராது. கர்ச் சாகின்தான் எங்களுக்கு வழிகாட்டினான். அவன் இந்தப் பக்கத்தைச் சேர்ந்தவன்'' என்றான் கூஸேவ். குதிரைமீது இருந்த காரியாலயத்தின் தலைமை அதிகாரி பாவெலிடம் சென்று, இகழ்ச்சி யாகப் பேசினான்:

''தோழரே! நன்றாக ஓடினீர் போலிருக்கிறது! பெருமைக்காகத்தான் குதிரை மீது வந்தீர் களா? அப்படித் தானே?'' அவன் தொடர்ந்து பேசுவதற்கு இருந்தான். ஆனால் பாவெலின் முகத் தைக் கண்டவுடன், நிறுத்திவிட்டான். ''அவன் பெயர் உங்களுக்குத் தெரியுமா?'' என்று பாவெல், மேலதிகாரிகள் போனபின், கூஸேவைக் கேட்டான்.

கூஸேவ், அவனது தோளில் தட்டிக் கொடுத் தான்.

''அந்த அற்பப் பவுஷனைப் பொருட்படுத்தாதே. அவன் பெயர் சுஷானின். பழைய ராணுவத்தில் அதிகாரியாயிருந்தவன் என்று நினைக்கிறேன்'' என்று கூஸேவ் கூறினன்.

அந்தப் பெயரை எங்கே கேள்விப்பட்டான் என்பதை நினைவூட்டிக் கொள்வதற்கு, அன்று பாவெல் தன் மூளையைப் பலதடவைகள் சிரமப் படுத்திப் பார்த்தான்; ஆனல் ஞாபகம் வரவில்லை.

படை நடமாட்டப் பயிற்சிகள் முடிவடைந்தன. உயர்வான பாராட்டுதலுக்கு உரியதான பட்டாலியன் பெரிஸ்தோவுக்குச் சென்றது. உடல் பலம் முழுவதையும் இழந்த பாவெல் தன் தாயுடன் இரண்டு நாட்கள் தங்கியிருந்தான். இரண்டு நாட்கள், அவன் தினசரி பன்னிரண்டு மணிநேரம் தூங்கினன். மூன்ருவது நாள், அவன் ஆர்த்தியோமைப் பார்க்க ரயில்வே வார்க்ஷாப்புக்குச் சென்ருன். ஆழப்பதிந்த அழுக்கு நிறைந்தும் புகையால் கறுத்தும் இருந்த இந்தக் கட்டிடத்தில் அவனுக்கு மனநிறைவு ஏற்பட்டது. அவன் மிகுந்த ஆவலுடன் நிலக்கரிப் புகையை மூக்கால் நன்கு இழுத்துவிட்டான். உண்மையில், அவனுக்கு உரிய இடம் இதுவே. இங்கு இருப்பதைத்தான் அவனும் விரும்பினன். மதிப்பிட முடியாத அளவுக்குத் தன் பாசத்துக்குப் பாத்திரமான ஏதோ ஒன்றை இழந்துவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. அவன் ஒரு எஞ்சின் விசிலைக் கேட்டுப் பல மாதங்களாகி விட்டன. கரையில் நீண்ட காலம்

தங்கிவிட்ட மாலுமி, எல்லை காணமுடியாத கடல் விரிவை நாடிய ஏங்குவதைப் போல, ஸ்டோக்கராகவும் எலெக்டிரிஷியனுகவும் ஒரு காலத்தில் வேலை பார்த்த பாவெல், இந்தப் பழக்கமான சுற்றுச்சார்புக்காக ஏங்கினுன். இந்த உணர்ச்சியை அடக்குவதற்கு அவனுக்கு நீண்ட நேரமாயிற்று. அவன் தன் அண்ணனிடம் அதிகம் பேசவில்லை. ஆர்த்தியோம் இப்பொழுது சிறிய உலையில் வேலை செய்தான். அவனது புருவத்தில் ஒரு புதிய சுருக்கம் விழுந்திருந்ததைப் பாவெல் கவனித்தான். ஆர்த்தியோம் இப்பொழுதுஇரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனுகி விட்டான். அவனுக்கு வாழ்க்கை கடினமாயிருந்ததென்பது நிதர்சனமாகத் தெரிந்தது. அவன் புலம்பவில்லை; ஆனுல் பாவெலுக்கு விஷயம் விளங்கியது.

அவர்கள் இருவரும் அடுத்தடுத்து நின்று ஓரிரண்டு மணி நேரம் வேலை செய்தனர். அதன் பின் அவர்கள் பிரிந்தனர்.

இருப்புப்பாதை சாலையை வெட்டுமிடத்தில், பாவெல் தன் குதிரையை இழுத்து நிறுத்தி, நீண்டநேரம் ஸ்டேஷனை உற்றுப் பார்த்தான். அதன் பின், அவன் தன் குதிரையைத் தூண்டிவிட்டான்; காட்டு வழியே சென்ற சாலையில் விரைந்தான்.

இப்பொழுதெல்லாம் காட்டுப் பாதைகளில் எத்தகைய ஆபத்தும் இல்லை. எல்லாக் கொள்ளைக்காரர்களும்—பெருங்கூட்டங்களும் சிறு கூட்டங்களும் — போல்ஷெவிக்குகளால் ஒழிக்கப்பட்டு

விட்டனர். இந்தப் பகுதியில் இருந்த கிராம மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர்.

பாவெல் பெரிஸ்தோவைச் சேர்ந்தபொழுது, சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். அவனைச் சந்திப்பதற்காக, லீதா வட்டாரக் கமிட்டி வீட்டின் முகமண்டபத்துக்கு ஓடிவந்தாள்.

''வருக! வருக! நீ இல்லாமல் எங்களுக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்தது!'' என்று அவள் அன்பான புன்னகை தவழக் கூறினாள். அவள் தன்கையால் அவனை அணைத்துக்கொண்டாள். இருவரும் வீட்டுக்குள் சென்றனர்.

''ஷேன்யா எங்கே?'' என்று பாவெல், தன் கோட்டைக் கழற்றிக்கொண்டே கேட்டான்.

''எனக்குத் தெரியாது'' என்று அவள் வேண்டா வெறுப்புடன் விடைதந்தாள். ''ஆம், ஆம். இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. உனக்குப் பதிலாகச் சமூக சாஸ்திர வகுப்பை எடுக்கப் பள்ளிக்கூடம் போவேன் என்று காலையில் கூறினான். அது உன் வேலை அல்லவாம், அவனுக்கேற்ற வேலையென்றும் கூறினான்'' என்று அவள் மேலும் கூறினாள்.

பாவெல் ஆச்சரியமடைந்தான்; மனங்கலங்கினான். அவனுக்கு ஷேன்யாவைக் கண்டால் பிடிப்பதேயில்லை. ''இவன் ஸ்கூலில் ஏதாவது குழப்பம் செய்து தொலைக்கப் போகிறானே!'' என்று எண்ணி மனம் நொந்தான்.

''அவன் எப்படியாவது ஒழியட்டும்! ஏதாவது நல்ல சேதி இருந்தால் சொல். க்ருஷேவ்க்கா

வுக்குப் போனுயா? அங்கு இலேஞர்கள் எப்படி இருக்கிருர்கள்?'' என்று அவன் லீதாவை வின விஞன்.

லீதா சேதியெல்லாம் கூறியபொழுது, அவன் ஸோபாவில் உட்கார்ந்து வேதனே தந்த கால்களே நீட்டி, அவற்றுக்கு ஓய்வு கொடுத்தான்.

''நேற்று முன்தினம், ரக்கீத்திஞ கட்சியின் பரீட்சார்த்த அங்கத்தினராகச் சேர்த்துக் கொள் ளப்பட்டாள். இதன் மூலம், பொதுாபித்ஸியின் கம்ஸமோல் குழுவின் பலம் அதிகரிக்கிறது. ரக்கீத் திஞ நல்லவள், எனக்கு அவளேப் பிடித்திருக் கிறது. பார்த்தாயா? ஆசிரியர்கள் இடையே திடீர் மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அவர் களிடையே சிலர் முழுமையாக நம் பக்கத்துக்கு வந்து கொண்டு இருக்கிருர்கள்'' என்று லீதா தகவல்களே எடுத்துரைத்தாள்.

வட்டாரக் கட்சிக் கமிட்டியின் புதிய காரிய தரிசியான வீச்சிக்கோவும் பாவெலும் அடிக்கடி மாலே நேரங்களில் ஸிஸீத்ஸினது வீட்டில் சந்தித் தனர். மூவரும் பெரிய மேஜைக்கு முன் அமர்ந்து, மறுநாள் அதிகாலே வரையில் படித்தனர்.

ஸிஸீத்ஸினின் மனேவியும் சகோதரியும் படுக் கையறையில் உறங்குவர்; அந்த அறையின் கதவு நன்ருகச் சாத்தப்பட்டிருக்கும். இவர்கள் மூவ ரும் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டே, மெலிந்த குரலில் விவாதிப்பார்கள். ஸிஸீத்ஸிஞல் இரவில்தான் படிக்க முடிந்தது. எனினும்,

பாவெல் அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று வந்ததால், அவனது தோழர்கள் அவனை முந்திக் கொண்டு போனார்கள். இதைக் கண்டு அவன் மனம் நொந்தான்.

ஒருநாள், பொதுஜபித்ஸியிலிருந்து ஒரு தூதன் வந்தான். முந்திய இரவில், கிரீஷா கொரொ வோதிக்கோ கொலை செய்யப்பட்டு விட்டான் என்றும் கொலைகாரர் யாரென்று தெரியவில்லை யென்றும் அவன் தகவல் கொண்டுவந்தான். உடனே பாவெல் தன் கால்வலியையும் மறந்துவிட்டு, நிர்வாகக் கமிட்டியின் குதிரை லாயத்துக்கு ஓடினான். அவசர அவசரமாக, ஒரு குதிரைமீது சேணத்தைப் போட்டு ஏறினான்; எல்லையை நோக்கி விரைந்தான்.

கிராம சோவியத் அலுவலகத்தில் ஒரு மேஜைமீது கிரீஷா பசுங்கிளைகளிடையே கிடந்தான். அவன் மீது செம்பதாகையால் போர்த்தியிருந்தது. ஒரு எல்லைப் படை வீரனும் ஒரு இளங் கம்யூனிஸ்டும் வாசலில் காவல் காத்து நின்றனர். அதிகாரிகள் வரும்வரை, ஒருவரையும் அனுமதிக்க முடியாதென்று கூறி அவர்கள் எல்லோரையும் வெளியில் நிறுத்திவிட்டனர். பாவெல் வீட்டிற்குள் நுழைந்தான். மேஜையண்டை சென்றான்; பதாகையைத் தள்ளினான்.

கிரீஷாவின் முகம் வெளுத்து இருந்தது; கண்கள் அகன்று மரணவேதனையில் குத்திட்டு இருந்தன. அவனது தலை ஒரு பக்கமாகச் சாய்ந்திருந்

தது. தலையின் பின்புறத்தில், கூர்மையான ஆயுதத்தால் வெட்டப்பட்டிருந்த இடத்தை ஒரு மரக்கொப்பு மூடியிருந்தது.

இந்த இளைஞனது உயிரைப் பறித்தது யார்? மில் தொழிலாளியாகவிருந்து, பின் ஏழை விவசாயிகள் கமிட்டி அங்கத்தினராகத் தொண்டாற்றிப் புரட்சிக்காகப் போராடி உயிர் நீத்தவரின் மகனை கிரீஷாவைக் கொன்றது யார்? விதவைத் தாயாரின் ஒரே மகனை இவன் உயிரைக் கொள்ளை கொண்டது யார்?

மகனது மரணத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில், தாயார் நோயில் விழுந்து விட்டாள். படுக்கையில் கிடந்த தாய்க்கு அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆறுதல் வார்த்தை கூறினர். அவளது மகனோ, அசைவு இல்லாமல், சில்லிட்டுப் போய்க் கிடந்தான். அவனது அகால மரணத்தின் ரகசியத்தை எவருக்கும் சொல்ல முடியாமல் கிடந்தான்.

கிரீஷாவின் கொலையைக் கண்டு, கிராமம் முழுவதும் கொதித்தெழுந்தது. இளங் கம்யூனிஸ்டு தலைவனாகவும், ஏழை விவசாயிகளின் நண்பனாகவும் விளங்கிய கிரீஷாவுக்குக் கிராமத்தில் விரோதிகளைவிட நண்பர்களே அதிகம் என்பது நன்கு புலனாயிற்று.

கொலைச் செய்தியால் நிலைகுலைந்த ரக்கீத்தினா தன் அறையில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழுதாள். பாவெல் உள்ளே வந்தபொழுது,

அவள் நிமிர்ந்து பார்க்கவுமில்லை. பாவெல் மிகுந்த விசனத்துடன் ஒரு நாற்காலியில் விழுந்தான்.

''கிரீஷாவைக் கொன்றது யாராயிருக்க லாம்?'' என்று கம்மிய குரலில் வினவினான்.

''அந்த மில்லைச் சேர்ந்த கூட்டமாகத் தானிருக்க வேண்டும். அந்தக் கள்ள வியாபாரி களுக்கு கிரீஷா பெரிய இடைஞ்சலாயிருந்தான்.''

கிரீஷாவின் சவ அடக்கத்துக்கு இரண்டு கிராமத்து மக்கள் திரண்டு வந்தனர். பாவெல் தன் படையுடன் வந்தான். இளங் கம்யூனிஸ்டு கள் அனைவரும் தமது தோழருக்கு இறுதி மரியா தை தெரிவிக்கக் கூடினர். கிராம சோவியத்துக்கு முன்னால் இருந்த சதுக்கத்தில், கவ்ரீலோவ் திரட் டிய எல்லைப் படை வீரர்கள், இருநூற்றைம்பது பேர் அணிவகுத்தனர். சவ அடக்க இசையின் சோகமான சுரங்களுடன், செங்கொடித் துணி யால் போர்த்தப்பட்ட சவப்பெட்டி வெளியில் கொண்டுவரப்பட்டு, சதுக்கத்தில் வைக்கப்பட் டது. அங்கு, உள் நாட்டுப் போரில் உயிர் நீத்த போல்ஷெவிக் கொரில்லா வீரர்களின் சவக் குழிக்குப்பக்கத்தில் ஒரு புதியசவக்குழி தோண்டப் பட்டிருந்தது.

கிரீஷா யார்யார் நலன்களுக்காக உறுதியா கப் பணியாற்றினானோ, அவர்களெல்லாம் அவனது மரணத்தால் ஒன்றுபட்டனர். இளம் விவசாயத் தொழிலாளிகளும் ஏழை விவசாயிகளும் கம்ஸ மோலை ஆதரிப்போமென்று சபதம் எடுத்தனர்.

சவ அடக்கக் கூட்டத்தில் பேசியவரெல்லோரும், கொலைகாரர்களைப் பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று வெஞ்சினத்துடன் கோரினர்கள். கிரீஷாவின் சவக்குழிக்குப் பக்கத்தில், ஜனங்களின் முன்னிலையில் கொலைகாரர்கள் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோரினர்கள்.

மூன்று ஆவர்த்தி குண்டுகள் வெடித்தன. புதிய பசுங்கிளைகள் சவக்குழியின் மீது வைக்கப்பட்டன. அன்று மாலை, அந்த ஊர்க்குழு, ரக்கீத்தினைவைப் புதிய காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தது. கொலைகாரர்களைப் பற்றி உளவு அறிந்து, அவர்களை வேட்டையாடிக் கொண்டிருப்பதாக எல்லைக் காவலர்களிடமிருந்து பாவெலுக்குச் சேதி கிடைத்தது.

ஒருவாரம் சென்றபின், வட்டார சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரஸ், டவுன் தியேட்டரில் கூடியபொழுது, லிஸீத்ஸின், நிதானமான வெற்றி உணர்வோடு பேசினன்:

''தோழர்களே, கடந்த வருஷத்தில் நாம் நிறையச் சாதித்திருக்கிறோம் என்பதை இந்தக் காங்கிரஸில் எடுத்துரைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வட்டாரத்தில் சோவியத் அதிகாரம் உறுதியாக நிலைகொண்டுவிட்டது. கொள்ளைக்காரர்களைக் கருவறுத்தாய்விட்டது. கள்ள வாணிபத்துக்கு அநேகமாக முடிவு கட்டிவிட்டோம். கிராமங்களில் ஏழை விவசாயிகளின் வலுமிக்க ஸ்தாபனங்கள் தோன்றியுள்ளன. கம்ஸமோல் ஸ்தாபனம் முன்னைவிடப் பத்துமடங்கு

அதிக பலம் பெற்றுள்ளது. கட்சி ஸ்தாபனமும் விரிவடைந்துள்ளது. பொதூரபித்ஸியில் கடைசியாகப் பணக்கார விவசாயிகளது சதி, நமது தோழர் கிரீஷா கொரொவோதிக்கோவின் உயிரைப் பலிவாங்கியது. அந்தச் சதியைச் செய்தவர்களைக் கண்டுபிடித்துவிட்டோம். கொலைகாரர்களான மில்காரனும் அவனது மருமகனும் கைதாகிவிட்டனர்; இங்கே வரவிருக்கும் மாகாண நீதிபதிகள் முன்சில நாட்களில் விசாரணை தொடங்கும். இந்தப் பயங்கரக் கொள்ளைக்காரர்களுக்கு அதிகப்பட்ச தண்டனை கொடுக்கவேண்டுமென்று கோரி கிராமங்களிலிருந்து பல பிரதிநிதி கோஷ்டிகள் வற்புறுத்தியுள்ளன''....

அதை அங்கீகரித்து எழுந்த கோஷ ஒலி ஹாலையே அதிரச் செய்தது.

''கேளுங்கள்! கேளுங்கள்! சோவியத் ஆட்சியின் விரோதிகள் ஒழிக!'' என்ற கோஷம் கூரையைப் பிளந்தது.

லீதா புறக்கதவு ஒன்றில் தோன்றினாள். அவள் பாவெலைச் சைகை செய்த அழைத்தாள்.

பாவெல் நடைக்கூடத்திற்கு வந்தவுடன், ஒரு கவரைக் கொடுத்தாள். அதன்மீது 'அவசரம்' என்று குறித்திருந்தது. அவன் அதைத் திறந்து படித்தான்:

''கம்ஸமோலின் பெரிஸ்தோவ் வட்டாரக் கமிட்டிக்கு. நகல்: கட்சியின் வட்டாரக் கமிட்டிக்கு. பொறுப்பான கம்ஸமோல் வேலைக்கு நியமிப்பதற்காகத் தோழர் கர்ச்சாகின் வட்டாரக்

கமிட்டியிலிருந்து மாகாணக் கமிட்டிக்கு அழைத்துக்கொள்வதென்று மாகாணக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.''

கடந்த வருஷத்தில் வேலைசெய்த வட்டாரத் திடம், பாவெல் விடைபெற்றுக்கொண்டான். அவன் கிளம்புவதற்குமுன், கட்சியின் வட்டாரக் கமிட்டி கடைசியாக நடத்திய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இரண்டு விஷயங்கள் இருந்தன. அவையாவன: (1) தோழர் கர்ச்சாகினைக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினராக மாற்றிக்கொள்வது; (2) கம்ஸமோல் வட்டாரக் கமிட்டிக் காரிய தரிசிப் பொறுப்பிலிருந்து அவனை விடுவிப்பதுடன் அவனைப்பற்றிய விபரங்களை அறிவிப்பது.

பாவெல் பிரிந்தபொழுது, லிஸீத்ஸினும் லீதாவும் அவனது கரத்தைப் பிசைந்து விட்டனர்; அவனை அன்போடு தழுவிக்கொண்டனர். அவனது குதிரை, அலுவலகத்து வெளி முற்றத்திலிருந்து சாலையில் திரும்பியவுடன், பன்னிரண்டு கைத்துப் பாக்கிகளிலிருந்து குண்டுகள் வெடித்து, அவனுக்கு மரியாதை செய்தன.

அத்தியாயம் ஐந்து

மின்சார மோட்டர் புலம்பல் செய்தவண்ணம் புந்துகிலேயேவ்ஸ்க்காயா தெருச் சரிவின் மீது டிராம் வண்டி கஷ்டப்பட்டு ஊர்ந்து சென்றது. நாடகக் கொட்டகைக்கு முன், டிராம்

நின்றவுடன் சில இளைஞர்கள் இறங்கினார்கள். அது தொடர்ந்து குன்றுச் சரிவில் ஏறிச்சென்றது.

''விரைவாக நடப்போம். இல்லாவிட்டால், காலதாமதமாகிவிடும்'' என்று கூறிப் பன்கிராத்தவ் இதரரை வேகப்படுத்தினான்.

தியேட்டர் வாசலில், ஓக்குனேவ் பன்கிராத்தவுடன் சேர்ந்து கொண்டான்.

''மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், இதே மாதிரியான சூழ்நிலையில் நாம் இங்கு வந்தோம், நினைவில் இருக்கிறதா? அப்பொழுதுதான், 'தொழிலாளரின் எதிர்த்தரப்பு' என்ற குழுவினருடன் துபாவா நம்முடன் திரும்ப வந்து சேர்ந்து கொண்டான். நல்ல கூட்டம்! மீண்டும் இன்று இரவு நாம் அவனுடன் மல்லுக்கு நிற்க வேண்டியிருக்கிறது!''

அவர்கள் தமது அனுமதிச் சீட்டுகளைக் காட்டிவிட்டு உள்ளே நுழைந்தபின்பே, பன்கிராத்தவ் பதிலளித்தான்.

''ஆம். இதே இடத்தில், அதே சரித்திரம் மீண்டும் நிகழவிருக்கிறது'' என்றான்.

உள்ளே யிருந்தவர் ''உஸ்'' ஸென்று ஒலி செய்யவே, அவர்கள் பேச்சை நிறுத்திக் கொண்டனர். மாநாட்டின் மாலைக் கூட்டம் முன்பே தொடங்கிவிட்டது. அவர்கள் முதலில் கிடைத்த இருக்கைகளில் அமர வேண்டியதாயிற்று. ஒரு மங்கை, மேடையிலிருந்து உரை நிகழ்த்திக் கொண்டிருந்தாள்.

''சரியான நேரத்தில் வந்து விட்டோம். சத்தம் செய்யாமல் உட்கார். உன் அருமை மனைவி

பேசுவதைக் கேள்'' என்று பன்கிராத்தவ் ஒக்குனேவின் விலாவில் இலேசாகக் குத்திக் கொண்டே 'குசு முசு' வென்று கூறினுன்.

''....இந்த விவாதத்தில் நாம் மிகுந்த நேரத்தையும் சக்தியையும் செலவழித்திருக்கிறோமென்பது மெய். ஆனுல் இதிலிருந்து நாம் நிறையக் கற்றுக் கொண்டிருக்கிறோமென்பது என் கருத்து. இன்று, நமது ஸ்தாபனத்தில், த்ரோத்ஸ்கியைப்* பின்பற்றுவோர் தோற்றுவிட்டதைக் கண்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அவர்கள் தமது வாதத்தை எடுத்துரைப்பதற்குப் போதுமான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று புகார் சொல்ல முடியாது. அதற்கு மாறுக, அவர்களது கருத்தோட்டத்தை விவரிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கொடுத்தோம். உண்மையில், நாம் கொடுத்த சுதந்திரத்தை அவர்கள் துர்வினியோகம் செய்திருக்கிறுர்கள். பல சந்தர்ப்பங்களில், கட்சிக் கட்டுப்பாட்டை அப்பட்டமாக மீறியிருக்கிறுர்கள்.''

தால்யா ஆவேசத்துடன் பேசினுள். அவள்

---

*த்ரோத்ஸ்கிய், லே. த. (பிரன்ஷ்டைன்) (1879-1940)—லெனினீயத்தின்கொடும்விரோதி, சோஷலிஸப் புரட்சி பற்றிய எல்லாக் கொள்கை, நடைமுறைப் பிரச்சினைகளிலும் வி. இ. லெனினை எதிர்த்து கடுமையாகப் போரிட்டான்; அக்டோபர் புரட்சிக்குச் சற்று முன்னுல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த அவன் பிளவுபடுத்தும் வேலையைத் தீவிரமாகத் தொடர்ந்தான்.

திரும்பத் திரும்பக் கண்களை மறைத்த மயிர்ச் சுருளைப் பின்னால் தள்ளிய விதத்திலேயே, அந்த உணர்ச்சி மிகுதியை உணர முடிந்தது.

''இங்குப் பல வட்டாரங்களைச் சேர்ந்த தோழர்கள் பேசினார்கள். அவர்கள் அனைவரும் த்ரோத்ஸ்கீயவாதிகளின் முறைகளைப்பற்றிப் பல விஷயங்களைச் சொன்னார்கள். இந்த மகாநாட்டில், கணிசமான அளவுக்கு த்ரோத்ஸ்கீயவாதிகள் வந்திருக்கின்றனர். இந்த நகரக் கட்சி மாநாட்டில் தங்களது கருத்துக்களைக் கூறுவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்காகவே வட்டார ஸ்தானங்கள் அவர்களை அனுப்பியுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தாவிட்டால், அது நமது குற்றம் அல்ல. வட்டாரங்களிலும் குழுக்களிலும் அவர்களுக்குப் பூர்ணமான தோல்வி ஏற்பட்டதிலிருந்து ஏதாவது படித்துக் கொண்டிருக்கிறார்களென்பது வெளிப்படை. நேற்றுக்கூடச் சொல்லி வந்ததை இன்று இந்த மாநாட்டில் எடுத்துச் சொல்ல அவர்களால் முடியவில்லை.''

இந்த இடத்தில், வலதுகை மூலையிலிருந்து வந்த ஒரு கடுமையான குரல் தால்யா பேச்சில் குறுக்கிட்டது.

''நாங்கள் இன்னும் சொல்லுவோம்!''

தால்யா குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினாள்:

''சரி சரி, துபாவா. இப்பொழுது இங்கு வந்து பேசு. நாங்கள் கேட்கிறோம்.''

துபாவா அவளை வெறித்துப் பார்த்தான்; அவனது இதழ்கள் ஆத்திரத்தால் கோணின.

''நேரம் வரும் பொழுது பேசுவோம்'' என்று அவன் கத்தினன். இரண்டு நாட்களுக்கு முன், அவனது வட்டாரத்திலேயே ஏற்பட்ட படுதோல்வியை நினைத்துக்கொண்டான்.

கூட்டம் சலசலத்தது. பன்கிராத்தவால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''மீண்டும் கட்சியை அசைத்துப் பார்க்க முயல்கிருயா?'' என்று கத்தினன்.

அந்தக் குரலைத் துபாவா புரிந்துகொண்டான். ஆனல் அவன் அதற்கு உரியவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. தன் பற்களால் உதட்டைக் கடித்துக்கொண்டு, தலை குனிந்தான்.

தால்யா மேலும் பேசினள்:

''த்ரோத்ஸ்கியவாதிகள் கட்சிக் கட்டுப்பாட்டை எப்படி மீறுகிருர்களென்பதற்கு துபாவாவின் நடத்தை சிறந்த உதாரணமாக உள்ளது. அவர் பல்லாண்டுகளாகக் கம்ஸமோலில் வேலை செய்திருக்கிருர். எங்களில் பலருக்கு, குறிப்பாக ராணுவ தளவாடத் தொழிற்சாலைத் தொழிலாளருக்கு, அவரை நன்ருகத் தெரியும். இப்பொழுது கார்க்கவ் கம்யூனிஸ்ட் சர்வகலாசாலையில் படிக்கிருர். ஆனல் மூன்று வாரங்களாக அவர் ஷூம்ஸ்கியுடன் இங்குத் தங்கியிருக்கிருர். படிப்புக் காலத்தின் இடையில் இங்கு வந்த காரணம் என்ன? இந்த நகரில் அவர்கள் கூட்டம் பேசாத வட்டம் ஒன்றும் இல்லை. கடந்த சில நாட்களாக ஷூம்ஸ்

சிக்கு அறிவு வருவதற்கான அறிகுறிகள் தோன்றியிருப்பது உண்மை. அவர்களை இங்கு அனுப்பியது யார்? தவிர, வேறு பல கிளைகளி லிருந்து பல த்ரோத்ஸ்கீயவாதிகள் இங்கு வந் திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு சமயத்தில் இங்கு வேலை செய்தவர்கள். கட்சிக் குள் உபத்திரவத்தை உண்டாக்குவதற்காக அவர் களெல்லாம் இங்கு வந்திருக்கின்றனர். அவர் களுடைய கட்சி ஸ்தாபனங்களுக்கு அவர்கள் எங்கிருக்கிறார்களென்று தெரியுமா? தெரியாது.''

த்ரோத்ஸ்கீயவாதிகள் முன்வந்து தமது தவறுகளை ஒப்புக்கொள்வார்களென்று மாநாடு எதிர்பார்த்தது. இந்தக் காரியத்தைச் செய்யும் படி அவர்களது மனதை மாற்றுவதற்காக, தால் யா உருக்கமான வேண்டுகோள் விடுத்தாள். தோழமை உணர்ச்சியுடன் வாதித்தாள்:

''மூன்று ஆண்டுகளுக்கு முன், 'தொழிலாள ரின் எதிர்த்தரப்பு' என்ற கோஷ்டியினர்களோடு இதே தியேட்டரில் துபாவா நம்மிடம் வந்தார். ஞாபகம் இருக்கிறதா? அப்பொழுது அவர் என்ன சொன்னார் என்பதும் உங்களுக்கு நினைவு இருக் கிறதா? 'எங்கள் கரங்களிலிருந்து கட்சிக் கொடி ஒருநாளும் நழுவாது. இது உறுதி' என்று கூறினார். ஆனால் மூன்றாண்டுகள் முடிவதற்குள், அவர் அந்த உறுதியிலிருந்து நழுவிவிட்டார். ஆம், நழுவிவிட்டார் என்றுதான் சொல்லுகிறேன். 'நேரம் வரும் பொழுது பேசுவோம்' என்று கூறு கிறார். அவரும் அவருடைய த்ரோத்ஸ்கீய

சகாக்களும் மேலும் பல காரியங்களைச் செய்யப் போகிறார்கள் என்பதைத்தான் அது எடுத்துக் காட்டுகிறது.''

''வாயுமானியைப் பற்றி துப்தா பேசட்டும். அவர்தான் அவர்களது வானிலைக் கணிப்பு நிபுணர்'' என்று பின் வரிசைகளிலிருந்து ஒரு குரல் வந்தது.

அதைக் கேட்டு ஆத்திரம் கொண்ட குரல்கள் விடையளித்தன:

''அற்பவிகடத்துக்கு இது நேரமல்ல!''

''கட்சியோடு சண்டைபோடுவதை நிறுத்தப் போகிறார்களா, இல்லையா? அதைச் சொல்லட்டும்!''

''அந்தக் கட்சிவிரோத அறிக்கையை எழுதியது யார் என்று அவர்கள் சொல்லட்டும்!''

கூட்டத்தினரின் கோபம் கூடிக்கொண்டேயிருந்தது. அவைத் தலைவர் மணியைத் திரும்பத் திரும்ப அடித்து, அமைதியை நிலை நாட்ட முயன்றான். அந்தச் சந்தடியில், தால்யாவின் பேச்சு எவர் காதிலும் விழவில்லை. இந்தப் புயல் அடங்குவதற்குக் கொஞ்ச நேரமாயிற்று. அதன் பின் தால்யா தொடர்ந்து பேசினான்:

''வெளிப்பேட்டைகளிலுள்ள தோழர்களிடமிருந்து கடிதங்கள் வந்திருக்கின்றன. இந்த விவகாரத்தில் அந்தத் தோழர்கள் நம்முடன் இருப்பதை அவற்றிலிருந்து அறிந்து ஊக்கம் பெறுகிறோம். நமக்குக் கிடைத்த ஒரு கடிதத்தின் பகுதியை மட்டும் படிப்பதற்கு அனுமதியுங்கள். இது

ஓல்கா யூரேனெவாவிடமிருந்து வந்த கடிதம். உங்களில் பலருக்கு அவளைத் தெரியும். அவள் கம்ஸமோல் பிரதேசக் கமிட்டியின் ஸ்தாபன இலாகாவுக்குப் பொறுப்பாய் இருக்கிறாள்.''

தால்யா, தனக்குமுன் இருந்த காகிதக் கட்டிலிருந்து ஒரு தாளை இழுத்தாள். அதைப் பார்த்துப் படித்தாள்:

''நடைமுறை வேலையெல்லாம் ஸ்தம்பித்து விட்டது. கடந்த நான்கு நாட்களாகத் தலைமைக் குழுத் தோழர்கள் வட்டாரங்களில் இருக்கிறார்கள். வட்டாரங்களில் த்ரோத்ஸ்கீயவாதிகள் துன்மார்க்கமான பிரசாரத்தில் இறங்கியிருப்பதே காரணம். நேற்று நடந்த ஒரு சம்பவம், கம்யூனிஸ்டுகளுக்கு இடையே ஆத்திரத்தைக் கிளறிவிட்டிருக்கிறது. டவுனில் ஒரு குழுவில்கூட எதிர்ப்பாளருக்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. எனவே, அவர்கள் தமது சக்திகளைத் திரட்டி ராணுவ பிரதேசத்தின் கட்சி ஸ்தாபனத்தில் போராடத் துணிந்தார்கள். பிரதேசத் திட்டக் கமிஷனிலும் கல்வி இலாகாவிலும் வேலை செய்யும் கம்யூனிஸ்டுகளும் அந்த ஸ்தாபனத்தில் தான் இருக்கிறார்கள். அதில் நாற்பத்திரண்டு உறுப்பினர். ஆனால் த்ரோத்ஸ்கியவாதிகள் அனைவரும் அங்கு ஒன்று திரண்டனர். அந்தக் கூட்டத்தில் கேட்டமாதிரி கட்சி விரோதப் பேச்சுக்களை நாங்கள் ஒருபொழுதும் கேட்டதில்லை. ராணுவ இலாகா ஊழியர்களில் ஒருவன் எழுந்து நின்று நிர்த்தாட்சண்யமாகக் கூறினான்: 'கட்சி யந்திரம்

பணிந்து போகவில்லையானால், அதைப் பலாத்காரத்தால் அழிப்போம்' என்று கூறினான். எதிர்ப்பாளர்கள் அதை ஆதரித்து ஆரவாரம் செய்தனர். அதன்பின் கர்ச்சாகின் பேசத் தொடங்கினான். 'நீங்கள் அந்தப் பாஸிஸ்டை ஆதரித்துவிட்டுக் கட்சி உறுப்பினராக எப்படி இருக்கமுடியும்?' என்று அவன் வினவினான். உடனே அவர்கள் கூச்சலிட்டும், நாற்காலிகளைத் தூக்கிப்போட்டும் சந்தடி செய்தார்கள். பாவெல் தொடர்ந்து பேச முடியவில்லை. இந்த அக்கிரமத்தைக் கண்டு அருவருப்பு அடைந்த குழு உறுப்பினர், அவன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால் அவன் மீண்டும் பேசத் தொடங்கியதும், சந்தடி உண்டாயிற்று. 'நீங்கள் ஜனநாயகம் என்று இதைத்தானா சொல்கிறீர்கள்? நீங்கள் என்ன செய்தாலும் நான் பேசுவேன்' என்று பாவெல் உரக்கக் கத்தினான். அப்பொழுது, பலர் அவன்மீது பாய்ந்தனர். அவனை மேடையிலிருந்து இழுப்பதற்கு முயன்றனர். ஏகப்பட்ட குழப்பம் நிலவியது. பாவெல் அவர்களை எதிர்த்துப் போராடிக்கொண்டே பேசினான். ஆனால் அவர்கள் அவனை மேடையிலிருந்து இழுத்துக் கொண்டு போய் புறக்கதவுகளில் ஒன்றைத் திறந்து, படிக்கட்டில் தள்ளினார்கள். யாரோ ஒரு கயவன் பாவெலின் முகத்தில் வெட்டிவிட்டான். அதன்பின், குழு அங்கத்தினர் அனைவரும் கூட்டத்திலிருந்து வெளியேறி விட்டனர். இந்தச் சம்பவம் பலர் கண்களைத் திறந்திருக்கிறது....''

தால்யா மேடையிலிருந்து இறங்கினாள்.

இரண்டு மாதங்களாக கட்சி மாகாணக் கமிட்டியின் கிளர்ச்சி-பிரசார இலாகாவுக்குப் பொறுப்பாக வேலை செய்துவந்த ஸெகால், தோக்கரெவுக்குப் பக்கத்தில், தலைமைக் குழுவில் அமர்ந்திருந்தான். அவன் பிரதிநிதிகளுடைய பேச்சைக் கவனமாகக் கேட்டான். இதுவரை கம்ஸமோல் உறுப்பினராயிருந்த இளைஞரே பேசினார்கள்.

''இந்தச் சில வருஷங்களில் இவர்கள் எவ்வளவு பக்குவமடைந்து விட்டார்கள்!'' என்று ஸெகால் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

''பீரங்கிப்படை இன்னும் செயல்படவில்லை. ஆனால் அதற்குள்ளாகவே, எதிர்ப்பாளரின் பாடு, திண்டாட்டமாகி விட்டது. இளைஞர்கள்தான், த்ரோத்ஸ்கீயவாதிகளை முறியடித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று அவன் தோக்கரெவிடம் கூறினான்.

அந்தச் சமயத்தில், துப்தா மேடையில் ஏறினான். அவனைக் கண்டவுடன், கூட்டத்தினர் 'உஸ்' ஸென்று ஒலித்தும், வெடிபடச் சிரித்தும் தமது அதிருப்தியைக் காட்டிக்கொண்டனர். இதைக் கண்டிப்பதற்காக துப்தா அவைத் தலைமையை நோக்கித் திரும்பினான். ஆனால் அதற்குள், ஹாலில் அமைதி ஏற்பட்டுவிட்டது.

''யாரோ ஒருவர் என்னை வானிலை நிபுணர் என்றார். மெஜாரிட்டித் தோழர்களே, இவ்வாறு, நீங்கள் என் அரசியல் கருத்துக்களைக் கேலி செய்கிறீர்களா?'' என்று அவன் மூச்சுவிடாமல் பேசினான்.

இந்தச் சொற்களைக் கேட்டுக் கூட்டத்தினர் நகைத்தனர். துப்தா அலைத்தலைவன் உதவியை ஆத்திரத்துடன் நாடினன்.

''நீங்கள் கைகொட்டிச் சிரிக்கலாம். ஆனால் நான் மீண்டும் கூறுகிறேன், வாலிபர்கள் வாயு மானியாக இருக்கிறார்கள் என்ற இந்தக் கருத்தை லெனின் பன்முறை வற்புறுத்தி யிருக்கிறார்'' என்று அவன் தொடர்ந்து பேசினன்.

ஒரு விநாடியில், ஹாலில் அமைதி நிலவியது.

''லெனின் என்ன கூறினார்?'' என்று கூட்டத்திலிருந்து பலர் வினவினர்.

துப்தாவுக்கு உற்சாகம் உண்டாயிற்று.

''அக்டோபர் எழுச்சிக்கு ஆயத்தம் செய்த பொழுது, உறுதி வாய்ந்த தொழிலாளி வர்க்க இளைஞரைத் திவட்டிஆயுதபாணிகளாக்கி, மாலுமிகளுடன் சேர்த்து முக்கியமான பகுதிகளுக்கு அனுப்ப வேண்டுமென்று லெனின் கட்டளையிட்டார். அந்தப் பகுதியை நான் படிக்கவேண்டுமா? நான் எல்லா மேற்கோள்களையும் கார்டுகளில் எழுதி வைத்திருக்கிறேன்.''

துப்தா தன் பையில் கையை விட்டுத் தேடினன்.

''பரவாயில்லை, எங்களுக்குத் தெரியும்.''

''லெனின் ஒற்றுமையைப் பற்றி என்ன எழுதினார்?''

''லெனின் கட்சிக் கட்டுப்பாட்டைப் பற்றி என்ன எழுதினார்?''

''லெனின் எப்பொழுது, பழந் தலைவர்களுக்கு எதிராக இளைஞரை ஏவினார்?''

இவ்வாறு கூட்டத்திலிருந்து கேள்விக் கணைகள் பாய்ந்து வந்தன. துப்தா தன் சிந்தனை ஓட்டத்தை மறந்துவிட்டான். எனவே, அவன் வேறு ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினான்.

''தோழர் வாகூத்தினா இங்கு யூரேனெவாவின் கடிதத்தைப் படித்தாள். விவாதத்தின் போக்கில், அங்கும் இங்கும் ஏற்படக் கூடிய அத்துமீறிய செயல்களுக்கு நாங்கள் பொறுப்பு ஏற்கவேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.''

ஷூம்ஸ்கீய்க்குப் பக்கத்தில் இருந்த த்மீத்ரிய் த்ஸெவெத்தாயெவ் கோபத்துடன் சீறினான்:

''தேவர்கள் நடப்பதற்கு அஞ்சும் இடத்தில் மடையர்கள் நுழைகிறார்கள்.''

''ஆம். அந்த மடையன் நம் அழிவுக்கு உறுதி தேடிவிடுவான்'' என்று ஷூம்ஸ்கீய் குசுகுசுவென்று கூறினான்.

துப்தாவின் கிரீச்சென்று ஒலிக்கிற உச்சஸ்தாயிக் குரல், கூட்டத்தினரைத் தொல்லைப்படுத்திக் கொண்டே இருந்தது.

''நீங்கள் மெஜாரிட்டியின் கட்சிப் பிரிவை அமைத்திருக்கிறீர்கள். எனவே, எங்களுக்கு மைனாரிட்டியின் பிரிவை அமைக்கும் உரிமை உண்டு'' என்றான் அவன்.

ஹாலில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

சகல பகுதிகளிலிருந்தும் துப்தா மீது கோபக் கணைகள் பாய்ந்தன.

''இது என்ன? மீண்டும் போல்ஷெவிக்—மென்ஷெவிக் விவகாரமா?''

''கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சட்டசபையல்ல!''

''அவர்கள் மியாஸ்னிக்கோவிலிருந்து மார்த்தோவ் வரை, சகலவர்களுக்கும் பணிபுரிகிறார்கள்!''

ஆற்றில் நீந்தப் போகிறவனைப்போல், துப்தா தன் கைகளை உயர்த்தினான்; ஆவேசக் கனல் கக்கினான்:

''ஆம். கட்சிப் பிரிவை அமைத்துக்கொள்ள எங்களுக்கு உரிமைவேண்டும். இல்லாவிட்டால், ஸ்தாபனரீதியாகத் திரண்டு, நல்ல கட்டுப்பாட்டுடன் விளங்கும் மெஜாரிட்டியை எதிர்த்து, மாற்றுக்கருத்து கொண்டிருக்கும் நாங்கள் எங்களது அபிப்ராயத்துக்காக எப்படிப் போராடுவது?''

இரைச்சல் அதிகரித்தது. பன்கிராத்தவ் எழுந்தான்.

''துப்தா பேசட்டும். அவர் சொல்வதைக் கேட்போம். மற்றவர்கள் ரகசியமாக வைத்திருக்கும் விஷயங்களையும் எடுத்துரைக்கும் இயல்பு அவருக்கு உண்டு. அதுவும் நல்லதுதான்'' என்று கூச்சலிட்டான்.

ஹால் அமைதியடைந்தது. தான் ரொம்ப தூரம் போய்விட்டதை துப்தா உணர்ந்தான். ஒருவேளை, அவன் அதை இப்பொழுது சொல்லியிருக்கக் கூடாதோ? என்ற ஐயம் அவனைத் துன்புறுத்தியது. அவனது சிந்தனைகள் வக்கரித்துக்

கொண்டன; சிந்தனை இல்லாமல் சொற்களைக் கொட்டித் தன் பேச்சை முடித்தான்:

''நீங்கள் எங்களைக் கட்சியிலிருந்து நீக்கி வெளியே தள்ளிவிடலாம். முன்பே இம்மாதிரி வேலை தொடங்கிவிட்டது. கம்ஸமோலின் மாகாணக் கமிட்டியிலிருந்து என்னைத் தள்ளிவிட்டீர்கள். ஆனால் நாங்கள் கலங்கமாட்டோம். யார் சொல்லுவது சரியென்பது சீக்கிரத்தில் விளங்கிவிடும்.''

அத்துடன் அவன் மேடையிலிருந்து தாவி, ஹாலில் குதித்தான்.

துபாவாவுக்கு த்ஸெவெத்தாயெவ் ஒரு குறிப்பை அனுப்பினான்:

''துபாவா, நீ அடுத்தபடி பேசு. அதனால் நிலைமை மாறுதென்பது தெளிவு. இங்குதான் நமக்குக் கேவலமான தோல்வி ஏற்படப் போகிறதென்பது வெளிப்படை. நாம் துப்தாவைச் சரிசெய்ய வேண்டும். அவன் ஒரு மடையன், உளறுவாயன்.''

துபாவா, தான் பேச விரும்புவதாகக் கூறினான். உடனே அவனது கோரிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

அவன் மேடைமீது ஏறியபொழுது, என்ன பேசுவான் என்பதை எதிர்ப்பார்க்கும் வகையில் ஹால் அமைதியடைந்தது. ஒரு பேச்சுத் துவங்குவதற்கு முன் வாடிக்கையாக நிலவும் அமைதியே அது. ஆனால், அதில் பகைமை நிறைந்திருப்பதாக துபாவா கருதினான். குழுக் கூட்டங்களில்

பேசும் பொழுது அவனுக்கு இருந்த உத்வேகம் இப்பொழுது குன்றிவிட்டது. ஒவ்வொரு நாளும், அவனது பழைய தோழர்களே அவனைக் கடுமையாகக் கடிந்துகொண்டு எதிர்ப்பதைக் கண்டபின், அவனது உத்வேகம், நீரில் அணைந்த நெருப்பு மாதிரி ஆகிவிட்டது. இப்பொழுது, புண்பட்ட கர்வத்தின் கசப்பான புகை மண்டலம் அவனைச் சூழ்ந்துகொண்டது. தன் தவறை ஒப்புக்கொள்ள உறுதியாக மறுத்ததால், அவனது நிலைமை மேலும் மோசமாயிருந்தது. நேரடியாகப் பாய்ந்து தாக்குவதென்று அவன் முடிவு செய்தான். இதன் மூலம், மெஜாரிட்டி அவனை மேலும் எதிர்க்குமென்பதை உணர்ந்தே, இவ்வாறு முடிவு செய்தான். அவன் மெதுவான குரலில் பேசினான். ஆனால் அது தெளிவாயிருந்தது.

''நான் பேசும்பொழுது, தயவுசெய்து குறுக்கிடாமல் இருங்கள். எதிர்ப்புக் காட்டியும் கேலி செய்தும் ஆத்திரமூட்டாதீர்கள். எங்கள் நிலையை நான் பூர்த்தியாக விளக்குகிறேன். அதனால் பயனில்லை என்பதை நான் இப்பொழுதே அறிவேன். உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது'' என்று அவன் தொடங்கினான்.

துபாவா பேசி முடித்ததும், ஹாலில் வெடிகுண்டு விழுந்த மாதிரிக் கலவரம் உண்டாயிற்று. ஏராளமான கோபக் கூச்சல்கள் அவனைச் சவுக்கால் அடிப்பதைப் போலத் தாக்கின.

''வெட்கம்!''

''சீர்குலைவுவாதிகள் ஒழிக!''

''போதுமிந்த அவதூறு!''

துபாவா, தன் இருக்கையை நோக்கிச் சென்ற பொழுது பலர் பரிகாசமாகச் சிரித்தனர். அந்த ஏளனச் சிரிப்பே அவனது மனோபலத்தை அழித்தது. அவர்கள் அவன் மீது ஆத்திரத்தைக் கக்கி ஏசியிருந்தார்களானால், அவன் திருப்தியடைந்திருப்பான். ஆனால், ஒரு மூன்றாம் தர நடிகனது பொய்க்குரல் கரகரத்துப் போனால், அவனை எப்படி நையாண்டி செய்வார்களோ, அதைப் போலத் துபாவாவைப் பரிகாசம் செய்தனர்.

''ஷூம்ஸ்கீய் பேசுவார்'' என்று அவைத் தலைவன் அறிவித்தான்.

ஷூம்ஸ்கீய் எழுந்தான்.

''நான் பேசவில்லை'' என்றான்.

அப்பொழுது, பின் வரிசைகளிலிருந்து பன்கிராத்தவின் கனத்த குரல் கேட்டது.

''நான் பேசுகிறேன்!'' என்றான் அவன்.

பன்கிராத்தவ் குமுறிக்கொண்டிருக்கிறான் என்பதை அவனது குரலிலிருந்தே துபாவா ஊகித்துக்கொண்டான். அந்தத் துறைமுகத் தொழிலாளி மானபங்கம் ஏற்பட்டுவிட்டதாக எண்ணினால், அவனது கனத்த குரல் இம்மாதிரிதான் பெருமுழக்கம் செய்யும். சற்றுக் கூனிய நெட்டை உருவம் மேடையை நோக்கி விரைந்து நடந்ததைப் பார்த்தபொழுது, துபாவாவின் மனதில் கலக்கம் உண்டாயிற்று. பன்கிராத்தவ் என்ன சொல்வானென்று துபாவாவுக்குத் தெரியும். இரண்டு நாட்களுக்குமுன், தன் நண்பர்களை ஸா

லோமென்காவில் சந்தித்த நிகழ்ச்சி அவனுக்கு நினைவுக்கு வந்தது. அப்பொழுது அவர்கள், எதிர்த்தரப்பிலிருந்து கத்தரித்துக் கொள்ளும்படி அவனிடம் மன்றாடினார்கள். த்ஸெவெத்தாயெவும் ஷூம்ஸ்கீயும் அவனுடன் இருந்தனர். அவர்கள் தோக்கரெவ் வீட்டில் சந்தித்தனர். பன்கிராத்தவ், ஓக்குனேவ், தால்யா, வாலீன்த்ஸேவ், ஸெலென்னேவ், ஸ்தாரொவேரவ், அர்த்தியூகின் ஆகியோர் அங்கு இருந்தனர். ஒற்றுமைக்காக எடுக்கப்பட்ட இந்த முயற்சிக்கு துபாவா ஆதரவு தரவில்லை. அந்த விவாதத்தின் இடையில், அவன் த்ஸெவெத்தாயெவுடன் வெளியேறினான்; அதன் மூலம் அவன் தன் தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைப் புலப்படுத்தினான். ஷூம்ஸ்கீய் மட்டும் அந்தக் கூட்டத்தில் தங்கினான். இப்பொழுது, இங்கு அவன் பேசுவதற்கு மறுத்து விட்டான். ''முதுகெலும்பில்லாத அறிவுஜீவி! அவர்கள் அவனைத் தம் வசப்படுத்திக்கொண்டு விட்டார்கள்!'' என்று துபாவா மனக்கசப்போடும் வெறுப்போடும் எண்ணினான். இந்தக் கோபாவேசம் நிறைந்த போராட்டத்தில், அவன் தன் நண்பர் அனைவரையும் இழந்து கொண்டிருந்தான். கம்யூனிஸ்ட் சர்வகலாசாலையில், ஷார்க்கீயுடன் இருந்த நட்புறவு முறிந்துவிட்டது. ஷார்க்கீய் கட்சிக் குழுக் கூட்டத்தில் ''நாற்பத்தாறு பேர்களின் பிரகடனத்தைத்''* தீவிரமாகக் கண்டனம் செய்

*''நாற்பத்தாறு போகளின் பிரகடனம்''— த்ரோத்ஸ்கீய வாதிகளாலும் ''தொழிலாளர்

தான். பின்னுல், கருத்துப் போர் முற்றியபொழுது, அவன் ஷார்க்கீயுடன் பேசுவதையே நிறுத்தி விட்டான். அதன்பின், ஷார்க்கீய் ஆன்னுவைப் பார்ப்பதற்கு அவன் வீட்டுக்குப் பல தடவை வந்தான். துபாவாவும் ஆன்னுவும் திருமணம் செய்துகொண்டு ஓராண்டு ஆகிவிட்டது. அவர்கள் தனித்தனி அறைகளில் வசித்தனர். ஆன்னுவுக்கும் அவனுக்கும் உள்கட்சி விவகாரத்தில் ஒற்றுமை இல்லே. அவளுடன் இருந்த மனப்புகைச்சல் அதிகரித்ததற்கு, ஷார்க்கீய் அடிக்கடி விஜயம் செய்ததும் ஒரு காரணம் என்று துபாவா எண்ணினுன். ஷார்க்கீய் போட்டியாக வந்துவிட்டான் என்று அவன் பொறுமை கொள்ளவில்லே. ஆனுல் அந்தச் சூழ்நிலேயில், ஆன்னு ஷார்க்கீயுடன் சிநேகிதமாயிருப்பதைக் கண்டு அவன் எரிச்சல் அடைந்தான். அதைப்பற்றி ஆன்னுவிடம் பேசினுன். அதன் பலனுக ஏற்பட்ட தகராறு, அவர்களது மனஸ்தாபத்தை அதிகரித்துவிட்டது. ஆன்னுவிடம் எங்கும் போகிறேன் என்றுகூடச் சொல்லாமல், அவன் இந்த மகாநாட்டுக்கு வந்துவிட்டான்.

அவனுடைய சிந்தனேகளின் துரிதமான ஓட்டத்துக்குப் பன்கிராத்தவின் முழக்கம் முடிவு கட்டியது. மேடையின் விளிம்பில் நின்றுகொண்ட அவன் பேசத் தொடங்கினுன்:

எதிர்த்தரப்பு'' என்ற குழுவின் உறுப்பினர்களாலும் இதர எதிர்க்கட்சியினர்களாலும் கையொப்பமிட்டு 1923ம் ஆண்டில் வெளியிடப்பட்ட கட்சி விரோதமான பிரகடனம்.

''தோழர்களே! ஒன்பது நாட்களாக, நாம் எதிர்ப்பாளரின் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் போராட்ட சகாக்களாக, புரட்சி வீரர்களாக, வர்க்கப்போராட்டத் தோழர்களாகப் பேசவில்லை என்பதை நான் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லவேண்டும். அந்தப் பேச்சுக்களில் விரோதமும் பொறுமையும் எரிச்சலும் அவதூறும் நிறைந்திருந்தன. ஆம், தோழர்களே, அவதூறாகப் பேசுகிறார்கள். கட்சியில் இரும்புச் சர்வாதிகாரம் நடப்பதை ஆதரிப்பவர்களாகவும், நமது வர்க்க நலன்களையும் புரட்சியின் நலன்களையும் காட்டிக் கொடுப்பவர்களாகவும் போல்ஷெவிக்குகளாகிய நம்மை அவர்கள் சித்தரிக்கிறார்கள். பழைய போல்ஷெவிக்குகள் அதிகமான சோதனைகளில் தேறியவர்கள்; மிகவும் நம்பகமானவர்கள்; தலை சிறந்தவர்கள்; ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் சிற்பிகள்; ஜாரிஸ்டு சிறைகளில் சித்திரவதைகளை அனுபவித்தவர்கள்; உலக மென்ஷெவிஸத்துக்கும் த்ரோத்ஸ்கியுக்கும் எதிராகத் தோழர் லெனின் தலைமையில் தயவு தாட்சண்யம் காட்டாமல் போராடியவர்கள்—இவர்களை அலுவலகச் சடங்கு மனப்பான்மை கொண்டவர்கள் என்று எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். விரோதியைத் தவிர, வேறு எவனாவது இப்படிப் பேசுவானா? கட்சி வேறு, அதன் பொறுப்பாளர் வேறா? கட்சியும் அதில் பொறுப்பு வகித்துப் பணி புரியும் ஊழியரும் ஒன்றிச் செயல்படவில்லையா? பின்னர், இந்த அமளியெல்லாம் எதற்கு?

செஞ்சேனை வீரர்களைத் தலைவர்களுக்கும் கமி ஸார்களுக்கும் தலைமை நிலையத்துக்கும் எதிராக ஒருவன் தூண்டிவிட்டால் அதை என்னவென்று சொல்வோம்? அதுவும், அந்தப் படை பகைவரால் சூழப்பட்டிருக்கும் சமயத்தில், இந்தக் கலக வேலை யைச் செய்தால், என்னவென்று சொல்வோம்? த்ரோத்ஸ்கியவாதிகளின் கூற்றுப்படி பார்த்தால், மெக்கானிக்காக வேலை செய்கிறவரையில் நான் நல்லவன்; ஆனால் நாளைக்குக் கட்சிக் கமிட்டி காரிய தரிசியாகி விட்டால், நான் 'அலுவலுகச் சடங்கு மனப்பான்மை கொண்டவனாகவும்' 'நாற்காலி யைத் தேய்ப்பவனாகவும்' ஆகிவிடுவேன். தோழர் களே, அதிகார வர்க்கப் போக்குக்கு எதிராக ஜனநாயகத்துக்காகப் போராடிக் கொண்டிருக் கும் எதிர்ப்பாளர் மத்தியில், ஆட்சிச் சடங்குகளை அளவுக்கு மீறிக் கடைப்பிடித்த குற்றத்திற்காகப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட துப்தாவைப் போன்ற ஆட்கள் இருப்பது விந்தையாக இல்லையா? அல்லது, த்ஸெவெத்தாயெவை எடுத்துக்கொள் ளுங்கள். அவனது 'ஜனநாயகத்தை' ஸாலோ மென்கா தோழர்கள் நன்கறிவார்கள். அல்லது அபனுஸ்யேவை எடுத்துக் கொள்ளுங்கள். பா தோல்ஸ்க் வட்டாரத்தில் அதிகார ஆணவத்து டன் நடந்து கொண்டதற்காக, மாகாணக் கமிட்டி அவரை மும்முறை பொறுப்பிலிருந்து நீக்கி யது. கட்சியால் தண்டிக்கப்பட்டவர்கள் அனை வரும், கட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு ஒன்றுபட்டு விட்டார்களென்பது தெளிவு. த்ரோத்

ஸ்கியின் 'போல்ஷெவிஸத்தைப்' பற்றிப் பழைய போல்ஷெவிக்குகள் நமக்குச் சொல்ல வேண்டும். த்ரோத்ஸ்கிய் போல்ஷெவிக்குகளை எதிர்த்துப் போராடிய வரலாற்றை, அவர் இடைவிடாமல் முகாம்விட்டு முகாம் மாறிக்கொண்டிருந்த சரித்திரத்தை, இளைஞர் அறிந்துகொள்வது அவசியமாகும். எதிர்ப்பாளருக்கு விரோதமான போராட்டம், நமது அணிகளை ஒன்றுபடுத்திவிட்டது; இளைஞர்களது தத்துவ பலத்தைப் பெருக்கிவிட்டது. குட்டி பூர்ஷ்வாப் போக்குகளுக்கு எதிரான போராட்டத்தில், போல்ஷெவிக் கட்சியும் கம்ஸமோலும் உறுதி பெற்றுள்ளன. எதிர்ப்பாளர்கள் பீதி உண்டாக்கப் பார்க்கிறார்கள். பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் முழு அழிவு ஏற்படவிருக்கிறதென்று அந்த உளறுவாயர்கள் கூறுகிறார்கள். இந்த ஆருடங்களின் தன்மையை, வருங்காலம் எடுத்துக்காட்டும். தோக்கரெவ் போன்ற பழைய போல்ஷெவிக்குகளைத் தொழிற்சாலைக்கு அனுப்பிவிட்டு, கட்சி எதிர்ப்புப் போராட்டத்தை வீர சாகஸமாகக் கருதும் துபாவாவைப் போன்ற காற்றாடிகளைப் பொறுப்பில் அமர்த்த வேண்டுமென்பதே எதிர்ப்பாளரின் கோரிக்கை. முடியாது, தோழர்களே, இதற்கு இணங்க முடியாது. பழைய போல்ஷெவிக்குகளுக்குப் பதிலாகப் புதிய தோழர்களைத் தேர்ந்தெடுப்போம். ஆனால் கஷ்டம் நேரும்பொழுதெல்லாம், கட்சிக் கொள்கையைத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டவரைத் தேர்ந்தெடுக்கமாட்

டோம். நமது கட்சியின் ஒற்றுமை குலைவதை நாம் அனுமதியோம். பழைய தோழர்களும் இளைய தோழர்களும் ஒருபொழுதும் பிரியமாட்டார்கள். லெனின் கொடியின்கீழ் நின்று, குட்டி பூர்ஷ்வாப் போக்குகளை எதிர்த்து வளைந்து கொடுக்காமல் போராடி, வெற்றி நோக்கி முன்செல்வோம்!''

இடியோசை போன்ற ஆரவாரத்துக்கிடையே, பன்கிராத்தவ் மேடையிலிருந்து இறங்கினான்.

மறுநாள், பத்து பேர் துப்தாவின் வீட்டில் சந்தித்தனர். துபாவா பேசினான்:

''ஷூம்ஸ்கீயும் நானும் இன்று கார்க்கவ் செல்கிறோம். இனி எங்களுக்கு இங்கு ஒரு வேலையும் இல்லை. நீங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். என்ன நடக்கிறதென்று பொறுத்துப் பார்ப்பதே உசிதமான வழி. அகில ருஷ்யாவின் மாநாடு, நம்மைக் கண்டிக்குமென்பது வெளிப்படை. ஆனால் நமக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பார்கள் என்று எண்ணுவது தவறு. நமக்கு இன்னொரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று மெஜாரிட்டி தீர்மானித்திருக்கிறது. இனி, குறிப்பாக மாநாட்டுக்குப் பிறகு, போராட்டத்தைப் பகிரங்கமாக நடத்தினால், கட்சியிலிருந்து நீக்குவார்களென்பது நிச்சயம். அந்த நிலைமையை வரவழைத்துக்கொள்வது, நம் திட்டம் அல்ல. எதிர்காலத்தில் என்ன நிகழுமென்று சொல்வது கடினம். இவ்வளவுதான்

சொல்வதற்கு இருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.''

துபாவா, புறப்படுவதற்காக எழுந்தான்.

மெல்லிய உதடுகளை உடைய ஒல்லியான இளைஞன், ஸ்தாரொரவேரவும் எழுந்தான்.

''துபாவா, நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை; மாநாட்டு முடிவு நம்மைக் கட்டுப்படுத்தாதென்று கூறுகிறாயா?'' அவன் கொஞ்சம் தெற்றிப் பேசினான்.

''சட்டப்படி கட்டுப்படுத்தும். இல்லாவிட்டால், கட்சிக் கார்டை இழக்க நேரிடும். ஆனால் காற்று எந்தத் திசையில் அடிக்கிறதென்று பொறுத்துப் பார்ப்போம். இனிக் கூட்டம் கலையலாம்'' என்று திடீரென்று தலையிட்ட த்ஸெவெத்தாயெவ் கூறினான்.

துப்தா தன் நாற்காலியில் நிம்மதியில்லாமல் அங்கும் இங்கும் அசைந்தான். ஷும்ஸ்கீய் முகம் வெளுத்து மனம் இடிந்துபோயிருந்தான். கண்களுக்குக்கீழே கரிய வட்டங்களை உடைய அவன், ஜன்னலருகில் உட்கார்ந்து, நகங்களைக் கடித்துக்கொண்டிருந்தான். த்ஸெவெத்தாயெவ் பேச்சைக் கேட்டவுடன், நகம் கடிக்கும் உத்தியோகத்தை விட்டுவிட்டுக் கூட்டத்தை நோக்கித் திரும்பினான்.

''இத்தகைய உபாயங்களை நான் எதிர்க்கிறேன். மாநாட்டு முடிவு நம்மைக் கட்டுப்படுத்துமென்பது என் சொந்த அபிப்பிராயம். நாம் நமது கருத்துக்களுக்காகப் போராடினோம். இனி,

முடிவுக்குப் பணிந்து போகவேண்டும்'' என்று அவன் திடீரென்று தோன்றிய கோபத்துடன் பேசினான்.

ஸ்தாரொரவேரவ், அதை ஆமோதிக்கும் வகையில் ஷூம்ஸ்கீயை நோக்கினான்.

''நானும் அதையே சொல்ல விரும்பினேன்'' என்று தடுமாறிக்கொண்டே கூறினான்.

துபாவா அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டே, இகழ்ச்சியாகக் கூறினான்:

''நீ என்ன செய்யவேண்டுமென்று எவரும் யோசனை கூறவில்லை. மாகாண மாநாட்டில் உன் நடத்தைக்கு 'வருந்திப்' பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது.''

ஷூம்ஸ்கீய் துள்ளி எழுந்தான்.

''துபாவா, உனது தொனியை வெறுக்கிறேன். மனம் விட்டுப் பேசுவதென்றால், உன் கூற்று அருவருப்பாயிருக்கிறது; என் முடிவைப் புனராலோசனை செய்யும்படி தூண்டுகிறது.''

துபாவா உதாசீனமாகக் கையை அசைத்தான்.

''நீ புனராலோசனை செய்வாயென்று தான் நான் எதிர்பார்த்தேன். ஓடு. காலதாமதமாவதற்குள், மனம் வருந்தி மன்னிப்புக் கேள்!'' என்று கூறிவிட்டு, துபாவா, துப்தா, முதலியோருடன் கைகுலுக்கிய பின் வெளியேறினான். சிறிது நேரம் கழித்து, ஷூம்ஸ்கீயும் ஸ்தாரொரவேரவும் வெளியேறினர்.

வரலாற்றில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு, கொடுமையான குளிருடன் தன் பிரயாணத்தைத் தொடங்கியது. ஜனவரி மாதம், பனி மூடிய நிலத்தைத் தன் சீதளக் கரத்தால் பற்றிக்கொண்டது. அம்மாதத் தின் பிற்பகுதியில், சுழற்காற்றும் உறைபனிப் புயலும் ஊளையிட்டுக் கோர நர்த்தனமாடின.

தென்மேற்குப் ரயில் பாதைகளை வெண் பனி மூடிவிட்டது. வெறிபிடித்து ஆடிய மூலா தாரப் பூதங்களை எதிர்த்து மனிதர் போராடினர். கலப்பைகளின் உருக்குத் திருகுகள் வெண்பனி யைக் கிழித்து எறிந்து, ரயில் வண்டிகளுக்குப் பாதை செய்தன. கடுங்குளிராலும் உறைப்பனிப் புயலா லும் தாக்கப்பட்ட தந்திக் கம்பிகள் அறுபட்டன. பன்னிரண்டு தந்தி மார்க்கங்களில் மூன்றுதான் செயல்பட்டன. ஒன்று, இந்திய-ஐரோப்பிய மார்க் கம்; மற்ற இரண்டும் அரசாங்க மார்க்கங்கள்.

ஷெப்பெத்தோவ்க்கா ரயில் நிலையத்தின் தந்தி மனையில், மூன்று கருவிகள் கடகடவென்று இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருந்தன; பயிற்சி பெற்றவர் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடிய நாதம் அது.

இளம் பெண்கள் ஆபரேட்டராக இருந்தனர். அவர்கள் வேலைக்குச் சேர்ந்த நாள்தொட்டு இன்று வரை அடித்த தந்தி நாடாவின் நீளம், இருபது கிலோமீட்டர்களுக்குமேல் இருக்காது; ஆனால் அவர்களுடன் வேலை பார்க்கும் அந்தக் கிழவன் இதற்குள் இருநூறு கிலோமீட்டர்களைக் கடந்து

விட்டான். அப்பெண்களைப் போன்று நாடாவை அவனுக்கு படிக்க வேண்டியதில்லை. புருவத்தை நெறித்துக்கொண்டு, கடினமான எழுத்துக்களைச் சொற்களாகவும் சொற்களைச் சொற்றொடர்களாகவும் அவன் செய்வது இல்லை. கருவியின் அடியொலியைக் கேட்டுக்கொண்டே பாரத்தில் வார்த்தை வார்த்தையாக அவனால் எழுதமுடியும். இப்பொழுது, ''சகலருக்கும், சகலருக்கும், சகலருக்கும்!'' என்ற சொற்கள் அவனது கேள்விப் புலனில் பதிந்தன.

''வெண்பனியை நீக்கிச் சுத்தம் செய்வதைப் பற்றி இன்னொரு சுற்றறிக்கையாக இருக்க வேண்டும்'' என்று அந்த வார்த்தைகளை எழுதும் பொழுதே, கிழவன் தனக்குள் எண்ணமிட்டான். வெளியே, உறைபனிப் புயல் ஓங்கார ஒலியுடன் வீசியடித்தது. கட்டி தட்டிய பனி, ஜன்னலை ஓங்கி அடித்தது. அவனது கண்கள் அந்த ஓசை வந்த திசையை நாடின. ஒருகணம், அவனது பார்வை, ஜன்னல் கண்ணாடியில் பனிக்கட்டியால் அமைந்திருந்த சிக்கலான வடிவத்தில் லயித்தது. அந்த நேர்த்தியான இலை-காம்பு வேலைப்பாட்டை எந்தச் சிற்பியாலும் மிஞ்ச முடியாது!

அவனது சிந்தனைகள் எங்கெங்கோ உலவின; சிறிது நேரத்துக்கு அவன் தந்திக் கருவியின் சத்தத்தைக் கேட்காமல் இருந்து விட்டான். ஆனால் அதன் பின் அவன் கீழ் நோக்கி, விட்டுப் போன வார்த்தைகளைப் படிப்பதற்காக நாடாவை எடுத்தான்.

''ஜனவரி 21ம் தேதி பிற்பகல் 6-50 மணிக்கு'' என்ற சொற்களைத் தந்திக் கருவி அடித்திருந்தது.

அவன் அவற்றைத் துரிதமாக எழுதிக் கொண்டு, நாடாவைக் கீழே போட்டான்; தன் கையில் தன் முகத்தைச் சாய்த்துக்கொண்டு, கருவியின் நாதத்துக்குச் செவிகொடுத்தான்.

''நேற்று, கோர்க்கியில், மரணம் சம்பவித்தது....'' அவன் மெள்ளமெள்ள எழுத்துக்களை ஏட்டில் எழுதினான். அவனது நீண்ட வாழ்வில் எத்தனைச் செய்திகளை—இன்பச் செய்திகளையும் துன்பச் செய்திகளையும்—எடுத்து எழுதி இருக்கிறான்! பிறரின் துயரத்தையோ ஆனந்தத்தையோ முதன் முதலில் அவன் கேட்டறிந்தது எத்தனை தடவை! அந்தக் கச்சிதமான தொடர்பற்ற சொற்றொடர்களின் பொருளைப்பற்றி எண்ணும் பழக்கத்தை அவன் நிறுத்தி ரொம்பக் காலமாகிவிட்டது. ஒலிகளைக் கிரகித்துக் கொண்டு, யந்திரம் போல் ஏட்டில் வரிவடிவத்தில் குறிப்பதே அவனுக்கு வழக்கமாயிருந்தது.

இப்பொழுதும் யாரோ ஒருவர் இறந்து விட்டார்; அந்தச் சேதி யாரோ ஒருவருக்குத் தெரிவிக்கப்படுகிறது என்றே அவன் எண்ணினான். ''சகலருக்கும், சகலருக்கும், சகலருக்கும்!'' என்ற முதல் வார்த்தைகளை தந்திக் கலை வல்லுனன் மறந்துவிட்டான். ''வி-ளா-தி-மி-ர் இ-ல்-யீ-ச்'' என்ற சொற்களின் எழுத்துக்களைத் தந்திக் கருவி அடித்தது. அவற்றையும் அந்தக் கிழவன் மொழி

பெயர்தான். அவன் சற்றுக் களைத்திருந்தபோதிலும், மனக்கலக்கமில்லாமல் உட்கார்ந்திருந்தான். விளாதீமிர் இல்யீச் என்ற நாமத்தை உடைய யாரோ ஒருவர் ஏதோ ஓரிடத்தில் இறந்துவிட்டார்; யாரோ ஒருவர் அந்தச் சோகச் செய்தி கிடைக்கப் பெற்றுத் துயருற்றுக் கண்ணீரும் கம்பலையுமாக நிற்பார். ஆனால் அந்தக் கிழவனுக்கு அதில் அக்கறை இல்லை; அமைதியாக, சிறிது சோர்வுடன் அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்தச் சேதியை அறிந்து கொண்டிருக்கிறான். ஒரு புள்ளியையும ஒரு கோட்டுக் குறியையும் பல புள்ளிகளையும் இன்னொரு கோட்டுக் குறியையும் தந்திக் கருவி அடித்தது. அந்தப் பழகிய ஒலிகளிலிருந்து அவன் முதல் எழுத்தைப்புரிந்து கொண்டு, தந்திக் கடுதாசியில் எழுதினான். அது **"லெ"** என்ற எழுத்து. அதன் பின் **"னி"** இரண்டாவது எழுத்தாக அமைந்தது. அடுத்து **"ன்"** என்ற கடைசி எழுத்தை நிச்சிந்தையாகப் பதிந்தான்.

அதன்பின், கருவி ஒரு முற்றுப்புள்ளியை அடித்தது. அரை வினாடிநேரம், கிழவனது கண், அவன் எழுதிய **"லெனின்"** என்பதின் மேல் லயித்தது.

தந்திக் கருவி அடித்துக்கொண்டே யிருந்தது. ஆனால் அந்தப் பழகிய பெயர் தந்திக்கலைஞனின் உணர்வில் இப்பொழுது ஊடுருவியது. மீண்டும் அந்தச் சேதியின் கடைசிச் சொல்லைக் கவனித்தான். ''லெனின்''. என்ன? லெனினா?

தந்தியின் முழுவாசகமும் அவனது கண்ணுக்கு முன் பளிச்சென்று தோன்றியது. அவன் அந்தத் தந்திக் கடுதாசியை வெறித்து நோக்கினுன். அவனுடைய முப்பத்திரண்டு ஆண்டு வேலையில் முதன் முதலாக, இப்பொழுதுதான் அவனுக்குத்தான் எழுதியதிலேயே நம்பிக்கை உண்டாகவில்லை.

அவனது கண்கள், அந்த வரிகள் மீது மும்முறை விரைந்தோடின. ஆனல் அந்தச் சொற்கள் மாறுவதற்குப் பிடிவாதமாக மறுத்தன. ''விளாதீமிர் இல்யீச் லெனின் இறந்தார்'' என்ற பொருளையே அந்த வரிகள் இயம்பின. கிழவன் துள்ளி எழுந்தான்; நாடாச் சுருளை எடுத்தான்; அதை உன்னிப்பாகக் கவனித்துப் படித்தான். அவன் நம்பமறுத்த சேதியைத்தான் இரண்டு மீட்டர் நீளமுள்ள நாடாவும் ஊர்ஜிதம் செய்தது! அவன் தன் சக ஊழியர்களை வெளிறிய முகத்துடன் நோக்கினுன். ''லெனின் இறந்து விட்டார்!'' என்ற அலறல் அவர்களது செவிகளில் விழுந்தது.

இந்தப் பயங்கரமான சோகச் செய்தி, தந்தி மனையின் திறந்த கதவு வழியாக நழுவிக் கடும் புயலின் வேகத்துடன் ரயில் நிலையத்தைச் சுற்றிக் கடந்தது; உறைபனிப் புயலை ஊடுருவிக் கொண்டு சென்றது; இருப்புப் பாதைகளையும் ஸ்விச்சுப் பலகைகளையும் தாண்டியது. உறைபனிக் காற்றுடன்கூட, அரைகுறையாகத் திறந்திருந்த டெப்போவின் இரும்புக் கதவுகள் வழியாக வேகத்துடன் நுழைந்தது.

ஒரு ரிப்பேர் கோஷ்டி ஒரு எஞ்சினைப் பழுது பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது. கிழவனான பொலின் தோவ்ஸ்க்கியே எஞ்சினது அடிப்பாகத்துக்குக் கீழ் ஊர்ந்து சென்று, கோளாறான இடங்களை மெக்கானிக்குகளுக்குக் காட்டினான். புருஸ்ஷாக்கும் ஆர்த்தியோமும் எஞ்சின் உலைச் சட்டத்தின் வளைந்த கம்பிகளை நிமிர்த்திக் கொண்டிருந்தனர். புருஸ்ஷாக், அதை அடைகல் மீது வைத்துப் பிடித்துக் கொண்டிருந்தான். ஆர்த்தியோம் சம்மட்டியால் அடித்தான்.

கடந்த சில வருஷங்களில், புருஸ்ஷாக்குக்குக் கிழடு தட்டிவிட்டது; அவனது நெற்றியில் பள்ளமானதொரு சுருக்கம் விழுந்துவிட்டது; நரை மயிர்கள் அவனது கன்னப் பொறியை வெள்ளிமயமாக்கியது. முதுகு வளைந்துவிட்டது; குழிவிழுந்த கண்கள் மங்கிவிட்டன.

கதவு அருகில், ஒரு மனிதனின் கரும்படம் தோன்றியது. அதை மாலைப்பொழுதின் நிழல்கள் நொடிப் பொழுதில் விழுங்கிவிட்டன. இரும்பு மீது விழுந்த சம்மட்டி அடிகளின் பேரொலிக்கிடையே, அந்த மனிதனது முதல் அலறல் எவர் காதிலும் விழவில்லை. ஆனால் எஞ்சினுக்கருகே வேலை செய்த தொழிலாளரை அவன் நெருங்கிய பொழுது, ஆர்த்தியோம் அடிப்பதற்குத் தயாராகச் சம்மட்டியைத் தூக்கியிருந்தான்.

''தோழர்களே! லெனின் இறந்துவிட்டார்!''

ஆர்த்தியோமின் தோளிலிருந்து சம்மட்டி மெதுவாகக் கீழ்நோக்கி வந்தது. அவன் அதைச்

சத்தமில்லாமல் இறக்கிக் கான்கிரீட் தளத்தில் வைத்தான்.

''என்ன? என்ன சொன்னாய்?'' பயங்கரச் சேதியைக் கொண்டு வந்த தூதனது தோல் சட்டையை வலிப்புக் கண்டவனைப்போல் ஆர்த்தியோம் பிடித்து இழுத்தான்.

உடலெல்லாம் வெண்பனி மயமாக நின்ற அந்த மனிதன், கஷ்டப்பட்டு மூச்சுவிட்டுக்கொண்டே, தாழ்ந்த குரலில், நாக்குழறக் கூறினான்:

''ஆம், தோழர்களே! லெனின் இறந்து விட்டார்....''

அவன் உரக்கப் பேசவில்லை; எனவே, அந்த விபரீதமான சேதி உண்மையாகத்தானிருக்க வேண்டுமென்று ஆர்த்தியோம் உணர்ந்தான். இப்பொழுதுதான் அந்த மனிதன் யார் என்பதையும் ஆர்த்தியோமின் பார்வைப் புலன் உணர்ந்தது. அவன், ஸ்தலக் கட்சி ஸ்தாபனத்தின் காரியதரிசி.

தொழிலாளர்கள் பள்ளத்திலிருந்து ஏறிவந்தனர்; உலகம் முழுமையும் ஒலித்து எதிரொலித்த திருநாமத்துக்கு உரிய மானுடன் இறந்துவிட்டான் என்ற சேதியை அவர்கள் மௌனமாக நின்று கேட்டனர்.

கதவுகளுக்கு வெளியே எங்கோ ஓரிடத்தில், ஒரு எஞ்சின் அலறியதைக் கேட்டு அவர்கள் நடுங்கினர். தீவிர வேதனை நிறைந்த அந்த ஒலியை, நிலையத்தின் இன்னொரு கோடியிலிருந்த எஞ்சின் எதிரொலித்தது; மூன்றாவது எஞ்சினும் அலறியது. எஞ்சின்களின் திறன்மிகுந்த அழைப்புக்

குரலுடன் மின்னிலையத்தின் சங்கொலியின் பேரோசையும் இசைந்தது. வெடிகுண்டு பாய்ந்தோடுங்கால் உண்டாகும் ஒலியைப்போல, சங்கு உச்சஸ்தாயையில், கூர்மையாக அலறியது. அதன்பின், இந்த ஒலிகளையெல்லாம் அடக்கியது இன்னொரு குரல்; அதுவே கீவுக்குக் கிளம்பவிருந்த பிரயாணி வண்டியின் சுந்தரமான 'எஸ்' எஞ்சின் கணீரென்று ஒலித்த கனத்த குரலாகும்.

ஷெப்பெத்தோவ்கா-வார்ஸா எக்ஸ்பிரஸின் போலிஷ் எஞ்சின் டிரைவர், அபாயச் சங்குகள் அலறிக் கொண்டிருந்த காரணத்தை அறிந்ததும், ஒரு கணம் அவற்றிற்குச் செவிகொடுத்தான். பிறகு மெதுவாகக் கையை உயர்த்தி, விசில் சங்கிலியை இழுத்தான். அச்சங்கொலியைக் கேட்ட 'கே. பே. ஊ.'* ஏஜெண்ட் எதிர்பாராத அதிர்ச்சிக்கு ஆளானான். தன் சங்கை ஒலிப்பது இதுவே கடைசி முறை என்பதையும் இந்த ரயிலை மீண்டும் ஓட்டுவதற்குத் தன்னை அனுமதிக்கமாட்டார்கள் என்பதையும் அந்தப் போலிஷ் ரயிலோட்டி நன்கறிவான். ஆனால் அவனது கரம், விசில் சங்கிலியிலிருந்து விடுபடவில்லை. அந்த அலறலைக் கேட்டுத் திகைப்புற்ற போலிஷ் தூதர்களும் ராஜதந்திரிகளும் தமது மிருதுவான பஞ்சணைகளிலிருந்து எழுந்தனர்.

டெப்போவில் ஜனங்கள் திரளாகக் கூடினார்கள். அவர்கள் சகல கதவுகள் வழியாகவும் வந்து

---

* 107—108ம் பக்கங்களிலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

குவிந்தனர். அந்தப் பெரிய கட்டிடத்தில் கூட்டம் நிரம்பிவிட்டது. துயரத்தால் கனத்திருந்த மௌனச் சூழ்நிலையில், இரங்கற்கூட்டம் ஆரம்பமாயிற்று. ஷெப்பெத்தோவ்க்கா பிரதேசத்தின் கட்சிக் கமிட்டிச் செயலாளரான பழைய போல்ஷெவிக் ஷாராப்ரின் பேசினான்.

''தோழர்களே! உலகத் தொழிலாளி வர்க்கத்தின் தலைவரான லெனின் இறந்துவிட்டார். நமது கட்சி ஈடுசெய்ய முடியாத நஷ்டத்தை அடைந்துவிட்டது. ஏனெனில், போல்ஷெவிக் கட்சியைப் படைத்தருளிய தலைவர், பகைவர்களிடம் விடாப்பிடியுடன் போராடுவதற்குக் கற்றுக் கொடுத்த கர்மவீரர், நம்மிடையே இல்லை.... நமது கட்சிக்கும் நமது வர்க்கத்துக்கும் தலைவராக விளங்கியவர் இறந்து விட்டார்; தொழிலாளி வர்க்கத்தின் சிறந்த புத்திரர்கள் நமது அணியில் சேரவேண்டுமென்பதே இந்தச் சம்பவம் விடுக்கும் ஆணையாகும்....''

சோக இசையின் ஒலி கேட்டது நூற்றுக் கணக்கானவர்கள் தொப்பி இல்லாமல் நின்று கொண்டிருந்தனர். பதினைந்தாண்டுகளாக அழுகையை அறியாதிருந்த ஆர்த்தியோமுக்குத் தொண்டையை அடைந்தது. அவனது வலிய தோட்கள் நடுங்கின.

ரயில்வே பண்பாட்டு மன்றத்தின் சுவர்களால் கூட்டத்தினரது அழுத்தத்தைத் தாள முடியாது போன்று தோன்றியது. வெளியில், தாங்க முடியாத குளிர்; மன்றத்தின் நுழைவாயிலுக்

கருகே உள்ள இரண்டு பிர் மரங்கள் வெண்பனி யையும் ஊசி போன்ற பனி கட்டிகளையும் உடுத்திக் கொண்டு நின்றன. ஆனால் உள்ளே, கட்சி ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவுக்கூட்டத்தில் திரண்டிருந்த அறுநூறு பேரின் வெளிச் சுவாசத்தாலும், கணையடுப்பு எறிந்ததாலும் ஒரே புழுக்கமாயிருந்தது.

வாடிக்கையான உரையாடல் ஒலி எதுவும் இல்லை. தாங்க முடியாத துயரம் அவர்களது குரலை அடக்கிவிட்டது. அவர்கள் தாழ்ந்த ஸ்தாயியில் பேசினார்கள். அனைவரது கண்களிலும், துயரமும் கவலையும் தேங்கியிருந்தன. ஒரு புயலுக்கு இடையே சுக்கானியை இழந்த கப்பலின் பிரயாணிகளைப் போல அவர்கள் தவித்தனர்.

தலைமைக் குழு உறுப்பினர், மௌனமாக மேடையிலேறித் தமது இருக்கைகளில் அமர்ந்தனர். பருமனான ஸிரோத்தேன்கோ மணியைக் கவனமாகத் தூக்கி, மெதுவாக அடித்துவிட்டு, மேஜையின் மீது வைத்தான். அதைக் கேட்டவுடன், ஹாலில் துன்பமான அமைதி நிலவியது.

பேருரை முடிந்தபின், கட்சி ஸ்தாபனத்தின் காரியதரிசி ஸிரோத்தேன்கோ, பேசுவதற்கு எழுந்தான். அவன் செய்த அறிவிப்பு, ஒரு ஞாபகார்த்தக் கூட்டத்துக்குப் புதுமைதான்; ஆனால் ஒருவரும் ஆச்சரியப்படவில்லை.

''சில தொழிலாளர்கள் கட்சி அங்கத்தினராவதற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்.

அதை இந்தக் கூட்டம் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். விண்ணப்பத்தில் முப்பத்தியேழு தோழர்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர்.''

அதன்பின், அவன் அந்த விண்ணப்பத்தைப் படித்தான்:

''தென்மேற்கு ரயில்வேயைச் சார்ந்த ஷெப்பெத்தோவ்க்கா ரயில் நிலையத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபனத்துக்கு,

''நமது தலைவரின் மறைவு, எங்களைப் போல்ஷெவிக் அணியில் சேரும்படித் தூண்டுகிறது. லெனின் கட்சியில் சேர்வதற்கு எங்களுக்குள்ள தகுதியை இந்தக் கூட்டம் கணிக்க வேண்டுமென்று கோருகிறோம்.''

இந்தச் சுருக்கமான அறிக்கையில் இரண்டு பத்தி கையெழுத்துக்கள் இருந்தன.

ஸிரோத்தேன்கோ அந்தப் பெயர்களை உரக்க வாசித்தான். ஒவ்வொரு பெயரும் கூட்டத்தினர் மனதில் பதிய வேண்டுமென்பதற்காக நிறுத்திப் பதித்தான்.

''ஸ்தனிஸ்லாவ் ஸிக்முந்தவிச் பொலென்தோவ்ஸ்கிய், எஞ்சின் டிரைவர், முப்பத்துயாறு ஆண்டு வேலை செய்தவர்.''

சபையெங்கும் அங்கீகார ஒலி எழுந்தது.

''ஆர்த்தியோம் அந்திரேயெவிச் கர்ச்சாகின், மெக்கானிக், பதினேழு ஆண்டு வேலை செய்தவர்.

''ஸகார் பிலீப்பவிச் புருஸ்ஷாக், எஞ்சின் டிரைவர், இருபத்தொன்று ஆண்டு வேலை செய்த வர்.''

உறுதியடைந்த கைகளை உடைய ரயில்வே தொழிலாளர் சமூகத்தின் முதிய உறுப்பினர் பெயர்களைப் படிக்கப் படிக்க, அங்கீகார ஒலியும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

ஜாப்தாவில் முதலிடம் பெற்ற பெயருக்கு உரிய பொலென்தோவ்ஸ்க்கிய் மேடைமீது நின்றதும், மீண்டும் அமைதி நிலவியது.

அந்தக் கிழவன், தன் வாழ்க்கைக் கதையை விவரிக்கும் பொழுது, அவனுடைய உள்ளக் கிளர்ச்சியை மறைக்க முடியவில்லை.

''...தோழர்களே, உங்களிடம் நான் என்ன சொல்ல முடியும்? பழங்காலத்தில் தொழிலாளி எப்படி வாழ்ந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். வாழ்நாள் முழுவதும் அடிமை மாதிரி உழைத் தேன்; முதுமையில் என்னைத் தரித்திரம் பிடித்துக் கொண்டது. புரட்சி வந்தபொழுது, குடும்பக் கவலைகளைச் சுமந்து நிற்கும் கிழவனாகவே நான் இருந்தேன்; கட்சிக்குள் வரவில்லை; இதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். நான் ஒரு பொழுதும் சத்துருவுடன் சேரவில்லையென்றாலும், போராட் டத்தில் மிகக் குறைவாகப் பங்கெடுத்தேன். ஆயி ரத்துத் தொள்ளாயிரத்து ஐந்தில், வார்ஸா ரயில் வே வார்க்ஷாப்புகளில் நான் வேலை நிறுத்தக் கமிட்டி அங்கத்தினராயிருந்தேன்; போல்ஷெவிக் குகளை ஆதரித்தேன். அப்பொழுது நான் வாலிபனு

யிருந்தேன்; போராட்ட வேகம் நிறையப் பெற்றிருந்தேன். ஆனால் இறந்த காலத்தை நினை ஊட்டிப் பயன் என்ன! இல்யிச்சின் மறைவு என் இதயத்தைக் கூரிய வாளால் குத்திவிட்டது! நாம் நமது நண்பனை, தலைவனை இழந்துவிட்டோம். இனி நான் கிழவனாயிருப்பதைப்பற்றிப் பேசமாட்டேன். என் கருத்தை எப்படி எடுத்துரைப்பதென்று தெரியவில்லை. எனக்கு எப்பொழுதுமே மேடைப் பேச்சுத் தெரியாது. ஆனால் என் பாதை, போல் ஷெவிக்குகளின் பாதைதான், வேறொன்றுமல்ல என்பதை மட்டும் கூறுகிறேன்.''

எஞ்சின் டிரைவர் தன் தலையை நிமிர்த்தி னான். அவனது நரைத்த புருவங்களுக்குக்கீழே இருந்த விழிகள், முடிவுக்காகக் காத்திருப்பதைப் போலக் கூட்டத்தை உறுதியாகவும் சலனமில்லா மலும் நோக்கின.

கட்சியில் இல்லாதவர்களும் வோட்டெடுப் பில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் பட்டனர். இந்த நரைத்த தலைக் கிழவனின் விண் ணப்பத்தை ஒருவரும் எதிர்க்கவில்லை. இந்த வோட் டெடுப்பில் எவரும் ஒதுங்கியிருக்கவும் இல்லை.

பொலென்தோவ்ஸ்க்கிய் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக அவைத் தலைமை மேஜையிலிருந்து நடந்தான்.

மிகவும் முக்கியமான சம்பவம் நிகழ்கிற தென்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருந்தனர். இப்பொழுது, எஞ்சின் டிரைவர் நின்ற இடத்தில், வாட்டசாட்டமாக வளர்ந்திருந்த ஆர்த்தியோம்

நின்ருன். மெக்கானிக்குக்குத் தன் கரங்களை என்ன செய்வதென்று தெரியவில்லை. எனவே, அவன் கூச்சத்துடன் ரோமம் அடர்ந்த கம்பளிக் குல்லாயைக் கையில் பிடித்துக்கொண்டான். ஓரங்களில் இழை இழையாகப் பிரிந்திருந்த அவனது ஆட்டுத்தோல் மேற்கோட்டு திறந்திருந்தது. கழுத்தை மூடிய காலரை உடைய மேல்சட்டை—பட்டாளத்தினர் அணியும் சாம்பல் நிறச் சட்டை—இரண்டு பித்தளைப் பித்தான்களிடப்பட்டிருந்தது. ஆக, விடுமுறை நாளுக்குரிய இன்சுவைப் பொலிவுடன் அவன் விளங்கினுன். ஆர்த்தியோம் கூட்டத்தினரைப் பார்ப்பதற்குத் திரும்பினுன். அப்பொழுது, கணநேரம் அவனது பார்வை ஒரு பழகிய உருவத்தின்மீது விழுந்தது. அதுதான் கல்தச்சன் மகள் கால்யா. அவள் தனது தையல் கடைத் தோழிகளுடன் உட்கார்ந்திருந்தாள். அவள், அவனை மன்னிக்கும் தோரணையில் புன்னகை செய்து கொண்டு உற்றுப்பார்த்தாள். அந்தப் புன்னகையிலிருந்து, அவளது அங்கீகாரத்தைப் புரிந்துகொண்டதுடன், அவளுல் விவரிக்க முடியாத ஒன்றையும் அவன் படித்துக்கொண்டான்.

''ஆர்த்தியோம், உன்னைப்பற்றிக் கூறு'' என்று ஸிரோத்தேன்கோ கூறியது அவன் செவியில் விழுந்தது.

ஆனுல், ஆர்த்தியோமுக்குத் தன் கதையைத் தொடங்குவது கஷ்டமாயிருந்தது. இத்தகைய பெருங்கூட்டத்தில் பேசி அவனுக்குப் பழக்க

மில்லை. வாழ்க்கை தன்னுள் சேமித்துவைத்திருப்பதை எல்லாம் எடுத்துக் கூறுவது தன் சக்திக்கு அப்பாற்பட்டதென்ற உணர்ச்சி அவனுக்குத் திடீரென்று உண்டாயிற்று. அவன் வார்த்தை கிடைக்காமல் தடுமாறினன். கூச்சமும் தளர்ச்சியும், அவன் பேசுவதை மேலும் கடினமாக்கின. ஒரு பெரிய மாறுதலின் நுழைவாயிலில் தான் நிற்பதையும், அவனது கடினமான தடம் புரண்ட வாழ்வில் ஊக்கமும் உட்பொருளும் உண்டாக்க வல்ல நடவடிக்கையை அவன் எடுப்பதற்கு இருப்பதையும் நன்கு உணர்ந்தான்.

''நாங்கள் நால்வர் இருந்தோம்'' என்று ஆர்த்தியோம் தொடங்கினன்.

ஹாலில் சாந்தி நிறைந்தது. கரியபுருவங்களுக்குக் கீழ் ஒளிந்திருந்த கண்களையும், வளைந்த மூக்கையும் உடைய இந்த வளர்த்தியான தொழிலாளி பேசியதை, அறுநூறு மக்களும் ஆவலுடன் பருகினர்கள்.

''என் தாயார், பணக்காரர் குடும்பங்களில் சமையற்காரியாக வேலைசெய்தாள். என் தகப்பனரை எனக்கு நினைவே இல்லை. அவருக்கும் அம்மாவுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. அதிகமாகக் குடித்தார். எனவே, எங்களை அம்மாதான் பராமரித்தாள். இத்தனைப் பேருக்குச் சாப்பாடு போடுவது, அவளுக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்தது. காலை முதல் இரவுவரைச் செக்குமாடு போல உழைத்தாள். அவளுக்குச் சோறும் மாதம் நான்கு ரூபிளும் தான் சம்பாதிக்க முடிந்தது. அதிர்ஷ்ட

வசமாக, நான் இரண்டு வருடம் பள்ளிக் கூடத்தில் படித்தேன். எனக்கு எழுதவும் படிக் கவும் கற்றுக் கொடுத்தனர். ஆனால் ஒன்பது வயதானவுடன், வேறு வழியில்லாமல், அம்மா என்னை ஒரு பட்டறையில் பயிற்சியாளனாகச் சேர்ந் தாள். மூன்று வருஷகாலம், உண்ணும் சோற்றுக் காக உழைத்தேன்.... அந்தப் பட்டறையின் சொந் தக்காரன், பேர்ஸ்தர் என்ற ஜெர்மானியன். நான் சிறுவன் என்று கூறி, அவன் என்னை எடுத்துக் கொள்ள மறுத்தான். ஆனால் நான் வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்தேன்; என் தாயார் என் வயதில் இரண்டு வருஷம் கூட்டிச் சொன்னாள். அந்த ஜெர்மானியனிடம் நான் மூன்றாண்டுகள் வேலைசெய்தேன். ஆனால் ஒரு தொழிலையும் கற் றுக்கொள்ளவில்லை. எடுபிடி ஆளாகவிருந்தேன். 'வோத்கா' வாங்கி வந்தேன். முதலாளி மீன் மாதிரி குடித்தான்.... கரியும் இரும்பும் வாங்கி வரச் சொல்லியும் என்னை அனுப்புவான்.... முத லாளி மனைவி என்னை அடிமையாகவே பாவித்தாள். நான் உருளைக் கிழங்குத் தோலை உரித்துக்கொடுத் தேன்; பானைகளைத் தேய்த்துக் கழுவினேன். என்னை அடிக்கடி உதைத்தார்கள்; கட்டிப்போட் டார்கள்; காரணமில்லாமல் இம்சித்தார்கள். அது அவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. கணவன் குடித்துக் கொண்டிருந்ததால், எஜமானி எப் பொழுதும் உக்கிரமாகக் குதித்துக்கொண்டிருப் பாள். என் முகத்தில் பளாரென்று அறைவாள். நான் வீதிக்கு ஓடுவேன். ஆனால் எங்கே போவது?

யாரிடம் புகார்செய்வது? அம்மா நாற்பது கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தாள். தவிர, அவளால் என்னைக் காப்பாற்ற முடியவில்லை.... பட்டறையிலும் அதே நிலைமைதான். இங்கு எஜமானனின் தம்பி நிர்வாகியாகவிருந்தான். என்னைத் தவிக்கச் செய்து வேடிக்கை பார்ப்பதென்றால், அந்தப் பன்றிக்குப் பிரியம். 'ஏ! பையா, அங்குள்ள வளையத்தைக் கொண்டுவா' என்பான்; உலைக்குப் பக்கத்திலிருந்த மூடியைக் காட்டுவான். அங்குப்போய், வளையத்தைக் கையிலெடுப்பேன். 'அய்யோ!' என்று அலறுவேன். அந்த வளையம், அப்பொழுதுதான் உலையிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. பூமியில் கிடந்தபோது கறுப்பாகத் தோன்றிய போதிலும், தொட்ட இடத்தை எரித்துவிட்டது. நான் அங்கு நின்று, வலிதாங்காமல் கதறும்பொழுது, அவன் வயிறு புண்ணாகும் வகையில் சிரிப்பான். இந்தத் துன்பத்தைத் தாங்க முடியாமல், நான் அம்மா வீட்டுக்கு ஓடினேன். அம்மாவுக்கு என்னை என்ன செய்வதென்று தெரியவில்லை. எனவே, ஜெர்மானியனிடமே இட்டுக் கொண்டு வந்தாள். வழியெல்லாம் கதறியழுதாள். மூன்றுவது வருஷத்தில்தான், எனக்குக் கொஞ்சம் தொழில் கற்றுக்கொடுத்தனர். ஆனால் அடி உதை கிடைத்துக்கொண்டேயிருந்தது. நான் மீண்டும் ஓடினேன். இறைச்சி சமைக்கும் பாக்டரியில் வேலை கிடைத்தது. அங்குத் தோலைக் கழுவி, ஒன்றரை வருஷத்தை விரயம் செய்தேன். அதன்பின், முதலாளி தன் பாக்டரியைச் சூதாடித்

தோற்றுவிட்டான். நான்கு மாதம் எங்களுக்கு ஒரு காசு கொடுக்கவில்லை. அவன் ஓடிப்போய் விட்டான். நான் அந்தக் குழியிலிருந்து கரை யேறினேன். ரயிலேறி ஷ்மேரின்காவுக்குச் சென்று வேலை தேடினேன். அதிர்ஷ்டவசமாக அங்கு ஒரு ரயில்வே தொழிலாளியைச் சந்தித்தேன். அவர் என்னிடம் இரக்கப்பட்டார். எனக்கு மெக்கா னிக் வேலை ஒரு மாதிரியாகத் தெரியுமென்று சொன்னதும், அவர் தமது முதலாளியிடம் என்னை இட்டுச் சென்ருர். நான் அவருடைய மருமகன் என்று சொல்லி வேலை கோரினுர். என் உருவத் தைக் கண்டு, பதினேழு வயதானவனுக அவர்கள் மதிப்பிட்டார்கள். எனவே, மெக்கானிக்கின் உதவியாளனுக வேலை கிடைத்தது. எனது தற்கால வேலையில், நான் எட்டு வருஷங்களாக இருந்து வருகிறேன். எனது கடந்த காலத்தைப் பற்றி நான் சொல்லக்கூடியது இவ்வளவுதான். என் நிகழ்கால வாழ்வைப்பற்றி உங்களுக்குத் தெரியும்.''

ஆர்த்தியோம் தன் குல்லாயால் புருவத்தைத் துடைத்துக் கொண்டான்; சிரமப்பட்டுப் பெரு மூச்சு விட்டான். அவன் இன்னும் முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவில்லை. இதைச் சொல் வதுதான் மிகவும் கடினமானது. ஆனுல் தவிர்க்க முடியாத கேள்வியை எவராவது கேட்பதற்கு முன் அவனே சொல்லித்தானுகவேண்டும். தன் அடர்ந்த புருவங்களை நெறித்துக்கொண்டு அவன் தொடர்ந்து பேசினுன்.

''புரட்சிச் சுவாலை முதலில் தோன்றியபொழுது, நான் ஏன் போல்ஷெவிக் கட்சியில் சேரவில்லை? இந்தக் கேள்வியை எழுப்புவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. நான் என்ன பதில் சொல்ல முடியும்? பார்க்கப்போனால், நான் இன்னும் கிழவனாகவில்லை. இன்றுவரை, நான் இந்தப் பாதையை மேற்கொள்ளாததின் காரணம் என்ன? உங்களிடம் நேராகப் பேசுகிறேன். ஒளித்து வைப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டில், நாங்கள் ஜெர்மானியரை எதிர்த்து எழுந்த பொழுதே, இந்தப் பாதையைத் தழுவியிருக்கவேண்டும். மாலுமி பியோதர் ஷுஹ்ராய் எங்களிடம் பன்முறை வற்புறுத்தியும், நாங்கள் தவறிவிட்டோம். 1920ம் ஆண்டுவரை, நான் துப்பாக்கியை ஏந்தவில்லை. வெண்படைகளைக் கருங்கடலுக்குள் விரட்டிய பின், புயல் அடங்கியது. எங்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். அதன் பின், குடும்பம், குழந்தைகள் எல்லாம் வந்தன.... குடும்ப வாழ்வில் கட்டுப்பட்டுவிட்டேன். ஆனால் இப்பொழுது, தோழர் லெனின் மறைந்துவிட்டதாலும், கட்சி வேண்டுகோள் விடுத்திருப்பதாலும், நான் என் வாழ்வைப் பரிசீலித்தேன்; அதில் உள்ள குறையை உணர்ந்தேன். நான் என் சொந்த சக்தியைப் பாதுகாத்துக் கொண்டால் போதாது. லெனினும் இல்லாதபொழுது, நாம் ஒரு பெருங்குடும்பம் மாதிரி ஒன்றுபட்டிருக்கவேண்டும். அப்பொழுது தான், சோவியத் ஆட்சி, உருக்கு மலைபோல் உறு

தியாக நிற்க முடியும். நாம் போல்ஷெவிக்குகளாக வேண்டும். அது நமது கட்சி, இல்லையா?''

இவ்வாறாக அந்த மெக்கானிக் அந்தரங்க சுத்தியுடன், எளிய முறையில் பேசினான். பேச்சை முடித்தவுடன், ஒருநாளும் இல்லாத வகையில் தனக்கு அமைந்த சொல்லாட்சியைக் கண்டு, ஓரளவுக்கு நாணமடைந்தான். தன் தோள்மீதிருந்து ஒரு பெரிய பாரம் இறக்கப்பட்டுவிட்டதைப் போன்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. அவன் நிமிர்ந்து நின்றான், கேள்விகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

''ஏதாவது கேள்வி உண்டா?'' ஸிரோத்தேன்கோவின் குரல் அமைதியைக் கலைத்தது.

கூட்டத்தில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. ஆனால் ஒருவரும் பேசவில்லை. அதன்பின், எஞ்சினிலிருந்து நேராக வந்திருந்த, கன்னங்கரேலென்று இருந்த கரி பூசிய ஸ்டோக்கர் எழுந்து நின்று, அறுதியிட்டுக் கூறினான்:

''கேட்பதற்கு என்ன இருக்கிறது? அவரைத் தெரியாதா? உத்திரவு கொடுத்து முடியுங்கள்.''

உஷ்ணத்தாலும் உள்ளக் கிளர்ச்சியாலும் சிவந்த முகத்தை உடைய கொல்லன் கில்யாக்கா, கம்மிய குரலில் கத்தினான்.

''சரியான தோழர். தடம் வழுவ மாட்டார். அவரை நம்பலாம், வோட்டுக்கு விடுங்கள், ஸிரோத்தேன்கோ.''

ஹாலின் பின்வரிசைகளில் இளங் கம்யூனிஸ்டுகள் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன்

எழுந்தான். அங்கு வெளிச்சம் குறைவாயிருந்த தால், அது யாரென்று தெரியவில்லை.

''தோழர் கர்ச்சாகின் ஏன் விளை நிலத்தில் குடியேறியிருக்கிறுர்? அவரது விவசாயி அந்தஸ் துக்கும் தொழிலாளி வர்க்க மனப்பான்மைக்கும் எப்படி இணக்கம் காண்கிறுர்? விளக்குவாரா?'' என்று அவன் வினவினுன்.

இந்த வினுவை வெறுத்து ஒதுக்கும் வகை யில் ஒரு ஒலி ஹாலில் பரவியது. ஒரு கண்டனக் குரல் எழுந்தது:

''சாதாரண ஜனங்கள் புரியும்படி பேசக் கூடாதா? வெளிச்சம் போடுவதற்கு நல்ல நேரம்....''

ஆனுல் அதற்குள் ஆர்த்தியோம் பதில் சொல்ல ஆரம்பித்து விட்டான்.

''பரவாயில்லை, தோழரே. நான் விளை நிலத்தில் குடியேறியிருப்பதாக அந்த வாலிபன் கூறுவது உண்மை. ஆனுல் நான் என் தொழிலாளி வர்க்க மனச்சாட்சியைக் காட்டிக் கொடுத்து விடவில்லை. எப்படியாயினும் சரி, அந்த அத்தி யாயத்துக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கி றேன். ரயில் நிலையத்துக்கு அருகில் குடும்பத்து டன் குடியேறப் போகிறேன். இங்கு இருப்பதே நல்லது. அந்தத் தரித்திரம் பிடித்த நிலம், நீண்ட காலமாக என் குரல்வளையைப் பிடித்துக் கொண் டிருக்கிறது.''

அவனுக்குச் சாதகமாகக் கைகள் உயர்ந்த பொழுது, அவனது இதயம் மீண்டும் நடுங்கியது.

அவன் தலையை நிமிர்த்திக்கொண்டு, தன் இருப்பிடத்தை நோக்கி நேராக நடந்தான். அவனது பாதங்கள் மிகமிக இலேசாகவிருப்பது போலத் தோன்றின.

''ஒருமனதான முடிவு'' என்று ஸிரோத்தேன்கோ அறிவித்தான்.

அவைத் தலைமை மேஜைக்கு முன்னால் மூன்றுவதாக வந்து நின்றவன், முன்னொளில் பொலின் தோவ்ஸ்க்கிய்க்கு உதவியாளனாக இருந்த புருஸ்ஷாக். அதிகம் பேசத் தெரியாத அவன் இப்பொழுது கொஞ்ச காலமாக எஞ்சின் டிரைவராக இருக்கிறான். அவன் வாழ்நாளெல்லாம் உழைத்த தன் கதையை நிகழ்காலம் வரை விவரித்து முடித்த பின், இறுதியில் தனது குரலைத் தாழ்த்திக் கொண்டு, ஆனால் எல்லோருக்கும் கேட்கும் முறையில் பேசினான்:

''என் குழந்தைகள் ஆரம்பித்ததை முடித்து வைப்பது என் கடமை. நான் என் துக்கத்துடன் மூலையில் முக்காடு போட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியிருக்கமாட்டார்கள். அவர்கள் அதற்காக இறக்கவில்லை. அவர்களது மறைவால் ஏற்பட்ட குறைவை நிறைவு செய்ய நான் முயற்சிக்கவில்லை. ஆனால் இப்பொழுது, தலைவரின் மறைவு, என் கண்களைத் திறந்திருக்கிறது. கடந்த காலத்தைப் பற்றிப் பதில் சொல்லும்படி என்னிடம் கேட்காதீர்கள். இன்று முதல் நமது வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது.''

புருஸ்ஷாக்கின் மனதில் வேதனை மிகுந்த நினைவுகள் கொந்தளித்தன. அவனது முகம் கறுத்தது; கடுமையாகத் தோற்றமளித்தது. ஆனால் அவனைக் கட்சியில் சேர்ப்பதற்கு ஆதரவு தெரிவித்து, கைகள் உயர்ந்தபொழுது, அவனது கண்களில் ஒளி வீசியது; நரைத்த தலை நிமிர்ந்தது.

புதிய கட்சி அங்கத்தினர் பரிசிலனை, இரவு நெடுநேரம் வரை நீடித்தது. அனைவருக்கும் நன்கு தெரிந்தவர்களாகவும் மாசுமறுவில்லாதவர்களாகவும் இருந்தவர்களே, சிறந்தவர்களே, கட்சிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

லெனின் மறைவின் விளைவாக, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் போல்ஷெவிக்குகளானார்கள். தலைவர் மறைந்துவிட்டார்; ஆனால் கட்சி அணிகள் நிலைகுலையவில்லை. ஆழ வேரூன்றிய மரத்தின் முடி துண்டிக்கப்பட்டால், அந்த மரம் பட்டுப்போவதில்லை.

அத்தியாயம் ஆறு

அந்த விடுதியின் சங்கீதக் கச்சேரி மண்டபத்து வாயிலில் இருவர் நின்றனர். அவர்களில் வளர்த்தியானவன், வில் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான். அவனது புஜத்தில் பிரகாசித்த செந்நாடாவில் ''வார்டன்'' என்று குறித்திருந்தது.

''உக்ரேனியப் பிரதிநிதிகளின் கூட்டம் இங்கு நடக்கிறதா?'' என்று ரீத்தா உசாவினாள்.

''ஆம், தோழரே. உங்களுக்கு என்ன வேண்டும்?'' அவனது குரலில் நன்னயம் இல்லை. வறட்டுத்தனமான ஆசாரமுறை தொனித்தது.

அவன் வழியை அடைத்துக்கொண்டு நின்ருன். தலை முதல் பாதம்வரை, ரீத்தாவை உற்று நோக்கினுன்.

''உங்களிடம் பிரதிநிதிச் சீட்டு உள்ளதா?''

அவள் ''மத்தியக் கமிட்டி அங்கத்தினர்'' என்று பொன் முலாமில் சித்திரிக்கப்பெற்ற கார்டைக் காட்டியவுடன் , அவனிடம் விநயம் தோன்றியது.

''உள்ளே செல்லுங்கள், தோழரே. இடது புறத்தில் காலியான இருக்கைகள் உள்ளன'' என்று மரியாதையுடன் குறிப்பிட்டான்.

ரீத்தா இரு நாற்காலி வரிசைகளுக்கு இடையே நடந்து சென்ருள்; ஒரு காலியான ஆசனத்தைக் கண்டு, அதில் அமர்ந்தாள்.

கூட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதென்பது வெளிப்படையாகத் தெரிந்தது; எப்படியெனில், அவைத் தலைவர் முடிவுரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அவரது குரல் பழக்கமானதாக ரீத்தாவுக்குத் தோன்றியது.

''இப்பொழுது, அகில ருஷ்ய காங்கிரஸின் கவுன்ஸில் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது. காங்கிரஸ், இரண்டு மணி நேரத்தில் ஆரம்பமாகிறது. அதற்கு முன், பிரதிநிதிகளது ஜாப்தாவை இன்னெரு முறை படித்துவிடுகிறேன் கேளுங்கள்.''

பேசியது அக்கிம்! அவன் ஜாப்தாவை வேக மாகப் படித்தபொழுது, ரீத்தா உன்னிப்பான கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். ஒவ் வொரு பிரதிநிதியும் தமது பெயர் படிக்கப்பட்ட வுடன், சிவப்பு அல்லது வெள்ளைச் சீட்டுடன் தம் கரத்தை உயர்த்திஞர்கள்.

திடீரென்று, ரீத்தா தனக்குப் பழக்கமான தொரு பெயரைக் கேட்டாள்; அது பன்கிராத் தவ்.

அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரு கை உயர்ந்ததைக் கண்டாள். ஆஞல் இடையிலிருந்த வரிசைகள் அந்தத் துறைமுகத் தொழிலாளியின் முகத்தை மறைத்துவிட்டன. மேலும் பல பெயர் கள் வாசிக்கப்பட்டன. மீண்டும் ஒரு பழகிய பெ யர்—ஒக்குனேவ்; உடனடியாக இன்ஞென்று— ஷார்க்கிய்.

ரீத்த ஷார்க்கியைக் கண்டுகொண்டாள்.

அவன் ரொம்ப தூரத்தில் இல்லை. அவனது முகத்தின் ஒரு பாதிதான் புலப்பட்டது. ஆம், அது ஷார்க்கிய்தான்! அவனது பக்கப் பார்வைத் தோற்றத்தை அவள் கிட்டத்தட்ட மறந்துவிட் டாளே! பார்த்துப் பல வருஷங்களாகி விட்டன வல்லவா?

பெயர் வாசிப்புத் தொடர்ந்தது. இப்பொ ழுது அக்கீம் ஒரு பெயரைப் படித்தான்; அதைக் கேட்ட ரீத்தா உக்கிரமான அதிர்ச்சிக்கு உள் ளாஞள். அக்கீம் படித்த பெயர்:

''கர்ச்சாகின்.''

தூரத்தில், முன்வரிசை ஒன்றில், ஒரு கை உயர்ந்து தாழ்ந்தது. அவனது காலம் சென்ற தோழனின் பெயரை உடைய இந்த நபரின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல், ரீத்தாவைத் துன்புறுத்தியது. அந்தக்கை உயர்ந்த இடத்திலிருந்து தன் கண்களைத் திருப்ப அவளால் முடியவில்லை. ஆனால் முன்வரிசைத் தலைகளெல்லாம் ஒரே மாதிரியாகத் தோன்றின. ரீத்தா எழுந்தாள்; சுவருக்கருகிலிருந்த நடைபாதை வழியே முன்வரிசைகளை நோக்கிச் சென்றாள். அதே சமயத்தில், அக்கீம் பெயர் வாசிப்பதை முடித்துவிட்டான். பிரதிநிதிகள் நாற்காலிகளைப் பின்னுக்குத் தள்ளிப் பேரொலி உண்டாக்கினார்கள். இளைஞர்களின் குரலோசையும் சிரிப்போசையும் ஹாலில் நிரம்பின. இந்தச் சந்தடியையும் மீறித் தன் குரல் கேட்கவேண்டுமென்பதற்காக அக்கீம் உரக்கக் கூவினான்:

''போல்ஷாய் தியேட்டர்... ஏழுமணி. தாமதமாக வராதீர்கள்!''

வெளிச் செல்லும் பாதை ஒன்றுதான். அங்குப் பிரதிநிதிகள் திரளாகக் கூடினர். இந்தக் கூட்டத்தில் தன் பழைய நண்பர் எவரையும் கண்டுபிடிக்கத் தன்னால் முடியாதென்பதை ரீத்தா உணர்ந்தாள். அக்கீம் வெளியேறுவதற்குமுன், அவனைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறரைக் கண்டுபிடிப்பதற்கு அவன் உதவி செய்வான். இவ்வாறு அவள் எண்ணியபொழுது, பிரதிநிதிகளின்

கோஷ்டி ஒன்று அவளைக் கடந்து கொண்டிருந்தது.

அவர்களில் ஒருவன், ''நல்லது, கர்ச்சாகின் கிழவா, நாம் போகலாமா?'' என்று கேட்டது ரீத்தாவின் காதில் விழுந்தது.

அந்தப் பழகிய குரல், மறக்க முடியாத குரல் விடை தந்தது:

''சரி, போகலாம்.''

ரீத்தா சட்டென்று திரும்பினாள். அவளுக்கு முன் ஒரு பழுப்பு நிறங் கொண்ட நெட்டையான இளைஞன் நின்றான். அவன் காக்கிச் சட்டையும் மெல்லிய காகேஷியன் பெல்ட்டும் நீல நிறத்தில் சவாரிக் கால் சட்டையும் உடுத்தியிருந்தான்.

ரீத்தா அகன்று விரிந்த கண்களுடன் அவனை வெறித்துப் பார்த்தாள். அவனது புஜங்கள் அவளை அணைப்பதை உணர்ந்தாள். அவன் தழுதழுத்த குரலில் ''ரீத்தா'' என்று மென்மையாகச் சொல்வதைக் கேட்டாள். அது பாவெல் கர்ச்சாகின் தான் என்பதை அறிந்துகொண்டாள்.

''ஆக, நீ உயிரோடிருக்கிறாயா?''

இந்தக் கேள்வி அவனுக்குச் சகல விஷயங்களையும் எடுத்துரைத்துவிட்டது. அப்படியானால், அவன் இறந்து விட்டதாக அவர்களுக்குக் கிடைத்த சேதி தவறானது என்பதை அவள் இதுவரை அறியவில்லை.

அந்த ஹால் காலியாகி ரொம்ப நேரமாகி விட்டது. நகரத்தின் உயிர் நாடியான த்வெர்ஸ்க்காயா தெருவின் சத்தமும் சந்தடியும், திறந்த

ஜன்னல் வழியே கேட்டன. கடிகாரம் ஆறு அடித்தது. ஆனால் கண நேரத்துக்கு முன் தான் சந்தித்ததாக அவர்களுக்குத் தோன்றியது. எனினும், போல்ஷாய் தியேட்டருக்குக் கிளம்பும்படி கடிகாரம் ஆணையிட்டது. அவர்கள் விசாலமான படிக்கட்டு வழியாக இறங்கிய பொழுது, அவள் மீண்டும் பாவெலை உற்றுப் பார்த்தாள். இப்பொழுது அவன் அவளைவிட அரைச்சாண் உயரமாக இருந்தான். முன்னைக் காட்டிலும் ஆண்மை கொண்டவனாகக் காட்சி அளித்தான்; சாந்தமாகவும் இருந்தான். மற்றபடி அவன் அவள் அறிந்த பழைய பாவெல்தான்.

''நீ எங்கு வேலை செய்கிறாய் என்றுகூட நான் கேட்கவில்லை'' என்று அவள் கூறினாள்.

''நான் கம்ஸமோலின் பிரதேசக் கமிட்டிக் காரியதரிசியாக இருக்கிறேன். துபாவாவைக் கேட்டால் 'பேனா சிப்பாய் வேலை' என்பான்'' என்று பாவெல் புன்னகையுடன் பதிலுரைத்தான்.

''அவனைப் பார்த்தாயா?''

''ஆம். அந்தச் சந்திப்பின் நினைவுகள் இன்னும் மனதைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கின்றன.''

அவர்கள் தெருவில் இறங்கிவிட்டார்கள். மோட்டார் கார்கள் 'ஹார்ன்' அடித்துக்கொண்டு சென்றன. சாலையோர நடைபாதைகளில் இரைந்து பேசும் கூட்டம் நிறைந்திருந்தது. இருவரும் ஒரே மாதிரியான சிந்தனை வசப்பட்டு நடந்து சென்றனர்; தியேட்டரை அடையும் வரை ஒரு

வார்த்தை பேசவில்லை. தியேட்டருக்கு முன், ஜன சமுத்திரத்தின் அலைகள், புயற்காற்றில் பொங்குவதுபோல் பொங்கிக்கொண்டிருந்தன. தியேட்டரைச் சூழ்ந்துநின்ற அந்த மக்கள், வாசல்களைக் காத்துநின்ற செஞ்சேனை வீரர்களின் அணியைத் தகர்த்துக்கொண்டு செல்வதற்காக முயற்சித்தனர்; தியேட்டரின் பிரம்மாண்டமான கல் கட்டிடத்தை நோக்கி பாய்ந்தோடினர். ஆனால் காவல்காத்து நின்ற சிப்பாய்கள், பிரதிநிதிகளுக்கு மட்டுமே, உள்ளே செல்வதற்கு அனுமதி தந்தனர். அந்தப் பிரதிநிதிகள் தமது சீட்டுக்களைப் பெருமையுடன் காட்டிக்கொண்டு, சிப்பாய்களது வளையம் வழியே உள்ளே சென்றனர்.

தியேட்டரைச் சுற்றி நின்றவர்களெல்லோரும் கம்யூனிஸ்ட் இளைஞராவர். காங்கிரஸின் திறப்புவிழாவைப் பார்ப்பதற்கு, அந்த இளங் கம்யூனிஸ்டுகளுக்கு டிக்கட் கிடைக்கவில்லை. எனினும், எப்பாடுபட்டாகிலும் உள்ளே போவதென்று அவர்கள் உறுதியாயிருந்தனர். சாதுரியமாக நடந்துகொள்ளக்கூடிய சில சாமர்த்தியசாலிகள், பிரதிநிதிகள் கோஷ்டிகளுடன் கலந்து சென்றனர்; ஏதோ ஒரு சிவப்புக் காகிதத் துண்டைக் காட்டித் தியேட்டரின் நுழைவாயில் வரை சென்றனர். ஒருசிலர் கதவையும் தாண்டிவிட்டனர். ஆனால் அங்குப் கண்காணிப்பாய்க் காரியம் செய்த மத்தியக் கமிட்டி உறுப்பினரோ, பிரதிநிதிகளுக்கும் விருந்தாளிகளுக்கும் அவரவருக்குரிய இருக்கைகளைக் காட்டி உதவிய அதிகாரியோ

அந்த அழையாத விருந்தாளிகளைக் கண்டுபிடித்தனர். டிக்கட் இல்லாது வெளியே காத்துநிற்கும் கூட்டம் மன நிறைவு அடையும் வகையில், தியேட்டருக்குள் ஆக்கிரமித்த புத்திசாலிகள் வெளியேற்றப்பட்டனர்.

காங்கிரஸைப் பார்க்க விரும்பிய கூட்டத்தின் சின்னஞ்சிறு பகுதிக்குக்கூட தியேட்டரில் இடமில்லை.

பாவெலும் ரீத்தாவும் மிகவும் கஷ்டப்பட்டு தியேட்டர் வாசலை அடைந்தனர். பிரதிநிதிகள் டிராமிலும் காரிலும் வந்து குவிந்துகொண்டேயிருந்தார்கள். ஒரு பெரிய பிரதிநிதிகள் கோஷ்டி வாசலில் கூடிவிட்டது. செஞ்சேனை வீரர்கள் சுவரை ஒட்டித்தள்ளப்பட்டனர். அவர்களும் இளங் கம்யூனிஸ்ட்கள்தான். அந்தச் சமயத்தில் வாசல் அருகில் இருந்த கூட்டத்திலிருந்து ஒரு வலிய சத்தம் எழுந்தது:

''பௌமன் கல்லூரி, இதோ போகிறது!''

''இளைஞரே, வாருங்கள், நம் கட்சி ஜெயிக்கிறது!''

''ஹுர்ரா!''

பாவெல், ரீத்தா ஆகியோருடன் கதவு வழியாக ஒரு கூரியபார்வையை உடைய இளைஞன் நுழைந்தான். கம்ஸமோல் சின்னம் அணிந்த அவன், அதிகாரிக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு, நேராக முன்னறைக்கு ஓடினன். அந்தக் கூட்டத்தில் அவன் நொடிப்பொழுதில் மறைந்தான்.

உயர் வகுப்பு இருக்கைகள் இருந்த வரிசை

களின் பின்னுல் இரண்டு ஆசனங்களைக் காட்டி, ''இங்கு உட்காரலாம்'' என்று ரீத்தா கூறினுள்.

இருவரும் உட்கார்ந்தனர்.

''இன்னும் ஒரு கேள்வி உன்னைக் கேட்க வேண்டும். பழங்காலத்தைப் பற்றித்தான்; பதில் சொல்வாயென்று நிச்சயமாக நம்புகிறேன். அந்தக் காலத்தில் நமது கூட்டுப் படிப்பையும் நட்பையும் ஏன் முறித்தாய்?'' என்று ரீத்தா வினவினுள்.

அவர்கள் சந்தித்ததிலிருந்தே பாவெல் இந்தக் கேள்வியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். எனினும், அவள் கேட்டவுடன், அவன் மனம் கலங்கிஞன். அவர்களது கண்கள் சந்தித்தன. அவளுக்குக் காரணம் தெரிந்திருப்பதைப் பாவெல் புரிந்து கொண்டான்.

''ரீத்தா, இந்தக் கேள்வியின் பதிலை நீயே அறிவாயென்று நினைக்கிறேன். மூன்று ஆண்டுகளுக்குமுன் நடந்த நிகழ்ச்சி அது. உன்னிடம் அவ்வாறு நடந்துகொண்டதற்காக நான் அந்தப் பாவெலைக் கண்டிக்கிறேன். உண்மையில், கர்ச்சாகின் பல தவறுகளைச் செய்திருக்கிருன்; பெரிய தவறுகளும் செய்திருக்கிருன். சிறிய தவறுகளும் செய்திருக்கிருன். அவற்றில் இதுவும் ஒன்று.''

ரீத்தா புன்னகை புரிந்தாள்.

''அருமையான பீடிகை. கேள்விக்குப் பதில் சொல்.''

பாவெல் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினுன்:

''இந்தத் தவறுக்குப் பொறுப்பு நான்மட்டு மல்ல; அது எனக்குப் பிடித்த கதாநாயகனை ஆர்தரின் தவறும்கூட. அவனது புரட்சிகரமான சித்திர விசித்திர சாகஸக் கொள்கையும் என் பிழைக்குக் காரணம். அந்த நாட்களில் நான், லட்சியத்துக்காக வாழ்வை அர்ப்பணித்துப் பாடு பட்ட புரட்சிகரமான வீரதீர வைராக்கிய புரு ஷர்களின் தத்ரூபமான வர்ணனைகளால் பெரிதும் கவர்ச்சிக்கப்பட்டேன். அந்த மாவீரர்கள் என்னை ஆட்கொண்டார்கள். அவர்களைப்போல வாழ வேண்டுமென்று நான் பெரிதும் விரும்பினேன். எனக்கு உன்பால் ஏற்பட்ட உணர்ச்சி ஆர்தரின் காதலை ஒத்திருந்தது. அதெல்லாம் இப்பொழுது நினைத்தால், நகைக்கத்தக்கதாகத் தோன்று கிறது; என் நடத்தைக்காக நான் எவ்வளவு வருந்துகிறேன் என்பதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.''

''அப்படியானால், ஆர்தரைப்பற்றி உன் கருத்தை மாற்றிக்கொண்டு விட்டாயா?''

''இல்லை, ரீத்தா, அடிப்படையான கருத் தோட்டத்தில் மாறுதல் இல்லை. ஆனால் மன உறு தியைச் சோதிப்பதற்காக வீணாக நடத்திய இன் னல் பொருந்திய சோதனைகளை மட்டுமே நான் நிறுத்தி விட்டேன். ஆர்தரின் முக்கியமான இயல்பை நான் இப்பொழுதும் போற்றுகிறேன். அவனது மனோ தைரியம், அவனது அலாதியான சகிப்புத்தன்மை, தன் வேதனையைக் கண்டோரிட மெல்லாம் விண்டு கூறாமல், துன்பத்தைப்

பொறுத்துக்கொள்ளும் அந்த மனுஷத் தன்மை, ஆகியவற்றை நான் நேசிக்கிறேன். முழுச் சமுதாயத்தின் வாழ்வுக்காகச் சொந்த வாழ்வைத் தியாகம் செய்யும் புரட்சிப்பண்பை நான் ஆதரிக்கிறேன்.''

''பாவெல், மூன்றாண்டுகளுக்குமுன் நீ இப்படிப் பேசவில்லையே என்று வருந்துகிறேன்'' என்று ரீத்தா கூறிய பொழுது, அவளது முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. அது அவளது சிந்தனை நெடுந்தூரத்தில் சஞ்சரிப்பதைப் படம் பிடித்துக் காட்டியது.

''வெறும் நண்பன் என்பதை விட உன் இதயத்தில் எனக்கு ஒரு உயர்ந்த இடம் என்றுமே கிடைத்திருக்காது என்பதற்காக வருந்துகிறாயா, ரீத்தா?''

''கிடைத்திருக்கும். நீ ஒரு தோழனைவிட அதிகமாக என் வாழ்வில் இடம் பெற்றிருப்பாய்.'

''ஆனால் இப்பொழுதும் அந்தக் குறையை அகற்ற முடியும்.''

''தோழர் ஆர்தரே! இனி முடியாது, அதற்கு உரிய காலம் கடந்துவிட்டது.'' மேலும், ரீத்தா இளநகை தவழ விளக்கம் தந்தாள்: ''எனக்கு இப்பொழுது ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அவளுடைய தந்தை எனது நெருங்கிய நண்பர். பொதுவாக, நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் நன்கு நேசிக்கிறோம். எவராலும் பிரிக்கமுடியாத வகையில் வாழ்ந்துவருகிறோம்.''

அவளது விரல்கள் பாவெலின் கரத்தைத் தடவிக் கொடுத்தன. அவன்பால் அவளுக்கு ஏற்பட்ட கவலையே, இந்த அன்பு வெளியீட்டுக்குக் காரணம். ஆனல் அந்தக் கவலை அனுவசியமானதென்பதை உடனே உணர்ந்தாள். ஆம். இந்த மூன்று ஆண்டுகளில் பாவெல் உடல் வளர்ச்சி அடைந்திருப்பதைப் போலவே அவனது மனமும் பண்பட்டிருந்தது. அவளது கூற்று அவன் மனதைப் புண்படுத்திவிட்டதென்பதை, அவனது கண்களே எடுத்துரைத்தன. ஆனல் ''என்னதானிருப்பினும், நான் இப்பொழுது இழந்தவற்றுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு உயர்ந்தவை என்னிடம் தங்கியிருக்கின்றன'' என்றே அவன் கூறினன். இது வெற்றுரையல்ல என்பதையும், மிகையில்லாத உண்மைதான் என்பதையும் ரீத்தா அறிந்திருந்தாள்.

மேடையின் அருகில் போய் உட்கார வேண்டிய நேரம் வந்து விட்டது. அவர்கள் உக்ரேனியப் பிரதிநிதிகள் இருந்த வரிசைக்குச் சென்று, அங்கு அமர்ந்தனர். பாண்டு வாத்திய கோஷ்டி இன்னிசை பொழிந்தது. ஹாலுக்குக் குறுக்கே, ''எதிர்காலம் நமதே'' என்ற வாசகம் பிரகாசமாகப் பொறிக்கப் பட்டிருந்தது. அந்தப் பெரிய தியேட்டரில், பெட்டிகளிலும் நாற்காலிகளிலும் அடுக்காக அமைந்திருந்த இருக்கைகளிலும் ஆயிரக்கணக்கான இளைஞர் அமர்ந்தனர். அந்தப் பல்லாயிர இளைஞர், குன்றாத ஜீவ சக்தியை உடைய ஒரே உயிர்ப்பொருளாக இங்கு ஐக்கியப் பட்டனர். மகத்துவம் மிக்க தொழிலாளி வர்க்

கத்தின் தலை சிறந்த மாபெரும் இளம் பட்டாள மொன்று இங்குக் குழுமியிருந்தது. ''எதிர்காலம் நமதே'' என்று கெட்டித் திரையில் பிரகாசமாக எழுதியிருந்த சொற்களின் நல்லொளியை ஆயிரக் கணக்கான விழிகளிலும் காணமுடிந்தது. மேலும், ஜனங்கள் வந்துகொண்டே யிருந்தார்கள். இன்னும் சில விநாடிகளில் கெட்டியான வெல் வெட் திரையைத் தூக்குவார்கள்; ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கத்து மத்தியக் கமிட்டி யின் செயலாளர், இந்த கம்பீரமான நேரத்தின் மகிமையால் ஒருகணம் தம் அமைதியை இழந்து உணர்ச்சி வசப்பட்டு, ''ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கத்தின் ஆருவது காங்கிரஸ் ஆரம்ப மாகிறதென்று நான் பிரகடனம் செய்கிறேன்'' என்று அறிவிப்பார்.

புரட்சியின் வல்லமையையும் மாட்சிமையை யும், இன்றுபோல் இவ்வளவு திட்பநுட்பமாகவும் உள்ளக் கிளர்ச்சியோடும் பாவெல் என்றுமே உணர்ந்ததில்லை. போல்ஷெவிஸத்தின் இளம் பட் டாளம் ஒன்று திரண்டுள்ள இந்த வெற்றி விழா வில், வாழ்வு, அவனையும் ஒரு போர் வீரனாகவும் நிர்மாணிகனாகவும் ஆக்கிச் சேர்த்துள்ளது என் பதை எண்ணியபொழுது, ஒரு வர்ணிக்க முடி யாத பெருமையும் இன்பமும் அவனை மெய்யெல் லாம் புல்லரிக்கச் செய்தது.

காங்கிரஸ் நடந்த நாட்களில் அவன் அதிகாலை முதல் இரவு நெடுநேரம் வரை அதன் வேலை

களிலேயே ஈடுபட்டிருந்தான். எனவே, அதன் இறுதிக் கட்டத்தில்தான் அவன் ரீத்தாவை மீண்டும் சந்தித்தான். அவள் ஒரு உக்ரேனியக் கோஷ்டியுடன் இருந்தாள்.

''நான் நாளைக்குக் காங்கிரஸ் முடிந்தவுடன் கிளம்புகிறேன். நாம் மீண்டும் கூடிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பது சந்தேகம்தான். எனவே நான் நாட்குறிப்பு எழுதிய இரண்டு நோட் புத்தகங்களை உனக்காகத் தயாராக வைத்திருக்கிறேன். அவற்றுடன் ஒரு சிறு குறிப்பும் எழுதி வைத்திருக்கிறேன். அவற்றைப் படி; அதன் பின் எனக்குத் தபாலில் அனுப்பிவிடு. நான் உன்னிடம் சொல்லாத விஷயங்களை அவற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்'' என்று அவள் அவனிடம் கூறினாள்.

அவன் அவளது கரத்தை அமுக்கிப் பிடித்துக் கொண்டான். அவளது முக லட்சணங்களை மனப்பாடம் செய்வதைப் போல, அவளை நீண்ட நேரம் உற்று நோக்கினான்.

முன்னால் திட்டமிட்டபடி, அவர்கள் மறு நாள், தியேட்டரின் முன் வாசலில் சந்தித்தனர். ரீத்தா, அவனிடம் காகிதக் கட்டு ஒன்றையும், ஒரு ஒட்டிய கடிதத்தையும் கொடுத்தாள். அவர்களுடன் வேறு சிலரும் இருந்ததால், உணர்ச்சிகளைக் காட்டாமல் விடைபெற்றுக் கொண்டார்கள். அவளது கண்கள் கலங்கின; அதிலிருந்து அவளது துயரம் கலந்த ஆழ்ந்த அன்பைப் பாவெல் புரிந்துகொண்டான்.

அடுத்த நாள் அவர்கள் ஏறிய ரயில் வண்டிகள், வெவ்வேறு திசைகளில் சென்றன. பாவெல் பிரயாணம் செய்த ரயிலின் பல பெட்டிகளில் உக்ரேனியப் பிரதிநிதிகள் ஏறியிருந்தனர். அவன் கீவிலிருந்து வந்த சில பிரதிநிதிகளுடன் ஒரு உள் அறையில் இருந்தான். சூரியன் மறைந்தபின், இதர பிரயாணிகள் படுத்துக்கொண்டு விட்டனர்; பக்கத்துத் தட்டிலிருந்த ஓக்குனேவ், நிம்மதியாகக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். பாவெல், விளக்கின் அருகே நகர்ந்திக்கொண்டு, கடிதத்தைத் திறந்தான்.

''பாவெல், என் இதயத்தைக் கவர்ந்தவனே!

''நாம் சேர்ந்திருந்தபொழுதே, இவற்றையெல்லாம் சொல்லியிருப்பேன். ஆனால் இதுவே சிறந்த முறை. காங்கிரஸுக்கு முன்னால் நாம் பேசிக்கொண்டதின் விளைவாக, உன் வாழ்வில் எத்தகைய வடுவும் ஏற்படக் கூடாதென்பதொன்றுதான் என் ஆவல். நீ மனோதிடம் உடையவன் என்பதை அறிவேன்; எனவே, நீ கூறியவற்றை மனப்பூர்வமாக நம்புகின்றேன். நான் வாழ்வை வறட்டு ஆசாரக் கண்கொண்டு நோக்கவில்லை. ஒருவன் அல்லது ஒருத்தி, எப்பொழுதோ ஒரு தடவை, தனது சொந்த உறவுகளில் விதிக்கு விலக்காக நடந்து கொள்ளலாமென்று நான் நினைக்கிறேன். ஆனால் அந்த அரிதான விதிவிலக்குகள், அந்தரங்க சுத்தியானதும் ஆழமானதுமான பாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க

வேண்டும். உன் விஷயத்தில், நான் விதிக்கு விலக்காக நடந்துகொண்டிருப்பேன். ஆனால், நமது யௌவனத்துக்கு வெகுமதியளிக்க வேண்டுமென்ற என் உணர்ச்சியை நான் நிராகரித்தேன். அதில் உனக்கோ, எனக்கோ உண்மையான ஆனந்தம் இருக்க முடியாதென்று நான் எண்ணுகிறேன். எனினும், நீ உன்னிடம் இவ்வளவு கண்டிப்பாகவும் கடுமையாகவும் இருக்கக்கூடாது. பாவெல், நமது வாழ்வு போராட்ட மயமானது அல்ல. அதில் உண்மையான அன்பால் உண்டாகக்கூடிய ஆனந்தத்துக்கும் இடம் இருக்கிறது.

''மற்றபடி, உன் வாழ்வின் பிரதான உட்பொருளைப் பொறுத்தவரை, எனக்கு எத்தகைய கவலையும் இல்லை. உன் கரத்தை அன்புடன் குலுக்குகிறேன்.

''ரீத்தா''

பாவெல் சிந்தனை வசப்பட்டவனாய்க் கடிதத்தைக் கிழித்தான்; ஜன்னல் வழியே கையை நீட்டினான். காகிதத் துண்டுகளைக் காற்றுத் தன் கையிலிருந்து பறித்து எறிவதை உணர்ந்தான்.

பொழுது விடிவதற்கு முன்னால், அவன் ரீத்தா நாட்குறிப்பு எழுதியிருந்த இரண்டு நோட் புத்தகங்களையும் படித்து முடித்து, அவற்றைக் காகிதத்தில் சுற்றிக் கட்டினான். கார்க்காவில், ஒக்குனேவ், பன்கிராத்தவ் முதலிய பல பிரதிநிதிகளுடன் அவன் இறங்கினான். ஆன்னாவுடன் தங்கியிருந்த தால்யாவை அழைத்துவர, ஒக்குனேவ் கீவுக்குப் போய்க்கொண்டிருந்தான். உக்

ரேனியக் கம்ஸமோலின் மத்தியக் கமிட்டி உறுப் பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பன்கிராத் தவுக்கும் கீவில் வேலை இருந்தது. அவர்களுடன் சென்று, ஷார்க்கீயையும் ஆன்னுவையும் பார்த்து வருவதென்று பாவெல் தீர்மானித்தான். அவன் கீவ் ஸ்டேஷன் தபால் நிலையத்தில், ரீத்தா வுக்கு பார்ஸலை அனுப்பிவிட்டு வெளியே வருவதற் குள், மற்றவர்கள் போய்விட்டனர். எனவே, பா வெல் தனியாகச் சென்றான். ஆன்னுவும் துபாவா வும் வசித்த வீட்டுக்கு முன்னல், டிராம் வண்டி நின்றது. பாவெல் படியேறி இரண்டாவது மாடி யை அடைந்தான். இடது புறத்தில் இருந்த ஆன்னு வின் அறைக் கதவைத் தட்டினுன். ஒரு பதிலும் இல்லை. அவள் அதற்குள்ளாக வேலைக்குப் போ யிருக்க முடியாது. ''அவள் தூங்கிக்கொண்டிருக்க வேண்டும்'' என்று அவன் எண்ணினுன். அடுத்த அறையின் கதவு திறந்தது. தூக்கக் கலக்கக் கண்களுடன், துபாவா வெளியே வந்தான். அவ னது முகம் சாம்பல் நிறமாக இருந்தது. அவனது கண்களின் கீழ்க் கரிய வட்டங்கள் காட்சி தந்தன. அவனிடமிருந்து வலியதொரு வெங்காய நாற்றம் வீசியது. மதுவின் மணத்தையும் பாவெலது கூர் மையான நாசி உணர்ந்தது. அரைவாசி திறந் திருந்த கதவு வழியே, பாவெல் படுக்கையில் கிடந்த ஒரு பெண்ணின் சதைப்பற்று மிகுந்த காலையும் தோட்களையும் கண்டான்.

பாவெலது பார்வையின் திசையைக் கண்ட துபாவா, கதவை உதைத்து மூடினுன்.

''நீ ஆன்னுவைப் பார்க்க வந்திருக்கிருயா?'' என்று அவன் கம்மிய குரலில் உசாவினுன். பாவெலின் விழிகளை நோக்காமலேயே, அவன் பேசினுன். ''அவள் இப்பொழுது இங்கு வசிப்பதில்லை. உனக்குத் தெரியாதா?''

கர்ச்சாகின், முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, துபாவாவைத் துருவித் துருவிப் பார்த்தான்.

''எனக்குத் தெரியாது. அவள் எங்குப் போயிருக்கிருள்?''

துபாவாவுக்கு ஆத்திரம் வந்தது.

''அதைப்பற்றி எனக்கு என்ன அக்கறை!'' என்று கத்தினுன். ஒரு ஏப்பம் வந்தது. மறைமுகமாகத் தன் எரிச்சலைக் காட்டிக் கொண்டு, அவன் கூறினுன்:

''அவளுக்கு ஆறுதல் கூற வந்தாயா? தேவையைப் பூர்த்திசெய்வதற்குத் தக்க சமயத்தில் வந்திருக்கிருய். இதுதான் உனக்கு அரிய சந்தர்ப்பம். அவள் உன்னை மறுக்கமாட்டாள்; கவலைப்பட வேண்டாம். உன்னை விரும்புவதாக, என்னிடம் பன்முறை சொல்லியிருக்கிருள். அத்தகைய அற்பப் பெண்கள் எப்படியெல்லாம் பேசுமோ, அப்படியெல்லாம் உன்னைப் பற்றிப் பேசியிருக்கிருள். போ, போ. காற்றுள்ள போதே தூற்றிக்கொள். உடலும் உயிரும் போல நீங்கள் சேர்ந்து வாழலாம்.''

பாவெலின் முகம் சிவந்தது. அவன் தன் உணர்ச்சிகளைக் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டு, தாழ்ந்த சுருதியில் பேசினுன்:

''இவ்வளவு தூரம் சீரழிந்து போவாயென்று நான் ஒரு பொழுதும் எதிர்பார்க்கவில்லை. ஒரு காலத்தில் நீ நல்லவனுகத்தான் இருந்தாய். ஏன் இப்படிக் கெட்டுப் போகிருய்?''

துபாவா சுவரில் சாய்ந்தான். சிமிட்டித் தரையில் நின்றதால், அவனது வெறும் பாதங்கள் சில்லிட்டுப் போயின போலும் அவனுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

கதவு திறந்தது. வீங்கிய கண்களும் உப்பிய கன்னங்களும் உடைய ஒரு மாது தோன்றினுள்.

''அன்பே! உள்ளே வா. ஏன் வெளியில் நின்று கொண்டிருக்கிருய்?''

அவள் மேலும் பேசுவதற்கு முன்னுல், துபாவா கதவை மூடினுன்; அதற்கு எதிராக நின்றுகொண்டான்.

''முதற் கோணல் முற்றுங்கோணல். எத்தகைய சகவாசத்தை வைத்துக் கொண்டிருக்கிருய்? இது உன்னை எங்குக் கொண்டுவிடும்?'' என்ருன் பாவெல். ஆனுல் துபாவா இனி எதற்கும் செவி கொடுக்கமாட்டான்.

''நான் யாருடன் படுத்து உறங்க வேண்டுமென்று எனக்குச் சொல்லப் போகிருயா? உன் உபதேசம் போதும். வந்த வழியே திரும்பிப்போ. துபாவா குடிகாரனுகிவிட்டான் என்றும், ஒழுக்கம் கெட்ட பெண்களைத் தழுவிப் படுக்கிருனென்றும் அவர்களிடம் போய்ச் சொல்; ஓடு, ஓடு.''

பாவெல் அவனிடம் சென்று, கட்டுப்படுத்திய உள்ளக் கிளர்ச்சி தொனிக்கும் குரலில் சொன்னான்:

''துபாவா, அவளைத் தொலைத்து முழுகு. நான் உன்னிடம் கடைசி முறையாகப் பேச விரும்புகிறேன்....''

துபாவாவின் முகம் கறுத்தது. அவன் ஒரு சொல் பேசாமல் திரும்பினான்; அறைக்குள் சென்றான்.

''பன்றி!'' என்று முணுமுணுத்துவிட்டுப் பாவெல் படிக்கட்டில் மெதுவாக இறங்கினான்.

இரண்டாண்டுகள் கழிந்தன. தயவு தாட்சண்யம் காட்டாத காலதேவன், நாட்களையும் மாதங்களையும் கணக்கிட்டுக்கொண்டேயிருந்தான். ஆனால், வேகமும் கவர்ச்சியும் வர்ண ஜாலமும் செறிந்த வாழ்வு, நாள்தோறும் புதுமையைப் படைத்தருளியது. எனவே, மேற்பார்வைக்கு வேற்றுமை இல்லாதுபோல் தோன்றினாலும், எந்த இரண்டு நாட்களும் உண்மையில் ஒரு மாதிரியாக இல்லை. கணக்கில்லாத செல்வத்துடன் கூடிய இந்தப் பரந்த நிலத்தின் விதியை, உலகத்திலேயே முதன் முதலாகத் தம் கையிலெடுத்துக் கொண்டுள்ள பதினாறு கோடி மக்கள் வாழும் இந்த மகத்தான தேசம், போரில் அழிந்த பொருளாதாரத்துக்குப் புத்துயிர் அளிக்கும் மிகப் பெரிய பணியில் ஈடுபட்டிருந்தது. தேசத்தின் சக்தி பெருகுகிறது. அதன் நாடிகளில் புதிய

தெம்பு உண்டாயிற்று. கவனிப்பாரற்றுக் கிடந்த பாக்டரிகளின் பரிதாபக் காட்சி பழங்கால நினைவாயிற்று.

இந்த இரண்டு ஆண்டுகளிலும், பாவெல் இடைவிடாமல் உழைத்தான். அவன் நிம்மதியாக வாழ்வதில் நாட்டம் கொண்டவன் அல்ல; ஆர அமரக் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்திருப்பதையும், மணி பத்து அடித்தவுடன் நித்திரையின் அணைப்பை நாடுவதையும் அவன் விரும்பியவனல்ல. தானோ, பிறரோ, ஒரு வினாடியைக்கூட விரயம் செய்யக் கூடாதென்பது அவன் கருத்து. அவனது வாழ்வில் ஒரு அசாத்திய வேகம் இருந்தது.

அவன் இன்றியமையாத நேரமே தூங்கினான். பல நாட்கள், இரவு நெடுநேரமானபின்கூட, அவனது அறையில் விளக்கு எரிந்தது. உள்ளே போனால், மேஜையைச் சுற்றிச் சிலர் உட்கார்ந்து கவனமாகப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. அவர்கள் ''மூலதனம்'' என்ற நூலின் மூன்றும் பாகத்தை, இரண்டே ஆண்டுகளில், தீர்க்கமாகப் பயின்று விட்டனர். முதலாளித்துவச் சுரண்டலின் தந்திர முறையை அவர்கள் இப்பொழுது நன்கறிந்திருந்தனர்.

இப்பொழுது பாவெல் வேலை செய்து கொண்டிருந்த பிரதேசத்துக்கு ஷேன்யா ரஸ்வலீகின் வந்தான். அவனை மாகாணக் கமிட்டி அனுப்பியிருந்தது. ஏதாவது ஒரு வட்டாரத்தின் கம்ஸமோல் ஸ்தாபனத்துக்கு அவனைக் காரிய

தரிசியாக நியமிக்கலாமென்றும் அது சிபார்சு செய்திருந்தது. ரஸ்வலீகின் வந்தபொழுது, பாவெல் வெளியூர் போயிருந்தான். அவன் இல்லாத பொழுது, ரஸ்வலீகினை ஒரு வட்டாரத்துக்கு அனுப்பிவிட்டது. பாவெல் திரும்பி வந்தவுடன் இந்தத் தகவலை அறிந்தான்; ஆனால் அதைப்பற்றி ஒரு விமர்சனமும் செய்யவில்லை.

ஒரு மாதம் சென்றபின், பாவெல், எதிர் பாராத விதமாக ரஸ்வலீகினது வட்டாரத்துக்கு விஜயம் செய்தான். அங்கு கிடைத்த சாட்சியம், ரஸ்வலீகினின் சீரழிவைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானதாயிருந்தது: அவன் குடித்தான்; இச்சகம் பாடிப் பிழைப்பவரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்; மனச்சாட்சிப்படி நடக்கக்கூடிய உறுப்பினரின் சுயமுயற்சியை நசுக்கினான். பாவெல் இந்தச் சாட்சியத்தைத் தலைமைக் குழுமுன் சமர்ப்பித்தான். ரஸ்வலீகினைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டுமென்று குழு உறுப்பினர் கூறியபொழுது, பாவெல் எழுந்து நின்றான்.

''அவனை இறுதியாக வெளியேற்ற வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்'' என்று கூறி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினான்.

இந்தத் தீர்மானத்தைக் கண்டு, இதரக் குழு உறுப்பினர் அதிர்ச்சி அடைந்தனர். குறிப்பிட்ட சூழ்நிலையில், இது அளவுக்கு மீறிய தண்டனை என்று அவர்களுக்குத் தோன்றியது.

''இந்தப் போக்கிரியை நீக்கவேண்டும். கண்ணியமான மனிதனுக மாறுவதற்கு அவனுக்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனல் அவன் கம்ஸமோலில் ஒரு அந்நியனுகவே இருந்து வந்திருக்கிருன்'' என்று பாவெல் கூறினன். அதன்பின் அவன் பெரிஸ்தோவ் சம்பவங்களைப் பற்றிக் குழுவிடம் எடுத்துரைத்தான்.

''நான் கண்டிக்கிறேன்!'' என்று ரஸ்வலீகின் கத்தினன். ''கர்ச்சாகின் சொந்த விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதற்கே முயற்சிக்கிருன், அவன் சொல்வதெல்லாம் வீண் வம்புப் பேச்சு. அவன் தன் குற்றச்சாட்டுகளுக்கு உண்மைகளையும் தஸ்தாவேஜுகளையும் ஆதாரம் காட்ட வேண்டும். கர்ச்சாகின் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருந்தான் என்று நான் உங்களிடம் கதை சொல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் அவனை நீக்குவீர்களா? அவன் எழுத்து மூலம் ருஜு கொடுக்க வேண்டும்.''

''கவலைப்படாதே. அவசியமான ருஜுக்கள் அனைத்தையும் நான் தருவேன்'' என்று பாவெல் விடை தந்தான்.

ரஸ்வலீகின் அறையை விட்டுச் சென்முன். அரைமணி நேர விவாதத்துக்குப்பின், தலைமைக் குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ''ரஸ்வலீகின் கம்ஸமோலில் அங்கத்தினன் ஆக இருப்பதற்கு தகுதியற்றவன் என்றும், அவனை விலக்க வேண்டுமென்றும்'' தீர்மானம் கூறியது. பாவெல் வெற்றியடைந்தான்.

கோடை வந்தது. அத்துடன் விடுமுறைக் காலமும் வந்தது. பாவெலின் சக ஊழியர்கள் ஒரு வர் பின் ஒருவராகத் தமக்கு உரிய விடுமுறையைப் பெற்றுச் சென்றனர். உடல் நலனைக் கருதிச் சிலர் கடற்கரைக்கு அனுப்பப்பட்டனர். அவர் களுக்கு ஆரோக்கிய விடுதிகளில் இடவசதியும், நிதி உதவியும் பாவெல் பெற்றுக் கொடுத்தான், அவர்கள் வெளுத்துக் களைத்துச் சென்றனர். ஆனல் விடுமுறைகால ஓய்வும் பராமரிப்பும் கிடைக்க இருப்பதை எண்ணி, அவர்கள் ஆனந்தம் அடைந்தனர். அவர்களது வேலையின் சுமை, பாவெ லின் தோட்கள் மீது விழுந்தது. அவன் இந்தக் கூடுதலான பாரத்தை, ஒரு முணுமுணுப்பு இல் லாமல் நிர்வகித்தான். விடுமுறை முடிந்தவுடன், அவர்கள் கதிரொளியில் கன்றிப் போய், உயிர்த் தளிர்ப்பும் செய்திறனும் நிறையப் பெற்றுத் திரும்பினுர்கள். அதன்பின், வேறு சிலர் விடுமுறை எடுத்துச் சென்றனர். கோடைக்காலம் முழு வதும், அலுவலகத்தில் போதுமான ஊழியர் இல்லாத நிலைமை நீடித்தது. ஆனல் வாழ்வு அதன் துரித கதியை மட்டுப்படுத்தவில்லை; பாவெலால் ஒருநாள்கூட வேலைக்கு வராமலிருக்க முடியவில்லை.

கோடை கழிந்தது. இலையுதிர் காலமும் குளிர் காலமும் வருகின்றன என்ருலே பாவெ லுக்குப் பயம்தான். ஏனெனில், அந்தக் காலங்க ளில் அவனது உடல் அவனை மிகவும் வருத்தியது.

அந்த வருடத்தில், அவன் கோடையின் வருகையை விசேஷ ஆவலுடன் எதிர்பார்த்தான். ஏனென்றால், தன் பலவீனத்தைத் தனக்குள் ஒப்புக்கொள்வதே அவனுக்கு வேதனை தந்தபோதிலும், ஒவ்வொரு வருஷமும் அவனுடைய பலம் தேய்ந்து வந்ததை அவன் உணர்ந்தான். அவன் முன்னால், இரண்டே வழிகள் இருந்தன: அவனது வேலைக்குத் தேவையான தீவிர முயற்சியை அவனால் தாங்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டு, வேலைக்குத் தகுதியற்றவனாக ஒதுங்கி விடுவது ஒன்று. அல்லது அவனால் முடிந்த வரையில், உரிய வேலையைச் செய்து கொண்டிருப்பது. பிந்தைய வழியைத்தான் அவன் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

ஒருநாள், கட்சியின் பிரதேசக் கமிட்டியின் தலைமைக்குழு கூடியிருந்தது. தலைமறைவாயிருந்து கட்சிப் பணிபுரிந்த பழந்தோழரும், இப்பொழுது பிரதேசத்தின் பொது சுகாதாரத்துக்குப் பொறுப்பாயிருந்தவனுமான டாக்டர் பார்த் தேலீக் அவனருகில் வந்து உட்கார்ந்தான்.

''கர்ச்சாகின், நீ ஒரு மாதிரியாக இருக்கிறாய். உன் உடல் நலன் எப்படி உள்ளது? உன்னை வைத்தியக் குழு பரீட்சித்துவிட்டதா? பரீட்சை செய்துகொள்ளவில்லையா! நானும் அப்படித்தான் நினைத்தேன். நண்பா, உன்னை நன்றாகச் சோதித்துக் குணப்படுத்த வேண்டுமென்று தோன்றுகிறது. வியாழக்கிழமை மாலை வா. நாங்கள் சோதித்துப் பார்க்கிறோம்'' என்று டாக்டர் கூறினான்.

அந்த நாளில் பாவெல் போகவில்லை. அவனுக்கு நிறைய வேலை இருந்தது. ஆனால் பார்த்தேலீக் அவனை மறக்கவில்லை. சில நாட்கள் கழித்து, அவனே வந்து, பாவெலை வைத்தியக் குழுவிடம் அழைத்துச் சென்றான். அந்தக் குழுவில் அவன் நரம்பு நோய்க்கூறு வல்லுனனுகப் பங்கெடுத்தான். பாவெல் ''உடனடியாக ஓய்வு எடுத்துக் கிரீமியாவில் நீண்டகாலச் சிகிச்சைபெற வேண்டுமென்றும் அதன் பிறகும் முறையான வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்றும் இவ்வாறு செய்யத் தவறினல், அபாயகரமான விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதென்றும்'' வைத்தியக் குழு கருத்துத் தெரிவித்தது.

இந்தச் சிபார்சுக்கு முன்னல், பாவெலை வருத்திய நோய்களின் நீண்ட ஜாப்தா லத்தீன் மொழியில் குறிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து பாவெலுக்கு ஒரே ஒரு விஷயம்தான் விளங்கியது. அவனது பிரதான கோளாறு, கால் சம்பந்தமானது அல்லவென்றும், மத்திய நரம்பு மண்டலத்தில் இருக்கிறதென்றும், மத்திய நரம்பு மண்டலம் பெருஞ்சேதம் அடைந்திருக்கிறதென்றும் அவன் அறிந்து கொண்டான்.

பார்த்தேலீக், வைத்தியக் குழுவின் முடிவை தலைமைக் குழுவின் முன் வைத்தான். பாவெலை உடனடியாகச் சகல வேலைகளிலிருந்தும் விடுவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஒருவரும் எதிர்க்கவில்லை. ஆனல், ஸ்தாபன இலாகாவின் முதல்வனை ஸ்பித்னேவ் திரும்பி வரும்

வரை தன் விடு முறையை ஒத்திப்போட வேண்டு மென்று பாவெல் யோசனை கூறினன். தலைமை இல்லாத நிலையில் கமிட்டி கஷ்டப்படுவதை அவன் விரும்பவில்லை. பார்த்தேலிக், தாமதம் செய்யக் கூடாதென்று வற்புறுத்திய போதிலும், தலை மைக் குழு பாவெலின் யோசனைக்கு இணங்கியது.

ஆகக்கூடி, மூன்றுவார காலத்தில், பாவெல் விடுமுறை பெற்றுச் செல்வான். அவனது வாழ் நாளில் இதுவே முதல் விடுமுறை. யெவ்பத்தோரி யாவிலுள்ள ஆரோக்கிய விடுதி ஒன்றில், அவ னுக்கு இடவசதி ஏற்பாடாகிவிட்டது. இந்தச் சேதியைத் தெரிவிக்கும் கடிதம் அவனது மேஜையில் இருந்தது.

இந்த இடைக்காலத்தில், அவன் முன்னைவிட வேகமாகவும் உக்ரமாகவும் வேலைசெய்தான். பிர தேசக் கம்ஸமோலின் முழுக் கூட்டம் நடத்தி ஞன்; ஆங்காங்கு இருந்த குறைகளை நீக்குவதில் தயவு தாட்சண்யமில்லாமல் உடலைக் கஷ்டப் படுத்தி உழைத்தான். அப்பொழுதுதானே, அவன் மன அமைதியுடன் ஆரோக்கிய விடுதிக்குச் செல்ல முடியும்?

கடலை முதன் முதலில் தரிசிப்பதற்காக அவன் கிளம்பவிருந்த சமயத்தில், ஒரு அருவருப் பான சம்பவம், நம்ப முடியாத சம்பவம் நடை பெற்றது.

நாள் வேலையை முடித்துவிட்டு, ஒரு கூட்டத் தில் கலந்துகொள்வதற்காகக் கிளர்ச்சி-பிரசாரப் பகுதிக்குப் பாவெல் சென்றிருந்தான். அவன்

அங்குச் சென்ற பொழுது, அறையில் ஒருவரும் இல்லை. எனவே, மற்றவர்கள் வந்து கூடும்வரை காத்திருப்பதற்காக, அவன் திறந்த ஜன்னலுக்கு அருகில், ஜன்னல் கட்டைமீது உட்கார்ந்திருந்தான். அந்த இடம், புத்தகப் பீரோவுக்குப் பின்னல் இருந்தது. சிறிது நேரமானபின், பலர் அறைக்குள் வந்தனர். புத்தகப் பீரோவுக்குப் பின்னுலிருந்த பாவெலால் வந்தவர்களைப் பார்க்க முடியவில்லை. ஆனல் ஒரு குரலை அவன் புரிந்து கொண்டான். அது பிரதேசப் பொருளாதார கவுன்ஸிலுக்குப் பொறுப்பாயிருந்த பாய்லோவின் குரல். பாய்லோ உயரமானவன்; பகட்டான ராணுவக் கோலத்துடன் வெளிச்சம்போடும் சுந்தர புருஷன். குடிப்பதிலும், பெண்களுக்குப் பின்னல் சுற்றித்திரிவதிலும் பிரசித்தி பெற்றிருந்தான்.

ஒரு காலத்தில், பாய்லோ கொரில்லா வீரனுயிருந்தான். சந்தர்ப்பம் கிடைத்தபொழுதெல்லாம், டஜன் கணக்கான மாஹ்னோ ஆட்களின் தலைகளைச் சீவியதைப் பற்றிச் சிரித்துக்கொண்டே பெருமையடிக்கத் தவறமாட்டான். ஒரு நாள், ஒரு கம்ஸமோல் மங்கை, புலம்பிக்கொண்டே பாவெலிடம் வந்தாள். பாய்லோ அவளைத் திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்தானென்றும், ஒரு வாரம் அவளுடன் வாழ்ந்தபின் அவளுக்குத் துரோகம் செய்து விட்டானென்றும், இப்பொழுதெல்லாம் சந்தித்தால் பராமுகமாயிருக்கிருனென்றும் அவள் பாவெலிடம் கூறினுள்.

இந்த விவகாரம் கண்டிரோல் கமிஷனுக்கு முன் வந்தபொழுது, பாய்லோ நழுவிவிட்டான். அந்தப் பெண் ருஜுக் காட்ட முடியாத காரணத்தால் அவன் தப்பினான். ஆனால் பாவெல் அவனை நம்பி னான். இப்பொழுது தான் அங்கிருப்பதை அறி யாமல் பிறர் மனம் விட்டுப் பேசுவதை பாவெல் கேட்டான்.

''நன்று பாய்லோ, எப்படியிருக்கிறது? உனது சமீப காலச் சாதனை என்ன?''

இவ்வாறு உசாவியவன் க்ரீபோவ். இவன் பாய்லோவின் உயிர்த்தோழரில் ஒருவன். ஏதோ ஒரு காரணத்தால், க்ரீபோவ் ஒரு பிரசாரகனாகக் கருதப்பட்டான். உண்மையில், அவன் ஒன்றுமறி யாதவனாகவும் குறுகிய மனப்பான்மைக்கு உரிய வனாகவும் மடையனாகவும் இருந்தான். எனினும், அவன் பிரசார ஊழியன் என்று அழைக்கப்படு வதில் பெருமை கொண்டான். ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும், தன் அந்தஸ்தை நினைவூட்டுவதில் அவன் குறியாயிருந்தான்.

''நண்பா, நீ என்னைப் பாராட்டவேண்டும். நேற்று, இன்னொரு வெற்றி அடைந்தேன். கா ரொத்தாயெவா என் வசப்பட்டாள். அவளை வேட்டையாடுவது வீண் என்றாயே? அதுதான் உன் தவறு. நான் ஒரு பெண்ணுக்குப் பின்னால் போனால், உடனேயோ கொஞ்ச காலம் கழித்தோ அவளை அடைவது உறுதி'' என்று பாய்லோ பீத் திக் கொண்டான். ஒரு ஆபாசமான சொற்றொட ரையும் அவன் உபயோகித்தான்.

பாவெல் கிளர்ந்தெழுந்தான். அவனது நரம்புகள் சில்லிட்டுப்போய், உடலெல்லாம் நடுக்கமெடுத்தது. ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சி ஏற்படும் பொழுதெல்லாம் அவனுக்கு இத்தகைய நடுக்கம் ஏற்படுவதுண்டு. காரொத்தாயெவா, மாதர் இலாகாவுக்குப் பொறுப்பாய் வேலை செய்தாள். பாவெல் வந்தபொழுதே, அவளும் இந்த ஊருக்கு வந்தாள். இனிமையான சுபாவத்தை உடையவள்; சுறுசுறுப்பாகச் செயல்படும் கட்சி ஊழியர்; அவளிடம் உதவியும் யோசனையும் பெறுதற்கு வந்த பெண்களிடம் அன்பாகவும் இங்கிதமாகவும் நடந்துகொள்ளும் பெண்; கமிட்டியில் உள்ள சக ஊழியர்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமானவள். அவளுக்குத் திருமணமாகவில்லை என்பதைப் பாவெல் அறிந்திருந்தான். பாய்லோ அவளைப் பற்றித்தான் பேசினான் என்பதில் பாவெலுக்கு ஐயமில்லை.

''பாய்லோ, நீ கதை கட்டுகிறாய்! அவள் அம்மாதிரி சிக்கமாட்டாள்.''

''நான் கதை புனைகிறேனா? நான் எப்படிப் பட்டவனென்று எண்ணினாய்? இதைவிடக் கடினமான விஷயங்களைச் சாதித்தவன் நான். எப்படியென்று தெரிந்தால் போதும். ஒவ்வொருவரையும் தகுதியான தோரணையில் அணுகவேண்டும். சிலர் உடனே இணங்கிவிடுவார்கள்; ஆனால் அப்படிப்பட்ட பெண்களால் பயனில்லை. வேறு சிலர், இணங்கிவருவதற்கு ஒரு மாதம் ஆகிறது. அவரவர் மனப்பான்மையைப் புரிந்து கொள்வது

தான் முக்கியமான விஷயம். தகுதியான முறையில் அணுகவேண்டும். அட, போ! இதுவே ஒரு முழுமையான விஞ்ஞானம். இத்தகைய விவகாரங்களில் நான் ஒரு பேராசிரியர்! ஹோ! ஹோ! ஹோ!''

பாய்லோ சுயதிருப்தியுடன் உமிழ்நீரை ஒழுகவிட்டுக் கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்திருந்தவர்கள், மேலும் ருசிகரமான விவரங்களைக் கேட்பதற்கு ஆவலாகி, அவனைத் தூண்டினர்.

பாவெல் எழுந்து நின்றான். அவனது இதயம் மார்புக் கூட்டை அசுரவேகத்தில் தாக்கியது. அவன் மணிக்கட்டை இறுகமூடினான்.

''வாடிக்கையான இரையைக் கொண்டு இவளைச் சிக்கவைப்பது கடினம் என்பதை அறிந்திருந்தேன். ஆனால்வேட்டையைக் கைவிட விருப்பமில்லை. மேலும் அவளை அடைவேன் என்று கூறிக் க்ரீபோவிடம் ஒரு டஜன் ஒயின் பாட்டில் பந்தயம் கட்டியிருந்தேன். எனவே, அண்டிக்கெடுக்கும் உபாயத்தைக் கடைப்பிடித்தேன் என்று சொல்லலாம். அவளைப் பார்ப்பதற்காக ஓரிரண்டு தடவை சென்றேன். ஆனால் அவள் என்னை ஒரு விதமாகப் பார்க்கத் தொடங்கினாள். மேலும் என்னைப்பற்றிக் கேவலமாகப் பேசப்பட்டுவருகிறது. இதில் கொஞ்சம் அவள் காதுகளிலும் விழுந்திருக்கலாம்.... சரி, சுருக்கமாகச் சொல்வதென்றால், நேரான தாக்குதல் தோல்வியுற்றது. எனவே, பக்கவாட்டில் தாக்கும் உபாயத்தைக் கடைப்பிடித்தேன். ஹோ! ஹோ! அது அருமையான

தந்திரம். நான் என் சோகக் கதையை அவளிடம் கூறினேன். எப்படிப் போர்க்களத்தில் சமர்செய்தேன், நாடெல்லாம் அலைந்தேன், பல இடுக்கண்களை அனுபவித்தேன், என்பதையெல்லாம் விவரித்தேன். சரியான பெண் ஒருத்தி கிடைக்காத காரணத்தால், என்னை நேசிப்பதற்கு எவருமில்லாமல் தன்னந்தனியாகத் தவிக்கிறேன் என்று கூறினேன்.... இந்த மாதிரி கதைகளை மேலும் மேலும் விட்டுக்கொண்டே போனேன். இதன்மூலம் அவளது பலவீனத்தை நான் தொட்டு விட்டேன். அவளிடம் ரொம்பக் கஷ்டப்பட்டேன் என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஒரு சமயம், இந்த அற்ப வேலையை விட்டுத் தொலைக்கலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனால் அதற்குள் இது ஒரு கொள்கைப் பிரச்சினை ஆகிவிட்டது. எனவே, கொள்கைக்காக நான் உறுதியாயிருக்க வேண்டியதாயிற்று. இறுதியாக, அவளது எதிர்ப்பைத் தகர்த்தெறிந்தேன். என்ன நினைக்கிறாய்? அவள் கைபடாத கன்னிப் பெண்! ஹா! ஹா! ஓய்! ஓய்! என்ன வேடிக்கை!''

இவ்வாறு, பாய்லோ தனது அருவறுக்கத் தக்க கதையை விவரித்துக்கொண்டிருந்தான்.

கோபாவேசம் பொங்கும் நிலையில், பாவெல், பாய்லோவுக்கருகில் தோன்றினான்.

''அட, பன்றி!'' என்று அவன் கர்ஜித்தான்.

''நான் பன்றியா, அல்லது பிறர் பேசுவதை ஒட்டுக்கேட்கும் நீ பன்றியா?''

பாவெல் வேறு ஏதோ சொன்னான் போலும்.

குடிவெறியில் இருந்த பாய்லோ, பாவெலின் சட்டையைப் பற்றினன். "அவமதிக்கிருயா?" என்று கத்திக்கொண்டே, பாவெல்மேல் குத்து விட்டான்.

பாவெல், ஓக் மரத்தில் செய்த ஒரு கனமான நாற்காலியை எடுத்து, ஒரே அடியில் பாய்லோவைக் கீழே தள்ளினன். பாவெல் கையில் துப்பாக்கி இல்லாதது, பாய்லோவுக்கு அதிர்ஷ்டமாய் முடிந்தது. துப்பாக்கி இருந்திருந்தால் அவன் பிணமாகி இருப்பான்.

ஆனல் ஒரு அர்த்தமில்லாத, நம்ப முடியாத சம்பவம் நிகழ்ந்தது. கிரிமீயாவுக்குப் புறப்பட வேண்டிய நாளில், பாவெல் ஒரு கட்சிக் கூட்டத்தினருக்கு முன்பு குற்றவாளியாக நிறுத்தப்பட்டான்.

கட்சி உறுப்பினர் அனைவரும் நகரத் தியேட்டரில் கூடியிருந்தனர். பாய்லோ விவகாரம், பெரிய பரபரப்பை உண்டாக்கியிருந்தது. கூட்ட விசாரணை, கட்சி ஒழுக்கம், கட்சியின் ஒழுக்க நெறிகள், சொந்த உறவுகள் ஆகியவற்றைப்பற்றிய ஆழமான விவாதமாக மாறியது. அந்தச் சம்பவம் பின்னுக்குத் தள்ளப்பட்டது; அதில் அடங்கியுள்ள பொதுப் பிரச்சினைகளின் விவாதத்துக்கு, இந்த சம்பவம் அடிகோலியது. பாய்லோ மிகவும் துடுக்காக நடந்துகொண்டான்; கேலியும் வன்மமும் கொப்பளிக்கும் வகையில் நகைத்தான்; பொது ஜனக் கோர்ட்டில் பிராது கொடுக்கப்போவதாகப் பறைசாற்றினன். அவனது மண்டையில் ஓங்கி

அடித்ததற்காகப் பாவெலைச் சிறையில் அடைக்கச் செய்வேனென்று பொறிந்தான். எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க முடியாதென்று திட்டவட்டமாகக் கூறினான்.

''என்னைப் பயன்படுத்தி வம்பு அளக்கலாமென்று எண்ணுகிறீர்களா? அதெல்லாம் முடியாது. நீங்கள் என் மீது என்ன குற்றம் வேண்டுமானாலும் சுமத்தலாம். ஆனால் உண்மை என்னவென்றால், இந்தப் பெண்கள் இஷ்டப்படி நான் ஆடாமல் இருப்பதால், அவர்களது இச்சைக்கு நான் இணங்காமலிருப்பதால், என்னை ஒழிக்க அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கு ஒன்றுக்கும் உதவாது. 1918ம் ஆண்டாயிருந்தால், நான் அந்தக் கர்ச்சாகின் வெறியனுக்குத் தனிப்பட்ட முறையில் பாடம் கற்றுக்கொடுத்திருப்பேன். அவ்வளவுதான். இனி நான் இல்லாமலேயே வழக்கை நடத்துங்கள்'' என்று கூறிவிட்டு அவன் ஹாலிலிருந்து வெளியேறினான்.

அதன்பின், அவைத் தலைவர், நடந்ததைக் கூறும்படி பாவெலிடம் கோரினார். பாவெல் தன் உணர்ச்சிகளைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு, நிதானமாகப் பேசினான்.

''என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போனதே, இந்தச் சம்பவத்துக்குக் காரணம். ஆனால் நான் மூளையை உபயோகியாமல், புஜங்களைப் பயன்படுத்திக் காரியம் செய்த காலம் உருண்டோடிவிட்டது. இந்தச் சம்பவம் தற்

செயலாக நிகழ்ந்துவிட்டது. என்ன செய்கிறேன் என்பதை உணராமல், நான் பாய்லோவை அடித்து வீழ்த்தினேன். கடந்த சில வருஷங்களில், நான் 'கொரில்லா நடவடிக்கையில்' ஈடுபட்டது இந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான். அந்த அடி பாய் லோவுக்குத் தேவை தான் என்றாலும் நான் என் நடவடிக்கையைக் கண்டிக்கிறேன். பாய்லோ போன்ற நபர்கள், அருவறுக்கத்தக்க ஆட்கள். ஒரு புரட்சிக்காரன், ஒரு கம்யூனிஸ்ட், அதே சமயத்தில் ஆபாச மிருகமாகவும் துஷ்டப் போக் கிரியாகவும் இருக்க முடியுமென்பதை நான் ஒரு பொழுதும் நம்ப முடியாது. நமது கம்யூனிஸ்ட் தோழர்கள், சொந்த வாழ்வில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற பிரச்னையில் கவனம் ஏற்பட்டிருப்பதே, இந்த விவகாரத்தின் ஒரு நல்ல அம்சம்.''

பாய்லோவைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டு மென்ற தீர்மானத்தை ஆதரித்துப் பெரும் பாலான உறுப்பினர்கள் வோட் செய்தார்கள். பொய்ச் சாட்சியம் அளித்ததற்காக க்ரீபோவ் கடுமையான கண்டனத்துக்கு உள்ளானுன்; மீண் டும் குற்றம் செய்தால், அவனைக் கட்சியிலிருந்து விலக்குவோமென்று எச்சரிக்கையும் செய்தனர். அந்த உரையாடலில் கலந்து கொண்ட இதரர், தமது தவற்றை ஒப்புக்கொண்டனர். அவர்கள் கண்டிக்கப்பட்டார்கள்.

பாவெலது நரம்புகளின் நிலையைப் பற்றிப் பார்த்தேலீக் கூட்டத்தில் விளக்கினுன். இந்த

வழக்கின் புலன் விசாரணைக்காகக் கட்சியால் நிய மிக்கப்பட்டிருந்த தோழர் பாவெலைக் கண்டிக்க வேண்டுமென்று பிரேரித்தபொழுது, கூட்டம் அந்தத் தோழரை வன்மையாகக் கண்டித்தது. அவரும் தன் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார். பாவெல் தவறு செய்யவில்லை என்று முடிவு கட்டப்பட்டது.

சில நாட்களுக்குப் பின், பாவெல் கார்க்கவுக்குப் போய்க் கொண்டிருந்தான். உக்ரேனியக் கம்ஸமோலின் மத்தியக் கமிட்டியின் கீழ் வேலை செய்வதற்கு தனக்கு அனுமதி தர வேண்டுமென்று அவன் பன்னிப்பன்னிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்கக் கட்சியின் பிரதேசக் கமிட்டி முடிவு செய்தது. அவனுக்கு நல்லதொரு நற்சாட்சிப் பத்திரமும் கிடைத்தது. அக்கீம், மத்தியக் கமிட்டியின் செயலாளரில் ஒருவனாக இருந்தான். கார்க்கவைச் சேர்ந்தவுடன் பாவெல் அக்கீமைச் சந்தித்துத் தன் கதை முழுவதையும் எடுத்துரைத்தான்.

அக்கீம், பாவெலுக்கு வழங்கப்பட்டிருந்த நற்சாட்சிப் பத்திரத்தைப் படித்தான். அவன் ''கட்சியிடம் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டு இருப்பதாக'' அது கூறியது. ''ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், அவன் நிதானமான கட்சி ஊழியன் தான். எனினும், சில சந்தர்ப்பங்களில் தன் சுய கட்டுப்பாட்டை இழக்கக் கூடியவன். அவனது நரம்புக் கோளாறே இந்தப் பலவீனத்

துக்குக் காரணம்'' என்றும் அந்த நற்சாட்சிப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தது.

''பாவெல், நல்லதொரு நற்சாட்சிப் பத்திரம், இந்த விஷயத்தால் களங்கமடைந்து விட்டது. ஆனால் பரவாயில்லை. நம்மில் மனோபலம் மிகுந்தவருக்குக்கூட இப்படிப்பட்ட பலவீனம் உண்டாகிறது. தெற்கே போய், உன் உடம்பைத் தேற்றிக்கொள். திரும்பி வந்தபின், உன் வேலையைப் பற்றிப் பேசுவோம்'' என்று அக்கீம் கூறினான்.

அக்கீம் பாவெலை இதயங்கனிந்த அன்புடன் கைகுலுக்கினான்.

மத்தியக் கமிட்டியின் ''கம்யூனர்'' என்ற ஆரோக்கிய விடுதி. கொத்துக்கொத்தாக வளர்ந்த ரோஜாப் பாத்திகளுக்கிடையே, திராட்சைக் கொடிகள் பரவிப் படர்ந்த வெண்மையான கட்டிடங்கள். மேல்நோக்கிப் பாயும் பிரகாசமான நீரூற்றுகள் நந்தவனங்களின் அழகுக்கு அழகு செய்கின்றன. எங்குப் பார்த்தாலும் வெண்மையான கோடை ஆடைகளையோ ஸ்நான உடுப்புகளையோ அணிந்து உல்லாசமாகப் பொழுதுபோக்கும் ஜனங்கள்.... ஒரு பெண் டாக்டர், அவனது பெயரைப் பதிவுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டாள். மூலையிலிருந்த கட்டிடத்தில் ஒரு விசாலமான அறை அவனுக்குக் கிடைத்தது. கண்களைப் பறிக்கும் வெண்மையான படுக்கை; கைபடாத

தூய்மை; சாந்தி; சலக்கமடையாத அமைதி; பரமானந்தமான அமைதி.

புத்துணர்ச்சி ஊட்டிய ஸ்நானத்துக்குப்பின் ஆடையை மாற்றிக்கொண்ட பாவெல், கடற் கரைக்கு விரைந்தான்.

அவனுக்குமுன், அமைதியும் மாட்சிமையும் துலங்கக் கடல் காட்சி தந்தது. அது கருமை வாய்ந்த நீலநிறத்தில், மெருகிடப்பட்ட சலவைக் கல் தளம்போலத் தொடுவானம் வரை நீண்டு விரிந்துகிடந்தது. அதன் மற்றொரு கரை எங்கோ வெகு தூரத்தில் நீலநிற புகை மண்டலத்துக்கிடையே ஒளிந்து கொண்டிருக்கிறது. குழம்பாக உருகியிருந்த கதிரவன், அக்கடலின் மேல் செவ்வொளியை வீசியிருந்தான். அந்தக் காலைப் பனியினூடே, மலைத்தொடரின் ஸ்தூலமான ஆகிருதி மங்கலாகப் புலப்பட்டது. புதுமையான சக்தியையும் வீரியத்தையும் புகட்டும் கடற்காற்றைப் பாவெல் ஆழச் சுவாசித்தான். அந்த நீலத் திரை கடலின் எல்லையில்லாச் சாந்தி, அவனது காட்சிப் புலனுக்கு விருந்தாய் அமைந்தது.

ஒரு அலை, பொன்மயமான கடற்கரை மணலை நக்கிக் கொண்டே, மெதுவாக உருண்டோடிவந்து, அவனது பாதங்களைத் தொட்டது.

அத்தியாயம் ஏழு

பல்துறை வைத்தியசாலையின் தோட்டம், மத்தியக் கமிட்டியின் ஆரோக்கிய விடுதிக்கு அடுத்

தாற்போலிருந்தது. விடுதியில் வசித்த நோயாளிகள், கடற்கரையிலிருந்து திரும்பிவருவதற்கு இந்தத் தோட்டத்தைக் குறுக்குவழியாக உபயோகித்தார்கள். இங்கு, ஒரு உயரமான சுக்காங்கல் சுவருக்குப் பக்கத்தில், ஒரு மரம் விசாலமாக வியாபித்து வளர்ந்திருந்தது. அதன் நிழலில் அமர்ந்து ஓய்வு எடுப்பதையே பாவெல் பெரிதும் நாடினான். இவ்விடத்திற்குப் பொதுவாக யாரும் வருவதில்லை. அந்தப் பெரிய சுகவாசஸ்தலத்தின் உல்லாசக் கூட்டத்திடையே இடிபடுவதை அவன் விரும்பவில்லை. அதற்கு மாறாக, இந்த அமைதியான மூலையில், மரநிழலில் இருந்துகொண்டு, தோட்டப்பாதைகளில் உலவிய கூட்டத்தின் கலகலப்பைக் கண்டு ரசித்தான்; மாலை நேரங்களில், பாண்டு இசையைப் பருகினான்.

இன்றும் அவன் தனக்குப் பிடித்தமான இடத்தை அடைந்தான். அப்பொழுதே கடலில் குளித்து வந்ததாலும் சூரிய உஷ்ணத்தாலும் களைத்துச் சோர்ந்திருந்த பாவெல், ஒரு அசைந்தாடும் நாற்காலியில்வசதியாகக்கைகால்களைநீட்டிக்கொண்டு, சிறு துயிலில் ஆழ்ந்தான். அவனது ஸ்நானத் துண்டும், அவன் படித்துக்கொண்டிருந்த "ஆயுத எழுச்சி" என்ற பூர்மனேவ் எழுதிய நூலும், பக்கத்திலிருந்த நாற்காலியில் கிடந்தன. ஆரோக்கிய விடுதிக்கு வந்து சில நாட்களாகிவிட்டன; ஆனால் அவனது நரம்புகளின் உபத்திரவம் நீங்கவில்லை; தலைவலியும் நீடித்தது. அவனது நோய், ஆரோக்கிய விடுதியின் டாக்டர்களுக்கு ஒரு புதிராய் இருந்தது.

அவர்கள் இன்னும் அந்த நோய் மூலத்தைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருந்தனர். இந்தத் தொடர்ச்சியான சோதனைகளைக் கண்டு பாவெ லுக்கு அலுப்புத்தட்டியது. அவர்கள் அவனைச் சிரமப்படுத்தினார்கள். இனிய சுபாவத்தை உடைய கட்சி அங்கத்தினரான வார்டு டாக்டர் கண்ணில் படாமல் தப்புவதற்குப் பாவெல் தன் னால் இயன்றதனைத்தும் செய்தான். இருஸலிம்சிக் என்ற விநோதமான பெயரை உடைய அந்த டாக்டர், தனது விருப்பமில்லாத நோயாளியை வேட்டையாடிப் பிடிப்பதற்கும், ஏதாவதொரு நிபுணரிடம் செல்வதற்கு அவன் சம்மதத்தைப் பெறுவதற்கும், ரொம்பக் கஷ்டப்பட்டாள்.

''எனக்குச் சலிப்பு உண்டாகிவிட்டது. தினம் ஐந்து தடவை, நான் ஒரே கதையைத் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. பல மூடத்தனமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக் கிறது. உன் பாட்டிக்குப் பைத்தியம் பிடித்திருந் ததா அல்லது உன் முப்பாட்டனுக்குக் கீல்வாதம் வந்திருந்ததா என்று கேட்கிறார்கள். என் முப் பாட்டனுக்கு என்ன நோய் இருந்ததென்று எனக்கு எப்படித் தெரியும்? நான் அவரைப் பார்த் ததேயில்லை! மேஹ வெட்டை அல்லது அதை விட மோசமானதொரு நோய் எனக்கு இருப்ப தாக நான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று ஒவ் வொரு டாக்டரும் படாத பாடுபடுகிறார்! அவர் களது வழுக்கை மண்டைகளை உடைத்துப் போடு வேனென்று நான் திட்டும்வரை, இம்மாதிரி முயற்

சிக்கிறீர்கள். நான் ஓய்வு எடுப்பதற்குச் சந்தர்ப் பம் கொடுங்கள். நான் அதைத்தான் விரும்புகி றேன். இங்குத் தங்கவேண்டிய ஆறு வாரங்களை யும் இந்த மாதிரி சோதனைகளிலேயே கழித்தால், நான் சமுதாயத்திற்கு ஒரு ஆபத்தாகி விடுவேன்'' என்று அவன் அவளிடம் வாதாடுவான்.

அந்தப் பெண் டாக்டர் அதைக் கேட்டுச் சிரிப்பாள்; அவனுடன் 'தமாஷ்' செய்வாள். சில நிமிஷங்கள் கழித்து, அவள் அவன் கையை மென் மையாகப் பிடித்து, வாசாலகமாக உரையாடிக் கொண்டே ரணசிகிச்சை நிபுணரிடம் இட்டுச் செல்வாள்.

ஆனால் இன்று ஒரு சோதனையும் கிடையாது. ஒரு மணி நேரம் கழித்துத்தான் சாப்பிட வேண் டும். சிறிது நேரத்துக்கெல்லாம், யாரோ அவனை நோக்கி நடந்து வந்த சத்தம், அவனது சிறு துயிலைக் கலைத்தது. அவன் தன் கண்களைத் திறக்க வில்லை. ''நான் தூங்குகிறேன் என்று எண்ணிக் கொண்டு, போய் விடுவார்கள்'' என்று அவன் நினைத்தான். வீண் நம்பிக்கை! யாரோ உட்கார்ந்த தால், அசைந்தாடும் நாற்காலி கிறீச்சென்று ஒலித் தது. ஒரு இலேசான நறுமணம், காற்றில் மிதந்து வந்தது. வந்திருப்பது ஒரு பெண் என்பதைப் புரிந்து, கண்களைத் திறந்தான். கண்ணைப் பறிக் கும் வெள்ளை ஆடையையும், மிருதுவான தோல் ஸ்லிப்பர் அணிந்த தாம்பிரநிற பாதங்களையும் முதலில் கண்டான். அதன்பின், பையனைப்போல் கத்திரித்துவிட்டிருந்த கேசமும் இரண்டு அகன்ற

கண்களும், வெண்பற்களின் வரிசையும் அவனுக்குக் காட்சி தந்தன. அந்தப் பற்கள், சுண்டெலியுடையதைப் போலக் கூர்மையாக இருந்தன. அவள் ஒரு நாணப் புன்னகையை வழங்கினாள்.

''உங்கள் அமைதியைக் குலைக்கவில்லையென்று நம்புகிறேன்.''

பாவெல் பதிலொன்றும் கூறுமல் இருந்தது, விநயத்தின் பாற்பட்டதாகாது. அவள் எழுந்து சென்று விடுவாளென்று அவன் இன்னமும் நம்பினான்.

''இது உங்களது புத்தகமா?'' அவள் 'ஆயுத எழுச்சியின்' பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

''ஆம். என்னுடையதுதான்.''

ஒரு விநாடி அமைதி நிலவியது.

''நீங்கள் 'கம்யூனர்' ஆரோக்கிய விடுதியில் தங்கியிருக்கிறீர்களா?''

பாவெல் பொறுமை இழந்தான். அவள் ஏன் அவனது அமைதியைக் குலைக்கவேண்டும்? அருமையான ஓய்வு இது. இனி அவள் அவனது வியாதியைப் பற்றிக் கேள்வி கேட்கத் தொடங்குவாள். அவன் எழுந்துபோக வேண்டியதுதான்.

''நான் அங்கு இல்லை'' என்று அவன் வெடுக்கென்று விடை தந்தான்.

''உங்களை அங்கு பார்த்தது போல எனக்குத் தோன்றுகிறது.''

பாவெல் எழுந்திருக்கவிருந்த தருணத்தில், அவனுக்குப் பின்னாலிருந்து ஒரு தீர்க்கமான இனிய பெண் குரல் பேசியது:

''தோரா, அங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்!''

. மிகுந்த தசையையும் வெயிலில் பழுப்பேறிய சருமத்தையும் பொன் கேசத்தையும் உடைய பெண், கடற்கரை ஆடையணிந்து, அசைந்தாடும் நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்திருந்தாள். அவள் பாவெலை விரைவாக ஒரு பார்வை பார்த்தாள்.

''தோழரே, உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன். நீங்கள் கார்க்கவிலிருந்துதானே வருகிறீர்கள்?''

''ஆம்.''

''எங்கு வேலை செய்கிறீர்கள்?''

இந்த சம்பாஷணைக்கு ஒரு முடிவு கட்டுவதென்று பாவெல் தீர்மானித்தான்.

''குப்பை கூளப்பட்டுவாடா இலாகாவில்'' என்று அவன் விடைதந்தான். இந்தக் குத்தல் பேச்சு தூண்டிவிட்ட சிரிப்பைக் கண்டு அவன் துள்ளி எழுந்தான்.

''நீங்கள் ரொம்ப விநயமாக நடந்துகொள்கிறீர்களா, தோழரே?''

இவ்வாறு அவர்களது நட்பு ஆரம்பமாயிற்று. தோரா, கட்சியின் கார்க்கவ் நகரக் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினர் என்பதைப் பாவெல் பிறகு தெரிந்துகொண்டான். அதன்பின், இருவரும் நன்கு பரிச்சயமாகிப் பழகியபின், தோரா அடிக்கடி இந்த வேடிக்கையான சம்பவத்தைப் பற்றிச் சொல்லி அவனைக் கேலி செய்வாள்.

ஒருநாள் பிற்பகல், ''தாலாஸ்ஸா'' ஆரோக் கிய விடுதியின் திறந்தவெளி அரங்கில், பாவெல் தன் பழைய நண்பனை ஷார்க்கீயை எதிர்பா ராத விதமாகச் சந்தித்தான். விநோதம் என்ன வெனில், அந்த அரங்கில் நடந்த நரி நடனம் தான், அவர்களது சந்திப்புக்கு வாய்ப்பாய் அமைந்தது.

ஒரு பாடகி, ''காமக்கனல் சுட்டெரிக்கும் இரவுகள்'' என்ற பாட்டை உள்ளக் கிளர்ச்சி யுடன் பாடிக் கூட்டத்தை மகிழ்வித்தபின், ஒரு ஜோடி ஆணும் பெண்ணும் மேடையின் மீது தோன்றினர். அவன் கிட்டத்தட்ட நிர்வாணமாக இருந்தான் என்றே சொல்லலாம். தலையில் ஒரு உயரமான சிவப்பு பட்டுக் குல்லாயும், இடுப்பில் சில பளபளப்பான கஞ்சத்தகடுகளும், ஒளி வீசும் வெள்ளை மார்புத்துணியும், வில் மாதிரி வளைந்த கழுத்துப்பட்டையுமே அவன் அணிந்திருந்தான்; ஆகக்கூடி, ஒரு காட்டுமிராண்டியின் மங்கலான பிரதிபிம்பமாகக் காட்சி தந்தான். ஏராளமான ஆடைகளை உடுத்தியிருந்த அவனது துணைவி மிக வும் களையான முகம் படைத்தவள். விடுதி நோ யாளிகள் அமர்ந்திருந்த நாற்காலிகளுக்கும் கட் டில்களுக்கும் பின்னால், வியாபாரிகள் நின்றனர். அந்த ஜோடி, அரங்கில் வட்டமிட்டு, சிக்கலான நரி நடனத்தை ஆடியபொழுது, அந்த வியாபாரி கள் பரவசமடைந்து ரீங்காரம் செய்தனர். அந்த நடனத்தைவிட ஆபாசமான நிகழ்ச்சியைக் கற் பனை செய்ய முடியாது. விகாரமான தொப்பி

அணிந்த ஸ்தூலமான நாட்டியக்காரனை, அவள் இறுகத் தழுவிக்கொண்டிருந்தாள். அவன் குறிப் படங்கிய அங்க வித்தியாசங்களுடன் நெளிந்து அசைந்தான். தனக்குப் பின்னால் ஒரு சதைப் பிண்டம் பலமாக மூச்சு விடுவது, பாவெல் காதில் விழுந்தது. அவன் வெளியேறக் கிளம்பியபொழுது, முன்வரிசையிலிருந்த ஒருவன் எழுந்து நின்றான்.

''போதும் இந்த விபசாரக் காட்சி! நிறுத்துங்கள்! ஒழியுங்கள்!'' என்று கத்தினான்.

அவ்விதமாகக் கத்தியவன் ஷார்க்கீய்.

பியானோ வாத்தியக்காரன், வாசிப்பை நிறுத்தினான். கீச்சென்று ஒலித்துக்கொண்டு, வயலின் நின்றது. மேடையில் ஆடிய ஜதை நெளிந்தசைவதை நிறுத்தினர். பின்னால் நின்ற கூட்டம் சீறியது.

''நாட்டியத்தின் இடையில் குறுக்கிடும் துடுக்கைப் பார்!''

''ஐரோப்பா முழுவதும் நடனமாடுகிறது!''

''அக்கிரமம்!''

ஆனால் 'கம்யூனார்' விடுதியிலிருந்த நோயாளியும் செரிப்போவேத்ஸ் கம்ஸமோலின் காரியதரிசியுமான ஷ்பானேவ் நான்கு விரல்களை வாய்க்குள் விட்டுக் காதைத் துளைக்கும் வகையில் 'விசில்' ஊதினான். அவனது உதாரணத்தை மற்றவர் பின்பற்றினர். ஒரு வினாடியில் நடனமாடிய இருவரும் காற்றில் பறந்துவிட்ட மாதிரி, மேடையிலிருந்து மறைந்தனர். வெட்கங்கெட்ட

பணியாளன் போன்று தோன்றிய குழுத் தலைவன் நடிகர்கள் கிளம்பி விட்டார்கள்'' என்று அறிவித்தான்.

இதைக் கேட்டுப் பலர் சிரித்தனர். ''இந்த இடத்தை நொடிப் பொழுதில் காலி செய்!'' என்று ஒரு இளைஞன் உரக்கக் கூவினன்.

முன் வரிசைக்குச் சென்ற பாவெல், ஷார்க்கீயைக் கண்டான். இரண்டு நண்பர்களும் பாவெல் அறையில் நீண்ட நேரம் சம்பாஷித்தார்கள். கட்சியின் பிரதேசக் கமிட்டி ஒன்றில், கிளர்ச்சி-பிரசாரப் பகுதியில் வேலை செய்வதாக ஷார்க்கீய் பாவெலிடம் கூறினன்.

''எனக்குத் திருமணமான விஷயம் உனக்குத் தெரியாதல்லவா? சீக்கிரத்தில் ஒரு குழந்தைக்குத் தந்தையாக விருக்கிறேன்'' என்று ஷார்க்கீய் கூறினன்.

பாவெல் ஆச்சரியமடைந்தான். ''கல்யாணமாகி விட்டதா? உன் மனைவி யார்?''

ஷார்க்கீய் தன் சட்டைப் பையிலிருந்த ஒரு போட்டோ படத்தை எடுத்துப் பாவெலிடம் காட்டினன்.

''அவளைத் தெரிகிறதா?''

அவனும் ஆன்னுவும் உள்ள படம் அது. பாவெலின் வியப்பு அதிகரித்தது.

''துபாவா என்னவானன்?'' என்று வினவினன்.

''அவன் மாஸ்கோவில் இருக்கிறன். கட்சியிலிருந்து நீக்கப்பட்டபின், கட்சி கலாசாலை

யிலிருந்து வெளியேறினன். இப்பொழுது, பௌமன் தொழில் கல்லூரியில் இருக்கிருன். அவனை மீண் டும் கட்சியில் எடுத்திருப்பதாகக் கேள்விப்படு கிறேன். அது உண்மையானுல், ரொம்பத் தப் பான காரியம். ஏனெனில் அவன் பூர்த்தியாகச் சீரழிந்து கழிசடையாகி விட்டான்.... பன்கிராத் தவ் என்ன செய்கிருன் என்று சொல்லு பார்ப் போம். ஒரு கப்பல் கட்டும் நிலயத்துக்கு உதவி டைரக்டராக இருக்கிருன். மற்றவர்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. சமீப காலத்தில், தொடர்பு முறிந்துவிட்டது. நாமெல்லோரும் தேசத்தின் வெவ்வேறு மூலமுடுக்குகளில் வேலை செய்கிருேம். ஆனுல் இம்மாதிரி இடையிடை யே கூடிப் பழங்காலத்தைப் பற்றி நினைவூட்டிக் கொள்வது நேர்த்தியான காரியம்.''

தோரா, தன்னுடன் பலரை அழைத்துக் கொண்டு அறைக்குள் வந்தாள். அவள் ஷார்க்கீ யின் சட்டை மீதிருந்த சன்னத்தை நோக்கிவிட்டு, ''உன் தோழர் கட்சி உறுப்பினரா? அவர் எங்கு வேலை செய்கிருர்?'' என்று பாவெலிடம் வின வினுள்.

பிரமிப்பு அடைந்த பாவெல், அவளிடம் ஷார்க்கீயைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினுன்.

''நல்லது, அவரும் இருக்கட்டும். இந்தத் தோழர்கள் இப்பொழுதுதான் மாஸ்கோவிலிருந்து வந்திருக்கிருர்கள். அவர்கள், கட்சி சம்பந்த மான கடைசிச் செய்திகளைக் கூறுவார்கள். உன் அறையில், பிரத்தியேகக் கட்சிக் கூட்டத்தை

நடத்தலாமென்று வந்தோம்'' என்று அவள் விளக்கினாள்.

பாவெல், ஷார்க்கீய் ஆகிய இருவரைத் தவிரப் புதிதாக வந்தவர்கள் எல்லோரும் பழைய போல்ஷெவிக்குகள். மாஸ்கோ கண்டிரோல் கமிஷன் உறுப்பினரான பார்த்தஷோவ் என்பவன் த்ரோத்ஸ்கிய், ஸினோவ்யேவ், காமென்யேவ் ஆகியோர் தலைமையில் உருப்பெற்றுள்ள புதிய எதிர்த்தரப்பைப் பற்றி அவர்களிடம் விவரித்தான்.

''இந்த நெருக்கடியான தருணத்தில், நாம் நமக்குரிய இடத்திலிருந்து வேலை செய்ய வேண்டும். நான் நாளைக்கே கிளம்புகிறேன்'' என்று பார்த்தஷோவ் முடிவாகக் கூறினார்.

பாவெலது அறையில் அந்தக் கூட்டம் நடந்து மூன்று நாட்களானபின், அந்த விடுதி வெறிச்சென்று இருந்தது. பாவெலும் தன் விடுமுறை முடிவதற்கு முன்னால் கிளம்பிப் போனான்.

கம்ஸமோலின் மத்தியக் கமிட்டி, அவனைக் காத்திருக்க செய்யவில்லை. தொழில் பிரதேசம் ஒன்றில் கம்ஸமோல் செயலாளராகத் தொண்டாற்றுவதற்கு அவனை நியமித்தது. ஒரு வாரத்திற்குள் அவன் தன் பகுதியில் ஒரு நகரக் கம்யூனிஸ்ட் இளைஞர் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தான்.

அந்த சரத் காலத்தின் பிற்பகுதியில், தொலைதூர வட்டமொன்றுக்குப் பாவெல் இரண்டு கட்சி ஊழியருடன் சென்று கொண்டிருந்த கார், ஒரு குட்டையில் இறங்கிக் கவிழ்ந்தது.

காரில் இருந்தவர் அனைவரும் காயமடைந்தனர். பாவெலின் வலது முழங்கால் நசுங்கிவிட்டது. சில நாட்களுக்குப் பின், அவனைக் கார்க்கவ் ரண சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். வைத்தியக் குழு அவனைச் சோதித்தது; சேதமுற்ற காலின் 'எக்ஸ்ரே' படம் பிடித்துப் பார்த்தது; உடனடியாக 'ஆபரேஷன்' செய்ய வேண்டுமென்று யோசனை கூறியது.

பாவெல் அதற்கு இணங்கினான். ''நாளை காலை செய்வோம்'' என்று குழுவுக்குத் தலைமை தாங்கிய பருமனான பேராசிரியர் கூறினார். அவர் எழுந்து சென்றபொழுது, இதரக் குழு உறுப்பினரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

ஒரே ஒரு கட்டிலை உடைய சிறிய வெளிச்சமான வார்டு. அது மாசில்லா தூய்மையுடன் விளங்கியது. அந்த அலாதியான ஆஸ்பத்திரி மணத்தைப் பாவெல் மறந்து ரொம்பக் காலமாகி விட்டது. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். கட்டிலுக்கு அருகில், வெள்ளை வெளேறென்று இருந்த துணியால் போர்த்தப்பட்ட மேஜையும், வெள்ளைச் சாயம் பூசிய மணையும் இருந்தன. அவ்வளவுதான்.

நர்ஸ் அவனுக்கு இராக் கால உணவைக் கொண்டு வந்தாள்; அவன் வேண்டாமென்று திருப்பி அனுப்பி விட்டான். தன் படுக்கையில் சாய்ந்தபடி, அவன் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தான். அவனது முழங்கால் வலியில், பசி தெரியவில்லை; சிந்தனையும் தடைப்பட்டது.

அவன் நான்காவது கடிதம் எழுதி முடித்த பொழுது, கதவு திறந்தது. வெள்ளை ஆடையும் குல்லாயும் அணிந்த ஒரு மங்கை அவனது படுக்கை அருகில் வந்தாள்.

அந்த மங்கலான வெளிச்சத்தில், அவன் இரண்டு மெல்லிய புருவங்களையும் அகன்ற கண்களையும் இனம் கண்டு கொண்டான். அந்தக் கண்கள் கறுப்பாகத் தோன்றின. அவள் ஒரு கையில் ஒரு பையையும் இன்னொரு கையில் ஒரு காகிதத்தையும் பென்ஸிலையும் வைத்திருந்தாள்.

''நான் உங்களது வார்டு டாக்டர். இப்பொழுது பல கேள்விகளைக் கேட்கப் போகிறேன். நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உங்களைப்பற்றி விரிவாக எடுத்துரைக்க வேண்டும்.''

அவளது இள நகையில் இனிமை தவழ்ந்தது. அது அவளது ''குறுக்கு விசாரணையிடம்'' வெறுப்பு ஏற்படாமல் தடுத்தது. ஏறத்தாழ ஒரு மணி நேரம், பாவெல் தன்னைப்பற்றியும் தன் குடும்பத்தைப்பற்றியும், பல தலைமுறைகளுக்கு முன் வாழ்ந்த உறவினரைப்பற்றியும் விவரித்துக் கொண்டிருந்தான்.

ரணசிகிச்சைக் கூடம். மெல்லிய சீலையில் செய்த திரையை நாசிக்கும் வாய்க்கும் அணிந்து கொண்டு பலர் நின்றனர். பளபளவென்று பிரகாசித்த நிக்கல் அறுவைக் கருவிகள்; ஒரு குறுகலான நீண்ட மேஜை; அதன் அடியில் ஒரு பெரிய 'போணி'.

ஆபரேஷன் மேஜையில் பாவெல் படுத்துக் கொண்ட பொழுது, பேராசிரியர் தம் கரங்களைக் கழுவிக் கொண்டிருந்தார். அறையில், ஆபரேஷனுக்காகத் தயாரிப்பு வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருந்தன. பாவெல் முகத்தைத் திருப்பி நோக்கினான். நர்ஸ், ஆபரேஷனுக்குத் தேவையான கத்திகளையும் இடுக்கியையும் எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்.

அவனது காலில் இருந்த கட்டை அவிழ்த்துக் கொண்டிருந்த வார்டு டாக்டர் பஷானோவா ''தோழர் கர்ச்சாகின், அதைப் பார்க்காதீர்கள். நரம்புகளுக்கு நல்லதல்ல'' என்றாள். ''யாருடைய நரம்புகளுக்கு, டாக்டர்?'' என்று பாவெல் பரிகாசச் சிரிப்புடன் வினவினான்.

சில நிமிஷங்கள் கழித்து, ஒரு கெட்டியான முகமூடி அவனுக்கு அணிவிக்கப்பட்டது.

''நாங்கள் உனக்கு மயக்க மருந்து கொடுக்கப்போகிறோம். எண்களை வரிசையாகச் சொல்லிக்கொண்டே, உன் நாசியின் மூலம் நன்றாக மூச்சை இழு'' என்று பேராசிரியர் கூறியது அவன் செவியில் விழுந்தது.

''நல்லது!'' என்று முகமூடியால் சுருதி குறைந்த அமைதியான குரல் பதிலளித்தது.''நான் ஏதாவது சொல்லக் கூடாத வார்த்தைகளைப் பேசினால், என்னை மன்னிக்க வேண்டுமென்று முன்னதாகவே வேண்டிக்கொள்கிறேன்'' என்று அந்தக் குரல் மேலும் கூறியது.

இதைக் கேட்ட பேராசிரியரால் தம் சிரிப்பை அடக்க முடியவில்லை.

சில துளிகள் ஈதர் ஆவியாகி மூச்சுடன் உள்ளே சென்றது. அந்த மணம் வெறுப்பாயிருந்தது; அதைத் தாங்க முடியவில்லை.

பாவெல் ஆழமாக மூச்சை இழுத்தான்; தெளிவாக உச்சரிக்க முயன்றுகொண்டே எண்ணத் தொடங்கினான். அவனது துன்ப இயல் நாடகத்தின் முதல் அங்கம் ஆரம்பமாவதற்குத் திரை உயர்ந்துவிட்டது.

ஆர்த்தியோம் கவரைக் கிழித்தான்; உள்ளூர நடுங்கிக் கொண்டே கடிதத்தைப் பிரித்தான். முதல் சில வரிகளை ஊன்றிப் படித்தபின், மிச்சத்தை விரைந்து வாசித்தான்.

''ஆர்த்தியோம்! நாம் அபூர்வமாகவே, வருஷத்துக்கு ஒருதடவை அல்லது அதிகமாகப் போனால் இரண்டு தடவைதான், ஒருவருக்கொருவர் எழுதிக்கொள்கிறோம். ஆனால் அருமையாக எழுதிக்கொள்கிறோமா அல்லது அடிக்கடி எழுதிக்கொள்கிறோமா என்பதா பிரச்சினை? நீயும் உன் குடும்பமும் ஷெப்பெத்தோவ்க்காவிலிருந்து கஸாத்தின் ரயில்வே டெப்போவுக்கு வந்துவிட்டதாக எழுதியிருக்கிறாய். உன் வேர்களைத் துண்டித்துவிட வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்திருப்பதாகக் கூறுகிறாய். ஸ்தியேஷாவுக்கும் அவளது உறவினருக்கும் உள்ள பிற்போக்கான சிறு உடைமைக்காரன் மனப்பான்மையில்தான் அந்த

வேர்கள் இருப்பதாக நான் கருதுகிறேன். ஸ்தியேஷா போன்றவர்களைப் புதுவார்ப்பில் எடுப்பது கடினமான காரியம். உன்னுல்கூட இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியாதென்று அஞ்சுகிறேன். ''முதிய வயதில்'' படிப்பது கஷ்டமாயிருக்கிறதென்று சொல்கிருய். ஆனுல் உன் படிப்பு நன்ருக இருப்பதாகத் தோன்றுகிறது. வேலையை விட்டுவிட்டு, நகர சோவியத் தலைவர் பொறுப்பை மேற்கொள்வதற்குப் பிடிவாதமாக மறுப்பது தவருகும். நீ சோவியத் அதிகாரத்துக்காகப் போராடினுய் அல்லவா? பின்னர், அதிகாரப் பொறுப்பை ஏற்றுக்கொள்! நாளைக்கே நகர சோவியத் நிர்வாகத்தை மேற்கொண்டு, வேலையில் இறங்கு!

''இனி என்னைப்பற்றி. எனக்கு ஏதோ பெரிய கோளாறு ஏற்பட்டிருக்கிறது. நான் ஆஸ்பத்திரிகளுக்கு அடிக்கடி சென்று தங்கும் நிலையை அடைந்துவிட்டேன். இருமுறை, ஆபரேஷன் செய்துவிட்டார்கள்; ஓரளவுக்கு ரத்தத்தையும் பலத்தையும் இழந்துவிட்டேன். ஆனுல் இதெல்லாம் எப்படி முடியுமென்று எவராலும் சொல்ல முடியவில்லை.

''என் வேலையிலிருந்து நான் துண்டிக்கப்பட்டிருக்கிறேன். எனக்குப் புதிய தொழில் ஒன்று கிடைத்திருக்கிறது. அதுதான் 'நோயாளித் தொழில்'. நான் வேதனைமிகுந்த வலியைச் சகித்துக் கொள்ள வேண்டியவனுகிவிட்டேன். இவை எல்லாவற்றின் நிகரான விளைவு என்னவென்று கேட்டால்,

எனது வலது முழங்கால் அசையாப் பொருளாகிவிட்டது; உடலின் வெவ்வேறு பாகங்களில் பல்வேறு வடுக்கள் உண்டாகியுள்ளன; இப்பொழுது, கடைசியாக வைத்திய ஞானிகள் ஒரு நூதன விஷயத்தைக் கண்டுபிடித்துள்ளனர். ஏழாண்டுகளுக்குமுன், என் முதுகெலும்பில் சேதம் ஏற்பட்டதென்றும் அதனால் எனக்குப் பெருந்துன்பம் இனி உண்டாக்கக் கூடுமென்றும் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! ஆனால் நான் கட்சி அணிக்குத் திரும்பமுடியுமானால், எதையும் சகித்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

''கட்சி அணியிலிருந்து நீங்குவதைவிடப் பயங்கரமான சம்பவம் எதுவும் என் வாழ்வில் ஏற்பட முடியாது. அத்தகைய நிலையை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. அதனால்தான் அவர்கள் விருப்பப்படி எனக்குச் சிகிச்சை செய்வதற்கு அனுமதித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு அபிவிருத்தியையும் காணவில்லை. மேகங்கள் மென்மேலும் கறுத்து அடர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன. ஆபரேஷன் முடிந்தபின், நடக்க முடிந்தவுடன் நான் வேலைக்குச் சென்றேன். ஆனால் விரைவில் என்னைத் திரும்பக் கொண்டு வந்துவிட்டனர். இப்பொழுது, யெவ்பத்தோரியாவில் உள்ள ஆரோக்கிய விடுதி ஒன்றுக்கு என்னை அனுப்புகிறார்கள். நாளைக்குப் போகிறேன். ஆனால், சோர்வு அடையாதே. ஆர்த்தியோம், நான் சுலபமாகப் பணியமாட்டேன் என்பதை நீ அறிவாய். மூவருக்குப் போதுமான உயிர்ச்சக்தி என்னிடம்

உள்ளது. அண்ணு, நீயும் நானும் இனியும் நற்பணி புரிவோம். உன் உடம்பைக் கவனித்துக் கொள். அளவுக்கு மீறிய சிரமத்துக்கு உன் உடலை உட்படுத்தாதே; ஏனென்று கேட்டால், நலங்கெட்ட உடல்கள் கட்சியைப் பெரிதாகப் பாதிக்கின்றன. ஆண்டுகள் நமது அனுபவங்களைப் பெருக்குகின்றன; கல்வி நமது அறிவைக் கூட்டுகிறது. இவற்றையெல்லாம் நாம் ஆஸ்பத்திரிகளில் விரயம் செய்யக்கூடாது. அன்பாக உன் கரத்தைக் குலுக்குகிறேன்.

''பா வெ ல்''

ஆர்த்தியோம் தன் அடர்த்தியான புருவங்களை நெறித்துக்கொண்டு, தன் தம்பியின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த பொழுதே, பாவெல், ஆஸ்பத்திரியில் டாக்டர் பஷானோவாவிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

அவள் அவனது கரத்தைக் குலுக்கி,

''நாளைக்குக் கிரீமியா செல்லப் போகிறீர்களா? அப்படியானல், இன்றைய தினத்தின் மிச்சப் பொழுதை எப்படிக் கழிக்கப் போகிறீர்கள்?'' என்று அவள் வினவினுள்.

''சீக்கிரத்தில் தோரா இங்கு வருவாள். அவள் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வாள். அவளுடைய குடும்பத்தினரைப் பார்க்கப் போகிறேன். இரவு அங்கு தங்குவேன். நாளைக்கு அவள் என்னை ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வாள்.''

தோரா, பாவெலைப் பார்ப்பதற்கு அடிக்கடி ஆஸ்பத்திரி வந்து சென்றதால், பஷானேவா வுக்கு அவளைத் தெரியும்.

''பாவெல், நீங்கள் போவதற்கு முன்னல், உங்களை என் தந்தை பார்க்க வேண்டுமென்ருர். நீங்களும் அதற்குச் சம்மதித்தீர்கள் அல்லவா? மறந்துவிடவில்லையே? உங்கள் நோயைப் பற்றி அவரிடம் விவரமாகப் பேசியிருக்கிறேன். அவர் உங்களைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்பது என் விருப்பம். இன்று மாலை வருவீர்களா?''

பாவெல் உடனடியாக இணக்கம் தெரிவித்தான்.

அன்று மாலை, பஷானேவா, பாவெலைத் தன் தந்தையின் அறைக்குள் அழைத்துச் சென்ருள்.

அந்தப் பிரசித்திபெற்ற ஸர்ஜன், பாவெலைக் கவனமாகச் சோதனை செய்தார். அவரது பெண், ஆஸ்பத்திரியிலிருந்து சகல 'எக்ஸ்ரே' படங்களையும் பரீட்சை விவரங்களையும் கொண்டுவந்திருந்தாள். அவளது தந்தை லத்தீன் மொழியில் நீளமானதொரு வாசகத்தைக் குறிப்பிட்டவுடன், அவள் முகம் திடீரென்று வெளிறிப் போனதைப் பாவெல் கவனித்தான். பாவெல், தன் பக்கம் குனிந்திருந்த பேராசிரியரின் பெரிய வழுக்கை மண்டையை வெறித்துப் பார்த்தான்; அவரது கூர்மையான விழிகளை ஆராய்ந்தான். ஆனல் அவருடைய முகபாவத்திலிருந்து எதையும் அறிய முடியவில்லை.

பாவெல் தன் ஆடைகளை உடுத்திக் கொண்ட

பின், பேராசிரியர் அவனிடம் உள்ளன்போடு விடைபெற்றுக் கொண்டார். அவர் உடனடியாக ஒரு மாநாட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவரது பரீட்சையின் முடிவுகளை அவரது மகள் கூறுவாள் என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

பஷாஞேவாவின் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட அறையில், பாவெல் ஒரு கட்டில் மீது படுத்திருந்தான். டாக்டர் பேசுவாளென்று அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பாவெலது உடம்பில் வேகமாகப் பரவிவரும் விபரீதமான வேக்காட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு, இதுவரை வைத்திய சரித்திரம் வழிதுறை கண்டுபிடிக்கவில்லை என்று தந்தை மகளிடம் கூறியிருந்தார். அதைப் பாவெலிடம் சொல்வதற்கு அவளது மனம் இடம் தரவில்லை. ஆபரேஷன் கூடாதென்று பேராசிரியர் கூறிவிட்டார். ''தன் கைகால்களை உபயோகிக்க முடியாத நிலைமை இந்த இளைஞனை எதிர்நோக்குகிறது; இந்தத் துன்பத்தைத் தவிர்க்கும் சக்தி நம்மிடம் இல்லை'' என்று அவர் கூறிச் சென்ருர்.

இந்த முழு உண்மையை அவனிடம் அவள் எப்படிக் கூறுவாள்? டாக்டர் என்ற முறையிலோ, சிநேகிதி என்ற முறையிலோ, அம்மாதிரி கூறுவது விவேகமாகாது என்று அவள் முடிவு செய்தாள். எனவே, எண்ணித்துணிந்த சொற்களில், உண்மையின் ஒரு பகுதியை மட்டும் அவள் கூறினுள்.

''பாவெல், யெவ்பத்தோரியாவில் உங்கள் உடம்பு தேறிவிடுமென்பது உறுதி. சரத் காலத் தில், வேலைக்குத் திரும்ப முடியும்'' என்று அவள் முடிவாகக் கூறினாள்.

ஆனால் அவனது கூரிய விழிகள் அவளையே நோக்கிக் கொண்டிருந்ததை அவள் மறந்துவிட் டாள்.

''நீங்கள் சொன்னதிலிருந்து அல்லது சொல் லாமல் மறைத்ததிலிருந்து, நிலைமை மோசம் என் பதை நான் உணர்கிறேன். என்னிடம் ஒளிவு மறைவில்லாமல் பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டேனே, ஞாபகம் இல்லையா? என்னிடம் எதையும் மறைக்கத் தேவையில்லை. நான் மூர்ச் சித்து விழமாட்டேன்; தொண்டையை வெட்டிக் கொண்டு சாகமாட்டேன். எனக்காகக் காத்திருப் பது என்ன என்பதை அறிய மிகவும் ஆவலாயிருக் கிறேன்.''

பஷானோவா, வேடிக்கையாகப் பேசிக் கொண்டே நேரடியான பதில் கொடுக்காமல் தட்டிக் கழித்தாள். அன்று இரவில் பாவெல், தன் எதிர்காலம் பற்றிய உண்மையை அறிய வில்லை.

''பாவெல், எனது நட்பை மறந்துவிடாதீர் கள். வாழ்வில் நமக்காகக் காத்திருப்பது என்ன என்பதை யார் அறிவார்? என் உதவியோ யோ சனையோ எப்பொழுது தேவைப்பட்டாலும், எனக்கு எழுதுங்கள். என்னால் இயன்ற அளவுக்கு

உங்களுக்கு உதவி செய்வேன்'' என்று அவள் மென்மையாகக் கூறி விடைதந்தாள்.

அந்தத் தோல் கோட் அணிந்த நெட்டை வடிவம், ஒரு கம்பை ஊன்றிச் சாய்ந்துகொண்டே, கதவிலிருந்து காத்திருந்த காருக்குக் கஷ்டப் பட்டு நடந்ததை, அவள் ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டே நின்றாள்.

மீண்டும் யெவ்பத்தோரியா; தென் பாகத்துக் கதிரவனது வெப்பம். இறுகப் பிடிக்கும் சித்திரப் பின்னல் குல்லாய் அணிந்த, வெயிலில் பழுப்பேறிய ஜனங்களின் இரைச்சல். பத்து நிமிஷ கார் பிரயாணம், புதிதாக வந்தவரைச் சாம்பல் நிறமான இரண்டு மாடிச் சுண்ணும்புக் கல் கட்டிடத்தில் சேர்த்தது. இதுதான் ''மைனக்'' ஆரோக்கிய விடுதி.

உக்ரேனியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி பாவெலுக்கு இடவசதி செய்திருப்பதை அறிந்த டாக்டர், அவனை 11ம் நம்பர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

''நீங்கள் தோழர் எப்னருடன் இருங்கள். அவர் ஒரு ஜெர்மானியர்; ஒரு ருஷ்யத் தோழர் உடனிருப்பதை விரும்புகிருர்'' என்று பாவெலிடம் விளக்கம் தந்த டாக்டர், அறைக் கதவைத் தட்டினர்.

''உள்ளே வருக'' என்று தடித்த ஜெர்மானியத் தொனியுடன் கூடிய குரல் அறையிலிருந்து ஒலித்தது.

பாவெல் தன் பிரயாணப் பையைக் கீழே வைத்து விட்டுப் படுக்கையில் கிடந்தவரைப் பார்த்தான். பொன்னிறத் தலை முடியும் ஒளி வீசும்நீலநிறக் கண்களும் உடைய அந்த ஜெர்மானியன், அன்பான புன்முறுவலுடன் பாவெலை வரவேற்றான்.

''காலை வணக்கம்'' என்று முதலில் ஜெர்மானிய மொழியில் கூறிப் பிறகு ருஷ்ய மொழியில் திருத்திச் சொல்லி, ஜெர்மானியன் தன் நீண்ட விரல்களை உடைய கரத்தை நீட்டினான். அந்தக் கரம் வெளுத்திருந்தது.

சில விநாடிகளுக்குப்பின், பாவெல் எப்னரின் பக்கத்தில் அமர்ந்திருந்தான். இருவரும் விரு விருப்பான சம்பாஷணையில் மெய்மறந்திருந்தனர். அவர்கள் பேசிய ''சர்வதேச மொழிக்கு'' எழுத்தும் இல்லை, இலக்கணமும் இல்லை; அதில் சொற்களின் பாத்திரமே குறை; மனோபாவனையும் சைகைகளும் அங்க பாவங்களும்தான் அதிகப் பங்கு வகித்தன.

எப்னர், 1923ம் ஆண்டில் ஹாம்பர்க் நகரில் நிகழ்ந்த எழுச்சியில் தொடையில் காயமுற்றான் என்பதையும் அவன் ஒரு தொழிலாளியாயிருந்தவன் என்பதையும் பாவெல் அறிந்து கொண்டான். பழைய காயம் மீண்டும் ரணமாகிவிட்டதால், அவன் படுத்த படுக்கையாக இருந்தான். அவன் மனோ உறுதியுடன் தன் வேதனையைச் சகித்துக் கொண்டதைக் கண்டவுடன் பாவெலுக்கு அவன் பால் நன்மதிப்பு உண்டாயிற்று.

இவனைவிடச் சிறந்த அறைத் தோழனைப் பாவெல் விரும்பியிருக்க முடியாது. இவன், காலை முதல் இரவுவரை தன் நோய்களைப்பற்றிப் பேசிப் புலம்பும் மனிதன் அல்லன். அதற்கு மாறாக, அவனுடன் பேசிக்கொண்டிருந்தால், ஒருவன் தனது வலி வேதனைகளைக்கூட மறந்திருக்க முடியும்.

''ஜெர்மானிய மொழி தெரியாமல் இருப்பது, எவ்வளவு மோசம்'' என்று எண்ணிப் பாவெல் மனம் வருந்தினான்.

ஆரோக்கிய விடுதியின் மைதானத்தில் ஒரு மூலையில், பல அசைந்தாடும் நாற்காலிகளும் இரண்டு தள்ளுவண்டி நாற்காலிகளும், ஒரு மூங்கில் மேஜையும் இருந்தன. அன்றாட வைத்தியம் முடிந்தவுடன், ஐந்து நோயாளிகள் இங்குக் கூடுவர்; பகலெல்லாம் இங்குத் தங்கியிருந்த இந்த ஐவரைப் பிறர்; ''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் நிர்வாகக் குழு'' என்று குறிப்பிட்டனர்.

எப்னர், ஒரு தள்ளுவண்டி நாற்காலியில் சாய்ந்து கொள்வான். நடக்கக் கூடாதென்ற தடைக்கு உள்ளாகியிருந்த பாவெலும் இன்னொரு தள்ளுவண்டி நாற்காலியில் அமர்வான். இந்தக் கோஷ்டியில், வைமன், மார்த்தா, லிதேன்யோவ் ஆகியோரும் இருந்தனர். வைமன் எஸ்தோனியா நாட்டைச் சேர்ந்தவன்; பருமனானவன்; ஏதோ ஒரு உறுப்புக் குடியரசில் வர்த்தகத் துறை மக்கள் கமிஸார் இலாகாவில் பணி புரிந்தவன். மார்த்தா,

லாத்வியா தேசத்துப் பெண். இளம் வயது; பழுப்புநிறக் கண்களை உடையவள்; பார்த்தால் பதினெட்டு வயதுதான் மதிப்பிடலாம். விதேன் யோவ், வாட்டசாட்டமாக வளர்ந்தவன்; பருமனுக்கேற்ற உயரம்; சைபீரியவைச் சேர்ந்தவன்; புருவமயிர் நரைத்துக் கொண்டிருந்தது. ஆக, இவர்கள் வெவ்வேறான ஐந்து தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினர்கள் — ஜெர்மானிய, எஸ்தோனிய, லாத்விய, ருஷ்ய, உக்ரேனிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். மார்த்தாவும் வைமனும் ஜெர்மன் மொழி பேசினர்கள்; எனவே எப்னர் அவர்களை மொழிபெயர்ப்புக்குப் பயன்படுத்திக் கொண்டான். பாவெலும் எப்னரும் ஒரே அறையில் வசித்ததால் நண்பராயினர். மார்த்தாவும் வைமானும், எப்னரும் ஒரே மொழியில் பேச முடிந்ததால், அவர்கள் நண்பராயினர். 'செஸ்' ஆட்டம், பாவெலுக்கும் விதேன் யோவுக்கும் பிணைப்பை ஏற்படுத்தியது.

விதேன்யோவ் வருவதற்குமுன், பாவெல் ஆரோக்கிய விடுதியில் செஸ் ஆட்ட வீரனக இருந்தான். கடுமையான போட்டியில் வைமனைத் தோற்கடித்துப் பாவெல் இந்தப் பெருமையை அடைந்தான். வைமன் நிதானஸ்தன் என்றாலும், இந்தத் தோல்வியால் ஓரளவுக்குக் கலக்கமடைந்தான். நீண்ட காலத்துக்கு அவனல் பாவெலை மன்னிக்க முடியவில்லை. ஒரு நாள், ஐம்பது வயது ஆகியும் வாலிபனகத் தோன்றிய ஒரு நெட்டை மனிதன், ஆரோக்கிய விடுதிக்கு வந்து, பாவெலுடன்

செஸ் ஆடுவதற்கு விரும்பினுன். அபாயம் நேர விருப்பதைப்பற்றிச் சிறிதும் அறியாத நிலையில், பாவெல் எதிரியை ஏமாற்றுவதற்காக, ராணி ஆட்டத் தொடக்கத்தைக் கையாண்டான். ஆனுல் விதேன்யோவ் தனது மையக் காய்களை நகர்த்திப் பாவெலை எதிர்த்தான். செஸ் ஆட்டத்தில் சிப்பாய் என்ற முறையில், புதிதாக வந்தவர்களுடன் ஆடுவது பாவெலின் கடமையாகவிருந்தது; எப்பொழுதும் ஆட்டப் பலகையைச் சுற்றிப் பார்வையாளர் கூட்டமும் இருந்தது. ஒன்பதாவது தடவை காயை நகர்த்தியபொழுதே, பாவெல் தனக்கு ஏற்பட்ட நெருக்கடியை உணர்ந்தான். அவனது எதிரி தன் காய்களைக் கிரமமாக நகர்த்தி, அவனைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான். ஒரு அபாயகரமான எதிரி தன்முன் உட்கார்ந்திருப்பதை உணர்ந்த பாவெல், ஆரம்பத்தில் உதாசீனமாக ஆடியதற்கு வருந்தினுன்.

ஆட்டம் மூன்று மணி நேரம் நீடித்தது. பாவெல் தனது திறமை, சாமர்த்தியம் ஆகியவற்றையெல்லாம் காண்பித்தான். ஆனுல் இறுதியில் அவன் தோல்வியடைய நேர்ந்தது. பார்வையாளர்கள் புரிந்துகொள்வதற்கு முன்பே, பாவெல் தனக்குத் தோல்வி என்பதைத் தெரிந்து கொண்டான். அவன் தன் எதிரியை நோக்கியபொழுது, விதேன்யோவ் அவனை அன்பான புன்னகையுடன் பார்ப்பதைக் கண்டான். ஆட்டத்தின் முடிவை விதேன்யோவும் அனுமானித்து விட்டானென்பது பாவெலுக்குத் தெளிவாயிற்று. பாவெல் தோற்க

வேண்டுமென்ற தன் ஆசையைப் பட்டவர்த்தன மாக்கிக் கொண்டு, ஆட்டத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்த வைமனுக்கு என்ன நடக்கிற தென்பது விளங்கவில்லை.

''நான் எப்பொழுதுமே, கடைசிக் காய் வரை ஆடுவேன்'' என்ருன் பாவெல். விதேன்யோவ் அதை அங்கீகரித்துத் தலையசைத்தான்.

ஐந்து நாட்களில், பாவெல் விதேன்யோ வுடன் பத்து ஆட்டங்கள் ஆடினுன்; ஏழில் தோற் ருன்; இரண்டில் ஜயித்தான்; ஒன்றில், இருவருக் கும் வெற்றி தோல்வி இல்லாமல் போயிற்று.

வைமனுக்கு மெத்த மகிழ்ச்சி. ''நன்றி, தோ ழர் விதேன்யோவ், நன்றி! அவனைச் செம்மையாக முறியடித்தீர்கள்! நன்ருக வேண்டும்! வயதான ஆட்டக்காரரான எங்களைத் தோற்கடித்தான். இப்பொழுது ஒரு கிழவர் முன்னுல் புறமுதுகு காட்டினுன்! ஹா! ஹா!'' என்று கூறி, வைமன் குதூகலித்தான்.

''தோற்பதென்ருல் எப்படி இருக்கிறது?'' என்று அவன் பாவெலைக் குத்திக் காட்டிக் கிண் டல் செய்தான்.

பாவெல் ஆட்டச் சிப்பாய் அந்தஸ்தை இழந்தான் என்பது மெய்; ஆனுல் பிற்காலத்தில் மதிப்பிடுவதற்கரியதாய் அவனுக்குப் பயன்படப் போகிற விதேன்யோவின் நட்பைப் பெற்ருன். தவிர, அவன் தன் தோல்வி நியாயமானதென் பதையும் அறிந்தான். செஸ் ஆட்ட யுக்திகளைப் பற்றி அவனுக்கு இருந்த ஞானம், மேலெழுந்த

வாரியாகத்தான் இருந்தது. ஆட்டத்தின் ரகசி யங்கள் அனைத்தையும் நன்கறிந்த நிபுணரான லிதேன்யோவிடம் அவன் தோற்றதில் வியப்பு என்ன!

ஒரே தேதியை இருவரும் முக்கியமானதாகக் கருதியதைப் பாவெலும் லிதேன்யோவும் உணர்ந் தனர். பாவெல் பிறந்த வருஷத்தில்தான், லிதேன் யோவ் கட்சியில் சேர்ந்தான். போல்ஷெவிக்கு களின் முதிய காவலருக்கு லிதேன்யோவும் இளங் காவலருக்குப் பாவெலும் தகுதியான பிரதிநிதி களாகத் திகழ்ந்தனர். லிதேன்யோவுக்கு சொந்த வாழ்விலும், கட்சி வாழ்விலும் நல்ல அனுபவ மிருந்தது. பல வருஷங்கள் தலை மறைவு இயக்கத் தில் உழைத்தவன்; ஜாரிஸ்டுச் சிறைகளில் காலம் கழித்தவன்; புரட்சிக்குப் பின் முக்கியமான அர சாங்கப் பொறுப்புகளை நிர்வகித்தவன். பாவெல் ஆர்வம் மிகுந்த வாலிபன். எட்டு ஆண்டுகளே அவன் பணியாற்றியிருந்தான். ஆனால் அந்த ஆண்டு களில் அவன் பட்டுள்ள சிரமம், மூன்று பேரைத் தகனம் செய்திருக்கும். கிழவனும் இளைஞனும் ஆகிய இருவருமே, வாழ்வை நேசித்தனர்; இரு வரது உடல் நலனும் கெட்டிருந்தது.

மாலை நேரத்தில், எப்னரும் பாவெலும் வசித்த அறை, ஒருவகை மன்றமாக மாறியது. சகல அரசியல் சேதிகளுக்கும் இந்த அறையே அஞ் சல் நிலையமாகவிருந்தது. சிரிப்பும் பேச்சும் அறை யில் ஒலித்து எதிரொலித்தன. பேச்சுவாக்கில், வைமன் ஏதாவதொரு ஆபாசமான குட்டிக் கதை

யைச் சேர்த்துவிடுவான். ஆனால் இந்த வழக்கத்தை மார்த்தாவும் பாவெலும் விடாது எதிர்த்து வந்தனர். சாதாரணமாக, மார்த்தா ஏதாவது குத்தலாகக் குறிப்பிட்டு, வைமனின் வாயை அடக்குவாள். ஆனால் வைமன் அதற்கும் மசியாவிட்டால், பாவெல் தலையிடுவான்.

''வைமன், உங்களது அலாதியான 'நகைச்சுவை' எங்களுக்குப் பிடித்தமாயில்லை'' என்பாள் மார்த்தா.

''பொதுவாக, நீ இவ்வளவு கேவலமாகப் பேசும் நிலைக்கு எப்படி இழிவடைந்தாய்?'' என்று பாவெல் கோபத்துடன் தொடங்குவான்.

வைமன் தனது தடித்த உதட்டைப் பிதுக்கிக்கொண்டு, தன் சிறு கண்களில் பரிகாசம் ஒளி வீசக் கோஷ்டியினரை நோக்குவான்.

'' 'அரசியல் அறிவு' இலாகாவின் கீழ் நல்லொழுக்கப் பிரிவொன்றை நிறுவி, அதற்குப் பாவெலைத் தலைமை அதிகாரியாக நியமிக்க வேண்டும். மார்த்தாவின் ஆட்சேபணையை நான் புரிந்து கொள்ள முடியும். மாறுபாடாகப் பேசுவது பெண்ணின் தொழில்; அதை அவள் செய்கிறாள். ஆனால் வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத சிசுவைப் போல பாவெல் நடந்துகொள்வதின் காரணந்தான் எனக்குப் புரியவில்லை. மேலும், குட்டி தாய்க்குப் போதிக்க முயல்வதை நான் கண்டிக்கிறேன்'' என்பான் வைமன்.

கம்யூனிஸ்ட் ஒழுக்கத்தைப் பற்றிய அந்தச் சூடான தர்க்கம் நடந்தபின், ஆபாச விகடம் பற்

றிய விஷயம், கோட்பாடு ரீதியாக விவாதிக்கப் பட்டது. கட்சியினரது அபிப்பிராயங்களை மார்த் தா எப்னரிடம் மொழிபெயர்த்துக் கூறினுள்.

''ஆபாசமான விகடக் கதை நல்லதல்ல. பாவெல் சொல்வதை நான் ஏற்றுக் கொள் கிறேன்'' என்று எப்னர் சொன்னுன்.

வைமன் பின்வாங்க நேர்ந்தது. விளையாட் டுக்கு விவாதம் நடந்ததைப் போல, அவன் சிரித் துத் தட்டிக்கழிக்க முயன்றுன். ஆனுல் அதன்பின், அவன் ஆபாசக் கதைகள் சொல்வதில்லை.

மார்த்தாவுக்குப் பத்தொன்பது வயதுதான் இருக்குமென்றும், அவள் கம்ஸமோல் உறுப் பினராயிருக்க வேண்டுமென்றும், பாவெல் எண்ணியிருந்தான். ஆனுல், அவள் 1917லிருந்தே கட்சி அங்கத்தினர் என்பதையும் லாத்விய கம்யூ னிஸ்ட் கட்சியில் தீவிரமாகச் செயல்பட்ட அவ ளுக்கு முப்பத்தொன்று வயது என்பதையும் அறிந்தபொழுது, பாவெல் வியப்புற்றுன். 1918ல், அவளைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென்று வெண் படையினர் தீர்ப்பு அளித்துவிட்டனர். ஆனுல் கடைசி நேரத்தில், கைதிகள் பரிவர்த்தனை நடந்த பொழுது, அவளும் வேறு சில தோழர்களும் சோவியத் சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டு அவள் இப்பொழுது, ''பிராவ்தா'' என்ற பத்திரிகை யின் ஆசிரியர் குழுவில் வேலை செய்துகொண் டிருந்தாள். அதே சமயத்தில், சர்வகலாசாலைப் படிப்பும் படித்துக் கொண்டிருந்தாள். பாவெ லுக்கே புரிவதற்கு முன்னுல், அவனும் மார்த்தா

வும் நண்பர்களானுர்கள். எப்னரைப் பார்ப்பதற்கு அடிக்கடி வந்த அந்தக் குட்டைப் பெண், ''ஐவரில்'' ஒருவராக ஆகிவிட்டாள்.

எனவே, தலைமறைவாகவிருந்து வேலை செய்து வந்த லாத்வியனை எக்லிட், ''புருஷன் ஓஸோல் மாஸ்கோவில் உனக்காகத் தவம் இருக்கிருன் அல்லவா? மார்த்தா, நீ எப்படி இந்தச் சினேகிதத்தை நாடலாம்?'' என்று கேலி செய்தான்.

சில நாட்களாக தினந்தோறும் அதிகாலையில் கண்விழித்து எழுந்திருப்பதற்குக் காலை மணி அடிப்பதற்கு முன்னுல், ஒரு சேவல் கூவியது. பிரமித்துப்போன காவலாளிகள், தவறிவந்த சேவலைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தனர். கோழி மாதிரி கூவும் திறம்படைத்த எப்னர்தான் அவர்களை இம்மாதிரி திண்டாடவைத்து வேடிக்கை பார்க்கிருன் என்பதை அவர்கள் ஊகிக்கவில்லை. எப்னர் அதை வெகுவாக ரசித்தான்.

ஆரோக்கிய விடுதிக்குப் பாவெல் வந்து, ஒருமாதம் முடியவிருந்த சமயத்தில், அவனது நிலைமை மோசமாயிற்று. அவன் படுக்கையிலிருந்து நகரக் கூடாதென்று டாக்டர்கள் உத்திரவிட்டார்கள். எப்னர் மிகவும் கலக்கமுற்றுன். இந்த இளவயதில், தன் ஆரோக்கியத்தை இழந்து நின்ற பாவெலிடம், துடிதுடிப்பும் முயற்சியும் மிகுதியாக உடைய இந்த இளம் போல்ஷெவிக் வீரனிடம் அவனுக்கு ஒரு பாசம் ஏற்பட்டுவிட்டது. பாவெலுக்குச் சோகமயமான எதிர்காலம் காத்திருப்பதாக டாக்டர் கணித்திருப்பதை மார்த்தா

எப்னரிடம் கூறியபொழுது, அவன் துயரமடைந் தான்.

பாவெல் ஆரோக்கிய விடுதியில் எஞ்சியிருந்த நாட்களைப் படுக்கையிலேயே கழித்தான். அவன் தன் வலியை வெளிக் காட்டாமலிருந்தான். ஆனால் மார்த்தா மட்டும், அவனது பயங்கரமான வெளிறிய முகத்தைக் கண்டு அவனது துன்பத்தை ஊகித்தாள். அவன் அந்த விடுதியிலிருந்து கிளம்புவதற்கு ஒருவாரம் இருந்தபொழுது, உக்ரேனிய கம்ஸமோலின் மத்தியக் கமிட்டியிலிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவனது விடுமுறை காலம் இன்னும் இரு மாதத்திற்கு நீடித்திருப்பதாகவும், ஆரோக்கிய விடுதி டாக்டர்களின் கருத்துப்படி தற்பொழுதைய நிலைமையில் வேலைக்குத் திரும்ப அவனால் முடியாது என்றும், எழுதியிருந்தது. அவனது செலவுக்குத் தேவையான பணமும் கடிதத்துடன் வந்துசேர்ந்தது.

பல வருஷங்களுக்கு முன்னால், குத்துச்சண்டை கற்றுக்கொண்டபொழுது, ஷுஹ்ராய் கொடுத்த குத்துக்களைப் பொறுத்து கொண்ட மாதிரி, பாவெல் இந்த விடுமுறை நீடிப்பையும் சகித்துக் கொண்டான். அப்பொழுதும் அவன் விழுந்தவுடனேயே எழுந்துநின்று சண்டை பழகினான். இப்பொழுதும் அம்மாதிரி செய்வதற்கு ஆர்வமாயிருந்தான்.

பாவெலின் தாயாருக்கு அல்பீனா என்ற ஒரு சிநேகிதி இருந்தாள். அவள் யெவ்பத்தோரியாவுக்கு அருகில் ஒரு சிறிய பட்டினத்தில் வசித்து

வந்தாள். அவளைப்பற்றிக் குறிப்பிட்டு, அங்குப் போய் அவளைப் பார்த்து வரும்படி பாவெலைக் கேட்டுக்கொண்டு, அவன் தாய் கடிதம் எழுதி யிருந்தாள். பாவெலின் தாய் அந்தப் பழைய சினேகிதியைப் பதினைந்து ஆண்டுகளாகப் பார்க்க வில்லை. எனவே, கிரீமியாவில் இருக்கும்பொழு தே, பாவெல் அவளைப் போய்ப் பார்க்க வேண்டு மென்று தாயார் வற்புறுத்தியிருந்தாள். இந்தக் கடிதம், பிற்காலத்தில் பாவெலின் வாழ்வில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்தது.

ஒரு வாரம் சென்றது. பாவெலின் விடுதித் தோழர்கள் கப்பல் துறையில் கூடி, அன்பு சொ ரிந்து அவனுக்கு வழியனுப்பினர். ஒரு சகோத ரனைப் போலவே, எப்னர் அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டான். அன்று மார்த்தாவைக் காண வில்லை. எனவே, அவளிடம் விடைபெற்றுக் கொள்ள முடியாமல் போயிற்று.

மறுநாள் காலையில், கப்பல் துறையிலிருந்து பாவெலை ஏற்றி வந்த குதிரைவண்டி, சிறிய தோட்டத்தை உடைய ஒரு சிறு வீட்டுக்கு எதிரில் நின்றது.

அந்த வீட்டில் ஐவர் இருந்தனர். அல்பீனா, வயதான அம்மையார்; பருத்த சரீரத்தை உடை யவள். அவளது கருமையான கண்களில் சோகம் படர்ந்திருந்தது. அவளது வாடிய முகத்தில் அழகின் மீதமிச்சம் தோற்றம் அளித்தது. லியோல் யாவும் தாயாவும் அவளுடைய குமாரிகள்.

லியோல்யாவின் சிறிய மகனும் வீட்டில் இருந்தான். வீட்டுக்குத் தலைவனான க்யூத்ஸாம் என்ற கிழவன்—அல்பீனாவின் கணவன்—புஷ்டியானவன், வெடுவெடுப்பானவன்; காட்டுப் பன்றி மாதிரி காட்சியளித்தான்.

க்யூத்ஸாம் ஒரு கூட்டுறவுக் கடையில் வேலை செய்தான். இளைய பெண்ணான தாயா, அப்போதைக்கப்போது கிடைத்த வேலையைச் செய்து வந்தாள். லியோல்யா, முன்னால் 'டைப்பிஸ்ட்டாக' வேலை செய்தவள்; சமீபத்தில் அவள் குடிகாரனாகவும் துஷ்டனாகவும் இருந்த தன் முரட்டுக் கணவனிடமிருந்து பிரிந்துவந்து, தாய் வீட்டில் தங்கியிருந்தாள். தன் மகனைப் பராமரிப்பதுடன், வீட்டு வேலையில் அன்னைக்கு உதவி செய்தாள்.

அல்பீனாவுக்கு இரண்டு குமாரிகளைத் தவிர, ஒரு மகனும் உண்டு. அவன் பெயர் ஜார்ஜ். பாவெல் விருந்தாளியாக வந்த சமயத்தில், ஜார்ஜ் லெனின்கிராதில் இருந்தான்.

அந்தக் குடும்பத்ினர் பாவெலுக்கு இன்முகம் காட்டி நன்னயத்துடன் வரவேற்றார்கள். கிழவன் மட்டுமே, அவனைச் சந்தேகத்தோடும் விரோதத்தோடும் நோக்கினான்.

பாவெல் தனது குடும்பச் சேதிகளையெல்லாம் அல்பீனாவிடம் பொறுமையாக எடுத்துரைத்தான். அவனும் க்யூத்ஸாம் குடும்பத்தைப் பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டான்.

லியோல்யாவுக்கு வயது இருபத்திரண்டு. அவளது அகமும் முகமும் எளிமைக்கு எடுத்துக்காட்டாக விருந்தன. பழுப்புநிறக் கேசத்தைக் கத்தரித்து விட்டிருந்தாள்; உள்ளத்தில் உள்ளதைப் பளிங்குபோல் எடுத்துக் காட்டும் அகன்ற முகத்தை உடைய லியோல்யா, பாவெலே உடனடியாகத் தன் னம்பிக்கைக்கு உரியவனுக்கிக் குடும்ப ரகசியங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தாள். கிழவன் யதேச்சாதிகாரமாக நடப்பதாகவும், குடும்பத்தில் எவரும் சுயேச்சையாக எதைச் செய்வதற்கும் அனுமதிக்க மறுக்கிருனென்றும் அவள் கூறினுள். ஒட்டைச்சாண் நினைப்பும் பிடிவாத வெறியும் உடைய அந்தச் சிடுமூஞ்சிக் கிழவன், குடும்பத்தினரை அஞ்சி அஞ்சி வாழும் நிலைமைக்குத் தாழ்த்திவிட்டான். எனவே, மக்களே தந்தையை வெறுத்தனர். அல்பீனு இருபத்தைந்து ஆண்டுகளாகத் தன் கணவனின் அதிகார ஆணவத்தை எதிர்த்துப் போராடியவள். அவளுக்கும் கணவனிடம் வெறுப்புத்தான். பெண்கள் எப்பொழுதுமே அம்மாவின் கட்சியில் இருந்தனர். இந்த இடைவிடாக் குடும்பச் சண்டைகள், அவர்களது வாழ்வைக் கெடுத்து வந்தன. முடிவில்லாத சண்டை சச்சரவுகளில் பல நாட்கள் கழிந்தன.

அந்தக் குடும்பத்துக்கு இன்னெரு கேடாக ஜார்ஜ் முளைத்திருப்பதாக லியோல்யா பாவெலிடம் கூறினுள். அவன் எதற்கும் லாயக்கு இல்லாதவன்; மண்டைக்கனம் மிகுந்தவன்; தற்பெருமையடித்துக் கொள்வதில் சூரன்; அறு சுவை

உணவு, வலிய மதுபான வகைகள், எடுப்பான உடைகள் ஆகியவற்றைத் தவிர, எதிலும் கவலையில்லாதவன். தாயாருக்குச் செல்லப் பிள்ளையான ஜார்ஜ், தன் பள்ளிப்படிப்பு முடிந்தவுடன், தலைநகருக்குப் போக வேண்டுமென்று சொல்லிப் பணம் கேட்டான். ''நான் சர்வகலாசாலையில் படிக்க வேண்டும். லியோல்யா மோதிரத்தை விற்றுப் பணம் தரலாம். உன்னிடம் அடகு வைத்துப் பணம் வாங்குவதற்கு வேறு சில பொருட்களும் உள்ளன. எனக்குத் தேவை பணம். எப்படியாவது பெற்றுத் தரவேண்டும்'' என்றான்.

அவனுடைய தாயார், அவனது கோரிக்கை எதையும் நிராகரிக்க மாட்டாளென்பதை நன்கறிந்த ஜார்ஜ், தாய்ப் பாசத்தை இழிவான முறையில் பயன்படுத்திக் கொண்டான். அவன் தன் சகோதரிகளைத் தாழ்ந்தவர்களாகக் கருதி, இளப்பமாக நடத்தினன். அவனது தாயார் தன் கணவனிடமிருந்த கறக்கக்கூடிய பணத்தையெல்லாம் பெற்று அவனுக்கு அனுப்பினுள். தவிர, தாயா சம்பாதித்த பணத்தையும் அனுப்பினுள். அதே சமயத்தில், ஜார்ஜ் பிரவேசப் பரீட்சையிலேயே தேர்ச்சி அடையாமல் தன் மாமன் வீட்டிலிருந்து இன்பமாகப் பொழுது போக்கினன். அடிக்கடி அதிகப் பணம் கோரி அம்மாவுக்குத் தந்தியடித்துத் தொல்லை கொடுத்தான்.

பாவெல் அந்த வீட்டை அடைந்த தினத்தில், பகல் முழுவதும் தாயாவைச் சந்திக்கவில்லை. சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில், அல்பீனு முன்

வாசலுக்கு விரைந்து சென்று தன் மகள் தாயா விடம் பாவெலின் வருகையைப் பற்றித் தாழ்ந்த குரலில் பேசியதை, அவன் கவனித்தான். அந்தப் பெண், புதிய இளைஞனது கரத்தைக் கூச்சத்துடன் குலுக்கினாள். அப்பொழுது, அவளது காதின் சிறகு கூட நாணத்தால் சிவந்தது. உறுதிப்பட்டிருந்த அவளுடைய சிறிய வலிய கரத்தை அவன் சிறிது நேரம் தன் கைப்பிடியில் வைத்திருந்தான்.

தாயாவுக்குப் பத்தொன்பதாவது வயது நடந்துகொண்டிருந்தது. அவளை அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் பெரிய பழுப்பு நிறக் கண்களையும் விற்புருவங்களையும் நேர்த்தியான நாசியையும் நிறைவாக அமைந்திருந்த தூய இதழ்களையும் பெற்றிருந்த அவள் கவர்ச்சியாக இருந்தாள். வரிபோட்ட பிளவுஸுக்குள் அவளது உருண்டு திரண்ட மார்பு எடுப்பாயிருந்தது.

இரண்டு சகோதரிகளுக்கும் தனித்தனியான சிறு அறைகள் இருந்தன. தாயாவின் அறையில் ஒரு குறுகலான இரும்புக் கட்டிலும் அலங்காரப் பொம்மைகளுடன் கூடிய பல பீரோவும், ஒரு சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியும் இருந்தன; சுவர்களில் பல புகைப் படங்களும் தபால் கார்டு படங்களும் மாட்டப்பட்டிருந்தன. ஜன்னல் கட்டையில், செக்கச் செவேலென்ற மலர்களையும் இளஞ் சிவப்பு மலர்களையும் உடைய பூச்செடிச் சட்டிகள் இரண்டு இருந்தன. ஜரிகைப் படுதா, மங்கலான நீல நாடாவால் அடியில் கட்டப்பட்டிருந்தது.

''தாயா தன் அறைக்குள் ஆடவரை அனு மதிப்பதில்லே. உங்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளித்திருக்கிருள்'' என்று கூறி, லியோல்யா தன் தங்கையைக் கிண்டல் செய்தாள்.

அடுத்த நாள் மாலேயில், பெற்ரேர் தங்கு மிடத்தில், குடும்பத்தினர் அனேவரும் அமர்ந்து டீ பருகிக் கொண்டிருந்தார்கள். க்யூத்ஸாம், டீயைத் தேக்கரண்டியால் கலக்கிக்கொண்டே, தன்னெதிரில் உட்கார்ந்திருந்த பாவெலே மூக்குக் கண்ணுடி வழியே மீண்டும் மீண்டும் நோக்கினுன்.

''தற்காலத் திருமணச் சட்டங்கள் மகா மோசம். இன்று விவாகம்; நாளே விவாக ரத்து. அவரவர் இச்சைப்படி காரியம் நடக்கிறது. பரி பூர்ண சுதந்திரம்.''

இவ்வாறு பேசிய கிழவனுக்கு மூச்சு அடைத் துக் கொண்டது. அவன்தொண்டையைக் கனேத் துக்கொண்டு, தன்னே நிதானப்படுத்திக் கொண் டான். அதன்பின் லியோல்யாவைச் சுட்டிக்காட் டிக் கூறினுன்:

''அவளேப் பார். அவளும் அவளது புருஷ னும் யாரையும் கேட்காமல் கல்யாணம் செய்து கொண்டார்கள்; எவரையும் கேட்காமல் பிரிந்த னர். இப்பொழுது, அவளுக்கும் அவளுடைய மகனுக்கும் நான் சோறு போட வேண்டியிருக் கிறது. இது அக்கிரமம் என்று நான் சொல் கிறேன்.''

லியோல்யாவுக்கு வருத்தம் தாங்க முடிய வில்லே; அவளது முகம் சிவந்தது. கண்ணீரில் மிதந்த கண்களே மறைத்துக் கொண்டாள்.

''அப்படியானால், அவள் அந்தப் போக்கிரியுடன் வாழ வேண்டுமென்று சொல்கிறீர்களா?'' என்று பாவெல் வினவினான்; அவனது விழிகளில் வெஞ்சினம் பளிச்சிட்டது.

''யாரைக் கல்யாணம் செய்கிறோமென்பதை அவள் தெரிந்திருக்க வேண்டும்'' என்று கிழவன் கூறினான்.

அல்பீனா தலையிட்டாள். ஆத்திரம் பொங்க, அவள் விரைந்து பேசினாள்:

''விருந்தாளிக்கு முன் இந்த விவகாரத்தை ஏன் விவாதிக்கிறாய்? பேசுவதற்கு வேறு பொருள் இல்லையா?''

கிழவன் திரும்பி, அவள்மீது பாய்ந்தான்.

''நான் என்ன பேசவேண்டுமென்று எனக்குத் தெரியும்! எனக்குப் பாடம் போதிக்க நீ எப்பொழுது ஆரம்பித்தாய்?'' என்று கேட்டான்.

அன்று இரவு, பாவெல் நீண்ட நேரம் உறங்கவில்லை. க்யூத்ஸாம் குடும்பத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அகஸ்மாத்தாக இங்கு வந்த அவன், தான் அறியா வண்ணம், இந்தக் குடும்ப நாடகத்தின் ஒரு பாத்திரமாக ஆகிவிட்டான். இந்த அடிமை வாழ்விலிருந்து தாயையும் மக்களையும் விடுதலை செய்வதற்கு, தான் எப்படி உதவ முடியுமென்பது அவனுக்குப் புரியவில்லை. அவனது வாழ்வே ஒரு நிலையை அடையவில்லை; பல பிரச்சினைகள் பைசலாகாமல் இருந்தன; உறுதியான நடவடிக்கை எடுப்பதென்பது முன்னைக் காட்டிலும் கடினமாயிருந்தது.

ஒரே ஒரு வழிதான் இருந்த தென்பது தெளிவு. குடும்பம் கலைந்துவிடவேண்டும். தாயும் பெண்களும், கிழவனை விட்டுவிட்டு வெளியேற வேண்டும். ஆனால் இது எளிதில் ஆகக்கூடிய காரிய மல்ல. இந்தக் குடும்பப் புரட்சியைச் சாதிக்கக் கூடிய நிலையில், அவன் இல்லை. சில நாட்களில் அவன் வெளியேறவேண்டும். மீண்டும் இவர்களை ஒரு பொழுதும் சந்திக்கமுடியாமல் போனாலும் போகலாம். இந்தச் சேற்றுக்குட்டையைக் கலக்கு வதற்குப் பதிலாகத் தலையிடாமலிருப்பது சிறந்த தல்லவா? ஆனால் கிழவனின் வெறுக்கத்தக்க உருவம், அவனது நிம்மதியைக் குலைத்துக் கொண்டேயிருந்தது. பாவெல் மூளையில் பல திட்டங்கள் உருப்பெற்றன; ஆனால் அவை நடை முறைக்கு ஒத்துவராதென்று அவனே நிராகரித்து விட்டான்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. பாவெல் நகரில் உலவிவிட்டு, வீட்டுக்குத் திரும்பினான். தாயா தனியாக இருந்தாள். மற்றவர்கள், உறவினரைப் பார்த்துவர வெளியேபோ யிருந்தனர்.

பாவெல் தாயா அறைக்குச் சென்றான்; மிகுந்த களைப்புடன், நாற்காலியில் அமர்ந்தான்.

''நீ ஏன் ஒருதடவையாவது வெளியே சென்று நிம்மதியாகப் பொழுதுபோக்கக்கூடாது?'' என்று அவன் அவளை வினவினான்.

''நான் எங்கும் போக விரும்பவில்லை'' என்று அவள் மெல்லிய குரலில் விடை தந்தாள்.

அவன், இரவில் எண்ணித்துணிந்த திட்டங்களை ஞாபகப்படுத்திக் கொண்டான்; அவளிடம் அவற்றை எடுத்துரைக்கத் தீர்மானித்தான்.

மற்றவர்கள் வீட்டுக்கு வருவதற்குமுன், கூறி முடிக்க வேண்டுமென்பதற்காக அவன் நேராகவும் விரைவாகவும் பேசினான்.

''தாயா, நான் சொல்வதைக் கேள். நாம் இருவரும் உற்ற நண்பராகிவிட்டோம். நமக்கு இடையே வீண் சம்பிரதாயம் எதற்கு? நான் சீக்கிரத்தில் இங்கிருந்து கிளம்புகிறேன். நானே தொல்லையில் சிக்கியிருக்கும் பொழுது, உன் குடும்பத்தைப் பற்றித் தெரிந்துகொண்டது துரதிர்ஷ்டமானது. எனக்குத் தொல்லை இல்லையென்றால், விவகாரங்களை வேறு விதமாக முடித்துவிடுவேன். ஓராண்டுக்கு முன் உங்களைச் சந்தித்திருந்தால், உங்களை அழைத்துக்கொண்டு போய்விடுவேன். வியோல்யாவையும் உன்னையும் போன்றவர்கள் செய்வதற்கு வேலை மிகுதியாக உள்ளது. கிழவன் விஷயம் வேறு; அவனை விவேகமாக நடக்கும்படி செய்ய முடியாது. ஆனால் எப்படியிருந்தாலும் இப்பொழுது என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நானே எதற்கும் உதவ முடியாத நிலையில் இருக்கிறேன். ஆனால் அதைப் பேசிப் பயனில்லை. என்னைத் திரும்ப வேலைக்கு அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தப் போகிறேன். டாக்டர்கள் என்னைப்பற்றி என்னவெல்லாமோ அபத்தமாக எழுதியிருக்கிறார்கள். தோழர்கள் எனக்கு முடிவில்லாத சிகிச்சை அளிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால்

அதைப்பற்றிப் பிறகு பார்ப்போம்.... நான் "என் தாயாருக்கு எழுதுகிறேன்; உங்கள் விவகாரம் பற்றி அவளுடைய ஆலோசனையைக் கேட்கிறேன். இம்மாதிரி இருப்பதை என்னல் அனுமதிக்க முடியாது. ஆனுல், தாயா, நான் சொல்கிறபடி செய்தால், உன் தற்கால வாழ்விலிருந்து துண்டித்துக்கொள்ள நேரிடும் என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும். அதற்குச் சம்மதமா? அதற்கு வேண்டிய மனேபலம் உனக்கு உள்ளதா?

தாயா நிமிர்ந்து பாவெலே நோக்கினுள்.

''இந்த வாழ்விலிருந்து கத்தரித்துக்கொள்ள வேண்டுமென்பதே என் விருப்பம். மனேபலத்தைப் பொறுத்தமட்டில், எனக்கே தெரியாது.''

அவளது சந்தேகத்தை அவன் புரிந்துகொண்டான்.

''பரவாயில்லே, தாயா! விருப்பம் இருந்தால் போதும். மனமிருந்தால் மார்க்கம் உண்டு. உனக்குக் குடும்பப் பாசம் அதிகமா?

இந்தக் கேள்வியைக் கேட்டு, தாயா ஆச்சரியமடைந்து ஒரு விஞடி தயங்கினுள்.

''நான் அம்மாவுக்காக வருத்தப்படுகிறேன். வாழ்நாளெல்லாம், அப்பா அவளேத் துன்புறுத்தினர். இப்பொழுது, ஜார்ஜ் அவளேச் சித்திரவதை செய்கிருன். அவள் ஜார்ஜை நேசித்ததைப் போல, என்னேப் பாராட்டியதில்லேயென்ருலும், அவளுக்காக மிகவும் வருத்தப்படுகிறேன்'' என்று தாயா கூறினுள்.

அவர்கள் நீண்டநேரம் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டார்கள். குடும்பத்தின் இதர உறுப்பினர் வருவதற்குச் சற்று முன்னால், பாவெல் தமாஷாகக் கூறினான்:

''இதுவரை, கிழவன் உன்னை எவருக்கும் கட்டிக்கொடுக்காமல் இருப்பது ஒரு அதிசயம் தான்.''

அந்தப் பேச்சே தாயாவுக்கு அச்சமூட்டியது. அவள் மிரண்டவளாய்க் கரங்களைத் தூக்கினாள்.

''வேண்டாம், வேண்டாம். நான் ஒருபொழுதும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். பாவம், வியோல்யா பட்ட கஷ்டத்தை நான் பார்த்திருக்கிறேன். என்னவானாலும் சரி, நான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன்.''

பாவெல் சிரித்தான்.

''உன் ஆயுட்காலம் முழுமைக்குமே, முடிவு கட்டி விட்டாயா? யாராவது அழகன், இளைஞன், நேர்த்தியான குணசீலன் எதிர்ப்பட்டால்கூட, முடிவை மாற்றிக்கொள்ள மாட்டாயா?''

''மாட்டேன். கல்யாணத்துக்குமுன், காதலைப் பெறுகிறவரை, எல்லா இளைஞரும் நேர்த்தியானவர்தாம்.''

பாவெல் அவளது தோள்மீது கை வைத்துச் சாந்தப்படுத்த முயன்றான்.

''சரிதான், தாயா. கணவன் இல்லாமல், நீ உலகில் வாழமுடியும். ஆனால் இளைஞர்களை இப்படிக் கடிந்து கொள்ளாதே. நல்லவேளை, நான் உன் காதலைப்பெற முயல்வதாக நீ சந்தே

கிக்கவில்லை. அப்படிச் சந்தேகப்பட்டிருந்தாயா ஞல், கஷ்டம் ஏற்பட்டிருக்கும்'' என்று கூறிக் கொண்டே, அவன் அவளைச் சகோதர பாவத் துடன் தட்டிக் கொடுத்தான்.

''உன்னைப்போன்ற ஆடவர்கள் வேறு வகை யான பெண்களைத் திருமணம் செய்துகொள்வார் கள்'' என்று அவள் மிருதுவாகக் கூறினாள்.

சில நாட்களுக்குப்பின், பாவெல் கார்க்கவுக் குக் கிளம்பினான். தாயாவும் வியோல்யாவும், அல் பீனவும், அவளது சகோதரி ரோஸாவும் ரயில் நிலையத்துக்கு வந்து பாவெலை வழியனுப்பினார் கள். அல்பீனவின் வற்புறுத்தலுக்கு இணங்க, அவளது குமாரிகளை மறக்கமாட்டேன் என்றும், அவர்களது துன்பம் தீர ஏதாவது உதவிசெய் வேன் என்றும் பாவெல் வாக்களித்தான். அவர் கள் தமக்கு அன்னியோன்னியமான உறவினருக்கு விடை கொடுப்பதைப் போலப் பாவெலுக்கு விடை கொடுத்தார்கள். தாயாவின் கண்களில் நீர் நிறைந்தது. வியோல்யாவின் வெள்ளைக் கைக் குட்டையும் தாயாவின் வரிபோட்ட சட்டையும் சிறிதாகி மறையும் வரையில், பாவெல் வண்டி யின் ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

கார்க்கவை அடைந்த பாவெல், தோராவுக் குத் தொல்லை கொடுக்கக்கூடாதென்பதற்காகத் தன் நண்பன் பெத்யா நோவிக்கவ் வீட்டுக்குச் சென்ருன். பயணக் களைப்பு நீங்க ஓய்வு எடுத்த

யின், அவன் மத்தியக் கமிட்டியின் பணிமனைக்குப் போனான். அங்கு, அக்கீமுக்காகக் காத்திருந்தான். இருவரும் தனிமையில் சந்தித்தபொழுது, தன்னை உடனே வேலைக்கு அனுப்பவேண்டுமென்று பாவெல் கோரினான். அக்கீம் அதற்கு இணங்க மறுத்துத் தலை அசைத்தான்.

''முடியாது, பாவெல் உன் நிலைமை ஆபத்தாய் இருப்பதால், நரம்பு நோய்க்கூறு ஆஸ்பத்திரியில் நீ வைத்தியம் செய்துகொள்ள வேண்டுமென்றும், வேலை செய்வதற்கு அனுமதிக்க முடியாதென்றும், மத்தியக் கமிட்டியும் வைத்தியக் குழுவும் முடிவு செய்துள்ளன.''

''அவர்கள் என்ன சொன்னால், எனக்கென்ன, அக்கீம்! உன்னை நான் வேண்டிக்கொள்கிறேன். வேலை செய்யச் சந்தர்ப்பம் கொடு. ஒரு ஆஸ்பத்திரியிலிருந்து இன்னொரு ஆஸ்பத்திரிக்குப் போய்க் காலம் கழிப்பதால் எனக்கு எத்தகைய நன்மையும் கிடையாது'' என்று பாவெல் மன்றாடினான்.

அக்கீம் அவனது வேண்டுகோளை மறுக்க முயற்சித்தான். ''நாம் முடிவை மீறி நடக்கக் கூடாது. பாவெல், உன் நன்மைக்காகச் சொல்வதைக் கேட்கக்கூடாதா?'' என்றெல்லாம் அவன் வாதித்தான். ஆனால் பாவெல் தன் கட்சியை உணர்ச்சி ததும்ப உறுதியாக எடுத்துரைத்தான். இறுதியில், அக்கீம் அவனுக்கு விட்டுக்கொடுத்தான்.

அடுத்த நாளே, பாவெல் மத்தியக் கமிட்டி செயற் குழுவின் விசேஷ இலாகாவில் வேலை

செய்து கொண்டிருந்தான். வேலை தொடங்கிய வுடனேயே, இழந்த பலத்தைத் திரும்பப் பெற்று விடலாமென்று அவனுக்குத் தோன்றியது. எட்டு மணி நேரம், இருந்த இடத்திலிருந்து பெயரா மல் வேலைசெய்தான்; இடைவேளை உணவுக்காகக் கூட வேலையை நிறுத்தவில்லை; மூன்ருவது மாடி யிலிருந்து இறங்கி, எதிரில் இருந்த உணவு விடு திக்குச் சென்று வரமுடியாதென்றே, அவன் உண வைக்கூடப் பகிஷ்கரித்தான். அடிக்கடி அவனது கை அல்லது கால் திடீரென்று விறைத்துக் கொள் ளும். சில சமயங்களில் அவனது உடல் முழுவது மே சில விஞடி உணர்ச்சியற்றுப் போய்விடும். அவன் எப்பொழுதுமே, காய்ச்சல் கொண்டவன் மாதிரி காணப்பட்டான். சில நாட் காலைகளில், படுக்கையிலிருந்து எழுந்திருக்கச் சக்தியில்லாமல் கிடந்தான். அவன் மீண்டும் உணர்ச்சியைப்பெற்று எழுந்து வேலைக்குக் கிளம்பும் பொழுது, ஒரு மணி நேரம் தாமதமாகியிருந்தது கண்டு பதறு வான். கடைசியில், வேலைக்குத் தாமதமாக வரு வதாக அதிகாரபூர்வமான கண்டனத்துக்கே உள் ளாஞன். அவன் வாழ்வில் எதைக் கண்டு அதிகம் அஞ்சினுனே, அதே நிலைமை, கட்சி வேலைக்குத் தகுதியற்றவஞக ஒதுக்கப்படும் நிலைமை ஏற்படு வதை உணர்ந்தான்.

வேறு வேலைக்கு மாற்றுவதன் மூலம், அக்கீம் அவனுக்கு இருமுறை உதவி செய்தான். ஆனுல் தவிர்க்க முடியாத சம்பவம் நிகழ்ந்தது. வேலைக்குத் திரும்பி ஒரு மாத காலமாவதற்குள்,

பாவெல் மீண்டும் படுத்துவிட்டான். அப்பொழுது தான், அவன் பஷாஞேவாவின் வார்த்தைகளை ஞாபகப்படுத்திக் கொண்டான். அவளுக்குக் கடிதம் எழுதினுன். அதே நாளில் அவளும் வந்தாள். ஆஸ்பத்திரி வாசம் அவசியமில்லை என்று அவள் கூறியதைக் கேட்டு, அவன் ஆறுதல் அடைந்தான்.

''வைத்தியம் தேவையில்லாத அளவுக்கு என் உடல் நிலைமை சரிப்பட்டு விட்டதல்லவா?'' என்று அவன் விகடமாகக் கூறினுன். ஆனுல் பஷாஞேவா அதை ரசிக்கவில்லை.

அவனுக்கு ஓரளவுக்குச் சக்தி உண்டானவுடன், மத்தியக் கமிட்டி பணிமனைக்குத் திரும்பச் சென்ருன். இந்தத் தடவை, அக்கீம், முன்னைக் காட்டிலும் உறுதியாக இருந்தான். பாவெல் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமென்று அவன் வற்புறுத்தினுன்.

''நான் எங்கும் போகப்போவதில்லை. அதஞல் பயனில்லை. விஷயம் அறிந்தவர் கருத்தைத் தெரிந்தே நான் சொல்கிறேன். நான் ஒரே ஒரு காரியத்தைத்தான் செய்யமுடியும், பென்ஷன் வாங்கிக்கொண்டு, ஓய்வு எடுப்பதே அது. அதை நான் செய்யமாட்டேன்! என் வேலையை விட்டு விடும்படி என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. எனக்கு இருபத்துநான்கு வயதுதான் ஆகிறது. மிச்சமுள்ள காலமெல்லாம், வேலை செய்ய முடியாதவஞக, வீஞக ஆஸ்பத்திரிகளைச் சுற்றித்திரியும் போக்கு எனக்குப் பிடிக்காது. என் நிலைமைக்குத் தகுதியான வேலையைக் கொடு. நான் வீட்டில்

வேலை செய்கிறேன்; அல்லது ஆபீஸிலே தங்குகிறேன். ஆனால் தபாலுக்குச் செல்லும் கடிதங்களுக்கு எண் குறிப்பது போன்ற பேனா வேலை எனக்கு வேண்டாம். ஓரளவுக்குப் பயனுள்ள வேலை செய்வதாக எனக்கு மனநிறைவு அளிக்கத் தக்கதாக, ஒரு வேலை கொடு'' என்று பாவெல் மன்றாடினான்.

அவனது ஆவேசம் நிறைந்த குரல் உயர்ந்து கொண்டேயிருந்தது.

அக்கீம், பாவெல் நிலையை எண்ணி மிகவும் வருந்தினான். தன் குறுகிய காலவாழ்வைக் கட்சிக்காக அர்ப்பணித்து அரும்பாடுபட்ட இந்த ஆர்வமிகு இளைஞன், கட்சி அணியிலிருந்து நீங்கி, ஏதோ ஒரு மூலையில் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டுமானால், அது எத்தகைய துன்பத்தையும் துயரத்தையும் அவனுக்கு உண்டாக்குமென்பதை அக்கீம் உணர்ந்திருந்தான். பாவெலுக்கு உதவும் பொருட்டுத் தன்னால் இயன்றதனைத்தும் செய்ய அவன் தீர்மானித்தான்.

''சரி, பாவெல், அமைதிப்படுத்திக்கொள். நாளைக்குச் செயற்குழு கூடுகிறது. தோழர்களிடம் உன் கருத்தை எடுத்துரைக்கிறேன். என்னால் முடிந்ததனைத்தும் செய்வேன் என்பது உறுதி.''

பாவெல் கஷ்டப்பட்டு எழுந்தான்; அக்கீமின் கரத்தைப் பிடித்துக்கொண்டான்.

''அக்கீம், வாழ்க்கை என்னை ஒரு மூலையில் தள்ளி நசுக்க முடியுமென்று நீ நினைக்கிறாயா?'' என்று வினவிய பாவெல், அக்கீமின் கரத்தைத்

தன் மார்புக்கூட்டின்மேல் இதயம் மந்தமாக அடித்துக் கொண்டிருந்த இடத்தில், வைத்துக் கொண்டே கூறினன். ''என் இதயம் இங்கு அடித்துக் கொண்டிருக்கும்வரை, என்னை எவராலும் கட்சியிலிருந்து பிரிக்கமுடியாது. மரணம் ஒன்று தான் என்னைக் கட்சி அணியிலிருந்து அகற்றவல்லது. இதை மறந்து விடாதே, நண்பா.''

அக்கீம் மௌனமாயிருந்தான். பாவெல் பேசியது வெற்றுரையல்லவென்பதை அக்கீம் அறிவான். அது போர்க்களத்தில் படுகாயமுற்ற வீரனது குரல். பாவெலைப் போன்றவர்கள் வேறு மாதிரியாக எண்ணவோ பேசவோ முடியாதென்பது அக்கீமுக்குத் தெரியும்.

இரண்டு நாட்களுக்குப் பின், அக்கீம் பாவெலைச் சந்தித்தான். இலக்கியத் தொண்டில் அவனைப் பயன்படுத்த முடியுமாஞல், ஒரு பெரிய பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் வேலை செய்யும் சந்தர்ப்பத்தை அவனுக்குக் கொடுப்பதென்று முடிவாகியிருப்பதாக அக்கீம் சொன்ஞன். பாவெல், அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அலுவலகத்துக்குப் போஞன். அங்கு ஆசிரியர் குழு பாவெலிடம் வினயமாக நடந்து கொண்டது. அங்குப் பழைய கட்சி ஊழியரும், உக்ரேனிய மத்தியக் கண்டிரோல் கமிஷனின் தலைமைக் குழு உறுப்பினருமான அப்பத்திரிகையின் துணை ஆசிரியரைப் பாவெல் பேட்டி கண்டான்.

''தோழரே, நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?'' என்று அவள் வினவிஞள்.

''மூன்று வருடம், ஆரம்பப் பள்ளியில் படித்தேன்.''

''கட்சியின் அரசியல் பயிற்சிப் பள்ளிகளில் பயின்றிருக்கிறீர்களா?''

''இல்லை.''

''பரவாயில்லை. அந்தப் பயிற்சி இல்லாமலேயே சிலர் நல்ல பத்திரிகையாளராகிருர்கள். உங்களைப் பற்றித் தோழர் அக்கீம் எங்களுக்குச் சொல்லியிருக்கிருர். நாங்கள் கொடுக்கும் வேலையை நீங்கள் வீட்டிலேயே செய்யலாம். பொதுவாகத் தகுந்த வேலை நிலைமைகளை அளிப்பதற்கும் நாங்கள் சித்தமாயிருக்கிறோம். ஆனல் இத்தகைய வேலைக்குக் கணிசமான அறிவு தேவை. குறிப்பாக, இலக்கியத் துறையிலும், மொழித் துறையிலும் கணிசமான அறிவு அவசியம்.''

இந்தப் பேச்சு, பாவெலுக்குத் தோல்வி நிச்சயமென்பதையே அறிவுறுத்தியது. அரை மணி நேரப் பேட்டியிலிருந்து அவன் தனது அறிவுக் குறைவைத் தெரிந்து கொண்டான். அவன் மாதிரிக்காக எழுதிய கட்டுரை, சுமார் மூன்று டஜன் நடைப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் இருப்பதாகச் சிவப்புப் பென்சிலால் குறியிடப் பட்டு, அவனைத் திரும்ப அடைந்தது.

''தோழர் கர்ச்சாகின், உங்களுக்குக் கணிசமான திறமை இருக்கிறது. ஓரளவுக்குக் கடுமையாக உழைத்தால், நீங்கள் நன்ருக எழுத முடியும். ஆனல் தற்சமயம், உங்களது இலக்கணமெல்லாம் தப்பும் தவறுமாயிருக்கிறது. உங்களுக்கு ருஷ்ய

மொழியில் போதுமான ஞானம் இல்லை என்பதை உங்கள் கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. அதில் ஆச்சரியம் இல்லை; ஏனென்றால், மொழிப் பயிற்சி பெறும் வாய்ப்பு உங்களுக்கு இருந்ததில்லை. துரதிஷ்டவசமாக, உங்களிடம் திறமை இருந்த போதிலும், அதைப் பயன்படுத்தக்கூடிய நிலை யில் நாங்கள் இல்லை. உங்களது கட்டுரைகளின் உள்ளடக்கத்தை மாற்றுமல், அவற்றைத் திருத்தி எழுதினல், அவை சிறப்பாய் அமையும். ஆனல் அதற்கு, மற்றவர் கட்டுரைகளைத் திருத்தி எழுதும் தரமுள்ளவர்கள் தேவைப் படுகிறது'' என்று ஆசிரியர் விளக்கினர்.

பாவெல், கம்புமீது சாய்ந்துகொண்டு எழுந் தான். அவனது வலது புருவம் துடித்தது.

''ஆம். உங்களது கருத்து எனக்குப் பிடிபடு கிறது. நான் எப்படிப்பட்ட பத்திரிகையாளனக இருக்க முடியும்? ஒரு காலத்தில், ஸ்டோக்கர் வேலையை நன்கு செய்தேன்; எலெக்டிரிஷியன் வேலையையும் சுமாராகச் செய்தேன். நன்றாகக் குதிரைச் சவாரி செய்தேன். கம்ஸமோல் வாலி பர்களைத் தட்டி எழுப்பும் ஆற்றலும் எனக்கு இருந்தது. ஆனல், பத்திரிகை வேலையில் நான் பயன்படமாட்டேன்.''

அவன் ஆசிரியருடன் கரங் குலுக்கிவிட்டு வெளியேறினன்.

நடைக்கூடத்தின் திருப்பமொன்றில், அவன் தடுமாறினன். அந்த வழியே சென்ற ஒரு பெண்

அவனைப் பிடித்துக் கொண்டிருக்காவிட்டால், விழுந்திருப்பான்.

''தோழரே, என்ன விஷயம்? ரொம்பச் சீக்காய்க் காணப்படுகிறீர்களே!'' என்று அவள் வினவினாள்.

அவன் தன்னுணர்வு பெறுவதற்குச் சில விநாடி ஆயிற்று. அதன்பின், அந்தப் பெண்ணை மென்மையாகத் தள்ளிவிட்டுக் கோலில் சாய்ந்து கொண்டே நடந்தான்.

அதன்பின், பாவெலின் உடல்நிலை மேலும் மேலும் க்ஷீணித்தது. இனி அவனால் வேலை செய்ய முடியாது. மேலும் மேலும் அதிகமாக, அவன் படுத்துக் கிடக்க நேர்ந்தது. மத்தியக் கமிட்டி, அவனை வேலையிலிருந்து விடுவித்து அவனது பென்ஷனுக்கு ஏற்பாடு செய்தது. உரிய காலத்தில், பென்ஷன் வந்தது. அவனால் வேலை செய்ய முடியாதென்பதற்கான அத்தாட்சிப் பத்திரமும் உடன் வந்தது. மத்தியக் கமிட்டி அவனுக்குப் பணம் கொடுத்தது. அவன் சம்பந்தமான கட்சி தஸ்தாவேஜுகளையும் கொடுத்தது. விரும்பிய இடத்துக்குச் செல்லும் உரிமையையும் அவனுக்கு அளித்தது.

மாஸ்கோவுக்கு வந்து ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி, மார்த்தா பாவெலுக்கு எழுதினாள். எப்படியிருந்தாலும், மாஸ்கோ போவதென்று பாவெல் எண்ணியிருந்தான்; ஏனென்றால், இருந்த இடத்திலிருந்தே தொண்டாற்றும் வகையில், அகில யூனியன் மத்தியக் கமிட்டி வேலை கொடுத்து

உதவுமென்று அவன் ஓரளவுக்கு நம்பினுன். ஆனுல் மாஸ்கோவிலும், வைத்தியம் செய்து கொள் ளும்படியே வற்புறுத்தினர்கள். நல்ல ஆஸ்பத்தி ரியில் இடவசதி தந்தார்கள். ஆனுல் அவன் மறுத்துவிட்டான்.

மார்த்தா அவளது சினேகிதி நாதியாவுடன் வசித்த இடத்தில், பாவெல் பத்தொன்பது நாட் கள் தங்கினுன். அந்த நாட்கள் விரைவில் கழிந்தன. இரண்டு பெண்களும் காலையிலேயே வேலைக்குச் சென்று மாலையில்தான் திரும்பினுர்கள்; அதனுல் பாவெல் பகற்பொழுதெல்லாம் வீட்டில் தனியாக இருந்தான். மார்த்தாவிடம் இருந்த நல்ல நூல் நிலையத்திலிருந்து புத்தகங்களை எடுத்துப் படிப் பதிலேயே அவன் நேரத்தைக் கழித்தான். அந்தப் பெண்களும் அவர்களது நண்பர்களும் மாலை நேரத்தில் பாவெலுடன் அமர்ந்து உரையாடி னுர்கள். எனவே, மாலைப் பொழுது இன்பமாகக் கழிந்தது.

க்யூத்ஸாம் குடும்பத்தினரிடமிருந்து கடிதங் கள் வந்தன. அவன் அவர்களைப் பார்க்க வர வேண்டுமென்று அவை வற்புறுத்தின. அவர்களது வாழ்வு, சகிக்க முடியாததாக இருந்தது. அவ னது உதவி தேவைப்பட்டது.

எனவே, ஒருநாள் காலை, பாவெல் மார்த்தா வின் அமைதியான இல்லத்திலிருந்து கிளம்பினுன். ரயில் வண்டி, அவனைத் தென் திசையில், கடலை நோக்கி விரைவாக இட்டுச் சென்றது. மழையும் ஈரக்காற்றுமாக இருந்த சரத் காலத்திலிருந்து,

தென் கிரீமியாவின் கதகதப்பான கடற்கரைப் பகுதிக்கு அவன் போய்க்கொண்டிருந்தான். ஜன்னலில் உட்கார்ந்து, தந்திக் கம்பங்கள் பறந்து சென்றதை அவன் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவனது புருவங்கள் சுருங்கின; அந்தக் கரிய கண்களில் ஒரு நீங்காத ஒளி நிலவியது.

அத்தியாயம் எட்டு

கீழே, கரடுமுரடாகவும் ஏற்ற இறக்கமாகவும் இருந்த பாறைகளுக்கருகில் கடல் அலைகள் பட்டுத் தெறித்தன. தொலைதூரத்துத் துருக்கி தேசத்திலிருந்து வந்த ஈரப்பசை இல்லாத விறைப்பான காற்று அவனது முகத்தின்மீது அடித்தது. கான்கிரீட்டில் அமைந்த செய்கரை கடலிலிருந்து பாதுகாக்கப்பெற்ற துறைமுகம், கோணலான வில்லாகக் கடற்கரையிலிருந்து வளைந்து சென்றது. மலைத்தொடர் கடலுக்கு அருகே சென்று, திடீரென்று முடிந்துவிட்டது. வெகு தூரத்தில், மலைச் சரிவுகளிலே, சிறு குடிசைகள் காட்சி அளித்தன. இவ்விடமே நகரின் வெளிப் பேட்டை.

நகருக்கு வெளியிலுள்ள இந்தப் பழைய பூங்காவில் அமைதி நிலவியது. வெகு நாட்களாகச் சுத்தம் செய்யப் படாத பாதைகளில் புற்கள் மிகுதியாக வளர்ந்திருந்தன. மஞ்சள்நிற இலைகள், தோட்டப் பாதைகளில் மெதுவாக ஊர்ந்து சென்றன.

நகரிலிருந்து இந்த இடத்திற்குப் பாவெலை அழைத்து வந்த பாரசீகக் கிழவன், இந்த விநோதப் பேர்வழி வண்டியிலிருந்து இறங்கியவுடன், வினவினுன்:

''எல்லா இடங்களையும் விட்டுவிட்டு இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? மங்கையர் இல்லை; பொழுது போக்குகள் இல்லை; நரிகளைத் தவிர ஒன்றும் இல்லை.... இந்த அத்வானத்தில் என்ன செய்வீர்கள்? உங்களைத் திரும்ப நகரில் கொண்டு விடுகிறேன், வாருங்கள்.''

பாவெல் கிழவனுக்குக் கட்டணத்தைக் கொடுத்தான். அவனும் வண்டியை ஓட்டிக் கொண்டு போனுன்.

அந்தப் பூங்கா அத்வானமாகத்தான் இருந்தது. கடலைப் பார்ப்பதற்கு ஏற்ற ஒரு பெஞ்சி, ஒரு மேட்டில் இருந்தது. பாவெல் அதில் உட்கார்ந்து, சரத் காலத்துச் சூரியனுக்கு எதிராக முகத்தை வைத்துக் கொண்டான்.

அவன் தன் வாழ்வின் போக்கைப்பற்றிச் சிந்தித்து, என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்து முடிவு செய்வதற்காக, இந்த அமைதியான இடத்துக்கு வந்திருந்தான். நிலைமையை ஆராய்ந்து, ஏதாவதொரு முடிவை எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

அவன் க்யூத்ஸாம் குடும்பத்துக்கு இரண்டாவது தடவை விஜயம் செய்ததால், குடும்பச் சச்சரவு உச்சத்தை அடைந்துவிட்டது. பாவெல் வந்திருப்பதை அறிந்தவுடன், கிழவன் கோபாவேசம்

கொண்டு சிறினுன்; ஒரு பெரிய சண்டையைத் தொடங்கி விட்டான். இயல்பாகவே, பாவெல் தான் அவனை எதிர்த்து நிற்கவேண்டியதாயிற்று. கிழவன் எதிர்பாராத வகையில், அவனது மனைவியும் மக்களுமே அவருக்குச் சுடச்சுடப் பதில் அளித்தனர். ஆகக்கூடிப் பாவெல் வந்த நாளிலிருந்தே, வீடு இரண்டு விரோதி முகாம்களாகப் பிரிந்தது. பெற்ருேர் வசித்த பகுதியின் கதவு பூட்டப்பட்டது. பக்கவாட்டில் இருந்த ஒரு சிறிய அறை பாவெலுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. பாவெல் வாடகையை முன் பணமாகக் கொடுத்தான்; அந்த ஏற்பாடு கிழவனை ஓரளவுக்குத் திருப்தி செய்தது. அவனுடைய பெண்கள் அவனிடம் சண்டை போட்டுக் கொண்டு பிரிந்து விட்டபடியால், அவன் இனி அவர்களைப் பராமரிக்கவேண்டியதில்லை.

அல்பீனு, அவளுடைய கணவனுடன் இருந்தாள். அது ஒரு யுக்தியான காரியமே. கிழவன் தன் வீட்டுப் பகுதிக்குள்ளேயே இருந்தான். அவனது வெறுப்புக்கு ஆளாயிருந்த இளைஞனைக் கண்ணெடுத்துப் பாராமல் காலம் தள்ளினுன். ஆனுல் தானே வீட்டுக்கு எஜமானன் என்பதைக் காண்பிப்பதற்காக, அவன் வெளிமுற்றத்தில் உறுமிக் கொண்டிருந்தான்.

க்யூத்ஸாம் கூட்டுறவுக்கடை வேலையை எடுத்துக் கொள்வதற்கு முன்னுல், தச்சனுகவும் செருப்புத் தைப்பவனுகவும் வேலை செய்து ஜீவனம் நடத்திஞன். இந்தத் தொழில்களுக்காக அவன் பின்

முற்றத்தில் ஒரு சிறிய பட்டறையைத் தயாரித்திருந்தான். இப்பொழுது, பாவெலுக்குத் தொல்லை கொடுப்பதற்காக, அவன் பாவெல் தங்கிய அறையின் ஜன்னலுக்கு வெளியே, சாமான்களைப் போட்டுக்கொண்டு, வேலை செய்தான். எப்பொழுது பார்த்தாலும், சம்மட்டியால் அடித்துக்கொண்டிருந்தான் அதன்மூலம் பாவெலின் படிப்புக்குப் பங்கம் ஏற்படுமென்று எண்ணித் திருப்தி அடைந்தான்.

''சற்றுப்பொறு. உன்னை வீட்டை விட்டு ஓடச் செய்கிறேன்!'' என்று அவன் சீறினான்.

தூரத்தில், தொடுவானத்தை ஒட்டிய இடத்தில், ஒரு நீராவிக் கப்பல் புகையைக் கொப்புளித்துக்கொண்டிருந்தது. பல கடற்பறவைகள், கிரீச்சென்று கதறிக்கொண்டு கடலை நோக்கிப் பாய்ந்தன.

பாவெல் கரங்களால் தலையைப் பிடித்துக்கொண்டு, சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். குழந்தைப் பருவத்திலிருந்து இன்றுவரை, அவனது வாழ்வு முழுவதும் மனக்கண்முன் துரிதமாகக் காட்சி தந்தது. இந்த இருபத்துநான்கு ஆண்டுகளும் அவன் எப்படி வாழ்ந்தான்? தகுதியான முறையிலா, அல்லது தகுதிகெட்ட வகையிலா? ஒவ்வொரு ஆண்டிலும் அவன் செய்ததையெல்லாம் ஞாபகப் படுத்திக்கொண்டான்; நிதானமாகவும் விருப்பு வெறுப்பு இல்லாமலும், அந்தச் செய்கைகளை எடை போட்டான். அப்படியொன்றும் மோச

மாக வாழவில்லை என்பதை அவன் கண்டான். அவன் பல பிழைகள் செய்திருந்தான் என்பது மெய். இளமையின் அனுபவமின்மையால் ஏற்பட்ட தவறுகள்; குறிப்பாக, அறியாமையால் உண்டான பிழைகள். ஆனால் சோவியத் ஆட்சி நிலைகொள்ளச் செய்வதற்காக, உக்கிரமான போராட்டம் நடந்த ஆண்டுகளில், அவன் தீவிரமாகச் செயல்பட்டான். புரட்சியின் சிவப்புப் பதாகையில் சில துளிகளாவது அவனது ஜீவ ரத்தம் இடம் பெற்றுள்ளது.

அவனது உடலில் வலு இருந்தவரை, அவன் கட்சி அணியிலிருந்து நகரவில்லை. இப்பொழுது, அவன் அடிபட்டு விழுந்துவிட்டான்; முன்னணியில் தன் ஸ்தானத்தை வகிக்கும் சக்தியை இழந்துவிட்டான். இனி ஆஸ்பத்திரிதான் அவனுக்குப் போக்கிடம்! வார்ஸாவைத் தாக்கிய பொழுது, போராட்டத்தின் உச்சத்தில், ஒருவன் அடிபட்டு தரையில் விழுந்தது அவன் நினைவுக்கு வந்தது. அவனது தோழர்கள் அவனுடைய காயங்களுக்குத் துரிதமாகக் கட்டுப்போட்டார்கள். உடனே, அந்தக் காயம்பட்ட வீரனைத் தூக்கிச் செல்லும்படி கூறிவிட்டு, விரோதிப் படைமீது வேகமாகப் பாய்ந்தார்கள். ஒரு சிப்பாய் விழுந்தான் என்பதற்காகப் படையின் முன்னேற்றம் தடைப்படவில்லை. ஒரு மகத்தான லட்சியத்துக்காக நடந்த போராட்டத்தில், அம்மாதிரி நிகழ்ந்தது; அம்மாதிரித்தான் நிகழமுடியும். கால்களை இழந்த யந்திரத் துப்பாக்கிச் சிப்பாய்கள், வண்டிகளில்

அமர்ந்து போராடியதை அவன் பார்த்திருக்கிறான். அவர்கள் பகைவருக்குக் கிலி உண்டாக்கினார்கள். அவர்களுடைய துப்பாக்கிகளால் எதிரி முகாமில் சாவும் அழிவும் ஏற்பட்டன. அவர்களது உருக்கு போன்ற உறுதியும் மனோதைரியமும் குறி தவறாத நோக்கும், அவர்களைப் படைக்கு அணிகலங்களாக ஆக்கின. ஆனால் அத்தகைய மனிதர் சிலரே.

இப்பொழுது, பாவெல் தோற்றுவிட்டான். இனி அவன் போரணிக்குத் திரும்பமுடியாது. அவன் இனி என்ன செய்வது? எதிர்காலத்தில் இன்னமும் அதிகமான வேதனைக்கும் சித்திரவதைக்கும் அவன் உள்ளாவான் என்ற உண்மையைப் பஷானோவாவிடமிருந்து கஷ்டப்பட்டுத் தெரிந்து கொண்டுவிட்டான். இனி என்ன செய்வது? நடைபாதையில் விரிந்துகிடக்கும் அகழியைப் போல, இந்தக் கேள்வி அவனுக்கு முன் நின்றது.

போராட்டத் திறனைத்தான் அவன் அதிகமாக நேசித்தான். அதை இழந்தபின், அவன் எதற்காக உயிர்வாழ வேண்டும்? இன்றும், உற்சாகத்துக்கு இடம் தராத நாளைக்கும், அவன் ஏன் உயிர் தரித்திருக்க வேண்டும்? மூச்சு விடுவதற்கும், உண்பதற்கும் குடிப்பதற்குமாகவா? தன் தோழர்கள் போராடி முன்னேறுவதைப் பார்த்துக் கொண்டு வாளா விருப்பதற்காகவா? படைக்குப் பாரமாய்ப் பொழுதைக் கழிப்பதற்காகவா? அவனுக்குத் துரோகம் செய்துவிட்ட அந்த உடலை அழித்து விடுவதே மேல் அல்லவா? இருதயத்தில்

ஒரு குண்டு—அத்துடன் காரியம் முடிந்தது! நன்றாக வாழ்ந்த வாழ்வுக்குத் தகுந்த நேரத்தில் முடிவுகாணும் மார்க்கம் அதுவே. ஒரு வீரன் தன் வேதனையிலிருந்து விடுபடுவதற்காகத் தற்கொலை செய்து கொண்டால், அவனை யார் கண்டிப்பார்கள்?

அவனது பிரௌனிங் துப்பாக்கியின் தட்டையான பாகத்தைக் காற்சட்டைப் பையில் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அவனது விரல்கள், அதன் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டன. மெதுவாக அந்த ஆயுதத்தை வெளியில் எடுத்தான்.

''நீ இந்த நிலைக்கு வருவாய் என்று யார் எண்ணியிருக்க முடியும்!''

துப்பாக்கியின் வாய் அவனை வெறித்துப் பார்த்தது; ஏளனத்துடன் பார்த்தது. பாவெல் பிஸ்டலை மடியில் வைத்துக்கொண்டு, தன்னைத் தானே மனங் கசந்து சபித்தான்.

''தம்பீ! இதெல்லாம் அசட்டு வீரம்! எந்த முட்டாளும் தற்கொலை செய்துகொள்ள முடியும். அதுதான் மிகவும் எளிய வழி! கோழையின் வழி! வாழ்வு ஒருவனைக் கடுமையாகத் தாக்கும் பொழுது, அவன் தன் மண்டையைக் குண்டால் வெடிக்கச் செய்வது சுலபம். ஆனால் வாழ்வின் மீது வெற்றிகொள்ள முயன்றாயா? இந்த எஃகுப் பொறியை உடைத்துக்கொண்டு வெளியேறுவதற்கு உன்னால் முடிந்ததெல்லாம் செய்து விட்டாயா? நோவ்கரத்-வாலீன்ஸ்கிய் போராட்டத்தை

மறந்துவிட்டாயா? நாளொன்றுக்குப் பதினேழு தடவையல்லவா விடாமுயற்சியுடன் தாக்கினோம்? இறுதியாகச் சகல இடுக்கண்களையும் முறியடித்து நாம் வெற்றி அடைந்தோமல்லவா? அந்தத் துப்பாக்கியைத் தூரத்தில் வை. இதைப்பற்றி ஒருவரிடமும் ஒரு வார்த்தை பேசாதே. வாழ்வு சகிக்க முடியாததாக ஆன பிறகும், எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக்கொள். உன் வாழ்வைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்.''

அவன் எழுந்திருந்து, சாலையை நோக்கி நடந்தான். அந்த வழியே சென்ற ஒரு மலைவாசி, பாவெலைத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டான். டவுனை அடைந்தவுடன், வண்டியிலிருந்து இறங்கிய பாவெல், ஒரு செய்தித்தாளை வாங்கினான். நகரத்தின் கட்சி உறுப்பினர் கூட்டம் அன்று நடப்பதைப் பத்திரிகையிலிருந்து அறிந்து கொண்டான். அன்று அவன் வீட்டுக்குத் திரும்பியபொழுது, இரவு நெடுநேரமாகிவிட்டது. கூட்டத்தில் அவன் ஒரு பிரசங்கமும் செய்தான். ஆனால் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் அவன் கடைசியாகச் செய்யும் பிரசங்கம் அதுவே என்பதை அப்பொழுது அவன் அறியவில்லை.

அவன் வீட்டை அடைந்தபொழுது தாயா விழித்துக் கொண்டிருந்தாள். பாவெல் நீண்டநேரமாக வராதது கண்டு அவள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அவனுக்கு என்ன நேர்ந்து விட்டதென்று அவளுக்குப் புரியவில்லை; எப்பொ

முழுதும் உயிரொளியும் அன்பும் நிறைந்த அவனது கண்களில் அன்றுகாலை ஒரு கடுமை தோன்றியிருந்ததை எண்ணி எண்ணி அவள் கவலைப்பட்டாள். அவனுக்கு எப்பொழுதுமே தன்னைப்பற்றிப் பேசுவதற்குப் பிடிக்காது. ஆனால் அவனது மனம் வேதனைக்கு உள்ளாகியிருந்ததாக அவள் ஊகித்தாள்.

அவளது தாயாரின் அறையிலிருந்த கடிகாரத்தில், மணி இரண்டு அடித்தது. அச்சமயம், வாசல் திறக்கும் ஓசை அவளது செவியில் விழுந்தது. கதவைத் திறப்பதற்காகச் சட்டையைப் போட்டுக்கொண்டு, வெளியே சென்றாள். தாயா வியோல்யா அறை வழியே சென்றபொழுது, உறங்கிக்கொண்டிருந்த வியோல்யா, நிம்மதியில்லாமல் முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

பாவெல் உள்ளே வந்தவுடன், ''எனக்குக் கவலையாக இருந்தது'' என்று தாயா, அவனைக் கண்ட மகிழ்ச்சியுடன் மெல்லிய குரலில் பேசினாள்.

''நான் உயிர்வாழும் வரை, எனக்கு எந்தக் கேடும் நிகழாது, தாயா. வியோல்யா தூங்குகிறாளா? எனக்குத் தூக்கமே வரவில்லை. உன்னிடம் கொஞ்சம் பேசவேண்டும். வியோல்யாவை எழுப்பக் கூடாதல்லவா? எனவே, உன் அறைக்குப் போவோம்'' என்று பாவெல் குசுமுசுவென்று பேசினான்.

தாயா தயங்கினாள். இரவு நேரம் அதிகமாகிவிட்டது. இந்தச் சமயத்தில் அவள் எப்படி அவனைத் தன் அறைக்கு அழைத்துச் செல்வாள்? அம்

மா என்ன எண்ணுவாள்! வரக்கூடாது என்றாலும், அவனுக்கு மனம் புண்பட்டுவிடும். என்னதான் சொல்லப் போகிறானென்ற வியப்புடன், அவள் பாவெலைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''தாயா, விஷயம்இதுதான்'' என்று பாவெல் மெல்லிய குரலில் தொடங்கினான். மங்கலான வெளிச்சத்தை உடைய அந்த அறையில், அவன் அவளுக்கு எதிரில் உட்கார்ந்திருந்தான். அவனது வெளிச்சுவாசம் அவள்மீது படும் அளவுக்கு அண்மையில் இருந்தான்.

''வாழ்வில் விநோதமான திருப்பங்கள் ஏற்படுகின்றன. இதனால் சில சமயங்களில் நாம் பிரமித்துவிடுகிறோம். கடந்த சில நாட்களில் என் நிலைமை மோசமாயிருந்தது. இனி எப்படி வாழ்வது என்பதே புரியாமல் இருந்தேன். சமீப காலத்தைப்போல, என்றுமே என் வாழ்வை இருள் கவ்வியதில்லை. ஆனால் இன்று நான் எனது சொந்த 'அரசியல் குழுக்' கூட்டம் நடத்தி, மிக முக்கியமான முடிவை எடுத்தேன். நான் சொல்வதைக் கேட்டு வியப்பு அடையாதே.''

கடந்த சில மாதங்களில் அவனுக்கு ஏற்பட்ட அனுபவங்களை அவளிடம் எடுத்துரைத்தான். அன்று பூங்காவுக்குச் சென்றபொழுது, மனதில் நிகழ்ந்தவற்றையெல்லாம் விவரித்தான்.

''இதுதான் நிலைமை. இனி மிக முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன். இந்தக் குடும்பத்தில், இப்பொழுது புயல் அடிக்கத் தொடங்கியிருக்கிறது. நாம் இந்த இடத்திலிருந்து வெளி

யேறி, நல்ல காற்று உள்ள இடத்துக்குப் போக வேண்டும். இந்தப் பொந்தை விட்டு எவ்வளவு தூரம் போக முடிந்தாலும், அது நல்லது. நாம் புதிய வாழ்வைத் தொடங்கவேண்டும். நான் இந்தப் போராட்டத்தில் தலையிட்டுவிட்டேன். இனி முடிவுவரை பின்வாங்கமாட்டேன். உன் வாழ்வும் என் வாழ்வும் தற்சமயம் இன்பமாயில்லை. நமது வாழ்வில் அன்பு ஒளி வீச வேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்பது புரிகிறதா? நீ என் வாழ்க்கைத் துணைவியாக, என் மனைவியாக இருக்க உடன்படுவாயா?''

அவன் சொன்னதை, மூச்சை அடக்கிக் கொண்டு கேட்ட தாயா, அந்தக் கடைசி வார்த்தைகள் காதில் விழுந்தவுடன் வெறித்துப் பார்த்தாள். அவன் தொடர்ந்து பேசினான்:

''இப்பொழுதே பதில் சொல்லவேண்டுமென்று நான் கேட்கவில்லை. நீ இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். வாடிக்கையான காதல் சம்பிரதாயங்களில்லாமல், நான் நேராகப் பேசுவதைப் புரிந்துகொள்வது உனக்குக் கஷ்டமாயிருக்கலாம். ஆனால் உனக்கும் எனக்கும் அந்த அபத்தமெல்லாம் தேவையில்லை. நான் என் கரத்தை நீட்டுகிறேன். நீ என்னை நம்பினால், மோசம் போக மாட்டாய். நாம் ஒருவருக்கொருவர் பேருதவியாக இருக்க முடியும். என் தீர்மானத்தைச் சொல்கிறேன், கேள். நீ உண்மையான போல்ஷெவிக்காக வளர்ச்சி அடையும் வரையில்தான், நமது வாழ்க்கை ஒப்பந்தம் நீடிக்கும். உனக்கு உதவ

என்னால் முடியாவிட்டால், நான் ஒரு சல்லிக்குக் கூடப் பயன்படமாட்டேன். நீ பண்படும் வரை, நமது ஒப்பந்தம் முறியக் கூடாது. ஆனால் நீ வளர்ச்சி அடைந்தபின், என் பந்தம் உன்னைக் கட்டுப்படுத்தாது. அதன்பின் என்ன நிகழுமென்று யார் சொல்ல முடியும்? என் உடல் பூர்ணமாக உருக்குலைந்து போய்விடலாம். அப்பொழுது, நீ எவ்வகையிலும் எனக்குக் கட்டுப்பட்டிருக்கத் தேவையில்லை என்பதை மறந்துவிடாதே.''

அவன் சில விநாடிகள் மௌனமாயிருந்தான். பிறகு, மென்மையான, அன்பு நிறைந்த குரலில், ''தற்காலத்துக்கு நான் என் நட்பையும் என் காதலையும் உனக்கு அளிக்கிறேன்'' என்று கூறினான்.

அவன் அவளது விரல்களைத் தன் விரல்களுக்குள் அமுக்கினான். அவள் தன் இணக்கத்தைத் தெரிவித்து விட்ட மாதிரி, அவனுடைய மனம் நிறைவு அடைந்தது.

''என்னை ஒருபொழுதும் கைவிடமாட்டேன் என்று வாக்களிப்பாயா?''

''தாயா, நான் வாக்குறுதிதான் அளிக்க முடியும். என்னைப் போன்றவர்கள் தமது நண்பர்களை நட்டாற்றில் விட மாட்டார்களென்பதில் உனக்கு நம்பிக்கை உண்டாக வேண்டும்... அவர்கள் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டார்களென்றுதான் நான் நம்புகிறேன்'' இறுதியில், அவனது குரலில் கசப்புத் தொனித்தது.

''இன்று இரவு விடை சொல்ல முடியாது.

திடீரென்று முடிவு சொல்ல இயலாது'' என்று தாயா விடை தந்தாள்.

பாவெல் எழுந்திருந்தான்.

''படுத்துக்கொள். சீக்கிரத்தில் பொழுது விடிந்துவிடும்.''

அவன் தன் அறைக்குச் சென்று, உடையை மாற்றிக் கொள்ளாமலேயே படுத்தான். அவனது தலை, தலையணையைத் தொட்டவுடனேயே, நித்திரையில் ஆழ்ந்தான்.

பாவெல் அறையில், ஜன்னலுக்கு அருகில் இருந்த மேஜைமீது, கட்சியின் நூல்நிலையத்திலிருந்து வரவழைத்த புத்தகங்களும், செய்தித்தாள்களும் குவிந்து கிடந்தன. குறிப்பு எழுதிய பல நோட் புத்தகங்களும் இருந்தன. அறையில் ஒரு படுக்கையும் இரண்டு நாற்காலிகளும் இருந்தன. அவனது அறைக்கும் தாயாவின் அறைக்கும் இடையில் இருந்த கதவில், சின்னஞ்சிறு கருங்கொடிகளும் செங்கொடிகளும் குத்தப்பட்டிருந்த சீன தேசப் படம் மாட்டியிருந்தது. உள்ளூர்க் கட்சிக் கமிட்டி, பாவெலுக்குப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் அனுப்புவதற்கு ஒத்துக்கொண்டிருந்தது. அவன் கேட்ட புத்தகங்களை அனுப்பும்படி, உள்ளூரிலிருந்த பெரிய நூல்நிலையத்தின் மானேஜருக்குக் கட்டளை பிறப்பிப்பதாகவும் அது வாக்களித்திருந்தது. சீக்கிரத்தில், புத்தகங்கள் கட்டுக் கட்டாக வரத் தொடங்கின. அதிகாலையிலிருந்து படித்துக்கொண்டும் குறிப்பு எடுத்துக் கொண்டும் இருந்த பாவெலைக் கண்டு லியோல்யா

வியப்புற்ருள். காலே சிற்றுண்டிக்காகவும் மதியம் உணவுக்காகவும் சிறிது நேரம் எழுந்து வருவதைத் தவிர, மிச்ச நேரமெல்லாம் பயிற்சிக்குப் பயன்படுத்திஞன். மாலே நேரத்தை அவன் அந்தப் பெண்களுடன் கழித்தான். அப்பொழுது, அவர்களுக்குத் தான் படித்த விஷயங்களே எடுத்துரைத்தான்.

நடுநிசிப் பொழுது கழிந்த பிறகும், தன் வெறுப்புக்குப் பாத்திரமான பாவெலின் அறையில் விளக்கு எரிவதைக் கிழவன் ஜன்னல் வழியே வெளிவரும் ஒளியிலிருந்து கண்டு கொள்வான். அவன் சப்தம் செய்யாமல் ஜன்னல் கதவின் ஓட்டை வழியாக, உள்ளே மேஜை மீது சாய்ந்துள்ள தலேயை நோக்குவான்.

''இந்த நேரத்தில், கண்ணியமானவர்கள் படுத்து உறங்குகின்றனர். ஆனுல் இவன் இரவெல்லாம் விளக்கை எரிக்கிருன். இவனே இந்த வீட்டுக்கு எஜமானன் மாதிரி நடக்கிருன். இவன் வந்தபின், இந்தப் பெண்கள் எதற்கும் அடங்குவதில்லே'' என்று முணுமுணுத்துக் கொண்டே, கிழவன் தன் படுக்கைக்குச் செல்வான்.

எட்டு வருஷங்களில் முதன் முதலாகப் பாவெலுக்கு நிறைய நேரம் இருந்தது. உடனடியாகச் செய்து தீர வேண்டிய வேலே இல்லாத நிலேயில் நேரம் கிடைத்தது. அவன் அந்த அவகாசத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டான். புதிய மாணவனின் ஆவலோடும் உற்சாகத்தோடும் அவன் படித்தான். தினம் பதினெட்டு மணி நேரம்,

புத்தகங்களைப் பயின்றான். இந்தச் சிரமத்தை அவனது உடல் எத்தனை நாட்களுக்குத் தாங்கியிருக்குமென்று சொல்வது கடினம். ஆனால் தற்செயலாகப் பேசுவது மாதிரி தாயா சொன்ன விஷயம், அனைத்தையும் மாற்றிவிட்டது.

''உன் அறையிலிருந்து என் அறைக்கு வருவதற்குள்ள கதவுக்கு முன்னால் இருந்த பீரோவை நகர்த்திவிட்டேன். எப்பொழுது என்னிடம் பேச விரும்பினாலும், நேராக வந்து விடு. லியோல்யாவின் அறை வழியே வரத் தேவையில்லை'' என்று அவள் கூறினாள்.

பாவெலின் முகம் சிவந்தது. தாயாவின் முகம் இன்பத்தால் மலர்ந்தது. அவர்களது ஒப்பந்தம் உறுதியாகிவிட்டது.

மூலை அறையின் ஜன்னல் வழியே, நடு இரவில் ஒளிக்கற்றைகளைக் கிழவன் அதற்குப்பின் பார்க்கவில்லை. தாயாவின் அன்னை, தன் மகளின் கண்களில் ஒரு புத்தொளியைக் கண்டாள். அது தாயாவால் மறைக்க முடியாத ஆனந்தத்துக்குச் சான்று பகன்றது. அவளது கண்களின் கீழ்க் காணப்பட்ட மங்கலான நிழல்கள், உறக்கமில்லா இரவுகளுக்குச் சாட்சியாக அமைந்தன. இப்பொழுது அடிக்கடி தாயா பாடினாள்; கித்தார் வாத்தியத்தை வாசித்தாள்.

ஆனால் தாயாவின் ஆனந்தத்தில் இடையூறு இல்லாமல் போகவில்லை. அவளது விழிப்புற்ற பெண்மை, அவர்களது உறவின் கள்ளத்தனத்தை

வெறுத்தது. ஏதாவது ஒரு ஒலி காதில் விழுந்தால், தாயின் காலடிச் சத்தமென்று பயந்து நடுங்கினாள். இரவில், அறைக்கதவு ஏன் உட்பக்கத்தில் தாளிடப்பட்டிருக்கிறது என்று அவர்கள் கேட்டால், அவள் என்ன சொல்வாள்? இந்த எண்ணம் அவளை வதைத்தது. பாவெல், அவளது அச்சத்தை அறிந்து கொண்டு, ஆறுதல் கூற முயன்றான்.

''எதைக் கண்டு அஞ்சுகிறாய்? நீயும் நானும் இங்கு எஜமானர்கள். அமைதியாக உறங்கு. நம் வாழ்வில் எவரும் தலையிட முடியாது'' என்று அவன் அன்பாகக் கூறுவான்.

ஆறுதல் அடைந்த தாயா, தன் முகத்தை அவன் மார்பில் புதைத்துக்கொண்டு, அவனைக் கட்டி அணைத்துக் கொண்டு உறங்குவாள். அவன் அவளது ஒரு சீரான சுவாசத்தைக் கேட்டுக் கொண்டு விழித்திருப்பான். அவளது தூக்கம் கலையக் கூடாதென்பதற்காக அமைதியாக இருப்பான். தன் வாழ்க்கையை அவனிடம் ஒப்படைத்துள்ள தாயாவின்பால் ஆழ்ந்த அன்பு பெருக்கெடுத்து, அவனை ஆட்கொண்டது.

தாயாவின் விழிகளில் பிரகாசித்த புத்தொளியின் காரணத்தை வியோல்யா தான் முதலில் கண்டுபிடித்தாள், அதிலிருந்து, இரு சகோதரிகளுக்கும் இடையே வேற்றுமை அதிகரித்தது. சீக்கிரத்தில் தாயாரும் விஷயத்தைக் கண்டுபிடித்தாள்; அல்ல, அனுமானித்தாள். அவள் மனம் கலங்கியது. அவள் பாவெலிடமிருந்து இத்தகைய செயலை எதிர்பார்க்கவில்லை.

''தாயா அவனுக்குத் தகுந்த மனைவியல்ல. இதன் விளைவு என்னவாகுமோவென்று அஞ்சு கிறேன்'' என்று அல்பீனு, லியோஸ்யாவிடம் கூறி னாள்.

அவளுக்குக் கிலியாக இருந்தது. ஆனால் பாவெலிடம் பேசுவதற்கும் அவளிடம் தைரியம் இல்லை.

இளைஞர்கள் பாவெலைக் கண்டு பேச வந்த னர். சில சமயங்களில், அவனது சிறு அறையில் அவர்களுக்கு இடம் போதாமல் இருந்தது. தேன டையில் கேட்கும் ஒலியைப் போல, இந்த அறை யிலிருந்து பல குரல்களின் ரீங்காரம் கிழவன் காதில் விழுந்தது. அடிக்கடி அவர்கள் கூட்டு கானம் பாடியதையும் கிழவன் கேட்டான்.

கொல்லுமென்ற அச்சமிக—நம்
குறைகடல் எழுந்து நடமாடும்;
அல்லும் பகலும் முழக்கமிடும்—தன்
ஆங்காரச்சினம் பொங்கிடவே.

பாவெலுக்குப் மிகவும் பிடித்தமான அந்தப் பாட்டு:

ஞாலமெலாம் கண்ணீரால் நனையுமாலோ....

இளந் தொழிலாளரின் வகுப்பு அது. பிர சார வேலை கொடுக்கவேண்டுமென்று பாவெல் வற்புறுத்தியதால், கட்சிக் கமிட்டி, இந்த வகுப்பு எடுக்கும் வேலையை அவனுக்கு ஒதுக்கியது. இவ் வாருகப் பாவெலின் நாட்கள் கழிந்தன.

மீண்டும், அவன் கப்பற் சுக்கானை உறுதியாகப் பிடித்துக்கொண்டுவிட்டான். சில சமயங்களில், ஆபத்துக்கு இடம் தரும் வகையில் சுழன்ற வாழ்வுக் கப்பல், இப்பொழுது ஒரு புதிய பாதையில் சென்று கொண்டிருந்தது. விஷயங்களைக் கசடறக் கற்றுக்கொண்டு, கட்சி அணிக்குத் திரும்ப வேண்டுமென்ற அவனது கனவு நனவாகும் போலிருந்தது.

ஆனால் வாழ்வு அவன் பாதையில் இடர்களைப் படைத்துக் குவித்துக் கொண்டேயிருந்தது. ஒவ்வொரு தடையும் லட்சிய சித்தியைத் தாமதப் படுத்துவதைக் கண்டு, அவன் கசப்படைந்தான்.

ஒருநாள் துக்கிரி மாணவனான ஜார்ஜ், மாஸ்கோவிலிருந்து வந்தான்; தன்கூட ஒரு மனைவியையும் அழைத்து வந்தான். அவன் வழக்கறிஞரான தன் மாமனார் வீட்டில் தங்கினான்; அங்கிருந்து அம்மாவைப் பணத்துக்கு நெருங்கினான்.

ஜார்ஜின் வருகை, க்யூத்ஸாம் குடும்பத் துப் பிளவைப் பெரிதாக்கியது. ஜார்ஜ் தயக்கமில்லாமல் தந்தை கட்சியில் சேர்ந்துகொண்டான். சோவியத் எதிர்ப்புப் போக்கில் இருந்த அவனது மனைவியின் குடும்பத்து உதவியுடன், அவன் பாவெலை வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்கும், அவனிடமிருந்து முறித்துக் கொள்ளும்படி தாயாவைத் தூண்டுவதற்கும் பல கபட வழிகளைக் கையாண்டான்.

ஜார்ஜ் வந்து இரு வாரங்களானபின், வியோல்யாவுக்கு இன்னொரு நகரில் வேலை கிடைத்தது.

அவள் தன் மகனையும் தாயையும் அழைத்துக் கொண்டு அந்த ஊருக்குப் போனுள். சீக்கிரத்தில், பாவெலும் தாயாவும் தொலைதூரத்தில் இருந்த ஒரு கடற்கரை நகருக்குப் போனுர்கள்.

ஆர்த்தியோமுக்குத் தன் தம்பியிடமிருந்து அடிக்கடி கடிதம் வருவதில்லை. ஆனுல் நகர சோவியத் மேஜையில் அந்தப் பழகிய கையெழுத்தில் முகவரி எழுதிய கடிதத்தைக் காணும் அருமையான சந்தர்ப்பங்களில், அவன் அலாதியான உள்ளக் கிளர்ச்சியுடன் அதைப் பிரித்துப்படிப்பான். இன்றும், அவன் கவரைப் பிரித்த பொழுது, ''பாவெல்! என் அருகில் இருந்தாயாஞல், உன் யோசனை எவ்வளவு உதவியாக இருக்கும்!'' என்று அன்போடு எண்ணிஞன்.

அவன் கடிதத்தைப் படித்தான்:

''ஆர்த்தியோம், சமீப காலத்தில் என் வாழ்வில் நிகழ்ந்தவற்றை எடுத்துரைக்கவே, இதை எழுதுகிறேன். இந்த மாதிரி விஷயங்களைப்பற்றி உன்னைத் தவிர வேறு எவருக்கும் எழுதுவதில்லை. ஆனுல் உன்னிடம் நம்பிக்கையாகச் சொல்ல முடியுமென்பதை நான் அறிவேன்; ஏனென்ருல், உன்ஞல் என்னைப் புரிந்து கொள்ளமுடியும்.

''ஆரோக்கிய அரங்குச் சேதி இதுதான்; வாழ்வு என்னை அமுக்கிக் கொண்டேயிருக்கிறது; அடிமேல் அடி கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. ஒரு தாக்குதலிலிருந்து மீள்வதற்குள், இன்னெரு தாக்குதல்—முந்தையவிடக் கொடியது—என்னை

இலக்காக்கி வீழ்த்துகிறது. அதை எதிர்க்கும் திராணி இல்லாமல் இருப்பதே. பயங்கரமான விஷயம். முதலில், இடது கையின் வலுவை இழந்தேன். அது போதாதென்று இப்பொழுது என் கால்களின் சக்தியும் ஒழிந்துவிட்டது. முன்னால், அறைக்குள் கஷ்டப்பட்டு நடமாடினேன். இப்பொழுது, படுக்கையிலிருந்து மேஜைக்கு ஊர்ந்து செல்வதே கடுமையாயிருக்கிறது. இன்னும் மோசமான நிலைமை ஏற்படப் போகிறதென்று நான் துணிந்து கூறமுடியும். நாளைக்கு எனக்கு என்ன நிகழுமென்று ஒருவரும் சொல்லமுடியாது.

''நான் இப்பொழுதெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்புவதில்லை. என் ஜன்னல் வழியே பார்த்தால், கடலின் ஒரு சிறு பாகம் புலப்படுகிறது. கீழ்ப்படிய மறுத்துத் துரோகம் செய்யும் உடலும் வேலைசெய்வதற்குத் துடிக்கும் ஒரு போல்ஷெவிக்கின் இதயமும் ஒரே மனிதனிடம் சேர்ந்திருப்பதைவிடத் துன்பமானது ஏதாவது இருக்கமுடியுமா? பெரும்புயல்களின் தாக்குதல்கள் உருவாகிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு துறையிலும் போராட்டம் செய்யும் உங்கள் தொண்டர் படையுடன் சேர்ந்து நிற்பதற்கு என் இதயம் துடிக்கிறது. பயன் என்ன?

''நான் போரணிக்குத் திரும்புவேன் என்றும், என் துப்பாக்கி, முன்னேறித் தாக்கும் படை வரிசையில் தனக்குரித்தான ஸ்தானத்தை வகிக்குமென்றும் நான் இப்பொழுதும் நம்புகிறேன். அம்மாதிரி நான் நம்பத்தான் வேண்டும்.

நம்பாமலிருக்க எனக்கு உரிமை இல்லை. பத்து வருஷகாலம், கட்சியும் கம்ஸமோலும் எனக்குப் போராட்டக் கலையில் பயிற்சி அளித்தன. 'போல்ஷெவிக்குகளால் கைப்பற்ற முடியாத கோட்டை எதுவும் இல்லை' என்று தலைவர் நம் எல்லோருக்கும் சொன்ன வாசகம், எனக்கும் பொருந்தும்.

''என் வாழ்வு படிப்பிலேயே கழிந்துகொண்டிருக்கிறது. நூல்கள், மேலும் அதிக நூல்கள். நிறையப் படித்திருக்கிறேன். முக்கியமான இலக்கிய நூல்கள் அனைத்தையும் படித்து விட்டேன். கம்யூனிஸ்ட் சர்வகலாசாலையில் தபால்வழிப் படிப்பில், முதல் வருடப் பரீட்சைகளை எழுதித் தேறிவிட்டேன். மாலையில், கம்யூனிஸ்ட் இளைஞருக்கு வகுப்பு எடுக்கிறேன். இந்த இளந் தோழர்கள், கட்சி ஸ்தாபனத்தின் நடைமுறை வாழ்வுடன் எனக்கு உள்ள இணைப்பாக விளங்குகிறார்கள். தவிர, தாயா இருக்கிறாள். அவளது அரசியல் பயிற்சியும் அறிவு வளர்ச்சியும் மேம்படுவதற்கு என்னால் இயன்ற உதவியைச் செய்கிறேன்; தவிர அன்பு இருக்கிறது. எனது சிறிய மனைவியின் இனிய காதலும் மென்மையான தழுவலும் உள்ளன. தாயாவும் நானும் தலைசிறந்த நண்பர்களாக இருக்கிறோம். எங்கள் குடும்பம் எளிய முறையில் நடைபெறுகிறது. எனக்கு முப்பத்திரண்டு ரூபிள் பென்ஷன் வருகிறது. எனது மனைவியும் ஏதோ சம்பாதிக்கிறாள். நான் கட்சிக்கு எந்தப் பாதையில் வந்தேனோ, அதே வழியைத் தாயாவும்

பின்பற்றுகிருள். கொஞ்ச காலத்துக்கு அவள் வீட்டு வேலைக்காரியாக இருந்தாள். இப்பொழுது ஒரு பொது உணவு விடுதியில் தட்டு கிண்ணங்களைக் கழுவும் வேலையைச் செய்கிருள். (இந்த ஊரில் தொழிற்சாலை கிடையாது.)

''ஒருநாள், மாதர் இலாகா வழங்கிய பிரதிநிதிச் சீட்டைக் கொண்டுவந்து பெருமையுடன் காட்டினுள். அதுவே அவளுக்கு முதன் முதலில் கிடைத்த பிரதிநிதிச் சீட்டு. அவள் அதை வெறும் அட்டைத் துண்டாகக் கருதவில்லை. புதுமையின் ஜனனத்தை நான் அவளிடம் காண்கிறேன். இதில் என்னுல் இயன்ற உதவியைச் செய்கிறேன். அடுத்தபடி அவள் ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலைசெய்ய வேண்டும். அங்கு ஏராளமான தொழிலாளருடன் இணைந்து வேலை செய்து, படிப்படியாக அறிவு முதிர்ச்சியை அடைவாள். ஆனுல் இங்கே அவளுக்கு முன்னுல் உள்ள ஒரே ஒரு வழியை மேற்கொண்டிருக்கிருள்.

''தாயாவின் தாய் இருதடவை வந்து சென்ருள். அற்ப விவகாரங்கள் நிறைந்த வாழ்வுக்கு தாயாவை இழுத்துச் செல்ல அவள் முயற்சிக்கிருள். அவளுக்கே அவளது செய்கையின் தன்மை புரியவில்லை. சொந்த நலனைப் பெரிதுபடுத்தித் தன்னிச்சைப்பார்வையுடன் யதார்த்தத்தைப்பார்க்கும் வட்டத்துக்குள் சிறைப்பட்டு, வாழ்வைச் சுமையாக்கும் வழியில், தாயாவை இழுத்துச் செல்ல அவள் முயற்சிக்கிருள். அல்பீனு தனது துன்பமான வாழ்வின் நிழலால், தன் மகள்

பாதையை இருளாக்கக் கூடாதென்று நான் அவளிடம் எடுத்துரைத்தேன். ஆனால் பயனில்லை. ஒருநாள் தாய் தன் மகளுக்கு முட்டுக்கட்டை போட முயற்சிப்பாள் என்றும் அப்பொழுது ஒரு மோதலைத் தவிர்க்க முடியாதென்றும் நான் நினைக் கிறேன்.

''உன் கையைக் குலுக்குகிறேன்.

''உன் பாவெல்.''

ஐந்தாம் எண் ஆரோக்கிய விடுதி, பழைய மாத்ஸேஸ்தாவில்.... மலைச்சரிவுக்குள் வெட்டிய மைக்கப்பட்ட பாறைப் படலத்தின் மீது உள்ள ஒரு மூன்று மாடிச் செங்கல் கட்டிடம். சுற்றிலும் அடர்ந்த தோப்புக்கள். ஒரு சாலை வளைந்து நெளிந்து இறங்கிச் செல்கிறது. ஜன்னல்கள் திறந் திருக்கின்றன. இளங்காற்று, கந்தக ஊற்றுகளின் மணத்தை அறைக்குள் கொண்டுவந்து வழங்கு கிறது. அறையில் பாவெல் தனியாக இருக்கிறான். நாளைக்குப் புதிய நோயாளிகள் வரப்போ கிறார்கள். அப்பொழுது அவனுக்கு ஒரு அறைத் தோழன் கிடைப்பான். ஜன்னலுக்கு வெளியே யாரோ நடந்துவரும் சத்தமும், பழகிய குரலின் ஒலியும் கேட்கிறது. பலர் பேசுகிறார்கள். ஆனால் அந்தத் தீர்க்கமான தடித்த குரலை அவன் எப் பொழுது கேட்டிருக்கிறான்? ஆம் அந்தக் குரலுக்கு உரியவன் பெயரை அவன் மறந்து விடவில்லை; நினைவின் அடிவாரத்தில் மறைந்து கிடந்தது. அது லிதேன்யோவின் குரல். அவனைத் தவிர வேறு யாரும் இல்லை.

பாவெல் நம்பிக்கையுடன் தன் நண்பனை அழைத்தான். ஒரு விளுடிக்குப்பின், லிதேன்யோவ் அவனுடைய படுக்கையருகில் நின்று அவனுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தான்.

''என்ன சேதி? நல்லது, உன்னைப் பற்றி என்ன சொல்கிருய்? நோயாளியாகவிருக்க ஆவல் கொண்டுவிட்டதாகக் கூருதே. அது தப்பு. என்னை முன்மாதிரியாகக் கொள். என்னையும் டாக்டர்கள் உதவாக்கரையாக ஒதுக்கப் பார்த்தார்கள். ஆனுல் அவர்களையும் மீறி, நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, லிதேன்யோவ் உல்லாசமாகச் சிரித்தான்.

ஆனுல், அந்தச் சிரிப்புக்குப் பின் மறைந்திருந்த பரிவையும் துன்பத்தையும் பாவெல் உணர்ந்துகொண்டான்.

அவர்கள் இரண்டு மணி நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். மாஸ்கோவிலிருந்து வந்த கடைசிச் செய்திகளை லிதேன்யோவ் பாவெலுக்கு எடுத்துரைத்தான். விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை மயமாக்குவது சம்பந்தமாகவும் கிராம வாழ்வின் புனரமைப்புப் பற்றியும் கட்சி எடுத்துள்ள முக்கியமான முடிவுகளைப் பாவெல் முதன் முதலாக அவனிடமிருந்து அறிந்தான். அவனது பேச்சை பாவெல் ஆவலுடன் செவிமடுத்தான்.

லிதேன்யோவ் கூறினுன்:

''நீ உக்ரேய்னுவில் எங்காவது ஜனங்களைத் திரட்டிக்கொண்டிருப்பாயென்று எண்ணினேன். ஏமாற்றம் அளித்து விட்டாய். பரவாயில்லை.

நான் இதைவிட மோசமான நிலையில் இருந்தேன். ஆயுட்காலமெல்லாம் படுக்கையுடன் பிணைந்து கிடப்பேன் என்று எண்ணினேன். இப்பொழுது பார், வேலை செய்கிறேன். இந்தக் காலத்தில், முழுமூச்சுடன் வேலை செய்ய வேண்டும். கொஞ்சம் ஓய்வெடுத்தால் எவ்வளவு மேலாயிருக்குமென்று சில சமயங்களில் எண்ணுகிறேன் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பார்க்கப் போனால், நான் முன்போல் வாலிபனாயில்லை. தினம் பத்துப் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்வதென்றால், சில சமயங்களில் கடினமாக விருக்கிறது. நான் இதைப்பற்றிச் சிறிது நேரம் யோசிக்கிறேன். வேலைச் சுமையைக் குறைத்துக் கொள்ளவும் முயற்சிக்கிறேன். ஆனால் முடிவு என்னமோ ஒன்றாகத்தான் இருக்கிறது; என்னையே அறியாமல் நான் வேலையில் மூழ்கிவிடுகிறேன். நள்ளிரவுவரை, வீடு திரும்ப முடிகிறதில்லை. எந்திரத்தின் திறன் அதிகரிக்க அதிகரிக்கச் சக்கரங்களும் கூடுதலான வேகத்துடன் உருள்கின்றன. ஒவ்வொரு நாளும் வேகம் அதிகரிப்பதால், என்னைப்போன்ற கிழவர்களும் வாலிபர்களாகவே இருக்கவேண்டியதாகிறது.''

லிதேன்யோவ் தனது அகன்ற நெற்றியைக் கையால் துடைத்துக்கொண்டான். அதன்பின் அன்போடு கூறினான்:

''உன்னைப்பற்றி எனக்குச் சொல்.''

அவர்கள் முன்னால் சந்தித்துப் பிரிந்தபின், அவனது வாழ்வில் நடைபெற்றதை யெல்லாம்

பாவெல் விவரித்தான். அவன் பேசியபொழுது, லிதேன்யோவின் அன்பான அங்கிகாரப் பார்வையை பாவெல் உணர்ந்தான்.

விசாலமாகப் பரந்த மரங்களின் நிழலில், வராந்தாவின் ஒரு மூலையில், ஒரு சிறிய மேஜையைச் சுற்றிச் சில நோயாளிகள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன், சேர்னக்கோஸவ், தன் அடர்த்தியான புருவங்களை நெறித்துக்கொண்டே, ''பிராவ்தா'' பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான். அவனது கறுப்பு ருஷ்யச் சட்டையும், கிழிசலான பழைய குல்லாயும், மெலிந்த, வெகுநாட்களாக க்ஷவரம் செய்யாத பழுப்பேறிய முகமும், குழிவிழுந்த நீல விழிகளும், அவன் பல்லாண்டு சுரங்கத் தொழிலாளியாக இருந்தவன் என்பதை எடுத்துக்காட்டின. சேர்னக்கோஸவ் ஒரு பிரதேசத்தின் ஆட்சியை நடத்துவதற்காகச் சுரங்க வேலையை விட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அவன் அப்பொழுதே, சுரங்கத்திலிருந்து வந்தவனாகத் தோன்றினன். அவனது நடை, நிலை, தோற்றம், பேச்சுமுறை அனைத்தும் அவன் சுரங்கத் தொழிலாளி என்பதைக் காட்டிக்கொடுத்தன.

சேர்னக்கோஸவ், கட்சியின் பிரதேசக் கமிட்டியின் தலைக்குழு உறுப்பினன்; சர்க்காரிலும் அங்கம் வகித்தான். ஒரு கொடுமையான வியாதி அவனது பலத்தைச் சப்பிக் கொண்டிருந்தது; அவனது கால் அழுகிப்போய்விட்டது;

அதனால், ஆறுமாத காலமாகப் படுக்கையில் கிடந்தான்.

அவனுக்கு எதிராக உட்கார்ந்து, சிந்தனையில் ஆழ்ந்தவளாய்ச் சிகரெட் குடித்துக்கொண்டிருந்தவள் ஷிகிரியோவா. வயது முப்பத்தேழு; ஆனால் பத்தொன்பது ஆண்டுகளாகக் கட்சி அங்கத்தினர். பீட்டர்ஸ்பர்கில் இரகசிய இயக்கத் தோழர்கள் அவளை ''உலோகத் தொழிலாளியாகிய ஷூரா'' என்று அழைத்தனர். அவள் இளவயதிலேயே சைபீரியாவுக்குக் கடத்தப் பட்டாள்.

இந்தக் கோஷ்டியில் இருந்த மூன்றுவது நபர் பான்கோவ். பழங்காலத்து சிற்பம் போன்ற பக்கப் பார்வையுடன், அவனது அழகிய தலை ஒரு ஜெர்மானியச் சஞ்சிகையைப் படிப்பதற்காகச் சாய்ந்திருந்தது. அவன் அடிக்கடித் தன் கரத்தை உயர்த்தித் தனது பெரிய மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டான். ஒரு மல்லனுக்குரிய உடற்கட்டை உடைய இந்த முப்பது வயது மனிதன், பக்கவாதம் பிடித்த தனது காலை இழுத்துக் கொண்டு செல்வதைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. பாங்கோவ் ஒரு எழுத்தாளன்; ஆசிரியனும் கூட; அவன் கல்வி இலாகாவில் வேலை செய்தான்; ஐரோப்பாவைப்பற்றி நல்ல அறிவைப் பெற்றிருந்தான்; பல அந்நிய மொழிகளை அறிந்திருந்தான்; கணிசமான புலமை உடையவன். கூச்சமுள்ள செர்னக்கோஸவ்கூட, பாங்கோவிடம் நன்மதிப்புக் காட்டி நடந்துகொண்டான்.

''அதுதான் உங்கள் அறைத்தோழனு?'' என்று செர்னக்கோஸவிடம் மெல்லிய குரலில் வினவிக் கொண்டே, ஷிகிரியோவா பாவெல் இருந்த நாற்காலியை நோக்கித் தலை அசைத்தாள்.

பத்திரிகை படித்த அவன் நிமிர்ந்துகொண்டான். உடனே அவனது புருவமும் தளர்ந்தது.

''ஆம், அதுதான் கர்ச்சாகின். ஷூரா, நீ அவனைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவன் நோய்வாய்ப்பட்டிருப்பது துரதிர்ஷ்டமான விஷயம். இல்லாவிட்டால், நமக்குப் பேருதவியாக இருப்பான். அவன் கம்ஸமோலின் முதலாவது தலை முறையைச் சேர்ந்தவன். அவனுக்கு நாம் ஆதரவு அளித்தால், இனியும் வேலை செய்ய அவனுல் முடியும். அவனுக்கு ஆதரவு தர நான் தீர்மானித்து விட்டேன்.''

அவன் கூறியதைப் பான்கோவும் கேட்டுக் கொண்டான்.

''அவனுக்கு என்ன வியாதி?'' என்று ஷூரா ஷிகிரியோவா வினவினுள்.

''உள்நாட்டு யுத்தத்தின் விளைவு. முதுகெலும்பில் ஏதோ கோளாறு. இங்குள்ள டாக்டருடன் பேசினேன். உடல் முழுமையும் ஸ்தம்பித்துப் போகும் நிலைமை ஏற்படலாமென்று அவர் கூறுகிருர். பரிதாபமான நிலைமை!''

''நான் போய், அவனை அழைத்து வருகிறேன்'' என்று ஷூரா கூறினுள்.

இவ்வாறு அவர்களது நட்பு தொடங்கியது. ஷூராவும் செர்னக்கோஸவும் தனக்கு அன்னி

யோன்னிய நண்பராவார்களென்பதையும், எதிர் காலத்தில் அவனுக்கு ஊன்றுகோல்களாக அமை வார்களென்பதையும் அவன் அப்பொழுது அறிய வில்லை.

வாழ்வு முன்போல் ஓடிக்கொண்டிருந்தது. தாயா வேலை செய்தாள். பாவெல் படித்தான். அவன் இளைஞருக்கு வகுப்பு எடுக்கும் வேலையை மீண்டும் தொடங்குவதற்கு முன்னால், இன்னொரு விபத்து திடீரென்று அவனைத் தாக்கியது. அவனது இரு கால்களும் பூர்த்தியாக ஸ்தம்பித்துவிட்டன. இப்பொழுது அவனது வலது கை மட்டுமே, சொன்னபடி கேட்டது. இரத்தம் வரும் வரை உதடுகளைக் கடித்துக்கொண்டு, காலை அசைக்க முயன்றான். பல தடவை முயன்ற பிறகே, அவன் தன்னால் இனி நகர முடியாதென்பதை உணர்ந் தான். அவனுக்கு உதவமுடியாத நிலையில் இருந் ததை எண்ணி, தாயா ஏக்கமுற்றாள். ஆனால் அவள் தன் ஏக்கத்தையும் விசனத்தையும் வெளிக் காட்ட வில்லை; தைரியமாக மறைத்துக் கொண்டாள். ஆனால் அவன் மன்னிப்புக் கேட்கும் தோரணையில் புன்னகை செய்து கொண்டு, அவளிடம் கூறினான்:

''தாயா, நீயும் நானும் பிரியவேண்டும். இப் படி படுத்த படுக்கையாக ஆவேன் என்று நமது ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை. நான் இதைப் பற்றி இன்று நன்கு யோசித்துவைக்கிறேன்.''

அவன் தொடர்ந்து பேசுவதை அவள் அனு மதிக்கவில்லை. அவள் விம்மி விம்மி அழுதாள்;

தன் முகத்தை அவன் மார்பில் புதைத்துக்கொண்டு புலம்பினுள்.

ஆர்த்தியோம் தன் தம்பிக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி அறிந்தவுடன், தாயாருக்கு எழுதினுன். அவளும் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பாவெலைக் காண விரைந்தாள். இப்பொழுது, மூவரும் சேர்ந்து வாழ்ந்தனர். முதலிலிருந்தே, தாயாவுக்கும் கிழவிக்கும் ரொம்பப் பிடித்தமாகி விட்டது.

இத்தனை தொல்லைகளுக்கும் இடையே, பாவெல் தொடர்ந்து படித்தான்.

குளிர்காலத்தில், ஒருநாள் மாலை, வீட்டுக்கு வந்தவுடன், தாயா தன் முதல் வெற்றியை அறிவித்தாள்: அவள் நகர சோவியத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாள். அதன்பின், அவளை அதிகமாகப் பார்க்க முடியவில்லை. ஆரோக்கிய விடுதியின் சமையலறையில், தட்டு கிண்ணி வகையருக்களைக் கழுவும் வேலையைப் பகல் முழுவதும் செய்துவிட்டு, அவள் மாதர் பிரிவுக்கும், சோவியத் அலுவலகத்துக்கும் சென்று விடுவாள். இரவில், நேரம் கழித்தே திரும்புவாள். அவள் களைத்துப் போயிருந்தாலும் பல அபிப்பிராயங்களுடன் திரும்பி வருவாள். சீக்கிரத்தில் அவள் கட்சியின் பரீட்சார்த்த அங்கத்தினராவதற்கு விண்ணப்பம் செய்து கொள்வாள். நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த இந்த நாளுக்காக அவள் ஆவலுடன் தன்னைத் தயார் செய்து கொண்டாள். மீண்டும், துரதிர்ஷ்டம் இன்னெரு தாக்குதலைத்

தொடுத்தது. கிரமமாக முன்னேறிக் கொண்டிருந்த நோய் தன் தீவினையைப் புரிந்துகொண்டிருந்தது. திடீரென்று, வேதனையும் எரிச்சலும் மிகுந்த ஒரு வலி, பாவெலின் வலது கண்ணைப் பொசுக்கியது; அது விரைவாக இடது கண்ணுக்கும் பரவியது. ஒரு கருந்திரை விழுந்தது; அவனைச் சுற்றியுள்ளது எதுவும் அவனுக்குப் புலப்படவில்லை. அவன் வாழ்விலே முதன் முதலாகப் பாவெல், முழுக் குருட்டின் பயங்கரத்தை உணர்ந்தான்.

இந்தப் புதிய தடை, சத்தமில்லாமல் நகர்ந்து வந்து அவனது பாதையில் முட்டுக்கட்டை போட்டுவிட்டது. பயங்கரமான தடை; தாண்ட முடியாததாகத் தோன்றும் தடை; தாயாவும் பாவெலின் தாயாரும் நம்பிக்கை இழந்தனர்; ஏக்கத்துக்கு உள்ளாகினர். ஆனால் அவனோ?

''என்ன நடக்கிறதென்று காத்திருந்து பார்க்கிறேன். முன்னேறுவதற்கு வழிதுறை இல்லையானால், வேலைக்குத் திரும்புவதற்கு நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இந்த அந்தக நிலையால் அழியுமென்றால், இந்த வாழ்வுக்கே முடிவுகட்ட வேண்டும்'' என்று அவன் சாந்தமாகத் தீர்மானம் செய்துகொண்டான்.

பாவெல் தன் நண்பர்களுக்கு எழுதினான். அவர்கள் மனோதைரியத்துடன் போராடும்படி ஊக்குவித்தார்கள்.

இந்தக் கடுமையான மனப்போராட்டக் காலத்தில்தான், தாயா முகமலர்ச்சியுடன் வீட்டுக்குவந்து, ''பாவெல், கண்ணே! நான் கட்சியின்

பரீட்சார்த்த அங்கத்தினராகிவிட்டேன்'' என்று அறிவித்தாள்.

அவளது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட குழுக்கூட்ட நடவடிக்கைகளை அவள் பாவெலிடம் உள்ளக் கிளர்ச்சியுடன் விவரித்தாள். அவன் கட்சிக்குள் வருவதற்கு எடுத்த முதல் நடவடிக்கைகளை நினைவூட்டிக் கொண்டான்.

''நல்லது, தாயா. நீயும் நானும் ஒரு கம்யூனிஸ்ட் குழுவாகிவிட்டோம்''. என்று கூறி, அவளது கரத்தை இறுகப்பிடித்தான்.

அடுத்தநாள், அவன் கட்சியின் வட்டாரக் கமிட்டி காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதினான். அவர் வந்து அவனைச் சந்திக்கவேண்டுமென்று அதில் கேட்டுக்கொண்டிருந்தான். அதே நாள் மாலையில், ஒரு சேறு படிந்த கார் வீட்டு வாசலில் நின்றது. ஒரு நிமிஷத்துக்கெல்லாம், நடுத்தர வயதினரான வால்மர் என்ற லாத்வியன், காதுகள் வரை பரந்திருந்த தாடியை உடையவன், பாவெலின் கரத்தைக்குலுக்கிக்கொண்டிருந்தான்.

''என்ன சேதி? இப்படி நடந்துகொள்வதின் பொருள் என்ன? கிளம்பு, கிளம்பு. உடனே உன்னைக் கிராம வேலைக்கு அனுப்புகிறோம்'' என்று வால்மர் நகைத்துக் கொண்டே கூறினான்.

அவன் தான் கலந்துகொள்வதாக இருந்த மாநாட்டு விஷயத்தையும் மறந்துவிட்டு, இரண்டு மணி நேரம் பாவெலுடன் இருந்தான். வேலை தரவேண்டுமென்று பாவெல் உணர்ச்சிப் பெருக்குடன் மன்றாடினான். அவன் குறுக்கும் நெடுக்கு

மாக அறையில் நடந்து கொண்டிருந்தான். பாவெல் பேசி முடித்தவுடன், வால்மர் கூறினன்:

''வகுப்பு எடுப்பதைப்பற்றி இனிப்பேசாதே. நீ ஓய்வு எடுக்க வேண்டும். உன் கண்களைப்பற்றி நாங்கள் கவனிக்க வேண்டும். இனியும் ஏதாவது செய்யமுடியலாம். மாஸ்கோவுக்குப் போய் ஒரு நிபுணரைக் கலந்தால் என்ன? அதைப்பற்றி யோசி....''

ஆனல் பாவெல் அவனை இடைமறித்தான்.

''தோழர் வால்பர், எனக்கு ஜனங்கள் தேவை. உயிர்த்தளிர்ப்புடன் கூடிய மக்கள். வேகமும் விருவிருப்பும் உடைய மக்கள். முன்பெல்லாம் விட இப்பொழுதுதான், ஜனங்களின் தொடர்பு அதிகமாகத் தேவை. நான் தனியாகக் காலம் தள்ளமுடியாது. இளைஞரை, அனுபவமில்லாதவர்களை என்னிடம் அனுப்புங்கள். அவர்கள் கிராமங்களில் அளவுக்குமீறி இடதுபக்கம் போகிருர்கள். கூட்டுப்பண்ணைகள் போதுமான வாய்ப்பு அளிக்கவில்லை என்கிருர்கள். கம்யூன்கள் அமைக்க விரும்புகிருர்கள். உங்களுக்கு இளங் கம்யூனிஸ்ட்களைத் தெரியும். அவர்களுக்குக் கடிவாளம் போட்டுக் கட்டுப்படுத்தாவிட்டால், அணிக்கு ரொம்ப தூரம் முன்னல் போய்விடுவார்கள். ஒரு காலத்தில் நான் அப்படித்தான் இருந்தேன்.''

வால்மர் சற்றுத் திகைத்து நின்ருன்.

''அதைப்பற்றி உனக்கு எப்படித் தெரியும்? எனக்கு வட்டத்திலிருந்து இன்றுதானே தகவல் கிடைத்தது.''

பாவெல் புன்னகை செய்தான்.

''என் மனைவி சொன்னாள். அவளை உங்களுக்கு ஒரு வேளை ஞாபகம் இருக்கலாம். நேற்றுத் தான் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டாள்.''

''தட்டுக் கழுவும் வேலையில் உள்ள தாயா கர்ச்சாகினா? அவள் உன் மனைவியா! எனக்குத் தெரியாது!'' என்று வியந்துரைத்த வால்மர், சிறிதுநேரம் மௌனமாயிருந்து விட்டு, ஏதோ ஒரு கருத்துத் தோன்றிவிட்டதைப் போல நெற்றியில் அடித்துக்கொண்டான். ''உன்னிடம் யாரை அனுப்பலாமென்று முடிவு செய்து விட்டேன், தெரியுமா? பெர்ஸேனெவ் என்பவரைத் தான் அனுப்பப் போகிறேன். அவரைவிடச் சிறந்த தோழரை நீ விரும்ப முடியாது. உன் மனப் பான்மைக்கு உகந்தவர். இருவரும் சிறப்பான சிநேகிதராகிவிடுவீர்கள். அதிகமான அதிர்வு எண்ணை உடைய இரண்டு மாற்றிப் பொறிகள் மாதிரி. ஒரு காலத்தில், நான் எலெக்டிரிஷியனாக இருந்தேன் என்பது உனக்குத் தெரியுமா? அதனால் மாற்றிப் பொறிபோன்ற மின்சார இயல் பதங்கள் மனத்தில் பதிந்துவிட்டன. பெர்ஸேனெவ் உனக்கு ஒரு ரேடியோவைச் செய்து கொடுப்பார். அந்த மாதிரிக் காரியங்களில் அவர் நிபுணர். அடிக்கடி நான் அவருடைய வீட்டில் இராத்திரி இரண்டு மணிவரை காதுகளில் ஒலிக் குழல்களை வைத்துக்கொண்டு இருப்பேன். என் மனைவிக்கு என்னைப் பற்றிச் சந்தேகம் வந்துவிட்டது. இம்மாதிரி, இராத்திரி எந்த நேரத்தில் வேண்டுமானா

லும் வீட்டுக்கு வருவதென்றால் என்ன அர்த்தம் என்று கேட்டுவிட்டாள்.''

பாவெல் புன்னகை செய்தான்.

''பெர்ஸேனெவ் யார்?'' என்று அவன் வினவினான்.

வால்மர் குறுக்கும் நெடுக்கும் நடப்பதை நிறுத்திவிட்டு, இருக்கையில் அமர்ந்தான்.

''அவர் நமது சான்றதிகாரி ஆக இருக்கிறார். உண்மையில், எனக்கும் பாலே நடனத்துக்கும் உள்ள தொடர்புதான், அவருக்கும் சான்றதிகாரி தொழிலுக்கும் இருந்தது. சமீபகாலம்வரை முக்கியமான பொறுப்பில் இருந்தார். 1912லிருந்து நம் இயக்கத்தில் இருக்கிறார். புரட்சி ஏற்பட்டதிலிருந்து கட்சி அங்கத்தினராக இருக்கிறார். உள்நாட்டுப் போர்க்களத்தில், இரண்டாவது குதிரை வீரர் ராணுவத்தின் புரட்சி நீதிமன்றத்தில் செயல்பட்டார். வெண்படையைச் சேர்ந்த விஷஜந்துக்களை காக்கஸஸில் வேட்டையாடிய காலம் அது. அவர் ஜாரிட்ஸினிலும், தெற்குப் போர்முனையிலும் இருந்தார். கொஞ்ச காலத்துக்குத் தூரக்கிழக்குக் குடியரசின் உயர்தர ராணுவக் கோர்ட்டில் உறுப்பினராயிருந்தார். அங்குக் கடுமையான வேலை. கடைசியில், அவரைக் க்ஷயம் பிடித்துக் கொண்டது. தூரகிழக்குப் பிரதேசத்திலிருந்து, காக்கஸஸ் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தார். முதலில் மாகாணக் கோர்ட்டின் தலைவராகவும் பிறகு பிரதேசக் கோர்ட்டின் உபதலைவராகவும் தொண்டாற்றினார். அப்பொழுது, நுரையீரல்

கோளாறு முற்றி, அவரை வீழ்த்திவிட்டது. இங்கு வந்து, சிரமமில்லாத வாழ்வை நடத்துவதா அல்லது சாவதா என்பதே பிரச்சினையாயிற்று. இவ்வாறுகத்தான் நமக்கு ஒரு நல்ல சான்றதிகாரி கிடைத்தார். நாஸ்டிக்கான வேலை; அமைதியாக வேலைசெய்யலாம். அவருக்கு ஏற்ற வேலை. ஆனல் இங்கு உள்ள தோழர்கள் படிப்படியாக அவருக்கு அதிக வேலை கொடுத்தார்கள். முதலில் ஒரு கட்சிக் குழுவுக்குப் பொறுப்பாக்கினர்கள்; பிறகு வட்டாரக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். அதன்பின், அவருக்கு அரசியல் பயிற்சி நிலையத்துக்குப் பொறுப்பைக் கொடுத்தார்கள். இப்பொழுது அவர் கண்டிரோல் கமிஷனில் அங்கம் வகிக்கிருர். அருவருப்பான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக நியமனமாகும் முக்கியமான கமிஷன்களில் அவர் ஒரு நிரந்தர அங்கத்தினர். இவைபோக, அவர் வேட்டைக்குச் செல்கிருர். ரேடியோ பைத்தியம் வேறு. அவருக்கு ஒரே ஒரு நுரையீரல்தான் செயல்படுகிறது, ஆனல் அவரைப் பார்த்தால், அப்படித் தோன்றமாட்டார். சக்தி பெருக்கெடுத்தோடும் நிலையமாக அவர் காட்சி தருகிருர். அவர் எப்பொழுதாவது இறந்தாரென்றல், அதுவும் வட்டாரக் கமிட்டியிலிருந்து கோர்ட்டுக்குப் போகும் பாதையில் தான் சாவார்.''

பாவெல் அவரது பேச்சை இடைமறித்தான்.

''அவர் மீது ஏன் அவ்வளவு வேலைப் பளுவைத் திணிக்கிறீர்கள்? முன்பு செய்த வேலையை

விட அதிகமாகச் செய்கிருரே?'' என்று அவன் ஆத்திரத்தோடு கேட்டான்.

வால்மர் அவனை விஞேதமான வகையில் நோக்கிஞன்.

''நீ வகுப்பு எடுப்பதற்கு வசதிசெய்து, வேறு சில வேலைகளும் கொடுத்தால், பெர்ஸேனெவ் என்ன சொல்வார்? அவன் தலையில் ஏன் சுமத்துகிறீர்கள்?'' என்று தான் கேட்பார். ஆனுல் ஐந்தாண்டு ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதைவிட, ஓராண்டு தீவிரமாகப் பணிபுரிவதையே விரும்புவதாக அவரே கூறுகிருர். சோஷலிஸத்தை நிர்மாணிக்கும் வரை, நமது ஊழியர்களை நல்ல முறையில் பராமரிக்க முடியாது போலிருக்கிறது.''

''அது உண்மை. நானும் ஐந்தாண்டு சும்மா இருப்பதைவிட ஓராண்டு வேலை செய்வதையே அதிகம் விரும்புகிறேன். ஆனுல் சில சமயங்களில் நாம் நமது சக்தியை விரயம் செய்யும் குற்றத்தைப் புரிகிருேம். பயனுறுதியின்மையும் பொறுப்பற்ற போக்கும் எப்படி வீரத்தின் லட்சணங்களாக இருக்க முடியாதோ, அதேபோல சக்தியை வீண்செய்வதும் வீரலட்சணமாக முடியாது. என் தேகாரோக்கியத்தைப் பற்றியே நான் அஜாக்கிரதையாக இருந்தேன்; அந்த முட்டாள்தனத்தை எண்ணி நான் என்னைக் கடிந்து கொள்கிறேன். அந்த அஜாக்கிரதைப் போக்கில் ஒரு வீரமும் இல்லை என்பதை இப்பொழுது உணர்கிறேன். அந்தக் கண்மூடித்தனம் இருக்காதிருந்தால், நான் மேலும் சில ஆண்டுகள் தாக்குப்

பிடித்திருக்க முடியும். வேறுவிதமாகச் சொல்வதென்றால், இடதுசாரி வாதம் என்ற இளம் பருவ வியாதி, நம்முன் உள்ள பேராபத்துக்களில் ஒன்று.''

''இப்பொழுது இப்படிச் சொல்கிறான். ஆனால் மீண்டும் உடல் நலம்பெற்றுவிட்டால், வேலையைத் தவிரப் பாக்கி அனைத்தையும் மறந்து விடுவான்'' என்று வால்மர் எண்ணினான். ஆனால் அவன் ஒன்றும் பேசவில்லை.

மறுநாள் மாலை, பெர்ஸேனெவ் வந்தான். அவன் நடுநிசிப் பொழுது கழிந்தபின்பே பாவெலிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றான். பல்லாண்டுகளாகக் காணமற்போயிருந்த சகோதரனைப் பெற்றுவிட்ட மாதிரி பாவெலுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

காலையில், ஒருசிலர் பாவெல் வீட்டுக் கூரையில் ஒரு ஏரியலை அமைத்துக் கொண்டிருந்தனர். வீட்டுக்குள் பெர்ஸேனெவ் ரேடியோ அலைகளைக் கிரகிக்கும் பெட்டியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான் அதேசமயத்தில் அவன் கடந்த காலத்தைப் பற்றிச் சுவையான கதைகளைக் கூறிப் பாவெலை இன்புறுத்தினான். அவனைப் பாவெலால் பார்க்க முடியவில்லை. ஆனால் தாயா சொன்னதிலிருந்து, அவன் பொன்னிற கேசமும் நீலவிழிகளும் உடைய வளர்த்தியான வாலிபன் என்றும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சைகைகளுடன் பேசுவான் என்றும் தெரிந்து கொண்டான். இவற்றை கேட்ட பாவெல் தனது மனோ பாவனையில்

உருப்பெற்ற வடிவமும் தாயாவின் நிஜ வர்ணனையும் முற்றிலும் ஒத்திருப்பதை உணர்ந்தான்.

சந்திக்காலம் வந்தது. அறையில் ஒளி மங்கியது. அப்பொழுது, மூன்று வால்வுகள் பிரகாசிக்கத் தொடங்கின. பெர்ஸேனெவ், வெற்றிக் களிப்போடு, செவிக்குழல்களைப் பாவெலிடம் கொடுத்தான். ஈதரில் பல்வகை ஒலிகள் நிறைந்து, ஒரே குழப்பமாயிருந்தது. துறைமுகத்திலிருந்த ஒலிசெலுத்தி பல பறவைகள் கீச்சிடுவதைப் போல ஒலித்தது. கொஞ்சதூரத்தில், கடலில், ஒரு கப்பலின் கம்பியில்லாப் பொறி, புள்ளிகளையும் குறிகளையும் அலைகளாக அனுப்பியது. ஆனால் ஒன்றோடொன்று உராய்ந்த இந்த ஒலிகளுக்கும் உரத்த ஓசைகளுக்கும் இடையே, அசைவுச் சுருள் ஒரு அமைதியான, நம்பிக்கையான குரலைக் கண்டு, பற்றிக்கொண்டது.

''இது மாஸ்கோ ரேடியோ நிலையம்....''

உலகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள அறுபது ஒலிபரப்பு நிலையங்களின் நிகழ்ச்சிகளை இந்தச்சிறிய ரேடியோ மூலம் பாவெல்கேட்கமுடிந்தது. அவனை வெறுத்து ஒதுக்கிய வாழ்வு, செவிக்குழல்கள் மூலம் அவனை அடைந்தது. மீண்டும் அவன் வாழ்வின் திறன் மிகுந்த துடிப்பை உணர்ந்தான்.

பாவெலின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. அதைக் கண்டு, களைப்புற்றிருந்த பெர்ஸேனெவ், மனநிறைவுடன் புன்னகை செய்தான்.

அந்தப் பெரிய வீட்டில் அமைதி நிலவியது. தாயா, நிம்மதியில்லாமல் முணுமுணுத்துக் கொண்டே, தூங்கினாள். இப்பொழுதெல்லாம், பாவெல் அவளுடன் அதிக நேரம் செலவழிப்பதில்லை. அவள் வீட்டுக்குத் தாமதமாகவே வந்தாள். களைத்துப் போய், வெடவெடவென்று குளிரில் நடுங்கிக்கொண்டே வந்தாள். அவளது வேலை நேரம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. அநேக நாட்கள், மாலைப்பொழுதில் ஓய்வு கிடைப்பதில்லை. இது விஷயமாக, பெர்ஸேனெவ் கூறியதைப் பாவெல் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

''ஒரு போல்ஷெவிக்கின் மனைவியும் கட்சித் தோழராக இருந்தால், இருவரும் கூடிப் பேசுவது அருமையாகிவிடும். ஆனால் இதன் மூலம் இரண்டு அனுகூலங்கள் ஏற்படுகின்றன: ஒருவருக்ொருவர் சலித்துப் போவதில்லை என்பது ஒன்று; இரண்டாவதாக, இருவரும் சண்டை போடுவதற்கு நேரம் இருப்பதில்லை!''

உண்மையில், பாவெல் எப்படி ஆட்சேபிக்க முடியும்? இது எதிர்பார்த்திருக்க வேண்டிய விஷயம்தான். ஒரு காலத்தில், தாயா மாலைப்பொழுதெல்லாம் பாவெலுடன் கழித்தாள். அப்பொழுது, அவர்களது உறவில் அன்பும் பரிவும் அதிகமாயிருந்தன. ஆனால் அப்பொழுது அவள் அவனது மனைவியாகமட்டுமே, வாழ்க்கைத் 'துணைவியாக மட்டுமே இருந்தாள். இப்பொழுது அவள் அவனது சிஷ்யையாகவும் கட்சித் தோழராகவும் விளங்கினாள்.

தாயா அரசியல் முதிர்ச்சி அடைய அடைய, அவனுக்கு அவள் ஒதுக்கும் நேரம் குறைந்து கொண்டே போகுமென்பதை அவன் அறிந்திருந் தான். அதைத் தவிர்க்க முடியாது என்பதையும் அவன் உணர்ந்தான்.

அவன் ஒரு வகுப்பு நடத்துவதற்கு ஏற்பாடு ஆயிற்று. மீண்டும், மாலைப்பொழுதில், வீட்டில் பலரது பேச்சும் இரைச்சலுமாயிருந்தது. இளைஞ ருடன் கழித்த இந்த நேரத்தில், பாவெல் புதிய சக்தியும் புத்துணர்ச்சியும் பெற்றான்.

அவன் ரேடியோ ஒலிபரப்புகளைக் கேட்ப தில் மிச்சமிருந்த நேரத்தைக் கழித்தான். சாப் பாட்டு நேரத்தில், அந்தச் செவிக் குழல்களைக் கழற்றி வைப்பதற்கு, அவனது தாயார் கெஞ் சிக் கெஞ்சி மன்றாட வேண்டியதாயிற்று.

கண் பார்வையை இழந்ததால், அறிவுபெற முடியாமல் தத்தளித்த பாவெலுக்கு, விஷய ஞானம் பெறும் வாய்ப்பை ரேடியோ அளித்தது அவன் தன் உடலை வருத்திய வலியையும் கண்களை எரித்த அழற்சியையும், விதியின் கொடுமையால் விளைந்த சகல துன்பங்களையும் மறப்பதற்குக் கல்வி யில் இருந்த பேரார்வம் அவனுக்கு உதவியது.

'மக்னித்தோஸ்த்ரோய்' என்று அழைக்கப் பட்ட கட்டுமானத்தின் பொழுது பாவெலின் தலை முறைக்கு அடுத்துவரும் தலைமுறையைச் சேர்ந்த இளங் கம்யூனிஸ்ட்கள் செய்த சாதனைகளை ரேடி யோ ஒலிபரப்பியதை கேட்டு அவன் மகிழ்ந்தான்.

பசி தாங்காத ஓநாய்க் கூட்டத்தின் வெறியுடன் ஒப்பிடத்தக்க கொடுமையான உறைபனிப் புயல்களும் பனிக்கட்டிகளும் ஊரால் மலைப்பிரதேசத்தில் கோரக் கூத்தாடுவதை அவன் அறிவான். காற்று ஊளையிட்டுக்கொண்டு, பனிக்கட்டிகளைச் சுழற்றி அடிக்கும் சூழ்நிலையில், இரண்டாம் தலைமுறை இளங் கம்யூனிஸ்ட் படை வேலை செய்வதை அவன் கற்பனை செய்தான். பிரம்மாண்டமான தொழிற்சாலைக் கட்டிடங்களின் கூரை மீது நின்று, வெண்பனியும் பனிக்கட்டியும் எந்திரங்களைப் பாழ்படுத்துவதைத் தடுப்பதற்காக, அவர்கள் பிரகாசமான விளக்குகளின் ஒளியில் வேலை செய்வதைத் தன் மனக் கண்ணுல் கண்டான். இந்த அசுரப் பணியுடன் ஒப்பிட்டால், பாவெலும் அவனுடைய தோழர்களும் பஞ்சபூதங்களுடன் போராடிக் காட்டில் இருப்புப்பாதை அமைத்த வேலை எவ்வளவு அற்பமானதாகத் தோன்றுகிறது! தேசம் வளர்ந்து விட்டது; அத்துடன் மக்களும் வளர்ச்சி அடைந்து விட்டனர்.

த்நேப்பர் நதியில், உருக்கால் அமைந்த அணையை உடைத்துக்கொண்டு, வெள்ளம் பெருக்கெடுத்தோடியது; ஜனங்களையும் எந்திரங்களையும் அடித்துக்கொண்டு போயிற்று. மீண்டும், கம்ஸமோல் இளைஞர்கள், உடைப்பை அடைப்பதில் ஈடுபட்டனர். இரண்டு நாட்கள் அயராது பாடுபட்டுக் கட்டுக்கடங்காத வெள்ளத்தை அடக்கினுர்கள். இந்த மகத்தான போராட்டத்தின் முன்னணியில், ஒரு புதிய இளங் கம்யூனிஸ்ட் தலை

முறை நடை போட்டது. இந்த வீரர்களுடன், பன்கிராத்தவ் என்ற தன் பழைய தோழன் பெயரும் குறிப்பிடப்பட்டதைக் கேட்டுப் பாவெல் பெருமிதம் அடைந்தான்.

அத்தியாயம் ஒன்பது

மாஸ்கோவை அடைந்தவுடன், அவர்கள் சில நாட்கள் தஸ்தாவேஜு அலுவலகத்தின் சாமான் அறை ஒன்றில் தங்கினார்கள். ஒரு விசேஷ வைத்தியசாலையில் பாவெல் இடம் பெறுவதற்காக அலுவலகத் தலைவர் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

வாலிபமும் வலிய உடற்கட்டும் உள்ள பொழுது, தைரியசாலியாக இருப்பது எவ்வளவு சுலபமான காரியம் என்பதை இப்பொழுதுதான் பாவெல் உணர்ந்தான். இப்பொழுது, வாழ்வின் இரும்புப் பிடியில் சிக்கியிருந்த பொழுது, குன்றாத வீரத்துடன் குன்றென நிமிர்ந்து நிற்பது, நன்மதிப்புக்குரிய சாதனையாகும்.

பாவெல் மாஸ்கோவுக்கு வந்து பதினெட்டு மாதங்களாகிவிட்டன. இந்தக் காலமெல்லாம், வர்ணிக்க முடியாத வேதனை பாவெலைத் துன்புறுத்தியது.

பாவெல் தன் பார்வைப் புலனை மீண்டும் பெற முடியாதென்பதைக் கண் ஆஸ்பத்திரியில், பேராசிரியர் அவெர்பாக் அவனிடம் ஒளிவு

மறைவு இல்லாமல் கூறினர். எதிர்காலத்தில், ஏதோ ஒரு சமயத்தில், அழற்சி மறையலாமென் றும் அப்பொழுது கண்மணிகளில் ஆபரேஷன் செய்வது சாத்தியமாயிருக்கலாமென்றும் அவர் கூறினர். உடனடியாக, அழற்சி பரவுவதைத் தடுக்க ஒரு ஆபரேஷன் செய்யலாமென்று அவர் யோசனை கூறினர்.

பாவெலின் அனுமதி கோரப்பட்டது. அவர்கள் அவசியமானதென்று கருதுவதை யெல் லாம் செய்யலாமென்று அவன் டாக்டர்களிடம் கூறினன்.

ஆபரேஷன் மேஜையில், பாவெல் பல மணி நேரம் கிடந்தான்; தைராயிட் சுரப்பியை நீக்கும் பணியில், கத்திரிகள் அவனது குரல்வளையைச் சுற்றிச் செயல்பட்டுக் கொண்டிருந்தன. சாவின் கடுஞ்சிறகுகள் அவனை மும்முறை தொட்டன. ஆனல் பாவெல் பிடிவாதமாகத் தன் உயிரைப் பற்றிக் கொண்டிருந்தான். ''என்ன ஆகுமோ?'' என்ற திகிலுடன் தாயா வேதனைப்பட்டுக் கொண் டிருந்தாள். பல மணி நேர வேதனைக்குப்பின், அவள் தனது அன்புக் கணவன், வெளிறிப்போ யிருந்தாலும், உயிரோடு இருப்பதைக் கண்டு அகமகிழ்ந்தாள். அவன் எப்பொழுதும் போல அமைதியாகவும் மென்மையாகவும் இருந்தான்.

''சின்னப் பெண்ணே, கவலைப்படாதே! என்னைக் கொல்வது அவ்வளவு சுலபமல்ல. இந்த வைத்தியக் கலை விற்பன்னர்களின் கணிப்புகளைப் பொய்ப்பிப்பதற்காகவாவது, நான் உயிரோடு

இருந்து சந்தடி செய்துகொண்டிருப்பேன். என் தேகநிலைமையைப் பற்றி அவர்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனல் நான் வேலைக்கு முற்றிலும் லாயக்கில்லாதவன் என்று அவர்கள் சொல்வதுதான் தவருகும். அதைப் பற்றிப் பிறகு பார்க்கலாம்'' என்று பாவெல் தாயாவிடம் கூறினன்.

புதிய வாழ்வை நிர்மாணிப்பவரின் அணியில் தனக்குரிய ஸ்தானத்தைப் பெறுவதென்று அவன் தீர்மானித்துவிட்டான். அவன், தான் என்ன செய்யவேண்டுமென்பதையும், இப்பொழுது அறிந்து கொண்டிருந்தான்.

குளிர்காலம் முடிந்தது. வசந்தத்தின் மலர்ச்சியை அறைக்குள் இருந்த பாவெலும் உணர்ந்தான். அவன் இன்னொரு ஆபரேஷனிலும் பிழைத்துவிட்டான். மிகவும் பலவீனமாயிருந்த போதிலும், இனி ஆஸ்பத்திரியில் தங்குவதில்லையென்று அவன் முடிவு செய்தான். வேதனை தாங்காது தவிக்கும் நோயாளிகளுக்கு இடையே, பிழைக்க முடியாதவர்களின் புலம்பல்களுக்கிடையே, பல மாதங்கள் தங்கிவிட்டான். அந்தத் துன்பத்தைப் பார்ப்பது, அவனது வேதனையைப் பொறுப்பதை விடக் கடினமாகவிருந்தது.

எனவே, இன்னொரு ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று டாக்டர்கள் யோசனை கூறிய பொழுது, அவன் நிச்சிந்தையாகப் பதில் அளித்தான்:

''வேண்டாம். செய்து கொண்ட ஆபரேஷன் போதும். என் இரத்தத்தில் ஒரு பகுதியை விஞ்ஞானத்துக்குத் தியாகம் செய்துவிட்டேன். மிச்சமுள்ளதை வேறு வழிகளில் பயன்படுத்தப் போகிறேன்.''

அதே தினத்தில், பாவெல் மத்தியக் கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதினான். இனியும் வைத்திய உதவியை நாடி அலைவதில் பயனில்லை என்பதை விளக்கி, மாஸ்கோவில் தங்க விரும்புவதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். தாயாவும் மாஸ்கோவில் வேலை செய்து கொண்டிருந்தாள். அவன் இப்பொழுதுதான் முதன் முதலாகக் கட்சியின் உதவியை நாடினான். அவனது வேண்டுகோளைக் கமிட்டி ஏற்றுக்கொண்டது. மாஸ்கோ சோவியத், அவன் குடியிருப்பதற்கு இடம் ஒதுக்கியது. மீண்டும் ஆஸ்பத்திரிக்குத் திரும்ப நேரிடாது என்ற நம்பிக்கையுடன், பாவெல் அதிலிருந்து வெளியேறினான்.

கிராப்போத்கின்ஸ்காயா என்ற ரோட்டுக்கு அருகிலுள்ள ஒரு அமைதியான கிளைத் தெருவில், ஒரு அறை அவனுக்குக் கிடைத்தது. அதுவே அவனுக்கு அரண்மனை வாசமாகத் தோன்றியது. அடிக்கடி, அவன் இரவில் விழித்துக்கொள்வான்; அப்பொழுதெல்லாம், ஆஸ்பத்திரி வாசத்துக்கு முடிவு கட்டியாகி விட்டதென்பதையே அவனால் நம்பமுடியவில்லை.

இப்பொழுது தாயா, சகல உரிமைகளையும் உடைய கட்சி உறுப்பினராகி விட்டாள். அவள்

நேர்த்தியான தொழிலாளியாக இருந்தாள். அவளது சொந்த வாழ்வில் சோகம் நிறைந்திருந்த போதிலும், தொழிற்சாலையில் தலைசிறந்த முன்னணித் தொழிலாளருக்குச் சமமாக வேலை செய்தாள். அமைதியான சுபாவத்தையும் தன்னடக்கப் பண்பையும் பெற்றிருந்த இந்த இளம் பெண்ணிடம் தங்களுக்குள்ள நன்மதிப்பை அவளது சகோதரத் தொழிலாளர் சீக்கிரமே புலப்படுத்தினர்கள்; அவளைத் தொழிற்சாலையின் தொழிற்சங்கக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார்கள். உண்மையான போல்ஷெவிக்காக உருப்பெற்றுக் கொண்டிருந்த மனைவியைப் பற்றிப் பாவெல் பெருமையடைந்தான். அந்தப் பெருமை உணர்வு, அவன் தன் துன்பங்களைச் சகித்துக் கொள்வதற்கு உதவியது.

தொழில் நிமித்தமாக மாஸ்கோவுக்கு வந்த பஷானேவா, பாவெலைக் காண்பதற்கு வந்தாள். இருவரும் நீண்ட நேரம் சம்பாஷித்தார்கள். சீக்கிரத்தில் போரணிக்குத் திரும்புவதற்காகத் திட்டமிட்டிருப்பதைப் பற்றிப் பாவெல் அவளிடம் உற்சாகத்துடன் விவரித்தான்.

பாவெலின் நெற்றிப்பொட்டுகள் நரைத்திருப்பதை பஷானேவா கவனித்தாள். அவள் மிருதுவாகக் கூறினாள்:

''நீங்கள் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் உற்சாகம் கொஞ்சமும் குறையவில்லை. உங்களுக்கு வேறு என்ன வேண்டும்?

ஐந்து ஆண்டுகளாக நீங்கள் எந்த வேலைக்குத் தயார் செய்து கொண்டிருந்தீர்களோ, அந்த வேலையைத் தொடங்கப் போகிறீர்கள் என்பதைக் கேட்டு, நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் எப்படிச் செய்யப் போகிறீர்கள்?''

பாவெல் நம்பிக்கையுடன் புன்னகை செய்தான்.

''நாளைக்கு என் நண்பர்கள், ஒரு வகையான 'ஸ்டென்ஸில்' அட்டைகொண்டு வரப்போகிறார்கள். வரிகள் ஒன்றோடொன்று கலந்து குழம்பாமல், வரிக்குப் பின் வரியாக எழுதுவதற்கு அது வசதியாகப் பயன்படும். அது இல்லாமல் நான் எழுதமுடியாது. ஆழ்ந்த சிந்தனைக்குப்பின், ஸ்டென்ஸில்அட்டையில் எழுதுவதென்ற யோசனை தோன்றியது. என் பென்ஸில், நேர் கோட்டிலிருந்து தவறிப்போகாமல் இருப்பதற்கு, அட்டையின் விறைப்பான ஓரங்கள் உத்திரவாதமாக அமையும். என்ன எழுதுகிறோமென்பதைப் பார்க்காமல் எழுதுவது ரொம்பக் கஷ்டம்தான். ஆனால் முடியாத காரியம் அல்ல. நான் எழுதிப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன். அதன் யுக்தியைப் புரிந்துகொள்வதற்குக் கொஞ்சம் நேரம் பிடித்தது. ஆனால் இப்பொழுது, மெதுவாக எழுதப் பழகிவிட்டேன்; ஒவ்வொரு எழுத்தாகக் கவனித்துக் கஷ்டப்பட்டு எழுதப் பழகிவிட்டேன். எனவே, இதன் பயன் திருப்திகரமாயிருக்கிறது.''

இவ்வாறாகப் பாவெல் வேலை செய்யத் தொடங்கினான்.

வீரமிக்க காத்தோவ்ஸ்க்கியின் படையைப் பற்றி ஒரு நாவல் எழுதுவதென்று அவன் உத்தேசித்திருந்தான். தலைப்புத் தானுகவே தோன்றியது. ''புயலின் மூலம் தோன்றியவர்கள்'' என்பதே அந்தத் தலைப்பு.

அந்தப் புத்தகத்தை எழுதும் ஒரே பணியில் அவனது வாழ்வை ஈடுபடுத்தினன். மெதுவாக, வரி வரியாகப் பக்கங்கள் அமைந்தன. அவன் சுற்றுச் சார்பை மறந்துவிட்டான்; உருவங்களின் உலகத்திலேயே மூழ்கியிருந்தான்; முதன் முதலாக அவன் படைப்பின் வேதனையை அனுபவித்தான். மறக்க முடியாத காட்சிகள், பிரகாசமான காட்சிகள் தெட்டத் தெளிவாக மனேபாவனையில் அமைந்தபொழுதும், அவை காகிதத்தில் உயிரற்றவையாகவும் உப்புசப்பு இல்லாதவையாகவும் பதியும்பொழுது, கலைஞன் அடையும் மனக்கசப்பை அவன் இப்பொழுது அறிந்தான்.

அவன் எழுதிய ஒவ்வொரு சொல்லையும் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டியிருந்தது. ஏதாவது ஒரு சிறிய குறுக்கீடு ஏற்பட்டாலும், அவனது சிந்தனை குழம்பி, வேலை தடைப்பட்டது. அவனது தாயார் மகனது வேலையைப் பார்த்து அச்சம்கொண்டு கவலைப்பட்டாள்.

சில சமயங்களில் அவன் பக்கம் பக்கமாக, அத்தியாயம் அத்தியாயமாக ஞாபகத்திலிருந்து சொல்லிப்பார்க்க வேண்டியிருந்தது. சித்த சுவாதீனத்தை இழந்து விட்டானேவென்று அவனது தாயார் கவலைப்படக் கூடிய நிலைமையும் ஏற்பட்

டது. எழுதிக் கொண்டிருந்தபொழுது அவனருகில் செல்வதற்கு அவள் அஞ்சினாள். ஆனால், தரையில் விழுந்த ஏடுகளை எடுத்து வைத்தபொழுது, அவள் அச்சத்துடன் கூறுவாள்:

''பாவெல், வேறு ஏதாவது செய்யக் கூடாதா? இம்மாதிரி எப்பொழுது பார்த்தாலும் எழுதிக் கொண்டிருப்பது நல்லதல்ல....,''

அவளது கவலையைக் கண்டு அவன் சிரிப்பான். கவலைப்பட வேண்டாமென்று அவளுக்கு உறுதி கூறுவான். ''இன்னும் புத்தி கலங்கவில்லை'' என்று ஆறுதல் கூறுவான்.

பாவெல் மூன்று அத்தியாயங்களை முடித்தான். அவற்றை ஒதேஸ்ஸாவில் இருந்த காத்தோவ்ஸ்க்கியின் படையைச் சேர்ந்த பழைய தோழர்களுக்கு அனுப்பி, அவர்களது அபிப்பிராயத்தை அறிய விரும்பினான். அவனது எழுத்தைப் புகழ்ந்து அவர்களும் விரைவில் கடிதம் எழுதினார்கள். ஆனால் அந்தக் கைப்பிரதி திரும்பிவரும் பாதையில், எங்கோ தவறி விட்டது. ஆறுமாத வேலை வீணாகி விட்டது; அது அவனுக்கு ஒரு பயங்கரமான அடி. தன்வசமிருந்த ஒரே பிரதியை அனுப்பியதற்காக அவன் தன்னையே நொந்து கொண்டான், நடந்ததை அறிந்தவுடன், லிதேன்யோவ் பாவெலைக் கடிந்துகொண்டு திட்டினான்.

''இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்கலாமா? சரி, பரவாயில்லை. கொட்டிய பாலைப் பற்றிக்

கதறுவதில் பயனில்லை. மீண்டும் ஆரம்பத்தி லிருந்து தொடங்கு.''

''லிதேன்யோவ்! ஆறுமாத வேலை களவு போய்விட்டது! தினம் எட்டுமணி நேரம் கடுமை யாக உழைத்தேன். இதற்குப் பொறுப்பான புல்லு ருவிக் கூட்டம் பாழாய்ப் போகவேண்டும்!''

லிதேன்யோவ், தன் நண்பனுக்குத் தேறுதல் கூறத் தன்னால் இயன்றதனைத்தும் செய்தான்.

மீண்டும் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லை. லிதேன்யோவ் அவனுக்குக் காகிதம் கொடுத்தான்; கைப்பிரதியை 'டைப்' அடித்துத் தருவதற்கு ஏற்பாடு செய்தான். ஆறு வாரங்களில், பாவெல் முதல் அத்தியாயத்தை மீண்டும் எழுதி முடித்தான்.

பாவெல் வசித்த வீட்டுப் பகுதியிலேயே, அலெக்ஸேயேவ் என்பவரின் குடும்பமும் குடியிருந் தது. அவனது மூத்த குமாரன் அலெக்ஸாந்தர் கம் ஸமோலின் வட்டாரக் கமிட்டி ஒன்றுக்குக் காரிய தரிசியாகவிருந்தான். அவனது தங்கை, கால்யா, பதினெட்டு வயதுப் பெண்; சுறுசுறுப்பானவள். அவள் ஒரு தொழிற் பயிற்சி பள்ளியில் படித்து தேறியிருந்தாள். அவள் ''காரியதரிசியாகப்'' பொறுப்பேற்றுப் புத்தகவேலையில் உதவி செய் வாளா என்று கேட்டறியும்படி பாவெல் தன் தாயிடம் கூறினான். கால்யா உடனடியாக உவகை யுடன் ஒத்துக்கொண்டாள். ஒருநாள், அவள் உல் லாசமாகப் புன்னகை செய்துகொண்டு வந்தாள்; பாவெல் ஒரு நாவலை எழுதிக்கொண்டிருக்கிறான்

என்பதை அறிந்தவுடன் அவள் மகிழ்ச்சி அடைந்தாள்.

''உங்களுக்கு உதவி செய்வதில் என் மனம் நிறைவு அடையும். அப்பாவுக்காகச் சுகாதாரப் பாதுகாப்பைப் பற்றி உயிரில்லாத சுற்றறிக்கைகளை எழுதுவதைவிட நாவலை எழுதுவது சுவையாகத்தான் இருக்கும்!'' என்று அவள் கூறினாள்.

அன்று முதல், பாவெலின் வேலை இரட்டிப்பு வேகத்தில் முன்னேறியது. ஒரு மாதத்தில், நடைபெற்ற வேலையைக் கண்டு, பாவெலே பிரமித்து விட்டான். கால்யாவின் பரிவும் சுறுசுறுப்பான ஒத்துழைப்பும் அவனுக்குப் பேருதவியாக இருந்தன. அவள் வேகமாக எழுதினாள். ஏதாவதொரு பகுதி அவளுக்கு மிகவும் பிடித்தமாயிருந்தால் அதைப் பன்முறை படித்தாள்; பாவெலின் வெற்றியைக் கண்டு அவள் மனநிறைவு அடைந்தாள். அந்த வீட்டில், பாவெலின் இலக்கியப் பணியில் நம்பிக்கை வைத்தது அவள் ஒருத்திதான் என்றே சொல்லலாம். இந்த இலக்கியப் பணி வெற்றியடையாதென்றும், வேறு வேலை செய்ய முடியாத சூழ்நிலையில் பாவெல் பொழுது போக்குவதற்குத் தான் முயற்சிக்கிறுனென்றும், மற்றவர்கள் எண்ணினார்கள்.

தொழில் நிமித்தமாக வெளியூர் சென்று திரும்பிய விதேன்யோவ், சில ஆரம்ப அத்தியாயங்களைப் படித்துவிட்டுக் கூறினான்:

''தொடர்ந்து எழுது. நண்பா, நீ வெற்றி அடைவாய் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. உனக்

குப் பேரானந்தம் காத்திருக்கிறது. பாவெல், போரணிக்குத் திரும்பவேண்டுமென்ற உன் கனவு நனவாகப் போகிறது. இது உறுதி. மகனே, நம்பிக்கை இழக்காதே.''

கிழவன் பாவெலின் வினையாற்றலைக் கண்டு திருப்தி அடைந்து வெளியேறினன்.

கால்யா முறையாக வந்து எழுதினாள். மறக்க முடியாத பழங்காலக் காட்சிகளுக்குப் புத்துயிர் தந்த கதையை எழுதினாள். சில சமயங்களில் நினைவுகள் ஒருசேரக் குவிந்து பாவெலை அழுத்தின; அவன் சிந்தனையில் ஆழ்ந்து விடுவான். அப்பொழுதெல்லாம், அவனது கண்ணிமைகள் துடிப்பதையும், அவனது கண்கள் துரிதமான சிந்தனைப் போக்கைப் பிரதிபலிப்பதையும், அவள் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அந்தக் கண்மணிகள்தாம் எவ்வளவு தெளிவாகவும் மாசு தூசு இல்லாமலும் இருந்தன! உயிரோட்டமுள்ள அந்தக் கண்களால் பார்க்க முடியாதென்பதை நம்பமுடியவில்லை.

பகல் வேலை முடிந்தபின், அவள் தான் எழுதியதை வாசிப்பாள். அவன் சிரமத்துடன் செவி கொடுத்துக் கேட்பான்; அவனது புருவம் சுருங்கியிருக்கும்.

''ஏன் புருவத்தை நெறிக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறதே, இல்லையா?''

''இல்லை, கால்யா, இந்தப் பகுதி மோசமாயிருக்கிறது.''

அவனுக்குப் பிடிக்காத பக்கங்களை அவனே திரும்ப எழுதுவான். ஸ்டென்ஸிலின் அகலக்

குறைவு தடையாயிருந்ததால், சில சமயங்களில் அவன் பொறுமையை இழந்து எழுதுவதை நிறுத்தி விடுவான். தன் பார்வையைப் பறித்த வாழ்வின் மீது கோபம் கொண்டு, அவன் பென்ஸில்களை உடைத்தெறிவான்; இரத்தம் வரும் வரையில், உதடுகளைக் கடிப்பான்.

புத்தகவேலை முடியும் தருவாயில் இருந்த பொழுது, அவனுக்குக் கூடாத உணர்ச்சிகள், அவனது உஷாரான சித்தத்தின் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியத் தொடங்கின. அவனுக்குக் கூடாத உணர்ச்சிகள் யாவை? துயர உணர்ச்சிகளும், அன்புக்கும் மென்மைக்கும் உரிய எளிய மனித உணர்ச்சிகளும்தான் அவை. இவை எல்லா மனிதருக்கும் உரியவைத்தாம்; ஆனால் பாவெல் மட்டும் இந்த உணர்ச்சிகள் மீது உரிமை கொண்டாட முடியாது. எனினும், இந்த மனித உணர்ச்சிகளில் ஏதாவதொன்றுக்குப் பணிந்தாலும், விளைவுகள் விபரீதமாக இருக்குமென்பதை அவன் அறிந்திருந்தான்.

தாயா பாக்டரியிலிருந்து வரும்பொழுது, மாலைப் பொழுதின் பெரும் பகுதி கழிந்துவிடும். பாவெலின் அன்னையுடன் தாழ்ந்த குரலில் சில வார்த்தைகள் பேசியபின், அவள் உறங்கச் செல்வாள்.

கடைசியில், இறுதி அத்தியாயம் எழுதப் பட்டது. அடுத்த சில நாட்களுக்கு, கால்யா பாவெலிடம் புத்தகத்தை உரக்கப் படித்தாள்.

நாளைக்கு, லெனின்கிராதிலுள்ள மாவட்டக் கட்சிக் கமிட்டியின் கலை இலாகாவுக்குக் கைப் பிரதி அனுப்பப்படும். அங்கு அது ஏற்றுக்கொள் ளப்பட்டால், பதிப்பகத்தாரிடம் சேர்ப்பிக்கப் படும்—அதன்பின்....

அவ்வாறு எண்ணியபொழுது, அவனது இத யம் வேகமாகத் துடித்தது. எல்லாம் நன்ருக முடிந்தால், ஒரு புதிய வாழ்வு—பல்லாண்டுகள் ஓய்வில்வாமல் கடுமையாக உழைத்ததின் பயனுன புதிய வாழ்வு—தொடங்கும்.

புத்தகத்தின் தலைவிதி, பாவெலின் தலைவிதி யையே தீர்மானித்துவிடும். அந்தப் பிரதி நிரா கரிக்கப்பட்டால் அவனது வாழ்வே முடிந்துவிடும். அதற்கு மாருகப் புத்தகத்தின் ஒரு பகுதி மோச மாயிருந்தால், மேற்கொண்டு வேலை செய்து அதன் குறைகளை நீக்க முடியுமாளுல், அவன் உடனடியாக ஒரு புதிய முயற்சியைத் தொடங்கு வான்.

கைப் பிரதியைப் பார்சல் செய்து, அவனது தாய் தபாலாபீஸுக்கு எடுத்துச் சென்ருள். முடிவு என்னவாயிருக்குமோவென்று கவலையுடன் காத்தி ருக்கும் கட்டம் தொடங்கியது. அவன், ஒரு கடிதத்துக்காக இவ்வளவு திகிலுடனும் வேதனை யுடனும் இப்பொழுது காத்திருந்த மாதிரி, என்று மே காத்திருந்ததில்லை. அவன் காலையிலும் மாலை யிலும் தபாலை எதிர்பார்த்து, அதற்காகவே வாழ்ந்தான். ஆனுல் லெனின்கிராதிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை.

பதிப்பகத்தாரின் நீடித்த மௌனம் துர்க் குறியாகத் தோன்றியது. ஒவ்வொரு நாளும் கேடு நிகழப் போகிறதென்ற எண்ணம் உரம்பெற்றது. தன் புத்தகம் முழுமையாக நிராகரிக்கப்பட்டு விட்டால், தன்னால் பிழைத்திருக்க முடியாதென் பதைப் பாவெல் உணர்ந்தான். நிராகரிப்பை அவனால் தாங்கமுடியாது. அதன்பின், உயிர்வாழ் வதற்கு நியாயம் இல்லை.

அவ்வாறு எண்ணிய பொழுதெல்லாம், அவன், கடலை நோக்கி நின்ற குன்றின்மீது உள்ள பூங்காவை ஞாபகப்படுத்திக் கொண்டான். அங்கு எழுந்த கேள்வியை அவன் மீண்டும் மீண்டும் கேட் டுக்கொண்டான்:

''எஃகுப் பொறியை உடைத்துக்கொண்டு வெளியேறிப் போரணிக்குத் திரும்புவதற்கு, உன் வாழ்வைப் பயனுள்ளதாக ஆக்குவதற்கு, உன் னால் இயன்றதனைத்தும் செய்து விட்டாயா?''

''ஆம், என்னால் இயன்றதனைத்தையும் செய்து விட்டேன்!'' என்று அவனே பதில் அளித் துக் கொண்டான்.

கடைசியில், காத்திருக்கும் வேதனையைச் சகிக்க முடியாத நிலை ஏற்படும் தருவாயில், மக னைப் போலவே அதிகம் தவித்துக் கொண்டிருந்த அவனது தாய் ''லெனின்கிராதிலிருந்து சேதி!'' என்று கத்திக் கொண்டே அறைக்குள் ஓடி வந்தாள்.

பிரதேசக் கமிட்டியிலிருந்து வந்த தந்தி அது. தந்திக் கடுதாசியில் இருந்த சுருக்கமான

செய்தி: ''நாவல் மனப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது. பதிப்பகத்தாருக்கு அனுப்பியுள்ளோம். உங்களது வெற்றிக்குப் பாராட்டுக்கள்.''

அவனது இதயம் வேகமாகத் துடித்தது. அவனது ஆசைக் கனவு நனவாகி விட்டது! எலிப் பொறி தகர்ந்துவிட்டது. இப்பொழுது ஒரு புதிய ஆயுதத்தைத் தரித்துக்கொண்டு, அவன் போரணிக்கும் வாழ்வுக்கும் திரும்பிவிட்டான்.

முற்றும்

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் ''புரோகிரஸ்'' பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து
"Progress Publishers, 21, Zubovsky Boulevard
Moscow, USSR"
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.